தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு - 148

வைத்தியநாத தேசிகர் இயற்றிய

இலக்கண விளக்கம்

பொருளதிகாரம் - அணியியல்

பதிப்பாசிரியர் :
பண்டித வித்துவான்,
தி. வே. கோபாலையர், எம். ஏ., பி. ஓ. எல்.,
திருவையாறு.



தஞ்சை சரசுவதி மகால் நிருவாகக் கமிட்டியினருக்காகக்
கௌரவ காரியதரிசி,
வித்துவான், **அ. வடிவேலன்**
அவர்களால் வெளியிடப்பட்டது.

கி. பி. 1973] [விலை ரூ. 21-00

ஜெமினி அச்சகம், கும்பகோணம்
(போன் : 835)

வெளியிடுவோர் உரை

இலக்கண விளக்கம் என்னும் இவ்வுயரிய தமிழ் இலக்கண நூல் இயற்றமிழ் இலக்கணங்களை மூன்று பகுதிகளாக முறையாக உரைப்பதாகும். தொல்காப்பிய நெறியை வகைப்படுத்தித் தந்த பெருமை இந்நூலுக்குண்டு. நூலகம் இதுவரை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரு பகுதிகளையும், மூன்றும் பகுதியாகிய பொருளதிகாரத்தில் புறத்திணையியலையும் வெளியிட்டுள்ளது. இப்பகுதியின் அகத்திணையியலை இரண்டு தொகுதிகளாக அச்சிட்டுள்ளோம். அவை விரைவில் வெளிவரவிருக்கின்றன. இப்பொழுது வாசக அன்பர்களுக்கு அணியியல் பிரிவை அளித்து மகிழ்கிறோம். இப்பகுதியின் தொடர்ச்சியான செய்யுளியல், பாட்டியல் ஆகிய இரு நூல்களும் அச்சகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் வைத்தியநாத தேசிகர் அவர்கள் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த முப்பெரும் இலக்கணப் புலவர்களுள் தலையாயவர். தருமை ஆதீனத்தைச் சார்ந்த தமிழ்ப் புலவர் பரம்பரையில் தோன்றிய இவர் தென்னாட்டை ஆண்ட நாயக்க மன்னர்களின் கவர்னர் ஒருவரின் மக்களுக்குச் சில காலம் கல்வி புகட்டி வந்திருக்கிறார். இவர் இலக்கணமேதை, கவிஞர், அறிஞர், ஆசிரியர். இத்தகு பெருமை சான்ற இவருடைய புலமையாலும் விடாமுயற்சியாலும் விளைந்த இந்நூல் இன்று நமக்கு உறுதுணையாயுள்ளது.

இந்நூலக வாயிலாக இலக்கண நூல்களை வெளியிட விழைந்தபோது, பல்வேறு ஒப்பு நூல்களை ஆதாரம் காட்டியும்,

விரிவான முன்னுரையும், போதிய விளக்கமும், அரும்பத விளக்கமும், பல பிற்சேர்க்கைகளும் தந்து பதிப்பித்தால் மொழி நூல் ஆய்வாளருக்கும், தமிழ் விரும்பிக்கற்கும் சான்றோர்களுக்கும், மாணவ அன்பர்களுக்கும் உதவியாய் இருக்குமென முன்னாள் மதிப்பியற் செயலாளர் அவர்கள் வெளியிட ஆவன செய்தவாறே இப்பதிப்பு வெளிவருகிறது.

இந்நூல் வெளியிட ஆதாரமாக அமைந்தது புகழ்மிகு தொழிலதிபரும், தமிழ்க் காவலருமான உயர்திரு பொள்ளாச்சி ந. மகாலிங்கம், பி. எஸ்ஸி., எம். ஐ. இ., அவர்கள் நூலகத்திற்கு மனமுவந்து அளித்த கையெழுத்துப் படியேயாகும். இப் படி பலநாட்களுக்கு முன் அச்சிட்ட பழைய நூல் ஒன்றிலிருந்து எழுதப்பட்டுள்ளது. அன்னாருக்குப் பெரிதும் நன்றிக் கடப்பாடுடையோம்.

இதனை மிகச் சிறப்பாக வகுத்தெழுதிப் பதிப்பித்துதவிய புண்டித வித்வான் திரு தி. வே. கோபாலையர், எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கட்கும், செம்மையோடு வெளிவரத் தக்கமுறையில் செயலாற்றிய இந்நிலையப் பாதுகாவலர் டாக்டர் சி. எஸ். வேங்கடேசுவரன், எம். ஏ., பி. எச். டி., அவர்கட்கும், துணை நூலகர் திரு எம். சீராளன், பி. ஏ., அவர்கட்கும் காலத்தோடு கவினுற அச்சிட்டுத் தந்த குடந்தை ஜெமினி அச்சக உரிமையாளர் அவர்களுக்கும் கனிந்த உள்ளத்தோடு நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்.

இத்தகைய பணிகளுக்கு ஆக்கமளித்துப் பேணிவரும் நமது தமிழக அரசை நன்றியோடு போற்றி மகிழ்கின்றோம்.

அ. வடிவேலன்,
கௌரவ காரியதரிசி
சரசுவதி மகால் நூல்நிலையம்.

தஞ்சாவூர்

—:o:—

பதிப்பாசிரியர் முகவுரை

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கணப் பெரும்புலவர் மூவருள் முதலாமவராகிய திருவாரூர் **வைத்தியநாத தேசிகர்** இயற்றிய இலக்கண விளக்கத்தின் முப்படலங்களுள் முதலிரண்டு படலங்களும், பொருட்படலத்தின் முன்னிரண்டு இயல்களும் பதிப்பிக்கப்பெற்ற முறையை ஒட்டியே, முன்னையவற்றிற்குப் பயன்படுத்தப் பெற்றன போன்ற நூல்களின் துணையைக்கொண்டே அப்படலத்தின் மூன்றும் இயலாகிய அணியியல் பதிப்பிக்கப்பெற்று உள்ளது. எடுத்துக்காட்டுப் பாடல்களில் பெரும்பான்மையும் முதற் பதிப்பின் பாடபேதங்களே கொள்ளப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டுப் பாடல்களின் போந்த பொருள், அணி வகைகள் பாடல்களில் அமைந்துள்ள திறன், ஒத்த கருத்துடைய பிற அணி நூல்களின் நூற்பா மேற்கோள், தேவையான அகர வரிசைகள் இவற்றோடு, இவ்வணியியலில் குறிப்பிடப்படாது ஏனைய அணி நூல்களில் காணப்படும் அணி வகைகளின் விளக்கம் அடங்கிய பிற்சேர்க்கையையும் இணைத்துப் பதிப்பித்தல் வேண்டும் என்று தஞ்சை சரசுவதிமகாலில் கௌரவ காரியதரிசியாயிருந்த முதுபெரும்புலவர் திருவாளர் **நீ. கந்தசாமிப் பிள்ளை** அவர்கள் இட்ட ஆணையை ஒட்டியே இவ்வியல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வணியியல் விரைவில் செம்மையாக வெளிவருவதற்குத் தேவைப்பட்டவற்றை எல்லாம் அகமகிழ்வோடு செய்துவரும் தஞ்சை சரசுவதிமகாலின் இந்நாள் கௌரவ காரியதரிசி திருவாளர் வித்துவான் **அ. வடிவேலனார்** அவர்களுக்கும், அந்நூல்நிலையத் துணைக்காப்பாளர் திரு. **சீராளன், B.A.** அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கும் கடப்பாட்டினேன்.

இப்பதிப்பிற்கு வழக்கம்போல் பல்லாற்றானும் உதவியுள்ள என் உடன்பிறந்தோர்களும் பழுத்த தமிழ்ப்புலமை வாய்ந்தவர்களுமாகிய திரு. வித்துவான் **கங்காதரன், M. A.** உள்ளிட்ட நால்வருக்கும் என் கனிவான ஆசிகள்.

இந்நூலை விரைவில் செம்மையாகப் பதிப்பித்து அளித்துள்ள **குடந்தை ஜெமினி அச்சகத்தின்** உரிமையாளருக்கும், அந்நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர் அனைவருக்கும் என் நன்றி.

என் அயர்வான் இப்பதிப்பில் ஏற்பட்டிருக்கக் கூடிய பிழைகளைப் பொறுத்தருளுமாறு தமிழ் கூறு நல்லுலகத்துக்கு என் பணிவான வேண்டுகோள்.

தோன்றாத் துணையாய் என்னை இந்நற்பணிக்கண் உய்க்கும் ஐயாறன் அடியிணை இறைஞ்சி என் தமிழ்ப் பணியினைத் தொடர்கிறேன்.

46, மேலமடவளாகம்,
திருவையாறு.

தி. வே. கோபாலையர்.

உள்ளுறை

இலக்கண விளக்கம்

பொருளதிகாரம்

★

அணியியல் - முன்னுரை

தோற்றுவாய்

இன்று தமிழில் உள்ள நூல்களில் காலத்தானும் தகுதியானும் முற்பட்டதாகிய தொல்காப்பியப் பொருட் படலத்தில் உவமவியல் என்பதோரியல் அப்படல ஏழாம் இயலாக அமைந்துள்ளது. தொல்காப்பியனார் காலத்தில் உவமம் ஓரணியாகக் கொள்ளப்படவில்லை. பொருள் புலப்படுக்கும் கருவிகளில் அதுவும் ஒன்றாகவே கொள்ளப்பட்டது. 'உவமத் தோற்றம்' என்ற தொடருக்குப் பேராசிரியர் உவமத்தால் பொருள் தோன்றும் தோற்றம் என்று உரை வரைந்து, உவமம் பொருளைப் புலப்படுக்கும் கருவிகளில் ஒன்றே என்பதனை விளக்குகிறார். 'உவமத்தை அணி என்றல் கூடாது; சாத்தனிட மிருந்து அவன் அணியும் அணிகளைப் பிரித்துக் காண்பது போலப் பாடல்களிலிருந்து உவமத்தைப் பிரித்துக்காண்டல் இயலாது ஆகலான்' என்பது அவர்தம் கருத்து.

அணியிலக்கணம் என்பது தொல்காப்பியனாருக்குப் பிற்பட்ட காலத்திலேயே தோன்றுவதாயிற்று. உவமை என்ற ஓரணியி லிருந்தே ஏனைய அணிகள் பெருகின என்பது ஒருசாரார் கருத்து.

> 'உவமை என்னும் தவலருங் கூத்தி
> பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
> காப்பிய அரங்கில் கவின்பெறத் தோன்றி
> யாப்புஅறி புலவர் இதயம்
> நீப்பறு மகிழ்ச்சி பூப்பநடிக் கும்மே'

என்ற கருத்து நிலவி வரலாயிற்று.

வடமொழியில் அணியிலக்கண நூல்கள் பலவாகப் பல்கித் தோன்றலாயின. அவை – பாமஹசூத்ரம், வாமநசூத்ரம், காவ்யாதர்சம், சரசுவதீகண்டாபரணம், சிருங்காரதிலகம், காவ்யப்பிரகாசம், அலங்கார சர்வஸ்வம், ரஸதரங்கிணி, ரஸமஞ்சரி, த்வந்யாலோகம், சாகித்யசிந்தாமணி, சாகித்ய சூடாமணி, சாகித்ய தர்ப்பணம், சமத்கார சந்திரிகை, பிரதாப ருத்திரீயம், சாகித்ய ரத்நாகரம், சந்திராலோகம், குவலயாநந்தம், சித்திர மீமாஞ்சை, அலங்கார கௌஸ்துபம், ரஸ கங்காதரம், ஏகாவளி, காவியதர்ப்பணம் முதலியன. தமிழில் அணிநூல் என்றதோர் இலக்கண நூலிருந்தமை அடியார்க்கு நல்லாரால் குறிக்கப் படுகிறது. அதனையடுத்துத் தண்டியலங்காரம் என்ற நூல் தமிழில் தோன்றிய பின்னர், நன்மக்களிடையே அதுவே பெரிதும் வழங்கி வருகின்றது. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியத்தின் அலங்காரப் படலமும், 16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மாறன் அலங்காரமும், 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்க அணியியலும், 18-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொன்னூல் விளக்க அணியதிகாரமும், குவலயானந்தத் தமிழாக்கமும், 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய விசாகப் பெருமாளையர் வரைந்த இலக்கணச் சுருக்கத்தின் அணியிலக்கணம், முத்துவீரியத்தின் அணியதிகாரம், சந்திராலோகம், குவலயானந்த விளக்கவுரை ஆகியனவும் இன்று அணியிலக்கணம் பற்றி அறிவதற்கு நமக்குக் கருவிகளாக உள்ளன.

இவ்வாறு தமிழில் அணிபற்றிய நூல்கள் பலவாக இருப்பினும், தண்டியலங்காரமே இனிய நூற்பாக்களையும் எடுத்துக்காட்டுப் பாடல்களையும் கொண்டு விளங்குவதால், தமிழறிஞர் பலரும் அதனையே விரும்பிக் கற்கின்றனர். தொல் காப்பியத்தின் உவமவியல் செய்திகளையும் உட்கொண்டு தண்டியலங்காரத்தைப் பெரும்பாலும் அடியொற்றியே இலக்கண விளக்கப் பொருட்படல அணியியல் அமைந்திருப்பதால், இதுவும் நன்மக்களால் விரும்பிப் பயிலப்படுவதாயிற்று.

இவ்வணியிலக்கண நூல்கள் பற்றிச் சுருங்கக் காண்போம்.

தண்டியலங்காரம் :

இந்நூலாசிரியர் வீரசோழிய ஆசிரியர் காலமாகிய 11-ஆம் நூற்றாண்டின் சற்றுப் பிற்பட்டவர். இவர் பெயர் தண்டி என்பது

தவிர, இவரைப்பற்றிய வரலாறு எதுவும் சான்றுகளுடன் கிடைத்திலது, எடுத்துக்காட்டுப் பாடல்களை நோக்கின், இவர் சோழப் பேரரசு சிறப்புற்ற காலத்தினர் என்பதும் வீரசோழிய ஆசிரியர் காலத்தை ஒட்டியவர் என்பதும் போதருகின்றன. இந் நூல் வடமொழி மரபைப் பின்பற்றியதாயினும், எடுத்துக்காட்டுப் பாடல்கள் பலவும் தமிழ்மரபை ஒட்டிச் சிறப்பாக அமைந்துள்ளன. இந்நூல் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டு 126 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. பொதுவணியியலில், செய்யுட்களின் பகுப்பும், வைதருப்பநெறி கௌடநெறியார்களுக்கு உரிய பத்துக் குணங் களின் விளக்கமும் குறிப்பிடப்பட்டுள்ளன. பொருளணியியலில் தன்மை முதலாகப் பாவிகம் ஈறாக 35 அணிகள் விளக்கப் பட்டுள்ளன. இவற்றுள் சில அணிகள் பல வகைகளை உடையனவாக விரிக்கப்பட்டுள்ளன.

சொல்லணியியலில் மடக்கின் வகைகளும், கோமூத்திரி முதல் அக்கரச்சுதகம் ஈறான பன்னிரண்டு சித்திரகவிகளும், அவையேயன்றி நிரோட்டம் முதலிய எட்டுச் சித்திரகவிகளும், பிரிபொருள் சொற்றொடர் முதலிய ஒன்பது வழுக்களும், அவற்றின் அமைதிகளும், இடமலைவு முதலிய அறுவகை மலைவுகளும் குறிப் பிடப்பட்டுள்ளன. இச்செய்திகளைத் தொகுத்துக்கூறும் புறனடையோடு (126) நூல் நிரம்புகிறது.

வீரசோழியம் – அலங்காரப்படலம் :

இந்நூல் கட்டளைக்கலித்துறையால் ஆகிய ஐந்திலக்கண நூல். இதன் அலங்காரப் படலத்தில் 41 காரிகைகள் உள்ளன. அலங்காரங்களைத் 'தண்டி சொன்ன கரைமலி நூலின்படியே உரைப்பன்' (143) என்று கூறித் தொடங்கும் இவர் வடமொழித் தண்டியாசிரியர் வரைந்த காவியாதர்சத்தை அடியொற்றி இப் படலத்தை அமைத்துள்ளார்.

தொடக்கத்தில் செய்யுளுக்குக் குற்றமில்லாத உறுப்பு குற்ற முடைய உறுப்பு இவற்றைச்சுட்டி, வைதருப்பரும் கௌடரும் சுட்டும் பத்து ஆவி இவை எனத் தெளிவு செறிவு முதலியவற்றை வடமொழிப் பெயரைப் பெரும்பாலும் இட்டு விளக்கி, அடுத்து நான்கு காரிகைகளில் பொருளணி முப்பத்தைந்தையும் தொகுத்துச்

சுட்டிப் பின் அவற்றைப் பதினேழு காரிகைகளில் விரித்துக்கூறி, பாட்டுக்களின் வகைகளை அடுத்த காரிகையில் சுட்டி, 179-ஆம் காரிகையில் மடக்கினையும், அடுத்த காரிகையில் பிறன்கோளாகத் தந்திரவுத்தி, தந்திரகுணம், ஆசிரியமதம், தந்திரவுரை முதலியவற்றையும் குறிப்பிட்டு, சித்திரகவிகள் சிலவற்றை விளக்கி, விரவியல், மணிப்பிரவாளம், கிளவிக்கவி, துறைக்கவி, பிரளிகை முதலிய வினாவிக்கவி, துறைக்கவி ஆகியவற்றை விளக்கி, அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் ஆகியனவே நூற்பயன் என்று குறிப்பிட்டுத் தம்நூலை முடித்துள்ளார்.

மாறன் அலங்காரம் :

16-ஆம் நூற்றாண்டில் ஆழ்வார்திருநகரியில் தோன்றிய திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவரால் மாறன் ஆகிய நம்மாழ்வார் திருநாமத்தை அடியொற்றி நூற்பாக்களும் எடுத்துக் காட்டுக்களுமாகப் பாடப்பட்ட இந்நூல் பாயிரவியல், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்ற ஐந்து இயல்களையும், 327 நூற்பாக்களையும், 844 எடுத்துக் காட்டுப் பாடல்களையும் கொண்டு விளங்குகிறது. வைதருப்பநெறி, கௌடநெறி என்ற இருவகை நெறிகளுக்கும் இடைப்பட்ட பாஞ்சாலநெறி என்பதொன்று இதன்கண் குறிப்பிடப் பட்டுள்ளது. பொருளணியியலில் 64 அணிகள் விளக்கப் பட்டுள்ளன. சித்திரகவிகள் 26 சொல்லணியியலில் குறிப்பிடப் பட்டுள்ளன. எச்சவியலில் வழுக்களும் வழுவமைதிகளும் மலைவுகளும் அவை பயன்தருமாறும் சுட்டப்பட்டுள்ளன. இந் நூலுக்கு இந்நூலாசிரியரின் மாணாக்கராகிய காரிரத்ந கவிராயர் இயற்றிய சிறந்ததோர்உரை அணிசெய்கிறது.

இலக்கணவிளக்க அணியியல் :

இதனைப்பற்றி விரிவாக இயலமைப்பில் காணலாம்.

தொன்னூல் விளக்க அணியதிகாரம் :

இதன் அணிஅதிகாரம் 69 நூற்பாக்களை உடையது. சொல்லணியியல், பொருளணியியல் என்ற பகுப்புக்களை உடையது. சொல்லணியியலில் தொடங்கும் இந்நூலாசிரியர் மடக்கினை மறிநிலையணி என்று பெயரிட்டு விளக்கியுள்ளார்.

பொருள்கோள் எட்டும் இதன்கண்ணேயே சுட்டப்பட்டுள்ளன. சொல்மிக்கணி, சொல்லெஞ்சணி, சொல்லொப்பணி, திரிபியையணி, ஒழுகிசையணி, இயைபிசையணி, சமவணி எனப்பகுத்துப் பல உட்பிரிவுகளுடன் சொல்லணி முப்பது என்று கணக்கிடுகிறார்.

அங்ஙனமே பொருளணி 30 என்று கணக்கிட்டுச் சித்திர கவியையும் பொருளணியில் அடக்கி அணிகளின்தொகை அறுபது என்று குறிப்பிட்டுள்ளார்.

அணியிலக்கணம் :

19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த அணியிலக்கணம் என்ற இந்நூற் பகுதியில் பொருளணிகள் 102 சுருக்கமாக எடுத்துக்காட்டுக்களுடன் சுட்டப்பட்டுள்ளன. இவ்வணி யிலக்கணம் சந்திராலோகம் என்ற வடமொழி அணியிலக்கணத்-தைத் தமிழ் மரபுக்கு ஏற்ப ஆக்கியது என்று கருதப்படுகிறது.

சந்திராலோகம் :

அணியிலக்கணம் உரைநடையில் அணிகளை விளக்கிச் செல்வதால் அதற்கு நூற்பா யாத்து வழங்கியதுபோல, சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் அவர்களால் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட சந்திராலோகம் என்ற இந்த அணிநூல் 126 நூற்பாக்களில் அணியிலக்கணம் குறிப்பிடும் கலவையணிகள் இரண்டும் நீங்கலான ஏனைய நூறு அணிகளுக்கும் இலக்கணம் வகுத்துச் செல்கிறது.

குவலயானந்தம் :

சந்திராலோகத்தை விரித்து அப்பைய தீக்ஷிதர் இயற்றி விளக்கிய குவலயானந்தத்தின் மொழிபெயர்ப்பு 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டு, 19-ஆம் நூற்றாண்டு இறுதியில் விளக்கவுரையுடன் வெளிவந்துள்ளது. இது பொருளணிகள் நூற்றிருபதனை நுவல்கிறது.

முத்துவீரிய அணியதிகாரம் :

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் புகழ் பெற்று விளங்கிய முத்துவீரிய உபாத்தியாயர் வரைந்த முத்து

வீரியம் என்ற ஐந்திலக்கண நூலின் இறுதியதிகாரமாகிய அணியதிகாரம், சொல்லணியியல் பொருளணியியல் செய்யுளணியியல் என்ற மூன்று இயல்களை உடையதாய், 160 நூற்பாக்களைக் கொண்டு விளங்குகிறது. இவரும் மடக்கணியை 'மறிநிலை' என்றே குறிப்பிடுகிறார். மடக்கணியை விளக்கிய பின்னர், காதைகரப்பு முதலாகப் பிறிதுபடுபாட்டு ஈறாகச் சித்திரகவியின் பதின்மூன்று வகைகள் விளக்கப்பட்டுள்ளன. முதலில் சொல்லணியியலில் தொடங்கும் இவ்வணியதிகாரம், பொருளணியியலில் தண்டியலங்காரம் குறிப்பிடும் பொருளணிகள் பலவற்றோடு வேறு சிலவற்றையும் சேர்த்து 56 பொருளணிகளைக் குறிப்பிடுகிறது. செய்யுளணியியலில் வைதருப்பர் கௌடர் கூறும் பத்து நெறிகளும் எண்வகைப் பொருள்கோள்களும் வழுக்களும் மலைவுகளும் அமைதிகளும் கூறப்படுகின்றன.

இலக்கண விளக்கம் குறிப்பிடாத ஏனைய பொருளணி சொல்லணிகளை, மாறன் அலங்காரம், தொன்னூல் விளக்கம், அணியிலக்கணம், சந்திராலோகம், குவலயானந்தம், முத்துவீரியம் இவற்றின் அடிப்படையில் விளக்கிப் பிற்சேர்க்கையாக இணைத்துள்ளனம். அணியிலக்கணம் பற்றிய விளக்கம் நிரம்ப, அவையும் இன்றியமையாதன என்னும் கருத்தினேம்.

பொருளணி வகைகள்

தண்டியலங்காரம் குறிப்பிடும் 35 பொருளணிகளையே இலக்கண விளக்கமும் குறிப்பிடுகிறது. அவையாவன :

அணியின் பெயர் — பரியாயப் பெயர்

1. தன்மையணி – ஸ்வபாவோக்தி அலங்காரம்
2. உவமையணி – உபமாலங்காரம்
3. உருவக அணி – ரூபகாலங்காரம்
4. தீவக அணி – விளக்கு அணி
5. பின்வருநிலையணி – ஆவர்த்திதீபகாலங்காரம்
6. முன்னவிலக்கணி – தடைமொழி. பிரதிஷேதாலங்காரம்
7. வேற்றுப்பொருள்வைப்பணி – பிறபொருள்வைப்பணி, அர்த்தாந்த நியாஸாலங்காரம்

அணியின் பெயர் — பரியாயப் பெயர்

8. வேற்றுமையணி – வியதிரேகாலங்காரம்
9. விபாவனையணி – பிறிதுஆராய்ச்சி அணி
10. ஒட்டணி – குறிப்பு நவிற்சி அணி, சுருக்கு அணி. கூடோக்தி யலங்காரம்
11. அதிசய அணி – உயர்வு நவிற்சியணி, பெருக்கு அணி. அதிசயோக்தி
12. தற்குறிப்பேற்ற அணி – உத்பிரேக்ஷாலங்காரம்
13. ஏது அணி – ஹேதுஅலங்காரம்
14. நுட்ப அணி – ஸூக்ஷ்மாலங்காரம்
15. இலேச அணி – வஞ்சநவிற்சியணி
16. நிரல்நிறை அணி – யதாஸங்க்யாலங்காரம்
17. ஆர்வமொழியணி
18. சுவையணி – ரஸவதாலங்காரம்
19. தன்மேம்பாட்டுரையணி – நெடுமொழியணி
20. பரியாய அணி – பிறிதின் நவிற்சியணி. பரியாயோக்தாலங்காரம்
21. சமாயித அணி – எளிதின் முடிப்பு அணி
22. உதாத்த அணி – வீறுகோள் அணி
23. அவநுதியணி – ஒழிப்பணி, ஒழிபணி
24. சிலேடையணி – பலபொருள் சொற்றொடரணி
25. விசேடவணி – சிறப்புநிலையணி
26. ஒப்புமைக் கூட்ட அணி – ஒப்புமைக்குழுவணி. துல்லியலோகிதாலங்காரம்
27. விரோத அணி – முரண்விளைவணி
28. மாறுபடுபுகழ்நிலை அணி
29. புகழாப்புகழ்ச்சியணி – வஞ்சப்புகழ்ச்சியணி. வியாஜஸ்துதியலங்காரம்
30. நிதரிசன அணி – காட்சியணி
31. புணர்நிலையணி – உடனிகழ்ச்சி அணி
32. பரிவருத்தனையணி – மாற்றுநிலையணி. பரிவிருத்யாலங்காரம்
33. வாழ்த்தணி

அணியின் பெயர் — பரியாயப் பெயர்

34. சங்கீரண அணி – கலவை அணி
35. பாவிக அணி – நிகழ்வின் நவிற்சியணி என்பன.

இம் முப்பத்தைந்துடன் பலவற்றைக் கூட்டி மாறன் அலங்காரம் 64 பொருளணி உரைக்கும். அவை பின்வருமாறு :

36. உள்ளுறை
37. உல்லேகம் – பலபடப் புனைவணி
38. திட்டாந்தம் – எடுத்துக்காட்டுவமையணி
39. தற்குணம் – பிறிதின் குணம் பெறலணி
40. பிரத்யநீகம் – விறல் கோளணி
41. சந்தயம் – ஐயவணி
42. அற்புதம்
43. காவியலிங்கம் – தொடர்நிலை செய்யுட் குறியணி
44. பூட்டு வில்
45. இறைச்சிப் பொருள்கோள்
46. பொருள் மொழி
47. அதிகம் – பெருமையணி
48. வகைமுதல் அடுக்கு
49. இணை எதுகை
50. உபாயம்
51. தற்பவம்
52. அசங்கதி – (தூரகாரியஏது) தொடர்பின்மையணி
53. தடுமாறுத்தி
54. காரணமாலை
55. காரியமாலை
56. ஏகாவளி – ஒற்றைமணி மாலையணி
57. பிரதீபம் – எதிர்நிலையணி
58. பிறவணி
59. பரிசங்கை – ஒழித்துக்காட்டணி
60. புகழ்வதின் இகழ்தல்

அணியின் பெயர் — பரியாயப் பெயர்

61. உறுசுவை அணி – ஒப்புமை ஏற்ற அணி
62. விநோத்தி – இன்மை நவிற்சியணி
63. சமுச்சயம் – கூட்டவணி
64. சங்கரம் என்பன.

தூரகாரிய ஏது – அசங்கதி எனவும், நுட்பம் – பரிகரம் எனவும் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றுள் அற்புதம், பூட்டுவில், இறைச்சி, பொருள்மொழி, வகைமுதல் அடுக்கு, உபாயம், தற்பவம், காரியமாலை, பிறவணியின் கூறு என்ற ஒன்பதும் சந்திராலோகம், குவலயானந்தம் என்பனவற்றிலும் இடம் பெறுதன.

பொருளணியில் முப்பதனையே குறிப்பிடும் தொன்னூல் விளக்கத்துள் பிறிது உரை, விடையில் வினா, 'வினா இல்விடை, அமைவு அணி என்ற நான்கும், தண்டியலங்காரம் கூறுவனவான ஏனையவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சந்திராலோகம் அணியிலக்கணம் என்பனவற்றில், தண்டியலங்காரமும் மாறன் அலங்காரமும் கூறும் அணிகளின் வகைகளில் சில வேறு பெயரவாய்த் தனி அணிகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. அந் நூல்களில் காணப்படும் பெரும்பான்மையவான அணிகளோடு, திரிபு அணி, நினைப்பணி, மயக்கவணி, தொடர்முழுதுவமையணி, உடன்நிகழ்ச்சியணி, சுருங்கச்சொல்லணி, கருத்துடை அடைகொளி அணி, புனைவிலி புகழ்ச்சியணி, புனைவுளி விளைவணி, பிறிதின் நவிற்சியணி, எதிர்மறையணி, முரண் விளைந்து அழிவணி, பிறிதாராய்ச்சியணி, காரண ஆராய்ச்சியணி, கூடாமையணி, தகுதியின்மையணி, தகுதியணி, வியப்பணி, சிறுமையணி, ஒன்றற்கொன்று உதவியணி, மற்றதற்காக்கல் அணி, மேல்மேல் உயர்ச்சியணி, முறையில் படர்ச்சியணி, ஒழித்துக்காட்டணி, உறழ்ச்சியணி, எளிதின் முடிப்பணி, தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணி, மலர்ச்சியணி, கற்றோர் நவிற்சியணி, உய்த்துணர்வணி, பொய்த்தற் குறிப்பணி, வனப்பு நிலையணி, அகமலர்ச்சியணி, இகழ்ச்சியணி, வேண்டலணி, குறிநிலையணி, அரதனமாலையணி, தொல்லுருப் பெறலணி, பிறிதின் குணம் பெறுமையணி, தன்குணமிகையணி, மறைவணி, பொதுமையணி, மறையாமையணி, இறையணி, கரவு

வெளிப்படுப்பணி, வஞ்சநவிற்சியணி, குறிப்பு நவிற்சியணி, வெளிப்படை நவிற்சியணி, யுக்தியணி, உலகவழக்கு நவிற்சியணி, வல்லோர் நவிற்சியணி, மடங்குதல் நவிற்சியணி, நிகழ்வின் நவிற்சியணி, மிகுதி நவிற்சியணி, விதியணி என்பன காணப் படுகின்றன. இவற்றுள் பல தன்மையணி, ஒட்டணி, அதிசயவணி, சுவையணி என்பனவற்றுள் அடங்கும்.

குவலாயனந்தத்துள் சந்திராலோகம் கூறும் அணி வகைகளோடு, சுவையணி (தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலியன குறிப்பிடுவது) கருத்தணி, வன்மையணி, சேர்க்கையணி, பாவகத்தோற்ற அணி, பாவகச் சேர்க்கையணி, பாவகக் கலவை யணி, காட்சியளவையணி, கருதல் அளவையணி, ஒப்பளவையணி, சொல்லளவையணி, பொருட் பேற்றளவையணி, நுகர்ச்சியின்மை யணி, பிறப்பளவையணி, எடுத்துக்காட்டளவையணி, சேர்வை யணி, உறுப்பு உறுப்பிக்கலவையணி, இருசிறப்புக் கலவையணி, ஐயக்கலவையணி, ஒருசொல்லனுகி விளங்கும் கலவையணி என்ற இருபது அணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை சுவை அணி, ஏதுஅணி, சங்கீரண அணி, சங்கர அணி என்பனவற்றின் விரிவுகளே. ஆதலின் இவற்றைத் தனித்தனிக் காண்டல் வேண்டா.

முத்துவீரிய அணியதிகாரம் – தண்டியலங்காரம் குறிப்பிடும் அணிகள் 29-ஐயும், சந்திராலோகம் குறிப்பிடும் ஏனைய 27 அணி களையும் குறிப்பிட்டுள்ளது.

இவற்றை நோக்க, வகைகளைவிடுத்து, பொருள் அணிகள் 120 இன்று காணப்படும் அணிநூல்கள் வாயிலாக உணர்த்தப் படுகின்றன.

இனிச் சொல்லணிகள் மடக்கும் சித்திரகவியுமாம். சித்திர கவிகள் தண்டியலங்காரத்தில் பொருளணியை அடுத்துக் கோமூத்திரிகை, கூடசதுர்த்தம், மாலைமாற்று, எழுத்து வருத்தனம், நாகபந்தம், வினாஉத்தரம், காதைகரப்பு, கரந்துறைச் செய்யுள், சக்கரம், சுழிகுளம், சருப்பதோபத்திரம், அக்கரச் சுதகம், நிரோட்டம், ஒற்றுப்பெயர்த்தல், மாத்திரைச்சுருக்கம், மாத்திரைப்பெருக்கம், முரசபந்தம், திரிபாகி, திரிபங்கி, பிறிது படுபாட்டு என்ற இருபது வகைகளாகச் சுட்டப்பட்டுள்ளன.

இலக்கணவிளக்கமும் அவற்றையே சுட்டுகிறது. மாறன் அலங்காரத்துள், வல்லினப்பாடல், மெல்லினப்பாடல், இடையினப்பாடல், நிரோட்டியஒட்டியம், ஓட்டிய நீரோட்டியம், பதுமபந்தம், இரதபந்தம், எழுகூற்றிருக்கை என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. வீரசோழிய உரையுள், யாப்பருங்கலவிருத்தி குறிப்பிட்டுள்ள தூசங்கொளல், வாவல்ஞாற்று, பாதமயக்கு, பாவில்புணர்ப்பு, ஒருபொருட்பாட்டு, சித்திரப்பா, விகற்பநடை என்பனவும் எடுத்துக்காட்டின்றி விளக்கப்பட்டுள்ளன.

இவற்றுள், இலக்கணவிளக்க அணியியல் இயம்பும் அணி வகைகள் பற்றி ஏனைய நூல்கள் இயம்பும் செய்திகள் அவ்வவ் வணியின் இறுதியில் உரைவிளக்கமாக வரையப்பட்டுள்ளன. இலக்கணவிளக்க அணியியலுள் குறிப்பிடப்படாத ஏனைய நூற் செய்திகள் யாவும் பிற்சேர்க்கையாக உள்ளன.

அணியியல் - அமைப்பு

அணி எனப்படுவது குணம் என்றும் அலங்காரம் என்றும் இரண்டு வகையினையுடையதாய்ப் பொருளதிகாரத்தின் முதல் இரண்டு இயல்களிலும் கூறப்பட்டுள்ள அகப்பொருளையும் புறப் பொருளையும் விளக்குவதாகும்.

அவ்வகப்பொருள் புறப்பொருள் என்ற இரண்டற்கும் இடம் செய்யுள் ஆதலின், அச்செய்யுளை விளக்கி நிற்பதும் அவ்வணி யினுடைய இயல்பாகும்.

செய்யுள் என்பவை முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என்ற நான்கு வகையினவாகும்.

முத்தகச்செய்யுள் ஒரேபாடலில் பொருள்முற்றி நிற்பதாகும். குளகச்செய்யுள் தொடர்ந்து பல பாடல்களில் பொருள் புலப் படுத்தப்படுவதால் அப் பல பாடல்களும் ஒரே முடிக்குஞ்சொற் கொண்டு பொருள் முற்றுப்பெறும்.

தொகைநிலைச்செய்யுள் தனி ஒருவனாலோ பலராலோ பாடப் பட்டுப் பொருள் இடம் காலம் தொழில் பாட்டு அளவு என்பன பற்றித் தொகுக்கப்படும் செய்யுள் தொகுதியாகும்.

தொடர்நிலைச் செய்யுள் பொருள்தொடர்நிலை, சொல்தொடர் நிலை என்ற இருவகைப்படும்.

பொருள் தொடர்நிலைச் செய்யுள், பெருங்காப்பியம் என்றும் காப்பியம் என்றும் இருவகைப்படும். அவற்றுள் பெருங்காப்பியம் என்பது, வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றில் ஏற்பன முற்கொண்டு, அறம் பொருள் இன்பம் வீடு என்ற உறுதிப் பொருள் நான்கனையும் சுட்டி, ஒப்புயர்வற்ற தலைவனை உடையதாய், மலை – கடல் – நாடு – ஊர் – பருவம் – கதிரவன் உதயம்–மதியத்தின் உதயம் முதலிய வருணனைகளை உடையதாய், திருமணம் – முடிசூட்டு விழா – பொழில் விளையாடல் – புனல் விளையாடல் – கள்ளாட்டு – புதல்வர்ப் பயத்தல் – புலவியில் புலத்தல் – கலவியில் களித்தல் முதலியனவற்றை விளக்கி, மந்திராலோசனை – தூது – போர்மேற் சேறல் – செரு விளைத்தல் – வெற்றி பெறுதல் ஆகிய செய்திகளைக் குறிப்பிட்டு, சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் முதலிய உட்பிரிவுகளை உடையதாகி, எண்வகைச் சுவையும் மெய்ப்பாடும் கேட்போர் எய்துமாறு நன்மக்களால் பொருள்தொடர்பு வரப் பாடப்படுவதாகும். பெருங்காப்பியத்தில் முற்கூறப்பட்ட செய்திகளில் நால்வகை உறுதிப் பொருள் நீங்கலாக ஏனைய செய்திகள் சில குறைந்தும் வரலாம். அறம் முதலிய நான்கு உறுதிப் பொருள்களில் ஒன்றோ பலவோ குறைந்துவரப் பாடப்படுவது சிறுகாப்பியம் என்றும் காப்பியம் என்றும் கூறப்படும். அவை ஒரே வகைப்பட்ட பாடலானும் பலவகைப்பட்ட பாடலானும் பாடப்பெறும். இடை யிடையே உரைநடையும், வேற்று மொழியும் விரவி வருதலும் உண்டு. சொற்றொடர்நிலைச் செய்யுள், பொருள் தொடர்பற்ற பல செய்யுட்கள் அந்தாதித் தொடையால் சொல் தொடர்புறப் பாடப்பெறும் தொகுப்பாகும்.

செய்யுட் குணத்தை வைதருப்பம் என்றும் கௌடம் என்றும் இரு வகையாகச் சான்றோர் கொண்டுள்ளனர். அவற்றுள் வைதருப்ப நெறி – நெகிழிசை இல்லாச் செறிவு, பொருளைப் புலப்படுத்தும் தெளிவு, வன்மை மென்மை இடைமை விரவத் தொடுக்கும் சமநிலை, சொல்லான் செவிக்கின்பமும் பொருளான் மனத்திற்கு இன்பமும் மிகுமாறு பாடப்படும் இன்பம், செவிக்கு இன்னா ஓசை பயவாத ஒழுகிசை, வெளிப்படையாகக் கூறாது குறிப்பாக ஒரு பொருளைக் கொள்ளவைக்கும் உதாரம், கருதிய

பொருளைத் தெளிவாக விளக்குதற்குரிய சொற்களைச் செய்யுளில் அமைத்துப் பாடும் உய்த்தலில் பொருண்மை, உலக நடையைக் கடவாது அளவே வருணித்துப் பாடும் காந்தம், தொகைச் சொற்றொடர் மிகுதியாக வருமாறு பாடும் வலி, ஒரு பொருளின் தொழிலை அதனோடு ஒப்புடைய பொருளுக்கு அமைத்துப் பாடும் சமாதி எனப் பத்து வகைப்படும்.

கௌட நெறியாவது வைதருப்ப நெறி கூறும் பத்துக் குணங்களோடும் ஒத்து வாராது சிலவற்றுடனேயே ஒத்து வருவதாகும். அவையாவன பொருள் இன்பம், உதாரம், சமாதி என்பனவாம்.

அலங்காரம் – பொருளணி எனவும் சொல்லணி எனவும் இருவகைப்படும்.

பொருளணி – தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வரு நிலை, முன்னவிலக்கு, வேற்றுப் பொருள் வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரல்நிறை, ஆர்வமொழி, சுவை, தன் மேம்பாட்டுரை, பரியாயம், சமாயிதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக்கூட்டம், விரோதம், மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீரணம், பாவிகம் என்று முப்பத்தைந்து வகைப்படும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நால்வகைப்பட்ட பொருளையும் உள்ளவாறு விளக்கிப் பாடும் தன்மையணி, பொருள் குணம் சாதி தொழில் என்ற நான்கனையும் நிலைக்களமாகக் கொண்டு தோன்றும்.

பண்பு தொழில் பயன் என்ற மூன்றனுள் ஒன்றனையோ பலவற்றையோ காரணமாகக் கொண்டு, ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்புமை தோன்றக் கூறுவது உவமை அணியாம். அதன் செய்திகள் பலவற்றையும் தொல்காப்பியம் முதலிய பெருநூல்களான் உணரலாம். அவ்வுவமையணி – பண்பு முதலியன வெளிப்பட அமைக்கும் விரிஉவமை, பண்பு முதலாயின தொகுத்து அமைக்கும் தொகை உவமை, உபமானத்தை உபமேயமாகவும் உபமேயத்தை

உபமானமாகவும் ஒரே பாடலில் அமைத்துக்காட்டும் இதர விதர உவமை, ஒன்று மற்றொன்றனை ஒரு காரணத்தான் அன்றிப் பிறிது ஒரு காரணத்தானும் ஒத்திருக்கும் என்று குறிப்பிடும் சமுச்சய உவமை, உபமானத்தை நீக்கி உபமேயத்தையே சிறப்பித்துக் குறிப்பிடும் உண்மை உவமை, கூறப்பட்ட செய்திக்கு ஒப்புமையான பிறிது ஒரு செய்தியை ஒரேபாடலில் அடுத்தடுத்துக் குறிப்பிடும் மறுபொருளுவமை, உபமானத்தைப் பெரிதும் புகழ்ந்து உவமிக்கும் புகழுவமை, உவமையைக் குறை கூறி உவமிக்கும் நிந்தை உவமை, ஒன்றனுக்கு ஒன்றனையே ஒப்பாகக் கூறும் நியம உவமை, ஒன்றனுக்கு ஒரு பொருளேயன்றி அது போன்ற ஏனைய பொருள்களும் உவமையாகும் என்று கூறும் அநியம உவமை, உவமையையும் உபமேயத்தையும் ஐயப்படும் ஐயஉவமை, ஒரு காரணம் பற்றி உவமை அதுவன்று இதுவே என்று அறுதியிடும் தேற்ற உவமை, உவமை சிறந்தது ஆயினும் உபமேயத்தினும் மேம்பட்டதன்று என்று கூறும் இன்சொல் உவமை, உபமேயத்தை உபமானமாக்கிக் கூறும் விபரீத உவமை, ஒருபொருளை மற்றொரு பொருள் போலும் என்று கூற மனம் விரும்பும் விருப்பத்தைக் குறிப்பிடும் வேட்கை உவமை, ஒரே உபமேயத்திற்கு உபமானங்கள் பலவற்றைக் குறிப்படும் பல பொருள் உவமை, உவமைப்பொருள்களை நேர்முகமாக ஒப்புமை கூறாது அவற்றின்கண் சில செய்திகளைக் கூறுபாடு செய்து கொண்டு அக்கூறுபாடுகளால் வேறுபடுத்துக் கூறும் விகார உவமை, ஒருபொருளிடத்துக் கொண்ட விருப்பத்தான் ஒப்புமைப் பொருளிடத்து மயங்கி உரைத்தலைக் கூறும் மோக உவமை, உலகில் இல்லாத பொருளை உவமையாகக் கூறும் அபூத உவமை, உபமானங்கள் பலவற்றுள் ஒவ்வொன்றனோடும் உவமையுருபைப் புணர்த்துக் கூறும் பலவயிற்போலி உவமை, உவமைகள் பலவற்றுள் ஒன்றனுடனேயே உவமையுருபைப் புணர்த்துக் கூறும் ஒருவயிற்போலி உவமை, நிகழாத செய்தியை நிகழ்வது போலக் கூறி உவமை யாக்கும் கூடா உவமை, உபமானத்தை அடியோடு மறுத்து உபமேயத்தையே தனக்குத் தானே ஒப்பாகக் கூறும் பொது நீங்குவமை, ஒருபொருளுக்கு வரும் உவமைகளைப் பொருள் தொடர்புற அமைக்கும் மாலை உவமை, உவமையணி ஏனைய அணிகளோடும் இயைந்து வரும் அற்புத உவமை, சிலேடை உவமை, அதிசய உவமை, விரோத உவமை, ஒப்புமைக் கூட்ட உவமை, தற்குறிப்பேற்ற உவமை,

வியப்பு உவமை, ஏது உவமை என்பனவாக உவமைவிரி முப்பத்திரண்டாகும்.

உபமேய அடைக்கு உபமான அடையை மிகுத்துப் புணர்த்தலும், உபமேய அடைக்கு உபமான அடையைக் குறைத்துப் புணர்த்தலும், இழிந்த உவமையோடு உயர்ந்த பொருளை உவமித்தலும், உயர்ந்த உவமையோடு இழிந்த பொருளை உவமித்தலும், உபமான உபமேயங்களிடை முதல் சினை, உயர்திணை அஃறிணை, ஆண்பால் பெண்பால், ஒருமை பன்மை தம்முள் மாறுபடத் தொடுத்தலும் என்னுமிவை தொன்றுதொட்டுப் பயன்படுவனவாகச் சான்றோர் கொள்வாராயின் வரையாது ஏற்றுக்கொள்ளப்படும்; பயன்படவில்லையேல் அவை கொள்ளப் படா. போல மறுப்ப ஒப்ப காய்ப்ப நேர வியப்ப நளிய நந்த என்ற எட்டும் நிறம்பற்றிய உவமையுருபுகளாம். கடுப்ப ஏய்ப்ப மருள புரைய ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்ற எட்டும் வடிவு பற்றிய உவமையுருபுகளாம். இப்பதினாறும் பொதுவாகப் பண்பு பற்றிய உவமையுருபு எனப்படும். அன்ன ஆங்க மான விறப்ப என்ன உறழ தகைய நோக்க என்ற எட்டும் தொழில் பற்றிய உவமையுருபுகளாம். என்ன விழைய புல்ல பொருவ கள்ள மதிப்ப வெல்ல வீழ என்ற எட்டும் பயன் பற்றிய உவமை உருபுகளாம். இவையே அன்றி, ஒன்ற நடுங்க ஏர ஏற்ப வென்ற நாட மாற்ற பொற்ப ஆர அமர அனைய எதிர ஏய இயைய இகல துணைப்ப மலைய தூக்கு செத்து கெழு தேர் நகை மிகு சிவண் நிகர் இன்ன என்பனவும் பிறவும் பொதுவான உவமையுருபுகளாம்.

உபமானம் உபமேயம் என்ற இரண்டும் வேறாய் இருக்கும் தன்மையை நீக்கி இரண்டனையும் ஒன்றாக்கிக் கூறுவது உருவக அணியாம். அவ்வுருவக அணியின் விரி இருபத்தொரு கூறுபாடு உடையது. மாட்டேற்றுச் சொல்லாகிய 'ஆகிய' போல்வன மறைந்து வரும் தொகைஉருவகம், மாட்டேற்றுச்சொல் விரிந்து வரும் விரிஉருவகம், சிலவற்றைத் தொகுத்தும் சிலவற்றை விரித்தும் உருவகம் செய்யும் தொகைவிரி உருவகம், உருவகப்படுத்தும் பொருள்களை இயைபு உடையனவாக உருவகம் செய்யும் இயைபு உருவகம், உருவகப்படுத்தும் பொருள்களை இயைபு இல்லனவாக உருவகம் செய்யும் இயைபுஇல் உருவகம், உருவகம் செய்யவேண்டிய உறுப்புக்களுள் சிலவற்றை விடுத்து ஏனையவற்றையே உருவகம் செய்யும் வியனிலை உருவகம்,

உருவகம் செய்யும் பொருள்களுக்குச் சிறப்பான அடைமொழிகளைப் புணர்த்து உருவகம் செய்யும் சிறப்பு உருவகம், உருவகம் செய்வதற்கு இவை ஏற்புடையன அல்ல என்பதனை விளக்கி உருவகம் செய்துகாட்டும் விரூபகம், பலவற்றை உருவகப் படுத்தி உருவகப்படுத்தியதற்கு ஏற்ப அவை நன்மை தாராது தீங்கு தருதற்கு வேறுகாரணம் உண்டு என்று குறிப்பிடும் சமாதான உருவகம், முதலில் உருவகம் செய்யப்பட்டது ஒன்றனையே மீண்டும் உருவகப்படுத்தும் உருவக உருவகம், உறுப்புக்கள் பலவற்றுள் ஒன்றனையே உருவகம் செய்யும் ஏகாங்க உருவகம், உறுப்புக்கள் பலவற்றையும் சில எஞ்ச உருவகம் செய்து உறுப்பியை உருவகம் செய்யாது விடும் அநேகாங்க உருவகம், உறுப்புக்களையும் உறுப்பியையும் குறைவின்றி உருவகம் செய்யும் முற்று உருவகம், உறுப்புக்களை மாத்திரம் குறைவற உருவகம்செய்து உறுப்பியை உருவகம் செய்யாத அவயவ உருவகம், உறுப்புக்களை விடுத்து உறுப்பியை மாத்திரம் உருவகம் செய்யும் அவயவி உருவகம் என்பனவும், உருவகம் ஏனைஅணிகளோடும் கூடுவதனால் ஏற்படும் உவமை உருவகம், ஏது உருவகம், வேற்றுமை உருவகம், விலக்கு உருவகம், அவநுதி உருவகம், சிலேடை உருவகம் என்பனவும் ஆம்.

குணம் தொழில் சாதி பொருள் ஆகியவற்றில் ஒன்றனையோ பலவற்றையோ குறித்து நிற்கும் சொல், ஓரிடத்தில் நின்று பல இடத்து நின்ற சொற்களோடு பொருந்தி அப்பொருளை விளக்கும் அணி தீவக அணியாம். இவ்வணி செய்யுட்களில் முதல் இடை கடை என்ற மூன்று இடங்களிலும், முதனிலைத்தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத்தீவகம் என்ற பெயர்களோடு பொருந்திவரும். இத்தீவகஅணி மாலாதீவகம், விருத்ததீவகம், ஒருபொருள் தீவகம், சிலேடைத்தீவகம், உவமைத்தீவகம், உருவகத்தீவகம் என ஏனை அணிகளோடும் பொருந்திவரும்.

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பல முறையும் வருவது சொல் பின்வருநிலை அணியாம், முன்னர் வந்த பொருளே பலமுறையும் பின்னர் மீண்டு வருவது பொருள் பின் வருநிலை அணியாம். சொல்லும் பொருளும் பின்னர் மீண்டு வருவது சொற்பொருட் பின்வருநிலை அணியாம். உபமானப் பொருள் பின்னர் மீண்டுவரின் உபமானப்பொருட் பின்வருநிலை அணியாம்.

ஒரு பொருளைக் குறிப்பினால் விலக்கும் அணி முன்னவிலக்கு அணியாம். அஃது இறந்தகால விலக்கு, நிகழ்கால விலக்கு, எதிர்கால விலக்கு எனக் காலம் பற்றி மூவகைப்படும். பொருள், பண்பு, காரணம், காரியம் என்ற நான்கனுள் ஒன்றனைப் பொருந்தி அவ்வணி நிகழும். அம்முன்னவிலக்கின் விரி — வன்சொல், வாழ்த்து, தலைமை, இகழ்ச்சி, துணைசெயல், முயற்சி, பரவசம், உபாயம், கையறல், உடன்படல், வெகுளி, விலக்கல், ஐயம் என்ற பதின்மூன்றும் பிறவும் ஆம். அவ்வணி வேற்றுப் பொருள் வைப்பு, சிலேடை, ஏது என்ற ஏனை அணிகளோடு கூடி வருதலும் உண்டு.

ஒரு செய்தியைக் கூறத் தொடங்கி அதனை நன்கு விளக்கிக் கூறுவதற்கு உலகறிந்த பிறிது ஒருசெய்தியைக் குறிப்பிடுவது வேற்றுப்பொருள் வைப்பணியாம். அவ்வணி — முழுவதும் சேறல், ஒருபுடைச் சேறல், மாறுபட்டுத் தோன்றுதல், சிலேடையான் வேற்றுப்பொருள் அமைத்தல், உலக இயற்கைக்குப் பொருந்தாத இயற்கை, உலகியலுக்குப் பொருந்தும் இயற்கை, உலகியலுக்குப் பொருந்துதலும் பொருந்தாமையும் ஆகிய இருமை இயற்கை, உலக இயலுக்கு அடியோடு மாறுபடும் விபரீதப் படுதல் என எட்டு வகைப்படும்.

வெளிப்படையாகவோ குறிப்பாகவோ ஒப்புமையுடைய இரு பொருள்களை ஒருபொருளானும் இருபொருளானும் மிகுதி குறைவுகளானும் வேறுபடுத்துக்காட்டும் வேற்றுமையணி — குணம், பொருள், சாதி, தொழில் என்ற நான்கனையும் நிலைக்களனாகக் கொண்டு தோன்றும்.

ஒருபொருளின் செயலைக் குறிப்பிடுங்கால், அச்செயலுக்குப் பலரும் அறியும் காரணத்தை விடுத்து வேறொரு காரணத்தை இயல்பாகவோ குறிப்பாகவோ புலப்படுமாறு உரைக்கும் அணி விபாவனை அணி ஆகும்.

கவி தான் கூறக் கருதிய பொருளை மறைத்து அதனைக் குறிப்பாக வெளிப்படுத்துவதற்கு அதற்கு ஒப்புமையான பிறிது ஒருபொருளைக் கூறுவது ஒட்டணியாகும். கூறும் பொருளும் அதன் அடைகளும் கருதும் பொருளுக்கு வேறுபடத் தொடுத்தல், அடை கூறும் பொருளுக்கும் குறிப்பிடக் கருதும் பொருளுக்கும்

பொதுவாக அமையுமாறு தொடுத்தல், கூறும் பொருள் கருதும் பொருள் இரண்டற்கும் தனித்தனி பொருந்துமாறு அடைகளைக் கலந்து அமைத்தல், அடை மாறுபடுவதால் கருதும் பொருள் புலனுகுமாறு அமைத்தல் என்று அது நான்கு வகைப்படும்.

மனத்தில் தோன்றும் பொருள் ஒன்றனை உலக நடையினை அடியோடு கடவாது சான்றோர் வியப்புடன் ஏற்றுக் கொள்ளுமாறு குறிப்பிடுவது அதிசய அணியாம். அது பொருள் குணம் தொழில் ஐயம் துணிவு திரிபு என்ற ஆறனை நிலைக்களமாகக் கொண்டு தோன்றும்.

இயங்கியல்பொருள் நிலையியல்பொருள் என்ற இருவகைப் பொருள்களிடத்தும் இயல்பாக விளையும் தன்மையை விடுத்துக் கவி தான் பிறிதுஒன்றனைக் கருதி அவற்றின்கண் ஏற்றிக் குறிப்பிடும் அணி தற்குறிப்பேற்ற அணியாம். அவ்வணியில் அன்ன, போல் முதலிய உவமையுருபுகள் இடையே பொருந்தி வருவதும் உண்டு.

ஒரு பொருளிடத்து இன்ன காரணத்தான் இன்ன நிகழ்ச்சி ஏற்பட்டது என்று காரணத்தை விளக்கிக் கூறுவது ஏது அணியாம். அது செயலைக் காரணமாகக் கொள்ளும் காரக ஏது, அறிவைக் காரணமாகக் கொள்ளும் ஞாபக ஏது என இரு திறத்தது; காரக ஏது - கருத்தா, செயப்படுபொருள், கருமம், கருவி, ஏற்பது, நீக்கம் என்ற ஆறனையும் நிலைக்களனகக் கொண்டு தோன்றும். அவ்வாறும் அல்லாத பிற காரணங்களால் உய்த்து உணரத் தோன்றும் ஏது ஞாபக ஏதுவாம்.

ஒன்றினது இன்மையைக் கூறுவதும் அவ்வேது அணியின் பாற்படும். அவ்வின்மையாகிய அபாவமானது - என்றும் இல்லாமை, இல்லாமையது இல்லாமை, ஒன்றினது இன்மையும் அதன் கண் அஃது இன்மையும், ஓரிடத்தும் ஒரு காலத்தும் உள்ள பொருள் பிறிதோரிடத்தும் பிறிதொரு காலத்தும் இல்லாமை, முன் உள்ளது அழிவுபட்டு இல்லாமை என்று ஐவகைத்து. தூரகாரிய ஏது, காரண காரியங்கள் ஒருங்கு நிகழும் ஏது, காரணத்தின் முன் காரியம் நிகழும் ஏது, காரணத்திற்கு ஏற்ற காரியமே நிகழும் ஏது, காரணத்திற்கு ஏலாக் காரியம் நிகழும் ஏது என்ற ஐவகை ஏதுக்களும் முற் கூறப்பட்டனவற்றோடு

கொள்ளப்படும். வெளிப்படையாகக் கூறாது குறிப்பினாலோ தொழிலினாலோ நுணுகி உணரக் கூடிய தொழில் தன்மையைக் கூறும் அணி நுட்பஅணி ஆகும்.

உள்ளத்துக் குறிப்பை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள் தோன்றவும், அவற்றின் தோற்றத்துக்கு வேறொரு பொய்க் காரணத்தைக் கூறி உண்மைக் குறிப்பை மறைத்துக் கூறும் அணி இலேச அணி ஆகும். ஒன்றனை வெளிப்படையாகப் புகழ்வதுபோலக் குறிப்பால் பழிப்பதும், வெளிப்படையாகப் பழிப்பதுபோலக் குறிப்பால் புகழ்வதும் இவ்வணியின் பாற்படும் என்பாரும் உளர்.

பெயரையும் வினையையும், உபமானத்தையும் உபமேயத்தையும், முடிக்கும் சொல்லையும் முடிக்கப்படும் சொல்லையும் முறையே அமைத்துக் கூறுவது முறை நிரல் நிறை அணியாம்; மாற்றிக் கூறுவது எதிர் நிரல்நிறை அணியாம்.

உள்ளத்து நிகழும் ஆர்வக் குறிப்பினைச் சொல்லால் வெளிப்படத் தெரிவிப்பது ஆர்வமொழி என்ற அணியாகும்.

வீரம் அச்சம் வியப்பு இழிப்பு காமம் அவலம் கோபம் நகை என்ற எண் வகை மெய்ப்பாடுகளும் உள்ளத்துக் குறிப்பான் புறத்தே புலனாகும் செய்தியைக் கூறும் அணி சுவையணி ஆகும்.

ஒருவன் தன்னைத்தானே தேவைப்பட்ட இடத்தில் மெய்ப்பாடு தோன்றப் புகழ்ந்து உரைப்பதனைக் கூறுவது தன் மேம்பாட்டுரை அணியாம்.

ஒருவன் தான் கருதியதனை வெளிப்படக்கூறாது, தன்கருத்துப் புலனாகும்படி வேறு ஒருபொருளைக் குறிப்பிடுவது பரியாய அணியாம்.

முன்பு தான் முயன்றதொரு தொழிலின் பயன் பிறிது ஒரு நிகழ்ச்சியால் எளிதின் கிட்டியதனைக் குறிப்பிடுவது சமாயித அணி ஆகும்.

மேம்பட்ட செல்வ உயர்ச்சியையோ, மேம்பட்ட உள்ளக் கிளர்ச்சியின் உயர்ச்சியையோ உயர்த்திக் கூறுவது உதாத்த அணியாகும்.

சிறப்பினானும் பொருளினானும் குணத்தினானும் ஆகிய உண்மையை மறுத்து அதற்கு மறுதலையாகிய பிறிது ஒன்றனை வனப்புநிலை தோன்றக் கூறுவது அவநுதி அணியாம்.

ஒரே சொற்றொடர் ஒன்றற்கு மேற்பட்ட பலபொருள்களைத் தருமாறு அமைப்பது சிலேடை அணியாம். அது சொல்லைப் பிரிக்காமல் பலபொருள் கொள்ளும் செம்மொழிச்சிலேடை, சொல்லைப் பிரித்துப் பலபொருள் கொள்ளும் பிரிமொழிச்சிலேடை என்ற இரு பெரும்பகுப்புக்களை உடையது. அவ்வணியே ஒரு வினையான் வரும் சிலேடை, பலவினையான் வரும் சிலேடை, மாறுபட்ட வினையான் வரும் சிலேடை, இரட்டுற மொழிந்தவற்றை வரையறை செய்யும் நியமச்சிலேடை, அவ்வரையறையை விலக்கும் நியமவிலக்குச் சிலேடை, முன்னர் இரட்டுற மொழிந்தவற்றைப் பின் முரண்படக் குறிப்பிடும் விரோதச்சிலேடை, அவற்றை முரணாமல் இரட்டுற மொழியும் அவிரோதச்சிலேடை என்ற ஏழ் வகையான் நிகழும்.

குணம் தொழில் பொருள் சாதி உறுப்பு முதலாயின குறைபடுதல் காரணமாக ஒரு பொருளுக்குச் சிறப்புத் தோன்ற உரைப்பது விசேட அணி ஆகும்.

புகழ் பற்றியோ பழி பற்றியோ கவி ஒருபொருளைக் குறிப்பிடும் இடத்து, அப்புகழ் அல்லது பழி பற்றித் தான் குறிப்பிடக்கருதும் பொருளின் மிக்கபொருளை உடன் வைத்துக் குறிப்பிடுவது ஒப்புமைக் கூட்ட அணியாம்.

சொல்லாலோ, பொருளாலோ, சொல் பொருள் என்ற இரண்டனாலோ மாறுபாடு தோன்ற உரைப்பது விரோத அணியாம்.

ஒரு பொருளைப் பழிப்பதற்கு வேறொரு பொருளைப் புகழ்ந்து உரைத்துத் தான் பழிக்கக் கருதிய கருத்தைக் கவி குறிப்பாகப் புலப்படுத்துவது மாறுபடு புகழ்நிலை அணியாம்.

பழிப்பது போல வெளிப்படையாக் காட்டிக் குறிப்பால் புகழ்ச்சி தோன்ற அமைப்பது புகழாப் புகழ்ச்சி அணியாம்.

ஒரு பொருளிடத்து நிகழும் நிகழ்ச்சியின் பயன் பிறிது ஒரு பொருளுக்கு நன்மையோ தீமையோ புலப்படச் செய்வதாக அமைத்துக் கூறுவது நிதரிசன அணியாம்.

இரண்டு பொருளுக்கு ஒரே பண்பையோ வினையையோ புணர்த்துக் கூறுவது புணர்நிலை அணியாம்.

ஒரு பொருளைக் கொடுத்துப் பிறிது ஒரு பொருளைப் பண்ட மாற்றாகக் கொள்ளும் செய்தியைக் குறிப்பிடுவது பரிவருத்தனை அணியாம்.

இத் தன்மையானுக்கு இன்ன நலன்கள் சிறக்க என்று வாழ்த்துவதனைக் கூறுவது வாழ்த்தணியாம்.

பல அணிகளும் ஒரு பாடலில் அமையுமாறு அமைக்கப்பட்ட பாடலில் உள்ள அணி சங்கீரண அணியாம்.

பொருள் தொடர்நிலைச் செய்யுளில் முழுதும் நோக்கிக் கொள்ளுமாறு கவி கருதிச் செய்யும் குணத்தைக் குறிப்பிடுவது பாவிக அணியாம்.

இவ்வாறு செறிவு முதல் சமாதி ஈறாகிய பத்துக் குண அணிகளும், தன்மை முதல் பாவிகம் ஈறாக முப்பத்தைந்து பொருளணிகளும் கூறப்பட்ட பின்னர்ச் சொல்லணிகள் கூறப் பட்டுள்ளன.

சொல்லணிகள், மடக்கு எனவும் சித்திரகவி எனவும் இரண்டு பெரிய பாகுபாட்டினுள் அடங்கும்.

நான்கடிச் செய்யுட்கண் எழுத்துக்களின் தொகுதி பிற எழுத்துக்களானும் சொற்களானும் இடையே தொடரப் பெறாதும் தாமே தொடர்ந்து வந்து வேறு பொருளை விளக்குதலைக் கூறுவது மடக்கணியாம். அம் மடக்கு ஓரடி முதலாக நான்கு அடிகாறும் நிகழும். ஒவ்வோரடியிலும், ஆதிமடக்கு - இடைமடக்கு - கடைமடக்கு - ஆதியோடு இடைமடக்கு - ஆதியோடு கடைமடக்கு - இடையோடு கடைமடக்கு - முற்று மடக்கு - என்ற எழுவகையுள் ஒன்றான் மடக்கணி அமையும்.

ஈரடிமடக்கு ஆறு வகைப்படும். அவையாவன – முதலடியும் இரண்டாம் அடியும், முதலடியும் மூன்றும் அடியும், முதலடியும் நான்காம் அடியும், மூன்றும் அடியும் நான்காம் அடியும், இரண்டாம் அடியும் நான்காம் அடியும், இரண்டாம் அடியும் மூன்றும் அடியும் மடக்குதலாம்.

மூவடி மடக்கு நான்கு வகைப்படும். அவையாவன – நான்காம் அடி ஒழித்து ஏனைய மூன்று அடியும், இரண்டாம் அடி ஒழித்து ஏனைய மூன்று அடியும், மூன்றும் அடி ஒழித்து ஏனைய மூன்றடியும், முதலடி ஒழித்து ஏனைய மூன்று அடியும் மடக்குதலாம்.

நான்கடியும் மடக்கி வரும் முற்றுமடக்கு ஒன்றே.

எனவே அடிமடக்குப் பதினொன்று, ஓரடிமடக்கு நான்கு ஆகிய பதினைந்தனையும், ஆதி – இடை – கடை – ஆதியோடு இடை – ஆதியோடு கடை – இடையோடு கடை – முற்று என்ற ஏழனோடும் கூட்டி உறழ, மடக்கு நூற்றைந்து வகைப்படும் என்பது கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றை இடையிடாது வருவன, இடையிட்டு வருவன, இடையிட்டும் இடையிடாதும் வருவன என்ற முக்கூற்றான் உறழ மடக்கணிவகை முந்நூற்றிருபத்தைந்து என்று கணக்கிடுவாரும் உளர்.

கோமூத்திரி – கூடசதுக்கம் – மாலைமாற்று – மாத்திரைச் சுருக்கம் – மாத்திரை வருத்தனம் – எழுத்து வருத்தனம் – ஒற்றுப் பெயர்த்தல் – வினா உத்தரம் – நாகபந்தம் – முரசபந்தம் – திரிபாகி – திரிபங்கி – பிறிதுபடுபாட்டு – காதை கரப்பு – கரந்துரைச்செய்யுள் – சக்கரம் – சுழிகுளம் – சருப்பதோபத்திரம் – அக்கரச்சுதகம் – நிரோட்டகம் என இருபது வகைத்தாகச் சித்திரகவி கூறப் பட்டுள்ளது.

பிரிபொருள் சொற்றொடர், மாறுபடு பொருள்மொழி, கூறியது கூறல், கவர்படு பொருள்மொழி, நிரல்நிறைவழு, சொல்வழு, யதிவழு, செய்யுள்வழு, சந்திவழு, இடமலைவு, காலமலைவு, கலைமலைவு, உலகமலைவு, நியாயமலைவு, ஆகமமலைவு என்ற பதினைந்தும் தம்மிடை நிகழாத வகையில் செய்யுட்கள் இயற்றப் படல் வேண்டும். மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு என்பன

பற்றிய பல செய்திகளும் வரம்பில ஆதலின், அவை அளவை நூல் வல்லார்வாய்க் கேட்டு உணரப்படும்.

செய்யுள் முழுதும் ஒரேபொருள் தொடர்ச்சிபெறக் கூறப் படாமையாகிய பிரிபொருள் சொற்றொடர் என்ற வழு கள்ளுண்டு களித்தார் கூற்றினும் பித்தர்கள் கூற்றினும் வழுவமைதியாகக் கொள்ளப்படும். முன்னர் மொழிந்ததற்குப் பின்னர் முரண்பட்ட செய்திகளைக் கூறும் மாறுபடு பொருள்மொழி என்றவழு காமமும் அச்சமும் மீதூர்ந்தவழிக் கூற்று நிகழ்த்துமிடத்து வழுவமைதி யாகக் கொள்ளப்படும். மொழிந்த செய்தியையே மீண்டும் குறிப்பிடும் கூறியதுகூறல் என்ற வழு விரைவு பற்றியும் சிறப்புப் பற்றியும் கூற்று நிகழ்த்தும் இடத்து வழுவமைதியாகக் கொள்ளப்படும். ஒரே சொற்றொடர் இருவேறு மாறுபட்ட கருத்துக்களைப் பயக்கும் வகையில் அமைந்திருக்கும் கவர்படு பொருள்மொழி என்றவழு இருவேறு கருத்துக்களானும் செய்யுளில் பொருள்வழு ஏற்படாத இடத்து வழுவமைதியாகக் கொள்ளப்படும். முடிக்கும் சொற்களையும் முடிக்கப்படும் சொற்களையும் வரிசைப்பட அமைக்காத நிரல்நிறை வழு, அறிவான், தவறின்றி நிரலே நிறுத்துப் பொருள் செய்துகொள்ளும் வகையில் அமைந்திருப்பின் வழுவமைதியாகக் கொள்ளப்படும். சொல் லிலக்கணத்தொடு மாறுபட்டு அமையும் சொல்வழு சான்றோர் வழக்கில் பயின்று வருமாயின் வழுவமைதியாகும். ஓசைகொண்டு தளை அறுக்குமிடத்து இடர்ப்பாடு தரும் யதிவழு வகையுளியாகப் பிரித்துக்கூறும் இடத்து வழுப்படாதமையின் வழுவமைதியாகக் கொள்ளப்படும். யாப்பிலக்கணத்தொடு முரண்பட்டு அமையும் செய்யுள் வழு இருடிகளும் இருடிகள் போல்வாரும் செய்யும் அருளிச் செயல்களில் வழுவமைதியாகக் கொள்ளப்படும். எழுத்து இலக்கணத்தொடு பொருந்தாது அமையும் சந்திவழு இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்புவிதி உண்மையின் ஏற்புடைத்தாகும்.

இடம்-மலை-யாறு-நாடு இவற்றுள் ஒன்றற்கு உரிய பொருளைப் பிறிது ஒன்றற்குக் கூறுவது இடமலைவு ஆகும் ... பெரும்பொழுது சிறு பொழுது என்பனவற்றுள் ஒன்றற்கு உரிய செய்தியைப் பிறிது ஒன்றற்குக் கூறுவது கால மலைவாகும். குற்றமறச் சொல்லப்பட்ட அறுபத்துநான்கு கலைகள் பற்றிய செய்திகளில் திரிபு தோன்றக் கூறுவது கலை மலைவாகும். சான்றோர் ஒழுக்க

நெறியில் முரண்படக் கூறுவது உலக மலைவாகும். அளவை நூல்கள் உரைக்கும் செய்திகளில் மாறுபாடு தோன்றக் கூறுவது நியாய நூல் மலைவாகும். அற நூல்கள் கூறும் நெறி முறைகளில் மாறுபாடு தோன்றக் கூறுவது ஆகம மலைவாகும்.

இவ்வறுவகை மலைவுகளும் உலகியல் வழக்கை விடுத்து நாடக வழக்கைப் புணர்த்துப் பாடுமிடத்து வழுவமைதியாகக் கொள்ளப்படும்.

இவ்வாறு இவ்வணியியலுள், முத்தகம் முதலிய செய்யுள் களின் கூறுபாடும், செறிவு முதலிய பத்துக் குண அணிகளும், தன்மை முதலிய முப்பத்தைந்து பொருளணிகளும், அடியையும் சொல்லையும் எழுத்தையும் உட்கொண்டு வரையறுக்கப்பட்ட பலவகை மடக்கு அணிகளும், கோமூத்திரி முதலாகிய இருபது சித்திர கவிகளும், பிரிபொருள் சொற்றொடர் முதலிய ஒன்பது வழுக்களும், அவற்றின் வழுவமைதிகளும், இடமலைவு முதலிய ஆறு மலைவுகளும், அவை ஏற்புடையவாகக் கொள்ளப்படும் இடங்களும் கூறப்பட்டுள்ளன. கூறப்பட்டனவற்றை உணர்ந்த அறிவான் கூறப்படாதனவற்றையும் உய்த்து உணர்ந்து கோடல் சான்றோர் கடனாகும்.

இவ்வணியியலின் எடுத்துக்காட்டுப் பாடல்களும் நூற்பாக்களும் பெரும்பான்மையும் தண்டியலங்கார எடுத்துக் காட்டுப் பாடல்களும் நூற்பாக்களுமேயாம்.

★

அணியியல் நூற்பாச் செய்திகள்.

தொடர் நூற்பா எண்		இயல் நூற்பா எண்
620	அணியாவது குணம் அலங்காரம் என இருதிறப் பட்டுப் பொருளைப் புலப்படுத்தப் பயன்படும் என்பது.	1
621	பொருட்கு இடம் செய்யுளாதலின், அச் செய்யுளை விளக்கி நிற்பதும் அவ்வணியினது இயல்பு என்பது.	2
622	செய்யுள் முத்தகம் முதலாக நான்கு வகைப்படும் என்பது.	3
623	முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும் என்பது.	4
624	குளகச்செய்யுள் பலபாட்டுக்களுக்கு ஒரே முடிக்குஞ் சொல்லைக் கொண்டுமுடியும் என்பது.	5
625	தொகைநிலைச் செய்யுள் புலவன் ஒருவனாலோ புலவர் பலராலோ இயற்றப்பட்டுப் பொருள் இடம் காலம் தொழில் பாட்டு அளவு இவற்றின் அடிப்படையில் தொகுக்கப்படும் என்பது.	6
626	தொடர்நிலைச் செய்யுள் பொருள் தொடர்நிலை, சொல் தொடர்நிலை என இரு வகைப்படும் என்பது.	7
627	பொருள் தொடர்நிலை – பெருங்காப்பியம், காப்பியம் என இரு வகைப்படும் என்பது.	8
628	பெருங்காப்பியத்து இலக்கணம் இஃது என்பது.	9
629	கூறிய உறுப்புக்களுள் சில குறைந்தும் பெருங் காப்பியம் அமையலாம் என்பது.	10
630	அறம் முதலிய நான்கனுள் குறைபாடுடையது காப்பியம் என்றும் சிறுகாப்பியம் என்றும் கூறப்படும் என்பது.	11

தொடர் நூற்பா எண்		இயல் நூற்பா எண்
631	இருவகைக் காப்பியங்களும் ஒருவகைப் பாட்டானும் பலவகைப் பாட்டானும் பாடப்படும் என்பதும், இடையிடையே உரைநடையும் விரவிவரும், வேற்று மொழிகளும் விரவிவரும் என்பதும்.	12
632	ஒரு செய்யுளின் இறுதி அடுத்த செய்யுளுக்கு முதலாகத் தொடுக்கப்படுவது சொற்றொடர்நிலை என்பது.	13
633	வைதருப்பம் எனவும் கௌடம் எனவும் குணவணி இரு பெரும் பகுதிகளை உடையது என்பது.	14
634	நெகிழிசையில்லாச் செறிவு முதலாக வைதருப்பம் பத்துக் கூற்றினை உடையது என்பது.	15
635	கௌடம் செறிவு முதலிய பத்துக் குண அலங்காரங்களோடும் கூடாது சிலவற்றோடு கூடி இயலும் என்பது.	16
636	அலங்காரம் பொருளணி, சொல்லணி என்ற இரு பெரும் பாகுபாடுகளை உடையது என்பது.	17
637	தன்மை முதலாகப் பாவிகம் ஈறாகப் பொருளணி முப்பத்தைந்து வகைப்படும் என்பது.	18
638	தன்மை அணியின் இலக்கணமும் வகைகளும் இவை என்பது,	19
639	உவமை அணியின் பொது இலக்கணம் இஃது என்பது.	20
640	உவமைவிரி – விரிஉவமை முதலாக ஏதுஉவமை ஈறாக முப்பத்திரண்டாகும் என்பது.	21
641	மிகுதலும் குறைதலும் முதலாக உவமை பற்றிய வழுவமைதியின் பகுதிகள் இவை என்பது.	22
642	உவம உருபுகள் இவை என்பது.	23
643	உருவகத்தின் பொது இலக்கணம் இஃது என்பது.	24
644	உருவக விரி – தொகை உருவகம் முதலாக இருபத்தொரு கூறுபாடுடையது என்பது.	25
645	உருவகம் உவமை இவைகளுக்குப் புறனடைச் செய்தி இஃது என்பது.	26

தொடர் நூற்பா எண்		இயல் நூற்பா எண்
662	இலேச அணியின் இலக்கணமாகப் பிறர் மதம் இஃது என்பது.	43
663	நிரல்நிறை அணியின் இலக்கணம் இஃது என்பது.	44
664	ஆர்வமொழி அணியின் இலக்கணம் இஃது என்பது.	45
665	சுவை அணியின் இலக்கணமும் எண்வகைச் சுவைகளும் இவை என்பது.	46
666	தன் மேம்பாட்டுரை அணியின் இலக்கணம் இஃது என்பது.	47
667	பரியாய அணியின் இலக்கணம் இஃது என்பது.	48
668	சமாயித அணியின் இலக்கணம் இஃது என்பது.	49
669	உதாத்த அணியின் இலக்கணம் இஃது என்பது.	50
670	அவநுதி அணியின் இலக்கணம் இஃது என்பது.	51
671	சிலேடை அணியின் இலக்கணம் இஃது என்பதும், அது செம்மொழி பிரிமொழி என இருவகைப்படும் என்பதும்.	52
672	சிலேடை அணி ஒருவினைச் சிலேடை முதலாக எழுவகைப் பகுப்புடையது என்பது.	53
673	விசேட அணியின் இலக்கணம் இஃது என்பது.	54
674	ஒப்புமைக் கூட்ட அணியின் இலக்கணமும் வகையும் இவை என்பது.	55
675	விரோத அணியின் இலக்கணம் இஃது என்பது.	56
676	மாறுபடு புகழ்நிலை அணியின் இலக்கணம் இஃது என்பது	57
677	புகழாப் புகழ்ச்சியின் இலக்கணம் இஃது என்பது.	58
678	நிதரிசன அணியின் இலக்கணம் இஃது என்பது.	59
679	புணர்நிலை அணியின் இலக்கணம் இஃது என்பது.	60
680	பரிவருத்தனை அணியின் இலக்கணம் இஃது என்பது.	61
681	வாழ்த்தணியின் இலக்கணம் இஃது என்பது.	62

★

இலக்கண விளக்கம்

மூன்றாவது அணியியல்

★

அணி - இலக்கணம்.

620. அணிஎனப் படுவது துணிபுஉறக் கிளப்பின்
குணம் அலங்காரம் எனஇரு திறத்தால்
பொருள்புலப் படுப்பது என்மனார் புலவர்

என்பது சூத்திரம். இவ்வோத்து நிறுத்த முறையானே அகனும் புறனும் ஆகிய இருவகைப் பொருளும் உணர்த்தி அவற்றை விளக்கும் அணிஇலக்கணம் உணர்த்திற்று ஆகலான் அணியியல் என்னும் பெயர்த்து. மேல் ஓத்திேைடு இதற்கு இயைபு உடைமையுங் இதனேனே விளங்கும். இதனுள் இத் தலைச் சூத்திரம் அணிஆவது இவ்வாற்றான் இவ்வியல்பிற்றும் என அதன் இலக்கணம் கூறுகின்றது.

இ-ள்: அணி என்று சிறப்பித்துச் சொல்லப் படுவது தெளிவாகக் கூறும் இடத்துக் குணமும் அலங்காரமும் ஆகிய இருவகையால் பொருளை விளக்கி நிற்பது என்று கூறுவர் அறிவுடையோர் என்றவாறு.

பொருள் முற்கூறிய அகப்பொருளும் புறப்பொருளும் என்று உணர்க. (1)

விளக்கம்

'வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்' – தொ. பொ. 276

என்ற நூற்பா உரையில் உவமத்தோற்றம் என்பதற்கு உவமத்தால் பொருள் தோன்றும் தோற்றம் என விளக்கம் தந்த பேராசிரியர் பொருள் புலப்படுப்பது உவம இலக்கணம் என்று கொண்டதனை உட்கொண்டு, இவ்வாசிரியர், அணியின் இலக்கணம் பொருளைப் புலப்படுப்பது ஆதலின், அணியியல் அகப்பொருள் புறப் பொருள்களை அடுத்து அமைக்கப்பட்ட முறையைக் குறிப் பிட்டுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள்

**'பொருளினும் சொல்லினும் புனையுறு செய்யுட்கு
அணியுறப் புணர்த்தலின் அணியெனும் பெயர்த்தே'**
– மா. 86

**'அணியெனச் சொல்பொரு ளாம்இரண்டு அவற்றுள்
வேற்றுரை வரக்கெடும் அணிசொல் லணிஉரை
மாற்றினும் தோன்றிய அணிபொருள் அணியே'**
– தொ. வி. 302

மேலதற்குப் புறனடை

621. பொருட்குஇடம் செய்யுள் ஆதலின் அதனைத்
தெரிப்பதும் அதனது திறன்எனல் வரையார்.

இது மேலதற்கு ஒரு புறனடை கூறுகின்றது.

இ–ள் : மேற்கூறிய பொருட்பகுதி இரண்டற்கும் இடம் செய்யுள் ஆதலின், அதனை விளக்கி நிற்பதும் அவ்வணியினது இயல்பு என்று சொல்லுதலை நீக்கார் கொள்வர் என்றவாறு. (2)

விளக்கம்

அகம் புறம் என்ற இரண்டும் வகைபட வந்த அணிநலம் தழீஇச் செய்யுள் இடவயின் புல்லிய நெறியின ஆதலின், செய்யுளை விளக்கி நிற்பதும் அணி என்பதனை உட்கொண்டு, எழுத்துப்படலத்தினுள் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் என்று கூறியதற்கு ஏற்பப் பொருளைப் புலப்படுப்பதும் செய்யுளை விளக்குவதும் ஆகிய அணி பற்றிய இயலைப் பொருட்பகுதிக்கும் செய்யுட்பகுதிக்கும் இடையே வைத்து அது பொருளுக்கும், பொருட்கு இடனாகும் செய்யுட்கும் உபகாரப்படுமாற்றைச் சிங்க நோக்காகக் கொள்ளவைத்துள்ளார். பொருட்கு இடம் செய்யுள் ஆதலின், அச்செய்யுள் பற்றி அமைந்த செய்யுளியலும் பொருட் படல இயல்களுள் ஒன்றாயிற்று என்பதும் அறிக. 2

செய்யுள் - நால்வகை

622. செய்யுள் என்பவை தெரிவுஉறக் கிளப்பின்
முத்தகம் குளகம் தொகைதொடர் நிலைஎன
எத்திறத் தனவும் ஈரிரண்டு ஆகும்.

செய்யுள் உணர்ந்தே அணி உணரவேண்டுதலின், இஃது ஈண்டு ஒருவாற்றான் அவற்றிற்குப் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

இ-ள்: செய்யுள் என்று முன் கூறப்பட்டவற்றை விளங்கக் கூறும் இடத்து, முத்தகச் செய்யுளும் குளகச் செய்யுளும் தொகைநிலைச் செய்யுளும் தொடர்நிலைச் செய்யுளும் என மேல் செய்யுளியலுள் கூறும் பல்வேறு வகைப்பட்ட செய்யுட்களும் நான்காம் என்றவாறு. (3)

விளக்கம்

செய்யுட்களை முத்தகம், குளகம் என்ற இருவகையாகப் பிரிக்கலாம். தொகைநிலைச் செய்யுட்கள் முத்தகச் செய்யுட்களாகவே அமையும். தொடர்நிலைச் செய்யுட்கள் முத்தகம், குளகம் என்ற இருவகைச் செய்யுளானும் அமையும் என்பதும் அறிக.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 2

'யாப்பை இயம்பிடில் முத்தகத் தோடு குளகம்தொகை
காப்பியமாம்' – *வீ.* 178

'ஆற்றல் அணிக்கண் அவைமுத் தகம்குளகம்
தோற்றும் தொகையே தொடர்நிலையென் – றேற்புடைய'
– *மா.* 67

'தொகைநிலை குளகம்முத் தகம்தொடர் நிலையென
செய்யுள்நால் வகைப்படும் செப்புங் காலே'
– *மு. வீ. செய்யுளணி* 1

முத்தகச் செய்யுள்

623. அவற்றுள்,

முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்.

இது, முத்தகச் செய்யுளது இயல்பு கூறுகின்றது.

இ–ள்: மேல் கூறிய நால்வகைச் செய்யுளுள் முத்தகச் செய்யுள் என்பது தனியே நின்று பொருள் பயந்து முற்றுப்பெறும் என்றவாறு.

வரலாறு :

'என்னே! சிலமடவார் எய்தற்கு எளியவோ ?
பொன்னே! அநபாயன் பொன்நெடுந்தோள் ; — முன்னே
தனவேஎன்று ஆளும் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு '

என வரும். (4)

விளக்கம்

ஒரே பாடலில் பொருள் முற்றுப்பெறுவது முத்தகச் செய்யுள்.

பொன்னே! அநபாயன் தோள் சயமடந்தையின் தோள்களாகிய மூங்கில்கள் உரிமைகொண்டு மிடையும் மலைகளாம். அவை அச்சயமடந்தை அன்றி வேற்று மகளிர் தழுவுதற்கு எளிய அல்ல — என்று அநபாயன் தோள் வேட்ட தலைவி நெஞ்சழிந்து தோழியிடம் சொற்றது. பொன்னே! பொருப்பு மடவார் எய்துதற்கு எளியவோ — எனப் பொருள் முற்றுப் பெற்றுள்ளமையின் இப்பாடல் முத்தகச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் — தண்டி 3, மு. வீ. செய்யுளணி 5

'முத்தகம் தன்பொருள் ஓர்கவியின் முற்றும்' — வீ. 178

'என்றும் அவற்றுள் எழுவாய் தனிநின்று
சென்று பொருள்முற்றும் திடன்' — மா. 67

குளகச் செய்யுள்

624. குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்.

இது குளகச் செய்யுளது இயல்பு கூறுகின்றது.

இ-ள்: குளகச் செய்யுள் என்பது பலபாட்டாய் ஒருவினை கொண்டு முடிவது என்றவாறு.

வினை என்றது ஈண்டு முடிக்கும் சொல்லை, 'வினைப் படு தொகுதி' (இ. வி. 315) என்றாற்போல. (5)

விளக்கம்

குளகம் என்பது ஒரே முடிக்குஞ்சொற் கொண்டு முடியும் பல பாடல்களின் தொகுதியாம். 'பெயராக வினையாக முடிக்குஞ் சொல்லொடு படுதலையே வினையென்றார்' (இ. வி. 315 உரை)

குளகத்திற்குத் தண்டியலங்காரம்,

**'முன்புலகம் ஏழினையும் தாயதுவும் மூதுணர்வோர்
இன்புறக்கங் காநதியை ஈன்றதுவும் - நன்பரதன்
கண்டிருப்ப வைகியதும் கான்போ யதுமமிர்தம்
உண்டிருப்பார் உட்கொண் டதும்'**

**'வெந்த கரியதனை மீட்டுமக வாக்கியதும்
அந்தச் சிலையினைப்பெண் ஆக்கியதும் – செந்தமிழ்தேர்
நாவலன்பின் போந்ததுவும் நன்னீர்த் திருவரங்கக்
காவலன் மாவலவன் கால்'**

என்ற இரு பாடல்களை எடுத்துக்காட்டாகத் தந்துள்ளது.

உலகளந்ததும், கங்கையைத் தந்ததும், பரதற்கு அருளியதும், தேவர் உட்கொண்டதும், உத்தரை பெற்ற கரிப்பிண்டத்தைப் பரீட்சித்து என்ற குழந்தையாக்கியதும், கல்லினை அகலிகை ஆக்கியதும், திருமழிசைப்பிரான் பின் தொடர்ந்து போயினதும் அரங்கப்பெருமான் திருவடியே எனப் பாடல்கள் இரண்டும் ஒரே முடிக்குஞ்சொற் கொண்டமைந்தமையின் இவை குளகம்.

இக்குளகம் இரண்டு பாடல்களாக அமையும் உகளகம், மூன்று பாடல்களாக அமையும் சாந்தானிகம், நான்கு பாடல்களாக அமையும் காபாலிகம், ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்டனவும் ஆகிய பாடல்களாக அமையும் அந்தியம் என நான்கு வகையினது என்று மாறன் அலங்காரம் கூறுகிறது.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 4.

'குளகம் பலபாட்டு ஒருவினை' – *வீ.* 178

'குளகம் பலபாட் டொருவினை பேர்கொண்டு
வளர்முலையாய் மூன்றிடத்தும் மன்னும் - அளவை
உகளகஞ்சாந் தானிகங்கா பாலிகத்தோ டைந்தின்
மிகல்வகைத்தா நூல்சொல் விதி' – *மா.* 68

'குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்'
– *மு. வீ. செய்யுளணி* 4

5

தொகைநிலைச் செய்யுள்

625. தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்
ஒருவன் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருள்இடம் காலம் தொழில்என நான்கினும்
பாட்டினும் அளவினும் கூட்டியது ஆகும்.

இது தொகைநிலைச் செய்யுளது இயல்பு கூறுகின்றது.

இ–ள் : தொகைநிலைச் செய்யுள் என்பதனை விளங்கக்கூறின், ஒருவனால் உரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவற்றையும், பலரால் உரைக்கப்பட்டுப்

பலபாட்டாய் வருவனவற்றையும், பொருள் முதலிய நான்கினுனும் பாட்டினுனும் அளவினுனும் தொகுத்துக் கூறுவதாம் என்றவாறு.

ஒருவனுல் உரைத்தன – திருவள்ளுவப்பயன் முதலியன.

பலரான் உரைத்தன – நெடுந்தொகை முதலியன.

இஃது இவ்வறுவகைத் தொகைக்கும் பொது இலக்கணம்.

பொருளால் தொகுத்தன – புறநானூறு முதலியன.

இடத்தால் தொகுத்தன – களவழி நாற்பது முதலியன.

காலத்தினுல் தொகுத்தன – கார்நாற்பது முதலியன.

தொழிலால் தொகுத்தன – ஐந்திணை முதலியன.

பாட்டால் தொகுத்தன – கலித்தொகை முதலியன.

அளவால் தொகுத்தன – குறுந்தொகை முதலியன.

'ஆகும்' என்றதனுனே, பிறவாற்ருன் பெயர்பெற்று வருவனவும் கொள்க. (6)

விளக்கம்

தொகைநிலைச் செய்யுளாவது ஒரு செய்யுளுக்கும் அடுத்த செய்யுளுக்கும் எவ்விதத் தொடர்பும் இன்றி இருக்கும் பல செய்யுட்களின் தொகுப்பு. அத்தொகுப்பு முழுதும் ஒருவர் பாடிய பாடல்களாகவும் இருக்கலாம்; பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாகவும் இருக்கலாம். அத்தொகுப்புப் பொருள் முதலிய அடிப்படையில் தொகுக்கப்படலாம். பிறவாற்ருன் பெயர் பெற்றன – உறுப்பால் பெயர்பெற்ற நயனப்பத்து, பயோதரப் பத்து என்பன போல்வன.

திருவள்ளுவப்பயன் – திருக்குறள்.

நெடுந்தொகை – 13 முதல் 32 அடிகாறும் அமைந்த பாடல்களின் தொகுப்பாகிய அகநானூறு.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்ற தொழில்களாகிய உரிப்பொருள் பற்றிய பாடல்களின் தொகுப்பு ஐந்திணை ஐம்பது முதலியன.

கலிப்பாடல்களின் தொகுப்புக் கலித்தொகை ஆகும்.

குறுந்தொகை – நான்கடிமுதல் எட்டடிகாறும் அமைந்த குறைந்த அடிகளை உடைய பாடல்களின் தொகுப்பாகும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 5

'மன்னுதொகை கோப்பிற் பொருளன' – *வீ.* 178

'உவவாத கேள்வி ஒருவர் பலரால்
பலவாய்ப் பகர்பா இனமாய் – இலகுபொருள்
எண்பாட் டளவுதொழில் இடங்காலஞ் சினையின்
பண்பாங் தொகைநிலைச்சொற் பா' – *மா.* 69

'தொகைநிலை பலரால் சொல்லப் பட்டுப்
பலபாட் டாக வருநவும் ஒருவரால்
பகரப் பட்டுப் பலபாட் டாக
வருநவும் ஆம்என வழுத்தினர் புலவர்'
– *மு. வீ. செய்யுளணி* 2

'கருதரு பொருளிடம் காலம் தொழிலெனும்
நான்கினும் பாட்டினும் அளவினும் நடக்கும்' ,, 3

6

தொடர்நிலைச் செய்யுள்

626. பொருளினும் சொல்லினும் இருவகை தொடர்நிலை.

இது தொடர்நிலைச் செய்யுள் ஆமாறு கூறுகின்றது.

இ–ள் : பொருளினால் தொடர்தலும் சொல்லினால் தொடர்தலும் என இருவகைப்படும் தொடர்நிலைச் செய்யுள் என்றவாறு.

எனவே, பொருள் தொடர்நிலைச் செய்யுளும் சொல் தொடர்நிலைச் செய்யுளும் எனத் தொடர்நிலைச் செய்யுள் இரண்டு வகைப்படும் என்பது ஆயிற்று. இரண்டு என்னாது 'வகை' என்ற மிகையானே, மூன்றாவது பொருளினானும் சொல்லினானும் தொடர்தலும் உண்டு எனக் கொள்க. 7

விளக்கம்

பொருளினால் தொடர்வன – ஒரு செய்தியைப் பற்றித் தொடர்ந்து பாடப்படும் பாடல்களின் தொகுப்பாகிய சீவக சிந்தாமணி, இராமாவதாரம் போல்வன. இவையே கற்பார்க்குப் பெருவிருந்தாகும்.

சொல்லால் தொடர்வன – பொருள் தொடர்பு எதுவும் இன்றி முதற்பாடலின் ஈற்றுச்சீரோ சொல்லோ எழுத்தோ அடுத்த பாடலின் முதற்சீராகவோ சொல்லாகவோ எழுத்தாகவோ முறையே அமையுமாறு அந்தாதித் தொடையால் பாடப்படும் கலம்பகம் போல்வன.

பொருளினாலும் சொல்லினாலும் தொடர்வன – தம் ஆன்மீக அனுபவத்தைச் சடகோபர் அந்தாதித் தொடையில் தொடர்ச்சியாக அருளிச் செய்த திருவாய்மொழி போல்வன.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 6

'காப்பிய மாம் நூல்' – வீ. 178

சொல்லால் பொருளால் தொடரும் தொடர்நிலைகள்
எல்லாம் அவற்றுள் எழுத்தசைசீர் — மல்கும்
அடிசொற் றொடர்நிலைகள் அந்தம் முதலாம்
படிவைத் தனர்முன் பகுத்து. – மா. 70

'சொற்பொருள் இருவகை தொடர்நிலை எனலே'
– மு. வீ. செய்யுளணி 6

7

பொருட்டொடர் நிலை

627. அவற்றுள்,
பெருங்காப் பியமே காப்பியம் என்றுஆங்கு
இரண்டா இயலும் பொருள்தொடர் நிலையே.

இது பொருள்தொடர்நிலை இத்துணைத்து என்கின்றது.

இ–ள் : மேற்கூறிய இரண்டனுள் பொருள் தொடர்நிலைச் செய்யுள் பெருங்காப்பியமும் காப்பியமும் என இரண்டு வகைப்படும் என்றவாறு.

கவியால் பாடப்படுவன எல்லாம் காப்பியம் ஆமேனும், தொடர்நிலைச் செய்யுளையே காப்பியம் என்றது, சேற்றுள் தோன்றுவன எல்லாம் பங்கயம் ஆமேனும், தாமரையினையே பங்கயம் என்ருற்போல என்று உணர்க.

'இயலும்' என்ற மிகையானே, முற்கூறிய முத்தகம் முதலிய மூன்றும் இதற்கு உறுப்பாய் வரும் எனக் கொள்க. (8)

விளக்கம்

காப்பியம் என்பதனைக் காரணப் பெயராக்காமல் காரண இடுகுறியாகக் கொள்க என்பது. பங்கயம் – பங்கஜம்; பங்கம் – சேறு; ஜம் – தோன்றுவது; காரணம் பற்றி நோக்கச் சேற்றுள் தோன்றும் எல்லாவற்றையும், அச்சொல் குறித்தல் வேண்டும்; ஆறைல் இடுகுறியாய் அச்சொல் தாமரையையே குறித்தல் காண்க. இதுபற்றியன்றே பெயர்களை இடுகுறி, காரணம், காரண இடுகுறி என்ற மூன்று பகுப்பினவாகச் சான்றோர் கொண்டவாறும் அறிக.

காப்பியங்களுள் முத்தகச் செய்யுள் மிகுதியாகவும், குளகச் செய்யுள் அதனினும் குறைந்தும், கூற்றுப்பகுதி, வருணனைப்பகுதி இவைபற்றி அமையும் தொகைநிலைச் செய்யுள் இவ்விரண்டினும் குறைந்தும் வரும் என்பது கொள்க.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி. 7

‘பெருங்காப் பியங்காப் பியமெனும் பெற்றித்தால்
சுருங்காப் பொருட்டொடரும் சொல்லின்—பொருந்தவற்றுள்
ஒன்றும் பலவும் பொருளில் குறைவுறுமேல்
என்றும் அதுகாப் பியம்’ – *மா.* 71

‘காப்பியம் பெருங்காப் பியமென இருவகைப்
படும்பொருட் டொடர்நிலை பகருங் காலே’

– *மு. வீ. செய்யுளணி* 8

8

பெருங்காப்பியம் - இலக்கணம்

628. பெருங்காப் பியநிலை பேசுங் காலை,
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின்ஒன்று
ஏற்புஉடைத் தாக முன்வர இயன்று

நாற்பொருள் பயக்கும் நடைநெறித்து ஆகித்
தன்நிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்,
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம்என்று இனையன புனைந்து,
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியில் புலத்தல் கலவியில் களித்தல்என்று
இன்னன புனைந்த நன்னடைத்து ஆகி,
மந்திரம் தூது செலவுஇகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து, சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி,
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றியது என்ப.

இது பெருங்காப்பியம் ஆமாறு கூறுகின்றது.

இ–ள் : பெருங்காப்பியத்து இயல்பு கூறும் இடத்து, வாழ்த்து முதலிய மூன்றனுள் பொருந்துவதாக ஒன்று முன்வர நடந்து, அறம் முதலிய நான்கனையும் பயக்கும் ஒழுகலாறு உடைத்தாய், தனக்கு நிகர் இல்லாத நாயகனை உடைத்தாய், மலை முதலிய இன்னோரன்ன வருணனைகளை உடைத்தாய், நன்மணம் புணர்தல் முதலிய இன்னோரன்ன செய்கைச் சிறப்பு புகழ்ந்து தொடுக்கப்பட்ட நல்லொழுக்கம் உடைத்தாய், மந்திரம் முதலியன சந்திபோலத் தொடர்புபட்டு, சருக்கம் முதலிய கூற்றின் ஒரு திறத்தால் பகுக்கப்பட்டு, இடைவிடாத எண்வகைச் சுவையும் மெய்ப்பாடும் கேட்போர் மதிக்கப் புலவரால் புனையப்படும் தன்மையினை உடைத்து என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

'பேசுங்காலை' என்றதனால், வாழ்த்து முதலிய மூன்றனுள் ஒன்றே அன்றி இரண்டும் மூன்றும் ஒருங்கு வரினும் இழுக்கு இன்று என்பது. 'இனையன புனைந்து' என்றதனால், வனமும் நதியும் இருசுடர்த் தோற்றமே அன்றி, அவற்றின் அத்தமனம் முதலியன புனைதலும் கொள்க.

சந்தி என்பது நாடகத்தின் கண்ணது ஓர் உறுப்பு. அஃதாவது வித்தல் விளைத்தல் விளைவு துய்த்தல் என்பதாம். (9)

விளக்கம்

சந்தியின் தொடர்ந்து என்று தண்டியாசிரியர் காப்பிய இலக்கணம் கூறினாராதலின், சந்தி என்னும் இலக்கணம் காப்பியத்துக்கும் உரியது. அந்நிய ரூபமாக முடிந்த கதைகளுக்கும் உரியது. அவை முகம், பிரதிமுகம், கருப்பம் விளைவு துய்த்தல் என இவை.

முகமாவது எழுவகைப்பட்ட உழவினால் சமைக்கப்பட்ட பூமியுள் இட்ட வித்துப்பருவம் செய்து முளைத்து முடிவது போல்வது.

பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல்முதலாய் இலைதோன்றி நாற்றாய் முடிவது போல்வது.

கருப்பமாவது அந்நாற்று முதலாய்க் கருவிலிருந்து பெருகித் தன்னுள் பொதிந்து கருப்பம்முற்றி நிற்பது போல்வது. விளைவாவது கருப்பம்முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைவது போல்வது. துய்த்தலாவது விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது. முளையினைக் கண்டோர் விளைவு இது என ஊகித்து அறிந்து கொள்ளத்தக்கதாக முதற்சந்தியாகிய முகம் அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

[வீரசோழியம் 106-ஆம் காரிகை உரையுள் சந்தியின் உறுப்புக்கள் ஐந்தும் முகம், பயிர்முகம், கருப்பம், விமரிசம், நிருவாணம் என்ற பெயர்களோடு ஏறத்தாழ இவ்வாறே விளக்கப்பட்டுள்ளன

இந்நூலார் குறிப்பிடும் விளைத்தலில் பயிர்முகம் கருப்பம் விமரிசம் என்ற மூன்றும் அடங்கும் என்க.]

சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் சந்தியுறுப்பு ஐந்தனையும் இவ்வாறு விளக்கியுள்ளார். இதனையே விபுலாநந்தரும் மதங்க சூளாமணியின் தொடக்கத்தில் கூறியுள்ளார்.

'இடைப் பொருளுடனே எடுத்த கதையின்
தலைப்பொருள் சார்ந்து தழைத்து முதிர்வது
நாட்டியக் கட்டுரைச் சந்தியாம் அதுதான்
முகமே பிரதி முகமே கருப்பம்
விளைவு துய்த்தலோடு ஐவகை யாகும்'. – நாடகவியல் 32

'எடுத்துரை கதைதான் இனிமையில் தொடங்கி
உழவினுல் சமைந்த பூழியுள் இடுவிதை
முளைத்துத் தோன்றுதல் போல்வது முகமே'. 33

'முளைத்தல் முதலா இலையும் பெற்று
நாற்றென நிற்பது பிரதி முகமே'. 34

'நாற்று முதலாக் கருவு முதிர்ந்துழிக்
களைபல செறியக் கட்டவை ஒழிதலும்
பொருள்நனி பொதிந்து நிற்பது போல்வது
கருப்பம் என்னக் கழறினர் பெரியோர்'. 35

'முற்றி நின்ற கதிர்திரண் டிடுதலும்
இலங்கும் கதிர்கறி விலங்கு கடிந்தபின்
காய்த்துத் தாழ்வது போல்வது விளைவு'. 36

'காய்த்த கதிரினை அறுத்த நற்பொலி
செய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது
போல்வது துய்த்தல் புகலுங் காலே'. 37

என்ற நாடகவியல் நூற்பாக்களையும் அவற்றின் உரைகளையும் நோக்குக.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 8

'வைத்த பெருங்காப் பியநிலையும் வாழ்த்தியல்பார்
மெய்த்த அவையடக்கம் வீறுசால் – முத்திதரும்
தெய்வ வணக்கமுடன் செய்பொருளும் முன்வரவாங்(கு)
எய்த உரைப்பதுதான் ஏய்ந்து'. – *மா.* 72

'தப்பிலா நாற்பொருளும் சாற்றுவதாய்த் தாரணிமேல்
ஒப்பிலா தான்சரிதை உட்கொண்ட – செப்பமுற
நன்மணம்இல் வாழ்க்கை நலம்புதல்வர்ப் பேறுபசும்
பொன்மகுடம் வைத்தின் புறல்'. – *மா.* 73

'அலையாழி மேன்மை அருட்புயலின் செய்கை
மலையாறு நாடூரின் வண்மை - தொலையா
இருசுடரின் தோற்றம் இருதுவளம் பானம்
பொருபுனல்புக் காடல் பொழில்'. – *மா.* 74

'மந்திரந்தூ தொற்றுடல் வாய்ந்த நிரைகோடல்
புந்தியுறச் சேறல் புறத்திறுத்தல் – வெந்திறல்கூர்
மிக்க இகல்வென்றி நிலையாமை யைமிகுத்தல்
கைக்கிளைகள் கூறும் கடன்'. – *மா.* 75

'படலம் இலம்பகம் பரிச்சேதம் காண்டம்
தொடர்தொடர்பிற் பாடையுரை தோய்ந்துங் – திடமுறச்சொல்
மூன்றுட் கொளலாம் முறையில் சுவைவிறல்கூர்ந்(து)
ஆன்றவர்மெய்ப் பான்புகல்வ தாம்'. - *மா.* 76

'அறம்பொருள் இன்பம்வீடு ஆகிய நான்கும்
புலம்படல் பெருங்காப் பியப்பொருள் ஆகும்'.

– *மு. வீ. செய்யுளணி 9*

மேலதற்குப் புறனடை

629. கூறிய உறுப்பில் சிலகுறைந்து இயலினும்
வேறுபாடு இன்றுஎன விளம்பினர் புலவர்.

இது மேலதற்கு ஒரு புறனடை கூறுகின்றது.

இ–ள் : மேல் கூறிய உறுப்பில் சில குறைந்து வரினும் பெருங்காப்பியத்தின் வேறுபாடு இல்லை என்று கூறுவர் அறிந்தோர் என்றவாறு.

குறைதலாவது நாற்பொருளில் குறையாது வருணனைகளில் சில குறைதலாம்; என்னை ? நால்வகைப் பொருளில் குறைபாடு உடையது காப்பியம் என்றலின்.

(10)

விளக்கம்

தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள் என்று அண்மைக் காலத்தில் வரையறுக்கப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்ற ஐந்தனுள் கடையிரண்டும் இக்காலத்து இல்லையாக, சிலப்பதிகாரம் சிந்தாமணி என்ற இரண்டு பெருங்காப்பியங்களிலும் பெருங்காப்பிய உறுப்புக்கள் சில நீங்கலான ஏனைய பலவும் அமைந்திருத்தல் காண்க. அறமும் வீடும் அன்றிப் பொருளும் இன்பமும் பற்றி உணர்த்தாத மணிமேகலை பெருங்காப்பியத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள விந்தையையும் நோக்குக. சிறுகாப்பியங்களுள் ஒன்றாகிய சூளாமணி அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற் பொருளும் ஏனைய பெருங்காப்பிய உறுப்பும் பெற்று இலங்கும் சிறப்பையும் நோக்குக. *10*

ஒத்த நூற்பா

முழுதும் – தண்டி. 9

காப்பியம் - இலக்கணம்

630. அறம்முதல் நான்கின் குறைபாடு உடையது
காப்பியம் என்று கருதப் படுமே.

இது காப்பியம் ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : அறம் முதலிய நான்கனுள் சில குறைந்து வருவது காப்பியம் என்று கருதப்படும் என்றவாறு.

விளக்கம்

பெருங்காப்பியம் என்ற அடை அதனின்றும் பிரிக்கப்பட்ட சிறுகாப்பியம் அடையின்றிக் காப்பியம் என்ற பெயரிலேயே குறிப்பிடப்படுதற்கு உதவுகிறது. அண்மைக்காலத்தில் சூளாமணி, உதயணகுமாரகாவியம், யசோதர காவியம், நாககுமார காவியம், நீலகேசி என்ற ஐந்தும் தமிழில் ஐஞ்சிறுகாப்பியங்கள் என்று தொகுக்கப்பட்டுள்ளன.

'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே' என்று கொண்ட நம் முன்னோர்கள், அந்நான்கும் குறைவறக் கூறப்பட வேண்டியன என்பதனை உட்கொண்டு அவற்றைக் கூறுவன வற்றிற்கே பெருமை ஆகிய அடை கொடுத்து, ஏனையவற்றிற்கு அவ்வடையினை நீக்கிச் சிறுமை புணர்த்தமை காண்க.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் - தண்டி 10, மு. வீ. செய்யுளணி 10

ஒன்றும் பலவும் பொருளிற் குறைவுறுமேல்
என்றும் அதுகாப் பியம். - மா. 71.

இருவகைக் காப்பியமும் இயலுமாறு

631. அவைதாம்,
ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே.

இது மேலனவற்றிற்கு ஓர் ஒழிபு கூறுகின்றது.

இ-ள் : மேல்கூறிய பெருங்காப்பியமும் காப்பியமும் ஒருவகைச் செய்யுளானும் பலவகைச் செய்யுளானும் உரையும் பாடையும் விரவியும் வரும் என்றவாறு.

உம்மையான், விரவாது வருதலே வலியுடைத்து எனக்கொள்க. (12)

விளக்கம்

ஒரு திறப்பாட்டு — நளவெண்பா முதலியன.

பலதிறப்பாட்டு — பலவகை விருத்தங்களான் ஆய இராமாவதாரம், சீவகசிந்தாமணி போல்வன.

பாட்டும் உரைநடையும் கலந்து அமைந்த தமிழ் நூல்கள் இக்காலத்து வழக்கில் இல்லை. தகடூர் யாத்திரை, பாரத வெண்பா என்பன உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைந்தன என்ப.

வேற்றுமொழி வாக்கியங்கள் இடைமிடையத் தமிழில் காப்பியங்கள் இயற்றப்பட்டனவா என்பது ஆராய்தற்கு உரியது. நாடகங்களில் பிறபாடைமாக்கள் கூற்று அமையுங்கால், அவரவர் பாடையில் புகன்றனவாக அமைந்திருத்தல் கூடும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 11

'தொடர் தொடர்பிற் பாடைஉரை தோய்ந்தும்' - மா. 76

12

சொற்றொடர் நிலை

632. செய்யுள் அந்தாதி சொல்தொடர் நிலையே

இது சொல்தொடர் நிலை ஆமாறு கூறுகின்றது.

இ–ள்: ஒரு செய்யுள் இறுதி மற்றொரு செய்யுட்கு முதலாகத் தொடுப்பது சொல் தொடர் நிலைச் செய்யுளாம் என்றவாறு.

அவை கலம்பகம் முதலியன. இவற்றிற்கு இலக்கியம் வந்தவழிக் கண்டு கொள்க. ஈண்டு உரைப்பின் பெருகும். (13)

விளக்கம்

முதற் செய்யுளின் அந்தம் அடுத்த செய்யுளுக்கு ஆதியாக அமைவது அந்தாதியாம். திருவாய்மொழியே தமிழில் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளனவற்றில் பெரியது. அந்தாதித் தொடை செய்யுளியலில் கூறப்பட்டுள்ளது. கலம்பகம் முதலாக அந்தாதித் தொடையில் பாடப்பட்டுள்ள சிறு காப்பியங்களின் இலக்கணங்கள் பாட்டியலில் கூறப்பட்டுள்ளன. அந்தாதித் தொடை அமையப் பாடுவது பழந்தமிழில் அருகியே உள்ளது. தமிழில் பழைய உரைநடை அந்தாதித் தொடையில் அமைந்துள்ள செய்தி இறையனார் களவியல் உரைப் பகுதிகளால் உணரப்படும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 12

'சொல்லால் பொருளால் தொடரும் தொடர்நிலைகள்
எல்லாம் அவற்றுள் எழுத்தசைசீர் — மல்கும்
அடிசொல் தொடர்நிலைகள் அந்தம் முதலாம்
படிவைத் தனர்முன் பகுத்து' – *மா.* 70

'ஒருபா இறுதிமற்று ஒருபா முதல்வரத்
தொடுப்பது சொற்றொடர் நிலையெனப் படுமே'

- மு. வீ. செய்யுளணி 7

13

குணவணி - வகை

633. வைதருப் பம்மே கௌடம் என்றுஆங்கு
எய்திய குணம்இரு இருவகைப் படுமே.

பொருள் புலப்படுப்பது அணி எனத் தம் மேற்கோள் கூறி, அப்பொருட்குச் செய்யுள் இடம் ஆதலின் அதனைப் புலப்படுப்பதூஉம் அவ்வணிக்கு இயல்பு எனக் கோடலின் அச்செய்யுளை ஒருவாற்றான் தொகுத்துக் கூறி, அணி இலக்கணம் கூறுவான் தொடங்கியவற்றுள், இது நிறுத்தமுறையானே குண அணி இத்துணைத்து என்கின்றது.

இ-ள் : வைதருப்பமும் கௌடமும் என மேற்கூறிய குண அணி இருவகைப்படும் என்றவாறு.

வைதருப்பம் கௌடம் என்பன ஆகுபெயர், அவை போலும் பாக்களை உணர்த்தலின். (14)

விளக்கம்

வடமொழியில் வைதருப்ப நெறி, கௌட நெறி என்ற இரு முறைகள் உண்டு. விதர்ப்ப நாட்டவர் பின்பற்றிய வைதருப்ப நெறி – வருணனை, கற்பனை, நடை, செய்தி எல்லாவற்றையும் ஓர் அளவாகவே கொண்டிருப்பதாம். கௌட நாட்டவர் பின்பற்றிய கௌடநெறி – வருணனை, கற்பனை, நடை எல்லாவற்றிலும் உயர்வு நவிற்சியும் கடுமையும் பெருமிதமும் கொண்டு விளங்குவதாம். இவ்விரண்டற்கும் இடைப்பட்ட பாஞ்சால நெறி என்பதும் மாறன் அலங்காரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது,

வைதருப்ப நெறிக்கு எடுத்துக்காட்டாக நளவெண்பாவையும், கௌட நெறிக்கு எடுத்துக்காட்டாக மூவருலாவையும், பாஞ்சால நெறிக்கு எடுத்துக்காட்டாக அரிச்சந்திர புராணத்தையும் கொள்ளலாம்.

ஒத்த நூற்பாக்கள்

'மெய்பெறு மரபின் விரித்தசெய் யுட்கு
வைதருப் பம்மே கௌடம்என் றுஅங்கு
எய்திய நெறிதாம் இருவகைப் படுமே'. – *தண்டி*. 18

'மன்னியபேர் யாப்பிற்கு வைதருப்பம் வான்கவுடம்
பன்னியபாஞ் சாலம் எனப்பகுத்து – மின்னிடையாய்
நன்னூல் முழுதுணர்ந்தோர் நாட்டகத்து நாட்டலுறீஇ
முன்னூலுள் கண்டநெறி மூன்று'. – *மா*. 77

'இழுமென் மொழியும் இனிய பொருளும்
தழுவு மதுவை தருப்பம் – விழுமியவாம்
சொற்கடினத் தோடும் பொருட்கடினந் தோய்ந்தரிதாய்க்
கற்பனசா ருங்கவுடம் காண்'. – *மா*. 78

'இடையிட் டனவாகும் இன்சொல் பொருளால்
தடையற் றொழுகுவ பாஞ்சாலம் – அடைவடைவே
அக்கவிகள் பாடுமவர்க் கங்கவை பெயராய்
மிக்குலகங் கூறும் விதித்து'. – *மா*. 79

14

வைதருப்பம் - பத்துவகை

634. நெகிழ்இசை இன்றிய செறிவி னானும்
பொருள்புலப் படுக்கும் தெளிவி னானும்
விரவத் தொடுக்கும் சமநிலை யானும்
சொல்லினும் பொருளினும் சுவைபடு நெறியான்
நல்லன தொடுக்கும் இன்பத் தானும்
வெறுத்திசை இல்லா ஒழுகுஇசை யானும்

குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றும்
சிறப்புஉடை மரபின் உதாரத் தானும்
கருதிய பொருளைத் தெரிவுஉற விரித்தற்கு
உரியசொல் உடைய உய்த்தலில் பொருண்மையும்
உலகுஒழுக்கு இறவா உயர்புகழ்க் காந்தமும்
தொகைமிக வருஉம் தகைமிகு வலியும்
உரியபொருள் அன்றி ஒப்புஉடைப் பொருள்மேல்
தருவினை புணர்க்கும் சமாதியும் எனமுறை
ஆய்ந்தவை தருப்பம் ஐஇரு வகைத்தே.

இது மேல் கூறிய வைதருப்பம் இவ்வியல்பான் இத்துணைத்து என்கின்றது.

இ–ள்: நெகிழ்இசை இல்லாச் செறிவு முதலாகச் சமாதி ஈறாக முறையே ஆராய்ந்த வைதருப்பம் பத்துக் கூற்றினை உடைத்தாம் என்றவாறு. (15)

விளக்கம்

செறிவு – ஒன்றனை ஒன்று இறுகத்தழுவுவது; பெரும்பாலும் செய்யுளில் வல்லினம் ஒற்று அடுத்தும் அடாதும் வருதலும் நெடில் வருதலும் செறிவுக்குக் காரணமாம் என்பர். மெல்லினம் செறிதல் வைதருப்பச்செறிவு என்றும் வல்லினம் செறிதல் கௌடச் செறிவு என்றும் இடையினம் செறிதல் பாஞ்சாலச் செறிவு என்றும் மாறன் அலங்காரம் கூறும். தெளிவு – பொருள் எளிதில் புலனாகுமாறு செய்யுளை அமைத்தல். சமனிலை – வன்மை மென்மை இடைமையாகிய மூவகை எழுத்துக்களும் சமமாக உறப்பாடுவது.

சொல்லின்பமாவது அடைசினை முதல் என முறை மூன்றும் மயங்காமை வரும் வண்ணச் சினைச்சொற்களும் முதலொடு குணம் இரண்டு அடுக்கி வரும் அடைச் சொற்களும் சினையொடு குணம் இரண்டு அடுக்கிவரும் அடைச்சொற்களும் முறையே வழக்கிடமும் செய்யுளிடமுமாக, இரண்டு இறந்தனவாய் அடை பல வேண்டின

வழியே புணர்ந்த சொற்களுடன் வழிமோனை முதலிய வரத் தொடுத்தலுமாம். அவற்றால் கேட்டோர் பெறும் இன்பம் சொல்லின்பம்.

பொருள் இன்பமாவது மலரின் மதுக்காரணமாக மதுகரங்களுக்கு வரும் இன்பம் போலக் கவிப்பொருள் உட்கொண்டோருக்கு வரும் இன்பமாம். ஆகவே பொருளணி யுள்ளும் முக்கியமான பொருளணி யுடைத்தாய்ப் பாடுவதே பொருளின்பமாகும்.

ஒழுகிசை – செவிக்கு இனிதாய்த் தோன்றும் இனிய ஓசை அமையப் பாடுவது.

உதாரம் – செய்யுட்சொல் நடையால் வரும் பொருளன்றி அதன் குறிப்பினால் வேறு பொருள் தோன்றுவது.

வலி – தொகைச்சொல் மிக்குவரப் பாடுவது.

உய்த்தலின் பொருண்மை – கவி தன்னால் கருதிய செய்யுட் பொருளை விளங்க விரித்துக் கூறுவதற்குப் பிறிது மொழி பெய்து கூட்டாது அதற்கு உரிய சொற்கள் செய்யுளகத்து உளவாம்படி பாடுவது.

காந்தம் – ஒன்றனை உயர்த்திப் புகழுங்கால் உலகநடை இறவாமை ஆராய்ந்து உயர்த்துவது.

சமாதி – உபமேயத்தின் வினையை உவமைக்கு ஏற்றுவதோர் இலக்கணத்தது. இதுவே குண அலங்காரம் பத்தனுள்ளும் மிகச் சிறந்தது.

செறிவினைச் சிலீட்டம் எனவும், தெளிவினைப் பொருட்டெளிவு எனவும், சமனிலையைச் சமதை எனவும், ஒழுகிசையைச் சுகுமாரதை எனவும், உதாரத்தை உதாரதை எனவும், உய்த்தலின் பொருண்மையைப் புலன் எனவும், காந்தத்தைக் காந்தி எனவும், தொகையை ஓகம் எனவும் வீரசோழியம் குறிப்பிடும்.

ஒத்த நூற்பாக்கள்

'செறிவே தெளிவே சமனிலை இன்பம்
ஒழுகிசை உதாரம் உய்த்தலின் பொருண்மை
காந்தம் வலியே சமாதி என்றுங்கு
ஆய்ந்த ஈரைங் குணனும் உயிரா
வாய்ந்த என்ப வைதருப் பம்மே'. – தண்டி. 14

'செறிவுஎனப் படுவது நெகிழிசை இன்மை' – 16

'தெளிவுஎனப் படுவது பொருள்புலப் பாடே' – 17

'விரவத் தொடுப்பது சமநிலை யாகும்' – 18

'சொல்லினும் பொருளினும் சுவைபடல் இன்பம்' – 19

'ஒழுகிசை என்பது வெறுத்திசை யின்மை' – 20

'உதாரம் என்பது ஓதிய செய்யுளில்
குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றல்' – 21

'கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற்கு
உரியசொல் லுடையது உய்த்தலில் பொருண்மை' – 22

'உலகொழுக்கு இறவாது உயர்புகழ்க் காந்தம்' – 23

'வலிஎனப் படுவது தொகைமிக வருதல்' – 24

'உரியபொருள் அன்றி ஒப்புடைப் பொருள்மேல்
தரும்வினை புணர்ப்பது சமாதி யாகும்' – 25

'ஈண்டும் சிலேட்டம் உதாரதை காந்திபுலன் சமதை
தூண்டும் சமாதி பொருட்டெளிவு ஓகம் சுகுமாரதை
ஈண்டும்இன் பத்தொடு பத்தாவி என்னும் விதர்ப்பன்
[கௌடன்
வேண்டும் இவற்றை விபரீதமாக விளங்கிழையே'. – வீ. 148

'செறிவார் சிலேட்டம் தொகைமிகை யாம்ஓகம் சீர்ச்சமதை
அறிவார் அடியொப்ப தாகும் சமாதி அவனிக்கொப்பப்

பிறிவார் குணமொன்ற தொன்றிற்கிடப்பன
[மென்மையொன்றின்
நெறிவார் குழலி சுகுமாரதை என்று நேர்ந்துரையே'.
– வீ. 150

'ஆறு உலகிற் கரும்புகழ்க் காந்தி கொடைப்புகட்சி
தாறு முதாரம் பொருள்விளக் குஞ்செய்யுள் தான்புலனும்
தேனூர்சொல் லன்றிப் பொருளாற் றெளியின்
[பொருட்டெளிவாம்
தானுடு சொற்பொருளிற் சுவைதோன்றின் தகுமின்பமே'
– வீ. 151

'ஆறு அழகினைக் காந்தியென் கின்றது அதுதமிழின்
நாறு விதமாய் நடைபெற்றியலும் நனிபுகட்சி
தாறு மிடத்தினும் வார்த்தையின் கண்ணும் தலைசிறந்து
தேறுய் விதர்ப்பருக் குங்கவு டர்க்கும் திறப்படுமே'.
– வீ. 151 அ

'இன்பம் தெளிவு செறிவுசமன் இன்னிசையே
நன்சொல் உதாரம் நவின்றவலி – மன்காந்தம்
தையல்உய்த் தலில்பொருண்மை சாற்றும் சமாதியுடன்
ஐயிரண்டும் வைதருப்பம் ஆம்'. – மா. 80

'ஏனைக் கௌடமிவை ஈரைந் தொடுங்கூடா
மானைப் பழித்த மதர்விழியாய் – நூல்நயந்திங்(கு)
எண்ணியபாஞ் சாலம் இவைகட் கிடைப்பட்டு
நண்ணியதோர் சால்புடைத்தாம் நன்கு'. – மா. 81

'சொல்லாற் பொருளாற் சுவையுறலின் பந்தெளிவு
ஒல்காப் பொருள்புலப்பா டொண்செறிவு – நல்லாய்
எழுத்தோ ரினஞ்செறிதல் எல்லா எழுத்தும்
வழுத்தீர்ந் துறல்சமனு மாம்'. – மா. 82

'இன்னிசைய தின்னிசையாம் ஏய்ந்த உதா ரங்குறிக்கொள்
சொன்னடையால் வேறுபொருள் தோன்றலாம் – நன்னுதால்
வாய்ந்த தொகைமிக்கு வருதல் வலிகாந்தம்
ஆய்தொன்ற னையுயர்த்தல் ஆம்'. – மா. 83

'செய்யுட் பொருளைத் தெளியவிரித் தற்குரிச்சொல்
எய்துநடைத் துய்த்த லில்பொருண்மை – தையலாய்
ஓங்கும் சமாதி உபமேயத் தின்வினையை
ஆங்குவமைக் கேற்றுவதொன் றும்'. – *மா.* 84

'சமாதி சிலீட்டம் ஆலேசம் சமதை
பொருட்டெளிவு இன்பம் புலன்சுகு மாரதை
உதாரம் காந்திமற்று ஒன்பதும் ஒன்றும்
வைதருப் பந்நெறி யாம்வழுத் திடினே'.
– *மு. வீ. செய்யுளணி* 11

'அவற்றுள்,
ஒன்றன் பாலுண் டாகிய குணம்மற்று
ஒன்றன் பாலுள வாக உரைப்பது
சமாதி எனப்பெயர் சாற்றப் படுமே'. – 12

'சிலீட்டம் சொற்செறி வுடைய தாகும்'. – 13

'ஆலே சம்தொகை அதிகமா குதலே'. – 14

'எழுத்துநான் கடியுமொத் தியல்வது சமதை'. – 15

'பொருளா லறிவது பொருட்டெளி வாகும்' – 16

'மொழிதரு முற்றிய மோனையைப் பெறுவன
இன்பம் என்மனுர் இயல்புணர்ந் தோரே'. – 17

'உதாரம் ஈகையைப்புகழ்ந் துரைப்பதா மெனலே'. – 18

'பொருள்புலப் படல்புல னுமென மொழிப'. – 19

'வன்கணம் ஒழிதர வரும்சுகு மாரதை'. – 20

'பொருட்பொலி வால்புகழ்ந் துரைப்பது காந்தி'. – 21

15

கௌடம்

635. கௌடம் என்பது கருதிய பத்தொடும்
கூடாது இயலும் கொள்கையது என்ப.

இது கௌடம் ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : கௌடம் என்று சொல்லப்படுவது மேல் கூறிய பத்துக் குண அலங்காரங்களோடும் கூடாது நடக்கும் ஒழுக்கம் உடையது என்றவாறு.

முற்றும்மையை எச்சம் ஆக்கிச் சிலவற்றோடு கூடியும் இயலும் எனக் கொள்க.

[பொருளின்பம், ஒழுகிசை, உதாரம், சமாதி என்பன இருநெறியாருக்கும் ஒக்கும்.]

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 15

'கௌடன் வேண்டும் இவற்றை விபரீதமாக' – *வீ.* 148

நெகிழ் இசை இல்லாச் செறிவு வருமாறு :

'சிலைவிலங்கு நீள்புருவம் சென்றுஒசிய நோக்கி
முலைவிலங்கிற்று என்று முனிவாள் – மலைவிலங்கு
தார்மாலை மார்ப ! தனிமை பொறுக்குமோ ?
கார்மாலை கண்கூடும் போது '.

என வரும்.

[மார்ப! புணர்ச்சிக்கண் முலை விலங்குங்காலும் புருவம் ஒசிய முனிபவளாய்ப் பிரிவைச் சிறிதும் ஆற்றாத தலைவி கார் கால மாலைக்கண் நின்னைப் பிரிந்திருக்கும் தனிமையைப் பொறுத்தல் இயலுமோ?

இப் பாடலில் குறில் இணை, குறில் நெடில், நெட்டொற்று என்பன அடுத்து ஓசை நெகிழாது செறிந்திருக்கும் பெற்றி காண்க. இதனைச் சமனிலைப்பாற்படுத்து மெல்லினம் மிக்குவரத் தொடுப்பதே வைதருப்பச் செறிவு எனவும் வல்லினம் மிக்குவரத் தொடுப்பதே கௌடச் செறிவு எனவும், இடையினம் மிக்கு வரத் தொடுப்பதே பாஞ்சாலச் செறிவு எனவும் கூறும் மாறன் அலங்காரச் செய்தியும் உளங்கொளத்தக்கது.]

இதன் மறுதலைக் கௌடம் வருமாறு :

'விரவலராய் வாழ்வாரை வெல்வா யொழிவா
யிரவுலவா வேலை யொலியே! - வரவொழிவா
யாயர்வா யேயரிவை யாருயி ரீராவோ ?
வாயர்வாய் வேயோ வழல்'.

என வரும்.

[இப்பாடல் இடையெழுத்தே செறிய அமைந்துள்ளது. சந்தி காரணமாகவும் உடம்படுமெய் காரணமாகவும் இச் செய்யுட்கண் உயிரெழுத்துக்கள் வரும் இடங்களிலும் இடையின யகர வகரங்கள் புணர்ந்துள்ளமை காண்க.

இரவில் உலவும் கடல் அலைகளின் ஒலியே! தாயர் தூற்றும் வசைச் சொற்கள் இவள் உயிரை ஈர்க்கின்றன. ஆயர் வேய்ங் குழல் ஓசை அழல் போலச் சுடுகிறது. தனித்திருப்பாரை வெல்லும் எண்ணத்தை விடுத்து இவளுக்குத் துயரம் தருதற்கு வருதலை நீக்குவாயாக.

இடையெழுத்தே செறியப் பாடிய இப்பாடல் கௌட நெறியாருக்கு ஏற்றது. வைதருப்பர் இங்ஙனம் ஓரெழுத்தே முடிவுவரை செறியப் பாடுதலை வேண்டார்.]

பொருள் புலப்படுக்கும் தெளிவு வருமாறு :

'பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்' — குறள் 419

என வரும்.

[ஒருவருக்கு ஒரு நாளின் முற்பகலில் நாம் இன்னாசெய்யின் அந்நாளின் பிற்பகலிலேயே நமக்கு இன்னா பிறர் செய்ய வேண்டாமல் தாமே வரும்.

இங்ஙனம் எளிமையாகப் பொருள் புலனாகுமாற்றால் பாடல் அமைத்தலையே வைதருப்பர் வேண்டுவர்.]

இதன் மறுதலைக் கௌடம் வருமாறு :

'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று' – குறள் 297

என வரும்.

[பொய் சொல்லாதிருத்தலை ஒருவன் தவறாது மேற்கொண்டால் வேறு அறங்கள் செய்யவேண்டுவதில்லை; - வேறு அறங்கள் செய்வது நல்ல பயன் தரும்.

இப்பாடலில் பொய்யாமை என்பது பொய் சொல்லாதிருத்தல் தவறாதிருத்தல் என்ற பொருள்களிலும், செய்யாமை என்ற அடுக்கு தெளிவுப்பொருளிலும், இன்மையது அபாவமாகிய செய்தல் என்ற பொருளிலும் வந்துள்ளன.

இங்ஙனம் பொருள் எளிதில் புலனாகாத வகையில் செய்யுள் யாத்தலையே கௌடநெறியார் வேண்டுவர்.]

விரவத்தொடுக்கும் சமநிலை வருமாறு :

'சோகம் எவன்கொல்? இதழிபொன் தூக்கின; சோர்குழலாய்!
மேகம் முழங்க, விரைசூழ் தளவம் கொடிஎடுக்க,
மாகம் நெருங்க,வண் டானம் களிவண்டு பாட,எங்கும்
தோகை நடம்செய, அன்பர்திண் தேர்இனித் தோன்றியதே'

என வரும். விரவுதல் வன்மை மென்மை இடைமை தம்முள் விரவுதல்.

[சோர்குழலாய்! கார்கால வருகையைக் காட்ட மேகம் முழங்கவும், முல்லைக்கொடி தழைக்கவும், கார்மேகம் நெருங்கவும், வண்டானம் என்ற பறவைகளும் வண்டுகளும் பாடவும், மயில் ஆடவும் தலைவர் நின்னை அடைதல் குறித்துத் தாம் சென்ற இடத்திலிருந்து மீண்டும் வரும் தேர் கட்புலனாகிவிட்டது. அவர் பிரிவு குறித்து வருந்துதல் வேண்டா – என்று தோழி, தலைவன் பிரிவு குறித்துப் பருவவரவின்கண் மனம் வருந்திய தலைவியை ஆற்றுவிக்கும் இப்பாடலில், வன்மை மென்மை இடைமை தம்முள் விரவிவர அமைந்துள்ளமை வைதருப்ப நெறியாருக்கு ஏற்றதாம்].

இதன் மறுதலைக் கௌடம் வருமாறு :

'இடர்த்திறத் தைத்துற; பொற்றொடி! நீ, இடித்துத் தடித்துச்
சுடர்க்கொடி திக்கனைத் திற்றடு மாற, துளிக்குமைக்கார்;
மடக்குயிற் கொத்தொளிக்க, களிக்கப்புக்க தோகை, வெற்றிக்
கடற்படைக் கொற்றவன் பொற்கொடித் தேரினிக்
கண்ணுற்றதே'

என வரும்.

[*பொற்றொடி! கார் கால வரவின்கண் இடி இடிக்கவும், மின்னல் மின்னவும், மேகம் மழை தூவவும், குயில் வருந்தவும், மயில் மகிழவும், கடல் போன்ற படையுடன் சென்று வென்று மீளும் தலைவனுடைய அழகிய கொடி கட்டப்பட்ட தேர் இப்பொழுது வந்துவிட்டது; ஆதலின் வருந்துதலை நீக்கு - என்று தலைவனுடைய பகைவயின் பிரிவின்கண் கார்கால வரவில் ஆற்றாளாய தலைவியைத் தோழி ஆற்றுவித்துக் கூறும் இப்பாடலில், வல்லெழுத்துக்களே மிக்குவரத் தொடுத்துள்ளமை கௌட நெறியார் மரபு பற்றியதாகும்.*]

சொல்லினும் பொருளினும் சுவைபடு நெறியான் நல்லன தொடுக்கும் இன்பங்களுள் சீர் இடையிட்ட வழிமோனை முதலியன வரச் சொல்லினால் தொடுக்கும் இன்பம் வருமாறு :

'முன்னைத்தம் சிற்றில் முழங்கு கடல்ஓதம் மூழ்கிப்போக
அன்னைக்கு உரைப்பன் அறிவாய் கடலேஎன்று
அலறிப்பேரும்
தன்மை மடவார் தளர்ந்துஉகுத்த வெண்முத்தம் தகைசூழ்
கானல்
புன்னைஅருப்பு ஏய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே
எம்ஊர்'

என வரும்.

[*சிறுமியர் தாம் கட்டிய மணல் வீட்டினைக் கடல் வெள்ளம் அழித்ததாக, அதனால் வருந்தித் தம் தாயரிடம் நிகழ்ச்சியைக்*

கூறுவதாகச் சொல்லிச் சிற்றில் சிதைந்து அழிந்த வருத்தத்தால் தம் முத்து மாலைகளை அறுத்தாராக, அம்முத்துக்கள் மணற் பரப்பில் சிதறிப் புன்னை அரும்புகள் போலக் காட்சி அளித்து அப்பகுதியில் செல்வார் கால்களை உறுத்தும் இயல்பிற்று புகார் நகரம் – என்ற இப்பாடலில், சீர் இடையிட்ட வழி மோனையினால் சொல்லின்பம் அமைந்துள்ளது குறித்துணரத்தக்கது.]

இதன் மறுதலைக் கௌடம் வருமாறு :

'துனைவருநீர் துடைப்பவளாய்த் துவள்கின்றேன் ;
துணைவிழிசேர் துயிலை நீக்கி,
இனவளைபோன்று இன்னலம் சோர்ந்து, இடர்உழப்ப,
இகந்தவர் நாட்டு இல்லை போலும் ;
தனியவர்கள் தளர்வுஎய்தத் தடங்கமலம்
தளைஅவிழ்க்கும் தருண வேனில்
பனிமதுவின் பசுந்தாது பைம்பொழிலில்
பரப்பிவரும் பருவத் தென்றல்'

என வரும்.

[தோழி! வளைகழல, வனப்பு நீங்க, இடர் உழந்து விரைந்து வரும் கண்ணீரைத் துடைத்து வாடுகிறேன். தனித்திருப்பார் கண்டு தளரும்படி தாமரை அரும்பும் இளவேனிற் காலத்தில் மகரந்தத்தைச் சோலைகளில் பரப்பியவாறு நம் பகுதியில் வீசும் தென்றல், நம்மைப் பிரிந்து தலைவன் சென்றுள்ள வேற்று நாட்டில் வீசாதோ? – என்று தலைவன் பிரிவால் இளவேனிற் காலத்தில் வருந்திய தலைவி தோழிக்குக் கூறிய இப்பாடலில், அடிதோறும் சீர்களில் மோனை சிறந்து வரத் தொடுத்துள்ளமை கௌடச் சொல்லின்பமாம்.

இனி, இதனைப் பாஞ்சாலச் சொல்லின்பத்துக்குக் கொண்டு, சீர்தோறும் முற்று மோனையும் அடிதோறும் வருக்க மோனையும் அமையப் பாடுவதே கௌடச் சொல்லின்பம் என்று மாறன் அலங்கார நூலார் கூறுவர்.

'கடுவே கயல்எனக் கரந்துஅடும் கண்ணிணை
காமனும் காமுறும் காட்சிய காண்முகம்
கிள்ளையின் கிளையும் கிளைத்தகைக் கிளையுடைக்
கீரமும் கீர்த்தி கீரமும் கீரே
குவடுஉடைக் குளிர்பொன் குன்றே குவிமுலை
கூர்புதற் கூன்சிலை கூற்றுயிர் கூட்டுணும்
கெடல்அருங் கெழுதகை கெழுமுபு கெழீஇய
கேகயம் கேளொடும் கேடுஉறும் கேழ்இயல்
கைபுனை கைக்குஇசை கைக்குஇணை கைத்துணை
கொண்டல்உள் கொண்டன்ன கொண்டையும் கொடியிடை
கோடாக் கோவலர் கோற்றொடி கோமான்
கௌரவ கௌசிகன் கௌசிகம் கௌத்துவம்
மணிஎனக் கொண்டு மனவீடு அளித்தோன்
கண்ணன் குறுங்குடிக் கனவரை
மண்ணகத்து உறையுளாய் வளர்நில மகட்கே'

தலைவன் பாங்கற் கூட்டத்தில் தலைவி இயல் இடம் கூறிய இப்பாடலைக் கௌட நெறிச் சொல்லின்பத்துக்கு அவர் எடுத்துக் காட்டாகத் தந்துள்ளார்.]

பொருள் இன்பம் வருமாறு :

'மான்நேர் நோக்கின் வளைக்கை ஆய்ச்சியர்
கானம் முல்லை சூடார்; கதுப்பில்
பூவைப் புதுமலர் சூடித் தாம்தம்
அடங்காப் பணைமுலை இழைவளர் முற்றத்துச்
சுணங்கின் செவ்வி மறைப்பினும், மலர்ந்த
பூவைப் புதுமலர் பரப்புவர்; பூவயின்
ஆநிரை வருத்தம் வீட, மலைஎடுத்து,
மாரி காத்த காளை
நீல மேனி நிகர்க்குமால் எனவே'

என வரும். இப்பொருள் இன்பம் இருநெறிக்கும் ஒக்கும். பொருள் இன்பமாவது, மதுக் காரணமாக மது-கரங்களுக்கு வருவது ஒரு மகிழ்ச்சி போலப் பொருள்

காரணமாக அது கேட்டார்க்கு வருவது ஒரு மகிழ்ச்சி. இவ்வாறு தொடுக்குங்கால் கிராமியச் சொல்லும் பொருளும் தீண்டாமல் தொடுத்தல் வேண்டும் எனக் கொள்க.

[ஆய்ச்சியர் தம் முல்லை நிலத்து மிக்குக் காணப்படும் நறுமணமுடைய முல்லையைச் சூடாது, மலையைக் குடையாகக் பிடித்து ஆனிரைகளைக் காத்த கண்ணனுடைய மேனி நிறத்தை ஒக்கும் பூவைப் பூக்களையே அவன் நினைப்பை மிகுவித்தல் காரணமாகச் சூடுவர் – என்ற இப்பாடலில் கற்பனை நலன் சிறக்கும் பொருளின்பம் சுட்டப்பட்டுள்ளது. இப்பொருளின்பத்தை இரு நெறியாரும் வேண்டுவர்.]

வெறுத்து இசை இல்லா ஒழுகு இசை வருமாறு :

'இமையவர்கள் மௌலி இணைமலர்த்தாள் சூடச்
சமயந்தொறும் நின்ற தையல், - சிமைய
மலைமடந்தை, வாச மலர்மடந்தை, எண்ணெண்
கலைமடந்தை, நாவலோர் கண்'

என வரும்.

[தேவர்கள் தன் திருவடிகளை வணங்குமாறு எல்லாச் சமயத்தாராலும் வழிபடப்படும் தேவியாய் மலைமடந்தையாகவும் திருமடந்தையாகவும் கலைமடந்தையாகவும் விளங்குபவள், புலவர்களுக்குப் பற்றுக்கோடாய் உள்ளாள் – என்ற இப்பாடலில் கடுஞ்சொற்கள் அமையாது ஒழுகிசை அமைந்தமை வைதருப்ப நெறியார் மரபை உட்கொண்டது. இவ்வொழுகிசை இரு நெறியாருக்கும் ஒக்கும் என்பது தண்டியார் கருத்து என்ப.

இவ்வொழுகிசையை இன்னிசை என்று பெயரிட்டு, தூங்கிசைச் செப்பலோசையை வைதருப்பத்திற்கும், ஏந்திசைச் செப்பலோசையைக் கௌடத்திற்கும், ஒழுகிசைச் செப்பலோசையைப் பாஞ்சாலத்திற்கும் உரியவாகக் குறிப்பிடும் மாறன் அலங்காரம் மூன்று விகற்பமும் மூன்று நெறியாருக்கும் உரிய என்று கொள்ளும் பிறன்கோளையும் குறிப்பிட்டுள்ளது.]

இதன் மறுதலைக் கௌடம் வருமாறு :

'ஆக்கம் புகழ்பெற்றது ஆவி இவள்பெற்றாள்
பூக்கட் குழல்கார் பொறைபெற்ற – மாக்கடல்சூழ்
மண்பெற்ற ஒற்றை குடையாய்! வரப்பெற்றெங்
கண்பெற்ற இன்று களி'

என வரும்.

[அரசே! நீ வினைமுற்றி மீண்டு வந்தமையால் புகழ் சிறந்தது; தலைவி உயிர் நிலைபெற்றது; அவள் கூந்தல் பூக்களைச் சூடும் வாய்ப்பினைப் பெற்றது. எங்கள் கண்கள் நின்னைக் காண்பதனால் ஆகும் களிப்பைப் பெற்றன — என்ற இப்பாடலில் காணப்படும் கடிய ஓசையைச் சுவையாகக்கொண்டு விரும்புவாரும் உளர் ஆதலின், ஒழுகிசைக்கு மறுதலைப்பட்ட கடிய ஓசை கௌட நெறியார் மரபாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வின்னா ஓசையைக் கௌட நெறியாரும் வேண்டார் என்று தண்டி அலங்காரம் கூறும். மாறன் அலங்காரக் கருத்தும் அதுவே.

பொய்ந்நிலப்பட்ட இன்னா இசையை மூன்று நெறியாரும் வேண்டார் என்று குறிப்பிடும் மாறன் அலங்காரம், அவ்வின்னா இசைக்கு,

'நாட்டம் களிபற்ற நாவு நசைபற்ற
ஏட்டில் பலர்கை இணைபற்றத் — தோட்டிலஞ்சிக்கு
அன்புற்ற முத்தர் பெருமான் அடிபரவி
இன்புற் றவர்க்கடிமை யாம்'

என்ற பாடலை எடுத்துக்காட்டாகத் தரும்.

ஒழுகிசை இருநெறியாருக்கும் ஒக்கும் என்ற தண்டியலங்காரக் கருத்தோடு இந்நூல் முரணி உரைப்பது குறித்துணரத்தக்கது.]

குறிப்பின் ஒரு பொருள் நெறிப்படத் தோன்றும் சிறப்புடை மரபின் உதாரம் வருமாறு :

'செருமான வேற்சென்னி தென்உறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னர் — ஒருநாளும்,
பூதலத்தோர் தம்மைப் பொருள்நசையால் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்'

என வரும். இதனுள் வறுமை தீரக் கொடுப்பன் என்பது குறிப்பு. இவ்வுதாரம் இருவகை நெறியார்க்கும் ஒக்கும்.

[உறையூரைக் கோநகராகக்கொண்டு ஆளும் வீரனாகிய சோழனுடைய முகத்தைக் காணும் வாய்ப்புப்பெற்ற பின்னர், இரவலருடைய கண்கள் இவ்வுலகில் வேறு எவரையும் மிடி தீரப் பொருள் பெறும் விருப்பினால் பாராவாம் – என்ற இப்பாடலில் சோழன் இரவலரைக் கண்ட அளவில் அவர் குறிப்பறிந்து அவர்தம் வாழ்நாள் இறுதிகாறும் மிடியின்றி வாழப் பொருள் நல்குவான் என்ற கருத்து குறிப்பாக அமைந்துள்ளமை காண்க.

இவ்வுதாரம் மூன்று நெறியாருக்கும் ஒக்குமேனும் வைதருப்பத்தில் குறிப்புப் பொருள் சிறிதளவும், பாஞ்சாலத்தில் அதனின் சிறிது மிகுதியாகவும், கௌடத்தில் இன்னும் மிகுதியாகவும் காணப்படும் என்பது மாறன் அலங்காரம்.

'காழில் கனிஉண் கடுவன் களங்கனியை
ஊழிற் பருகி உருகுதிரு — மூழிக்
களத்தாதி யைமதங்கா காமக் குழவி
வளர்த்தா ரிடம்தேடு வாய்'

என்பது தலைமகனுக்காக வாயிலாக வந்த பாணனிடம் தோழி வாயில் மறுத்து உரைத்ததாகும்.

காலை மங்கலம் பாட வந்த யாழ்ப்பாணனே! பரல் இல்லாதே முழுதும் மென்மையும் இனிமையும் உடைய அரம்பைக் கனியை அச்சமின்றி உண்ணுநின்ற கடுவன் அகத்து முழுதும் பரலாய்ச் சிறிது புறமென்மையும் அற்பச்சுவையுமுடைய களங்கனியையும் முறையேபோலப் பருகி அதன் சுவைக்கும் உள்ளம் உருகும் திருமூழிக்களத்து முதல்வனைக் காமம் என்னும்

குழவிச் செல்வத்தை உடைய பரத்தையரிடத்தே தேடிக் காண்பாயாக; அஃதன்றி எம்மிடத்துக் காண்டல் அரிது என்றவாறு.

'காழில்...மூழிக்களம்' எனவே, அக்கடுவன்போல, உத்தமமான இவளோடும், உள்ளும் புறம்பும் ஒரு நீர்மைத்தாம் மென்மையோடும், உவர்ப்பில்லாத பேரின்பத்தைத் துய்த்த தலைவன், இழிந்த இயற்கையை உடையராய்ப் புறம்பு பொருள் நசைக்காய்ச் சிறிது நெகிழ்ந்து உள் நெகிழ்ச்சியற்ற பரத்தையரிடத்தே உவர்த்த சிற்றின்பத்தைத் துய்த்து அவ்வின்பம் மீண்டும் துய்ப்பான் அவர் சேரிவிட்டு நீங்கானுயினன் என உள்ளுறை உவமம் குறிப்பிற் கொள்ளக்கிடந்தமையானும், காமக்குழவி வளர்த்தாரிடம் எனவே, இஃது எம் காதற்புதல்வன் என்னும் செல்வத்தை உடைய மனை என்பதூஉம், யாம் புதல்வற்பயந்த மூப்புடையேம் என்பதூஉம் இன்னும் அவ்விலேசானே எம்மிடத்து அவர் பெறும் இன்பம் எமக்கு அவர் கொளுத்தக் கொண்டு யாம் கொடுக்கும் இயற்கை இன்பமே அல்லாது செயற்கை இன்பம் எம்மிடத்து இல்லையே என்னும் கூற்றுமாகக் குறிப்பும் கூற்றும் குறிப்பினுல் கொள்ளக்கிடந்தமையானே, இவ்வாறு வேண்டுவர் கௌடர் எனக் கொள்க.

– மா. அ. பக். 97, 98]

கருதிய பொருளைத் தெரிவுஉற விரித்தற்கு உரிய சொல் உடைய உய்த்தலில் பொருண்மை வருமாறு:

'இன்றுஉமையாள் மாசுஇலா வாள்முகம்கண்டு ஏக்கற்றோ,
அன்றி விடஅரவை அஞ்சியோ? - கொன்றை
உளரா ஆறுஓடும் ஒளிர்சடையீர்! சென்னி
வளராஆறு என்னே? மதி'

என வரும்.

[கொன்றைப்பூவில் பாய்ந்து கங்கை ஓடும் சடைமுடியை உடைய சிவபெருமானே! உங்கள் சென்னியில் உள்ள பிறைச்

சந்திரன் வளராதிருப்பதற்குக் காரணம் யாது? பார்வதியின் முகத்தழகு கண்டு ஆசையால் தாழ்ந்து வளரவில்லையா? அன்றி நிறைமதியமானல் பாட்பு பற்றும் என்று கருதி வளரவில்லையா?– என்ற இப்பாடலில் கவி நினைத்த கருத்தை வெளிப்படுத்தற்குரிய சொற்கள் குறைவற அமைந்துள்ளன.

இவ்வுய்த்தலில் பொருண்மை இரு நெறியாருக்கும் ஒக்கும் என்பது தண்டியலங்காரம், மாறன் அலங்காரம் என்பனவற்றின் கருத்தாகும். கற்பனைச் சுவையைப் பெரிதும் விரும்பும் கௌடநெறியார் இவ்வாறு தெள்ளிதின் உரைத்தலை வேண்டார் என்ற கருத்துடையவர் இந்நூலாசிரியர்.]

இதன் மறுதலைக் கௌடம் வருமாறு :

'ஒல்லேம் குவளைப் புலால்; மகன்மார்பின்
புல்எருக்கங் கண்ணி நறிது'

என வரும்.

[பரத்தையிற் பிரிந்து மீண்டு வந்த தலைமகனுடன் ஊடிய தலைவி கூற்று இது. இதன்கண் குவளையை அவள் விரும்பாமைக்கும், எருக்க மாலையை அவள் விரும்புதற்கும் உரிய காரணம் குறிப்பிடப்படவில்லை. புதல்வற் பயந்த பூங்குழல் மடந்தை பரத்தையிற் பிரிந்து வந்த கிழவனேடு புலந்து உரைக்கின்ருள் ஆதலின் குவளை புலால் நாறுவதற்கு அவன் தவற்ருேடு கூடிய அவள் காதல் காரணம் என்பதும், மகிழ்நன் செய்த துனி கூர் வெப்பம் தன் முகிழ்நகை முகத்தால் தணிக்கும் புதல்வன்மேல் ஒருகாலைக்கு ஒருகால் பெருகும் அன்பு அப் புதல்வன் பூண்ட எருக்கங்கண்ணி நறிதாதற்குக் காரணம் என்பதும் குறிப்பால் பெறப்பட வைத்தவாறு. இங்ஙனம் கருதிய பொருளைத் தெளிவாக உணருவதற்கு உரிய சொற்களைச் செய்யுளில் அமைக்காது, உய்த்துணருமாறு செய்தலையே கௌட நெறியார் வேண்டுவர் என்பது இவர் கருத்து.]

உலகு ஒழுக்கு இறவா உயர்புகழ்க் காந்தம் வருமாறு :

'ஒருபேர் உணர்வுடையேன் உள்நிறையும் தேய,
வருமே துறவுஎன்பால் வைத்த – ஒருபேதை,
போதுஅளவு வாசப் புரிகுழல்சூழ் வாள்முகத்துக்
காதுஅளவு நீண்டுஉலவும் கண்'

என வரும்.

[*உணர்வுடைய என்னுடைய உள்ளத்து நிறையும் தேய, நிறைநீங்குதலை உண்டாக்கிய இளையாளது குழல் சூழ்ந்த ஒளி மிக்க முகத்தில் அமைந்த கண்கள் காதுகள் அளவும் நீண்டு பிறழும் இயல்பின – என்று தலைவன் தான் உற்ற வருத்தத்தைப் பாங்கனிடம் கூறிய இப்பாடலில், உலகியலில் நிகழும் செய்தியே மரபாக அமைந்த புனைந்துரையோடு அமைந்திருப்பதனைக் காணலாம்.*]

இதன் மறுதலைக் கௌடம் வருமாறு :

'ஐயோ! அகல்அல்குல் சூழ்வருதற்கு ஆழித்தேர்
வெய்யோற்கு அநேகநாள் வேண்டுமால்; – கைபரந்து
வண்டுஇசைக்கும் கூந்தல் மதர்விழிகள் சென்றுஉலவ,
எண்திசைக்கும் போதாது இடம்'

என வரும்.

[*இஃது என்ன வியப்பு! அகன்ற அல்குலைச் சூழ்ந்து சுற்றி வருவதற்குக் கதிரவனுக்குப் பல நாட்கள் ஆகும். இந்நங்கையின் செழித்த விழிகள் உலவி வருவதற்கு எட்டுத் திசைகளும் இடம் போதாவாம் – என்ற இப்பாடலில் உலக நடையினைக் கடந்த கற்பனை அமைந்திருப்பது காண்க.*]

தொகைமிக வருஉம் தகைமிகு வலி வருமாறு :

'செங்கலசக் கொங்கைச் செறிகுறங்கின் சீறடிப்பேர்ப்
பொங்கரவ அல்குல் பொருகயல்கண் — செங்கனிவாய்க்

கார்உருவக் கூந்தல் கதிர்வளைக்கைக் காரிகைத்தாம்
ஓர்உரு,என் உள்ளத்தே உண்டு'

என வரும். தொகைமிக வருதல் – தொகைச் சொல் தொடர்பு உண்டாக வல்லெழுத்து மிகுதல் சிறப்புடைத்தாய் வருதல்.

[கலசம் போன்ற கொங்கை, ஒன்றோடொன்று செறிந்த தொடை, சிறிய அடிகள், அரவின் படம் ஒத்த அல்குல், போரிடும் கயல் போன்ற கண்கள், கனி போன்ற வாய், கார் மேகம் போன்ற கூந்தல், ஒளிவிடும் வளையலணிந்த கைகள் இவற்றை உடைய நங்கை ஒருத்தியின் உருவம் என் உள்ளத்தில் உள்ளது – என்று உற்றது வினவிய பாங்கற்குத் தலைவன் சொற்ற இப்பாடலில் செங்கலசக்கொங்கை – உவமைத்தொகை; செறி குறங்கு – வினைத்தொகை; சீறடி – பண்புத் தொகை; அரவல்குல் – உவமைத் தொகை; பொருகயல் – வினைத்தொகை; கயற்கண் – உவமைத்தொகை; கனிவாய் – உவமைத்தொகை; கார்உருவக் கூந்தல் – உவமைத் தொகை; வளைக்கை – இரண்டாம் வேற்றுமைத் தொகை; ஓர்உரு – பண்புத் தொகை; என் உளம் – ஆறும் வேற்றுமைத்தொகை – எனத் தொகைகள் பலவும் அமைந்திருப்பது காண்க.

தண்டியலங்காரத்தில் இப்பாடல் பலவகைத் தொகைகள் உடைமையின் கௌட நெறிக்கும், 'கால் நிமிர்த்தால்' என்ற பாடல் வைதருப்ப நெறிக்கும் வலிக்கு எடுத்துக்காட்டுக்களாக உள்ளன.]

இதன் மறுதலைக் கௌடம் வருமாறு:

'கால்நிமிர்த்தால் கண்பரிப வல்லியோ? புல்லாதார்
மான்அனையார் மங்கலநாண் அல்லவோ? — தான
மழைத்தடக்கை வார்கழல்கால் மானவேல் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு'

என வரும்.

[கொடை வழங்கும் கார்மேகம் போன்ற நீண்ட கையினையும், நேரிய வீரக்கழல் அணிந்த காலினையும், பெருமை பொருந்திய வேலினையும் உடைய சோழ மன்னனுடைய உட்டொளையுடைய நீண்ட துதிக்கையினையும் தொங்குகின்ற வாயினையும் உடைய யானை, தன் கால்களை உயரத் தூக்கினால், அதன் கால்களைப் பிணித்திருக்கும் சங்கிலியின் கணுக்கள் மட்டும் அறுதலேயன்றிப் பகைவருடைய மான் போன்ற மனைவிமார்களின் மங்கல நாண்களும் அறுபடும் – என்ற யானைமறம் பற்றிய இப்பாடலில்,

கால் நிமிர்த்தல்	—	இரண்டாம் வேற்றுமைத்தொகை
புல்லாதார் மானனையார்	—	ஆறாம் வேற்றுமைத்தொகை
மான் அனையார்	—	இரண்டாம் வேற்றுமைத்தொகை
அனையார் மங்கலநாண்	—	ஆறாம் வேற்றுமைத்தொகை
மங்கல நாண்	—	பண்புத்தொகை
தானக்கை	—	இரண்டாம் வேற்றுமைத்தொகை
மழைக்கை	—	உவமைத்தொகை
கழற்கால்	—	இரண்டாம் வேற்றுமைத்தொகை
வேற்கிள்ளி	—	இரண்டாம் வேற்றுமைத்தொகை
புழைக்கை	—	இரண்டாம் வேற்றுமைத்தொகை
கைப்பொருப்பு	—	இரண்டாம் வேற்றுமைத்தொகை
நால்வாய்	—	வினைத்தொகை
வாய்ப்பொருப்பு	—	இரண்டாம் வேற்றுமைத்தொகை

சொற்களில் உருபு தொகுதலோடு பொருளும் தொக்கு அமைதல் கௌடநெறியாரின் வலி என்று கொண்ட இவ்வாசிரியர் இப்பாடல் அடிகளின் பொருளமைப்பை நோக்கி, இதனைக் கௌட நெறிக்கு எடுத்துக்காட்டாக்கினர்.]

உரிய பொருள் அன்றி ஒப்பு உடைப்பொருள்மேல் தருவினை புணர்க்கும் சமாதி வருமாறு :

'அகல்இரு விசும்பில் பாய்இருள் பருகிப்
பகல்கான்று எழுதரு பல்கதிர்ப் பருதி' – பெரும்பாண் 1-2

என வரும். வினை என்றூரேனும், கன்னிஎயில், குமரி ஞாழல் என்றாற்போல வருவனவும் கொள்க. இச் சமாதி இருவகை நெறிக்கும் ஒக்கும்.

[ஏனைய பூதங்களும் தன்னிடத்தில் ஒடுங்குமாறு அகன்ற ஆகாயத்தில் பரவியிருக்கும் இருட்டினை விழுங்கிப் பகலைக் கக்கிக்கொண்டு தோன்றும் பல கிரணங்களை உடைய ஞாயிறு – என்ற பாடல்அடிகளில் இருளைப் போக்குதலையும், பகலை வெளிப்படுத்தலையும் உடைய சூரியனுக்கு, மனிதருக்கு உள்ள பண்புகளாகிய பருகுதலையும் கக்குதலையும் புணர்த்துக் கூறுவது இவ்வணியாகும்.

உயர்திணையில் பெண்பாலுக்கு உரிய இயல்புகளாகிய கன்னித்தன்மை, குமரித்தன்மை என்பனவற்றை அத் தன்மைகளுக்கு உரிமை உடையன அல்லாத மதில், ஞாழல் என்ற அஃறிணைப் பொருள்களுக்கு ஏற்றிக் கன்னி எயில், குமரி ஞாழல் (ஒரு மரம்) என்று கூறுவதும் இவ்வணியாம்.

'கடுங்கை வயல்உழவர் காலைத் தடிய
மடங்கி அரியுண்ட நீலம் – தடம்சேர்ந்து
நீள்அரிமேல் கண்படுக்கும் நீள்நீர் அவந்தியார்
கோள்அரியேறு இவ்விருந்த கோ'

என்ற பாடலும் தண்டியலங்காரத்தில் உள்ளது.

உபமேயமாகிய கண்ணின் செயலாகிய உறங்குதலை உபமான மாகிய நீலமலருக்கு ஏற்றி, 'நீலம் கண்படுக்கும்' என்று கூறுவது சமாதி அணியாம்]

மாங்கனியும் தீம்பாலும் வருக்கைச்சுளேயும் சருக்கரையும் தம்முள் வேறுபட்ட சுவைய ஆயினும் கூறல் மதுரம் என்று அன்றே? அது போல, எழுத்துச் செறிவும் சொற்செறிவும் பொருட்செறிவும் செறிவு என்றே செப்புவது அல்லது பிறிது ஒருவகை பேசின் பெருகிய அகலம் உடைத்தாம் ஆகலின், அவை எல்லாம் உய்த்து உணர்ந்து கொள்க. பிறவற்றிற்கும் ஈது ஒக்கும்.

ஆசிரியர் தொல்காப்பியனுர் உவமம் ஒன்றனேயுமே அணியாகக் கூறிஒழிந்தமையின், ஈண்டுக் கூறிய குணமும் மேல்கூறும் உவமை ஒழிந்த பொருள்அணியும் சொல்லணியும் ஆகிய அலங்காரங்கள் இவர் யாண்டுப் பெற்ருர் எனின், மேல் பாயிரத்துள் 'முன்னோர்நூலின் முடிபு நோக்கி' என்றதனுல், பெரும்பான்மையும் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களுள்ளும், சிறுபான்மை அலங்காரம் நுதலிய வடநூல்களுள்ளும் பெற்ருர் என்க. அற்றேல், வடநூல் முதல் நூல் ஆயவாறு என்னேஎனின், சொல்வேறுபாடு அன்றிப் பொருள்வேறுபாடு இன்மையானும், அன்றியும் சங்கிரதம் பாகதம் அவப்பிரஞ்சம் என மூவகைப்படுத்தி அவற்றுள் சங்கிரதம் புத்தேளிர்மொழி எனவும் அவப்பிரஞ்சம் பாமர சாதிகளாகிய இழிசனர் மொழி எனவும் கூறி, பாகதம் எல்லார் நாட்டும் வழங்கும் மேலோர்மொழி என விளக்கி, அப்பாகதத்தைத் தற்சமம் தற்பவம் தேசியம் எனப் பகுத்து, அவற்றுள் தற்பவம் 'நிதியம் துஞ்சும்' (மலேபடு – 478) எனவும், 'தசநான்கு எய்திய' (நெடுநல் – 115) எனவும் வடசொல் திரிந்து ஆவன என்றும், தற்சமம் - குங்குமம், உலகம், மலயமாருதம் என வடசொல்லும் பிறபாடைச் சொல்லுமாய்ப்

பொதுவாய் வருவன என்றும், தேசியம் – நிலம், நீர், தீ என அவ்வந்நாட்டுச் சொல்லேயாய்ப் பிறபாடை நோக்காதன என்றும் கோடலின் அச்சொல் வேறுபாடும் இன்மையானும் என்க. (16)

[தொல்காப்பியம் குறிப்பிடும் செய்திகளையும், வடமொழி அணியிலக்கண நூல்கள் குறிப்பிடும் செய்திகளையும் உட்கொண்டு இவ்வணியியல் அமைக்கப்பட்டுள்ளது.

மொழி என்பது ஒன்றே. அது புத்தேளிர் போல்வாராகிய சான்றோரான் வழங்கப்படும் நிலையில் சங்கிரதம் எனப்படும்; இழிந்தார் வாய்ப்பட்டு வழங்கின் அவப்பிரஞ்சம் எனப்படும்; பொதுமக்கள் வழக்கில் பாகதம் எனப்படும். அப்பாகதத்தின் ஒரு கூறே தேசியம் என்பது. எனவே, சான்றோர் கூற்றில் சங்கிரதத்தில் அமைக்கப்பட்டிருக்கும் செய்தியைப் பொதுமக்கள் கூற்றில் பயிலப்படும் தேசியமாகிய பாகதத்தில் அமைத்தற்கண் வேறுபாடு எதுவும் இன்று. வடமொழியும் தமிழும் பொது மொழிக்கூறுகளே என்ற கருத்து இங்கு விளக்கப்பட்டுள்ளது.]

16

அலங்காரம் - இருவகை

636. பொருள்அணி சொல்அணிஎனஅலங் காரம்
இருவகை நெறியான் இயலும் என்ப.

நிறுத்தமுறையானே அலங்காரம் உணர்த்துவன-வற்றுள், இஃது அஃது இத்துணைத்து என்கின்றது.

இ-ள்: பொருளான் உளதாகிய அணியும் சொல்லான் உளதாகிய அணியும் என அலங்காரம் இருதிறத்து இயலான் நடக்கும் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு. (17)

[பொருளையே அடிப்படையாகக் கொண்டு பெயரிடப்படும் அணிகள் பொருளணிகளாம். அவையே மிக மேம்பட்டன என்ப. சொற்களின் அமைப்புக்கே சிறப்பிடம் கொடுத்துப் பொருளமைப்பைப் பற்றிப் பெரிதும் கவலாது அமைவன சொல்லணிகளாம். சொல்லணிகள் பொருளணிகளை ஒத்த சிறப்பின அல்ல. சந்திராலோகம், குவலயானந்தம் என்பன பொருளணிகளையே புகல்வன. தண்டியலங்காரம், வீரசோழியம், மாறன் அலங்காரம் என்பன பொருணிகளை முன்னும் சொல்லணிகளைப் பின்னும் குறிப்பிடும். தொன்னூல் விளக்கமும் முத்துவீரியமும் சொல்லணியை முன்னும் பொருளணியைப் பின்னும் குறிப்பிடும்.]

ஒத்த நூற்பா

'பொருளினும் சொல்லினும் புனையுறு செய்யுட்கு
அணிபெறப் புணர்த்தலின் அணிஎனும் பெயர்த்தே'.

- மா. அ. 86

17

பொருள்அணி - முப்பத்தைந்து

637. தன்மை[1] உவமை[2] உருவகம்[3] தீவகம்[4]
பின்வரு நிலையே[5] முன்ன விலக்கே[6]
வேற்றுப்பொருள்வைப்பே[7] வேற்றுமை[8]விபாவனை[9]
ஒட்டே[10] அதிசயம்[11] தற்குறிப் பேற்றம்[12]
ஏது[13] நுட்பம்[14] இலேசம்[15] நிரல்நிறை[16]
ஆர்வ மொழி[17] சுவை[18] தன்மேம் பாட்டுஉரை[19]
பரியா யம்மே[20] சமாயிதம்[21] உதாத்தம்[22]
அரிதுஉணர் அவநுதி[23] சிலேடை[24] விசேடம்[25]
ஒப்புமைக் கூட்டம்[26] மெய்ப்படு விரோதம்[27]
மாறுபடு புகழ்நிலை[28] புகழாப் புகழ்ச்சி[29]

நிதரிசனம்[30] புணர்நிலை[31] பரிவருத் தனையே[32]
வாழ்த்தொடு[33] சங்கீ ரணம்[34] பா விகம்[35] எனப்
போற்றும்ஏ ழைந்தும் பொருள்அணி என்ப.

இது நிறுத்த முறையானே பொருள் அணி இத்துணைத்து என்கின்றது.

இ-ள்: தன்மைமுதல் பாவிகம் ஈருகப் பேணிய முப்பத்தைந்தும் பொருள் அணி என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

தன்மை இயல்பு ஆகலான் முதற்கண்ணும், உவமை விகாரமாய் மிக்கவரவிற்றுய்ப் பிற வக்கிர நடை அலங்காரங்கட்கு உபகாரம் உடைத்து ஆகலான் அதன் பின்னும் எண்ணப்பட்டன. ஒழிந்தனவும் இவ்வாறு உய்த்து உணர்ந்து கொள்க. (18)

[தண்டியலங்காரம், வீரசோழியம், இந்நூல் இம்மூன்றினும் பொருளணிகள் 35 என்று குறிப்பிடப்பட்டுள்ளன. மாறன் அலங்காரம் 64 பொருளணிகளைக் குறிப்பிடுகிறது. தொன்னூல் விளக்கத்தில் 30 பொருளணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சந்திராலோகத்தில் பொருளணிகள் 100 இடம் பெற்றுள்ளன. குவலயானந்தம் 120 பொருளணிகளை விளக்குகிறது. முத்து வீரியத்தில் 56 பொருளணிகள் புகலப்படுகின்றன. இவற்றை எல்லாம் சேர்த்து நோக்கத் தக்காங்கு அமைந்த பொருளணிகள் 118 கொள்ளத் தக்கன. இந்நூல் குறிப்பிடும் பொருளணிகள் அல்லாதன பற்றிய செய்திகளைப் பிற்சேர்க்கையில் காண்க.]

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 28

**‘திரப்பியம் சாதி தொழில்குண மாந்தன்மை சீருவமை
பரப்பிய ஒப்பாம் உருவக மாவ ததன்திரிவு
கரப்பிய சொல்லெங்கு மொன்றே யுபகார மேல்விளக்கு
நிரப்பிய மீட்சியும் மற்றதன் போலி நிரைவளையே’** – வீ. 152

'கூறும் பிறபொருள் வைப்புத் தடைமொழி கொள்பொருளில்
ஏறும் இரண்டிலொன் றேறும் விதிரேக மேதுவின்மை
தேறும் விபாவனை யன்றித் திகழ்சுருக் கேபெருக்கே
ஈறு மிகுநோக்க மேது நுணுக்க மிலேசமென்னே' – வீ. 153

'அடைவு மகிழ்ச்சி சுவையூக்க மாம்பரி யாயமொழி
அடைவு மலிதுணைப் பேறொடு தாத்த மவநுதியும்
உடைவு நிகழுஞ் சிலேடை சிறப்பொ டுடனிலைச்சொல்
புடையின் முரணுவ லாச்சொற் புரிவில் புகழ்ச்சிசுட்டே'
– வீ. 154

'ஆக்கும் ஒருங்கிய லேபரி மாற்றத்தொ டாசிவிராத்
தாக்கு மொழிப்பா விகமிவை ஏழைந்துந் தண்டிசொன்ன
வாக்கு மலியலங் கார மெனவறி; மற்றுமின்ன
நோக்கு மெனிற்பல வாமலங் காரம் நுடங்கிடையே'.
– வீ. 155

'அவற்றுள்
புவனம் போற்றிய பொருளணி புகலின்
தவலரும் பான்மைத் தன்மை உவமை
உருவகம் உள்ளுறை ஒட்டுஉல் லேகம்
ஒப்புமைக் கூட்டம் வேற்றுமைதிட் டாந்தம்
தற்குணம் பிரத்தி யநீகம் சந்தயம்
அற்புதம் நிதரிசனம் தற்குறிப்பு அதிசயம்
சிலேடைபின் வருநிலை தீபகம் நிரல்நிறை
பூட்டுவில் இறைச்சிப் பொருள்கோள் பொருள்மொழி
அதிகம் வகைமுதல் அடுக்குஇணை எதுகை
விரோதம் உபாயம் விசேடம் சமாயிதம்
ஏது சுவை பரியாயம் இலேசம்
தற்பவம் அசங்கதி தடுமா றுத்தி
புணர்நிலை வேற்றுப்பொருள் வைப்பு விபாவனை
ஆர்வ மொழிநெடு மொழிபரி வருத்தனை
காரண மாலை காரிய மாலை
ஏகா வலிபிர தீபம் பிறவணி
முன்ன விலக்கப நுதிநிந் தாத்துதி
புகழ்வதின் இகழ்தல் மாறுபடு புகழ்நிலை

பரிசங்கை காவிய லிங்கம் பரிகரம்
உறுசுவை விநோத்தி சமுச்சயம் உதாத்தம்
ஆசி சங்கரம் சங்கீ ரணமே
பாவிகம் எனஅறு பானுன்கு ஆகும்'. – *மாறன்.* 87

'பொருளணி ஆறைம் புணர்ப்பெனத் தன்மை
உரியபல விகற்ப உவமை உருவகம்
வேற்றுப்பொருள் வைப்பே வேற்றுமை தானே
ஒட்டணி அவநுதி ஊகாஞ் சிதமே
நுட்பம்புகழ் மாற்றே தன்மேம்பாட் டுரையே
பின்வரு நிலையே முன்ன விலக்கே
சொல்விலக்கு இலேசம் சுவையே உதாத்தம்
ஒப்புமைக் கூட்டம் ஒப்புமை ஏற்றம்
விபாவனை விசேடம் விரோதம் பிரிவுரை
விடையில் வினாவே வினவில் விடையே
சித்திரம் ஒழிபுஅமைவு சிலேடைசங் கீரணம்
இத்திறத்து அணியவும் இயம்பினர் கற்றோர்'
– *தொ. வி.* 336

'அவற்றுள்
பொருளணி ஒன்றே சிறப்புளனப் புகல்வர்' – *சந்தி.* 2

'அதுவே,
உவமை பொதுநீங் குவமை புகழ்பொருள்
உவமை எதிர்நிலை உருவகம் திரிபே
பலபடப் புனைவே நினைப்பு மயக்கம்
ஐயம் ஒழிப்பு தற்குறிப்பு அதனோடு
உயர்வு நவிற்சி ஒப்புமைக் கூட்டம்
விளக்கு பின்வரு விளக்கே தொடர்முழுது
உவமை எடுத்துக் காட்டுவமை காட்சி
வேற்றுமை உடன்நிகழ்வு இன்மை நவிற்சி
சுருங்கச் சொல்லல் கருத்துடை யடையே
கருத்துடை யடைகொளி பல்பொருட் சொற்றொடர்
புனைவிலி புகழ்ச்சி புனைவுளி விளைவே
பிறிதின் நவிற்சி வஞ்சப் புகழ்ச்சி
வஞ்சப் பழிப்புஎதிர் மறைமுரண் விளைந்தழிவு

பிறிதா ராய்ச்சிகா ரணவா ராய்ச்சி
கூடாமை தொடர்பின்மை தகுதி யின்மை
தகுதி வியப்பே பெருமை சிறுமை
ஒன்றற்கொன் றுதவி சிறப்பு நிலையே
மற்றதற் காக்கல் காரண மாலை
ஒற்றைமணி மாலை மாலை விளக்கே
மேன்மேல் உயர்ச்சி நிரல்நிறை அதனோடு
முறையில் படர்ச்சி மாற்று நிலையே
ஒழித்துக் காட்டல் உறழ்ச்சி கூட்டம்
வினைமுதல் விளக்கே எளிதின் முடிபே
விறல்கோள் தொடர்நிலைச் செயுட்பொருட் பேறே
தொடர்நிலை செயுட்குறி வேற்றுப்பொருள் வைப்பே
மலர்ச்சி கற்றோர் நவிற்சிஉய்த் துணர்வே
பொய்த்தற் குறிப்பே வனப்பு நிலையே
இன்ப துன்பம்அக மலர்ச்சி இகழ்ச்சி
வேண்டல் இலேசம் குறிநிலை அரதன
மாலை பிறிதின் குணம்பெறல் அதனொடு
தொல்லுருப் பெறல்பிறி தின்குணம் பெருமை
தன்குணம் மிகைமறை பொதுமை மறையாமை
சிறப்பிறை நுட்பம் கரவுவெளிப் படுப்பே
வஞ்ச நவிற்சி குறிப்பு நவிற்சி
வெளிப்படை நவிற்சி உத்தியே உலக
வழக்கு நவிற்சி வல்லோர் நவிற்சி
மடங்குதல் நவிற்சி தன்மை நவிற்சி
நிகழ்வின் நவிற்சி வீறுகோள் மிகுதி
நவிற்சி பிரிநிலை நவிற்சி விலக்கே
விதியே ஏது எனநூறு அணியே'. – சந்தி. 3

18

தன்மையணி - இலக்கணமும், நிலைக்களமும்

638. அவற்றுள்,

எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்
சொல்முறை தொடுப்பது தன்மை அதுதான்
பொருள்குணம் சாதி தொழிலொடு புலனும்.

இது நிறுத்த முறையானே தன்மையது பொது இலக்கணமும் அது தோன்றும் நிலைக்களம் இத்துணைத்து என்பதும் கூறுகின்றது.

இ-ள் : முற்கூறிய முப்பத்தைந்தனுள் நால்வகைப் பட்ட பொருளும் உண்மைக்கூறுபாட்டான் விளக்கும் சொல் முறையால் பாடப்படுவது தன்மை என்னும் அலங்காரம். அது பொருள் முதலிய நான்கும் நிலைக்களமாகத் தோன்றும் என்றவாறு.

தன்மை எனினும் சொல்நடை எனினும் ஒக்கும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 29 – 30

'திரப்பியம் சாதிதொழில் குணமாந் தன்மை' – *வீ*. 152

'வழுவா மரபினெப் பொருளையும் விகாரம்
தழுவா நடைபெறப் புணர்ப்பது தன்மை' – *மா*. 88

'அதுவே,
ஒண்பொருள் மக்கள் உயிர்உள அஃறிணை
சினைவினை பண்புஇடம் எனவும் செறியும்' ,, 89

'அவற்றுள்,
பொருளியல்பு ஆண்பெண் எனஇரு புலப்படும்' ,, 90

'அரும்பெறல் மக்கட் டன்மையும் அற்றே' ,, 91

'தன்மை அணியே தன்பொருட் குரிய
வன்மை பலவும் வழுவாது உரைத்தலே' – *தொ. வி*. 327

'எவ்வகைப் பொருளும் எடுத்ததன் இயல்பை
அறைவது தன்மையாம் ஆயுங் காலே' – *மு. வீ. பொ*. 1

'குணம்பொருள் தொழில்குலத் தொடுபுலப் படுமே' ,, 2

'மேவிய சாதி வினைகள தியற்கைத்
தன்மை உரைப்பது தன்மை நவிற்சி' – *ச*. 119

பொருள் தன்மை வருமாறு :

'நீல மணிமிடற்றன், நீண்ட சடைமுடியன்,
நூல்அணிந்த மார்பன், நுதல்விழியன் — தோல்உடையன்,
கைம்மான் மறியன், கனல்மழுவன், கச்சாலை
எம்மான், இமையோர்க்கு இறை '

என வரும்.

[திருக்கச்சாலை என்னும் பதியில் உகந்தருளியிருக்கும் எம்பெருமான் நீலகண்டன்; சடையன்; பூணூல் அணிந்த மார்பினன், நெற்றிக்கண்ணன், மான் குட்டியையும் மழுவையும் கையில் ஏந்தியவன். அவனே தேவருக்கும் இறைவன் ஆவான் – என்ற இப்பாடலில், சிவபெருமான் என்ற பொருளின் தன்மை உள்ளவாறு தெளிவாகக் கூறப்பட்டிருப்பதால், இப்பாடல் பொருள் தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்.]

குணத்தன்மை வருமாறு :

'உள்ளம் குளிர, உரோமம் சிலிர்த்து,உரையும்
தள்ள,விழி நீர்அரும்பத் தன்மறந்தாள் ; — புள்அலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடம்செய்
பூந்தா மரைதொழுத பொன் '

என வரும்.

[தில்லையம்பதியில் நடனம் செய்யும் பெருமானுடைய திருவடித் தாமரைகளைத் தொழுத தலைவி மனம் குளிர்ந்து மயிர்க்கூச்செறிந்து சொற்கள் தடுமாறிக் கண்ணீர் அரும்பித் தன்னை மறந்து விட்டாள் – என்ற இப்பாடலில், உள்ளம் குளிர்தல், உரோமம் சிலிர்த்தல், சொற்கள் தடுமாறுதல், கண்ணீர் அரும்பல், தம்மை மறத்தல் என்ற அடியார்தம் பண்புகள் உள்ளவாறு கூறப்படுவதன்கண் குணத்தன்மை அணி கொள்ளப்படும்.]

சாதித்தன்மை வருமாறு :

'பத்தித்த அகட்ட, கறைமிடற்ற, பைவிரியும்
துத்திக் கவைநாத் துளைஎயிற்ற ; — மெய்த்தவத்தோர்
ஆகத்தான், அம்பலத்தான், ஆரா அமுதுஅணங்கின்
பாகத்தான், சாத்தும் பணி'

என வரும்.

[தவத்தோர் மனமாகிய உட்புறத்தும் அம்பலமாகிய புறத்திடத்தும் கலந்திருக்கும் பார்வதி பாகனாகிய சிவபெருமான் சூடும் பாம்புகள், கோடுகள் பொருந்திய வயிற்றை உடையன ; கரிய கழுத்தினை உடையன ; படத்தின்கண் புள்ளிகளை உடையன ; பிளப்பான நாவினை உடையன ; உட்டுளை உடைய பற்களை உடையன – என்ற இப்பாடலில், பத்தித்த அகடு, கறை மிடறு, துத்தி உடைய படம், கவை நா, துளை எயிறு என்பனவற்றைப் பெற்றிருக்கும் பாம்பினது சாதித்தன்மை விளக்கி உரைக்கப்பட்டவாறு.]

தொழில்தன்மை வருமாறு :

'சூழ்ந்து, முரன்று,அணவி, வாசம் துதைந்துஆடித்
தாழ்ந்து, மதுநுகர்ந்து, தாதுஅருந்தும் ; — வீழ்ந்துஅவிழ்ந்த
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு'

என வரும்.

[பாசம் நீங்கிய அடியார்களை விட்டு நீங்காத சிவபெருமானுடைய கொன்றைப் பூமாலையை நீங்காத வண்டு, அம்மாலையையே சுற்றிக்கொண்டு ஒலி எழுப்பி நெருங்கிச்சென்று மணத்தைச் செறிந்து பூவினுள் தாழ்ந்து தேனை உண்டு மகரந்தத்தைத் தின்னும் – என்ற இப்பாடலில், வண்டின் தொழில்களாகிய சூழ்தல், முரலுதல், அணவுதல், வாசத்தில் துதைந்து ஆடுதல், தாழ்தல், மது நுகர்தல், தாது அருந்துதல் என்பன விளக்கிக் கூறப்பட்டவாறு.]

உவமையணி - பொதுவியல்பு

639. பண்பும் தொழிலும் பயனும்என்று இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்து
ஒப்புமை தோன்றச் செப்பின் அதுவே
உவமையாம் அதன் திறம் உணர்ந்தனர்கொளலே.

உவமை கூறுவனவற்றுள் இஃது அதன் பொது இயல்பு கூறுகின்றது.

இ-ள்: பண்பு முதலிய மூன்றும் காரணமாக ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்புமை புலப்படப் பாடின் அஃது உவமையாம். அதன் கூறுபாடுகள் எல்லாம் உவமை ஒன்றனையே விரித்துக்கூறும் தொல்காப்பியம் முதலிய நூல்களான் அறிந்து கொள்க என்றவாறு.

**'வெளிப்படை உவமம் வினைபயன் மெய்உரு
வெளிப்பட நின்று விளங்குவது ஆகும்'.** – இ. வி. 587

என அகத்திணையியலுள் நான்கு எனக் கூறி, ஈண்டு மூன்று என்றல் மலைவாம் பிறஎனின், மெய்யும் உருவும் பண்பினுள் அடங்குதலின், அடக்கித் தொகுத்துக் கூறுதலான் ஆகாது என்க.

[மெய் என்பது வடிவு; உரு என்பது நிறம். மெய் கட்புலனுதலொடு ஊற்றுணர்வுக்கும் உரியது. உரு கட்புலன் ஆதல் ஒன்றுமே உடையது. தலைவன் பகற்குறிக்கண் தலைவியின் உருவினைக் காண்டலும் வடிவினைத் தைவருதலும் கூடும். இரவுக் குறிக்கண் உருவினைக் காண்டல் இயலாது; வடிவினையே தொட்டுப்பயிலுதல் கூடும். இவ்வேறுபாடு நோக்கி, வடிவும் நிறமும் தொல்காப்பியத்தில் வேறாகக் கூறப்பட்டன. ஆனல் பின்னூலார் இவ்விரண்டினையும் பண்பு என்ற ஒன்றாக அடக்கிக் கூறுவாராயினர்.]

பண்பு உவமை

'பவளத்து அன்ன மேனி' – *அகநா. கடவுள் வாழ்த்து*

'வேய்புரை பணைத் தோள்' – *அகநா. 1*

**'தெம்முனை இடத்தின் சேயகொல்
அம்மா அரிவைஅவர் சென்ற நாடே'**

எனவும்,

[பவளத்தின் நிறம் ஈண்டு மேனிக்கு உவமை;

மூங்கிலின் வடிவு தோளுக்கு உவமை.

தலைவன் பண்டு போரிடற்குச் சென்ற தூரம், இப்பொழுது பொருள் தேடச் சென்ற தூரத்துக்கு உவமை ஆதலின் இதுவும் வடிவுபற்றிய உவமையாய்ப் பண்பினுள் அடக்கப்பட்டது.

இத்தகையனவற்றைப் பேராசிரியர் **'வினைபயன்'** *(தொ. பொ. 276) என்ற நூற்பாவின்* **'வகைபட வந்த'** *என்ற மிகையால் உவம வகைகளுக்குள் அடக்கிக் கூறியுள்ளார்.]*

தொழில் உவமை

**'களிற்றுஇரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்துஇயங்கு மரபின் வயப்புலி போல'** – *அகநா. 22*

எனவும்,

[களிறாகிய இரையைத் தவறாமல் கொள்ளும் பொருட்டுப் பார்வையை ஒதுக்கிப் பதுங்கிச் செல்லும் புலியினைப் போலத் தலைவியை இரவுக்குறிக்கண் காவலர் அறியாவகை வந்து தவறாமல் அடைவதற்குத் தலைவன் ஒதுங்கி வருகின்றான் என்பது-தலைவியைத் தவறாது அடைதற்கே தலைவன் பதுங்கி வருகின்றான்; பிறருக்கு அஞ்சி ஒதுங்கி வருகின்றான் அல்லன். ஒதுங்கி வருதல் அவன் பண்பு அன்று; இரவுக்குறிக்கண் அவன் கொள்ளும் தொழிலே. ஆதலின் தலைவன் தொழிலுக்குப் பதுங்கித் தவறாது இரைகோடற்கு வரும் புலியின் தொழில் உவமையாயிற்று.]

பயன் உவமை

'மாரி அன்ன வண்கைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மோ' – புறநா. 133

எனவும் வரும்.

[*கார்மேகத்தை ஒத்த கொடைத்தன்மையை உடைய ஆய் வள்ளலைக் காணவருக – என்ற இத்தொடரில், மாரியால் விளையும் பயனும், வண்கையால் விளையும் பயனும் ஒத்தலின் மாரிவண்கை என்பது பய உவமையாயிற்று.*]

'என இவற்றின்' எனப் பொதுப்படக் கூறிய அதனால் பண்பு முதலியனவே அன்றிச் சொற்பொதுமை காரணமாகவும் வரும். அது சிலேடை உவமை என முன்னர்க் கூறப்படும்.

இன்னும் அவ்விலேசானே பண்பு முதலிய ஒவ்வொன்றுமே அன்றி,

'கான யானை கைவிடு பசுங்கழை
மீன்எறி தூண்டிலின் நிவக்கும்' – குறுந். 54

எனப் பண்பும் தொழிலும்,

'காந்தள், அணிமலர் நறுந்தாது ஊதும் தும்பி
கைஆடு வட்டின் தோன்றும்' – அகநா. 108

எனத்தொழிலும் வடிவும் வண்ணமும் விரவியும் வருதல் கொள்க.

'விரவியும் வரூஉம் மரபின என்ப' – தொ. பொ. 277

என்பது ஓத்து ஆகலான். இன்னும் அதனானே,

'அடைமறை ஆயிதழ்ப் போதுபோல் கொண்ட
குடைநிழல் தோன்றும்நின் செம்மல்' – கலி. 84

எனப் பலபொருள்விரவி, அடையும் போதும் குடைக்கும்

புதல்வற்கும் வடிவான் உவமை ஆயினும் தோற்றத் திற்கு அவை இரண்டும் உவமையாய் ஒருங்கு விரவி வருதலும், 'தேன்மொழி' எனத் தேனின்கண் உளதாகிய நா இனிமையும் மொழியின்கண் உளதாகிய செவி இனிமையும் விரவி உவமித்தலும்,

'புறம்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
மூக்கின் கரியார் உடைத்து' – குறள் 277

எனவும்,

'கூழின் மலிமனம் போன்றுஇரு ளாநின்ற கோகிலமே'
– திருக்கோவை 322

எனவும், பொறியும் புலனும் வேருயவற்றையும் விரவி உவமித்தலும் இன்னோரன்ன பிறவும் கொள்க.

[யானையால் விடப்பட்ட பச்சை மூங்கில் வளைவு நீங்கி மீண்டும் நிமிர்வதற்கு, மீன் பிடிக்கும் தூண்டில் உயரத் தூக்கப் படுவதனை உவமையாகக் கூறும் இடத்து, வடிவும் தொழிலும் உவமையாக அமைந்திருக்கின்றன. காந்தட் பூவின் மகரந்தத்தை அதன்கண் ஊதும் வண்டு, கையால் மேல் எறிந்து விளையாடப்படும் வட்டுக்காயைப் போலக் காணப்படும் என்ற தொடரில், காந்தட் பூவின் நிறத்தினையும் வடிவினையும் ஒப்பது கை; வண்டின் நிறத்தினையும் வடிவினையும் ஒப்பது வட்டுக்காய்; வண்டுமேல் நோக்கிச் சென்று காந்தட் பூவில் அமரும் தொழிலை ஒப்பது மேற்சென்று வட்டுக்காய் கையை வந்து அடைவது. ஆகவே இப்பகுதியில் காந்தளை ஊதும் தும்பிக்குக் கையால் ஆடப்படும் வட்டு, நிறம் வடிவு தொழில் என்ற மூன்றும் பற்றி உவமையாகிறது.

உவமைக்கு வினை பயன் மெய் உரு என்ற நான்கனுள் ஒன்றே நிலைக்களம் ஆதல்வேண்டும் என்ற வரையறை இன்று. அவற்றுள் இரண்டும் மூன்றும் நிலைக்களமாக வருதலும் கூடும்.

'இலையால் மறைக்கப்பட்ட தாமரை மொட்டுப்போலக் குடை நிழலில் வரும் புதல்வன் காணப்படுகிறான்' என்ற தொடரில் இலை குடைக்கும், தாமரைப்போது சிறுவனுக்கும் தனித்தனி உவமை ஆதலே அன்றி, இலைமறை போது குடைமறை சிறுவனுக்கு ஒருங்கு வந்து உவமையாதலும் காண்க.

தேனில்உள்ள நா இனிமை, மொழியிலுள்ள செவி இனிமைக்கு உவமை.

குன்றியின் செந்நிறம் புறத்தில் காணப்படும் நேர்மைக்கு உவமை; குன்றி மூக்கின் கருமை அகத்துக் காணப்படும் வஞ்சனைக்கு உவமை.

குயிலின் கரு நிறத்துக்கு நற்செயல்களில் ஈடுபாடின்றி உணவு உண்பதிலேயே கருத்தைச் செலவிட்டு வாழ்நாளைக் கடத்தச் செய்யும் இருண்ட மனம் உவமையாகும்.]

'செவ்வான் அன்ன மேனி' – *அகநா. கடவுள் வாழ்த்து*

என ஒருபொருளோடு ஒருபொருளும்,

'அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வைஎயிறு'

– *அகநா. கடவுள் வாழ்த்து*

என ஒருபொருளோடு பலபொருளும்,

'சுறவுஇனத் தன்ன வாளோர் மொய்ப்ப' – *புறநா.* 13

எனப் பல பொருளோடு பலபொருளும்,

'பெரும்பெயர்க் கரிகால் முன்னிலை செல்லாப்
பீடுஇல் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடைநீ எமக்கே' – *அகநா.* 125

எனப் பலபொருளோடு ஒரு பொருளும் இயைய வைத்தலாம் என்று உணர்க.

[வானம் என்ற ஒரு பொருள் பேனி என்ற ஒரு பொருளுக்கு உவமை.

பிறை என்ற ஒருபொருள் பற்கள் என்ற பல பொருளுக்கு உவமையாகின்றது.

சுறுமீன் கூட்டம் என்ற பலபொருட்டொகுதி படை ஏந்திய வீரர் குழாம் ஆகிய பல பொருட்டொகுதிக்கு உவமை.

பெரும் புகழுடைய கரிகாலனை எதிர்த்து நிற்றல் ஆற்றாது வெண்ணிப் பறந்தலையில் தம் பெருமையை இழந்து தோற்றோடிய பகை மன்னர்கள், தலைவன் வந்தவுடன் செயலற்று ஓடப் போகின்ற வாடையாகிய ஒரு பொருளுக்கு உவமை ஆகின்றனர்.]

'மயில் தோகை போலும் கூந்தல்'

என்பதன்றிக்

'காக்கைச் சிறகு அன்ன கருமயிர்'

எனவும்,

'புலி போலப் பாய்ந்தான்'

என்னாது,

'பூனை போலப் பாய்ந்தான்'

எனவும் யாதானும் ஒரு முகத்தால் கூறற்க;

'உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்' தொ. பொ. 283

என்ப ஆகலின். அவ்வுவமம் கேட்போர் உள்ளம் கொண்டு விளங்கத் தோன்றுவதே ஆதல் வேண்டும் என்பார் 'ஒப்புமை தோன்ற' என்றார். இங்ஙனம் செப்பின் அஃது உவமை எனவே, 'பவளம் போலும் செய்யவாய்' என்னும் அத்தொடர்ச்சொல் முழுவதூஉம் உவமையாம் என்பதாயிற்று. ஆயினும், பவளமும் வாயும் ஒத்த பண்பினவேனும் ஏற்ற இழிபுகளால் வாயில் பவளம் சிறந்தமையானும்,

'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை' – தொல். பொ. 278

என்ப ஆகலானும் பவளம் உவமை எனவும், வாய்

பொருள் எனவும், செம்மை அவ்விரண்டனையும் புணர்த் தற்கு ஏதுவாகிய பண்பு எனவும், போலும் என்பது அவ்வணியைப் புலப்படுத்துவதோர் உருபு எனவும் வேறு வேறு கூறுபடுத்து உணர்க. பிறவும் அன்ன. அதன் திறன் உணர்த்தலாவது,

'சிறப்பே நலனே காதல் வலியோடு
அவைநாற் பண்பும் நிலைக்களம் என்ப' – தொல். பொ. 279

எனவும்,

'கிழக்கிடு பொருளோடு ஐந்தும் ஆகும்' – தொல். பொ. 280

எனவும் கூறலின்,

'முரசுமுழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயன்உடை எழாஅல்
கோடியர் தலைவ' – பொருந. 54–57

எனச் சிறப்புப் பற்றியும்,

'ஓவத்து அன்ன இடனுடை வரைப்பின்' – புறநா. 251

என நலன் பற்றியும்,

'கண்போல்வான் ஒருவன் உளன்'

எனக் காதல் பற்றியும்,

'அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன்' – பட்டின. 298–89

என வலி பற்றியும்,

'அரவுநுங்கு மதியின் நுதல்ஒளி கரப்ப'

என ஒரு பொருளினது இழிபு கூறுவான் உவமத்தான் இழிபு தோன்றுவிக்கும் ஆதலின் கீழ்ப்படுக்கப்படும் பொருள்பற்றியும் உவமம் பிறத்தலின் இவை ஐந்தும் பண்பு முதலிய மூன்று உவமைக்கும் நிலைக்களமாம் எனவும்,

[உவமையாகும் பொருள் தொன்று தொட்டுச் சான்றோர் நடையில் பயின்று வருவதாக இருத்தல் வேண்டும். உபமானத் தினும் உபமேயம் இழிந்ததாக இருத்தல் வேண்டும் ஆதலில் ஒவ்வொரு திறத்திலும் உயர்ந்த பொருளே உபமானமாகக் கூறப்படல் வேண்டும்.

சேர பாண்டிய சோழராகிய மூவரும் கூடி அரச அவையில் இருக்கும் தோற்றம் சிறந்து காணப்படுவது போலக் கூத்து, பாட்டு, கருவிஇசை மூன்றும் இயைந்து சிறக்கத் தோன்றும் என்பது சிறப்புப்பற்றி வந்த உவமை.

'ஓவியம் போலச் சிறந்த இடம்' – என்ற தொடரில் நலன் (அழகு) பற்றி உவமை கூறப்பட்டது.

ஒருவன் கண் போலச் சிறந்தான் – என்ற தொடரில் காதல் பற்றி உவமை கூறப்பட்டது. காதலாவது சிறப்பும் நலனும் இல்வழியும் இட்டுரைப்பதாம்.

சிங்கத்தைப் போன்று பகைவருக்குத் துன்பம் தரும் வலிமையினை உடைய திருமாவளவன் – என்ற தொடரில் வலிமை பற்றி உவமை கூறப்பட்டது.

பாம்பால் மறைக்கப்பட்ட சந்திரனைப் போலப் பசலையான் நெற்றி ஒளி மறைக்கப்பட்டது என்ற தொடரில் – பொலிவிழந்த நெற்றிக்குப் பாம்பினால் ஒளி இழந்த மதியான கீழ்ப்படுக்கப்பட்ட பொருள் உவமையாயிற்று.

பண்பு தொழில் பயன் என்ற மூவகை உவமையும் தோன்றுவதற்குச் சிறப்பு நலன் காதல் வலி கிழக்கிடுபொருள் என்ற ஐந்தும் நிலைக்களமாகும் என்பதாம்.]

'உய்த்துணர்வகைத்து' எனப்பட்ட உவமப்போலி ஆகிய உள்ளுறைஉவமமும் ஈண்டே வெளிப்படை

உவமத்திற்கு உரிய விதியே பெறும் எனவும், இன்னோ ரன்ன பிற இலக்கணமும் உவம இயலில் கூறியவாறே உணர்தலும்,

[உள்ளுறை உவமத்தில் உபமானம் மட்டும் கூறப்படும். உபமேயம் உய்த்துணர்வகைத்தாய் அமையும். ஆதலின் உள்ளுறை உவமத்தை உவமப்போலி என்றும் வழங்குப.

'உவமப் போலி ஐந்தென மொழிப' - தொல். பொ. 299

'தவலருஞ் சிறப்பின்அத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வருஉம் திறத்த என்ப' ,, 300

என உவமப் போலியைத் தொல்காப்பியனர் ஐந்து வகைப் படுத்துவர். ஏனை உவமத்துக்கு இல்லாத பிறப்பு என்ற வகை உள்ளுறை உவமத்துக்குக் கொள்ளப்பட்டது. அவ்வுள்ளுறை கூறுதற்கு உரியார் யாவர் என்பதும், அவ்வுள்ளுறை சிறக்கும் திணைகளும், சிறவாத திணைகளும் தொல்காப்பிய உவமவியற்கண் கூறப்பட்டுள்ளன. உள்ளுறை உவமம் என்ற தலைப்பில் அவற்றைக் காண்க.]

'பரல்பகை உழந்த நோயொடு சிவணி
மரல்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்' – பொருந. 44, 45

என இடத்திற்கு ஏற்ற உவமையும்,

'நிழல் கோபம் மல்க'

எனக் காலத்திற்கு ஏற்ற உவமையும்,

'கடலும் மலையும் போலக் கரியோய்'

எனப் பொருளுக்கு ஏற்ற உவமையும்,

'புலிநா அன்ன புல்இதழ்த் தாமரை'

எனப் பண்பிற்கு ஏற்ற உவமையும்,

'சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்றுஇதழ் அலரின் நிரைகண் டன்ன
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோர்' - புறநா. 27

எனவும்,

'விலங்கொடு மக்கள் அனையர்' – குறள் 410

எனவும் சாதிக்கு ஏற்ற உவமையும்,

செம்பருத்தியும் கரவீரமும் கூறுது, 'கயிரவம் போலும் செவ்வாய்' 'பவளம் போலும் செவ்வாய்' எனக்கூறும் மரபிற்கு ஏற்ற உவமையும் பிறவாறும் உணர்தலும், பிறவும் ஆம்.

உவமை எனினும், உவமானம் எனினும், பொருள் எனினும் உவமேயம் எனினும் ஒக்கும். 20

[பாலை நிலத்தில் செல்லும் பாடினியின் கால்களில் ஏற்பட்ட கொப்புளங்களுக்கு அந்நிலத்தில் உள்ள மரல் என்ற செடியில் பழுக்கும் பழங்களை உவமை கூறியது இடத்திற்கு ஏற்ற உவமையாம்.

கார் காலத்தில் தோன்றும் இந்திர கோபப் பூச்சிகளை நெருப்பிற்கு ஒப்பிட்டுள்ளமை காலத்திற்கு ஏற்ற உவமையாம்.

எல்லையிட முடியாத பரம்பொருளின் கரிய நிறத்திற்குக் கடலின் கரிய நிறத்தையும் மலையின் கரிய நிறத்தையும் உவமை கூறியது பொருளுக்கு ஏற்ற உவமையாம்.

சேற்றில் வளரும் தாமரையாகிய நூறு இதழ்களை உடைய பூக்களின் வரிசைபோல வேறுபாடறியாத மேம்பட்ட குடும்பத்தில் பிறந்து சிறப்புற்றிருப்பவர் என்ற தொடரில், மேம்பட்ட குடிப்பிறந்தோருக்கு மேம்பட்ட தாமரை மலர்கள் சாதிக்கு ஏற்ற உவமையாகும்.

கற்றோருக்கு மக்களும் கல்லாருக்கு விலங்கும் ஏற்ற இழிவு கருதிய சாதிக்கு ஏற்ற உவமைகளாம்.

'காக்கைச் சிறகு அன்ன கருமயிர்'

'செம்பருத்தி போன்ற செவ்வாய்'

'கரவீரம் போன்ற செவ்வாய்'

என நிறம் பற்றி உவமை கூறுதல் மரபுக்கு ஏற்றதன்று ஆதலின், மரபு பற்றி வழுவாம் ஆதலின் அங்ஙனம் கூறாது,

'மயில் தோகை போலும் கூந்தல்'

'கயிரவம் போலும் செவ்வாய்'

'பவளம் போலும் செவ்வாய்'

என்று கூறுவதே மரபுக்கு ஏற்ற உவமையாம்;

'உவமப் பொருளை உணருங் காலை
மரீஇய மரபின் வழக்கொடு வருமே' – *தொ. பொ.* 290

என்பது ஒத்து ஆகலான்.]

ஒத்த நூற்பாக்கள்

'வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபட வந்த உவமத் தோற்றம்'. – *தொல். பொ.* 276

'விரவியும் வரூஉம் மரபின என்ப'. – 277

'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை'. – 278

'சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப'. – 279

'கிழக்கிடு பொருளோடு ஐந்தும் ஆகும்'. – 280

'முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய'. – 281

'சுட்டிக் கூறா உவமம் ஆயின்
பொருள்எதிர் புணர்த்துப் புணர்த்தனர் கொளலே'. – 282

'உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்'. – 283

'பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின்அஃது உவமம் ஆகும்'. – 284

'பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்
குறிப்பின் வருஉம் நெறிப்பாடு உடைய'. – 285

'பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழிமருங்கு அறியத் தோன்றும் என்ப'. – 294

'உவமப் பொருளின் உற்றது உணரும்
தெளிமருங்கு உளவே திறத்திய லான'. – 295

'உவமப் பொருளை உணருங் காலை
மரீஇய மரபின் வழக்கொடு வருமே'. – 296

'இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே' – 297

'வேறுபட வந்த உவமத் தோற்றம்
கூறிய மருங்கின் கொள்வழிக் கொளாஅல்'. – 307

'ஓரீஇக் கூறலும் மரீஇய பண்பே'. – 308

'உவமத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான'. – 309

'தடுமாறு உவமம் கடிவரை இன்றே'. – 310

'அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே'. – 311

'நிரல்நிறுத்து அமைத்த நிரல்நிறை சுண்ணம்
வரைநிலை வைத்த மூன்றலங் கடையே'. – 312

'உவமம்எனப் படுவது அவம்அற விரிப்பின்
புகழே பழிப்பே நன்மைஎன்று இன்ன
நிகழும் ஒப்புமை நேர்ந்தன முறையே'. – வீ. 96 உரை மே.

அவைதாம்,

'கண்ணே செவியே மூக்கே நாவே
மெய்யே மனமே விளம்பின ஆறினும்
ஐயம் இன்றி அறுமூன் றுமே'. ,,

அவற்றுள்,

'வடிவே வண்ணம் மொழிதன் மையென
நொடிவ கண்ணின் நோக்கிய ஒப்பே'. -வீ. 96 உரை மே.

'எழுத்தியல் ஒலியும் எழுத்தில் ஒலியும்என
விழுத்தகு செவியின் வேண்டுஒப்பு இரண்டே' ,,

'இனிய நாற்றமும் இன்னு நாற்றமும்
துன்னிய மூக்கினில் தோற்றும் பண்பே'. ,,

'அறுவகைச் சுவையின் நாவின் ஒப்பே'. ,,

'நடுவு நிலைமை தண்மை வெம்மை
அறிவு நிலைமை அன்மை விழுப்பம்
நொப்பமும் அழுக்கும் செருசெருப்பு ஒன்பதும்
ஒழிவரும் பெருமை உடம்பின் ஒப்பே' ,,

'வினையும் பயனும் குலனும் குணனும்
அளவும் நிறனும் எண்ணோடு எழுவகை
பொறியின் ஆட்சியின் நெறியுற நாடலின்
எய்திய வகைஅறிந்து இசைப்பது இயல்பே'. ,,

'மொழிந்த ஏழும் முதலும் சினையும்
பண்பொடு பத்தும் ஐவகை சேர்த்திக்
கொண்டே கூறினர் குறிப்புணர்ந் தோரே'. ,,

'இல்பொருள் கேள்வி துணிவே உவமம்
சொல்லிய நன்மையின் சொல்லும் துணிந்தோர்
கருதப் படுவகை தெரிந்துநனி வெருமை
பொருளும் உறுப்பும் முதலாக் கூறினும்
ஏற்புழி நோக்கி எச்ச மாக
வாய்ப்பக் காட்டுக நூற்பொருள் வழக்கே'. ,,

'அவைதாம்,
பாட்டின் பொருளொடு கூட்டித் தோன்றியும்
பொருவரு வனப்பின் புனைந்துரை யாகியும்
இருவகை இயல்பும் ஏற்ப வருமே'. ,,

'ஒப்பிக்கப் படுவது உவமமும் பொருளும்
ஒப்புடைக் காதல் புகட்சிதன் உயர்பே'. ,,

'அப்பொருள் அதுவாய்க் கிடப்பினும் அதுவே' ,,
- வீ. 96 உரை மே.

'இரண்டு மூன்று முதலாக் குணங்கள்
திரண்டஒப்பு உவமை திருந்த உடைத்தே'. ,,

'முடிக்கப் படுவதும் மொழிவதும் இருகுணம்
அடுக்க வரினே தலைப்பாடு ஒப்பாம்
கிளர்ந்தன உவமை கேட்போர்க்குத் தகும்என
உளங்கொளும் பெற்றியின் உருபுநனி பெற்றுக்
கண்ணுள் ளதுபோல் காட்டுவன் ஆயின்
ஒண்மை உடையோர் உணர்ந்தனர் கொளலே'. ,,

'அவ்வகைத்து அன்றெனின் ஆதனும் பித்தனும்
ஒவ்வா வானே ஒப்பித் தோனே'. ,,

'நோக்கிய ஒப்பினும் ஓரோ நோன்பொருள்
ஆக்கி உரைப்பது அதிசய ஒப்பே'. ,,

'ஐயமும் துணிவும் ஆக ஒப்புமை
செய்யவும் பெறுவர் தெரிந்திசி னோரே'. ,,

எல்லாப் பொருட்கும் எல்லா இயல்பும்
சொல்லார் உவமை ஒருபுடைச் சொல்வர்'. ,,

'உவமைக்கு உவமை வழுஎன மொழிப'. ,,

'நற்பொருள் உவமை தலைமைக்கு ஏற்ப;
தீப்பொருள் நிற்கும் பகைமைக்கும் திகழ்ந்தே' ,,

'அவற்றுள்,
ஈங்குத் தோன்றின ஒப்புமை இதுவெனப்
பாங்குஅறிந்து உரைப்பது பண்பெனப் படுமே' ,,

'உருவ மாயின் எஞ்சக் கிளத்தல்
இல்பொரு ளிடையும் ஏற்பித் துரைப்பர்
பொருளறு கேள்விப் புலமை யோரே'. ,,

'பண்பும் தொழிலும் பயனும்என்று இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை'. - தண்டி. 31
மு. வீ. பொ. 3

'பட்டாங் குரைத்தல் புகழ்தல் பழித்தலில் பண்புபயன்
சிட்டார் தொழில் வடிவாதி உவமை செறிந்துறுப்புத்
தட்டா தியலும் பொருளும் உவமும் சார்பொதுவாய்
முட்டா மலேநிகழ் காரண மும்பெறும் மொய்குழலே'.
– வீ. 158

ஒப்பி லுவமை இழிபுயர் வோடும் உயரிழிவு
துப்பில் சமமே தலைப்பெயல் கூற்றுத் தொகைவிரிவு
தப்பில் உறழ்ந்து வரலோ டொருவழி ஓர்பொருள்மேல்
செப்புச் சினைமுதல் ஒப்பு மறையென்று தேர்ந்தறியே'.
– வீ. 159

'உவமையின் வகையே உணருங் காலை
வினைபயன் உறுப்புஉரு என்ற நான்கினும்
தமிதமி நிகழ்ந்தும் தம்மின் விரவியும்
காதல் சிறப்பே நலன்வலி யுடன்இழிபு
ஓதிய ஐந்தும் உறுநிலைக் களனு
இருதிணை ஐம்பால் இவற்றொடு மயங்கியும்
முதலொடு சினைகளின் முறைமையில் பிறழ்ந்தும்
முதல்சினை வினைகுணம் இன்றியும் உயர்ந்தும்
பெருமையும் சிறுமையும் பெற்றியில் சிறந்து
எண்மெய்ப் பாட்டின் எழில்பெற மரீஇ
அகத்தினும் புறத்தினும் அமர்தரு நெறித்தாய்
உரனுடை உரவோர் உளங்கொள முதனூல்
வரன்முறை புணர்க்கும் மாண்பிற் றாகும்'. – மா. 92

'அதுவே,
நிறைவினும் குறைவினும் நிகழ்த்துதல் நெறித்தாய்த்
துறைதொறும் பழைமையும் புதுமையும் தோய்ந்து
விரியினும் தொகையினும் விழுமிதின் நடைபெறும்'. - 93

'அவற்றுள்,
முக்கியப் பொருள்திறம் முற்றுதல் நிறைவே'. - 94
ஒன்று தியசில ஒப்பது குறைவே'. - 95

'அவைதாம்,
வெளிப்படை குறிப்பினும் விழுமிதின் நடைபெறும்'.
– மா. 99

'உபமே யத்தியல் உணர்த்திய பின்னர்
உவமப் பொருளியல் உயர்த்தி முடித்தலும்
கவின்அப் பொருட்குஉறின் கடிநிலை இலவே'. - 100

'சிறப்பினும் வருஉம் திறமுமொன் றுளதே'. - 102

'அடையொடு பொருட்குஅடை புணர்க்குமஃ திரட்டை'.
- 103

'உவமையும் உருபும் தொடர்வழிப் பிறிதுமொன்று
உவமேயப் பொருட்கடை புணர்ப்ப தும்முள'. - 104

'மரபினும் வருவதோர் மரபுடைத் தென்ப'. - 105

'ஒத்தது வென்றதென்று ஒருபொருட்கு உவமை
வைத்தன வாயொரு தொடர்பினும் வருமே'. - 106

'ஏது நுதலிய முதுமொழி யினும்வரும்'. - 107

'பிசியினும் புலப்படும் பெற்றிய தாகும்'. - 108

'முக்கியப் பொருட்குமுக் கியப்பொருள் உவமை
புணர்ப்பது முதன்மைப் புலனெறி வழக்கே'. - 109

'உவமை என்பது உரிக்குணத் தொழிற்பயன்
இவற்றொன்றும் பலவும் இணைந்து தம்முள்
ஒப்புமை தோன்றச் செப்பிய அணியே'. - தொ. வி. 328

'இருபொருட்கு ஒப்புமை இயம்புவது உவமை'. - ச. 4

'அதுவே, விரியே தொகையே எனஇரு வகைத்தாம்'. - 5

'வருணியம் அல்பொருள் வாசகம் தன்மைஇந்
நான்கும் விரிதர நவில்வது விரியே'. - 6

'மொழிந்த வருணியம் முதலிய நான்கனுள்
ஒன்றும் பலவும் தொகுவது தொகை அஃது
எண்வகைத் தாக இயலும் என்ப'. - 7

'அல்பொருள் புனைவுளி யாகஓர் பொருளையே
உரைப்பது பொதுநீங் குவமை என்ப'. - 8

'வாக்கியம் இரண்டனுள் வருணியா வருணியம்
மாறத் தொடுத்தல் புகழ்பொருள் உவமை'. - 9

'இருபொரு ளுக்குத் தகுமொப் புமைவெளி யிட்டிலங்க
வருவது உவமை அணியாம்'. - குவ. 1

உவமை விரி

640. உற்றபண்பு ஆதியின் உவமம் செய்வுழி
மற்றுஅவை வெளிப்பட வகுத்தவிரி உவமமும்[1]
அன்னவை போலாது ஆங்குஅவை கரப்பத்
தொன்நெறிப் புலவர் தொகுத்ததொகை உவமமும்[2]
பொருள்உவமை ஆகியும் உவமை பொருளாகியும்
ஒருதொடர் இடைவரூஉம் இதர விதரமும்[3]
அதனுன் அன்றி அதனை இஃது ஒப்பது
இதனுனும் ஒக்கும் எனும்சமுச் சயமும்[4]
மேதகு உவமையை விலக்கிஅப் பொருளையே
ஓதி முடிக்கும் உண்மை உவமையும்[5]
ஓதிய பொருள்தனக்கு ஒப்பதுஓர் பொருள்பின்
நீதியின் நிறீஇய மறுபொருள் உவமையும்[6]
நினைந்துஉவ மிக்கும் நிலையில்மற்று அதனை
புனைந்து உவமிக்கும் புகழ்உவமை யானும்[7]
சிந்தித்து ஒருவன் சேர்ப்பதுஓர் உவமையை
நிந்தித்து உரைக்கும் நிந்தை உவமையும்[8]
அறிவுஉறின் அதனுக்கு இதுவே ஒப்புஎன
நெறிஉறப் புணர்க்கும் நியம உவமையும்[9]
இதுவே அன்றி இதனுக்கு இதுபோன்று
அதுவும் ஆம்எனும் அநியம உவமையும்[10]
எய்திய உவமையும் இயைந்திடு பொருளும்
ஐயுற விளம்பும் ஐயநிலை உவமையும்[11]
இவ்வியல் அதனல் இதுஅன்று இதுஎனச்
செவ்விதின் தெளிந்த தேற்ற உவமையும்[12]
ஆற்ற உவமை ஆற்றினும் பொருளின்
ஏற்றம்இன்று என்னும் இன்சொல் உவமையும்[13]
ஊறுஇல் உவமேயம் உவமையாய் உலகியல்

வேறுபட மாட்டிய விபரீத உவமையும்[14]
அரும்பொருள் அதனை அதுபோலும் என்ன
விரும்புமென் உளம்எனும் வேட்கை உவமையும்[15]
ஒருபொருள் அதனுக்கு ஒப்பதுஒன்று அன்றிப்
பலபொருள் காட்டும் பலபொருள் உவமையும்[16]
கூறுபடும் உவமையின் கொள்கைபிறிது ஆக
வேறுபடுத்து இசைக்கும் விகார உவமையும்[17]
ஒருபொருள் மீதுஎழு வேட்கையான் மயக்கம்
முறுகுதல் காட்டும் மோக உவமையும்[18]
அவனியில் இல்லா அன்னதுஓர் பொருளை
உவமைசெய்து உரைக்கும் அபூத உவமையும்[19]
சொல்லிய உவமம் தொறும்தொறும் போலி
புல்லப் புணர்க்கும் பலவயின் போலியும்[20]
ஒருதொடர் அதன்கண் உவமைதொறும் இன்றி
ஒருவயின் புணர்க்கும் ஒருவயின் போலியும்[21]
கூடாத அதனைக் கூடுவது ஆக்கிக்
கோடாது உவமைசெய் கூடா உவமையும்[22]
ஒருதலை யாக உவமையை மறுத்துப்
பொருளையே உவமைசெய் பொதுநீங்குவமையும்[23]
ஒருபொருட்கு உவமை ஒருங்குபல வரின்அவை
வருதொடர் பாய்இறூஉம் மாலை உவமையோடு[24]
அற்புதம்[25] சிலேடை[26] அதிசயம்[27] விரோதம்[28]
ஒப்புமைக் கூட்டம்[29] தற்குறிப்பு ஏற்றம்[30]
விலக்கே[31] ஏது[32]என விளம்பிய எட்டும்
உளப்படத் தொகைஇ உரைத்தஎண் ணான்கும்
விளக்கிய உவமையின் விரிஎனப் படுமே.

இஃது உவமைவிரி இத்துணைத்து என்கின்றது.

இ-ள்: மேல் கூறப்பட்ட பண்பு முதலிய மூன்றனும் உவமம் செய்யும் இடத்து அப்பண்பு முதலிய வெளிப்பட வகுத்த விரி உவமை முதலாக மாலை உவமை ஈறாகக் கிடந்த இருபத்து நான்கோடு அற்புதம் முதலாகக் கூறிய எட்டும் கூடத் தொகுத்தலான் இங்ஙனம் கூறப்பட்ட முப்பத்திரண்டும் முன் விளக்கிய உவமை அலங்காரத்தின் விரி எனப்படும் என்றவாறு.

[சந்திராலோகம், குவலயானந்தம் முதலியவற்றில் இவ்வுவமை விரிகளில் பல தனித்தனி அணிகளாகப் பெயரிடப் பட்டுள்ளன. இவ்வுவமைவிரிகளில் பல தொல்காப்பிய உவம வியலில் 'வேறுபட வந்த உவமத் தோற்றம்' (தொ. பொ. 307) என்ற தலைப்பில் அடக்கப்பட்டுள்ளன. இங்குக் கூறப்படாதன சிலவும் முன்னூலையும் இலக்கியங்கள் பலவற்றையும் நோக்கி மாறன் அலங்காரத்தில் பரக்கக் கூறப்பட்டுள்ளன. தண்டியலங்காரம், வீரசோழியம், மாறன்அலங்காரம் போல உவமை விரியின் பெயர்களைத் தொகுத்ததனோடு அமையாது, ஒவ்வொன்றன் இலக்கணத்தையும் இவ்வாசிரியர் நூற்பாவிலேயே குறிப்பிட் டுள்ளமை பெரிதும் பயன் தருவதாகும்.]

ஒத்த நூற்பாக்கள்

'விரியே தொகையே இதர விதரம்
உரைபெறு சமுச்சயம் உண்மை மறுபொருள்
புகழ்தல் நிந்தை நியமம் அநியமம்
ஐயம் தெரிதரு தேற்றம் இன்சொல்
எய்திய விபரீதம் இயம்புதல் வேட்கை
பலபொருள் விகாரம் மோகம் அபூதம்
பலவயின் போலி ஒருவயின் போலி
கூடா உவமை பொதுநீங்கு உவமை
மாலை என்னும் பாலது ஆகும்', — தண்டி. 32

'அற்புதம் சிலேடை அதிசயம் விரோதம்
ஒப்புமைக் கூட்டம் தற்குறிப் பேற்றம்
விலக்கே ஏதுஎன வேண்டவும் படுமே'. – தண்டி. 33

'புகழ்ச்சி பழிப்பு விரோதம் கருத்திசை உண்மைஐயம்
இகழ்ச்சி எதிர்பொருள் அற்புதம் நோக்கு இதரேதரந்தான்
நிசழ்ச்சி மிகைபண்பு உயர்வு நியமம் அநியமமும்
திசழ்ச்சிமலி தடைதெற்றுச் சிலேடை துணிவென்பரே'.
– வீ. 156

'உம்மை பொருளினொ டொப்புமைக் கூட்டம் அபூதத்தொடு
செம்மை திகழ்வாக் கியப்பொருள் கோவைதிண் காரணமும்
வெம்மை மயக்கம் பலவியல் விக்கிரி யத்தினொடு
மெய்ம்மையில் சந்தா னமுமென் றுவமை விகற்பிப்பரே'.
– வீ. 157

'பலபொருள் ஒருபொருள் ஒருவயின் பலவயின்
போலி இல்பொருள் மறுபொருள் விபரீதம்
மருட்கை தலைதடு மாற்றம் விகாரம்
தடுமாற் றம்மே சமுச்சயம் இன்சொல்
நியமம் அநியமம் புகழ்நிந்தை உவமம்
மோகம் அவயவம் அவயவி முற்றே
ஏக மாலைஅந் தாதிபொது நீங்கலென்று
ஆக ஐயைந் தாமதன் விரியே'. – மா. 101

'உருவகம் நிரல்நிறை அதிசயம் சிலேடை
தற்குணம் தற்குறிப்பு அற்புதம் விரோதம்
ஒப்புமைக் கூட்டம் ஏது விலக்குடன்
மெய்ப்பட விரவும் மேதக வுடைத்தே'. – மா. 110

'இவைதத் தமவிலக் கணங்களிற் றிறம்பாது
உவமச் சொற்புணர்ந் திறினஃ துவமை'. – மா. 111

'உவமை விகற்பித் துரைக்குங் காலை
விரியே தொகையே இதரேதரம் விபரீதம்
மறுபொருள் நியமம் ஐயம் இன்சொல்
கூடா உவமை கோத்த மாலை
உண்மை எனஇவை உவமை விரியே', – தொ. வி. 329

விரியுவமை

உற்ற பண்பு ஆதியின் உவமம் செய்வுழி மற்று அவை வெளிப்பட விரித்த விரிஉவமை வருமாறு :

'பால்போலும் இன்சொல் பவளம்போல் செந்துவர்வாய்
சேல்போல் பிறழும் திருநெடுங்கண் – மேலாம்
புயல்போலும் கொடைக்கைப் புனல்நாடன் கொல்லி
அயல்போலும் வாழ்வது அவர் '

என வரும்.

[உபமானம் உபமேயம் உவமைஉருபு பொதுத்தன்மை என்ற நான்கும் வெளிப்பட அமைவது விரிஉவமையாம். கார்மேகம் போன்ற கொடைக்கையை உடைய சோழனின் கொல்லிமலைச் சாரலின்கண் உள்ள தலைவி இன்சொல், செவ்வாய், நெடுங்கண் இவற்றை உடையாள்.

உவமானம்	உபமேயம்	உவமைஉருபு	பொதுத்தன்மை
பால்	*சொல்*	*போலும்*	*இனிமை*
பவளம்	*வாய்*	*போல்*	*செம்மை*
சேல்	*கண்*	*போல்*	*பிறழ்தல்*
புயல்	*கை*	*போலும்*	*கொடை*

என அந்நான்கும் விரித்துக் கூறப்பட்டவாறு காண்க.

'உவமையும் உருபும் ஏதுவும் பொருளும்
தவலருஞ் சிறப்பின் தாம்விரி வனவிரி '. – *மா. அ.* 96

'விழுமிய குணம்முதல் விரிந்து வருவது
விரியாம் என்மனார் மெய்உணர்ந் தோரே '.
– *மு. வீ. பொ. அ.* 94

'வருணியம் அல்பொருள் வாசகம் தன்மைஇந்
நான்கும் விரிதர நவில்வது விரியே '. – *சங்.* 6]

தொகையுவமை

அன்னவை போலாது ஆங்குஅவை கரப்பத் தோன் னெறிப் புலவர் தொகுத்த தொகை உவமை வருமாறு :

'தாமரைப்போல் வாள்முகத்துத் தண்தரளம் போல்முறுவல்
காமரு வேய்புரைதோள் காரிகையீர்! — தேமருவு
பூங்குழலின் வாசப் பொறைசுமந்து நொந்ததோ?
பாங்குஉழலும் தென்றல் பரிசு'

என வரும்.

[உபமானம் உபமேயம் உவமைஉருபு பொதுத்தன்மை என்ற நான்கனுள் இறுதிக்கண் உள்ள இரண்டனுள் ஒன்றோ இரண்டுமோ மறைய வருவது தொகை உவமை. தாமரை முகம், முத்த நகை, வேய்த்தோள் இவற்றை உடைய நங்கையீர்! நும் குழலின் நறுமணமாகிய பாரம் தாங்காமல் தென்றல் விரைய உலாவுதல் இயலாது நொந்ததோ — என்று பாங்கிமதி உடம்பாட்டில் இருவரும் உள்வழித் தலைவன் வினவிய இப்பாடலில்,

உபமானம்	உபமேயம்	உவமைஉருபு	பொதுத்தன்மை
தாமரை	*முகம்*	*போல்*	—
தரளம்	*முறுவல்*	*போல்*	—
வேய்	*தோள்*	*புரை*	—

எனப் பொதுத்தன்மை மறைந்திருப்பது காண்க.

உவமஉருபு தொகுதலையும் சொல்லிலக்கணம் நோக்கித் தொகைஉவமை என்றே மாறனலங்காரம் குறிப்பிடும்.

'உரைத்த நான்கினும் ஒன்றிரண்டு இடையன
யாப்பினுள் இடைப்பட்டு எஞ்சலும் தொகையே'.

– *மா. அ.* 97

'ஒப்பென இருபொருள் விதித்திறம் உருபுஇவை
தெரிவுற விரித்துச் செப்புதல் மற்றுத்
தொகைஒப் பாம்குணத் தொழில்பயன் தொகலே'.

– தொ. வி. 330

'அக்குணம் முதலிய அடங்கி வருவது
தொகையாம் எனப்பெயர் சூட்டப் படுமே'. - மு. வீ. பொ. 5

'மொழிந்த வருணியம் முதலிய நான்கினும்
ஒன்றும் பலவும் தொகுவது தொகை அஃது,
எண்வகைத் தாக இயலும் என்ப'. – சங். 7

'வாயும் பொதுமை உவமை உருபுவ மானமுவ
மேயம்ஒன்றும் பலவும் குறைந்தால் தொகை மேவுவமை'.
– குவ. 2]

தான் சுட்டியதனைப் பவளம்போலும் செய்யவாய் என்று விரித்துக்கூறாது பவளவாய் என்று தொகுத்துக் கூறியவழி வன்மையினானும் செல்லுமேனும் செலுத்தாது,

'சுட்டிக் கூறா உவமம் ஆயின்
பொருள்எதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே'.
– தொ. பொ. 282

என்ப ஆகலின் சுட்டியதனோடு புணர்க்கப்படும் என்பது தோன்றத் 'தொன்னெறிப் புலவர் தொகுத்த தொகை உவமம்' என்றார். ஒன்றெனமுடித்தலான் பண்பு முதலியன விரிந்தும் தொக்கும் நின்றாற்போல, உவம உருபுகளும் பவளம் போலும் வாய் என விரிந்தும் பவளவாய் எனத் தொக்கும் வரும் எனக் கொள்க.

[*பொதுத்தன்மையைச் சுட்டிக் கூறாதவழி, உவமை மரபு பற்றியே வழங்கப்படும் ஆதலின், அம்மரபையே பற்றுக் கோடாகக் கொண்டு பொதுத் தன்மையைக் கோடல் வேண்டும். பவளவாய் என்பதன்கண் பவளத்தின் செந்நிறமும் வாயின் செந்நிறமுமே கொள்ளப்படல் வேண்டும். அல்லாக்கால் வல்லென்ற பவளத்திற்கும் மெல்லென்ற இதழுக்கும் ஒப்புமை யாண்டையது என்பர் பேராசிரியர்.* – தொ. பொ. 282

சுட்டிக்கூறா உவமத்தைக் குறிப்புவமை என்னும் மாறன் அலங்காரம். – மா. 99]

இதரேதரவுவமை

பொருள் உவமை ஆகியும் உவமை பொருள் ஆகியும் ஒருதொடர் இடை வருஉம் இதரவிதர உவமை வருமாறு :

> **'களிக்கும் கயல்போலும் நின்கண்;நின் கண்போல்**
> **களிக்கும் கயலும்; கனிவாய்த் — தளிர்க்கொடியே!**
> **தாமரை போல்மலரும் நின்முகம்; நின்முகம்போல்**
> **தாமரையும் செவ்வி தரும்'**

எனவும்,

ஒரே பாடலில் உபமேயத்தை உபமானமாகவும், உபமானத்தை உபமேயமாகவும் இருமுறை மாற்றிக் கூறுவது இதரவிதரமாம். இதரேதரம் என்பது இதரவிதரம் என்று கூறப்பட்டது; சந்திரோதயம் சந்திரவுதயம் எனப்படுவதுபோல. இதரேதரம், அந்நியோந்நியம், தடுமாற்றம் – ஒருபொருளன. இதனைத் தொல்காப்பியனார்,

'தடுமாறு உவமம் கடிவரை இலவே'. – *தொ. பொ.* 310

என்ற நூற்பாவால் குறிப்பிடுவர். இது தடுமாறுவமை என்றும் பெயர் பெறும். (மா. அ. 101) வீரசோழியம் இதனை உறழ்ந்து வரலுவமை என்று பெயரிடும். (வீ. 159)

கயல்போல நின்கண்கள் களிக்கின்றன. நின் கண்கள் போலக் கயலும் களிக்கின்றது. கொடியே! தாமரைபோல நின்முகம் மலர்ந்துள்ளது. நின்முகம் போலத் தாமரையும் மலர்ந்துள்ளது – என்ற பாடலில்,

கயலும் தாமரையும் உலகு அறிந்த உபமானங்களாம்; கண்களும் முகமும் உலகு அறிந்த உபமேயங்களாம். இங்ஙனமிருந்தும்,

'மேதக எதிரெதிர் விளம்பிய பொருளும்
எதிரும் பொருவுதல் இதரே தரமே'. – வீர. உரை. 156

'இதரேதரம் என்ப இருபொருள் மாறலே'. – தொ. வி. 331

'ஒருகால் பொருள்உவமம் ஆகியும் உவமை
ஒருகால் பொருளா கியும்ஒரு தொடர்ச்சி
இடையே போதுவது இதரே தரமே'. – மு. வீ. பொ. 6

'இருபொருளுக்கு உவமானோ வமேயத் தியல்புதனைப்
பரியாய மாக்கின் புகழ்பொருள் ஒப்பணி' – குவ. 8

'வாக்கியம் இரண்டனுள் வருணியா வருணியம்
மாறத் தொடுத்தல் புகழ்பொரு ளுவமை'. – ச. 9

'நின் கண்போல் கயல் களிக்கும்,
நின் முகம்போல் தாமரையும் செவ்விதரும்'

என இப்பாடலில் இரண்டாம் முறையாக உபமேயங்களை உபமானங்களாக மாற்றிக் கூறியமை காண்க. முதலில் பட்டாங்கு கூறிப் பிறகு மாற்றிக் கூறுவது இது. இவ்வாறன்றி உபமேயத்தை உபமானமாக மட்டும் கூறுவது விபரீத உவமை என விளக்கப்படும். இதனைப் புகழ்பொருளுவமையணி என்ற தனி அணியாகச் சந்திராலோகம் குறிப்பிடும். வடநூலார் உபமேயோபமாலங்காரம் என்பர்.]

சமுச்சயவுவமை

அதனன் அன்றி அதனை அஃது ஒப்பது இதனனும் ஒக்கும் என்னும் சமுச்சயம் வருமாறு :

'அளவே வடிவுஒப்பது அன்றியே, பச்சை
இளவேய் நிறத்தானும் ஏய்க்கும்; — துளவுஏய்
கலைக்குமரி போர்துளக்கும் கார்அவுணர் வீரம்
தொலைக்கும்அரி ஏறுஉகைப்பாள் தோள்'

என வரும்.

[ஒன்றனை ஒரு காரணத்தான் மட்டுமன்றிப் பிறிது ஒரு காரணத்தானும் உவமையாக்குவது சமுச்சய உவமையாம். சமுச்சயம் – எச்ச உம்மை. இது உம்மை உவமை எனவும் பெயர் பெறும். (வீர. 157)

போரில் அவுணர் வீரத்தை அழிக்கும் சிங்கத்தை இவர்ந்து செல்பவளும் திருத்துழாய்மாலையை அணிந்திருப்பவளுமாகிய கொற்றவையின் தோள்களை இளைய வேய்கள் அளவானும் வடிவானும் ஒத்தலேயன்றி நிறத்தானும் ஒக்கும் – என்ற இப் பாடலில், பசிய மூங்கில்கள் தோளுக்கு உவமையாதற்கு உரிய பொதுத்தன்மைக்கண் அளவு வடிவோடு நிறமும் என்ற உம்மை யடுத்த சொல்லைப் புணர்த்தமை சமுச்சயமாக அமைந்திருத்தல் காண்க.

'இக்குறி அதனா லன்றிஇத னாலும்
ஒக்கும்என்று இசைப்பது உம்மை உவமை' – வீர. 157 உரை]

உண்மையுவமை

மேதகு உவமையை விலக்கி அப்பொருளையே ஓதி முடிக்கும் உண்மை உவமை வருமாறு :

'தாமரை அன்று ; முகமேஈது ; ஈங்குஇவையும்,
காமரு வண்டுஅல்ல, கருநெடுங்கண் ; — தேமருவு
வல்லியெனின் அல்லள், இவள்,என் மனம்கவரும்
அல்லி மலர்க்கோதை யாள்'

என வரும்.

[உபமானத்தை உபமேயத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அஃது ஒப்புமையாகாமையான் அதனை விடுத்து உபமேயத்தையே குறிப்பிடுவது உண்மை உவமையாம். உவமையை நீக்கும்முன் அதனை ஒப்பிடுதல் நிகழ்ந்தமையின், இதுவும் உவமை வகையுள் ஒன்றாகும். இதனைத் தொல்காப்பியனார்,

'ஓரீஇக் கூறலும் மரீஇய பண்பே' – *தொ. பொ. 308*

என்று குறிப்பிடுவார். இது தாமரை அன்று; முகமே. இவையும் வண்டல்ல; கருநெடுங்கண்களே. இவள் கொடி அல்லள்; என் மனம் கவரும் மாலை சூடிய மங்கையே – என உவமைகள் மறுக்கப் பட்டு உபமேயங்களே உரைக்கப்பட்டமை காண்க.

'பொருளையும் சினையையும் பொருஅன்று என்று
உரையினில் கோடல் உண்மை உவமை' – *வீர. உரை 156*

'உண்மை உவமையாம் உவமை மறுத்தென
நுண்மையின் பொருள்திறம் நுவன்று விளக்கலே'.
– *தொ. வி. 339*

'உவமையைக் கூறி மறுத்தல் பொருளை
உரைத்து முடிப்பஃது உண்மையாம் எனலே'.
– *மு. வி. பொ. 9*

மறுபொருளுவமை

ஓதிய பொருள்தனக்கு ஒப்பது ஓர் பொருள்பின் நீதியின் நிறீஇய மறுபொருள் உவமை வருமாறு :

'அன்னைபோல் எவ்வுயிரும் தாங்கும் அநபாயா!
நின்னையார் ஒப்பார் நிலவேந்தர் – அன்னதே
வாரி புடைசூழ்ந்த வையகத்திற்கு இல்லையால்
சூரியனே போலும் சுடர்'

என வரும்.

[முன்னர் ஒரு பொருளை ஒரு தொடரால் குறிப்பிட்டு இடையே உவமை உருபு புணர்த்துப் பின்னர் ஒப்பான மற்றொரு பொருளை ஒரு தொடரால் குறிப்பிடுவது மறுபொருளுவமை.

அன்னைபோல் உயிர்களைக் காக்கும் அநபாயனுக்கு நிகரான உலக மன்னர் பிறர் இல்லை. அவ்வாறே உலகில் இருள்கடிதற்குச் சூரியனைப் போன்ற சுடர் பிறிது இன்று– என முதல்தொடரில் குறிப்பிடப்பட்ட பொருளுக்கு ஒப்புமையான பொருள் அடுத்த தொடரில் அமைக்கப்பட்டவாறு.

இவ்வணியில் இடையே உள்ள உவமை உருபு இல்லையேல், இஃது எடுத்துக்காட்டுவமையாகும். உபமானமும் உபமேயமும் தனித்தனி வாக்கியங்களாக அமைய, உவமை உருபு வாராமல் இருப்பது எடுத்துக்காட்டுவமை.

(எ-டு.): 'அகர.........உலகு' – குறள் 1]

'அகரம் முதல எழுத்துஎல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு'. – குறள் 1

என்புழி இரண்டுபொருள் வேறுவேறு கூறியதுஅன்றி, அகரம் முதல எழுத்துஎல்லாம் அதுபோல என்றானும், ஆதி பகவன் முதற்றே உலகு அதுபோல என்றானும் ஒன்றாகத் துணியுமாற்றான் உவமையும் பொருளும் நீதியின் நிறுவாமையின் அது வேறுபட வந்த உவமத் தோற்றமாய் இதன்பாற்படும். என்னை?

'வேறுபட வந்த உவமத் தோற்றம்
கூறிய மருங்கின் கொள்வழிக் கொளாஅல்'
– தொல். பொ. 307

என்ப ஆகலின்.

மறுபொருள்உவமை எனினும் எடுத்துக்காட்டு உவமை எனினும் ஒக்கும்.

[மறு பொருளுவமைக்கும் எடுத்துக்காட்டுவமைக்கும் உள்ள வேறுபாடு விளக்கப்பட்டது

'அன்னைபோல்' என்ற பாடலில் அன்னதே என்ற தனிச் சொல் இன்றி அது சவலைவெண்பாவாக அமையின், அஃது எடுத்துக்காட்டுவமையாகும். மேல் கூறப்பட்டுள்ள விளக்கத்தை நோக்க 'மறுபொருள்.........ஒக்கும்' என்ற தொடர் ஏடு எழுதுவோரால் பின்னர்ச் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.]

வீரசோழியத்தில் இது எதிர்பொருளுவமை என்ற பெயரில்,

'இதுபொருள் உவமையின்று இதுபொருள் தனிமையின்
இதுவே நன்றெனின் எதிர்பொருளுவமை'.

– வீர. உரை. 156

என்று குறிக்கப்பட்டுள்ளது.

'மறுபொரு ளாம்பொருள் வந்துஒப்பு உரைத்தலே'.

– தொ. வி. 333

'புகன்றுமுன் வைத்த பொருட்கு நிகர்வதோர்
பொருள்பினும் வைப்பது மறுபொரு ளாகும்'.

– மு. வி. பொ. 8

'ஒருபொருட்கு ஒருபொருள் உவமை யாக
எடுத்துக் காட்டுவது எடுத்துக்காட் டுவமை
ஆகும் என்மனர் அறிந்திசி னோரே'. *– மு. வி. பொ. 36*

புகழுவமை

நினைத்து உவமிக்கும் நிலையின் மற்று அதனைப் புனைந்து உவமிக்கும் புகழ் உவமை வருமாறு :

'இறையோன் சடைமுடிமேல் எந்நாளும் தங்கும்
பிறைஏர் திருநுதலும் பெற்றது ; — அறைகடல்சூழ்
பூவலயம் தாங்கும் அரவின் படம்புரையும்,
பாவை! நின் அல்குல் பரப்பு'

என வரும்.

[உபமானமாகக் கூறப்படும் பொருளுக்கு அடைகள் தந்து அதனை மாத்திரம் புகழ்ந்து கூறுவது புகழ் உவமையாகும். 'சிவபெருமான் சடைமேல் தங்கும் பிறையின் அழகை நுதல் பெற்றுள்ளது. இவ்வுலகைத் தாங்கும் ஆதிசேடனுடைய படத்தை உன் அல்குல் ஒத்திருக்கிறது' – என்ற தலைவன் நயப்புரையில், உபமானமாகிய பிறை – இறையோன் சடைமுடி மேல் எந்நாளும் தங்கும் பிறை எனவும், அரவு-அறைகடல்சூழ் பூவலயம் தாங்கும் அரவு எனவும் புகழப்பட்டிருத்தலின் இது புகழ் உவமையாகும்.

இது புகழ்ச்சி உவமை எனவும் பெயர் பெறும்.

'போதுநற் புகழ்ச்சி பொருளைப் புகழாது
ஏதுவைப் புகழ்தல் என்மனார் புலவர்'. – *வீர. உரை.* 156

'உவமையைப் புகழ்ந்துஉவ மிப்பது புகழே'. – *மு. வீ. பொ.* 9]

நிந்தையுவமை

சிந்தித்து ஒருவன் சேர்ப்பது ஓர் உவமையை நிந்தித்து உரைக்கும் நிந்தை உவமை வருமாறு :

'மறுப்பயின்ற வாள்மதியும், அம்மதிக்குத் தோற்கும்
நிறத்துஅலரும் நேர்ஒக்கும் ஏனும் — சிறப்புடைத்து ;
தில்லைப் பெருமான் அருள்போல், திருமேனி
முல்லைப்பூங் கோதை முகம்'

என வரும்.

[நன்கு ஆராய்ந்து கொள்ளும் உபமானத்தைக் குறைபாடு உடையதாகக் கூறுவது நிந்தை உவமை ஆகும். சிவபெருமான் அருள் போன்ற அழகிய உடல் வனப்பை உடையளாய் முல்லை மாலை சூடிய தலைவியின் முகம், களங்கமுடைய சந்திரனையும் அச்சந்திரனுக்குத் தோற்கும் தாமரையையும் ஒக்கும் என்றாலும் குறைபாடு ஏதும் இன்மையால் அவற்றினும் சிறப்புடைத்து – என்ற இப்பாடலில், உபமானமாகிய மதி – மறுப்பயின்ற வாள் மதியம் எனவும், தாமரை – மதிக்குத் தோற்கும் நிறத்து அலர் எனவும் குறைகூறப்பட்டவாறு காண்க.

இது பழிப்புவமை எனவும் பெயர் பெறும்.

'இழுக்கில் பொருளை உயர்த்தி உவமையைப்
பழிக்கப் படுவது பழிப்பெனப் படுமே'.
– *வீர. உரை.* 156

உவமையைப் பழித்துஉப மிப்பது நிந்தை'. – *மு. வீ. பொ.* 10]

நியமவுவமை

அறிவுறின் அதனுக்கு இதுவே ஒப்புஎன நெறியுறப் புணர்க்கும் நியம உவமை வருமாறு :

'தாதுஒன்று தாமரையே நின்முகம் ஒப்பது; மற்று
யாதுஒன்றும் ஒவ்வாது; இளங்கொடியே! — மீதுஉயர்த்த
சேலே பணியப் புலிஉயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்கு நிகர்'

என வரும்.

[ஒரு பொருளுக்கு மற்று ஒரே பொருளே உவமையாதற்கு ஏற்புடையது என்று வரையறுத்துக் கூறுவது நியமஉவமை. மகரந்தம் பொருந்திய தாமரையேயன்றி, மற்று எதுவும் நின் முகத்துக்கு ஒப்பாகாது. பாண்டியனைப் பணிவித்துப் புலிக் கொடியை உயர்த்திய சோழனுடைய வேலே நின் விழிகளுக்கு நிகர் - என்ற இப்பாடலில், முகத்திற்குத் தாமரையும், விழிகளுக்கு வேலுமே உவமையாகத் தக்கன என்று வரையறை செய்துள்ளமை காண்க.

'வேறுஉரைப் பதுபிழை உவமை இதுவெனத்
தேறிய பொதுவுடைத் திறத்தது நியமம்'. - *வீர. உரை. 156*

'நியமமாம் பிரிநிலை ஏகாரம் வந்தே
இயல்நிகர் ஒன்றுரைத்து ஏனைய நீக்கலே'. - *தொ. வி. 334*

'இதற்குஇஃதே உவமம் என்பது நியமம்' - *மு வீ. பொ. 11*]

அநியமவுவமை

இதுவே அன்றி இதனுக்கு இது போன்று அதுவும் ஆம்எனும் அநியம உவமை வருமாறு :

'கவ்வை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு,
மௌவல் கமழும் குழல்மடவாய்! — செவ்வி
மதுவார் கவிரேநின் வாய்போல்வது; அன்றி,
அதுபோல்வது உண்டேனும் ஆம்'

என வரும்.

[ஒரு பொருளுக்கு ஒன்றனை உபமானமாகக் கூறி அதனோடு அமையாது, அதுபோன்ற பிற பொருள்கள் உளவேல் அவையும் உபமானமாகும் என்று கூறுவது அநியம உவமையாம்.

அலைசூழ்ந்த காவிரி பாயும் சோழநாட்டில் உள்ள முல்லை மணம் கமழும் கூந்தலை உடைய நங்கையே! அழகிதாய்த் தேன் நிறைந்த முள்முருங்கைப்பூவே நின் வாய் நிறத்திற்கு ஒப்பாவது; அதுபோன்ற பொருள் பிறஉளவேனும் உவமை கூறலாம் – என்ற இப்பாடலில், முள்முருங்கையன்றிப் பிறவும் ஒப்பாகலாம் என உவமையை வரையறுக்காது கூறுவது அநியம உவமையாம்.

'உரிய உவமை ஒண்பொருட்கு இதுகீழ்க்குப்
பொருவேறு எனின்ஆம் அநியம உவமை'. – வீர. உரை 156

'நியமித்த உவமையை நீக்கிப் பிறிதொரு
பொருளொடு புணர்ப்பது அநியமம் ஆகும்'. – மு.வீ.பொ. 12]

ஐயநிலையுவமை

எய்திய உவமையும் இயைந்திடு பொருளும் ஐயுற விளம்பும் ஐயநிலை உவமை வருமாறு :

**'தாதுஅளவி வண்டு தடுமாறும் தாமரைகொல்
மாதர் விழிஉலவும் வாள்முகம்கொல் — யாதுஎன்று
இருபால் கவர்வுஉற்று இடைஊசல் ஆடி
ஒருபால் படாதுஎன் உளம்'**

எனவரும். இதனைத்தடுமாறு உவமை என்றும் கூறுப.

[மாறன் அலங்கார ஆசிரியர் இதர விதர உவமையைத் தடுமாறு உவமை என்று குறிப்பிட்டுள்ளார். உபமானம் எது உபமேயம் எது என்று வரையறுக்க இயலாது மனம் ஐயத்தின்பாற்படுவதனை உரைப்பது ஐயநிலை உவமையாம்.

மகரந்தத்தை அளாவி வண்டு தடுமாறிச் சுழன்று கொண்டிருக்கும் தாமரையா? விரும்பத்தக்க விழிகள் உலவிக்கொண்டு

இருக்கும் ஒளி பொருந்திய முகமா? இப்பொருள் உண்மையில் யாது என்று வரையறுக்க இயலாது என்மனம் இரு கூறுபட்டுத் தடுமாற்றமுற்று ஒரு பக்கமும் சாராது உள்ளது – என்ற இப் பாடலில், தாமரையோ முகமோ என்னும் ஐயநிலை தெளியாமை கூறப்பட்டுள்ளது.

இதனை ஐயவணி என்ற தனி அணியாகச் சந்திராலோகம் குறிப்பிடும். வடநூலார் சந்தேகாலங்காரம் என்பர்.

'பொய்யறு பொருளையும் பொருவையும் கருதி
ஐயப் படுவது ஐய உவமை'. – *வீர. உரை.* 156

'ஐயம் கொண்டன இருபொருள் அறைதல்
ஐய உவமை ஆகும் என்ப' – *தொ. வி.* 335

'ஐயுற்று இருமையும் அறைகுவது ஐய
உவமை என்மனார் உணர்ந்திசி னோரே'. – *மு. வீ. பொ.* 13

தேற்றவுவமை

இவ்வியல் அதனால் இதுஅன்று இதுஎனச் செவ்விதின் தெளிந்த தேற்ற உவமை வருமாறு:

'தாமரை நாள்மலரும் தண்மதியால் வீறுஅழியும்;
காமர் மதியும் கறைவிரவும்; — ஆம்இதனால்,
பொன்னை மயக்கும் பொறிசுணங்கி னாள்முகமே,
என்னை மயக்கும் இது'

என வரும்.

[இதுவோ அதுவோ என்ற தடுமாற்றம் நீங்கி இன்ன காரணத்தால் இதுவன்று இதுவே என்று முடிவு செய்வதனைக் கூறுவது தேற்ற உவமை.

தாமரை மலர் மதியைக் கண்டு கூம்பும் ஆதலானும், அழகிய மதியம் களங்கம் உடைத்து ஆதலானும், மதிக்கும் தோலாது

களங்கமும் அற்றுக் காணப்படுவதாய் என்னை மயக்கும் இது தலைவி முகமே என்ற தலைவன் கூற்றில், தாமரையும் மதியமும் காரணம் காட்டி விலக்கப்பட்டு உபமேயமாகிய முகமே கொள்ளப்பட்டவாறு.

இது துணிவுவமை என்றும் பெயர் பெறும்.

'அன்னது பொருவன்று எனஅடை விளம்பி
இன்னது மெய்ப்பொருள் என்பது துணிவே'.–வீ. உரை. 156

'ஐயுற்ற அதனை அறிந்து துணிவது
தேற்றம் என்மனுர் தெளிந்திசி னோரே'. – மு. வீ. 11–14]

இன்சொல்லுவமை

ஆற்ற உவமை ஆற்றினும் பொருளின் ஏற்றம் இன்று என்னும் இன்சொல் உவமை வருமாறு :

'மான்விழி தாங்கும் மடக்கொடியே! நின்வதனம்;
மான்முழுதும் தாங்கி வருமதியம் — ஆனாலும்,
முற்றுஇழை நல்லாய்! முகம்ஒப்பது அன்றியே,
மற்றுஉயர்ச்சி உண்டோ மதிக்கு'

என வரும்.

[உபமானம் மேம்பட்டதாயினும் உபமேயத்தைவிட மேம்பட்டது அன்று என்று கூறுவது இன்சொல் உவமையாம். 'மடக்கொடியே! உன்முகம் மானின் விழியையே தாங்கி நிற்கின்றது. மதியமோ மான் முழுதையும் தாங்கி நிற்கின்றது. அங்ஙனமாயினும் மதியம் நின் முகத்தை ஒக்கும் என்று கூறுதலே ஏற்குமேயன்றி முகத்தினும் மேதக்கது என்று கூறுதல் ஏலாது' – என்ற தலைமகன் நயப்புரையில், உபமேயமாகிய முகத்தில் மான் விழியே இருப்பவும் உபமானமாகிய மதியம் மானையே கொண்டுள்ளது என்று புகழ்ந்து அதனால் அஃது ஏற்றம் பெற வில்லை என்று சுட்டி உள்ளமை காண்க.

இஃது இசை உவமை எனவும் பெயர் பெறும்.

'பொருத்த மின்மைப் பொருவையும் பொருளையும்
இருத்தி இசைவது இசையுவமை யாகும்'. – வீ. உரை 156

'இன்சொல் உவமையாம் இணைஇவை என்ற
பின்சொல் லியபொருள் பெற்றியின் உரைத்தலே'.
– தொ. வி. 336]

விபரீதவுவமை

ஊறுஇல் உவமேயம் உவமையாய் உலகியல் வேறுபடமாட்டிய விபரீத உவமை வருமாறு :

'திருமுகம் போல்மலரும் செய்ய கமலம் ;
கருநெடுங்கண் போலும் கயல்கள் ; — வல்லி
இயல்போலும் மஞ்ஞை ; இடைபோலும் கொம்பர் ;
மயல்போலும் யாம்போம் வழி'

என வரும்.

[உலகறிந்த உபமானத்தை உபமேயமாகவும், உபமேயத்தை உபமானமாகவும் குறிப்பிடுவது விபரீத உவமையாம். தாமரை, கயல், மயில், கொடி என்பன உபமானப் பொருள்கள். முகம், கண், இயல், இடை என்பன உபமேயப் பொருள்கள். அங்ஙனமாகவும் அவற்றின் நிலையை மாற்றித் 'தலைவியின் முகம் போலத் தாமரை மலரும்; கயல் மீன்கள் அவளுடைய கரிய நெடிய கண்கள் போலும்; அவள் இயல் போன்ற இயலுடையது மயில்; அவள் இடைபோலத் துவளுவது கொடி; நாம் போம் வழி மயக்கம் தருவது போலும்' – என்ற இப்பாடலில், உபமேயங்கள் உபமானமாகவும் உபமானங்கள் உபமேயமாகவும் வந்துள்ளமை காண்க.]

'வருமுலை அன்ன வண்முகை உடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை'. – சிறுபாண். 72, 73

எனவும் வரும். இங்ஙனம் வேறுபடக் கூறினும் வழு ஆகாது; என்னை?

'பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருள்அறு சிறப்பின்அஃது உவமம் ஆகும்'.
– தொல். பொ. 284

என்ப ஆகலின்.

[உபமேயத்தை உபமானமாகக் கொண்ட அளவில் உபமானத்திற்கு உரிய பெருமை அதற்கு ஏற்றப்பட்டுவிடுகிறது. உவமிக்கப்படும் நிலையில் அது தனக்கு உபமேயமாகச் சொல்லப் படும் பொருளினும் மேம்பட்டதாகிவிடுகிறது.

'வளரும் முலையை ஒத்த மொட்டு விரிந்து, முகம் போல மலர்ந்த தெய்வத்திற்குப் பூசனை செய்ய உதவும் தாமரை' – என்ற இத்தொடரில், வருமுலையும் திருமுகமும் உபமானமாகவும், தாமரை முகையும் தாமரை மலரும் உபமேயமாகவும், கொள்ளப் படும் நிலையில் வருமுலைக்கும் திருமுகத்திற்கும் தாமரை மொட்டு' தாமரைமலர் என்பனவற்றைவிட அதிக ஏற்றம் தரப்பட்டுள்ளமை காண்க.

இதனை எதிர்நிலைஅணி என்று சந்திராலோகம் கூறும். வடநூலார் பிரதீபாலங்காரம் என்பர்.

இது தெற்றுவமை எனவும் பெயர் பெறும்.

'பொருள்போல் அமைந்த பொருஇது என்னும்
மரபொடு தெற்றி வருவது தெற்றே'. – வீ. உரை. 156

'விபரீதம் பொருளா விளம்பிய உவமையே'. – தொ. வி. 332

'புகலரும் உவமையைப் பொருளது வாக்கிப்
பொருளை உவமைப் பொருள தாக்கி
உரைப்பது விபரீத உவமை யாகும்'. – மு. வீ. பொ. 15]

வேட்கையுவமை

அரும்பொருள் அதனை அதுபோலும் என்ன விரும்புமென் உள்ளம் எனும் வேட்கை உவமை வருமாறு :

'நன்றுதீது என்றுஉணராது என்னுடைய நல்நெஞ்சம்,
பொன்துதைந்த பொன்சுணங்கின் பூங்கொடியே! – மன்றல்
மடுத்ததைந்த தாமரைநின் வாள்முகத்துக்கு ஒப்புஎன்று
எடுத்துஇயல்பல் வேண்டுகின்றது, இன்று'

என வரும்.

[ஒரு பொருளை மற்றொரு பொருளுக்கு ஒப்பாகக் கூறுவதற்கு மனம் விரும்புகின்றது என்று குறிப்பிடுவது வேட்கை உவமை ஆகும்.

'பூங்கொடியே' இங்ஙனம் கூறுவது நன்றோ தீதோ என்று ஆராயாது என் நெஞ்சம் பள்ளத்தில் நெருங்கி வளரும் தாமரை மலரை நின் ஒளியுடைய முகத்திற்கு ஒப்பாகக் கூற விரும்புகின்றது' – என்ற தலைவன் நயப்புரையில் தாமரையை முகத்துக்கு ஒப்பாகக் கூறுவதன் காரணம் முகத்தின்மாட்டுத் தலைவன் கொண்ட வேட்கையே என்பது விளக்கப்பட்டவாறு.

இது கருத்துவமை எனவும் பெயர்பெறும்.

'பொருந்திய பொருட்குஇது பொருவெனக் கருதுதல்
கருத்தின் உவமை என்மனுர் புலவர்'. – வீர. உரை. 156

'பொருளை இன்னது போலும்என்று அறைய
வேட்கின்றது என்னுளம் என்பது வேட்கை'.
– மு. வீ. பொ. 16]

பலபொருளுவமை

ஒருபொருள் அதனுக்கு ஒப்பது ஒன்று அன்றிப் பல பொருள் காட்டும் பலபொருள் உவமை வருமாறு :

'வேலும் கருவிளையும் மென்மானும் காவியும்
சேலும் வடுவகிரும் செஞ்சரமும் – போலுமால்;
தேமருவி உண்டு சிறைவண்டு அறைகூந்தல்
காமருவு பூங்கோதை கண்'

என வரும்.

[ஒரே பொருளுக்குத் தொடர்ந்து பல உவமைகளைச் சுட்டுவது பல பொருள் உவமையாகும்.

கூந்தலில் பொருந்தித் தேனை விரும்பி உண்டு வண்டுகள் ஒலிக்கும் பூங்கோதையின் கண்கள் வேல், கருவிளை, மான், காவி, சேல், மாவடுவின் பிளப்பு, கொடிய அம்பு இவற்றை நிகர்க்கும் - என்ற இப்பாடலில் கண்களுக்கு வேல் முதல் அம்பு ஈறாகிய பல உவமைகளும் குறிப்பிடப்பட்டமை காண்க.

இது பலவியல் உவமை எனவும் பெயர்பெறும்.

'உயர்பொருள் ஒன்றை ஒக்கும் உவமை
பலவுடன் கூறுதல் பலவிய லாகும்'. - வீர. உரை. 157

'ஒருபொருட் குப்பல உவமுறல் பலபொருள்
உவமை என்மனார் உணர்ந்திசி னோரே'. - மு. வீ. பொ. 17]

விகாரவுவமை

கூறுபடும் உவமையின் கொள்கை பிறிதுஆக வேறு படுத்து இசைக்கும் விகார உவமை வருமாறு :

'சீத மதியின் ஒளியும், செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு, — வேதா, தன்
கைம்மலரான் அன்றிக் கருத்தான் வகுத்துஅமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்'

என வரும்.

[உவமைப் பொருளை நேராகக் கூறாது அதன் சிறந்த கூறு ஒன்றனைக் கொண்டு அதற்குமேல் கற்பனை செய்து உவமிப்பது விகார உவமையாம்.

இப்பூங்கோதையாளின் முகத்தைப் பிரமன் தன் கைகளால் படைக்காமல், குளிர்ந்த மதியின் ஒளியினையும், சிறந்த தாமரையின் மலர்ச்சியையும் எடுத்துக்கொண்டு தன் மனத்தால் படைத்து அமைத்தான் - என்ற இப்பாடலில், மதியினையும் தாமரையையும்

உவமை கூறுது, மதியின் ஒளி, தாமரையின் மலர்ச்சி இவற்றைக் கொண்டு அமைத்த கற்பனையை முகத்திற்கு உவமை கூறியது செயற்கையாகிய விகார உவமை ஆயிற்று. இயல்பு – இயற்கை; விகாரம் – செயற்கை.

இது விக்கிரிய உவமை எனவும் பெயர்பெறும்.

'இத்துணைப் பொருவில்வந்து எதிர்ந்தது பொருள்என
அத்துணை மொழிவரின் அதுவிக் கிரியம்'. – *விர. உரை.* 157

'விகாரம் ஓர் உவமையை விகாரப் படுத்திப்
பொருளை உவமித்துப் போதரல் ஆகும்'. – *மு. வீ. பொ.* 18]

மோகவுவமை

ஒரு பொருள் மீது எழும் வேட்கையான் மயக்கம் முறுகுதல் காட்டும் மோக உவமை வருமாறு :

'கயல்போலும் என்றுநின் கண்பழிப்பல் ; கண்ணின்
செயல்போல் பிறழும் திறத்தால் — கயல்புகழ்வல் ;
ஆரத்தான் நோம்மருங்குல்! அம்தரள வாள்முறுவல்
ஈரத்தால் உள்வெதும்பும் யான்'

என வரும்.

[ஒருபொருளிடத்துக் கொண்ட வேட்கையால் மயக்கம் மிகுதலைக் காட்டி உவமிப்பது மோக உவமையாம். 'முத்து மாலையின் கனத்தால் வருந்தும் இடையை உடையாய்! உன் புன்முறுவலினால் வெளிப்படுத்தப்பட்ட அன்பு காரணமாகக் காம நோயால் மனம் வெதும்பும் யான் நின் கண்கள் கயல்போன்று உள்ளன என்று கண்களைப் பழித்துப் பின் நின் கண்கள்போல் பிறழ்வது கண்டு கயல் மீன்களைப் புகழ்கிறேன் – என்ற தலைவன் நயப்புரையில் முதலில் பழித்த கண்ணிடத்துப் பின்கொண்ட வேட்கையான் அதன் ஒப்புமைப் பொருளிடத்திலும் வேட்கை கொண்ட மயக்கம் தோன்ற உரைத்தமை உணரப்படுகிறது.

'இதுபொருள் அதுபொருள் என்றுணர்ந் திலம்என
உவமையின் மலைவினை உரைப்பது மயக்கே'.
– வீர. உரை. 157

'விழுமிய ஒருபொருள் மேல்எழும் வேட்கை
வருமென மயக்கம் புலப்பட வகுத்து
மொழிவது மோக உவமை யாகும்'. – மு. வீ. பொ. 19]

அபூதவுவமை

அவனியில் இல்லா அன்னது ஓர் பொருளை உவமை செய்து உரைக்கும் அபூத உவமை வருமாறு :

'எல்லாக் கமலத்து எழிலும் திரண்டுஒன்றின்,
வில்ஏர் புருவத்து வேல்நெடுங்கண் – நல்லார்
முகம்போலும் என்ன, முறுவலித்தார் வாழும்
அகம்போலும் எங்கள் அகம்'

என வரும். விகார உவமையோடு இதனிடை வேற்றுமை என்னை எனின், அது பிறரால் விகாரப்பட்டதாகக் கோடல்; இஃது அன்னது அன்று என்க.

[உலகில் இல்லாததொரு பொருளை உவமையாகக் காட்டுவது அபூத உவமையாகிய இல்பொருள் உவமையாம்.

தலைவி என் உள்ளத்தையே இருப்பிடமாகக் கொண்டு தங்கியுள்ளாள். அவள் வில் போன்ற புருவங்களும் வேல் போன்ற விழிகளும் உடையாள். உலகிலுள்ள எல்லாத் தாமரைகளின் அழகும் ஒருசேரத் தொகுக்கப்பட்டால் அத்தொகுப்பாகிய அழகு அவள் முகத்தழகை நிகர்க்கும் – என்ற இப்பாடலில், உலகில் உள்ள எல்லாத் தாமரைகளின் அழகின் திரட்சியும் ஒன்று சேர்த்துக் காண்டல் இயலாமையின் அத்திரட்சி முகத்திற்கு உவமையாக்கப்படுதல் அபூத உவமையாகும்.

'விடாதஅப் பொருட்கு விதிசேர் உவமை
அடாதது இயம்புவது அபூத உவமை'. – வீர. உரை. 157

இதனை மாறன் அலங்காரம் ஒன்றுபல குழீஇய பல பொருளுவமைக்கண் அடக்கும், இல்பொருள் உவமையாகவும் கொள்ளும். *– மா. அ. 101*]

பல்வயின் போலியுவமை

சொல்லிய உவமம் தொறும் தொறும் போலி புல்லப் புணர்க்கும் பல்வயின்போலி வருமாறு :

'மலர்வாவி போல்வரால் மாதர்; கமல
மலர்போலும் மாதர் வதனம்; — மலர்சூழ்
அளிக்குலங்கள் போலும் அளகம்; அதனுள்
களிக்கும் கயல்போலும் கண்'

என வரும்.

[ஒரு பாடலில் பல உபமானங்கள் சொல்லப்பட்டால் உபமானம் தோறும் உவமை உருபைப் புணர்த்துக் கூறுவது பலவயின் போலி உவமையாம்.

மகளிர் தாமரைத் தடாகம் போல்வர்; அவர் முகங்கள் தாமரை போலும்; தாமரை மலர்களைச் சூழ்ந்த வண்டுக் கூட்டங்கள் போல்வன கூந்தல்; அம்மலர்களிடையே செருக்கித் திரியும் கயல் மீன்கள் போல்வன கண்கள் – என்ற இப்பாடலில் வாவி போல்வர், மலர் போலும், அளிக்குலங்கள் போலும், கயல் போலும் என உவமைதோறும் உவமை உருபு புணர்க்கப் பட்டமை காண்க.

இது கோவை உவமை எனவும் பெயர் பெறும்.

'பண்டை யோர்உரை பலபொருள் தமக்குக்
கொண்டு கூறுதல் கோவைஎன் றனரே'. *– வீர. உரை. 157*]

ஒருவயின் போலியுவமை

ஒருதொடர் அதன்கண் உவமைதொறும் இன்றி ஒரு வயின் புணர்க்கும் ஒருவயின்போலி வருமாறு :

'நிழல்கோபம் மல்க, நிறைமலர்ப்பூங் காயாச்
சுழற்கலவம் மேல்விரித்த தோகை, – தழல்குலவும்
தீம்புகை ஊட்டும் செறிகுழலார் போலும்கார்;
யாம்பிரிந்தார்க்கு என்னும் இனி?'

என வரும்.

[உபமானம்தோறும் உவமை உருபு புணர்த்தலைவிடுத்து ஒரே இடத்து உவமை உருபை அமைத்து அதனை உவமைதோறும் கொள்ளவைப்பது ஒருவயிற் போலியாம்.

நிழலில் பரவிய இந்திரகோபப் பூச்சிகள் தழல்போலும். பூக்கள் நிறைந்த காயா தீம்புகை போலும், அதன்மேல் அமர்ந்த கலவம் விரித்த மயில் குழலுக்குப் புகையூட்டும் மகளிர் போலும். இக் கார்காலத்தில் எம்மால் பிரியப்பட்ட தலைவி நிலை யாதாகுமோ? – என்று வினைவயிற் பிரிந்தோன் வேற்று நாட்டகவயின் தான் மீண்டும் வருவதாகக் குறித்துப் புறப்பட்ட காலம் வந்தமையின் தலைவியை நினைத்த எண்ணம் பற்றிய இப்பாடலில், தோகை செறிகுழலார் போலும் என்று ஒரே இடத்தில் அமைக்கப்பட்ட உவமை உருபைக் கோபம் தழல் போலும், காயா புகைபோலும் என ஏனை இடத்தும் கொள்ள வைத்தமை காண்க.]

கூடாவுவமை

கூடாததனைக் கூடுவது ஆக்கிக் கோடாது உவமைசெய் கூடா உவமை வருமாறு:

'சந்தனத்தின் செந்தழலும், தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலும் மறுமாற்றம்; – பைந்தொடியீர்!
வாவிக் கமல மலர்முகம்கண்டு ஏக்கறுவார்
ஆவிக்கு இவையோ அரண்?'

என வரும்,

[ஒரு பொருளிடத்து இல்லாத தன்மையை அதற்கு உள்ளது போல அமைத்து உவமை செய்வது கூடா உவமையாகும். 'பைந்தொடியீர்! நும் சொற்கள் குளிர்ந்த சந்தனத்தில் செந்தழலும், குளிர்ந்த அமிர்தமயமான சந்திரனில் வெவ்விய விடமும் தோன்றியமை போன்றுள்ளன. நும் கமலமுகம் கண்டு ஆசையால் தாழ்பவர் உயிருக்கு இவையோ அரண் செய்யும்?' – என்று பாங்கிமதி உடன்பாட்டில் தலைவன் கூறியதாக அமைந்த இப்பாடலில், சொற்களுக்குச் சந்தனத்தில் செந்தழலையும், சந்திரனில் வெவ்விடத்தையும் அமைத்து உவமையாகக் கொள்வதன்கண், கூடாததனைக் கூடுவதாக்கி உவமை செய்த பெற்றி காண்க.

இது மருட்கை உவமை எனவும் பெயர்பெறும். (மா. அ. 101)

'கூடா உவமையே கூறிய நிகர்க்கண்
ஊடா தவைபொருட்கு உரியன எனலே'. – தொ. வி. 337

'கூடா ததனைக் கூடுவ தாகக்
கொண்டதன் ஒன்றற்கு உவமை யாக்கி
உரைப்பது கூடா உவமை யாகும்'. – மு. வி. பொ. 20]

பொதுநீங்குவமை

ஒருதலையாக உவமையை மறுத்துப் பொருளையே உவமைசெய் பொதுநீங்கு உவமை வருமாறு :

'திருமருவும் தண்மதிக்கும் செந்தா மரையின்
விரைமலர்க்கும் மேலாம் தகைத்தால்; — கருநெடுங்கண்
மானே; இருள்அளகம் சூழ்ந்தநின் வாள்முகம்,
தானே உவமை தனக்கு'

என வரும். இது பண்பு தொழில் பயன் என்பன பற்றிப் பொருளோடு பொருள் இயையாமையின் வழுவாம் பிற எனின், ஆகாது; முன்னர் ஒத்தபொருளை எடுத்தோதி அவற்றினும் சிறந்தது இது என்றது துணை அல்லது ஒப்புமை வேண்டாமை இன்றாகலின்.

[உவமையை உட்கொண்டு, பின் உபமேயம் அதனினும் மேதக்கதாகலின் உவமையை விடுத்து, அவ்வுபமேயத்திற்கு அதனையே உபமானமாகக் கூறுவது பொதுநீங்குவமையாம். மானே! இருண்ட மயிர்முடி சூழ்ந்த நின் ஒளியுடைய முகம் அழகிய சந்திரனையும் தாமரை மலரையும் விட மேதக்கது ஆதலின், தனக்குத் தானே உவமையாம் — என்ற இப்பாடலில் பொருளையே உவமைசெய் பொதுநீங்குவமை காண்க.

இஃது ஒப்பில் உவமை எனவும் பெயர் பெறும். – வீர. 159

இதனை இயைபின்மையணி எனத் தனி அணியாகவும் சந்திராலோகம் கூறும். வடநூலார் இதனை அநந்வயாலங்காரம் என்பர்.

'உவமையைக் கூறி ஒதுக்கிப் பொருளை,
உவமை யாக்கி உரைப்பது பொதுநீங்கு
உவமை என்மனார் உணர்ந்திசி னோரே'. – மு. வி. பொ. 21

'அல்பொருள் புனைவுளி யாகஓர் பொருளையே
உரைப்பது பொதுநீங்கு உவமை என்ப'. – ச. 8]

மாலை உவமை

ஒருபொருட்கு உவமை ஒருங்குவரின் அவை வரு தொடர்பாய் இறூஉம் மாலைஉவமை வருமாறு:

'மலையத்து மாதவனே போன்றும், அவன்பால்
அலைகடலே போன்றும், அதனுள் — குலவு
நிலவயல மேபோன்றும், நேரியன்பால் நிற்கும்
சிலைகெழுதோள் வேந்தர் திரு'

என வரும்.

[ஒரு பொருளுக்கு அமையும் உவமைகள் ஒன்றோடொன்று தொடர்புடைமை தோன்ற அமைப்பது மாலை உவமையாம்.

பகை மன்னர் செல்வங்கள் சோழ மன்னரிடம், பொதிய மலையிலுள்ள அகத்தியனைப் போன்றும், அவனால் உண்ணப்பட்ட கடலைப்போன்றும், அதனுள் உண்டாகிய நில உலகம் போன்றும் நீங்காது நிற்கும் என்ற கருத்துடைய இப்பாடலில் – அகத்தியன், அவனால் உண்ணப்பட்ட கடல், அக்கடலிலிருந்து உண்டாகிய உலகம் என மூன்று உவமைகள் ஒன்றற்கு ஒன்று தொடர்பு உடையனவாய் அமைந்திருப்பது காண்க.

'மாலை உவமையாம் மருவிய பலநிகர்
மாலையாக் கோத்தபின் வினைபொருள் இயம்பலே'.
– தொ. வி. 338]

அற்புதம் முதலிய அலங்காரங்கள் எட்டோடும் உவமை அலங்காரம் கூடிவருதல் பற்றி அவற்றை வேறு பிரித்து ஓதினார். அவ்வற்புதம் முதலியவற்றிற்கு இலக்கணம் மேல் கூறப்படும். அவற்றுள் அற்புத உவமை வருமாறு :

'குழைஅருகு தாழக் குனிபுருவம் தாங்கி
உழையர் உயிர்பருகி நீண்ட — விழிஉடைத்தாய்,
வண்டுஏறு இருள்அளகம் சூழ வருமதிஒன்று
உண்டேல், இவள்முகத்துக்கு ஒப்பு'

என வரும்.

[உலகில் காணப்படும் பொருட்கு இல்லாத பல பெற்றிகளை இணைத்து வியப்புத் தோன்ற உவமிப்பது அற்புத உவமை.

இரண்டருகும் காதணிகள் தாழ வளைந்த புருவத்தைக் கொண்டு பக்கலிலுள்ளார் உயிரைப் பருகி நீண்ட விழிகளை உடையதாய் வண்டுகள் தங்கும் இருண்ட மயிர் முடி சூழ்ந்திருப்ப வருவதொரு மதி இருக்குமாயின் அஃது இவள் முகத்துக்கு ஒப்பாம் – என்ற இப்பாடலின் உலகில் காணப்படும் மதிக்கு இல்லாத பல பெற்றிகளை உடைய மதி ஒன்றனைக் கற்பித்து முகத்துக்கு உவமை கூறியமை காண்க.

'இப்படி என்பது இயம்பியது உடைமையின்
அப்பொரு வாம்எனும் அற்புத உவமை'. – வீர. உரை. 156]

சிலேடை உவமை இரண்டனுள் செம்மொழிச்சிலேடை உவமை வருமாறு :

'செந்திருவும் திங்களும் பூவும் தலைசிறப்பச்
சந்தத் தொடையோடு அணிதழுவி, — செந்தமிழ்நூல்
கற்றார் புனையும் கவிபோல் மனம்கவரும்
முற்றா முலையாள் முகம்'

என வரும்.

[சொற்களைப் பிரிக்காமல் சிலேடைப் பொருள் கொண்டு உவமை செய்வது செம்மொழிச் சிலேடை உவமை. செந்தமிழ் நூல் கற்றார் புனையும் கவிகள், தொடக்கத்தில் மங்கல மொழிகளாகத் திரு – திங்கள் – பூ முதலிய சொற்கள் அமையப் பெற, நல்ல ஓசைநயம் சான்ற எதுகை மோனை முதலிய தொடைகளோடு, பொருளணி சொல்லணிகள் அமையப்பெற்றுக் கற்றார் மனத்தைக் கவரும்; முற்றாமுலையாள் முகம், திரு – திங்கள் – என்ற தலையணிகளும் பூவும் தலையில் சிறக்க, நறுமண முடைய மாலைகளோடு பல அணிகளையும் அணிந்து மனம் கவரும் – என இப்பாடல் சிலேடை உவமையாயினவாறு காண்க. கற்றார் புனையும் கவி முற்றா முலையாள் முகத்திற்குச் சிலேடை உவமையாகும்.]

பிரிமொழிச் சிலேடை உவமை வருமாறு :

'நளிதடத்த வல்லியின் கண்நெகிழ ஞாலத்து
அளவில் நிறைகடாம் சிந்திக் — களிறுஇகலும்
கந்த மலையா நிலவும், கவடசைய
வந்த மலையா நிலம்'

என வரும். யானைமேல் செல்லுங்கால் நளி - செறிவு ; தடம் – பெருமை; வல்லி – விலங்கு; கண் – மூட்டுவாய் ;

நெகிழ்தல் – அறுதல்; நிறைகடாம் – நிறைந்த மதம்; சிந்தல் – பொழிதல்; கந்தம் - தறி; மலைதல் - சீறுதல்; நிலவுதல் – பொருந்துதல்; கவடு – புரோசைக்கயிறு; அசைதல் – பரிதல்.

இனித் தென்றல்மேல் செல்லுங்கால், நளி–பெருமை; தடம் – பொய்கை; அல்லி – பூ; கள் - தேன்; நெகிழ்தல் – சோர்தல்; நிறை – ஒழுக்கம்; சிந்தல் – அழித்தல்; கந்தம் – விரை; அலைதல் – நரலுதல்; நிலவுதல் – நெருங்குதல்; கவடு - மலைக்கொம்பு; அசைதல் – அலைதல்,

[சொற்களைப் பிரித்துச் சிலேடை கொள்வது பிரிமொழிச் சிலேடை. இப்பாடல் பிரிமொழிச் சிலேடை உவமையாய் யானைக்குத் தென்றல் உவமையாயினவாற்றைக் குறிப்பிடுவது காண்க.

'புரந்தசொற் பொருவையும் பொருளையும் ஒன்ற
இரண்டையும் சிலேடித்து இசைப்பது சிலேடை'.

- *வீர. உரை.* 156]

அதிசய உவமை வருமாறு :

'நின்னுழையே நின்முகம் காண்டும்; நெடுந்தடம்
தன்னுழையே தன்னையும் காண்குவம் — என்னும்
இதுஒன்று மேயன்றி வேற்றுமை உண்டோ,
மதுஒன்று செந்தா மரைக்கு?'

என வரும்.

[உயர்வு நவிற்சியாக உவமையைப் பொருளொடு புணர்த்துக் கூறுவது அதிசய உவமையாம்.

'உன்னிடத்து உன்முகம் காணப்படுகிறது. தடாகத்தில் தாமரை காணப்படுகிறது. இவ்வாறு இருக்கும் இடத்தால் ஏற்பட்டுள்ள வேறுபாடேயன்றி, உன் முகத்திற்கும் தாமரைக்கும்

வேறுபாடு உண்டோ? – என்ற தலைவன் நயப்பு உரைக்கும் இப்பாடலில், பிறந்த இடத்து வேற்றுமையன்றி உபமானமாகிய தாமரைக்கும் உபமேயமாகிய முகத்திற்கும் எந்த வேற்றுமையும் இல்லை என்று உயர்வு நவிற்சி தோன்ற உவமை அமைத்தவாறு காண்க.

இது மிகை உவமை எனவும் பெயர் பெறும்.

'இவ்வயின் கண்டது பொருளையும் பொருவையும்
இவ்வயின் கண்டதுஎன் பதுமிகை உவமை'.

– *வீர. உரை.* 156]

விரோத உவமை வருமாறு :

'செம்மை மரைமலரும் திங்களும் நும்முகமும்
தம்முள் பகைவிளைக்கும் தன்மையவே; — எம்முடைய
வைப்புஆகும் சென்னி வளம்புகார் போல்இனியீர்!
ஒப்புஆகும் என்பாரும் உளர்'

என வரும்.

[உபமானங்களும் உபமேயமும் தம்முள் பகைமை உடையன என்று கூறிப் பின் அவற்றை ஒப்புமையுடைய பொருளாகச் சொல்லுதல் விரோத உவமையாகும். ஒப்பு நோக்கிய அளவிலேயே பகைமை உண்மை பெறப்படுதலின், விரோதத்தின் கண்ணும் உவமை அமைந்துள்ளது.

இனியீர்! செந்தாமரையும் சந்திரனும் உங்கள் முகமும் தம்மில் பகைமை உடையவாயினும், அவற்றை ஒன்றை ஒன்று ஒக்கும் என்றும் கூறுவாரும் உளர் – என்ற இப்பாடலில், உபமானமாகிய தாமரை சந்திரன் என்பனவற்றிற்கும் உபமேயமாகிய முகத்திற்கும் பகைமை உண்மையை வெளிப்படுத்தி உவமிப்பது இவ்வணியாதல் காண்க.

'புகழ்பெறு பொருளும் பொருவும் ஒன்றைஒன்று
இகழ்வது விரோதம் என்மனார் புலவர்'. – *வீர. உரை.* 156]

ஒப்புமைக்கூட்ட உவமை வருமாறு :

'விண்ணின்மேல் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மேல் அன்னே, வயவேந்தே! — தண்ணளியின்,
சேரா அவுணர் குலம்களையும் தேவர்கோன்;
நேரார்மேல் அத்தகையை நீ'

என வரும்.

[பண்பு பற்றியோ தொழில் பற்றியோ பல பொதுத் தன்மைகள் கூறி, ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை ஒப்பிட்டு உவமை கூறுதல் ஒப்புமைக் கூட்ட உவமையாம்.

வேந்தே! வானுலகைக் காத்து உறங்காதிருக்கும் இந்திரனைப் போல நீயும் மண்ணுலகைக் காத்து உறக்கமின்றி உள்ளாய். தேவர்உலகத்தவரிடம் கொண்ட கருணையால் பகைவராகிய அவுணர் குலத்தைத் தேவேந்திரன் அழிப்பது போல, உன் குடிமக்களிடத்துக் கொண்ட கருணையால் நீயும் அவர் பகைவரை அழிக்கின்றாய் – என்ற இப்பாடலில், ஒப்புமை உடைய தேவேந்திரன் அரசன் என்ற இருவருடைய செயல்களும் ஒப்பிடப்பட்டமை காண்க.

'இப்படி எனப்பொருள் இரண்டும்நற் பொருவுதல்
ஒப்புமைக் கூட்டமென்று ஓதினர் புலவர்'. – வீர. உரை. 157]

தற்குறிப்பேற்றவுவமை வருமாறு :

'உண்ணீர்மை தாங்கி, உயர்ந்த நெறிஒழுகி,
வெண்ணீர்மை நீங்கி விளங்குமால்; — தண்ணீர்த்
தரம்போலும் என்னத் தருங்கடம்பை மாறன்
கரம்போல் கொடைபொழிவான் கார்'

[ஒருபொருளின் இயற்கை நிகழ்ச்சிகளைக் கவி தானே கற்பனை செய்து பிறிது ஒன்றன் நிகழ்ச்சிகளோடு ஒப்பிடுதல் தற்குறிப்பேற்ற உவமையாம்.

நீர் போன்ற இனிய சாயலை உடைய கடம்பைநகர் மன்னனாகிய மாறனுடைய கைகளைப் போலக் கொடை பொழியும் கார்மேகம், அவன் கைகள் தானம் வழங்குதலால் உள்ளே நீர் புலராது இருக்கும் தன்மைபெற்றுக் கொடுத்தலால் எப்பொழுதும் மேலாகவே இருந்து இயற்கை வனப்பால் சிவந்து காணப்படுவது போல, உள்ளே நீரை உடைத்தாய் வானவெளியில் சென்று கருமை நிறத்தோடு காணப்படுகிறது – என இப்பாடலில், சிலேடைப் பொருளால் மாறன் கரத்திற்குக் கார்மேகம் ஒப்புமை யாகக் கற்பனை செய்யப்பட்டிருத்தல் காண்க. உணர்ச்சியற்ற மேகத்திற்கு உண்ணீர்மை தாங்குதல், உயர்ந்த நெறி ஒழுகுதல், வெண்ணீர்மை இன்றி விளங்குதல் என்பன தற்குறிப்பேற்றத்தால் கொள்ளப்பட்டவை.

இது நோக்குவமை எனவும் பெயர்பெறும்.

'சாலும் பொருட்கெதிர் பொருவெனும் பொருள்மொழி
நூலோர் நோக்குதல் நோக்குஎனப் படுமே.'

– வீர. உரை. 156]

விலக்கு உவுமை வருமாறு :

'குழைபொருது நீண்டு, குமிழ்மேல் மறியா,
உழைபொருதுஎன் உள்ளம் கவரா, — மழைபோல்
தருநெடுங்கைச் சென்னித் தமிழ்நாடு அனையார்
கருநெடுங்கண் போலும் கயல்'

என வரும்.

கயல் மேல் செல்லுங்கால், குழை – சேறு; குமிழ் – நீர்க்குமிழி; உழை – பக்கம். கண்ணின்மேல் செல்லுங் கால், குழை – காதுஇடுபணி, குமிழ் – குமிழம்பூப் போலும் நாசி; உழை – மான்.

[உபமானமான பொருளுக்கு உபமேயத்துக்கு உரியதன்மை இல்லை என்று கூறி, உபமானத்தைக் குறிப்பாக விலக்குதல் விலக்கு உவமையாகும்.

சோழனுடைய தமிழ்நாடு போன்ற இயற்கை வனப்புடைய இப்பெண்நல்லாரின் கருநெடுங்கண்கள் காதணியோடு போரிட்டு நீண்டு குமிழம்பூப் போன்ற மூக்களவும் சென்று மீளுகின்றன; மாறெடு தம்மை ஒப்பிட்டுக் கொண்டு என் உள்ளத்தைக் கவருகின்றன. ஆனல் அக்கண்களைப் போன்ற கயல் மீன்கள், சேற்றில் ஊடுருவி, நெடுந்தூரம் சென்று, நீர்க் குமிழிமேல் திரும்பிப் படர்ந்து, பக்கத்தில் ஒன்ருேடொன்று போரிட்டும் என் உள்ளத்தைக் கவரா – என்ற இப்பாடலில், கண்களைப்போலக் கயல்களும் குழைபொருது நீண்டு குமிழ்மேல்மறியா உழை பொருதும் என் உள்ளம் கவரா எனச் சிலேடையை அடிப்படையாகக் கொண்டு விலக்குவமை அமைந்தவாறு.

இது தடையுவமை எனவும் பெயர் பெறும்.

‘ஒப்பார் பொருவுக்கு ஒருபிழை காட்டித்
தப்பும் என்பது தடைமொழி உவமை’. –*வீர. உரை.* 156]

ஏது உவமை வருமாறு :

‘வாள்அரவின் செம்மணியும், வன்னிஇளம் பாசிலையும்,
நாள்இளைய திங்கள் நகைநிலவும், – நீள்ஒளியால்,
தேன்உலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்,
வான்உலவு வில்போல் வரும்’

என வரும். (21)

[ஒன்றற்கு மற்ருென்று உவமையாதற்குக் காரணத்தைக் கூறி உவமிப்பது ஏது உவமையாகும்.

சிவபெருமானுடைய சிவந்த சடையின்மேல் உள்ள பாம்பின் மணிச்செம்மையும், அவர் தலையிலணிந்த வன்னித் தழையின் பசுமையும், பிறைச் சந்திரனின் வெண்மையும், கொன்றையின் பொன் நிறமும் ஒருசேரத் தோன்றுவதால், அக்காட்சி வான வில்போலப் பலநிறத் தொகுப்பாய்த் தோற்றம் வழங்குகிறது – என்ற இப்பாடலில், சிவபெருமானுடைய சடை வானவில் போலத் தோற்றம் வழங்குதற்கு உரிய காரணம் புலப்படுத்தப் பட்டவாறு காண்க.

இதுகாரண உவமை எனவும் பெயர்பெறும்.

**'இதனால் இப்பொருள் ஒக்கும் எனக்குணம்
துதியால் சொல்லுதல் ஏது உவமை'.** – *வீர. உரை.* 157

இந்நூலில் கூறப்படாத உவமை வகைகள் :

வீரசோழியம்	**மாறன்அலங்காரம்**
இகழ்ச்சி உவமை	நிறை உவமை
பண்புவமை	குறை உவமை
பொருளுவமை	ஒருபொருளுவமை
வாக்கியப் பொருளுவமை	அவயவ உவமை
தலைப்பெயல் மரபின் சார்ந்து வரல் உவமை	அவயவி உவமை
ஒருவழி ஒப்பின் ஒருபொருள் மொழிதலுவமை	முற்றுவமை
சந்தான உவமை	அந்தாதி உவமை
இழிபுயர்வுப் புகழ்ச்சி உவமை	தலைதடுமாற்ற உவமை
உயர்விழிவுப் புகழ்ச்சி உவமை	ஏக உவமை
சம உவமை	நிரல்நிறை உவமை
ஒப்புமறை உவமை	தற்குண உவமை
அந்நிய உவமை என்பனவாம்.	என்பனவாம்.

இவை பிற்சேர்க்கையில் விளக்கி உரைக்கப்பட்டுள்ளன.

ஒத்த நூற்பாக்கள்

'அற்புதம் சிலேடை..................படுமே'. – *தண்டி.* 38

'உருவகம் நிரல்நிறை..............உடைத்தே'. – *மா. அ.* 110]

மேலதற்கு ஒரு வழுவமைதி

641. மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும்
முதலும் சினையும் முரண்கொள வருதலும்
திணைமாறு படுதலும் பால்மாறு படுதலும்
இன்னன பிறவும் தொன்னெறி மரபால்
பயப்பாடு உள்வழிப் பாங்குஎன மொழிப.

இது மேலதற்கு ஒரு வழுஅமைதி கூறுகின்றது.

இ-ள் : உவமேய அடைக்கு உவமான அடை மிகப் புணர்த்தலும், உவமேய அடைக்கு உவமான அடை குறையப்புணர்த்தலும், இழிந்த உவமையோடு உயர்ந்த பொருளை உவமித்தலும், உயர்ந்த உவமையோடு இழிந்த பொருளை உவமித்தலும், முதலும் சினையும் தம்முள் மாறுபட உவமித்தலும், உயர்திணையும் அஃறிணையும் தம்முள் மாறுபட உவமித்தலும், ஆண் பாலும் பெண்பாலும் தம்முள் மாறுபட உவமித்தலும், ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் தம்முள் மாறுபட உவமித்தலும், இவை போல்வன பிறவேறுபாடுகளும் அடிப்பட்ட நெறி முறையால் பயன்படுதல் உளவாகிய இடத்து வழுஎனக் களையப்படா; இயல்பு என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு. எனவே, பயப்பாடு இல்வழிக் களையப்படும் என்பதாம்.

வரலாறு :

'சாறுதலைக் கொண்டெனப் பெண்ஈற்று உற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று, மாதோ!
ஊர்கொள வந்த பொருநரோடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே'. - புறநா. 82

இதனுள் ஆர்புனைதெரியல் நெடுந்தகை போர்த்தொழி

லுக்கு உவமைஆகிய போழ்தூண்டு ஊசித்தொழிற்குப் பலஅடை புணர்ப்பினும், அவை அனைத்தும் போர்த் தொழில் விரைவையே சிறப்பித்து வந்தமையான் வழு வாகாது, இலக்கணம் ஆம் எனவும்,

[*ஊரில் திருவிழாத் தொடக்கம் ஆதலின் அச்செலவிற்குப் பொருள் வேண்டும். மனைவி மகப் பயந்துள்ளாள்; அவள் செலவிற்கும் பொருள் வேண்டும். அப்பொழுதுதான் மழை நின்றுள்ளது. கதிரவன் மறையத்தொடங்கிவிட்டான். மீண்டும் மழை தொடர்வதன் முன்னும் இருள் சூழ்வதன் முன்னும் பொருள் தேடுதல் வேண்டும். பொருள் வருவாய்க்கு உரிய ஒரேவழி கட்டில் பின்னுதலே. அக்கட்டிலைப் பின்னுபவனுடைய வாரைச் செலுத்தும் ஊசி அந்நிலையில் எவ்வளவு விரைவில் செயற்படுமோ அவ்வளவு விரைவில் போரவை கோப்பெருநற்கிள்ளி முக்காவ நாட்டு ஆமூர் மல்லனேடு பொருத போர் செயற்பட்டது – என்ற இப்பாடலில், போழ்தூண்டு ஊசிக்கு அடைபல கொடுத்து உபமேயமாகிய நெடுந்தகை போருக்கு அடை கொடாவிடினும் உண்டாட்டும் கொடையும் உரனொடு நோக்கி மறுத்தலும் முதலிய பல திறத்தால் பகைவரை விரைவில் அழித்தற்கு விரைகின்றது. நெடுந்தகை படை என்ற கருத்து பெறப்பட்டவாறு காண்க. (பேராசிரியர் உரை)*

உபமான அடையால் உபமேயம் பயன்பட வரும் உவமை விழுமிதாய குறிப்புவமை எனவும் சிறப்புவமை எனவும் படும்.
– மா. அ. 99, 102

'உவமப் பொருளின் உற்றது உணரும்
தெளிமருங்கு உளவே திறத்திய லான'. – *தொ. பொ.* 295]

**'அவாப்போல் அகன்றதன் அல்குல்மேல், சான்றோர்
உசாப்போல உண்டே மருங்குல்; — உசாவினைப்
பேதைக்கு உரைப்பான் பிழைப்பின் பெருகிற்றே;
கோதைக்கொம்பு அன்னாள் குயம்'**

எனவும்,

[அவாவினைப் போன்ற அகன்ற அல்குலின் மேல் சான்றோருடைய உரையாடல் போலக் குறுகிய இடை உள்ளது. மறைப்பொருளை வெளிப்படுத்தும் பேதைக்கு உரைக்கும் ஒருவனுடைய தவறு போல மாலை சூடிய இக்கொம்பு போல்வாள் தனங்கள் பெருகியுள்ளன — என்ற இப்பாடலில் இழிந்த பொருள்களாகிய அவா, பேதைக்கு உசாவினை உரைப்பான் பிழைப்பு என்பன முறையே அல்குலுக்கும், முலைக்கும் உவமையாகக் கூறப்பட்டவாறும், உயர்ந்த பொருளாகிய சான்றோர் உரையாடல் இடைக்கு உவமையாகக் கூறப்பட்டவாறும் குறித்த பொருளை இனிது விளக்கும் திறத்தான் நன்மக்களால் தக்கன என்று ஏற்றுக்கொள்ளப்பட்டன.]

'இரங்காழ் அன்ன திரங்குகண் வருமுலைச்
செம்முதுப் பெண்டின் காதல்அம் சிறுஅன்,......
குடப்பால் சில்உறை போலப்
படைக்குநோய் எல்லாம் தான்ஆ யினனே' – புறநா. 276

எனவும், இறப்ப இழிந்தனவற்றோடும் இறப்ப உயர்ந்தனவற்றோடும் உவமிப்பினும் அவை தத்தம் உவமேயங்களைச் சிறப்பித்து வந்தமையான் வழுவாகாது இலக்கணம் ஆம் எனவும்,

[இர மரத்தின் பரல்போல வற்றிய கண்களை உடைய முலையையுடைய செம்மையையே பண்பாகக்கொண்ட இம் மறக்குடி மகளுடைய அன்புக்குரிய புதல்வன், குடம்பாலையும் சில உறை திரியச்செய்யுமாறு போலப் பெரும்படையையும் சிதறி ஓடச்செய்துவிட்டான் — என்ற இப்பாடலில், குடப்பால் சில்உறையின் செயல் என்ற இழிந்த உவமம் வீரன் செயலுக்கு உபமானமாக வரினும் பொருளை நன்கு விளக்கும் திறத்தான் மேதக்கது என்று சான்றோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு காண்க.]

'நெருப்பின் அன்ன சிறுகண் பன்றி' – அகநா. 84

எனவும்,

'அடைமறை ஆய்இதழ்ப் போதுபோல் கொண்ட
குடைநிழல் தோன்றும்நின் செம்மலைக் காணூஉ' – கலி. 84

எனவும், முதற்பொருளோடு சினைப்பொருளும் சினைப் பொருளோடு முதற்பொருளும் தம்முள் மயங்க உவமிப் பினும் அவை தத்தம் உவமேயங்களைச் சிறப்பித்து வந்தமையான் வழுவாகாது இலக்கணமாம் எனவும்,

[நெருப்பைஒத்த சிறிய கண்களைஉடைய — என்ற தொடரில், நெருப்பாகிய முதல் கண்களாகிய சினைக்கு உவமை ஆயிற்று. இலையால் மறைக்கப்பட்ட அழகிய இதழ்களை உடைய தாமரை-மலர்போலக் குடைநிழலில் காணப்படும் நின்மகனைக்கண்டு — என்ற தொடரில், இலை என்ற சினையும் மலர் என்ற சினையும் முறையே குடை, சிறுவன் என்ற முதற்பொருள்களுக்கு உவமங்கள் ஆயின.

'முதலும் சினையும்என்று ஆயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய' – தொல் பொ. 281

என்பது உவமம்பற்றிய மரபு ஆதலின், உவமத்தின்கண் முதல்சினை பற்றிய மயக்கம் கொள்ளப்படும் என்பது.]

'கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே' – சீவக. 53

எனவும்,

'மல்லல் மலைஅனைய மாதவரை வைதுஉரைக்கும்'
– சீவக. 2789

எனவும், உயர்திணையோடு அஃறிணையும் அஃறிணை யோடு உயர்திணையும் மயங்க உவமிப்பினும் அவை தத்தம் உவமேயங்களைச் சிறப்பித்து வத்தமையான் வழுவாகாது இலக்கணம்ஆம் எனவும்,

[நெற்பயிர் கல்வி நிரம்பிய சான்றோர்களைப் போலத் தலைவணங்கிக் காய்த்தது என்ற தொடரில், சான்றோராகிய உயர்திணைப்பொருள் நெற்பயிராகிய அஃறிணைப் பொருளுக்கு உவமை ஆயிற்று.

வளம் மிக்க மலையைப்போன்ற அளக்கலாகா அளவும் பெருமையும் துளக்கலாகா நிலையும் தோற்றமும் வறப்பினும் வளம்தரும் வண்மையும் உடைய மாதவர்கள் — என்ற தொடரில் மலை என்ற அஃறிணைப்பொருள் மாதவர் என்ற உயர்திணைப் பொருளுக்கு உவமை ஆயிற்று;

> 'உருவக உவமையில் திணைசினை முதல்கள்
> பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே' – *நன்.* 410

என்பது ஒத்து ஆகலான்.]

> 'கலம்கவிழ்த்த நாய்கன்போல் களைதுணை பிறிதுஇன்றிப்
> புலம்பும்என் நிலைகண்டும் போகலனே என்றியால்'

எனவும்,

> 'களவுஉடன் படுநரின் கவிழ்ந்து நிலம்கிளையா
> நாணி நின்றோள் நிலைகண்டு'. – *அகநா.* 16

எனவும், ஆண்பாலோடு பெண்பாலும், உயர்திணைப் பன்மை பாலோடு அத்திணை ஒருமைப்பாலும் மயங்க உவமிப்பினும் அவை தத்தம் உவமேயங்களைச் சிறப்பித்து வந்தமையால் வழுவாகாது இலக்கணம்ஆம் எனவும் கொள்க.

உவமேய அடைக்கு உபமான அடை குறையப் புணர்ப்பினும் பயப்பாடு உடைத்தாய் வந்தன வந்துழிக் காண்க.

[தான் சென்ற மரக்கலம் கவிழ்ந்துவிட்டதனால் தான் மாத்திரம் உயிர் உய்ந்துபோன மீகாமனைப்போலத் தன் துயரத்தைக் களைவார் பிறர் இன்றித் தனிப்படர் உழந்து வருந்தும் தலைவியாகிய என் நிலைமையைக் கண்ணால் கண்டு வைத்தும், 'உன்னைப் பிரிந்து செல்லேன் என்று கூறாமல் இருக்கிறாயே' – என்ற பகுதியில் நாய்கன் என்ற ஆண்பாற் பொருள் தலைவியாகிய பெண்பாற் பொருளுக்கு உவமை ஆயிற்று.

களவிற்கொண்ட பொருளோடு கையகப்பட்டாரைப் போலத் தலை கவிழ்ந்து நிலம் கிளைத்து நாணி நின்ற பரத்தை – என்ற பகுதியில் களவுடன்பட்டார் என்ற உயர்திணைப் பன்மைப் பாலோடு பரத்தை என்ற ஒருமைப்பால் மயங்கியவாறு.]

'நீலப் புருவம் குனிப்ப விழிமதர்ப்ப
மாலைக் குழல்சூழ்ந்த நின்வதனம் — போலும்;
கயல்பாய, வாசம் கவரும் களிவண்டு
அயல்பாயும் அம்போ ருகம்'

இதனுள் உவமேய அடைக்கு உவமானஅடை மிக்க தனால் வருவது ஒரு பயப்பாடு இன்மையின் வழுவாம் எனவும்,

[நீல நிறமுடைய புருவம் வளைய கண்கள் செழித்து நோக்க மாலையை அணிந்த கூந்தலால் சூழப்பட்ட நின்முகத்தை, கயல் பாய வாசனையைக் கவரும் களித்த வண்டுகள் தன் அயலில் பாயும் தாமரை நிகர்க்கும் – என்ற இப்பாடலில் புருவம் குனிப்ப, விழி மதர்ப்ப, மாலைக்குழல் சூழ்ந்த வதனம் கயல் பாய வாசம் கவரும் களிவண்டு அயலில் பாயும் அம்போருகத்துக்கு உவமை யாகக் கூறப்பட்டுள்ளது. இந்த உவமைக்கு மூன்று அடைகள் புணர்த்ததனால் இரண்டு அடைகளுடைய உபமேயத்திற்கு எந்த விதமான சிறப்பும் ஏற்பட வாய்ப்பு இன்மையால் இவ்வாறு பயன்தாரா அடைகளை உபமானத்திற்குப் புணர்ப்பது வழு என்பதாம்.]

'நாட்டம் தடுமாறச் செவ்வாய் நலம்திகழத்
தீட்டரிய பாவை திருமுகம் –– காட்டுமால்;
கெண்டைமீ தாட நறுஞ்சேய் இதழ்மிளிர
வண்டுசூழ் செந்தா மரை'

இதனுள் உவமேய அடைக்கு உவமானஅடை குறையப் புணர்த்ததனால் வருவது ஒருபயப்பாடு இன்மையின் வழுவாம் எனவும்,

[கண்கள் தடுமாறிப் பிறழ, சிவந்தவாயின் வனப்பு வெளிப்பட ஓவியத்திலும் தீட்ட ஒண்ணாத வனப்பினளாகிய இப்பெண்ணின் அழகிய முகத்தை, கெண்டைகள் தம்மீது உகள நறிய சிவந்த இதழ்கள் விளங்க வண்டுகள் சூழும் செய்தாமரை நிகர்க்கும் – என்ற இப்பாடலில் உபமானம் முகம்; உபமேயம் தாமரை; உபமானத்துக்கு நாட்டம் தடுமாறுதலும், செவ்வாய் நலம் திகழ்தலும் அடை; உபமேயத்திற்குக் கெண்டை மீதாடலும், நறுஞ்சேயிதழ் கிளர்தலும், வண்டு சூழ்தலும் அடை. உபமேய அடைக்கு உபமான அடைகள் இப்பாடலில் குறைவாக இருப்பதனால் இங்ஙனம் புணர்ப்பது வழு எனப்பட்டது.]

'மன்னவர்க்கு நாய்போல் வனப்புஉடையர் வாள்வயவர்;
மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கும்; — அன்னப்
பெடைபோலும் சந்திரன்; பைந்தடங்கள் போலும்;
மிடைமாசுஒன்று இல்லா விசும்பு'

இதனுள் இறப்ப இழிந்த நாயோடும் தடத்தோடும் இறப்ப உயர்ந்த சுடரோனோடும் அன்னப்பெடை ஆகிய பெண்பாலோடும் முறையே உயர்ந்த வயவரையும் விசும்பினையும் இழிந்த மின்மினியையும் ஆண்பாலாகிய சந்திரனையும் உவமித்ததனால் வருவது ஒருபயப்பாடு இன்மையின் வழூவாம் எனவும் கொள்க.

'பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழிமருங்கு அறியத் தோன்றும் என்ப' – தொ. பொ. 294

என்ப ஆகலின், இங்ஙனம் பெருமைபற்றியும் சிறுமை பற்றியும் உவமிக்குங்கால், நகைமுதலிய மெய்ப்பாடு எட்டும் பற்றித் தோன்றுதல் கொள்க.

[பெருமைபற்றியும் சிறுமைபற்றியும் உவமிக்குங்கால் மெய்ப் பாடு தோன்றச் செய்தலே ஏற்றது. வாளா இறப்ப உயர்ந்த பொருளையும் இறப்ப இழிந்த பொருளையும் உவமித்தல் வழு என்பது விளக்கப்பட்டது.]

'அவாப்போல் அகன்றதன் அல்குல்மேல், சான்றோர்
உசாப்போல உண்டே மருங்குல்'

என்பது பெருமைபற்றியும் சிறுமைபற்றியும் உவகை பிறந்தது.

[அவா என்பது அல்குலுக்குப் பெருமைபற்றிய உவமை. சான்றோர் உசா நுசுப்பிற்குச் சிறுமைபற்றிய உவமை. இங்ஙனம் உவமித்தற்கண் எண் மெய்ப்பாட்டினுள் ஒன்றாகிய உவகை நிகழ்ந்துள்ளமை காண்க.]

'கலங்கவிழ்த்த நாய்கன்போல் களைதுணை பிறிதுஇன்றி'

என்பது துன்பப்பெருக்கம் சொல்லி அவலம் பிறந்தது.

[கப்பலைக் கவிழ்த்த மீகாமன் தன் துயரம் களைவார் பிறர் இன்றித் தான் வருந்துவதுபோல, இன்ப நுகர்ச்சியை இழக்கும் தலைவி தன் துயர் துடைப்பார் பிறர் இன்றி வருந்துவாள் – என்ற உவமைக்கண் எண் மெய்ப்பாட்டினுள் ஒன்றாகிய அவலம் நிகழ்கின்றமை காண்க.]

'பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வரும்செல்லும் பேரும்என் நெஞ்சு' – முத்தொள்

என்பது பெருக்கம் பற்றி இளிவரல் பிறந்தது. பிறவும் அன்ன.

[முன்பு செல்வராய் இருந்து பின்னர் மிடிப்பட்டார், தம் துயரைத் துடைத்துக் கொள்ளும் செயற்கண் உளங்கொண்டு, பெரிய செல்வமுடையார் இல்லத்துக்குப் புறப்பட்டுப் போய் அவரிடம் தம் குறையைக்கூற இயலாதாராய், அவர் வீட்டிற்குப் போதலும் உட்புகுதலும் 'பின் யாது சொல்வார்களோ?' என்று மீளுதலும் போல, என் நெஞ்சு வருதலையும் செல்லுதலையும் போதலையும் செய்கிறது – என்ற இப்பாடற் பகுதியில் வறுமைப் பெருக்கம், காமப்பெருக்கம் என்ற இவற்றால் ஏற்படும் நலிவால் பிறரால் இகழப்பட்டு எளிமையுறும் இளிவரல் என்ற மெய்ப்பாடு பிறந்தவாறு.]

இன்னபிற ஆவன, மேல்கூறிய ஐயஉவமையும் பொதுநீங்கு உவமையும் பண்பு முதலியன பற்றிப் பொருளோடு பொருள் இயையவைத்தல் இன்மையின் வழுவாம் ஆயினும், அவற்றுள் ஐயஉவமை தாமரைகொல் முகம்கொல் என்புழித்தாமரைக்கும் முகத்திற்கும் ஒப்புமை கருதாது ஐயம் தோன்றுமையின் அதுவும் பொருளொடு பொருள் இயையவைத்தலேயாம் என அமைத்துக் கோடலும்,

பொதுநீங்குஉவமை 'நின்வாள்முகம், தானே உவமை தனக்கு' என்புழி, முன்னர் ஒத்தபொருளை எடுத்து ஓதி அவற்றினும் சிறந்தது இது என்றதுணையே அல்லது ஒப்புமை வேண்டாது கூறியது அன்மையின் இதுவும் பொருளோடுபொருள் இயையவைத்தலேயாம் என அமைத்துக் கோடலும், மேல்கூறும் உருவகத்துள் உவம உருவகம்,

'வதனமதியம் உதய மதியமே ஒக்கும்'

என்புழி முன்னர் உருவகம் செய்த மதியினைப் பின்னரும் உவமித்தல் புனருத்தியாகிய வழுவாம் ஆயினும் முன் இயல்பு ஆகிய விளக்கமும் குளிர்ச்சியும் நோக்கி வதனமதியம் என்று உருவகம் செய்து, பின்னும், மது நுகர்ந்தாள் முகத்துச் செய்கையால் உளவாகிய மதர்ப்பும் செம்மையும் நோக்கி உதயமதியம் ஒக்கும் என விசேடித்தமையின் வழுஇன்று என அமைத்துக் கோடலும் முதலிய எனக்கொள்க. பிறவும் அன்ன. (22)

[இனி, இந்நூலுள் கூறப்படாதனவாய் ஏனைய அணிநூல்களில் கூறப்பட்டுள்ள உவமைபற்றிய செய்திகள் பிற்சேர்க்கையில் கூறப்பட்டுள்ளன.]

ஒத்த நூற்பாக்கள்

'மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும்
பால்மாறு படுதலும் பாகுபா டுடைய'. — தண்டி 34

'ஒப்புமை இல்லதும் ஐயமும் உவமையின்
செப்பிய திறமும் உவமை உருவகமும்
உருவகத்து அடக்கலும் உணர்ந்தனர் கொளலே'.
— தண்டி 90]

22

உவமையுருபுகள்

642. போல மறுப்ப ஒப்பக் காய்ப்ப
நேர வியப்ப நளிய நந்த,
கடுப்ப ஏய்ப்ப மருள புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப,
அன்ன ஆங்கு மான விறப்ப
என்ன உறழத் தகைய நோக்க,
எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ, என்று
ஈரெட்டும் எட்டும் இருநான்கும் முறையே
தத்தம் மரபின் சாற்றும்மூன்று உவமைக்கும்
ஒத்த உருபாம்; உரைத்தமுத் திறத்தினும்
ஒன்ற நடுங்க ஏர ஏற்ப
வென்ற நாட மாற்றப் பொற்ப
ஆர அமர அனைய அவற்றோடு,
எதிர ஏய இயைய இகலத்
துணைப்ப மலையத் தூக்கே செத்தொடு
கெழுதேர் நகைமிகு சிவண் நிகர் இன்னவும்,
இன்னன பிறவும், எய்துதல் உரிய

இது மேற்கூறிய உவமைகளை வரையறை வகையானும் அஃது இன்மையானும் புலப்படுத்தும் உருபுகள் இவை என்கின்றது.

இ-ள் : போல என்பது முதலிய பதினாறும் அன்ன என்பது முதலிய எட்டும் என்ன என்பது முதலிய எட்டும் முறையே தம்முடைய வரலாற்று முறைமை-யானே முற்கூறிய உருப் பற்றியும் வடிவு பற்றியும் வரும் பண்பும், தொழிலும் பயனும் ஆகிய மூன்று உவமைக்கும் பொருந்திய உருபுகளாம். இங்ஙனம் கூறிய மூவகை உவமத்தின்கண்ணும் ஒன்ற என்பது முதல் இன்ன என்பது ஈருகக் கிடந்த இருபத்தாறும இவைபோல்வன பிறவும் உருபு ஆதற்குப் பொருந்துதல் உரியவாம் என்றவாறு.

இங்ஙனம் வரையறுத்தல் கடப்பாடு அல்லது வேறு காரணம் இன்று என்பார் 'தத்தம் மரபில் சாற்றும்' என்றும், இவையும் இவைபோல்வன பிறவும் உருபாம் இடத்து வினையெச்ச நீர்மையவாயும் பெயரெச்ச நீர்மைய-வாயும் முற்றுநீர்மையவாயும் இடைச்சொல் நீர்மைய-வாயும் வரும் என்பார் உருபு என்று ஒழியாது 'உருபாம்' என்றும் கூறினர்.

விளக்கம்

[*புலி போலப் பாய்ந்தான் — என்ற தொடரில் போல என்ற உவமை உருபு வினையெச்ச நீர்மைத்து.*

புலி அன்ன சாத்தன் — என்ற தொடரில் அன்ன என்ற உவமை உருபு பெயரெச்ச நீர்மைத்து.

வாய் பவளம் போலும் — என்ற தொடரில் போலும் என்ற உவமை உருபு வினைமுற்று நீர்மைத்து.

கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும் — என்ற தொடரில் போல் என்ற உவமை உருபு இடைச்சொல் நீர்மைத்து.]

வரலாறு

போல் – 'தன்சொல் உணர்ந்தோர் மேனி
பொன்போல் செய்யும் ஊர்கிழ வோனே'
– ஐங்குறு. 41

எனவும்,

மறுப்ப – 'மணிநிறம் மறுத்த மலர்ப்பூங் காயா'

எனவும்,

ஒப்ப – 'ஒண்செங் காந்தள் ஒக்கும் நின்நிறம்'

எனவும்,

காய்ப்ப – 'கணைக்கால் நெய்தல் காய்த்திய கண்ணியம்'

எனவும்,

நேர் – 'கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்'
– அகநா. வாழ்த்து

எனவும்,

வியப்ப – 'தண்தளிர் வியப்பத் தகைபெறு மேனி'

எனவும் வண்ணம் பற்றியும்,

கடுப்ப – 'நீர்வார் நிகர்மலர் கடுப்ப' – அகநா. 11

எனவும்,

ஏய்ப்ப – 'மோட்டுஇரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப'
– அகநா. 5

எனவும்,

மருள – 'வேய்மருள் பணைத்தோள் நெகிழ' – குறுந். 318

எனவும்,

புரைய – 'உரல்புரை பாஅடி' – கலி. 21

எனவும்,

ஒட்ட – 'முத்துஉடை வான்கோடு ஒட்டிய முலைமிசை'

எனவும்,

ஒடுங்க – 'பாம்புஉரு ஒடுங்க வாங்கிய நுசுப்பின்'

எனவும்,

ஓட - 'செந்தீ ஓட்டிய வெஞ்சுடர்ப் பருதி'

எனவும்,

நிகர்ப்ப - 'கண்ணொடு நிகர்க்கும் கழிப்பூங் குவளை'

எனவும் வடிவு பற்றியும் வரும் பண்பு உவமையும்,

அன்ன - 'எரிஅகைந்த அன்ன தாமரைப் பழனத்து'

– அகநா. 106

எனவும்,

ஆங்கு - 'கயம்நாடு யானையின் முகன்அமர்ந் தாங்கு'

– அகநா. 6

எனவும்,

மான - 'புலவுநுனைப் பகழியும் சிலையும் மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறுப் பிறழும்'

– பெரும். 269, 70

எனவும்,

விறப்ப - 'புலிவிறப்ப ஒலிதோற்றி'

எனவும்,

என்ன - 'புலிஎன்னக் கலிசிறந்து உராஅய்'

எனவும்,

உறழ - 'செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை'

– திருமுருகு. 5

எனவும்,

தகைய - 'பொருகளிற்று எருத்தின் புலித்தகைப்
பாய்த்துள்'

எனவும்,

நோக்க - 'மான்நோக்கம் நோக்கும் மடநடை ஆயத்தார்'

எனவும் வரும் தொழில் உவமையும்,

எள்ள - 'எழிலி வானம் எள்ளினன் தரூஉம்
கவிகை வண்கைக் கடுமான் தோன்றல்'

எனவும்,

விழைய - 'மழைவிழை தடக்கை வாய்வாள் எழினி'

எனவும்,

புல்ல – 'புத்தேள் உலகின் பொன்மரம் புல்ல'

எனவும்,

பொருவ – 'விண்பொரு புகழ் விறல்வஞ்சி' – புறநா. 11

எனவும்,

கள்ள – 'கார்கள்ள உற்ற பேரிசை உதவி'

எனவும்,

மதிப்ப – 'இருநிதி மதிக்கும் பெருவள் ஈகை'

எனவும்,

வெல்ல – 'வீங்குசுரை நல்லான் வென்ற ஈகை'

எனவும்,

வீழ – 'விரிபுனல் பேர்யாறு வீழ யாவதும்
வரையாது சுரக்கும் உரைசால் தோன்றல்'

எனவும் வரும் பயன் உவமையும் வந்தவாறு காண்க.

நளிய, நந்த என்பன வந்துழிக் காண்க.

[போல முதல் நளிய ஈருகிய எட்டும் உரு உவமத்துக்கும், கடுப்ப முதல் நிகர்ப்ப ஈருகிய எட்டும் மெய் உவமத்துக்கும், எள்ள முதல் வீழ ஈருகிய எட்டும் பயன் உவமத்துக்கும் அன்ன முதல் நோக்க ஈருகிய எட்டும் வினை உவமத்துக்கும் தொல்காப்பியனுர் வரையறுத்த உவம உருபுகளாம்.

ஆர, அமர, ஏர, ஏர்ப்ப, செத்து, அற்று, கெழுவ கொண்ட என்பனவற்றையும் பொதுவான உவம உருபுகளாகப் பேராசிரியர் குறிப்பிடுவார்.]

'ஒத்த' என்ற மிகையானே இங்ஙனம் வரையறை கூறியவற்றுள்,

'கடல்போல் தோன்றல காடுஇறந் தோரே' – அகநா. 1

என வடிவு உவமத்தின்கண்ணும்,

'ஒளித்து இயங்கு மரபின் வயப்புலி போல' – அகநா. 22

எனத் தொழில் உவமத்தின் கண்ணும்,

‘அழல்போல் வெங்கதிர் பைதுஅறத் தெறுதலின்’
– அகநா. 1

எனப் பயஉவமத்தின்கண்ணும் போலும் என்பதூஉம்,

‘பொன்உரை கடுக்கும் திதலையர்’ – திருமுருகு. 145

என உருஉவமத்தின்கண்ணும்,

‘கார்மழை முழக்கு இசை கடுக்கும்’

என வினைஉவமத்தின்கண்ணும்,

‘விண் அதிர் இமிழ்இசை கடுப்ப’ – மலைபடு. 2

எனப் பயஉவமத்தின்கண்ணும் கடுப்ப என்பதூஉம்,

‘செவ்வான் அன்ன மேனி’ – அகநா. கடவுள் வாழ்த்து

என உருஉவமத்தின்கண்ணும்,

‘இலங்குபிறை அன்ன விலங்குவால் வைஎயிறு’
– அகநா. கடவுள் வாழ்த்து.

என வடிவு உவமத்தின்கண்ணும்,

‘மாரி அன்ன வண்கை’ – புறநா. 153

எனப் பயஉவமத்தின்கண்ணும் அன்ன என்பதூஉம் கூறியவாறு அன்றிச் சிறுபான்மை பிறழ்ந்து வருதலும் கொள்க.

ஏனையவும் பிறழ்ந்து வருவன உளவேல் காண்க.

‘குன்றியும் கோபமும் ஒன்றிய உடுக்கை’

என உருப் பற்றியும்

‘வேய்ஒன்று தோள்ஒருபால் வெற்புஒன்று தோள்ஒருபால்’

என வடிவு பற்றியும் வரும் பண்பு உவமத்தின் கண்ணும்,

‘வேல்ஒன்று கண்ணார்மேல் வேட்கைநோய் தீராமோ
கோல்ஒன்று கண்ஒன்று கொண்டு’

என வினைஉவமத்தின் கண்ணும்,

‘மழைஒன்று வண்தடக்கை வள்ளியோர்ப் பாடி’

எனப் பயஉவமத்தின்கண்ணும் ஒன்ற என்பதூஉம்,

'படங்கெழு நாகம் நடுங்கும் அல்குல்'

என வடிவுபற்றிப் பண்பு உவமத்தின்கண் கடுப்ப என்பதூஉம்,

'முத்துஏர் முறுவலாய்' – கலி. 28

என உருப்பற்றிப் பண்பு உவமத்தின்கண் ஏர என்பதூஉம்,

'வாய்என்ற பவளம்'

என உருப்பற்றிப் பண்பு உவமத்தின்கண் என்ற என்பதூஉம்,

'வேயொடு நாடிய தோள்'

என வடிவுபற்றிப் பண்பு உவமத்தின்கண் நாட என்பதூஉம்,

'மணிநிறம் மாற்றிய மாமேனி'

என உருப்பற்றிய பண்பு உவமைக்கண் மாற்ற என்பதூஉம்,

'மதியம் பொற்ப மலர்ந்த வாள்முகம்'

என வடிவு பற்றிய பண்பு உவமத்தின்கண் பொற்ப என்பதூஉம் வந்தன. இவற்றுள் ஒழிந்த உவமை பற்றி வந்தனவும், காட்டாது ஒழிந்த உருபுகளும் வந்துழிக் காண்க.

இன்ன பிறவாவன: சீர், இற்று, ஐந்தாம் வேற்றுமை உருபாகிய இன் முதலியனவாம்.

'பொற்கலத்து ஊட்டிப் புறந்தரினும் நாய்பிறர்
எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும் — அச்சீர்
பெருமை உடைத்தாக் கொளினும்கீழ் செய்யும்
கருமங்கள் வேறு படும்' – நாலடி. 206

எனச் சீர் வந்தது. பிறவும் வந்துழிக் காண்க,

'உவமைச் சொல்லே வரம்புஇகந் தனவே'

என்ப ஆகலின், எடுத்து ஓதி ஒழியாது 'இன்னபிறவும்' என்றார். 23

ஒத்த நூற்பாக்கள்

[இவ்வுவமை உருபுகள் பற்றி இலக்கண நூல்கள் குறிப்பிடுவனவற்றை நோக்குவாம், தொல்காப்பியனார் உவமவியலில்,

'அவைதாம்,
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
வென்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய விறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மருள ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓடப் புரைய என்றவை எனாஅ
ஆறாறு அவையும் அன்ன பிறவும்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே'. – *தொ. பொ.* 286

'அன்ன ஆங்க மான விறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்'. – 287

'அன்னஎன் கிளவி பிறவொடும் சிவணும்'. – 288

'எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங்கு எட்டே பயனிலை உவமம்'. – 289

'கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்று
அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்'. – தொ. பொ. 290

'போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தஎன்று
ஒத்துவரு கிளவி உருவின் உவமம்'. – 291

'தத்தம் மரபின் தோன்றும்மன் பொருளே'. – 292

'நாலிரண்டு ஆகும் பாலுமா ருண்டே'. – 293

என்று விளக்கியுள்ளார்.

'ஆங்க,
ஒப்புமைச் சொற்களைச் செப்புங் காலை
ஒப்ப உறழ உணர்ப்ப உரப்ப
வேய்ப்ப மெத்த மெய்த்த விளக்கப்
புரையப் பொருந்தப் பொற்பக் கடுப்பக்
குரையக் கதழக் கருதக் கூட
நிகர மேவ நோக்க ஓராங்கு
இகல ஏய இயைப்ப ஒப்ப
மான மருள மறல நீக்க
நீர அனைய நோக்கத் தொடிய
நுணங்கப் படிய துணிப்ப உன்ன
வணங்க வாவ மலைய என்ன
வெப்பத் தொழப்ப விட்ட இருள
இன்ன அன்ன என்று இவையும்
துன்னும் என்ப துணிந்திசி னோரே'. – வீ. 96, மே

'போல மானப் புரையப் பொருவ
நேரக் கடுப்ப நிகர நிகர்ப்ப
ஏர ஏய மலைய இயைய
ஒப்ப எள்ள உறழ ஏற்ப
அன்ன அனைய அமர ஆங்க
என்ன இகல விழைய எதிரத்
துணைதூக்கு ஆண்டுஆங்கு மிகுதகை வீழ
இணைசிவண் கேழ்அற்றுச் செத்தொடு பிறவும்
நவைதீர் பான்மை உவமைச் சொல்லே'. – தண்டி. 35

'பொதுவினும் சிறப்பினும் புணர்ந்துள வாகி
இதுவழக்கு இதுசெயுள் எனுமீ ரிடத்தும்
வெளிப்படை குறிப்பென விழுமிய நெறியால்
கொளப்படும் உவம உருபினைக் கூறின்
அன்ன போல அனைய மான
என்ன நேர விறப்ப நிகர்ப்ப
நாட நளிய நடுங்க நந்த
ஓட ஒன்ற ஒடுங்க ஒட்டக்
கள்ளக் கருதக் காட்டக் கடுப்ப
எள்ள விழைய எதிர ஏர்ப்ப
மருள மலைய மாற மதிப்ப
என்ற வந்த ஏர ஏய
ஆங்க ஒப்ப அமர இயையப்
புல்ல உறழப் புரையப் பொருவ
அனைதுணை கெழுவீழ் தழைசெத்து அற்றுஅணி
என்றிவை நாற்பான் எட்டும் பிறவும்
ஒன்றிய திறத்தால் ஒழுகுதல் உளவே'. - *மா.* 113

பிறவும் என்றதனால் வெல்ல, வென்ற, வியப்பு, ஒத்த, ஒக்கும், தகைய, தகைப்ப, பொறப்ப, காய்ந்த, நோக்க, மருளும், புரையும், துலை, ஐந்தன் உருபாகிய இன், என — முதலிய கொள்க.] (23)

உருவகவணி - இலக்கணம்

643. உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
ஒன்றுஎன மாட்டின்அஃது உருவகம் ஆகும்.

நிறுத்த முறையானே உருவக அலங்காரம் கூறுவன - வற்றுள் இஃது அதன்பொது இலக்கணம் கூறுகின்றது.

இ-ள் : உவமானப் பொருளையும் உவமேயப் பொருளையும் வேறுபாடு ஒழிவித்து ஒன்று என்பது ஓர் உணர்வு தோன்ற ஒற்றுமை கொளுத்தின், அது மேல் கூறிய உருவகம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

விளக்கம்

[உவமை அணியில் உபமானம் உபமேயம் உவமைஉருபு பொதுத்தன்மை என்ற நான்கும் இருக்கும். உபமானம் முன்னும் உவமைஉருபும் பொதுத்தன்மையும் இடையிலும் உபமேயம் ஈற்றிலும் வரும். உவமைஉருபும் பொதுத்தன்மையும் மறைந்து வருதலும் உண்டு.

உருவக அணியில் உபமேயம் முன்னும் உபமானம் பின்னும் உருவக உருபு இடையிலும் வரும். உருவக உருபு மறைதலும் உண்டு. உருவகத்தில் உபமானம் உபமேயம் இரண்டும் வேறுபாடு நீங்கி ஒன்றாகவே கொள்ளப்படும்.

பவளவாய் என்பது உவமை.

வாய்ப்பவளம் என்பது உருவகம்.

வாய்பவளம் என்ற தொடர் பவளம் போலும் வாய் என்றே பொருள் படுதலின் உவமையாம் என்க. – மாறன். 115

இவ்வுருவகம் மிகை ஒற்றுமை உருவகம், குறை ஒற்றுமை உருவகம், அவையில் உருவகம், மிகையதன் செய்கை உருவகம், குறையதன் செய்கை உருவகம், அவையிலதன் செய்கை உருவகம் என்று அறுவகையதாகச் சந்திராலோகம் குறிப்பிடும்.

'உயர்புகழ்நங் கோனும் உருவுடைய மாரன்
வடிவழகை நாடும்என் கண்'

இப்பாடலில் கோன் மாரனை உருவகம் செய்யப்பட்டுள்ளான். மாரனுக்கு இல்லாத உருவம் கோனுக்கு அடையாகக் கூறப் பட்டமையின் இது மிகை ஒற்றுமை உருவகம்.

'எல்லாரும் ஏத்துபுகழ் ஏந்தலிவன் நெற்றிவிழி
இல்லாத சங்கரனே யாம்'

தலைவனைச் சிவபெருமானை உருவகித்துச் சிவபெருமானுக்கு உரிய நெற்றிவிழியை நீக்கியதால் இது குறை ஒற்றுமை உருவகம்.

'பவக்கடல் கடந்து முத்தியங் கரையில்
படர்பவர் திகைப்பற நோக்கி
தவக்கலன் நடத்த வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கயிலைநா யகனே'

பவமாகிய கடல், முத்தி ஆகிய கரை, தவமாகிய கலன் என்ற உருவகங்கள் மிகுதியோ குறைவோ இன்றிச் சமமாக அமைந்தமையின் மிகை குறையில் ஒற்றுமை உருவகம்.

'மங்கை வதன மதியம் களங்கமுடைத்
திங்களை இங் கெள்ளல் செயும்'

வதனமாகிய மதியத்திற்குக் களங்கமின்மையாகிய மிகைச்செய்தி குறிப்பிடப்பட்டமையின் இது மிகையதன் செய்கை உருவகம்.

'பொருதிரைசேர் தண்பாற் புணரி பிறவா(வேறு)
ஒருதிருஇம் மாதென் றுணர்'

இம் மாதாகிய திரு பாற்கடலில் பிறவாதவள் என்ற குறைச் செய்கை கூறியது குறையதன் செய்கை உருவகம்.

'இம்மான் முகமதியே இன்பு செயுமதனால்
அம்மா மதிப்பயனென் னும்'

இம்மான் முகமதி என முகத்திற்கும் மதியத்திற்கும் மிகையும் குறையும் சொல்லாமல் சமன் செய்தமையால் இது அவையிலதன் செய்கைஉருவகம்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் — தண்டி. 36

'முக்கியப் பொருளைப் புடைப்பொருள் எனமதித்து
இருபெய ரொட்டாய் இசைப்பதும் உருவகம்'. – *மா.* 114

'பொருள்முத லினுமுவ மையதாம் புணர்வழி
ஒற்றிடை தோன்றல் திரிதலோ டொன்றிய
மற்றதற் குறுசொல் விரியா வயினே', ,, 151

'அதுவே,
தொகையினும் விரியினும் தொடர்இரு வகைத்தே'. *மா.* 116

'அடையிடை புணரினும் கடிநிலை இலவே'. ,, 117

'ஒருதொடர் பினுள்இரு மையுமுறல் உளவே'. ,, 118

'உரைத்தவை இனிவரும் விரிக்குஉறு பொதுவே'. ,, 119

'உருவகம் என்ப உவமை வேறு
பொருள்வேறு இன்றிப் புணரத் தொடுத்தலே'. *-தொ. வி.* 341

'உவமைப் பொருளுவ மேயப் பொருளையும்
வேறுபா டொழித்தொன்று எனும்பொருள் விளங்க
உரைப்பது உருவக மாம்உரை தரினே'. *-மு. வீ. பொ.* 22

'ஒற்றுமை யாலதன் செய்கையி னுலுவ மேயமதில்
பற்றுவ மானத்தை ஆரோபித் தாலிரு பான்மையுடன்
உற்றிடும் உருவகம் தான்மிகை யுங்குறை யும்இரண்டும்
மற்றதும் சேர்ந்திட ஆருகும் என்பர் அறிஞர்களே'.
– குவ. 10

'ஒற்றுமை செய்கை ஒன்றால் புனைவுளி
தன்னில்அல் பொருளைத் தாக்குவது உருவகம்'. *– ச.* 12

'அதுவே,
ஒற்றுமை அதன்செய்கை என்றுஇரு வகைத்தாய்
மிகைகுறை இன்மை எனஇரு மூன்றே'. *- ச.* 13

உருவகவிரி

644. மாட்டேற் றுரைதொகூஉம் தொகைஉரு வகமும்[1]
மீட்டுஅது விரித்த விரிஉரு வகமும்[2]
சொற்றது தொகுத்தும் தொகாதும் ஒருதொடரின்
உற்றுவரு தொகைவிரி உருவகத் தானும்[3]
பலபொருள் உருவகப் படுத்தின்அப் பலவும்
இயைவன புணர்க்கும் இயைபுஉரு வகமும்[4]
வேட்டன உருவகம் வேறுவேறு இயற்றி

ஈட்டுதல் புரிந்த இயைபுஇல்உரு வகமும்[5]
ஊக்குபொரு ளுறுப்பெலாம் உருவகம் செயின்சில
நீக்கின செயும்விய னிலீஉரு வகமும்[6]
ஓர்ந்துஅடை உருபில் துற்றதை அவற்றால்
தேர்ந்துஉரு பிக்கும் சிறப்புஉரு வகமும்[7]
உருவகம் செய்ததற்கு உருமரபு இவைஎன
விரியக் காட்டும் விரூபகத் தானும்[8]
பாங்கினது உருவகப் படுத்தியது பாங்குஇலாத்
தீங்குதரல் பிறிதின்எனச் செயும்சமா தானமும்[9]
உருவகம் செய்ததைப் பெயர்த்தும்வேறு ஒன்று
உருவகம் செயும்உரு வகஉரு வகமும்[10]
ஒட்டிய உறுப்பின்ஒன்று உருவகம் ஆகக்
கட்டுரை செயும்ஏ காங்கஉரு வகமும்[11]
எண்ணிய அவயவம் எவையும்உரு வகமாக்
கண்ணுதல் செயும்அநே காங்கவுரு வகமும்[12]
உற்ற உறுப்புஉறுப் புடையதுஎவ் வகையினும்
முற்றஉரு வகம்செயும் முற்றுஉரு வகமும்[13]
ஊக்கிய உறுப்பே உருவகம் ஆக
ஆக்குதல் செயும்அவ யவவுரு வகமும்[14]
ஊற்றம்ஆர் அங்கியே உருவகம் ஆக
ஆற்றல்சால் அவயவி உருவகம் அவற்றோடு[15]
உவமை[16] ஏது[17] வேற்றுமை[18] விலக்கே[19]
அவநுதி[20] சிலேடை[21] என்றுஅவையு முளப்பட
உளம்புகு நெறியான் உரைத்தமூ வேழும்
விளம்பிய உருவக விரிஎனப் படுமே.

இஃது உருவகவிரி இத்துணைத்து என்கின்றது.

இ–ள்: மாட்டேற்று உரை தொகூஉம் தொகை உருவகம் முதலாக ஊற்றம் ஆர் அங்கியே உருவகம் ஆக ஆற்றல்சால் அவியவி உருவகம் ஈருகக் கிடந்த

பதினைந்தோடு உவமை முதலாகச் சிலேடை ஈறாகக் கிடந்த ஆறும் கூடத் தொகுதலான் உள்ளம் கொள்ளும் முறையான் சொல்லப்பட்ட இருபத்தொன்றும் மேல் கூறிய உருவக அலங்காரத்தின் விரி என்று சொல்லப் படும் என்றவாறு.

[உருவக விரி பதினைந்தும், ஏனைய அணிகளோடு கூடிய உருவக வகை ஆறுமாக இருபத்தொரு வகைகள் இந்நூற்பாவில் சொல்லப்பட்டுள்ளன. உருவக விரி பற்றி ஏனைய நூல்கள் கூறுவனபோலப் பட்டியல் மட்டும் தாராமல் அவ்வவற்றின் இலக்கணமும் நூற்பாவிலேயே விளக்கிக் கூறியுள்ள இந்நூலின் தனிச் சிறப்பு குறித்து உணரத்தக்கது.]

ஒத்த நூற்பாக்கள்

'தொகையே விரியே தொகைவிரி எனாஅ
இயையே இயைபிலி வியனிலை எனாஅ
சிறப்பே விருபகம் சமாதானம் எனாஅ
உருவகம் ஏகம் அநேகாங்கம் எனாஅ
முற்றே அவயவம் அவயவி எனாஅ
சொற்றஐம் மூன்றும் மற்றதன் விரியே'. – *தண்டி.* 37

'உவமை ஏது வேற்றுமை விலக்கே
அவநுதி சிலேடைஎன்று அவற்றொடும் வருமே'. – *தண்டி.* 38

'தெற்றுத் தொகைஅவ் வியம்ஏதுப் பண்பு விரிஉவமை
மற்றுச் சிலேடை சகல மியைபு வரப்புணர்ந்த
முற்றுத் தொகைவிரி தன்னோ டயவவி முந்துறுப்புப்
பெற்றுப் பயில்தத்து வாபனந் தன்னோ டியைபிலியே'.
– *வீ.* 160

'தாக்குஞ் சமாதான மேவிதி ரேகம் தடைமொழியாம்
ஊக்கும் உருவகத் தோடொன் றுருவக மேகாங்கமென்
றூக்கு முருவகம் ஐந்நான்கொன் றும்பிற வந்தனவும்
நீக்கு வனவிட்டுத் தொல்லோ ருரைப்படி நேர்ந்தறியே'.
– *வீ.* 161

'இயைபுஇயை பின்மை ஏக தேசம்
ஒருபொருள் பலபொருள் உருவகம் சிறப்பே
விருத்தம் அவிருத்தம் நட்பு வியனிலை
ஏக அங்கம் அநேக அங்கம்
அவயவம் அவயவி முற்றுஎன வாய்ந்த
நவையறு சிறப்பின் நாலுன்கு அதன்விரியே'. - மா. அ. 120

'உரைபெறு சிலேடைவேற் றுமையுடன் ஏது
அபநுதி உவமையென்று அவற்ருெடும் விரவும்' - மா. 121

தொகையுருவகம்

மாட்டேற்று உரை தொகூஉம் தொகை உருவகம் வருமாறு :

'அங்கை மலரும், அடித்தளிரும், கண்வண்டும்,
கொங்கை முகிழும், குழற்காரும், - தங்கியதுஓர்
மாதர்க் கொடிஉளதால்; நண்பா! அதற்குஎழுந்த
காதற்கு உளதோ கரை'

என வரும்.

[உபமேயமும் உபமானமும் ஒன்று என்று மாட்டெறியும் சொல் 'ஆகிய' என்பது. அச்சொல் மறைய உபமேயமும் உபமானமும் இணைந்து இருபெயரொட்டாக அமைவது தொகை உருவகமாம்.

'நண்பா! கையாகிய மலரும் அடித்தளிரும் கண்களாகிய வண்டும் கொங்கையாகிய மொட்டும் கூந்தலாகிய மேகமும் பொருந்திய விருப்பம்தரும் கொடி ஒன்றனிடத்து எனக்கு ஏற்பட்ட காதல் கரைகடந்தது' - என்று தலைவன் தன்நிலையைப் பாங்கனிடம் சாற்றியதாக அமையும் இப்பாடலில், கை மலர், அடித்தளிர், கண்வண்டு, கொங்கை முகிழ், குழற்கார் என்பன உருவக உருபு இடை வரப்பெருமையால் தொகை உருவகங்களாம்.

'மிக்க உவமை விரியாது உரையின்
தொக்கு நிற்பது தொகைஉரு வகமே'. – வீர. உரை. 160
'தொகுத் துரைப்பது தொகைஎனப் படுமே'.
– மு. வீ. பொ. 23]

விரி உருவகம்

மீட்டு அது விரித்த விரி உருவகம் வருமாறு :

'கொங்கை முகையாக, மென்மருங்குல் கொம்பாக,
அங்கை மலரா, அடிதளிரா – திங்கள்
அளிநின்ற மூரல் அணங்காம், எனக்கு
வெளிநின்ற வேனில் திரு'

எனவரும். இவ்விரண்டும் எல்லாவற்றிற்கும் பொது.

[உவமேயமும் உபமானமும் ஒன்று என்று கூறும் உருவகத்திற்கு விரியாக அமையும் ஆகிய ஆக முதலிய சொற்களை விரித்து இருப்பது விரிஉருவகமாம். உருவகத்தின் பல வகைகளுள்ளும் தொகைஉருவகமும் விரிஉருவகமும் கலந்துவரும் என்பது உணரப்படும்.

'எனக்குக் காட்சி வழங்கிய திருமகள், கொங்கையாகிய மொட்டும் இடையாகிய கொம்பும் கையாகிய மலரும் அடியாகிய தளிரும் நிலவுபோன்ற முறுவலும் உடைய அணங்காவாள் – என்று தலைவன் பாங்கனிடம் தலைவி இயல்கூறிய இப்பாடலில், கொங்கை முகையாக, மென்மருங்குல் கொம்பாக, அங்கை மலராக, அடி தளிராக என்பன விரிஉருவகங்களாக அமைந்துள்ளமை காண்க.

'கருதிய பொருளைக் கலையின் தொகாமல்
விரியத் தொடுப்பது விரிஉரு வகமே'. – வீ. உரை. 160
'விரிந்து நிற்பது விரிஎனப் படுமே'. – மு. வீ. பொ. 24]

தொகைவிரியுருவகம்

சொற்றது தொகுத்தும் தொகாதும் ஒருதொடரின் உற்றுவரு தொகை விரி உருவகம் வருமாறு :

'வையம் தகளியா, வார்கடலே நெய்யாக,
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடர்ஆழி யான்அடிக்கே சூட்டுவன் சொல்மாலை,
இடர்ஆழி நீங்குகவே என்று'

என வரும்.

[ஒரே பாடலில் சில உருவகங்களை விரித்தும், சில உருவகங்களைத் தொகுத்தும் பாடுவது தொகைவிரி உருவகமாம்.

உலகத்தை அகலாகவும், கடல்நீரையே நெய்யாகவும், கதிரவனையே ஒளிப்பிழம்பாகவும் கொண்டு, இடர்க்கடல் நீங்குக என்று சொல்மாலையை ஆழியான் அடிக்கண் சூட்டுவன் – என்ற இப்பாசுரத்தில், வையம் தகளியா – கடலே நெய்யாக - சுடரோன் விளக்காக - என்ற விரிஉருவகங்களும், சொல்மாலை - இடர்ஆழி என்ற தொகைஉருவகங்களும் அமைந்துள்ளமை காண்க.

'தொகையும் விரியும் தொக்குடன் கிளப்பது
தொகைவிரி என்று சொல்லினர் புலவர்'. – வீ. உரை. 160

'தொக்கும் விரிந்தும் நிற்பது தொகைவிரி'. – மு. வீ. பொ. 25]

இயைபுருவகம்

பலபொருள் உருவகப் படுப்பின் அப்பலவும் இயைவன புணர்க்கும் இயைபு உருவகம் வருமாறு:

'செவ்வாய்த் தளிரும், நகைமுகிழும், கண்மலரும்,
மைவார் அளக மதுகரமும், – செவ்வி
உடைத்தாம் திருமுகம்என் உள்ளத்து வைத்தார்,
துடைத்தாரே அன்றோ துயர்'

என வரும். இதனுள் தளிர் முதலியன தம்முள் இயைபு உடைமையின் இப்பெயர்த்து ஆயிற்று.

[உருவகம் செய்யப்பட்ட பொருள்கள் பலவும் ஒன்றற்கு ஒன்று இயைபுடையதாக அமைப்பது இயைபு உருவகமாம்.

வாய்த்தளிரும், புன்முறுவலாகிய மொட்டும், கண்களாகிய மலரும், கூந்தலாகிய வண்டும் ஆகிய இவற்றை அழகிய முகத்துக் கொண்ட தலைவி என் மனத்துயரைத் தீர்த்தாள் – என்ற இப் பாடலில், தளிர், மொட்டு, மலர், வண்டு என்று ஒன்றோடொன்று இயைபுடைய பொருள்கள் உருவகம் செய்யப்பட்டமை இயைபு உருவகமாகும்.

'அசைவில் கருவி யவற்றால் தொழிலில்
இசையும் என்பது இயைபுஉரு வகமே'. – வீ. உரை. 160

'உருவகம் பலபொரு ளேயும்உளுற் றுங்கால்
தம்முள் இயைபுடைத் தாக உருவகம்
செய்வது இயைபுஎனச் செப்பினர் புலவர்'. – மு. வீ. பொ. 26]

இயைபிலுருவகம்

வேட்டன உருவகம் வேறுவேறு இயற்றி ஈட்டுதல் புரிந்த இயைபுஇல் உருவகம் வருமாறு :

'தேன்நக்கு அலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனல் பவளக் கொடியாகத் – தானம்
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்,
புழையார் தடக்கைப் பொருப்பு'

என வரும்.

[உருவகம் செய்யப்பட்ட பொருள்கள் ஒன்றோடொன்று பொருள்இயைபு இல்லையாம்படி அமைப்பது இயைபுஇல் உருவகமாகும்.

துதிக்கையை உடைய யானையாகிய மலை (விநாயகர்) கொன்றைமலர் பொன்னாகவும், சிவந்த சடையே பவளக்கொடி யாகவும், மதநீர் மழையாகவும், கொம்பு பிறைமதியாகவும் காட்சி வழங்குகிறது – என்ற இப்பாடலில், உருவகம் செய்யப் பட்ட பொன், பவளக்கொடி, மழை, பிறை, மலை என்ற இவற்றினிடையே பொருள் இயைபு இன்மை காணப்படுகிறது.

'பலபொருள் இயையாப் பண்பின் வருவது
இயைபிலி உருவகம் என்மனார் புலவர்'. – வீ. உரை. 160

'இயைபிலி இயைபுடைத் தின்றிப் போதுவது
ஆகும் என்மனார் அறிந்திசி னோரே'. – மு. வீ. பொ. 27]

வியனிலையுருவகம்

ஊக்கு பொருள் உறுப்பு எலாம் உருவகம் சில நீக்கின செய்யும் வியனிலை உருவகம் வருமாறு :

'செவ்வாய் நகைஅரும்பச் செங்கைத் தளிர்விளங்க
மைவாள் நெடுங்கண் மதர்த்துஉலவச் – செவ்வி
நறவுஅலரும் சோலைவாய் நின்றதே, நண்பா !
குறவர் மடமகளாம் கொம்பு'

என வரும்.

ஒரு பொருளின் உறுப்புக்கள் பலவற்றுள் சிலவற்றை உருவகம் செய்து சிலவற்றை உருவகம் செய்யாது விடுத்து உறுப்பியாகிய அதனை உருவகம் செய்வது வியனிலை உருவகமாம். 'நண்பா ! செவ்வாய் எயிறுகளை அரும்பவும், செங்கையாம் தளிர் விளங்கவும், நெடுங்கண் செழித்து உலவவும், குறவர் மடமகளாம் பூங்கொம்பு சோலையில் நின்றது – என்று தலைவன் பாங்கனிடம் தலைவி இயல் இடம் கூறிய இப்பாடலில், நகை அரும்புதல் தளிர் விளங்குதல் என்ற உறுப்புப் பற்றிய உருவகங்களும், குறவர் மகளாம் கொம்பு என்ற உறுப்பி பற்றிய உருவகமும் அமைய, கண் என்ற உறுப்பு உருவகம்செய்யாது விடுக்கப்பட்டவாறு காண்க. பற்கள் முல்லை மொட்டுக்களாகக் குறிப்புருவகமாயின.

'ஒன்றன்அங் கம்பல வற்றினுள் ஞஞ்சில
உருவகம் செய்துசெய் யாமலும் உரைப்பது
வியனிலை என்மனார் மெய்உணர்ந் தோரே.' – மு. வீ. பொ. 28]

சிறப்புருவகம்

ஓர்ந்து அடை உருபில் துற்றதை அவற்றால் தேர்ந்து உருபிக்கும் சிறப்பு உருவகம் வருமாறு :

'விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ காமன்,
சுரநதிபாய், உச்சி தொடுத்த — அரிதிருத்தாள்
கூம்பாக, எப்பொருளும் கொண்டு, பெருநாவாய்
ஆம்பொலிவிற்று ஆயினதால்; அன்று'

என வரும்.

[ஒரு பொருளுக்குச் சிறந்த அடைகளைக் கொடுத்து அவ்வடைகளை உருவகம் செய்து அவற்றால் பொருளுக்குச் சிறப்புத்தந்து பொருளையும் உருவகிப்பது சிறப்பு உருவகமாம்.

பிரமனை மீகாமனாவும், ஆகாய கங்கையைப் பாயாகவும், திருமால் பெருநிலம் கடந்த திருவடியைக் கூம்பாகவும் கொண்ட உலகம் எல்லாப் பொருளையும் தன்னகத்துக்கொண்ட நாவாயாகியது – என்ற இப்பாடலில், பூமிக்கு அடையாகிய நான்முகன், சுரநதி, அரிதிருத்தாள் என்பனவற்றை மீகாமன், பாய், கூம்பு என்று உருவகம் செய்து அங்ஙனம் உருவகம் செய்த தற்கு ஏற்பப் பூமியை நாவாயாய் உருவகம் செய்தது காண்க.

இது சகல உருவகம் எனவும் பெயர் பெறும்.

'ஒருபொருட்டு ஏற உருவகம் பலமொழி
தருமெனின் உருவகம் சகல மாகும்' - வீ. உரை. 160]

விரூபகம்

உருவகம் செய்து அதற்கு உருமரபு இவைஎன விரியக் காட்டும் விரூபகம் வருமாறு :

'தண்மதிக்குத் தோலாது, தாழ்தடத்துள் வைகாது,
முள்மருவும் தாள்மேல் முகிழாது, — நண்ணி,
இருபொழுதும் செவ்வி இயல்பாய் மலரும்,
அரிவை வதனம் புயம்'

என வரும்.

[ஒரு பொருளை மற்றொரு பொருளாக உருவகம் செய்தும், உருவகம் செய்வதற்கு ஏலாப் பெற்றிகளை எடுத்துரைப்பது விரூபகமாகும். விரூபகம் – உருவகம் செய்தற்கு ஏலாதது. அம்புயம் மதிக்குத் தோற்கும்; குளத்தில் தங்கும்; முள் தங்கிய தண்டின்மேல் மலரும்; பகலில் மலர்ந்து இரவில் கூம்பும். ஆனால் இப்பெண்ணின் முகத்தாமரை மதிக்குத் தோற்காது; குளத்தில் தங்காது; முள் நிரம்பிய தண்டின்மேல் மலராது; பகல் இரவு என்ற இருபோதும் அழகாக மலர்ந்து காணப்படும் – என்ற இப்பாடலில், முகத்தைத் தாமரையாக உருவகம் செய்து தாமரைக்கு உள்ள குறைபாடுகள் முகத்திற்கு இல்லை என்று விளக்கியமை காண்க.

இது தெற்றுருவகம் எனவும் பெயர் பெறும்.

'எஞ்சிய பண்பில் இயையினும் ஒழிதொழில்
செஞ்சொலால் கிளப்பது தெற்றுரு வகமே.' – வீ. உரை. 160

இது விரோத உருவகம் என்றும் வழங்கப்படும்.

(விருத்த உருவகம்) – மா. அ. 120]

சமாதானவுருவகம்

பாங்கினது உருவகப்படுத்தி அது பாங்கு இலாத் தீங்கு தரல் பிறிதின் எனச் செய்யும் சமாதான உருவகம் வருமாறு:

'கைகாந்தள், வாய்குமுதம், கண்நெய்தல், காரிகையீர்!
மெய்வார் தளிர், கொங்கை மென்கோங்கம் — இவ்வனைத்தும்
வன்மைசேர்ந்து ஆவி வருத்துவது, மாதவம்ஒன்று
இன்மையே அன்றோ எமக்கு?'

என வரும்.

[ஒரு பொருளைத் தனக்கு நன்மை செய்வதாக உருவகம் செய்து, அதுவே தனக்குத் தீங்கு தருவதாகக் கூறி, அங்ஙனம் தீங்கு தருவதற்கும் வேறு காரணம் உண்டு என்று கூறுவது

சமாதான உருவகம். இப்பெண்களின் கை காந்தட்பூ; வாய் குமுதப்பூ; கண் நெய்தற்பூ; இவர் உடல் தளிராகும்; கொங்கை கோங்க மொட்டாகும். இத்தகைய மெல்லிய பூக்களும் தளிரும் வன்மை பெற்று என் உயிரை வருத்துவதற்குக் காரணம் யான் தவம் செய்யாமையேயாம் – என்று தலைவியும் தோழியும் ஒருங்கிருந்தவழியும் சேட்படுக்கப்பட்ட தலைவன் தனக்குள் கூறிக்கொள்ளும் இப்பாடலில், கை முதலியன நலம் தரும் பூக்களாக உருவகம் செய்யப்பட்டும், அவற்றால் துன்பம் ஏற்படுவதற்கு அவை காரணமல்ல; போகூழே காரணம் என்று கூறப்பட்டமை காண்க.

'சீரிய உருவகம் செப்பின் பயன்தரக்
காரணம்கற் பித்தல் சமாதான மாகும்.' – வீ. உரை. 161

இதனை மாறன்அலங்காரம் நட்புருவகம் என்று குறிப்பிடும்.

– மா. அ. 120]

உருவகவுருவகம்

உருவகம் செய்ததைப் பெயர்த்தும் வேறு ஒன்று உருவகம் செய்யும் உருவக உருவகம் வருமாறு :

'கன்னிதன் கொங்கைக் குவடாம் கடாக்களிற்றைப்
பொன்நெடுங் தோள்குன்றே புனைகந்தா, — மன்னவநின்
ஆகத் தடம்சே வகமாக, யான்அணைப்பல்;
சோகித்து அருளேல் துவண்டு'

என வரும்.

[உருவகம் செய்த ஒன்றனையே மீண்டும் உருவகம் செய்வது உருவக உருவகமாகும்.

தலைவனை ஆற்றுவிக்கும் பாங்கன் 'கன்னியின் கொங்கை மலையாகிய களிற்றினை, உன் தோள்களாகிய குன்றுகளே கட்டுத் தறிகளாக, மார்பாகிய பரந்த இடமே யானை கட்டும் கூடமாக, அவளை நின்னோடு சேர்ப்பேன்; ஆதலின் உடல் துவள மனம்

வருந்தாதே' – என்று கூறிய இப்பாடலில், கொங்கையைக் குவடாக உருவகம் செய்து மீண்டும் யானையாக உருவகம் செய்ததும், தோள்களைக் குன்றாக உருவகம் செய்து மீண்டும் கட்டுத்தறியாக உருவகம் செய்ததும் உருவகஉருவகம் ஆதல் காண்க.

'உருவகம் தன்னை உருவகம் செய்வது
உருவக உருவகம் என்மனார் புலவர்.' – *வீ. உரை.* 161

'ஒருபொருள் உருவகம் செய்துமற்று அப்பொருள்
மீட்டும் உருவகம் செய்வது உருவக
உருவகம் என்மனார் உணர்ந்திசி னோரே.' – *மு. வீ. பொ.* 29]

ஏகாங்கவுருவகம்

ஒட்டிய உறுப்பின் ஒன்று உருவகமாகக் கட்டுரை செய்யும் ஏகாங்க உருவகம் வருமாறு :

'காதலனைத் தாஎன்று உலவும் கருநெடுங்கண் ;
ஏதிலனால் என்என்னும் இன்மொழித்தேன் ; — மாதர்
மருண்ட மனம்மகிழ்ச்சி வாள்முகத்து வந்த
இரண்டினுக்கும், என்செய்கேன் யான் ?'

என வரும்.

[ஒரு பொருளின் உறுப்புக்கள் பலவற்றுள்ளும் ஒன்றனையே உருவகம் செய்து, ஏனைய உறுப்புக்களை வாளா கூறுவது ஏகாங்க உருவகமாம்.

கரிய நெடிய கண்கள் காதலனைக் காண்பதற்குக் கொணர்க என்பன போலக் காம மயக்கத்தோடு உலாவுகின்றன. இனிய மொழியாகிய தேன் அயலானோடு என்ன தொடர்பு என்று குறிப்பிடுகிறது. கண்டாருக்குக் களிப்புத் தரும் இப்பெண்ணின் ஒளி முகத்து அமைந்த இவ்விருறுப்புக்களின் மாறுபட்ட செயல்களை நோக்கி யான் யாது செய்தல் இயலும் – என்று தலைவியும் தோழியும் ஒருங்கிருந்தவழி மறுக்கப்பட்ட தலைவன்

தன்னுட் கூறிக்கொண்ட இப்பாடலில், மொழி என்ற ஒன்றே தேனாக உருவகம் செய்யப்பட, கண், முகம் என்பன வாளா கூறப்பட்டமை காண்க.

'ஒன்றின் உறுப்புப் பலவற்றி னுள்ளும்
ஒன்றினை உருவகம் உரைப்பதுஏ காங்கம்.' - வீ. உரை. 161

'ஒருபொருள் அவயவம் பலவி னுள்ளும்
ஒன்றனை உருவகம் செய்துமற்று ஒன்றனை
இயம்பாது அகற்றுவது ஏகாங்க மாகும்.' – மு. வீ. பொ. 30]

அநேகாங்கவுருவகம்

எண்ணிய அவயவம் எவையும் உருவகமாக் கண்ணுதல் செய்யும் அநேகாங்க உருவகம் வருமாறு:

**'கைத்தளிரால், கொங்கை முகிழ்தாங்கிக் கண்என்னும்
மைத்தடஞ்சேல் மைந்தர் மனம்கலங்க — வைத்ததுஓர்
மின்உளதால் மேகம் மிசைஉளதால்; மற்றுஅதுவும்,
என்உளதால்; நண்பா! இனி'**

என வரும்.

[ஒரு பொருளின் உறுப்புக்கள் பலவற்றையும் உருவகம் செய்வது அநேகாங்க உருவகம். இதன்கண் உறுப்பியும் உருவகம் செய்யப்படும்.

'கையாகிய தளிரினால் கொங்கையாகிய முகிழைத் தாங்கிக் கண்ணாகிய சேல்மீனால் இளையர் மனம் கலங்க, மேலே மேகத்தைத் தாங்கிய மின்னல் ஒன்று என் உள்ளத்தில் உள்ளது' – எனத் தலைவன் பாங்கற்கு உற்றது உரைத்த இப்பாடலில், கைத்தளிர், கொங்கை முகிழ், கண் என்னும் சேல், குழலாகிய மேகம் என்ற உறுப்புக்களும் தலைவியாகிய மின் என்ற உறுப்பியும் உருவகம் செய்யப்பட, மைந்தர் மனம், தலைவன் மனம் என்பன உருவகம் செய்யப்படாமல் விடப்பட்டதை நோக்குக. அவயவ உருவகத்துள் உறுப்புக்களே உருவகம் செய்யப்படும்; இதன்கண் உறுப்பியும் உருவகம் செய்யப்படும் என வேறுபாடு காண்க.

'ஒருபொருள் அவயவம் எல்லாம் உருவகம்
ஆக்கல் அநேகாங் கப்பொருள் ஆகும்'. - மு. வீ. பொ. 31]

முற்றுருவகம்

உற்ற உறுப்பு உறுப்பு உடையது எவ்வகையினும் முற்ற உருவகம் செயும் முற்று உருவகம் வருமாறு :

'விழியே களிவண்டு, மென்நகையே தாது,
மொழியே முருகுஉலாம் தேறல், — பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவைத் திருமுகமே,
தாமரைஎன் உள்ளத் தடத்து'

என வரும்.

[உறுப்புக்கள் உறுப்பி என்பனவற்றை ஒன்றும் எஞ்சாமல் உருவகம் செய்வது முற்றுஉருவகமாம். 'தலைவியின் விழியே வண்டு, அவள் முறுவலே மகரந்தம், அவள் மொழியே தேன், அவள் திருமுகமே என் உள்ளமாகிய குளத்தில் அழகாக மலர்ந்திருக்கும் தாமரை' - என்று தலைவன் தலைவி இயல்புபற்றிப் பாங்கனிடம் கூறும் இப்பாடலில், விழி, நகை, மொழி, முகம், தலைவன் உள்ளம் என்ற யாவும் உருவகம் செய்யப்பட்டவாறு. விழி, நகை, மொழி என்பன முகத்தின் உறுப்பின்பாற்படுவ ஆதலின் முகம் உறுப்பி ஆயிற்று. முதலும் சினையும், கூறுவார் கருத்துப்பற்றி மாறி அமைவன ஆதல் சொற்படலத்துக் கூறப்பட்டுள்ளது. உள்ளத்தடம் முதலாங்கால், முகத்தாமரை சினையாதலும் காண்க.

'சொற்ற அவயவ அவயவி இடம்பல
முற்ற உரைப்பது முற்றுஉரு வகமே'. - வீ. உரை 169]

'எவ்வகையினும்' என்றதனாலே, அவயவஅவயவியே அன்றி,

'பவழவாய்ச் செறுவு தன்னுள் நித்திலம் பயில வித்திக்
குழவிநாறு எழுந்து, காலைக் கொழுங்கதிர் ஈன்று, பின்னுக்

கிழவுதான் விளைக்கும் பைங்கூழ்; கேட்டிரேல்
பிணிசெய் பன்மா
உழவிர்காள்! மேயும்; சீலம் வேலிஉய்த் திடுமின் என்றான்'
– *சீவக.* 379

என இதனுள், பிணிசெய் பன்மா மேயாமற்பொருட்டு எனக் கருமத்தினையும் சீலவேலி எனக் கருவியையும் ஒருங்குஉருவகம் செய்தலும் முற்றுஉருவகம் எனவும்,

[ஒரு பாடலில் கூறப்படும் செய்திகள் முழுவதையும் உருவகம் செய்தலும் முற்று உருவகமாம்.

பவள வாயாகிய வயலில் நித்திலமாகிய விதையை விதைத்தலால் குழவி ஆகிய நாறு தோன்ற, காளையாகிய கதிர் வெளிப்பட இறுதியில் கிழத்தன்மையாகிய விளைவு தரும் வாழ்க்கையாகிய பயிரை, பிணியாகிய விலங்குகள் மேயாமல் சீலமாகிய வேலியிட்டுப் பாதுகாத்தல் வேண்டும் – என்ற இப்பாடலில், வாழ்க்கையைப் பயிராக உருவகம் செய்ததற்கு ஏற்ப, அதனோடு தொடர்புடையன யாவும் உருவகம் செய்யப் பட்டவாறு.]

ஏகதேசவுருவகம்

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்' – *குறள்* 10

எனவும்,

'உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்,
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து' – *குறள்* 24

எனவும், முறையே கருமமாக கருவியாக ஒன்றனை உருவகம் செய்து ஒன்றனை வாளாது கூறுதல் ஏகதேச உருவகம் என்றும் கொள்க

[ஒரு பாடலில் ஒரு பகுதியை உருவகம் செய்து மறுபகுதியை உருவகம் செய்யாது விடுவது ஏகதேச உருவகமாகும். ஏகதேசம்

என்பது ஒரு கூறு என்னும் பொருளது. இறைவனடி சேர்ந்தார் பிறவியாகிய கடலை நீந்துவர்; சேராதார் பிறவியாகிய கடலை நீந்தார் – என்ற பாடலில், பிறவியைக் கடலாக உருவகம் செய்ததற்கு ஏற்ப, இறைவனடியைத் தெப்பமாக உருவகம் செய்யாமை காண்க.

அறிவு என்ற அங்குசத்தால் ஐம்பொறியையும் அடக்கி வைத்துக்கொள்பவன் மேல்உலகினை எய்தற்குரிய வாய்ப்பைப் பெறுவான் – என்ற பாடலில் அறிவை அங்குசமாக உருவகம் செய்ததற்கு ஏற்பப் பொறிகளை யானைகளாக உருவகம் செய்யாமை காண்க.

'ஒருபொருள் உருவகம் செய்துமற்று ஒருபொருள்
உருவகம் செய்யாது உரைத்துப் போதரல்
ஏகதே சப்பொருள் என்மனார் புலவர்.' - மு. வீ. பொ. 32]

அவயவவுருவகம்

ஊக்கிய உறுப்பே உருவகம் ஆக ஆக்குதல் செய்யும் அவயவ உருவகம் வருமாறு :

'புருவச் சிலைகுனித்துக் கண்அம்புஎன் உள்ளத்து
உருவத் துரந்தார் ஒருவர்; — அருவி
பொருங்கல் சிலம்பில், புனைஅல்குல் தேர்மேல்,
மருங்குல் கொடிநுடங்க வந்து'

என வரும்.

[ஒரு பொருளின் அவயவங்களை எல்லாம் உருவகம் செய்து அப்பொருளை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது அவயவ உருவகமாம்.

'அருவி நீர் மோதும் மலையில் அல்குலாகிய தேரின்மேல் இடையாகிய கொடி அசைய வந்து புருவமாகிய வில்லை வளைத்துக் கண்ணாகிய அம்பினை என் உள்ளத்தை உருவுமாறு ஒருவர் செலுத்திவிட்டார்' – என்று தலைவன் பாங்கனிடம் உற்றது

உரைத்த இப்பாடலில், ஒருவர் என்ற அவயவி உருவகம் செய்யப் படாமல், புருவம், கண், அல்குல், மருங்குல் என்ற அவயவங்களே உருவகம் செய்யப்பட்டமை காண்க.

இஃது உறுப்பு உருவகம் எனவும் பெயர்பெறும்.

'அவயவி ஒழிய அவயவந் தன்னை
உருவகம் செய்வது உறுப்புஉரு வகமே'. - வீ. உரை. 160]

அவயவியுருவகம்

ஊற்றம் ஆர் அங்கியே உருவகம் ஆக ஆற்றல்சால் அவயவி உருவகம் வருமாறு:

'வார்புருவம் கூத்தாட, வாய்மழலை சோர்ந்து அசைய,
வேர்வுஅரும்பச், சேந்து விழிமதர்ப்ப, — மூரல்
அளிக்கும் தெரிவை வதனும் புயத்தால்
களிக்கும், தவம்உடையேன் கண்'

என வரும்.

[ஒன்றன் உறுப்புக்களை உருவகம் செய்யாது அவ்வுறுப்பி ஒன்றனையே உருவகம் செய்வது அவயவி உருவகமாம்.

புருவம் கூத்தாட, வாய் மழலை பேச, வேர்வை அரும்ப, கடை சிவந்து விழிகள் செழிக்கப் புன்முறுவலை வழங்கும் இப்பெண்ணின் முகத்தாமரையால் நல்வினையுடையேனாகிய என் கண்கள் களிக்கின்றன – என்ற வாயில் வேண்டிக்கப்பட்டுத் தலைவியை அணுகிய தலைவன் தன்னிலை கூறும் இப்பாடலில், அவயவியாகிய முகம் வதனம்புயம் என உருவகம் செய்யப்படவும், அதன் உறுப்புக்களாகிய புருவம், வாய், விழி என்பன உருவகம் செய்யப்படாமை காண்க.

'இயையும் உறுப்பு ஒழித்து உறுப்புடைப் பொருளை
அமைய உரைத்தல் அவயவி ஆகும்' – வீ. உரை 160]

உவமை உருவகம் வருமாறு :

'மதுமகிழ்ந்த மாதர் வதனமதியம்,
உதய மதியமே ஒக்கும் ; — மதிதளர்வேன்,
வெம்மை தணிய, மதராகமே மிகுக்கும்
செம்மை ஒளியால் திகழ்ந்து'

என வரும்.

[முதலில் உருவகம் செய்யப்பட்ட ஒன்றனையே மீண்டும் பிறிது ஒருதிறம் கருதி உவமை செய்தல் உவமை உருவகமாம்.

அறிவு தளர்ந்த என்னுடைய ஆற்றல் அழியக் களிப்போடு கூடிய காதலால் சிறக்கத் தோன்றும் இப்பெண்ணின் முகமாகிய சந்திரன் தன் இயற்கைப்பெற்றி சற்றுத் திரிந்து, மது உண்ட களிப்பினால் செம்மை மிக்கிருத்தலின் உதய சந்திரனை ஒத்திருக்கிறது – என்று தலைவன் தலைவி வனப்பைப் புகழும் இப்பாடலில், வதனமதியம் என்று முதலில் உருவகம் செய்யப்பட்டதனையே மீட்டும் உதய மதியத்தை ஒக்கும் என்று உவமையணிபடச் செய்தவாறு.

'ஒண்தரு பொருளை உருவகம் ஆக்குதல்
உண்டெனின் உவமை உருவகம் ஆகும்'. – வீ. உரை 160]

ஏது உருவகம் வருமாறு :

'மாற்றத்தால் கிள்ளை, நடையால் மடஅன்னம்,
தோற்றத்தால் தண்என் சுடர்விளக்கம், — போற்றும்
இயலால் மயில், எம்மை இந்நீர்மை ஆக்கும்
மயல்ஆர் மதர்நெடுங்கண் மான்'

என வரும்.

[ஒரு பொருளைக் காரணம் காட்டி உருவகம் செய்வது ஏது உருவகமாகும்.

'என்னை இந்நிலையினேனாகச் செய்த மயக்கம் தரும் செழித்த நெடுங்கண்களால் மானாகும் இத்தலைவி, மொழியால்

கிளி, நடையால் அன்னம், தோற்றத்தால் சந்திரன், சாயலால் மயில்' - என்று தலைவன் தலைவியைப் புகழ்ந்த இப்பாடலில், அவளைக் கிளியாகவும், அன்னமாகவும், சந்திரனாகவும், மயிலாகவும், மானாகவும் உருவகம் செய்ததற்குக் காரணங்கள் கூறப்பட்டவாறு காண்க.

'மரபுடைப் பொருளைமற்று அதுவால் அதுஎனும்
உரைபெறின் ஏதுஉரு வகமாம் என்ப'. - வீ. உரை. 160]

வேற்றுமை உருவகம் வருமாறு :

'வையம் புரக்குமால், மன்னவ! நின் கைக்காரும்,
பொய்இன்றி வானில் பொழிகாரும்; -- கையாம்
இருகார்க்கும் இல்லை பருவம்; இடிக்கும்
ஒருகார்ப் பருவம் உண்டு'

என வரும்.

[உருவகம் செய்யப்பட்ட பொருளை, உருவக உறுப்பாகிய உவமையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை உருவகமாம்.

அரசே! உன் கைகளாகிய கார்மேகமும் மழைபொழியும் கார்மேகமும் உலகத்தைக் காக்கும் எனினும், உன் இரு கைகளாகிய மேகத்திற்குப் பருவ வரையறை இல்லை; ஆனால் இடித்து மழைபொழியும் கார்மேகத்திற்கு மழைபெய்யும் பருவம் உண்டு - என்னும் இப்பாடலில், கைகளைக் கார்மேகமாக உருவகம் செய்து, பருவ வரையறை இன்மை கூறி வேறு படுத்தவாறு காண்க.

இது விதிரேக உருவகம் எனவும் பெயர் பெறும்.

'ஏற்றிய பொருள்கள் இரண்டினும் இயல்பாம்
வேற்றுமை கூறுவது விதிரே கம்மே'. - வீ. உரை. 161]

விலக்கு உருவகம் வருமாறு :

'வல்லி வதன மதிக்கு மதித்தன்மை
இல்லை; உளதேல், இரவுஅன்றி, — எல்லை

விளக்கும் ஒளிவளர்த்து, வெம்மையால், எம்மைத்
துளக்கும் இயல்புஉடைத்தோ? சொல்'

என வரும்.

[*ஒரு பொருளை உருவகம் செய்து பின் உருவகம் செய்வதற்கு உரிய பெற்றி அதன்கண் இல்லை என்று விலக்குவது விலக்கு உருவகமாம்.*

இப் பெண்ணின் முகமாகிய மதிக்குச் சந்திரனுடைய தன்மை இல்லை. ஏனெனின், சந்திரன் இரவிலேயே ஒளிவிடும்; பகலில் ஒளி மழுங்கிக் காணப்படும்; குளிர்ச்சியால் எம்மை மகிழ்விக்கும். ஆனால், தலைவியின் முகமாகிய மதியம் பகலிலும் ஒளிவீசி வெம்மையால் எம்மைத் தளரச் செய்கிறது – என்று தலைவன் நயப்புரைக்கும் இப்பாடலில், வதனத்தை மதியாக உருவகம் செய்து பின் வதனத்திற்கு மதித் தன்மை இல்லை என விலக்கியவாறு காண்க.

இது தடைமொழி உருவகம் எனவும் பெயர் பெறும்.

'இணங்கிய பொருள்கள் இயையும் குணத்தை
விளங்க விளம்பும் தடைமொழி உருவகம்'. – *வீ. உரை.* 161]

அவநுதி உருவகம் வருமாறு:

'பொங்குஅளகம் அல்ல புயலே இவை; இவையும்
கொங்கை இணைஅல்ல, கோங்குஅரும்பே; — மங்கை! நின்
மைஅரிக்கண் அல்ல, மதர்வண்டு இவை; இவையும்,
கைஅல்ல, காந்தள் மலர்'

என வரும்.

[*உண்மையை மறுத்துப் பிறிது ஒன்றனை உரைத்தலாகிய அவநுதிக்கண் உருவகம் அமைத்தல் அவநுதி உருவகமாம்.*

மங்கை! இவை மயிர் முடி அல்ல, மேகமே. இவை கொங்கையல்ல, கோங்கரும்பே. இவை கண் அல்ல, வண்டே. இவை கையல்ல, காந்தள் மலரே – என்ற தலைவன் நயப்புரையில், உண்மையை மறுத்து உரைக்கும் அவநுதியோடு அளகம் அல்ல புயலே என்றாற்போல உருவகம் செய்யப்பட்டமை காண்க.

இது தத்துவாபன உருவகம் எனவும் பெயர் பெறும்.

'உண்மைப் பொருள்மறுத்து ஒப்புமைப் பொருள்மேல்
தன்மைசெய் உருவகம் தத்துவா பனமே'. – வீ. உரை 160]

சிலேடை உருவகம் வருமாறு :

'உள்நெகிழ்ந்த செவ்வித்தாய்ப் பொற்றேட்டு ஒளிவளரத்
தண்ணளிசூழ்ந்து இன்பம் தரமலர்ந்து, — கண்ணெகிழ்ந்து
காதல் கரைஇறப்ப, ஆவி கடவாது,
அரிவை வதனும் புயம்'

என வரும். 25

[உருவகம் செய்யப்படும் இயல்பிற்குச் சிலேடைப் பொருளைக்கோடல் சிலேடை உருவகமாம்.

தலைவியின் முகமாகிய தாமரை – மன நெகிழ்ச்சியால் தோன்றிய புதுமை அழகு உடையதாய், காதில் அணிந்த பொற்றேடு ஒளி செய்ய, கருணைமிக்கு, எனக்கு இன்பம் தருமாறு மலர்ச்சிகொண்டு, கண்ணில் கருணை காட்டி, தனக்கு ஆசை கரை கடந்து வரினும் உள்ளத்தைக் கடவாது; தாமரை – உள் இதழ் மலர்ந்த பொலிவோடு, அவ்விதழ்கள் ஒளி செய்ய, வண்டுகள் சூழ்ந்து வர, அவற்றிற்கும் இன்பம் தரும் வகையில் மலர்ந்து, தேனை நெகிழச் செய்து, கண்டார் காமுறக் குளத்தை விட்டு நீங்காது.

உள் நெகிழ்ந்த செவ்வி முதலியவற்றைச் சிலேடையாகத் தாமரைக்கும் முகத்திற்கும் கொண்டு, முகத்தை வதனும்புயம் என்று உருவகம் செய்துள்ளமை காண்க.

'நயம்படு சிறப்பின் நவைதீர் இருபொருட்கு
இயம்புதல் சிலேடை எனும்உரு வகமே'. – வீ. உரை 160]

இவ்விரிகளேயன்றி மாறன் அலங்காரத்தில் மிகுதியாகக் கூறப்பட்டுள்ள ஒரு பொருள் உருவகம், பல பொருள் உருவகம், அவிருத்த உருவகம், என்பனவும், வீரசோழியம் குறிப்பிடும் அவ்விய உருவகம், பண்புருவகம் என்பனவும் பிற்சேர்க்கையில் விளக்கப்பட்டுள்ளன.] 25

மேலனவற்றிற்கு ஒரு புறனடை

645. உருவகம் உவமை எனஇரு திறத்தவும்
நிரம்ப உணர்த்தும் வரம்புதமக்கு இன்மையின்,
கூறிய நெறியின் வேறுபட வருபவை
தேறினர் கோடல் தெள்ளியோர் கடனே.

இது மேலனவற்றிற்கு ஒருபுறனடை கூறுகின்றது.

இ-ள்: உருவகமும் உவமையும் என்னும் இரண்டு திறத்து அலங்காரமும் ஒழிவுஇன்றி உணர்த்தும் வரையறை தமக்கு இன்மையால், சொல்லப்பட்ட நெறியின் வேறுபட வருவனவற்றை அறிந்து அவற்றின்பால் சார்த்திக்கோடல் அறிவுடையோரது கடன் என்றவாறு.

ஈண்டு உருவகம் முற்கூறியது அதிகாரத்தால் எனக் கொள்க.

[உருவகம் உவமையின் கூறுகவே பண்டையோரால் கொள்ளப்பட்டது. 'குருகுலமாம் ஆழ்கடல்' (சீவக. 290) என்பதனைக் குறிப்பு உவமம் என்றே நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியனார் குறிப்பிடாத உவமைவிரி, உருவக விரிகளை இவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்டவற்றைக் கடந்தும் இவ்வணிகள் வருகின்றன. இவ்வணிகளின் விரிகளாக வீரசோழியம் முதலியவற்றில் பிறவும் கூறப்பட்டுள்ளன. இவ் விரிகளில் சிலவே வேறு அணிகளாகவும் கூறப்பட்டுள்ளன. எனவே, உவமையும் உருவகமும் வரையறைக்கு அப்பாற்பட்டன-வாதலைக் குறிப்பிட இப்புறனடை நூற்பா யாக்கப்பட்டுள்ளது.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 39

'ஈண்டிய முற்றேக தேச உவமை உருவகமென்(று)
உண்டொரு மூன்று உருவகம் ஓதுவர் ....
எல்லாம், வேண்டியவேண்டியவாறு விகற்பிப்ப மெல்லியலே.'
- வீ. 177

'ஒழிவற உருவக முடனே உவமையும்
மொழிவதற் கடங்கா முறைமைய ஆகலின்
மொழியப் புகும்யான் மூதுணர்வு இலனல்
இவற்றினுக் கிதனுள் இசைத்தவை ஒரீஇவரும்
அவற்றையும் இவற்றின் அகப்பட உரைகொளீஇ
முற்ற உணர்த்திய முறைமைய ஆக்குதல்
கற்றோர் அறிவின் காட்சிய தாகும்.' – மா. 122]

'ஏரி இரண்டும் சிறகா, எயில்வயிருக்,
கார்உடைய பீலி கடிகாவா, — நீர்வண்ணன்
அத்தியூர் வாயா, அணிமயிலே போன்றதே,
பொற்றேரான் கச்சிப் பொலிவு'

என்பது இயைபு உருவகத்தின் பாற்படும் எனவும்,

[சோழனுக்கு உடைமையாக அமைந்துள்ள காஞ்சிமா நகரின் தோற்றப் பொலிவை நோக்குமிடத்து, ஊருக்கு வெளியே இருபுறமும் அமைந்த ஏரிகள் இரண்டும் சிறகுகளாகவும், ஊர் நடுவில் அமைந்த கோட்டை வயிறாகவும், சோலைகள் பீலிகளாகவும், திருமால் உகந்தருளியிருக்கும் திருவத்தியூர் என்ற பகுதி வாயாகவும் தோற்றம் வழங்குதலின் அந்நகரம் தோகை விரித்த மயில் போன்றுள்ளது - என்ற இப்பாடலில், காஞ்சிமா நகரம் மயில் போன்றது என்ற உவமை அணி வந்துள்ளது. அதனை மயிலோடு உவமை செய்வதற்கு ஏற்ப, அதன் ஏரிகள், கோட்டை, சோலை, திருக்கோயில் ஆகியவற்றை மயிலினுடைய சிறகு, வயிறு, பீலி, வாய் என்பனவாக உருவகம் செய்தற்கண் உள்ள தொடர்ந்த பொருள் இயைபு நோக்கி, இப்பாடலை இயைபு உருவகத்தின் பாற் படுத்தலாம். உவமையும் இருத்தலின், நேரே இயைபு உருவகம் என்னாது இயைபு உருவகத்தின் பாற்படுத்தினர்.]

'மழலைவாய் நவ்வி, மதர்நெடுங்கண் மஞ்ஞை,
குழலின் பொறைசுமந்த கொம்பர், — சுழல்கலவம்
தாங்கிய அன்னம், தடங்கொங்கை ஆரமுதம்,
தேங்கொள் கமலத் திரு'

என்பது சிறப்பு உருவகத்தின்பாற்படும் எனவும்,

[ஒரு பொருளைப் பலவாறு உருவகம் செய்து உருவகம் செய்யப்பட்ட உவமைக்கு இல்லாத சிறப்பியல்புகளை அடைகளாகப் புணர்த்து அப்பொருளைச் சிறப்பித்து உருவகம் செய்வது சிறப்பு உருவகத்தின்பாற்படும். அடைகள் சிறப்புத் தருதலோடு அமையாது உவமத்தை விலக்குவ போன்றும் உண்மையான், நேரே சிறப்புருவகம் என்னாது சிறப்பு உருவகத்தின்பாற்படும் என்றார்.

கமலத்திருவனைய இத்தலைவி மழலை பேசும் மான், அழகிய கண்களை உடைய மயில், கூந்தலாகிய பாரத்தைச் சுமக்கும் கொடி, கலாபத்தைத் தாங்கும் அன்னம், கொங்கைகளைச் சுமக்கும் அமுதம் என்னும் இப்பாடலில், நவ்வி, மஞ்ஞை, கொம்பர், அன்னம், அமுதம் என்ற உருவகங்கள் தலைவிக்கே உரிய சிறப்பான அடையடுத்து அமைக்கப்பட்டவாறு காண்க.]

'வில்ஏர் உழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்ஏர் உழவர் பகை' - குறள் 872

என்பது ஏதுஉருவகத்தின்பாற்படும் எனவும்,

[கருவியை ஏதுக்கண் அடக்கும் மரபு பற்றி, வில்லையே ஏராகக் கொண்டு பகைவர் உடலை உழும் வீரர்களின் பகைமையைத் தேடிக் கோடலினும், சொல்லையே ஏராகக்கொண்டு உள்ளமாகிய வயலை உழும் புலவர்களின் பகை கோடல் கொடிது — என்ற கருத்துடைய இப்பாடலில், உழவர் என்ற உருவகத்திற்கு ஏற்ப வில் ஏர், சொல் ஏர் என்ற கருவிகள் உழவிற்குப் பயன் படும் முகத்தான் காரணங்களாகி முறையே வீரரையும்,

புலவரையும் குறிக்கும் நிலையில் அமைந்துள்ள வில் ஏர் உழவர், சொல் ஏர் உழவர் என்பன ஏது உருவகத்தின்பாற் படுத்தப் பட்டன.]

'மலையில் பயிலா மடமஞ்ஞை, வாரி
அலையில் பிறவா அமுதம், — விலையிட்டு
அளவாத நித்திலம், ஆராத தேறல்,
வளவாள் மதர்நெடுங்கண் மான்'

என்பது விலக்குஉருவகத்தின்பாற்படும் எனவும்,

[உருவகம் செய்து உருவகம் செய்யப்பட்ட உவமையின் பண்பினை அடியோடு விலக்காமல் அதன் பண்புகளுள் ஒன்றனையே விலக்கி உரைப்பது நேரே விலக்கு உருவகம் ஆகாது, விலக்கு உருவகத்தின்பாற்படும். இம்மதர் நெடுங்கண் மான்போல்வாள் மலையில் பயிலாத மயில்; கடலில் பிறவா அமுதம், விலையிட முடியாத முத்து, உண்ணத் தெவிட்டாத தேன் – என்னும் இப்பாடலில், தலைவிக்கு மயில் அமுதம் முத்து தேன் என்பனவற்றின் தன்மை முழுதும் இருத்தலை உருவகம் செய்து முறையே மயிலுக்குரிய மலையிலிருத்தல், அமுதத்திற்குரிய கடலில் பிறத்தல், முத்துக்குரிய விலை மதிப்பிடப்படல், தேனுக்குரிய உண்ணத் தெவிட்டல் ஆகிய ஒருபுடைப் பண்புகளையே விலக்கியுள்ளமை காண்க.]

'முத்துக் கோத்தன்ன முறுவல், முறுவலே
ஒத்துஅரும்பு முல்லைக் கொடிமருங்குல், — மற்றுஅதன்மேல்
விண்அளிக்கும் கார்போல் விரைக்கூந்தல், மெல்லியலார்
தண்ணளிக்கும் உண்டோ தரம்?'

என்னும் இவ்வொப்புமைஉவமை விகாரஉவமத்தின் பாற்படும் எனவும்,

[கூறுபடும் உவமையின் கொள்கை பிறிதாக வேறுபடுத்து இசைப்பது விகார உவமையாம். முதலில் உபமேயமாகக்

கூறப்பட்டதனையே பின்னர் வேறொரு காரணம் பற்றி உபமானமாகக் கூறும் வேறுபாடு பற்றி இதனை விகார உவமையின்பாற் படுத்துவர்.

முத்துக் கோத்தாற் போன்ற பற்கள், பற்களை ஒத்து மலரும் முல்லைக்கொடி போன்ற இடை, அதன்மேல் கார்மேகம் போன்ற மணங்கமழுங் கூந்தல் இவற்றை உடைய மெல்லியலார் செய்யும் கருணைக்கு ஒப்பு உளதோ ? – என்று வாயில் நேர்விக்கப்பட்டுத் தலைவியைக் கூடி மகிழ்ந்த தலைவன் மகிழ்ந்து கூறும் இப்பாடலில் முத்துக் கோத்தன்ன முறுவல் என முறுவலை முதலில் உபமேயமாக்கி, அடுத்து முறுவலே ஒத்து அரும்பும் முல்லை என அம் முறுவலையே உபமானமாகக் கூறிய புதுமை விகாரஉவமையின் பாற்படுக்கப்பட்டவாறு.]

'அடிநோக்கின் ஆழ்கடல் வண்ணன், அவன்தன்
படிநோக்கின் பைங்கொன்றைத் தாரான், — முடிநோக்கித்
தேர்வளவன் ஆகல் தெளிந்தேன் ; தன் சென்னிமேல்,
ஆர்அலங்கல் தோன்றிற்றுக் கண்டு'

என்பது பலவயின்போலிஉவமையின்பாற்படும் எனவும்,

[உவமைதோறும் உவமை உருபு வெளிப்பட்டு வருதல் பலவயிற்போலியாகவும், அவ்வுருபு செய்யுள் விகாரத்தால் தொக்குவர அமைப்பது பலவயிற் போலியின்பாற்படும்.

அடிநோக்கிய அளவில் திருமால் போலும் எனவும் மேனி நிறம் நோக்கிச் சிவபெருமான் போலும் எனவும் உட்கொண்டு, பின் முடி நோக்கி ஆத்தி மாலையைக் கண்டு அவன் சோழனே என்று தெளிந்தேன் – என்ற இப்பாடலில், 'அடிநோக்கின் ஆழ்கடல் வண்ணன் போலும்', 'படிநோக்கின் பைங்கொன்றைத் தாரான் போலும்' என்ற தொடர்களில் போலும் என்ற உவமை உருபு தொக்குப் பொருள் தருதலின், இப்பாடல் பலவயிற் போலி உவமையின்பாற்பட்டது.]

'ஈர்ந்துநிலம் தோயும் இரும்பிடித் தடக்கையின்
சேர்ந்துஉடன் செறிந்த குறங்கின், குறங்கென
மால்வரை ஒழுகிய வாழை, வாழைப்
பூஎனப் பொலிந்த ஓதி, ஓதியின்
நளிச்சினை வேங்கை நாள்மலர், நாள்மலர்
களிச்சுரும்பு அரற்றும் சுணங்கு, சுணங்குபிதிர்ந்து
யாணர்க் கோங்கின் விரைமுகை, முகைஎனப்
பூண்அகத்து ஒடுங்கிய வெம்முலை, வெம்முலை
எனவண் தோட்டுப் பெண்ணை, பெண்ணை
வளர்த்த நுங்கின் செறிதரும் எயிற்றின்' - சிறுபாண். 19-28

என்னும் இச்சந்தான உவமை மாலை உவமையின் பாற்படும் எனவும்,

[சந்தான உவமையாவது ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை வெவ்வேறு பொருள்களுக்கு உவமையாகக் கூறுவது. மாலை உவமையாவது ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை ஒரு பொருளுக்கு உவமையாகக் கூறுவது.

பெண் யானையின் துதிக்கை போன்ற குறங்கு, அக்குறங்குகளைப் போன்ற வாழை, வாழைப் பூவைப்போன்ற மயிர்முடி, அம்மயிர் முடிபோன்ற கரிய செறிந்த கிளைகளை உடைய வேங்கையின் பூக்கள், அவ்வேங்கை மலர்கள் என்று கருதி வண்டுகள் மொய்த்தற்கு வரும் தேமல்கள், தேமலை ஒத்த கோங்கின் முகை, அம்முகையை ஒத்த முலைகள், அம்முலைகளை ஒத்த காய்களை உடைய பனைமரம், அப்பனைமரத்தின் நுங்கு போலச் சுவைதரும் பற்கள் - என ஒன்றோடொன்று தொடர்புடைய பல உவமைகள் பல பொருள்களுக்கு உவமையாய்ச் சந்தான உவமையாயின. அவை யாவும் ஒரு பெண்ணின் உறுப்புக்களுக்கே உவமையாக வரும் ஒப்புமை குறித்து மாலை உவமையின்பாற்பட்டன.]

'பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;

பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே.' – புறநா. 107

என்பது விலக்கு உவமையின் பாற்படும் எனவும் அமைத்துக்கொள்க. இன்னும் பிறவாற்றான் வருவன உளவேல், அவற்றையும் அமையுமாறு அறிந்து அமைத்துக்கொள்க.

[பாரி பாரி என்று ஒருவனையே உலகத்தவர் பலவாகப் புகழ்கின்றனர். உலகத்தை பாரி மாத்திரம் புரப்பவன் அல்லன். உலகினை மாரியும் காக்கின்றது – என்னும் இப்பாடலில், புலவர் போற்றுதல் பாரி ஒருவனுக்கே அடாது, மாரிக்கும் வேண்டும் என்ற கருத்து, புலவர் போற்றுதலுக்குப் பாரியை அடியோடு விலக்காது மாரியையும் இணைத்தலின், இது நேரே விலக்குவமை ஆகாது விலக்குவமையின் பாற்பட்டது.]

'அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே.' – தொல். பொ. 311

என்ப ஆகலின், இவற்றுள் ஒப்புஉவமை,

'முத்துக் கோத்தன்ன முறுவல், முறுவலே
ஒத்துஅரும்பு முல்லைக் கொடிமருங்குல்'

என உவமைக்கு உவமையாய் அடுக்கிவருதல் வரையப் படும் எனின், படாது;

'வெண்திங்கள் போன்றுஉளது வெண்சங்கம், வெண்சங்கின்
வண்டுஇயங்கு தாழை வளர்தோடு'

என்றாற்போலாது பயப்பாடு உண்மையின் என்பது.

[ஒன்றனை முதலில் உபமேயமாக்கிப் பின்னர் அதனையே உபமானமாக்கிச் செல்வதால் மயக்கம் ஏற்படுதலின் அந்நெறி கூடாது என விலக்கப்பட்டது. ஆனால் நிறம் பற்றி முத்தினுக்கு உபமேயமாகிய பற்களை வடிவு பற்றி முல்லை மொட்டுக்களுக்கு உவமையாக்குதல் பொருட் சிறப்புடைமையின் ஏற்கும் என்று கொள்ளப்பட்டது.

ஆனல் சந்திரனைப் போன்ற சங்கம், சங்கினைப் போன்ற வெண்டாமைஇதழ் என நிறம் ஒன்று பற்றியே முதலில் உபமேயமாகக் கூறப்பட்ட சங்கினையே பின்னர் உபமானமாகக் கூறுதற்கண் சிறப்பின்மையின், அங்ஙனம் கூறுதல் ஏற்புடைத்து அன்று என்பது.]

உருவகமும் உவமையும் ஓர் இனம் ஆக்கிப் புறனடைப் படுத்தமையான், உருவகத்திற்கு ஓதிய இலக்கணம் உவமையும் உவமைக்கு ஓதிய இலக்கணம் உருவகமும் பெறுதலும் கொள்க.

'மன்றல் குழலார் உயிர்மேல், மதன்கடவும்
தென்றல் கரிதடுக்கும் திண்கணையம் ; — மன்றலரைக்
கங்குல் கடலில் கரையேற்றும் நீள்புணையாம் ;
பொங்குநீர் நாடன் புயம்'

என்பது உவமைபோல அற்புதம் அடுத்துவந்த உருவகம். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

[சோழமன்னன் புயங்கள், அவன் உரிமைமகளிர் உயிர்மேல் மன்மதன் செலுத்தும் தென்றலாகிய யானையை, எதிர்க்கவாராது தடுக்கும் கணையமரமாம்; இரவாகிய கடலிலிருந்து பகலாகிய கரைக்கண் ஏற்றுவிக்கும் நீண்ட தெப்பமாம் – என்னும் இப் பாடலில், வியப்பொடு சிவணி வரும் தென்றல் கரி, புயக்கணையம், புயப்புணை என்ற உருவகங்கள் அற்புத உருவகங்களாக அமைந்தமை காண்க.]

இனி, பண்புபற்றி உவமிக்குங்கால்,

'கலவ மாமயில் எருத்தின் கடிமலர் அவிழ்ந்தன காயா ;
உலக மன்னவன் திருநாள் ஒளிமுடி பணிந்துநின்றவர்போல்,
பலவும் பூத்தன கோங்கம் ; பைந்துகில் முடியணிந் தவர்பின்
உலவு கஞ்சுகி யவர்போல், பூத்தன மரவம்அங்கு ஒருங்கே'

– *சிந்தா*, 1558

என்றாற்போல அன்றி,

**'கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்,
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை,
எல்லி வருநர் களவிற்கு,
நல்லை அல்லை நெடுவெண் நிலவே!'** – குறுந். 47

என வேறுபடவருதலும் அமைத்துக்கொள்க. பிறவும் அன்ன (26)

[மயில் கழுத்துப் போலக் காயா மலர்ந்தன. மன்னன் பிறந்த நாளிலே அவன் திருவடிகளிலே பணிந்த முடிமன்னர்போலக் கோங்கங்கள் பலவும் பூத்தன. அவர் பின் தலைப்பாகை தாங்கிச் சட்டை அணிந்து செல்பவர் போல மரவங்கள் பூத்தன – என்னும் இப்பாடலில், நிறம் வடிவு ஆகிய பண்புபற்றிய உவமங்கள் வந்துள்ளன.

நிலவே! வேங்கைப்பூ விழுந்த சிறிய பாறை புலிக்குட்டி போலக் காட்சி வழங்கும் காட்டுவழியில் தலைவன் இரவுக்குறி கருதி வருங்கால் ஒளிவீசும் நீ நல்லை அல்லை – என்ற பாடலில், புலிக்குருளை என்ற ஒரே உபமானத்திற்கு வேங்கைப்பூ விழுந்த பாறை ஆகிய இரண்டு பொருள்கள் இணைந்து உபமேயமாகியவாறு காண்க; 'இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே' (தொல். பொ. 297) என்ற நூற்பாவில் உம்மையால் ஒற்றைக் கிளவியும் இரட்டை வழித்தே என்பது ஒத்தாகலின்.] 26

தீவக அணி - இலக்கணம்

646. குணம்தொழில் சாதி பொருள்குறித்து ஒருசொல்
ஒருவயின் நின்று பலவயின் பொருள்தரின்
தீவகம் ஆகும்; அதுவே செய்யுளின்
மூவிடத்து இயலும் என்மனார் புலவர்.

இது நிறுத்தமுறையானே தீவகம் ஆமாறு கூறுகின்றது.

இ–ள் : குணம் முதலிய நான்கனுள் யாதானும் ஒன்றனைக் குறித்து ஒருசொல் ஓரிடத்தின் நின்று பல இடத்து நின்ற சொற்களோடு பொருந்தி அப்பொருளை விளக்குமாயின், மேற்கூறிய தீவகம் என்னும் அலங்காரமாம். இது செய்யுளின்கண் முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் புலப்படும் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

எனவே, முதல்நிலைத் தீவகம் இடைநிலைத் தீவகம் கடைநிலைத் தீவகம் என மூன்றும். அவை குணம் தொழில் சாதி பொருள் என்பனவற்றோடு உறழப் பன்னிரண்டாம்.

(இவ்வணி விளக்கணி எனவும் கூறப்படும்.)

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் (சிறிது திரிபுடன்) தண்டி 40.

'தொழில்குணம் சாதி பொருள்எனும் இவற்றோடு
மொழிபுணர் செய்யுளின் முதலிடை கடைநின்று
ஆங்கதன் பலபுடை அடைபொருள் விளக்கும்
பாங்குறு தீபகம் பன்னிரு பாற்றே.' – *மா.* 160

'குணம்தொழில் ஆக்கம் குலம்குறித்து ஒருசொல்
ஒருவயின் நின்று பலவயின் பொருள்தரின்
தீவகம் மூவிடத்து இயலும் என்ப.' – *மு. வீ. பொ.* 61

'வருணியா வருணியம் வாய்ப்பஒர் இயல்பின்
முடிவது விளக்கென மொழிந்தனர் புலவர்.' – *ச.* 87

'வினைமுதற் கேற்ற வினைகளை முறைப்பட
விளம்ப வினைமுதல் விளக்கணி யாமே.' – *ச.* 82

'உன்னும் புனைவுளிக் கும்புனை வில்லிக்கு மோர்தருமத்
தின்முடி வாதல் விளக்கணி' – குவ. 87

'உதிநிர லாவொரு வன்செய்கை ஈட்டல் உரைத்தல்வினை முதல்விளக் காம்' – குவ. 56]

அவற்றுள் குணமுதல்நிலைத்தீவகம் வருமாறு :

'சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி – பாய்ந்த
திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பு,
மிசைஅனைத்தும், புட்குலமும் வீழ்ந்து'

என வரும்.

[அரசனுடைய கண்கள் சிவந்தன; பகை மன்னருடைய பெரிய தோள்கள் சிவந்தன; குருதி பாய்ந்த திசைகள் எல்லாம் சிவந்தன; வில்லிலிருந்து வெளிப்பட்ட அம்புகளும் சிவந்தன; எண் திசைகளிலுள்ள பறவைகளும் குருதியில் படிந்து சிவந்தன.

இப்பாடலில், முதலிலுள்ள சேந்தன என்ற பண்புச்சொல், பல இடங்களிலும் கொள்ளப்பட்டுப் பொருள் தந்தவாறு காண்க. விளக்கு ஓரிடத்தில் இருப்பினும் எப்புறமும் அதன் ஒளி பரவுமாறு போல, ஓரிடத்துள்ள சொல்லின் பொருள் பாடலில் எல்லா இடங்களிலும் பொருந்திப் பொருள்தரும் அழகு விளக்கணி என்று பெயரிடப்பட்டது.]

தொழில் முதல்நிலைத் தீவகம் வருமாறு :

'சரியும் புனைசங்கும், தண்தளிர்போல் மேனி
வரியும், தனதடம்சூழ் வம்பும், — திருமான
ஆரம் தழுவும் தடந்தோள் அகளங்கன்,
கோரம் தொழுத கொடிக்கு'

என வரும்.

[திருமகளைப்போல ஆத்திமாலையும் இடையறாது தங்கியிருக்கும் பெரிய தோள்களை உடைய களங்கமற்றவனாகிய சோழனுடைய குதிரையை அவன் வீதி உலா வந்த காலை தொழுத தலைவிக்கு, அவள் கைகளில் அணிந்த சங்கு வளையல்களும்

சரிந்தன; தளிர்போன்ற மேனி அழகும் சரிந்தது; பெரிய நகில்களில் அணிந்த கச்சும் சரிந்தது.

இப்பாடலில் சரியும் என்ற தொழிற்சொல் முதலில் வந்து பின் பல இடங்களிலும் இணைந்து பொருள் தந்துள்ளமையால், இது முதல்நிலைத் தொழில் தீவக அணியாம்.]

சாதி முதல்நிலைத் தீவகம் வருமாறு:

'தென்றல் அநங்கன் துணையாம், சிலகொம்பர்
மன்றல் தலைமகனும், வான்பொருள்மேல் — சென்றவர்க்குச்
சாற்றவிடும் தூதாகும், தங்கும் பெரும்புலவி
ஆற்ற வருவிருந்தும் ஆம்'

என வரும்.

[தென்றல் காற்று மன்மதனுக்குத் துணையாகும். அது சில பூங்கொம்புகளுக்குத் தன் வருகையால் தளிர்த்தலைச் செய்யும் கணவனுகும்; பொருள்வயின் பிரிந்த தலைமக்களுக்குத் தலைமகளிர் தம் பிரிவுத் துன்பத்தைத் தெரிவிக்க அனுப்பும் தூதாகும்; தலைவன் தலைவியர் இடையே ஊடல் உண்டாகுங்கால் அவ் வூடலைத் தணிவித்ததற்கு உரிய வாயில்களில் ஒன்றுகிய விருந்து போலவும் உதவும்.

இப்பாடலில், காற்று என்ற சாதியுள் ஒன்றுகிய தென்றல் என்ற சொல் முதலில் வந்து பின் பல இடங்களிலும் இணைந்து பொருள் தருதலின் இது சாதி முதல்நிலைத் தீவகம்.

தெற்கில் இருந்து வரும் காற்று	—	தென்றல்.
வடக்கிலிருந்து வரும் காற்று	—	வாடை.
குணக்கிலிருந்து வருங்காற்று	—	கொண்டல்.
குடக்கிலிருந்து வரும் காற்று	—	கோடை.

இவை நான்கும் காற்று என்ற சாதியின் பொதுப் பகுப்புக்களாம்.]

பொருள் முதல்நிலைத் தீவகம் வருமாறு :

'முருகவேள் சூர்மா முதல்தடிந்தான், வள்ளி
புரிகுழல்மேல் மாலை புனைந்தான், — சரண்அளித்து
மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்,
வேலான் இடைகிழித்தான் வெற்பு'

என வரும்.

[முருகவேள் சூரபன்மாவாகிய மாமரத்தை வேரோடு வீழ்த்தினான்; வள்ளியம்மையாரின் சுருண்ட கூந்தல்மேல் மாலையைச் சூட்டினான். அவன் தேவர்களுக்கு அடைக்கலம் தந்து தேவர்கள்மேல் எதிர்த்து வந்த பகைவர் சேனையைத் தடுத்தான்; அவன் வேலால் குருகு என்ற பெயருடைய மலையைப் பிளந்தான்.

இப்பாடலில், முருகவேள் என்ற பொருள்பற்றிய முதனிலைச் சொல் பல இடங்களிலும் சென்று இயைந்து பொருள் தருதலின், இப்பாடல் முதல்நிலைப் பொருள் தீவக அணி.

உலகிலுள்ள பொருள்கள் உயர்திணை அஃறிணை என்ற இரு பகுப்பின. உயர்திணையாம் தேவரும் பொருள் என்ற தலைப்பில் அடங்குவர். ஆதலின் முருகவேள் பொருட்பெயராதல் காண்க.]

குண இடைநிலைத்தீவகம் வருமாறு :

'எடுத்த நிறைகொணா என்றலுமே, வென்றி
வடித்திலங்கு வைவாளை வாங்கத், — துடித்தனவே
தண்ஆர மார்பும், தடந்தோளும், வேல்விழியும்,
எண்ணாத மன்னர்க்கு இடம்'

என வரும்.

[திட்டமிட்ட பசுக்கூட்டங்களைக் கைப்பற்றிவருமாறு வெட்சி வீரருக்கு அரசன் ஆணையிட்டஅளவில், வெற்றியைத்தரும் கூரிய வாளினை மறவர்தலைவன் கையில் ஏந்தினாக, பகை மன்னருக்கு முத்துமாலை அணிந்த மார்பும் இடம் துடித்தது; தடந்தோள்களும் இடம் துடித்தன; வேல்போன்ற சிவந்த கண்களும் இடம் துடித்தன.

இடம் துடித்தல் ஆடவருக்குத் தீநிமித்தமாம். படைப்பிலேயே துடிப்பு என்பது அமைந்து கிடத்தலின் துடித்தலைப் பண்பாகக் கூறினர். இப்பாடலில் 'துடித்தன' என்று இடையில் அமைந்த பண்புச் சொல் மார்பு, தோள், விழி என்ற மூன்றனோடும் தனித் தனியே இணைந்தமை காண்க.

இடைநிலைத் தீவக அணி பொருள்கோளில் தாப்பிசை என்று பெயரிடப்பட்டுள்ளதும் நோக்குக.]

தொழில் இடைநிலைத்தீவகம் வருமாறு :

'எடுக்கும் சிலைநின்று எதிர்ந்தவரும், கேளும்,
வடுக்கொண்டு உரந்துணிய, வாளி — தொடுக்கும்
குடையும், திருவருளும், கோடாத செங்கோல்
நடையும், பெரும்புலவர் நா'

என வரும்.

[அரசன் எடுத்த வில்லிலே தன்னை எதிர்த்த பகைவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் தழும்புபட்டு மார்பு துணியப்படுமாறு அம்புகளைத் தொடுக்கும். அவனுடைய வெண்கொற்றக்குடை, அவன் செய்யும் சிறந்த அருள், அவனுடைய செங்கோல் ஆகியவற்றின் சிறப்பைப் புலவர்களுடைய நா பாடல்களில் தொடுக்கும்.

இப்பாடலில், தொடுக்கும் என்று இடையில் வந்த தொழிற் சொல் இரண்டிடத்தும் இயைந்து பொருள் தந்தவாறு காண்க.]

சாதி இடைநிலைத்தீவகம் வருமாறு :

'கரம்மருவு பொற்றொடியாம், காலில் கழலாம்,
பொருவுஇல் புயவலயம் ஆகும், — அரவு,அரைமேல்
நாணும், அரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்,
பூணும், புனைமாலை யாம்'

என வரும்.

[பாம்பு சிவபெருமானுக்குக் கையில் அணியும் தொடி என்ற அணிகலனாகும். காலில் அணியும் வீரக்கழலாகும். ஒப்பற்ற தோள்வளையலாகும். இடையில் அணியும் அரைஞாண் ஆகும்; காதுகளில் அணியும் குழையாகும். ஏனைய அணிகளாகும்; அணியும் மாலையும் ஆகும்.

இப்பாடலில், அரவு எனப்படும் உயிர்ச் சாதிகளில் ஒன்றான பெயர் இடையில் வந்து முதலிலிருந்து இறுதிகாறும் பல இடங்களிலும் இயைந்து பொருள் தருமாறு காண்க.]

பொருள் இடைநிலைத் தீவகம் வருமாறு :

'மான்அமருங் கண்ணாள் மணிவயிற்றில் வந்துஉதித்தான்,
தானவரை என்றும் தலைஅழித்தான், — யானைமுகன்
ஓட்டினான் வெங்கலியை, உள்ளத்து இனிதுஅமர்ந்து
வீட்டினான் நம்மேல் வினை'

என வரும்.

[விநாயகன் மான் போன்ற கண்களை உடைய பார்வதியின் அழகிய வயிற்றில் வந்து தோன்றினான். எப்பொழுதும் அசுரர்களுடைய தலையை அழித்தான். கொடிய வறுமையைப் போக்கினான். நம் உள்ளத்தில் மகிழ்வோடு தங்கி நம் வினைகளைப் போக்கினான்.

இப்பாடலில், யானைமுகன் என்ற பொருட்பெயர் இடையில் அமைந்து பாடலின் பல இடங்களிலும் சென்று இயைந்து பொருள்படுமாறு காண்க.]

தொழில் கடைநிலைத் தீவகம் வருமாறு :

'துறவுஉளவாச் சான்றோர் இளிவரவும், தூய
பிறஉளவா ஊன்அளாய் ஊணும், – பறைகறங்கக்
கொண்டான் இருப்பக் கொடுங்குழையாள் தெய்வமும், ஒன்று
உண்டாக வைக்கற்பாற்று அன்று'

என வரும்.

[சான்ேருக்குத் துறவொழுக்கம் மேற்கொள்ளப்பட்டதாக அதற்கு ஏலாததாகிய கூடாவொழுக்கமும், தூய உணவுகள் பலவும் இருக்கவும் புலாலைத் துறவாது அதனேடு உண்ணும் உணவும், உலகறிய மணந்த கணவன் கட்காண் தெய்வமாக இருப்பவும் மகளிர் வேற்றுத் தெய்வத்தை வழிபடுதலும் ஏற்புடைய செயலாகக் கொள்ளப்படுவது அன்று.

இப்பாடலில் 'ஒன்று உண்டாக வைக்கற்பாற்றன்று' என்ற தொழிலை உணர்த்தும் இறுதியிலுள்ள சொற்ெருடர் இளிவரவு, ஊண், தெய்வம் என்ற ஒவ்வொன்ேருடும் தனித்தனியே இயைந்து பொருள் தந்துள்ளமை காண்க. 'வைக்கற்பாற்றன்று' என ஒருமையாய் நின்றது அதுபற்றியே என்க.]

பொருள் கடைநிலைத் தீவகம் வருமாறு :

'புறத்தன, ஊரன, நீரன, மாவின்
திறத்தன, கொற்சேரி யவ்வே, — அறத்தின்
மகனை முறைசெய்தான், மாவஞ்சி யாட்டி,
முகனை முறைசெய்த கண்'

என வரும். ஏனைய வந்துழிக் காண்க.

[அறத்திற்காக மகனையே தேர்க்காலில் கிடத்தி அவன்மீது தேரை ஊர்ந்து செங்கோலைப் பாதுகாத்த மனுநீதிச்சோழனுக்கு உரிய வஞ்சி நாட்டில் வாழும் தலைவியின் முகத்தை அழகு செய்யும் கண்கள், வெளியிலுள்ள மான்களாகவும், ஊரிலுள்ள அம்புகளாலும், நீரிலுள்ள குவளைகளாகவும், மாமரத்திலுள்ள வடுக்களாகவும், கொல்லன் சேரியில் உள்ள வாள்களாகவும் வேல்களாகவும் உள்ளன.

இப்பாடலில், கண் என்ற இறுதியில் வந்துள்ள பொருட்பெயர் புறத்தன முதலிய சொற்களோடு தனித்தனி இணைந்து பொருள் படுமாறு காண்க.

பண்புக் கடைநிலைத் தீவகம்

'மைம்மாண் புயல்கிழிக்கும்; வண்சுடர்மீ தாம்; இமையோர்
தம்மா நகர்அணவும் சால்பிற்றே — பெம்மான்
முருகவிழ்பூந் தார்வகுள முன்னோர் குருகூர்
உருவளர்பொன் மாட உயர்பு.'

சாதிக் கடைநிலைத் தீவகம்

'தாடகைகைச் சூலம்முரண் சாய்த்தானும் வில்இறுத்துச்
சூடகக்கைச் சானகிதோள் தோய்ந்தானும் — கேடகத்தான்
செம்பொன் மணிமாடத் தென்இலங்கை செற்றானும்
அம்பொன் மணிக்கூடத் தான்.'

இவை மாறன் அலங்காரம்.] *160*

ஈண்டுக் கூறிய குணமும் காலம் புணர்ந்து நின்றமையின் தொழில் அன்றோ எனின், இவ்வாறே குணமும் தொழிலும் தோன்றுங்கால் காலம் புணர்ந்து நிற்றல் ஒக்குமேனும், குணம், பொருளது புடைபெயர்ச்சியாய் நீங்கி நிற்கும் தொழில் போலாது, பொருட்குப் பண்பாய்த் தனக்கு வேறு பண்பு இன்றி அப்பொருளை நீங்காது நிற்கும் சிறப்பால், குணத்தீவகம் என்றார். (27)

[பண்பாவது ஒரு பொருள் தோன்றுங்கால் தோன்றி அது கெடுந்துணையும் கெடாது நிற்பது. பண்புக்குப் பிறிது ஒரு பண்பு விசேடணமாகாது.

தொழிலாவது ஒரு பொருளின் புடைபெயர்ச்சியாய்ச் சிறிது பொழுது நிகழ்ந்து கழிவது.

சில சொற்கள் பண்பாகவும் வரும்; தொழிலாகவும் வரும். பண்பு என்பதனையும், வினை என்பதனையும் இடம் நோக்கி உணர்தல் வேண்டும்.

இறைவன் எப்பொருளின்கண்ணும் உளன் – பண்பு.

மாற்றோர் பாசறை மன்னன் உளன் - தொழில்.] *27*

மேலதற்கு ஓர் ஒழிபு

647. மாலை விருத்தம் ஒருபொருள் சிலேடை
உவமைஉரு வகத்தோடும் ஒன்றுமார் அதுவே.

இது மேலதற்கு ஓர்ஒழிபு கூறுகின்றது.

இ-ள் : மாலை முதல் உருவகம் ஈருகக் கிடந்த ஆறனோடும் பொருந்தும் மேற்கூறிய தீவக அலங்காரம் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

['அதுவே,
மாலை விருத்தம் ஒருபொருள் சிலேடைஎன
நால்வகை யானும் நடைபெறும் என்ப.' – தண்டி. 41

'அதுவே,
ஒருபொருள் உவமை உடனுறல் சிலேடை
விருத்தம் மாலைஎன்று இவற்றொடும் விரவும்.' – மா. 161]

மாலாதீவகம் வருமாறு :

'மனைக்கு விளக்கம் மடவாள், மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர், — மனக்குஇனிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே, கல்விதனக்கு
ஓதில் புகழ்சால் உணர்வு'

என வரும்.

[வீட்டிற்கு இளம்பெண் விளக்கமாவாள்; மடவாளுக்குப் பண்பு நலன்சான்ற புதல்வர் விளக்கமாவர்; மனத்துக்கு இனிய அன்பு செலுத்தத்தக்க புதல்வருக்குக் கல்வியே விளக்கமாகும்: கல்விக்கு உணர்ந்து வாழ்க்கையில் கடைப்பிடித்தல் விளக்கமாகும்.

இப்பாடலில், விளக்கம் என்ற சொல் ஒன்றோடொன்று தொடர்புடைய மடவாள், புதல்வர், கல்வி, உணர்வு என்ற சொற்களொடும் தனித்தனி இயைந்து பொருள் தந்தது காண்க. மாலையிலுள்ள மலர்கள் ஒன்றோடொன்று தொடர்புறுவது போல இப்பாடற் செய்திகள் பலவும் ஒன்றோடொன்று தொடர்புள்ளமை காண்க.

'தீவகத் தொடுமுன் செப்பிய ஏகா
வளிதனைச் சார்த்தல் மாலை விளக்கே.' — ச. 74

'காட்டிய ஒற்றை மணிமா லையைவிளக் கைப்பொருத்தி
நாட்டுதல் மாலை விளக்காம்.' — குவ. 48]

விருத்தா தீவகம் வருமாறு :

'வரிவண்டு நாணா, மதுமலர் அம்பா,
பொருவெஞ் சிலைக்குப் பொலியும், — பிரிவின்
விளர்க்கும் நிறம்உடையார் தம்மேல் மெலிவும்,
வளர்க்கும்; மலையா நிலம்'

என வரும். ஒருபொருள் இரண்டுகுணம் செய்தமையின் அப்பெயர்த்து ஆயிற்று.

[மலைய மலையிலிருந்து வரும் தென்றல்காற்று, வண்டினையே நாணாகவும் மலர்களையே அம்பாகவும் கொண்டு மன்மதன் போரிடும் கரும்பு வில்லுக்குப் பொலிவை வளர்க்கும்; பிரிவினால் பசலை பாய்ந்து வருந்தும் தலைவியர்மாட்டு மெலிவை வளர்க்கும்.

மலையாநிலம் என்ற சொல் இச் செய்யுளில் ஈரிடத்தும் இயைந்து, பொலிவை வளர்க்கும், மெலிவை வளர்க்கும் என ஒன்றற்கொன்று விருத்தமாகிய இரு கருத்துக்களை விளக்கியவாறு காண்க. (விருத்தம் – மாறுபாடு)]

ஒருபொருள் தீவகம் வருமாறு :

'வியன்ஞாலம் சூழ்திசைகள் எல்லாம் விழுங்கும்,
அயலாத் துணைநீத்து அகன்றார் — உயிர்பருகும்,

விண்கவரும், வேரிப் பொழில்புதைக்கும், மென்மயில்கள்
கண்கவரும், மீதுஎழுந்த கார்'

எனவரும். ஒருபொருள்திறமே கொண்டு முடிதலின் இவ்வொருபொருள் தீவகம் பொருள்தீவகத்தின் வேறாயிற்று.

[வானத்தில் எழுந்த மேகம் உலகைச் சூழ்ந்த எண் திசைகளையும் தன்னிடத்து அடக்கிக்கொள்ளும்; துணைவராயினார் அயன்மை உடையவராகப் பிரிந்து செல்லப்பட்ட தலைமகளிருடைய உயிரைக் குடிக்கும்; வானத்தை மறைக்கும்; சோலைகளை மூடும்; மயில்களின் கண்களைக் கவர்ச்சி செய்யும் – என்ற இப்பாடலில், கார் என்ற சொல் பாடலின் பல இடங்களிலும் இயைந்து அதன் செயல்களைக் குறிப்பிடுவது காண்க. இப்பாடலில் உள்ள விழுங்கும், பருகும், கவரும், புதைக்கும் என்ற சொற்கள்யாவும் கார் என்ற பொருளின் திறமே குறிப்பிடும் ஒருபொருட் பன்மொழிகள் ஆதலின் இப்பாடல் ஒருபொருள் தீவகம் ஆயிற்று.]

சிலேடைத் தீவகம் வருமாறு:

'மான்மருவி, வாள்அரிகள் சேர்ந்து, மருண்டுஉள்ளம்
தான்மறுக, நீண்ட தகைமையவாய்க் — கானின்
வழியும், ஒருதனிநாம் வைத்தகன்ற மாதர்
விழியும், தருமால் மெலிவு'

என வரும்.

[இப்பாடலில் முதல் இரண்டு அடிகள் கானவழிக்கும், மாதர் விழிக்கும் சிலேடை; மெலிவுதருமால் என்ற தொடர் வழி–விழி – என்ற இரண்டனோடும் தனித்தனி இயைந்து பொருள் தருவது தீவகம்.

கானவழி மான்கள் இருத்தலானும், கொடிய சிங்கங்கள் தங்குதலானும், மயங்கி உள்ளம் வருந்துமாறு நீண்டு காணப்படுகிறது;

நாம் இல்லத்தில் விடுத்துப் பொருள் தேடப் பிரிந்தமையானே நம்மைப் பிரிந்திருக்கும் தலைவி விழிகள் மானின் மருட்சியைப் பெற்றுச் செவ்வரி கருவரி படர்ந்து காணும்போது நம் உள்ளம் மயங்கிப் பிரிதலுக்கு வருந்துமாறு நீண்டுள்ளன – என்பது சிலேடைப் பொருள்.]

உவமான தீவகம் வருமாறு :

'முன்னம் குடைபோல், முடிநா யகமணிபோல்,
மன்னும் திலகம்போல், வாள்இரவி — பொன்அகலம்
தங்கு கவுத்துவம்போல், உந்தித் தடமலர்போல்,
அங்கண் உலகுஅளந்தார்க்கு ஆம்'

என வரும்.

[சூரியன், தான் நீண்டு உயர்ந்த வடிவெடுத்த திருமாலுக்கு முதலில் குடைபோல ஆகும்; பின் தலையிலுள்ள கிரீடத்தின் சிறந்த மணிபோல ஆகும்; பின் நெற்றியில் அணியும் திலகம் போல ஆகும்; அடுத்து மார்பில் அணிந்துள்ள கவுத்துவ மணி போல ஆகும்; இறுதியில் கொப்பூழிலிருந்து தோன்றிய தாமரைப் பூப்போல ஆகும்.

இப்பாடலில், உவமை என்ற அணி வந்துள்ளது. அதனோடு இடையிலுள்ள இரவி என்னும் சொல் குடை, மணி, திலகம், கவுத்துவம், உந்தித்தடமலர் என்ற பலவற்றோடும் தனித்தனி இயைந்து பொருள் தந்தவாறு காண்க.]

உருவக தீவகம் வருமாறு :

'கானல் கயலாம், வயலில் கமலமாம்,
ஏனல் கருவிளையாம், இன்புறவில் மானும்,
கடத்துமேல் வேடர் கடுஞ்சரமாம், நீங்கிக்
கடத்துமேல், மெல்லியலாள் கண்'

என வரும். பிறவும் அன்ன. 'நீங்கிக்கடத்துமேல்' என்பதற்கு 'நெஞ்சமே! இவளைத் தனியே இருத்திப் பிரிந்து விட்டுப் போவோமாயின்' எனப் பொருள் உரைத்துக் கொள்க, (28)

[பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவன், தலைவியின் பிரிவை நினைத்துப் 'பிரிந்து செல்வோமாயின் தலைவியின் கண்கள் நெய்தல் நிலத்தில் கயலாகவும், மருத நிலத்தில் தாமரையாகவும், குறிஞ்சி நிலத்தில் தினைப் புனத்தின் இடையில் தோன்றும் கருவிளையாகவும், காடாகிய முல்லை நிலத்தில் மானாகவும், பாலை நிலத்தில் வேடர்கள் கைக்கொள்ளும் அம்பாகவும் காட்சி வழங்கும் ஆதலின் இவளைப் பிரிந்து சேறல் எனக்கு இயலாது' – என்ற இப்பாடலில், கண் என்ற சொல் கயலாம் முதலிய பல உருவகச் சொற்களோடும் தனித்தனியே இயைந்து பொருள் தந்தவாறு காண்க.] 28

பின்வரு நிலையணி - இலக்கணம்

648. முன்வரு சொல்லும் பொருளும் பலவயின்
பின்னும் வரும்எனின் பின்வரு நிலையே.

இது நிறுத்தமுறையானே பின்வருநிலை என்னும் அலங்காரம் கூறுகின்றது.

இ–ள் : ஒரு செய்யுளுள் முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பலஇடத்து வரினும், முன்னர் வந்த பொருளே பின்னர் பல இடத்து வரினும் அது பின்வருநிலை என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இதனைச் சந்திராலோகமும் குவலயானந்தமும் பின்வரு விளக்கணி என்று குறிப்பிடும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் தண்டி – 43

நெறிப்படு செய்யுள்முன் நிலைபெறு சொற்பொருள்
மறித்துறு பலபுடை வரின்பின் வருநிலை.' – மா. 157

'அதுவே,
சொற்பின் வருநிலை பொருட்பின் வருநிலை
சொற்பொருட் பின்வரு நிலைஎன மூன்றும்.' – *மா*. 158

'உவமா னப்பொருட் பின்வரு நிலையும்
தவலருஞ் சிறப்பின் தான்வரல் உளதே.' – *மா*. 159

'பின்வரு நிலையே பிறழ்ந்தெனப் பலவயின்
முன்வரும் சொல்பொருள் பின்னும் வருவதே.'
– *தொ. வி*. 350

'மொழியப் பட்ட பாமுற் போந்த
பெயரே பின்னும் பெயர்ந்து வருவது
பின்வரு நிலையெனப் பேசப் படுமே.' – *மு. வீ. பொ*. 62

'சொல்லும் பொருளும் சொல்லொடு பொருளும்
வாக்கியப் பின்னரும் வருவது பின்வரு
விளக்கது மூன்று விரியும் என்ப.' – *ச*. 38

'முன்னமார் விளக்கணி மேவு தரும முடிவுதனித்
தனியே வரின்பின் வருவிளக் காம்அது தானுஞ்சொலால்
கனிவா கியபொரு ளால்அவ் விரண்டுங் கதுவலால்
இனிமூன்று எனவரும்.' – குவ. 38]

சொல் பின்வருநிலை அணி வருமாறு :

'மால்கரி காத்துஅளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோள் ஆதரித்த மாலையார், — மால்இருள்சூழ்
மாலையின், மால்கடல் ஆர்ப்ப, மதன்தொடுக்கும்,
மாலையின் வாளி மலர்'

என வரும். மால் – மயக்கம், அரி, பெருமை, கருமை. மாலை – தொடையல், இயல்பு, அந்தி, இடையருமை.

[மத மயக்கம் பொருந்திய யானையைக் காத்தளித்த திருமாலுடைய மாலை சூழ்ந்த பெரிய மலை போன்ற தோள்களை விரும்பிய இயல்பினை உடையவர்மேல், கரிய இருள் சூழ்ந்த மாலை நேரத்தில் பெரிய கடல் ஆரவாரம் செய்ய மன்மதன்

பூமாலையிலுள்ள மலர்களாகிய அம்புகளைத் தொடுப்பான் – என்ற இப்பாடலில், மால், மாலை என்ற சொற்கள் பலவிடத்தும் பலபொருளில் வந்தவாறு காண்க.]

பொருள் பின்வருநிலைஅணி வருமாறு:

'அவிழ்ந்தன தோன்றி, அலர்ந்தன காயா,
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை, — மகிழ்ந்துடன்
விண்டன கொன்றை, விரிந்த கருவிளை,
கொண்டன காந்தள் குலை'

என வரும். இது பொருள் பின்வருநிலை; என்னை? இவ்வனைத்தும் மலர்தல் பொருள ஆகலின்.

[தோன்றி மலர்கள் பூத்தன; காயாம்பூக்கள் மலர்ந்தன; முல்லையின் போதுகள் அலர்ந்தன; கொன்றைகள் மகிழ்வோடு இதழ் விரிந்தன; கருவிளைப் பூக்கள் விரிந்தன; காந்தள் குலைகளை எடுத்தன – என்ற இப்பாடலில்,

அவிழ்ந்தன, அலர்ந்தன, முகை நெகிழ்ந்தன, இதழ் விண்டன, விரிந்த, குலை கொண்டன – என்ற சொற்கள் யாவும் பூத்தன என்ற ஒரே பொருளைக் குறிக்க வந்துள்ளமை காண்க.]

வருவது என்னது 'வரும் எனின்' என்ற மிகையானே முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவயின் ஒருங்கு வருமாயின், அது சொற் பொருட்பின் வருநிலை அணி எனப் பெயர் பெறுதலும் கொள்க.

வரலாறு:

'வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுஉணரார்,
வைகலும் வைகலை வைகும்என்று இன்புறுவார்,
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்,
வைகலை, வைத்துணரா தார்'

என வரும்,

[நாள்தோறும் பொழுது கழிதலைத் தம் வாழ்நாளின்மேல் தங்குதலாக வைத்து வாழ்நாள் கழிதலை உணராதவர்கள், நாள்தோறும் பொழுது கழிதல் நிகழ்வதனைக் கண்டும், அதன் உட்கருத்தை உணராமல், பொழுது கழிதலைப் பொழுது போவதாகவே கொண்டு மகிழ்ச்சியுறுவர்.

இப்பாடலில், வைகலும் என்ற சொல் நாள்தோறும் என்ற பொருளிலேயே மூன்று இடங்களில் வந்துள்ளமை சொல்பொருள் பின்வருநிலை அணியாம்; ஒரே சொல் ஒரே பொருளில் பல இடத்தும் வந்துள்ளமையான் என்க.]

இன்னும் இவ்விலேசானே, பிற அலங்காரங்களோடு கூடிவருதலும் கொள்க.

‘செங்கமலம் நாட்டம், செழுந்தா மரைவதனம்,
பங்கயம் செவ்வாய், பதுமம்போல் — செங்கரங்கள்,
அம்போ ருகம்தாள், அரவிந்தம், மாரனார்
தம்போர் உகந்தாள் தனம்.’

இஃது உபமானப் பொருட்பின் வருநிலை. ஏனையவற்றோடு வருவன வந்துழிக் காண்க. (29)

[மன்மதனுடைய பூசலை விரும்பி ஏற்றவளாகிய இத் தலைவியின் கண்கள், முகம், வாய், கைகள், கால்கள், தனங்கள் யாவும் தாமரையை ஒப்பன – என்ற இப்பாடலில், தலைவியின் உறுப்புக்களுக்கு உபமானமாகக் கூறப்படும் தாமரை என்பதன் பல பரியாயச் சொற்களாகிய கமலம், பங்கயம், பதுமம், அம்போருகம், அரவிந்தம் என்பனவே பல இடங்களிலும் வந்துள்ளமை காண்க. (பொருட்பின்வருநிலை)

‘பொன்அசலம் வண்கோ புரம்ஆ டகசயிலம்
மன்னு சிகரம் வடபொருப்பாம் — நன்னர்
உரங்கொள் மதில்மே ருஅதுஆகும் மாயோன்
அரங்க மணிமா ளிகை’

என்ற பாடலில், மலையின் பல பரியாயப் பெயர்களாகிய அசலம், சயிலம், பொருப்பு, மேரு என்ற சொற்கள் வந்துள்ளமையும் உபமானப்பொருட் பின்வருநிலைஅணியாதல் காண்க. மாறன். 159.]

முன்னவிலக்கணி - இலக்கணமும் வகையும்

649. முன்னத்தின் மறுப்பின் முன்ன விலக்கு; அது
மூவகைக் காலமும் மேவியது ஆகிப்
பொருள்குணம் காரணம் காரியம் புணரும்.

நிறுத்தமுறையானே முன்னவிலக்கு அலங்காரம் பற்றிக் கூறுவனவற்றுள், இஃது அதன்பொது இலக்கணமும் அதன் திறனும் கூறுகின்றது.

இ-ள் : ஒரு பொருளைக் குறிப்பினுன் விலக்கின் முன்னவிலக்கு என்னும் அலங்காரமாம். அவ்வலங்-காரம்தான் மூவகைக் காலத்தோடும் பொருந்திப் பொருள் முதலிய நான்கனோடும் கூடி நடக்கும் என்றவாறு.

பொருள் பொலிவும் செய்யுள் சிறப்பும் நோக்கிக் குறிப்பினை எடுத்துஓதினுரேனும், மறுப்பது என்னுது 'மறுப்பின்' என்ற மிகையானே, அதன் மறுதலையாகிய வெளிப்படையான் மறுப்பதூஉம் கொள்க.

[ஒரு செய்தியை வெளிப்படையாக மறுப்பதன்கண் நயம் இன்மையும் குறிப்பாக மறுப்பதன்கண்ணேயே நயம் உண்மையும் உலக வழக்கினுள்ளும் காண்க. வெளிப்படையாக மறுப்பது சான்ரோர்மாட்டு அருகியே நிகழும் என்பதும் உணர்க. இவ்வணி தடைமொழியணி எனவும் விலக்கணி எனவும் கூறப்பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 43, 44

'மன்னிய குறிப்பின் மாற்றுதல் தானே
முன்ன விலக்கென மொழிந்தனர் புலவர்.' – *மா*. 219

'இறப்புஎதிர் நிகழ்வென்று ஏத்திய காலம்
பெறப்பொருள் புலப்படும் பெற்றித்து ஆகும்.' – *மா*. 220

'கூர்பொருள் காரணம் காரியம் குணமெனும்
ஈரிரண் டினும்புணர் இயற்கைய தாகும்.' – மா. 221

'முன்ன விலக்கேல் முன்னத்தின் மறுத்தலே.' – தொ. வி. 351

'கோதறும் ஒருபொருள் குறிப்பில் தடுப்பது
முன்ன விலக்கென மொழியப் படுமே.' - மு. வீ. பொ. 63

'வெளிப்படை யாகி மேவிய கருத்தொடு
பொருந்து நீக்கம் புகல்வது விலக்கே.' – ச. 124

'பிரசித்த மான மறுப்பினை யோர்கருத் தேபிறங்கி
வரவைத்த லின்பேர் விலக்கணி.' - கு. வ. அ. 98]

இறந்தவினை விலக்கு வருமாறு :

பாலன் தனதுஉருவாய், ஏழ்உலகுஉண்டு, ஆலிலையின்
மேல்அன்று நீதுயின்றாய், மெய்என்பர் ; — ஆல்அன்று
வேலைசூழ் நீரதோ ? விண்ணதோ ? மண்ணதோ ?
சோலைசூழ் குன்றுஎடுத்தாய் ! சொல்

என வரும்.

[*கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த திருமாலே! நீ ஊழிக்காலத்தில் ஏழு உலகத்தையும் உன் வயிற்றுள் அடக்கிக் குழந்தை வடிவாய் ஆலிலையில் துயின்றாய் என்று கூறப்படும் கூற்று உண்மை என்று சான்றோர் கூறுவர். நீ தங்கியிருந்த ஆலிலையானது கடலிலுள்ளே இருந்ததோ? விண்ணுலகில் இருந்ததோ? மண் உலகில் இருந்ததோ? சொல்லுவாயாக.*

இறைவனுடைய அகடிதகடன சாமர்த்தியம் நம்மனோர் பௌதிகமாகிய அறிவுநிலைக்கு எட்டாது ஆதலின், அஃது ஆராயப்படாது என்று ஆராய்ச்சியை விலக்கியவாறு காண்க. இஃது இறந்தகாலத்து நிகழ்ச்சியாதலும் காண்க.

மாறன் அலங்கார எடுத்துக்காட்டும் இவ்விளக்கத்தையே உட்கொண்டிருக்கிறது. – *மாறன் 220*]

நிகழ்ந்தவினை விலக்கு வருமாறு :

'மாதர் நுழைமருங்குல் நோவ, மணிக்குழைசேர்
காதின் மிகைநீலம் கைபுனைவீர்! — மீதுஉலவும்
நீள்நீல வாட்கண் நிமிர்கடையே செய்யாவோ?
நாள்நீலம் செய்யும் நலம்'

என வரும்.

[*இப்பெண்ணின் மெல்லிய இடை மிகையான பாரத்தால் நோகுமாறு அழகிய காதணியை அணிந்த காதின்மீது மிகையாக நீலமலரை ஒப்பனை கருதிச் செருகுகின்றவர்களே! நாற்றிசையும் உலவும் நீண்ட நீலநிறமான ஒலிபொருந்திய இவளுடைய கண்கள் காதளவும் நீண்டிருத்தலின் அன்றலர்ந்த நீலமலர் செய்யும் அழகைத் தாமே செய்யமாட்டாவா?*

இப்பாடலில், நீண்ட நீலவிழியாளுக்குக் காதுகளில் நீலமலர் சூடுவது மிகை என்று அவ்வொப்பனை விலக்கப்படுகின்றவாறு.]

எதிர்வினை விலக்கு வருமாறு :

'முல்லைக் கொடிநுடங்க, மொய்காந்தள் கைகுலைப்ப,
எல்லை இனவண்டு எழுந்திரங்க, — மெல்லியல்மேல்
தீவாய் நெடுவாடை வந்தால், செயல்அறியேன்;
போவாய், ஒழிவாய், பொருட்கு'

என வரும். எல்லை - ஒளி.

[*'தலைவனே! முல்லைக்கொடி அசையவும், செறிந்த காந்தள் கைகளைப் போலப் பூப்பவும், ஒளிபொருந்திய வண்டுக் கூட்டம் ஒலிக்கவும், தலைவியின் மீது வீசுவதற்குக் கொடியவாயினை உடைய நெடிய வாடைக்காற்று வரும்போது, அவளை ஆற்றுவிக்கும் திறத்தினைத் தோழியாகிய யான் அறியேன். என்னுடைய இச் செய்தியைக் கேட்ட பிறகு தலைவியைப் பிரிந்து பொருள் தேடுவதற்குப் போதலையோ, அவளைப் பிரியாது உடன் இருத்தலையோ உன் விருப்பப்படிச் செய்.'–*

என்ற இப்பாடலில், எதிர்காலத்தில் நிகழக் கூடிய செயல்களைக் கூறித் தலைவன் செலவைத் தோழி விலக்கியவாறு காண்க.]

பொருள் விலக்கு வருமாறு :

'கண்ணும் மனனும் கவர்ந்தவள் ஆடுஇடம்என்று,
அண்ணல் அருளும்' அடையாளம், — தண்நிழலின்
சுற்றுஎல்லை கொண்டுஉலவும் சோதித் திரள்அல்லால்,
மற்றுஇல்லை காணும் வடிவு'

என வரும். 'அடையாளத் தண்ணிழல்' அடையாளந் தண்ணிழல் என மெலிந்து நின்றது.

[தன் கண்களையும் மனத்தையும் கவர்ந்த தலைவி விளையாடும் இடம் என்று தலைவன் குறிப்பிட்ட அடையாளப்படி குளிர்ந்த நிழலை உடைய சூழலிடத்தைக் கைக்கொண்டு உலவித் திரியும் ஒரு பேரொளி வடிவமே காணப்படுகின்றதே அன்றி உறுப்பு வடிவம் ஒன்றும் காணப்படுவதாயில்லை – என்று தலைவன் கூறிய குறியிடம் சென்று தலைவியைக் கண்ணுற்ற பாங்கன் வியந்து கூறிய இப் பாடலில், ஒளியே அன்றி உருவமே புலப்பட்டிலது என்று பொருள் விலக்கப்பட்டவாறு.]

குண விலக்கு வருமாறு :

'மாதர் துவர்இதழ்வாய் வந்துஎன் உயிர்கவரும் ;
சீத முறுவல் செயல்அழிக்கும் ; — மீதுஉலவி
நீண்ட மதர்விழிஎன் நெஞ்சம் கிழித்துஉலவும் ;
யாண்டையதோ மென்மை இவர்க்கு ?'

என வரும்.

[இப்பெண்ணின் சிவந்த இதழ்களை உடைய வாய் என் உயிரைக் கவர்கின்றது ; குளிர்ந்த புன்முறுவல் என் ஆற்றலை அழிக்கின்றது ; காதளவும் உலவி நீண்ட இவள் செழித்த விழிகள் என் உள்ளத்தைக் கிழித்து உலவுகின்றன. மெல்லியலாள் என்ற பெயருக்கு ஏற்ப இவளிடத்து மென்மை எங்குக் காணப்

படுகிறதோ? அறியேன் – என்ற இப்பாடலில், தலைவியால் ஏற்படும் தன் நலிவுகளைக் கூறித் தலைவன் அவளுக்கு மென்மைப் பண்பு இல்லை என்று விலக்கியவாறு காண்க.]

காரண விலக்கு வருமாறு :

'மதர்அரிக் கண்சிவப்ப, வார்புருவம் கோட,
அதரம் துடிப்ப, அணிசேர் — நுதல்வியர்ப்ப,
நின்பால் நிகழ்வனகண்டு, அஞ்சாதால் என்நெஞ்சம் ;
என்பால் தவறுஇன்மை யால்'

என வரும்.

[செழித்த அரிகள் பரந்த கண்கள் சிவப்பவும், நேரிய புருவங்கள் வளையவும், உதடுகள் துடிப்பவும், அழகு அமைந்த நெற்றி வியர்ப்பவும், நின்னிடத்துக் காணப்படும் வெகுளிபற்றிய வேறுபாடுகளைக் கண்டும், அவ்வெகுளிக்கு உரிய காரணம் எதுவும் என்னிடத்து நிகழாமையால் என்மனம் உன் வெகுளிக்கு அஞ்சவில்லை – என்று தலைவன் தலைவியின் ஊடலைப் போக்குவிக்கும் இப்பாடலில், தலைவியின் வெகுளிபற்றி நிகழும் மெய்ப்பாடுகளுக்குக் காரணமாகிய தவறு எதுவும் தன்னால் நிகழ்த்தப் படவில்லை என்று அவளிடம் கூறி வெகுளியின் காரணத்தை விலக்கியவாறு.]

காரிய விலக்கு வருமாறு :

'மன்னவர் சேயர் ; மயில்அகவி ஆடலும்,
பொன்மலரும் கொன்றையும், பூந்தளவின் — பன்மலரும்,
மின்உயிரா நீள்முகிலும், மெய்என்று கொள்வதே?
என்உயிரோ, இன்னும் உளது'

என வரும். (30)

[தலைவன் வினைவயின் பிரிந்து சேய் நாட்டில் உள்ளான். அவன் கார் காலத்து மீள்வதாகக் கூறிப் பிரிந்து சென்றான். அவன் கூற்றை மெய் என்று உட்கொண்ட என் உயிர் அக்காலம்

வரும் அளவும் ஆற்றியிருக்க ஒருப்பட்டு என் உடலில் தங்கியுள்ளது. இதற்கிடையில் மயில் அகவி ஆடுதலையும், கொன்றை பொன்போல் மலர்வதனையும், முல்லை பூத்தலையும், மின்னலை மேகங்கள் வெளிப்படுத்துதலையும் உண்மையில் கார் காலத்து நிகழ்ச்சிகள் என்று யாங்ஙனம் கொள்ளுவோம்?– என்ற பாடலில், கார்காலம் வந்துவிட்டால், தலைவன் அக்காலத்து வரவில்லை எனின் உயிர் நீங்குதலாகிய காரியம் நிகழ்ந்திருக்கும்; கார்காலம் வாராமையின் உயிர் நீங்குதலாகிய காரியம் நிகழவில்லை என்று தலைவி காரியத்தை விலக்கியவாறு காண்க.] 30

முன்னவிலக்கு விரி

650. வன்சொல்[1] வாழ்த்துத்[2] தலைமை[3] இகழ்ச்சி[4]
துணைசெயல்[5] முயற்சி[6] பரவசம்[7] உபாயம்[8]
கையறல்[9] உடன்படல்[10] வெகுளி[11] விலக்கல்[12]
ஐயம்[13] என்ற அவைபதின் மூன்றொடும்
வேற்றுப்பொருள்[14] சிலேடை[15] ஏதுவும்[16] உளப்பட
மேற்கூ றியஅதன் விரிஈ ரெட்டே.

இஃது அதன் விரி இத்துணைத்து என்கின்றது.

இ–ள்: வன்சொல் சொல்லி விலக்குவதூஉம், வாழ்த்தி வைத்து விலக்குவதூஉம், தன்பால் தலைமை தோன்றக் கூறி விலக்குவதூஉம், விலக்குவதற்கு ஏதுவை இகழ்ந்து விலக்குவதூஉம், துணைசெய்வாரைப் போலக்கூறி விலக்குவதூஉம், முயற்சி தோன்றக்கூறி விலக்குவதூஉம், தன்வசம் அல்லாமை தோன்றக்கூறி விலக்குவதூஉம், ஓர் உபாயம் காரணமாகக்கூறி விலக்குவதூஉம், வேண்டிய பொருள்மேல் முயலும் ஒழுக்கம் இன்மை தோன்றக்கூறி விலக்குவதூஉம், உடன் பட்டார்போல விலக்குவதூஉம், வெகுளிதோன்றக்கூறி

விலக்குவதூஉம், இரங்கல் தோன்றக்கூறி விலக்குவதூஉம் ஐயுற்றதனை விலக்குவதூஉம் என்று சொல்லப்பட்ட பதின்மூன்றேடும், வேற்றுப்பொருள் விலக்கும் சிலேடை விலக்கும் ஏதுவிலக்கும் ஆகிய மூவகை விலக்கும் உளப்பட முற்கூறிய முன்னவிலக்கு என்னும் அலங்காரத்தின் விரி பதினாறும் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 45, 46

['ஆசி அனுதரம் காரணம் காரியம் ஐயமேது
பேசும் உபாயம் சிலேடை முயற்சி பிறபொருள்வைப்பு
ஏசில் கருணை நட்போடு கருமம் இகழ்ச்சி வன்சொல்
தேசின் இரக்கம் தலைமை அனுசயம் செற்றமென்னே.'
- *வீ.* 163

'வெப்பம் தருமம் பரவசத் தோடு வியன்குணமற்று
ஒப்புப் பொருளின் தடைமொழி தன்னை உய்த்துணர்ந்து
செப்ப முடையவர் காலங்கள் மூன்றில் திருத்திப்பின்னும்
எப்பண்பு கொண்ட விகற்பம் வரினும் இயற்றுவரே.'
- *வீ.* 164

'கடுஞ்சொல் ஆசி தலைமை இகழ்ச்சி
உடன்படல் முயற்சி துணைசெயல் உபாயம்
ஐயம் பரவசம் வெகுளி இரங்கல்
கையறல் உடன்விரி காட்சியும் உளவே.' – *மா.* 222

'அவற்றுள்,
கடுஞ்சொல்லின் விலக்குதல் கடுஞ்சொல் விலக்கே.'
– *மா.* 223

'ஒழிந்தவும் தம்பெயர் உரையிற் கொள்ளும்.' – *மா.* 224

'வேற்றுப்பொருள் வைப்பே ஏதுஎன்று இன்னவை
மேல்தொடர்ந்து இயலும் விதியும் இதற்குள.' – *மா.* 245]

வன்சொல் விலக்கு வருமாறு :

**'மெய்யே பொருள்மேல் பிரிதியேல் வேறுஒரு
தையலை நாடத் தகும்நினக்கு ; — நெய்இலைவேல்
வள்ளல்! பிரிவுஅற்றல் பார்த்து, எங்கள் வாழ்நாளைக்
கொள்ள உழலும் கூற்று'**

என வரும். வள்ளல் – அண்மைவிளி.

[*நெய் பூசப்பட்ட இலை போன்ற வடிவத்தை உடைய வேலை ஏந்திய தலைவனே! உண்மையிலேயே நீ தலைவியை நீத்துப் பொருள்வயின் செல்லும் பிரிவை உட்கொள்வாயானால், பிறள் ஒருத்தியை மறுமணம் செய்துகொள்ளவேண்டியநிலை நினக்கு ஏற்படும். நீ பிரியும் காலத்தை எதிர்நோக்கி எம் உயிரைக் கவர்ந்து கொள்ளக் கூற்றம் சுழன்று கொண்டிருக்கிறது என்ற தோழி கூற்றில்,*

'நீ பிரியின் தலைவி இறந்துவிடுவாள் ஆதலின் மீண்டுவந்த பின் நீ மறுமணம் செய்து கொள்ளும் நிலை ஏற்படும்' என்று கொடுஞ்சொற் கூறிச் செலவை விலக்கியவாறு காண்க.]

வாழ்த்து விலக்கு வருமாறு :

**'செல்லும் நெறிஅனைத்தும் சேம நெறியாக ;
மல்க நிதியம் ; வளம்சுரக்க ; — வெல்லும்.
அடல்தேர் விடலை! அகன்றுஉறைவது யாங்கு, அவ்
இடத்தே பிறக்கவே யாம்'**

என வரும். அகன்று உறைவது எவ்விடத்தே, சொலல்வேண்டும்; யாங்கள் அவ்விடத்தே பிறப்பேமாக என்றாள்; இறக்குங்காலத்து உண்டாகிய நினைவு பிறந்த காலத்துக்கூடும் என்பதை நோக்கி.

[*வெல்லும் ஆற்றலையும் தேரினையும் உடைய வீரனே! நீ போகும் வழிகள் அனைத்தும் பாதுகாவலை உடைய வழிகள் ஆகுக; செல்வம் பெருகுக; வளம் சுரந்திடுக; நீ எங்களைப் பிரிந்து எவ்விடத்துக்குச் செல்கின்றாயோ அவ்விடத்தில் யாம் வந்து பிறத்தலை விரும்புகின்றோம் – என்ற தோழி கூற்றில்,*

தலைவனையும் அவன் பிரிவினையும் வாழ்த்துவதுபோலப் பிரிவால் தங்கள் இறப்பு நிகழ்தல் ஒருதலை என்பதைக் குறிப்பால் உணர்த்தி, அவன் பிரிவை விலக்கியவாறு காண்க.]

தலைமை விலக்கு வருமாறு :

'பொய்ம்மை நெறிதீர் பொருளும் மிகப்பயக்கும் ;
எம்உயிர்க்கும் யாதும் இடர்இல்லை ; — வெம்மைதீர்ந்து
ஏக இனிய நெறிஅணிய ; என்றாலும்,
போகல் ஒழிவாய் பொருட்கு '

என வரும்.

[பொய்யாகிய வழியிலிருந்து நீங்குதற்குக் காரணமாகிய செல்வமும் நிரம்பக் கிடைக்கும் ; எங்கள் உயிருக்கும் நீ இனிப் பொருள்வயின் பிரிந்து போவதால் ஏதம் எதுவும் நிகழாது. நீ பிரிந்துபோகும் வழியும் வெப்பம் முதலியன நீங்கிக் கடத்தற்கு இனிய வழியாகும் ; அது சேய்மையானதும் அன்று ; என்றாலும், நீ பொருள்வயின் பிரியாதே - என்ற தோழி கூற்றில்,

பொருள்வயின் பிரிவின் தேவையும் எளிமையும் இனிமையும் அப்பிரிவு தம் உயிருக்கு ஏதம் தாராத நிலைமையும் குறிப்பிடப் படினும் தலைமை செய்து கொண்டு தலைவன் செலவைத் தடுப்பதனைக் காண்க. தலைமகற்குக் குற்றேவல் செய்யும் நிலையளாம் தோழி அவன் மேற்கொண்ட செலவைத் தடுக்க முற்படுவது தலைமையாம்.]

இகழ்ச்சி விலக்கு வருமாறு :

'ஆசை பெரிதுஉடையேம் ஆர்உயிர்மேல் ; அப்பொருள்மேல்
ஆசை சிறிதும் அடைவிலமால் ; — தேசு
வழுவா நெறியின் வருபொருள்மேல், அண்ணல் !
எழுவாய், ஒழிவாய் இனி '

என வரும்.

[அண்ணலே ! தலைமை கெடாதவண்ணம் நல்வழிக்கண் ஒழுகித் தேடும் பொருள்மேல் நாட்டம் கொண்டுள்ளாய். எங்களுக்கு எங்கள் ஆருயிர்மேல் ஆசையேயன்றி, அப்பொருளின் மேல் ஆசை சிறிதும் இல்லை. எம் கருத்தைக் கூறிவிட்டோம்; இனி, பொருள்வயின் பிரிந்து செல்லுவதோ, அப்பிரிவை விலக்கி இல்லத்திலேயே இருப்பதோ நின் விருப்பம் –

என்ற தோழி கூற்றில், 'எமக்கு உயிர்மேல் விருப்பமே அன்றிப் பொருள்மேல் விருப்பம் இன்று' – என்ற தொடர், பொருளால் எய்தும் பயனை இகழ்ந்து தலைவன் செலவை விலக்குதற்குப் பயன்பட்டவாறு காண்க.]

துணைசெயல் விலக்கு வருமாறு :

'விளைபொருள்மேல் அண்ணல் விரும்பினையேல், ஈண்டுஎம்
கிளைஅழுகை கேட்பதற்கு முன்னம், — விளைதேன்
புடைஊறு பூந்தார்ப் புனைகழலோய்! போக்கிற்கு,
இடையூறு வாராமல் ஏகு'

என வரும்.

[தேன் துளிக்கும் மாலையினையும் வீரக் கழலையும் அணிந்த தலைவனே ! நின் கருத்து முற்றுதற்குக் காரணமாகிய பொருள் கருதித் தலைவியைப் பிரிந்து செல்லக் கருதுவையேல், எம் உறவினருடைய அழுகைக் குரல் வெளியே கேட்பதன் முன், உன் பொருள்வயின் பிரிவிற்கு இடையூறு ஏற்படாத வகையில் விரையப் புறப்படுவாயாக –

என்ற தோழி கூற்றில், 'விரைந்து பிரிந்து செல்வாயாக' என்று தலைவன் போக்கிற்குத் துணை செய்வாளைப்போன்று, பிரிதல் துன்பம் தாங்காது தலைவி விரைவில் இறந்துவிடுவாளாதலின் உறவினருடைய அழுகை ஒலி கேட்கும் என்ற செய்தியையும் குறிப்பிட்டுச் செலவை விலக்கியவாறு காண்க.]

முயற்சி விலக்கு வருமாறு :

'மல்அணிந்த தோளாய்ஈது என்கொலோ 'வான்பொருள்மேல்
செல்க விரைந்து'என்று, உளம்தெளிந்து — சொல்லுதற்கே
ஏன்று முயல்வல்யான்; 'ஏகல்நீ' என்று இடையே
தோன்றுகின்றது, என்வாயில் சொல்'

என வரும்.

[*'வலிமை மிக்க தோள்களை உடைய தலைவனே! சிறந்த பொருள் தேடுவதற்கு விரைந்து செல்வாயாக' என்று நின் பிரிவைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்று மனம் தெளிந்து சொல்லுவதற்கே நான் பலகாலும் முயல்கின்றேன். ஆனல் என்னை அறியாமல் என் வாயிலிருந்து 'நீ பிரிந்து போகாதே' என்ற சொற்களே வெளிவருகின்றன. இஃது என்ன புதுமை!--*

என்ற தலைவி கூற்றில் – தலைவனைப் பிரிந்து செல்லுமாறு கூறவிரும்பும் தன் முயற்சியிடையே, உள்ளிருந்து, பிரிதலை விரும்பாத சொற்களும் வெளிப்பட்டுத் தன் முயற்சியை விலக்குமாறு அமைந்தமை சுட்டப்பட்டவாறு.]

பரவசவிலக்கு வருமாறு :

'செல்கை திருவுளமேல் யான்அறியேன்; 'தேன்கமழ்தார்
மல்அகலம் தங்கும் மதர்விழியின் — மெல்இமைகள்
நோக்கு விலக்கும்'என நோம்இவள் தன்காதல்
போக்கி, அகல்வாய் பொருட்கு'

என வரும்.

[*இவள் 'நறுமணமாலையை அணிந்த நின் வளமான மார்பில் பதியும் தன் பார்வைகளை இடையருது செலுத்த இயலாதபடி இமைகள் இமைத்துத் தடுக்கின்றன' என்று இமைகளின் செயல் குறித்து வருந்தும் இயல்பினள். இவள் நின்மாட்டுக் கொண்டுள்ள அன்பின் ஆழம் இத்தகையது. நீ இவளை விடுத்துப் பிரிந்து செல்ல முடிவுசெய்து விடுவாயாயின், இவளை ஆற்று*

விக்கும் திறத்தை யான் அறியேன். நீயே, இவள் உன்மேல் வைத்திருக்கும் பற்றினை நீக்கச் செய்து, பின் பொருள்வயின் பிரிந்து செல்வாயாக-

என்ற தோழி கூற்றில், தலைவியை ஆற்றுவிக்கும் ஆற்றல் தன் இயல்புக்கு அப்பாற்பட்டது என்று அவள் கூறித் தலைவன் பிரிவை விலக்கியவாறு காண்க.

பரவசம் — தன்வசம் அன்மை.]

உபாயவிலக்கு வருமாறு :

'இன்உயிர் காத்துஅணிப்பாய் நீயே; இளவேனில்
மன்னவனும் கூற்றுவனும் வந்துஅணைந்தால், — அன்னோர்
தமக்கு,எம்மைத் தோன்றாத் தகைமையதுஓர் விஞ்சை,
எமக்குஇன்று அருள்புரிந்தே ஏகு'

என வரும்.

[தலைவனே! நீயே எங்கள் இனிய உயிரைப் பாதுகாத்து நிலைபெறச் செய்யும் பொறுப்பினை உடையை. ஆதலின் நீ பொருள்வயின் பிரியக்கருதின், எங்கள் உயிரைக் கோடற்கு மன்மதனும் எமனும் வந்து சேர்ந்தால், அவர்களுக்கு எம் உயிர் புலனாகாதபடி மறைத்துக் கொள்ளும் வித்தையை எங்களுக்குக் கற்பித்துப் பின் பிரிவாயாக —

என்ற தோழி கூற்றில், தலைவன் பிரிவிற்கு உபாயம் கூறுவாள் போலப் பிரிவை விலக்கியவாறு காண்க.

உபாயம் — மன்மதனுக்கும் எமனுக்கும் புலனாகாதபடி தம் உயிரைக்கரந்து கொள்ளற்காம் வித்தை.]

கையறல்விலக்கு வருமாறு :

'வாய்த்த பொருள்விளைத்தது ஒன்றுஇல்லை; மாதவமே
ஆர்த்த அறிவுஇல்லை; அம்பலத்துக் — கூத்துஉடையான்
சீலம் சிறிதேயும் சிந்தியேன், சென்றுஒழிந்தேன்;
காலம் வறிதே கழித்து'

என வரும்.

[உயிருக்கு உறுதிதரும் பொருளை விளைத்தற்குக் காரணமாகிய நன்முயற்சி யாதும் செய்யவில்லை; மேம்பட்ட தவத்திலேயே பொருந்தும் அறிவும் இல்லை, சிவபெருமானுடைய பெருமையைச் சிறிதும் தியானம் செய்யாமல் என் வாழ்நாட்களை வீணே கழித்து மூப்பு எய்திவிட்டேன் –

என்ற இப்பாடலில், பொருள் விளைவியாமலும், தவம் செய்யாமலும், இறைவனடியைச் சிந்தியாமலும் செயலற்ற தன்மை கூறி, வறிதே கழித்த காலத்தை இனி மீட்க ஒண்ணாது என விலக்கியவாறு காண்க. கையறல் – செயலறவு.]

உடன்படல்விலக்கு வருமாறு :

'அப்போது அடுப்பது அறியேன்; அருள்செய்த
இப்போது இவளும் இசைகின்றாள்; – தப்பில்
பொருளோ புகழோ தரப்போதிர்! மாலை
இருளோ நிலவோ எழும்'

என வரும்.

[குறைவற்ற பொருளையும் புகழையும் தேடிக்கொள்வதற்குத் தலைவியைப்பிரிந்து செல்லும் தலைவனே! நீ குறிப்பிடும் பிரிவிற்கு இப்பொழுது தலைவியும் உடன்படுகின்றாள். ஆனால் நீ பிரிந்து செல்லும் இன்று மாலையே இருளும் நிலவும் தோன்றும். அப்பொழுது தலைவியிடம் யாது வேறுபாடு நிகழும் என்பதை யான் அறியேன். அவளை ஆற்றுவித்துக்கொண்டிருக்கும் ஆற்றல் எனக்கு இன்று –

என்ற தோழி கூற்றில், 'இப்போது இவளும் இசைகின்றாள்' என்ற உடன்படலும் 'மாலை அடுப்பது அறியேன்' என்ற விலக்கும் அமைந்தவாறு காண்க.]

வெகுளிவிலக்கு வருமாறு :

'வண்ணம் கரிய வளைசரிய, வாய்புலர,
எண்ணம் தளர்வேம் எதிர்நின்று, – கண் இன்றிப்
போதல் புரிந்து, பொருள்காதல் செய்வீரால்;
யாதும் பயம்இலேம் யாம்'

என வரும்,

[நிறம் மாறுபட, வளைகள் கழல, வாய்புலர, எதிர்காலத்து நன்மை கருதி யாங்கள் திட்டமிட்ட எண்ணங்கள் எல்லாம் தளரச் செயலற்று இருக்கும் எங்கள் முன், எங்கள் நிலையைக் கண்டுகொண்டவாறே நின்று கண்ணோட்டம் இன்றி எங்களைப் பிரிந்து பொருள் தேடுதலிலேயே அன்புற்று இருக்கின்றீர் ஆதலின், நீர் தேடிவரும் பொருளால் எங்களுக்கு யாதொரு பயனும் நிகழாது –

என்ற தலைவி கூற்றில், 'பொருளால் யாதும் பயம்இலேம் யாம்' என்ற வெகுளிச் சொற்கள் தலைவன் பிரிவை விலக்கியவாறு.]

இரங்கல்விலக்கு வருமாறு :

'ஊசல் தொழில்இழக்கும், ஒப்பு மயில்இழக்கும்,
வாசம் சுனை இழக்கும் வள்ளலே! — தேசு
பொழில்இழக்கும், நாளைஇப் பூங்குழலி நீங்க,
எழில்இழக்கும்; அந்தோ இவண்'

என வரும்.

[வள்ளலே! நீ இன்று தலைவியைப் பிரிந்து புறப்பட்டால், நின் பிரிவைத் தாங்காமல் நாளை இத்தலைவி இறந்து படுவாளாயின், ஊசல் தன்னை ஆட்டுவார் இன்மையின் தொழிலை இழக்கும்; மயில் தன் சாயலுக்கு ஒப்பாவாரை இழக்கும்; தலைவி நறுஞ்சுண்ணம் பூசி நீராடுதல் நிகழாமையின், சுனைநீரும் தன் நறுமணத்தை இழக்கும்; தலைவி வாராமையால் பொழிலும் ஒளியை இழக்கும்; இவ்விடமே நாளை அழகை இழக்கும் –

என்ற தோழி கூற்றில், ஊசல், மயில், சுனை, பொழில் முதலியவற்றின் நிலைக்கு இரங்குவாள் போலத் தலைவன் பிரிவை விலக்கியவாறு.]

ஐயவிலக்கு வருமாறு :

'மின்னோ ; பொழிலின் விளையாடும் இவ்வுருவம்
பொன்னோ எனும்சுணங்கின் பொற்கொடியோ ?—என்னோ ?
திசைஉலவும் கண்ணும், திரள்முலையும், தோளும்,
மிசைஇருளும் தாங்குமோ மின் ?'

என வரும்.

['சோலையினிடத்து விளையாடும் இவ்வுருவம் மின்னலோ? அல்லால் பொன் போன்ற தேமலை உடைய பொற்கொடியோ? யாதாகும்? எண்டிசையும் உலாவும் கண்களையும் திரண்ட முலைகளையும் தோள்களையும் மேலே இருண்ட கூந்தலையும் மின்னல் தாங்கி இருக்குமோ?' –

என்று தலைவன் சுட்டிய இயல் இடங்கண்டு வியந்த பாங்கன் கூற்றில், மின்னோ பொற்கொடியோ என்ற ஐயம் கண், முலை, தோள், கூந்தல் என்பனவற்றால் விலக்கப்பட்டவாறு.]

வேற்றுப்பொருள்விலக்கு வருமாறு :

'தண்கவிகை யால்உலகம் தாங்கும் சயதுங்கன்
வெண்கவிகைக் குள்அடங்கா வேந்துஇல்லை — உண்டோ
மதியத் துடன்இரவி வந்துஉலவு வானில்,
பொதியப் படாத பொருள் ?'

என வரும்.

[குளிர்ந்த வெண் கொற்றக்குடையின் நிழலால் உலகத்தை நலிவிலிருந்து பாதுகாக்கும் சோழ மன்னனுடைய வெண் குடைக்குள் அடங்காத அரசே இல்லை. சந்திரனும் சூரியனும் உலவும் வானத்தின்கண் அடக்கப்படாத பொருள் எதுவும் இல்லை.

'மதியத்துடன்...பொருள்' என்ற பொதுப் பொருளைக் கொண்டு 'தண்கவிகை...இல்லை' என்ற சிறப்புப் பொருளை

விளக்கியதால் வேற்றுப்பொருள்வைப்பணியும், வானில் பொதியப் படாத பொருள் இல்லை, சயதுங்கன் கவிகைக்குள் அடங்கா வேந்தில்லை என்ற விலக்கணியும் அமைதலின் இது வேற்றுப் பொருள் விலக்கணி ஆயினவாறு.]

சிலேடைவிலக்கு வருமாறு :

'அம்போருகம் செற்று, அமுத மயம்ஆகி,
வம்புஆர் முறுவல் ஒளிவளர்க்க, — இம்பர்
முகைமதுவார் கோதை முகம்உண்டு ; உலகின்
மிகைமதியும் வேண்டுமோ வேறு ?'

என வரும்.

[இப்பாடல் கோதை முகத்திற்கும் மதிக்கும் சிலேடை. தலைவி முகம் வனப்பால் தாமரையை வென்று, தலைவற்குத் தண்ணளி செய்தலால் அமுதவடிவினதாய், புது அழகு தோன்றும் புன்முறுவலால் ஒளியை வளர்க்கின்றது ; மதியம் தாமரையைக் கூம்பச்செய்து, பின் அமுதவடிவாய்ப் புது அழகுதரும் ஒளியைப் பரப்புகின்றது.

முகம் என்ற பொருள் இருப்பவும், அதனை ஒத்த பண்பும் செயலும் உடைய மதியம் உலகிற்கு மிகை என்று கூறி, மதியத்தை விலக்குதலின் விலக்கு.

இவ்வாறு சிலேடை விலக்கு வந்தமை காண்க.]

ஏதுவிலக்கு வருமாறு :

'பூதலத்துள் எல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தார் தாமே கவர்தலான், — நீதி
அடுத்துஉயர்ந்த கீர்த்தி அநபாயா ! 'யார்க்கும்
கொடுத்தி'எனக் கொள்கின் றிலம்'

என வரும். பிறவும் அன்ன.

[நீதியால் மேம்பட்ட புகழை உடைய சோழனே! இவ்வுலகில் தாம் வறுமையுற்றவராய் நின்னைத் தம் வறுமையைத் தீர்த்துக் கோடற்குக் காணவருதலை விரும்பியவர் அனைவரும் தாம் விரும்பிய பொருள்களைத் தாங்களே எடுத்துச் செல்லும் வாய்ப்பினை நீ அருளியுள்ளாய். ஆதலின், நீ யாருக்கும் கொடுக்கின்றாய் என்று யாம் கருதகில்லேம் – என்ற இப்பாடலில், வறியாருக்கு வழங்குவதாகிய சோழனுடைய கொடை, அவன் தன் கைகளால் எடுத்து வழங்காமையால் கொடை ஆகாது எனக் காரணம் காட்டி விலக்கப்பட்டவாறு. காரணவிலக்கோடு இவ்விலக்கிடை வேறுபாடு காண்க. காரணவிலக்கு காரியம் நிகழ்வதற்குரிய காரணம் எதுவும் நிகழ்ந்திலது என்று கூறி விலக்குவது. ஏதுவிலக்கு ஒரு செயல் நிகழ்ச்சியைக் காரணம் காட்டி அச்செயல் நிகழ்கின்றிலது என விலக்குவது.]

வேற்றுப்பொருள் வைப்பு முதலிய அலங்காரங்கள் மூன்றோடு முன்னவிலக்கு அலங்காரம் கூடிவருதல்பற்றி இவற்றைவேறு பிரித்து ஓதினார். 31

வேற்றுப்பொருள் வைப்பணி - இலக்கணமும் விரியும்

651. முன்ஒன்று தொடங்கி மற்றுஅது முடித்தற்குப்
பின்னர் ஒருபொருள் உலகுஅறி பெற்றியின்
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பது
முழுவதும் சேறல்[1] ஒருவழிச் சேறல்[2]
முரணித் தோன்றல்[3] சிலேடையின் முடித்தல்[4]
கூடா இயற்கை[5] கூடும் இயற்கை[6]
இருமை இயற்கை[7] விபரீதப் படுதல்[8] என்று
இனையஓர் எட்டின் இயல்பினது என்ப.

நிறுத்தமுறையானே இது வேற்றுப்பொருள் வைப்பின் பொதுவிதியும் அதன்விரியும் கூறுகின்றது.

இ-ள்: முன் ஒரு பொருள்திறம் தொடங்கிப் பின்னர் அதனை முடிப்பதற்கு ஆற்றலுடைய பிறிது ஒரு பொருளை உலகு அறியும் இயல்பான் ஏறிட்டுவைத்து மொழிவது வேற்றுப்பொருள்வைப்பு என்னும் அலங்காரமாம். அவ்வேற்றுப்பொருள்வைப்பு, ஒரு திறம் உரைத்தால் அத்திறம் எல்லாவற்றின்மேலும் முற்றச்செல்லவைத்தலும், அவ்வாறு அன்றிச் சில வற்றின்மேல் செல்லவைத்தலும், தம்முள் மாறுபட்டுத் தோன்ற வைத்தலும், முன்னர்வைத்த பொருளையும், பின்னரதனையும் ஒருசொல் தொடர்பான் முடிய வைத்தலும், கூடாத இயல்பைக் கூடுவதாக வைத்தலும், கூடும் இயல்பைக் கூடுவதாக வைத்தலும், கூடாத இயல்பையும் கூடும் இயல்பையும் கூடுவதாக ஒருங்கு வைத்தலும், நல்வினைப் பயன் தீதாகவும் தீவினைப்பயன் நன்றாகவும் வைத்தலும் என்று சொல்லப்பட்ட இத் தன்மையவாகிய எண்வகைத் திறத்தினை உடையதாம் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 47, 48

'தேரும் பொதுவே சிறப்பு நிலையே சிலேடையன்றி
ஏரும் முரணியை போடியை பின்மை இயைபுதம்மில்
பேரும் விரவிய லேநற் பிறபொருள் வைப்புத்தண்டி
சீரும் பொலிவும் மலியும் தன்னூலினிற் செப்பியதே.'
– *வீ.* 162

'ஒருபொரு ளினைமுதல் உரைத்ததை முடித்துத்
தருபொருள் நிலைபினும் தான்வைப் பதுவே
புகழ்புணர் வேற்றுப் பொருள்வைப் பாகும்.' – *மா.* 207

'அனைத்தினும் சேறல் ஒருவகை அடைதல்
முரணுற மொழிதல் இரட்டுற மொழிதல்
கூடுதல் கூடா வகையின் கூறுதல்
இருமையின் விளம்பல் விபரீதத்து இயம்பல்என்று
எண்வகை யான்வரும் இயலுடைத்து அதுவே.' – *மா.* 208

'வேற்றுப்பொருள் வைப்பே விளங்கினது தொடங்கி
ஈற்றின் உதவிய ஏற்றி உரைத்தலே.' – தொ. வி. 342

'ஆதியில் ஒருபொருள் ஆரம் பித்தது
முடித்தற்குப்பின் ஒருசொல் மொழிவது
வேற்றுப் பொருள்வைப் பாமென மொழிப.' – மு. வீ. பொ. 64

'மாறு படும்பொருள் வைத்து முடிப்பது
முரணிற் ரேன்றலாம் மொழியுங் காலே.' ,, 65

'பொருந்தாப் பொருளைப் பொருந்த வைப்பது
பொருந்தாப் பிறபொருள் வைப்பெனப் படுமே.' ,, 66

'கூடும் பொருளைக் கூட்டி உரைப்பது
கூடும் இயற்கையாம் குறிக்குங் காலே.' ,, 67

'இருமையும் இயைவன இருமை இயற்கை.' ,, 68

'பொதுவால் சிறப்பும் சிறப்பால் பொதுவும்
புகறல் வேற்றுப் பொருள்வைப் பணியே.' – ச. 87

'பொதுவால் சிறப்பைச் சிறப்பால் பொதுவினைப் பூரித்திடல்
அதின்நாமம் ஓர்ந்திடில் வேற்றுப் பொருள்வைப்பணி'
– குவ. 61

முழுவதும் சேறல் வருமாறு :

'புறந்தந்து இருள்இரியப் பொன்நேமி உய்த்துச்
சிறந்த ஒளிவளர்க்கும் தேரோன் — மறைந்தான் ;
புறஆழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார் ?'

என வரும்.

[இருளைப் புறங்காட்டி ஓடச்செய்து அழகிய சக்கரத்தைச் செலுத்திச் சிறந்த ஒளியைப் பரப்பும் கதிரவன் மறைந்தான். புறத்தே கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் இறவாது என்றும் நிலைத்திருப்பவர் யாவர் ? –

என்ற இப்பாடலில், 'புறவாழி......யார்' என்பது பொதுப் பொருள் ; 'புறந்தது......மறைந்தான்' – என்பது சிறப்புப் பொருள். பொதுப்பொருளால் சிறப்புப்பொருள் விளக்கப் பட்டவாறு. பிறந்தவர் இறத்தல் உலகம் முழுதிற்கும் பொதுப் பண்பு ஆதலின், இது முழுவதும் சேறல் ஆயிற்று.

முழுவதும் சேறல் – சொல்லப்படும் ஒரு பொதுச் செய்தி உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் குறைவறப் பொருந்தும் பொதுச் செய்தியாக அமைதல்.]

ஒருவழிச்சேறல் வருமாறு :

'எண்ணும் பயன்தூக்காது, யார்க்கும் வரையாது,
மண்உலகில் வாமன் அருள்வளர்க்கும் ; — தண்நறுந்தேன்
பூத்துஅளிக்கும் தாரோய்! புகழாளர்க்கு, எவ்வுயிரும்
காத்துஅளிக்கை அன்றோ கடன்?'

என வரும்.

[*குளிர்ந்த நறிய தேனை மலர்ந்து கொடுக்கும் மாலையை அணிந்தவனே ! கைம்மாறு கருதாமல், 'அருள் செய்யத்தக்கவர் இவரே' என்று சிலரை வரையறுத்துக்கொள்ளாமல், இவ்வுலகில் திருமால் கருணையை வளர்க்கின்றான். உண்மையான புகழை உடையவருக்கு எல்லா உயிர்களையும் பாதுகாத்துக் கருணை செய்வதன்றோ கடமையாகும்? –*

இப்பாடலில், 'புகழாளர்க்கு......கடன்' – பொதுச் செய்தி ; 'எண்ணும்......வளர்க்கும்' – சிறப்புச்செய்தி. பொதுச் செய்தியால் சிறப்புச் செய்தி விளக்கப்பட்டவாறு.

இச்செய்தி உலகத்து உயிர்கள் அனைத்திற்கும் செல்லாது, புகழாளர் ஆகிய ஒரு கூற்றிற்கே சேறலின் ஒருவழிச் சேறல்.

ஒருவழிச் சேறல் – சொல்லப்படும் ஒரு பொதுச் செய்தி உலகத்துப் பொருள் அனைத்திற்கும் உரியதாகாது, ஒரு கூற்றிற்கே உரியதாக அமைவது.]

முரணித்தோன்றல் வருமாறு :

'வெய்ய குரல்தோன்றி, வெஞ்சினஏறு உட்கொளினும்,
பெய்யும் மழைமுகிலைப் பேணுவரால் ; — வையத்து,
இருள்பொழியும் குற்றம் பலவரினும், யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்'

என வரும்.

[கொடிய இடியோசையை எழுப்புவித்து அதற்குக் காரணமான கொடிய வெப்பத்தை உடைய பேரிடியை உட்கொண்டிருந்தாலும், மழைபெய்யும் கார்மேகத்தை யாவரும் விரும்புவர். உலகில் புகழை அழிக்கும் குற்றங்கள் பலவாகத் தம்மிடத்து வளரினும், மற்றவருக்குப் பொருளை வாரிக்கொடுக்கும் வள்ளன்மையுடையார் மேலதே புகழ் –

என்ற இப்பாடலில், 'வையத்து.........புகழ்' என்ற பொதுப்பொருளால் 'வெய்யகுரல் .... பேணுவரால்' என்ற சிறப்புப் பொருள் விளக்கப்பட்டவாறு.

'அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்' – குறள் 92

முதலிய சான்றோர் கருத்துக்கு மாறாக, வள்ளன்மை ஏனைய குணங்களுள் தீயவற்றைச் செகுத்துப் புகழ்தரும் மாறுபாட்டை உலகின்மேல் வைத்து விளக்குவதால், இது முரணித்தோன்றல் ஆமாறு காண்க. தீமைகளிடையே நன்மைத் தோற்றம் முரணித் தோன்றல் எனினும் ஆம்.]

சிலேடையின் முடித்தல் வருமாறு :

'எற்றே! கொடிமுல்லை, தன்னை வளர்த்துஎடுத்த
முற்றிழையாள் வாட, முறுவலிக்கும்; — முற்றும்
முடியாப் பரவை முழங்குஉலகத்து, என்றும்,
கொடியார்க்கும் உண்டோ குணம்?'

என வரும்.

[கொடியாகிய முல்லையின் இயல்பு எத்தன்மைத்து! தன்னை வளர்த்துக் கொழுகொம்பொடு இணைத்த தலைவி வாடி நிற்கவும் தான்தன் முல்லை முகைகளால் புன்முறுவல் பூக்கின்றது. முழுதும் அழியாத கடல் முழங்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் என்றும் கொடியாரிடத்தில் நற்குணம் காண்டல் அரிது –

என்ற இப்பாடலில், 'முற்றும் ...... குணம்' என்ற பொதுப் பொருளால் 'எற்றே .... முறுவலிக்கும்' என்ற சிறப்புப் பொருள் விளக்கப்பட்டவாறு.

பிறர் துயரம் கண்டு முறுவலிப்பவர் கொடியவர் ஆதலின், 'கொடியார்க்கும் உண்டோ குணம்' எனப்பட்டது. 'கொடியார்' என்ற சொல் சிலேடை நயத்தால் கொடியோர்களையும், கொடிகளையும் உணர்த்தியவாறு.]

கூடா இயற்கை வருமாறு :

'ஆர வடமும், அதிசீத சந்தனமும்,
ஈர நிலவும் எரிவிரவும் ; — பாரில்,
துதிவகையான் மேம்பட்ட துப்புரவும், தத்தம்
விதிவகையான் வேறு படும்'

என வரும்.

[குளிர்ந்த முத்துமாலையும், மிகவும் குளிர்ச்சியைத்தரும் சந்தனமும், குளிர்ந்த நிலவும் தலைவனைப் பிரிந்த தலைவிக்கு வெப்பத்தைத் தருகின்றன. இவ்வுலகில் புகழத்தக்க வகையினால் மேம்பட்ட நுகரும் பொருள்களும் தத்தமது ஆகூழ் போகூழ் நிலைகளுக்கு ஏற்பட மாறுபடும் –

என்ற இப்பாடலில், 'பாரில் .... வேறுபடும்' என்ற பொதுப் பொருளால் 'ஆரவடமும் .... விரவும்' என்ற சிறப்புப்பொருள் விளக்கப்பட்டவாறு.

முத்து முதலியவற்றிற்கு வெப்பம் தருந்தன்மை அவற்றின் இயல்புக்கு மாறுபட்டதாதலின், இது கூடா இயற்கை ஆயிற்று.]

கூடும் இயற்கை வருமாறு :

'பொய்உரையா நண்பர் புனைதேர் நெறிநோக்கிக்
கைவளை சோர்ந்து, ஆவி கரைந்துஉகுவார், — மெய் வெதுப்பப்
பூத்தகையும், செங்காந்தள் ; பொங்குஒலிநீர் ஞாலத்துத்
தீத்தகையார்க்கு ஈதே செயல்'

என வரும்.

[பொய் என்பதனையே உரைத்துஅறியாத தலைவருடைய தேர் வரும் வழியை நோக்கியவாறே, கைகள் வளையல்கள் சோர உயிர் நைய வருந்தும் தலைவியரின் மெய் வெப்பமுறுமாறு செங்காந்தள் பூக்களை மலர்ந்து வெப்பத்தைச் சொரிகின்றது. கடல் சூழ்ந்த உலகில் கொடிய பண்புடையாருக்குப் பண்டே நலிந்திருப்பாரை மீண்டும் நலிவதே செயலாகும்.

'பொங்கொலி......செயல்' என்ற பொதுப்பொருளால் 'பொய் உரையா......செங்காந்தள்' என்ற சிறப்புப் பொருள் விளக்கப்பட்டவாறு. தீயவர்கள் எளியோரை நலிதல் இயற்கையாதலின், இது கூடும் இயற்கையாயிற்று. 'தீத்தகையார்' என்ற தொடர் கொடியோரையும் தீப்போலும் நிறத்தை உடைய காந்தட் பூக்களையும் குறிப்பதால், சிலேடையும் ஆயிற்று.]

இருமை இயற்கை வருமாறு :

'கோவலர்வாய் வேய்ங்குழலே அன்றிக் குரைகடலும்
கூவித் தமியோரைக் கொல்லுமால்; — பாவாய்!
பெரியோரும் பேணாது செய்வரே போலும்,
சிறியார் பிறர்க்குஇயற்றும் தீங்கு'

என வரும்.

[தோழி! இடையர்கள் வாயிலிருந்து வெளிப்படும் வேய்ங் குழல் ஓசையே அன்றிக் கடல்ஒலியும் தனித்திருப்பாரை நலிகின்றது. சிறியோர் பிறருக்குச் செய்யும் தீங்குகளைப் பெரியோரும் ஆராயாது செய்வார் போலும் –

என்ற இப்பாடலில், 'பெரியோரும் .... தீங்கு' என்ற பொதுப்பொருளால், 'கோவலர் .... கொல்லுமால்' என்ற சிறப்புப் பொருள் விளக்கப்பட்டவாறு.

சிறியார் பிறருக்குத் தீங்கு இயற்றுதலும், கோவலர் வாய் வேய்ங்குழல் தமியோரைத் துன்புறுத்தலும் கூடும் இயற்கை; பெரியோர் பிறருக்குத் தீங்கு இயற்றுதலும், குரைகடல் தமியோரை நலிதலும் கூடா இயற்கை என்க. எனவே இப்பாடலில் இருமை இயற்கையும் சொல்லப்பட்டவாறு.]

விபரீதப்படுதல் வருமாறு.

'தலைஇழந்தான் எவ்வுயிரும் தந்தான், பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றம் கடிந்தான்; - உலகில்,
தனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேல் தப்பாம்
வினையும் விபரீத மாம்'

என வரும். (32)

[எல்லா உயிர்களையும் படைத்த பிரமன் சிவபெருமான் உகிரினால் தலை தகர்க்கப்பட்டான். தந்தையாகிய எச்சதத்தன் காலை வெட்டிய சண்டீசன் தன் குற்றம் களையப்பட்டு உயர்ந்த சிறப்பை அடைந்தான். உலகில் மிக மேம்பட்டவர்கள் நினைத்தால், நல்வினை தீவினைகளின் பயனும் மாறுபட்டுவிடும்–

என்ற இப்பாடலில், 'உலகில் .... விபரீதமாம்' என்ற பொதுப்பொருளால், 'தலை இழந்தான் .... கடிந்தான்' என்ற சிறப்புப்பொருள் விளக்கப்பட்டவாறு.

நன்மை செய்தவன் தீயபயனையும், தீமை செய்தவன் நல்ல பயனையும் பெறுதல் விபரீதப்படுதலாம்.

'தம்முன்னிலை விட்டான் தனிமகுடம் சூடினான்
அம்முன்னிலை நின்றான் அரசிழந்தான் — தெம்முனையில்
என்றால் இருவினையும் எங்களிரா மன்நினைந்த(து)
ஒன்றாம் விபரீத மாம்'

விட்டான் – வீடணன்; நின்றான் – கும்பகருணன். என்பது மாறன் அலங்கார எடுத்துக்காட்டு. – மா. 207]

32

வேற்றுமையணி – இலக்கணமும் திறனும்

652. கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை; அதுவே
குணம்பொருள் சாதி தொழிலொடு புணரும்.

இது, நிறுத்த முறையானே வேற்றுமை என்னும் அலங்காரத்தின் பொது இலக்கணமும் அதன் திறனும் கூறுகின்றது.

இ–ள் : கூற்றினன் ஆதல் குறிப்பினன் ஆதல் ஒப்புமை உடையவாய் இருப்பன இரண்டுபொருள் தம்முள் வேறுபாடு தோன்ற வந்தால், அது வேற்றுமை என்னும் அலங்காரமாம்; அவ்வேறுபாடு குணம் முதலியவற்ருல் கூடும் என்றவாறு.

'வேற்றுமைப்படவரின்' எனப் பொதுப்படக் கூறிய அதனல், அவை ஒரு பொருளானே வேற்றுமை செய்தலும் இருபொருளானே வேற்றுமை செய்தலும் அவ்வாறன்றி மிகுதிகுறைவுகளான் வேற்றுமை செய்தலும் கொள்க.

[*கூற்று — வெளிப்படை; குறிப்பு — மறைவாகத் தெரிவித்தல்.*

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 46, 47

'ஒருமை இருமை சிலேடை உயர்பிஞெ டேதுவன்றிப்
பெருமை மலிசாதி ஒப்பாம் விதிரேகம் பேசுதொழில்
அருமை மலிகுணம் சாதியென் ருகுமவ் வேதுவுமற்று
இருமை நிகழ்ஞா பகங்கா ரகமாம் இலங்கிழையே.'
– *வீ.* 165

'ஒருபுடை இருபொருள் உரையினும் குறிப்பினும்
வெளிப்பட வேற்றுமைப் படுத்துதல் வேற்றுமை.' - *மா.* 130

'அதுவே,
ஒருபொருள் இருபொருள் சமம்உயர்ச் சியதெனும்
பொருள்பெறு மரபின் புலப்படும் என்ப.' – *மா.* 131

'அதுவே,
பொருளா தியவாம் நான்கொடும் புணரும்' – *மா.* 132

'வேற்றுமை என்பமுன் ஆற்றிய இருபொருள்
சாற்றிய உவமையில் வேற்றுமைப் படுத்தலே.'
– *தொ. வி.* 348

'உரைப்பினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை ஆகும்.' – மு. வீ. பொ. 69

'பொருள்வேற் றுமைப்படல் பொருள்வேற் றுமையே.' – 70

'சாதிவேற் றுமைப்படல் சாதி ஆகும்.' – 71

'குணவேற் றுமைப்படு வதுகுண மாகும்.' – 72

'முயற்சியால் வேறு படுவது முயற்சி
வேற்றுமை என்மனார் மெய்உணர்ந் தோரே.' – 73

'இருபொருள் புணர்ந்தவற் றியல்பெடுத் துரைப்பில்
ஏய்ப்பினும் உயரினும் இருபொருள் வேற்றுமை.' – 74

'வருபொருள் ஒதுங்கிவேற் றுமைப்பட வருவது
விலக்குவேற் றுமையென விளம்பப் படுமே.' – 75

'ஓதிய பொருள்களின் ஒன்றுஉயர் வுடைத்தென்று
அறைவது வேற்றுமை அணியெனப் படுமே.' – ச. 45

'ஒப்பாம் மொழியுவ மானே்வ மேயத்தின் ஒன்றினைப்பே
திப்பாம் எனில்அது வேற்றுமை.' – குவ. 46]

ஒருபொருளான் வேற்றுமை செய்தது வருமாறு :

'அனைத்துஉலகும் சூழ்போய், அரும்பொருள் கைக்கொண்டு,
இனைத்துஅளவை என்றற்கு அரிதாம், — பனிக்கடல் ;
மன்னவ ! நின் சேனைபோல் ; மற்றுஅது நீர்வடிவிற்று
என்னும் இதுஒன்றே வேறு'

என வரும். இது கூற்று.

[மன்னவனே ! குளிர்ந்த கடலும் நின் சேனையும் ஒரே வகையான குணந்தொழில்களை உடையன. கடல், உலகம் முழுதையும் சூழ்ந்து, பல அரிய பொருள்களைத் தன்னகத்து அடக்கி, இவ்வளவு அளவுடையது என்று அளக்க ஒண்ணாததாய் உள்ளது ; உன் சேனையும் உலகிலுள்ள பல நாடுகளையும் கைப்பற்றுதற்கு உலகம் முழுதையும் சூழ்ந்து, பகைவர் நாட்டின் அரிய பொருள்களைக் கொள்ளையிட்டுக் கவர்ந்து, இவ்வளவிற்று

என்று அளக்க ஒண்ணாததாய் உள்ளது; ஆனால் கடல் நீர் வடிவிற்றாக உள்ளது – என்ற இப்பாடலில், கடல் சேனை என்ற இரு பொருள்களைச் சமமாகக் கூறிப் பின் கடல் என்ற ஒரு பொருளை அது நீர் வடிவிற்று என்று வேற்றுமை செய்தவாறு.]

இருபொருள் வேற்றுமைச் சமம் வருமாறு :

'சென்று செவிஅளக்கும் செம்மையவாய்ச் சிந்தையுளே
நின்று அளவுஇல் இன்பம் நிறைப்பவற்றுள், — ஒன்று,
மலர்இவரும் கூந்தலார் மாதர்நோக்கு ; ஒன்று
மலரிவரும் கூத்தன்தன் வாக்கு'

என வரும். மலரி – ஊர். இது கூற்று.

[மாதர் நோக்கும் கூத்தன் வாக்கும் இயல்பினான் சமமாவன. மாதர் நோக்குக் காதளவும் நீண்டு கடைசிவந்து என் உள்ளத்தில் எல்லையற்ற இன்பத்தை நிறைக்கும்; மலரி என்ற ஊரில் தோன்றிய கூத்தன் என்ற புலவனின் வாக்குத் தன் சீரிய கூரிய தீஞ்சொற்களாலே என் காதுகளை அடைந்து என் மனத்தில் எல்லையற்ற இன்பம் பயக்கும் – என்ற இப்பாடலில்,

இரு பொருள்களின் இயல்புகளை 'சென்று......நிறைப்ப' என்று சமமாகக் கூறிப் பின் இரண்டனையும் மாதர்நோக்கு எனவும் கூத்தன் வாக்கு எனவும் வேற்றுமை செய்து காட்டியவாறு.]

சமன் அன்றி மிகுதி குறைவான் கூற்றினான் வேற்றுமை செய்தல் வருமாறு :

'மலிதேரான் கச்சியும், மாகடலும், தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும் ; — மலிதேரான்
கச்சி படுவ கடல்படா ; கச்சி
கடல்படுவ எல்லாம் படும்'

என வரும்.

[மிக்க தேர்ப்படையை உடைய சோழனுடைய காஞ்சி மாநகரும், பெரிய கடலும் தம்முடைய ஒலியினாலும் பெருமையாலும் சமமாகும் எனினும், காஞ்சி மாநகரில் கடல்படு பொருள்கள் யாவும் கிட்டுவவாகவும், கடலில் காஞ்சி மாநகரில் கிட்டும் பொருள்கள் யாவும் பெறப்படமாட்டா - என்ற இப்பாடலில்,

முதலில் காஞ்சி மாநகரும் கடலும் ஒக்கும் என்று கூறிப் பின் காரணம் காட்டிக் காஞ்சி மாநகர் கடலினும் மேம்பட்டது என்று வேற்றுமை செய்தவாறு.

இம்மூன்று பாடல்களும் வெளிப்படையாக வேற்றுமையைப் பெறப்பட வைத்தன.]

இருபொருளான் குறிப்பினான் வேற்றுமை செய்தது வருமாறு :

'கார்க்குலமும் பாய்திரையும் காட்டும் கடல்;படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமாம்; — ஏற்ற
கலம்உடைத்து முந்நீர்க் கதிர்ஆழி ; திண்தேர்
பலஉடைத்து, வேந்தன் படை'

என வரும். ஒருபொருளான் வேற்றுமை செய்வது வந்துழிக் காண்க.

[கடலும் படையும் சமமாவன. கடலில் மேகக் கூட்டங்களும் குதிக்கும் அலைகளும் காணப்படுகின்றன. படையில் போர்க் களிறுகளும் போர்க்குதிரைகளும் செயற்படுகின்றன. ஒளிமிக்க கடல் பல மரக்கலங்களைப் பெற்றிருக்கிறது. அரசனுடைய படை திண்ணிய தேர்கள் பல பெற்றிருக்கிறது - என்ற இப்பாடலில், கடலையும் படையையும் ஒப்பிட்டுப் பின் இரண்டனையும் குறிப்பினால் வேறுபடுத்திக் காட்டியவாறு காண்க.

'மாதராள் வெய்யமுலை மாணிக்க முத்துவடம்
மீதுலா வுந்தகைத்தாம் வேரிமகிழ்ச் — சோதி
துடரிவரை தேன்அருவி; தூநீர் அருவி
படர்இயல நல்காதின் பம்'

இப்பாடலில் வடம்பூட்டிய முலையும் தேனருவி பாயும் துடரி

வரையும் சமம் என்று கூறிப் பின் அருவி இன்பம் நல்காது என்று ஒருபொருளான் குறிப்பினால் வேற்றுமை செய்த திறத்தைக் காண்க. – மா. 131]

சமன் அன்றி மிகுதிகுறைவான் குறிப்பினான் வேற்றுமை செய்தது வருமாறு :

'பதுமம் களிக்கும் அளிஉடைத்து; பாவை!
வதனம் மதர்நோக்கு உடைத்து; — புதைஇருள்சூழ்
அப்போது இயல்புஅழியும் அம்போருகம்; வதனம்
எப்போதும் நீங்காது இயல்பு'

என வரும். பிறவும் அன்ன.

[தாமரை களிக்கும் வண்டுகளை உடையது. பாவை போல்வாய்! உன்முகம் செழித்த கண்களை உடையது. இருள் சூழும் இரவில் தாமரை தன் மலர்ச்சி குன்றிக் கூம்பும். ஆனால் உன் முகம் எப்பொழுதும் தன் இயல்பான மலர்ச்சி குன்றாது— என்ற பாடலில், முதல் இரண்டடிகளில் தாமரைக்கும் தலைவி முகத்திற்கும் குறிப்பினால் ஒப்புமை கூறிப் பின் இரண்டடிகளில் குறிப்பினால் முகத்தின் சிறப்பெடுத்தியம்பி வேற்றுமை செய்தவாறு.

'பதுமம் ...... நோக்கு உடைத்து' – குறிப்பினால் சமம்.

'புதைஇருள் .... இயல்பு' – குறிப்பினால் வதனத்தின் உயர்வு.]

குணவேற்றுமை வருமாறு :

'சுற்றுவில் காமனும், சோழர் பெருமானும்
கொற்றப்போர்க் கிள்ளியும், கேழ்ஒவ்வார் ; – பொற்றொடியாய்!
ஆழிஉடையான் மகன்மாயன் ; சேயனே,
கோழி உடையான் மகன்'

என வரும்,

[பொற்றொடி! வில் ஏந்திச் சுற்றும் மன்மதனும் சோழ மன்னனாகிய போர் வெற்றியை உடைய கிள்ளியும் பிறவாற்றான் ஒத்தாராயினும் நிறத்தான் ஒவ்வார். திருமாலுடைய மகனாகிய மன்மதன் கரு நிறத்தினன். உறையூர்ச் சோழன் மகனாகிய கிள்ளி செய்யன் – என்ற இப்பாடலில், பிறவற்றால் மன்மதனும் சோழனும் ஒப்பர் என்பதனைக் குறிப்பினால் அறிவித்து, இருவரும் நிறத்தால் வேறுபட்டவர் எனக் குண வேற்றுமை சுட்டப்பட்டவாறு. நிறமும் பண்புள் அடங்கும் என்க. கரியன், செய்யன் என்பன பண்படியாகப் பிறந்த பெயராதலும் காண்க.]

பொருள் வேற்றுமை வருமாறு :

'ஓங்கல் இடைவந்து, உயர்ந்தோர் தொழவிளங்கி,
ஏங்குஒலிநீர் ஞாலத்து இருள்கடியும் – ஆங்குஅவற்றுள்,
மின்நேர் தனிஆழி வெங்கதிர்,ஒன்று ; ஏனையது,
தன்நேர் இலாத தமிழ்'

என வரும்.

[மலையில் தோன்றி, மேன்மக்கள் தொழுமாறு விளக்கமுற்றுக் கடல் சூழ்ந்த உலகில் இருள் கடிவன இரண்டு. அவற்றுள் ஒன்று ஒளி மிக்க ஒற்றைத்தேர்ச் சக்கரத்தை உடைய வெங்கதிர்; மற்றொன்று தன்னொப்பில்லாத தமிழ்.

தமிழ், பொதியிலில் தோன்றி, மேன்மக்கள் தொழுதேத்தும் சான்றோர் பாடலைக் கொண்டு, உலகில் அக இருளைப் போக்கும்; கதிர், உதய மலையில் தோன்றி, நன்மக்களான் வணங்கப்பட்டு, உலகில் புறவிருளைப் போக்கும்.

இப்பாடலில், ஒப்புமையான பண்புடையனவாகிய கதிர், தமிழ் என்ற இரண்டனையும் வேறுபடுத்திக் காட்டியவாறு காண்க.]

சாதிவேற்றுமை வருமாறு :

'வெங்கதிர்க்கும் செந்தீ விரிசுடர்க்கும் நீங்காது ;
பொங்கும் மதிஒளிக்கும் போகாது ; — தங்கும்
வளமையான் வந்த மனம்மயக்கம், மாந்தர்க்கு
இளமையான் வந்த இருள்'

[மக்களுக்கு இளமைப் பருவத்தில் செல்வச்செருக்கான் மனத்தில் வளரும் அறியாமையாகிய இருள், ஏனை உலகத்துப் புற இருளைப்போலச் சூரியன் ஒளியினாலும், ஒளி வீசும் விளக்கின் வெளிச்சத்தாலும், பரந்து வீசும் சந்திரன் ஒளியினாலும் நீக்கப்பட மாட்டாது –

என்ற இப்பாடலில், இருள் என்ற ஒரே சாரியைச் சேர்ந்த புற இருள், அக இருள் என்ற இரண்டனுள் புற இருள் சூரியன் சந்திரன் விளக்கு இவற்றால் போக்கப்படவும், அகவிருள் இவற்றால் போக்கப்படமாட்டாது என்று வேற்றுமை செய்தது சாதி வேற்றுமை ஆமாறு காண்க.]

தொழில்வேற்றுமை வருமாறு :

'புனல்நாடர் கோமானும், பூந்துழாய் மாலும்,
வினைவகையான் வேறு படுப ; — புனல்நாடன்
ஏற்றுஎறிந்து மாற்றலர்பால் எய்தியபார், மாயவன்
ஏற்றுஇரந்து கொண்டமையால் இன்று'

என வரும். பிறவும் அன்ன.

[சோழமன்னன் போரை ஏற்றுப் போர்க்களத்தில் பகைவர்களை அழித்துக் கைக்கொண்ட பூமியைத் திருமால் மாவலியிடம் தானமாக நீர் ஏற்று இரந்து பெற்றமையால், உலகைக் காத்தல் தொழிலில் ஒப்புமை உடைய சோழனும் திருமாலும் உலகைக் கைக்கொண்ட தொழில்திறத்தில் வேறு பட்டவராவர் – என்ற இப்பாடலில்,

சோழனுக்கும் திருமாலுக்கும் உலகு புரத்தல் நிலையில் குறிப்பால் ஒப்புமை சுட்டிப் பின் கைப்பற்றுதல், இரந்து பெறுதல் என்ற தொழில்களால் இருவரும் வேறுபட்ட இயல்பைக் கூறுதலின், இது தொழில் வேற்றுமை ஆயிற்று.]

உரையிற் கோடலான் இவ்வேற்றுமை - விலக்கியல், சிலேடை இவற்றுடனும் மேவவும் பெறும் எனக்கொள்க.

விலக்கியல் வேற்றுமை வருமாறு :

'தம்மால் பயன்தூக்காது, யாவரையும் தாங்கினும்,
கைம்மாறும் காலம் உடைத்துஅன்றே ; — எம்ஆவி
அன்னவனை, ஆழிஅந பாயனை, அலராள்
மன்னவனை, மானுமோ வான் ?'

என வரும்.

[*எம் உயிர்போல்பவனும், ஆணைச் சக்கரத்தை உடையவனும் அபாயம் இன்றி இருப்பவனும், திருமகள் தலைவனும் ஆகிய சோழமன்னனைப்போலக் கைம்மாறு கருதாமல் எல்லோரையும் காப்பாற்றும் இயல்பை உடைய வானம், உதவி செய்தற்கு ஒரு காலவரையறை உடைத்து ஆதலின், காலவரையறையின்றி எஞ்ஞான்றும் உதவும் எம்அநபாயனை ஒவ்வாது – என்ற இப்பாடலில்,*

பயன் தூக்காது யாவரையும் தாங்கும் திறத்தில் வானம் சோழனை ஒக்கும் என்று கூறிப் பின் காலவரையறையின்றி எஞ்ஞான்றும் உதவும் சோழற்குக் காலவரையறையோடு உதவும் மேகம் ஒப்பாகாது என்று விலக்கியவாறு காண்க.]

சிலேடை வேற்றுமை வருமாறு :

'ஏறுஅடர்த்து, வில்முருக்கி, எவ்வுலகும் கைக்கொண்டு,
மாறுஅடர்த்த ஆழி வலவனைக், — கால்தொழுதற்கு
எஞ்சினர் இல்எனினும், மாயன், இகல்நெடுமால் ;
வஞ்சியான், நீர்நாட்டார் மன்'

என வரும். (33)

[*திருமாலும் சோழனும் செயலால் ஒப்பர் எனினும், திருமால் மாயன் ; சோழன் வஞ்சியான் என வேற்றுமை செய்தவாறு. இதன்கண் அமைந்துள்ள சிலேடை பின்வருமாறு. திருமால் கண்ணனாய் நப்பின்னைக்காக ஏழு காளைகளையும் ஒரே நேரத்தில் அடக்கி அழித்தான் ; இராமனாய்ச் சீதைக்காக வில்லை ஒடித்தான் ;*

தேவர்கள் உய்யப் பேருரு எடுத்து எவ்வுலகையும் கைக் கொண்டான்; அடியார்களுக்குப் பகைவர் ஆயினரை அழித்த சக்கராயுதத்தை ஏந்திய வல்லவன் ஆவான்.

சோழன், பாண்டியனுடைய மீனேற்றுக் கொடியையும், சேரனுடைய வில்கொடியையும் வென்று எல்லா நாடுகளையும் கைப்பற்றிப் பகைவர்களை அழித்த ஆணைச் சக்கரத்தை உடைய வல்லவன் ஆவான்.

இருவரையும் நன்மக்கள் யாவரும் வணங்குகின்றனர். ஆனல் திருமால் மாயன் (கருநிறமுடையவன், வஞ்சனை செய்பவன்) புனல்நாட்டு மன்னனாகிய சோழன் வஞ்சியான் (கருவூரை உடையவன்; பிறரை வஞ்சித்தலை அறியாதவன்)

'ஏறடர்த்து ...... இல்' – சிலேடையான் ஒப்புமை கூறிப் பின் மாயன், வஞ்சியான் எனச் சிலேடையான் வேறுபடுத்தவாறு.]

33

விபாவனையணி

653. உலகுஅறி காரணம் ஒன்றுஒழித்து உரைப்புழி,
வேறுஒரு காரணம், இயல்பு, குறிப்பின்,
வெளிப்பட உரைப்பின்,அது விபாவனை ஆகும்.

இது நிறுத்தமுறையானே விபாவனை அலங்காரம் கூறுகின்றது.

இ-ள்: ஒன்றன் வினை உரைக்குங்கால் அவ் வினைக்குப் பலரும் அறியவரும் காரணத்தை ஒழித்துப் பிறிது ஒரு காரணத்தினை இயல்பினன் ஆக, குறிப் பினன் ஆக வெளிப்பட உரைப்பது விபாவனை என்னும் அலங்காரம் ஆம் என்றவாறு.

[உலகத்தார் குறிப்பிடும் காரணத்தை விடுத்துக் கவிதன் கற்பனையால் விசேடமாக எண்ணிச் சொல்வது விபாவனையாம். குறிப்பினால் ஆராய்ந்து காரணத்தை உணருமாறு அமைப்பது சிறப்புடைத்து. இஃது பிறிதாராய்ச்சி யணி எனவும் கூறப்பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் தண்டி – 51

'பாவும் விபாவனை பல்லோர் அறியும் பரிசொழித்து
மேவும் இயல்பு குறிப்பேது நீங்கி விளைவுரையாம்.' – வீ. 166

'மேதக உலகம் விளம்பிய காரணத்து
ஆதலை விலக்குபு அயல்ஒரு நெறித்தாம்
ஏதுவில் தன்மையில் குறிப்பின்எய் தியமரபு
ஓதுதல் விபாவனை எனஉரைத் தனரே.' – மா. 209

'வினைஎதிர் மறுத்துப் பொருள்புலப் படுத்தலும்
நினைவுறு பொதுவகை யானிபம் விலக்கிக்
காரியம் புலப்படுத் தலும்எனக் கழறின்
ஓரிரண் டாகும் உயர்குறிப் பினவே.' – மா. 210

'விபாவனை என்ப விளங்கிய உலக
சுபாவனை அலத்திறம் தோற்றி இயம்பலே.' – தொ. வி. 358

'ஒன்றன் வினையறிந் துரைக்குங் காலை
உலகறி காரணம் ஒழித்துப் பிறிதொரு
காரணம் இயல்பினும் குறிப்பினும் புலப்படல்
விபாவனை என்மனார் மெய்யுணர்ந் தோரே.'
– மு. வீ. பொ. 76

'உலகறி காரணம் ஒன்று மின்றிக்
காரியம் பிறத்தலும் காரணஇயல் தொடர்பு
இரண்டிலொன் றெஞ்சி இருப்பக் காரியம்
பிறத்தலும் காரியம் பிறத்தற் காந்தடை
உள்ள தாக அதுதான் உதித்தலும்
காரணம் அல்லா மற்றொரு கருத்தால்

காரியம் பிறத்தலும் கடும்பகைக் காரணம்
தன்னில் காரியம் தழைத்தலும் காரியம்
நின்றதில் காரணம் நிலாவலும் எனஅறு
பெற்றிய தாகும் பிறிதாராய்ச்சி.' – ச. 60

'நேராது காரணம் காரியம் தோன்றின் நிகழ்த்துபிறிது
ஆராய்ச்சி அணி.' – குவ. அ. 34]

வேறொரு காரண விபாவனை வருமாறு :

'தீஇன்றி வேம்தமியோர் சிந்தை; செழுந்தேறல்
வாய்இன்றி மஞ்ஞை மகிழ்தூங்கும்; — வாயிலார்
அன்றிச் சிலர்ஊடல் தீர்ந்தார்; அமர்இன்றிக்
கன்றிச் சிலைவளைக்கும் கார்'

என வரும்.

[மற்ற பொருள்கள் தீயினால் வேவவும் பிரிந்து தனித்திருப்பார் உள்ளம் தீயின் தொடர்பு இன்றியே வேகும். கள்குடித்து மற்றவர் களிப்பவும், அக்கள் குடியாமலேயே மயில் களித்து ஆடும். ஊடலைத் தீர்ப்பதற்கு வாயில்கள் பயன்படுத்தப்படவும், சிலர் வாயில்கள் இன்றியே ஊடலைப் போக்கிக்கொண்டுள்ளனர். போர் முனையிலேயே வீரர் வெகுண்டு வில்லை வளைக்கவும், கார்மேகம் அப்போரின்றியே வில்லை வளைக்கும் – என்ற இப்பாடலில், கார் காலத்தின் விளைவுகள் கூறப்பட்டுள்ளன.

இக்கார்காலம் தனித்திருப்போரை வருத்துவதும், மயிலைக் களிப்பிப்பதும், ஊடலைத் தீர்ப்பதும், வானவில்லை வளைப்பதும் ஆகிய செயல்கள் – உலகுஅறி காரணங்கள் இன்றியே நிகழ்த்தப் பட்டன. கார்காலம் என்பது குறிப்பால் பெறப்பட்டவாறு. இஃது அயற்காரண விபாவனை எனவும் படும்.]

இயல்பு விபாவனை வருமாறு :

'கடையாமே கூர்த்த, கருநெடுங்கண்; தேடிப்
படையாமே ஏய்ந்த, தனம்; பாவாய்! — கடைஞெமிரக்
கோட்டாமே கோடும், புருவம்; குலிகச்சேறு
ஆட்டாமே சேந்த, அடி'

என வரும்.

[பாவாய்! உன் கரு நெடுங்கண்கள் சாணை பிடிக்காமலேயே கூர்மையைப் பெற்றுள்ளன. பிறர் தேடிப் படைக்காமலேயே உனக்குத் தனங்கள் அமைந்துள்ளன. உன் புருவங்கள் பிறர் இரு தலைப்புக்களையும் பற்றி வளைக்காமலேயே இயல்பாக வளைந்துள்ளன. சாதிலிங்கக் குழம்பு தேய்க்கப்படாமலேயே உன் அடிகள் இயல்பாகச் சிவந்துள்ளன — என்ற இப்பாடலில்,

சாணை பிடித்துக் கூர்மை செய்வதும், தேடித் தனம் படைப்பதும், இரு தலையும் பிடித்து வளைப்பதும், சாதிலிங்கம் பூசிச் சிவக்கச் செய்வதும் ஆகிய காரணங்கள் இன்றி இயல்பாகவே காரியங்கள் நிகழ்ந்துள்ளமை இயற்கையின் கூறுபாடு என்பது குறிப்பால் பெறப்படவைத்தவாறு காண்க.]

குறிப்பு விபாவனை வருமாறு:

'பாயாத வேங்கை மலரப் படுமதமா
பூவாத புண்டரிகம் என்றஞ்சி, — மேவிப்
பிடிதழுவி, நின்றுஅதிரும் கானில், பிழையால்,
வடிதழுவு வேலோய்! வரவு'

என வரும். இதனுள் குறிப்பு பாயும் வேங்கையைப் புலிஎனக் குறித்தல். பிறவும் அன்ன.

[வேலோனே! வேங்கை மரம் பூக்களை மலர, மதயானை அதனைப் புலி என்று கருதி அஞ்சித் தன்னிடத்துச்சாரும் பிடியைத் தழுவிக்கொண்டு புலிக்கு மாறாகப் பிளிறும் காட்டு வழியில், நீ இரவுக்குறிக்கு வருதல் தவறான செயலாகும்' — என்று தோழி இரவுக்குறி வருதலை விலக்கிய இப்பாடலில்,

பாயும் வேங்கை, வேங்கைப் புலியாகவே, பாயாத வேங்கை வேங்கை மரம் எனவும் — பூக்கும் புண்டரிகம் தாமரை ஆகவே, பூவாத புண்டரிகம் வேங்கைப் புலி எனவும் கொள்ளவைத்தமை குறிப்பு விபாவனையாதல் காண்க.]

விபாவனை என்னாது 'ஆகும்' என்றதனால், வினை எதிர்மறுத்துப் பொருள் புலப்படுப்பினும், பொது வகையான்காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பினும் இவ்வியல்பு அலங்காரம்ஆம் எனக்கொள்க. அவற்றுள்,

வினைஎதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்துதற்கு வரலாறு :

> 'பூட்டாத வில்குனித்துப் பொங்கும் முகில்எங்கும்
> தீட்டாத அம்பு சிதறுமால்; – ஈட்டமாய்க்
> காணாத கண்பரப்பும், தோகை; கடும்பழிக்கு
> நாணாது அயர்ந்தார் நமர்'

என வரும்.

[நாண் பூட்டாத வில்லை வளைத்துக் கார்மேகக்குழாம் கூர்மை ஆக்கப்படாத அம்புகளைச் (மழைத்துளிகளை) சிதறத்தொடங்கி விட்டது. கூட்டம் கூட்டமாக மயில்கள் காணும் ஆற்றலற்ற தம்பீலிக்கண்களை விரித்து ஆடத்தொடங்கிவிட்டன. இக் கார் காலம் தலைவி உயிருக்கு ஏதம் தருமே' என்ற கடும்பழிக்கு நாணுதலின்றித் தலைவன் சென்ற வேற்றுப்புலத்திலேயே தங்கி விட்டான் – என்ற இப்பாடலில்,

வில்லை நாண் பூட்டாது வளைத்தல், தீட்டாத அம்பு சிதறுதல், காணாத கண்களைப் பரப்புதல் என்பன வில், அம்பு, கண் இவற்றின் வினைகளை மறுத்துரைப்பதன் வாயிலாக, இந்திரவில் – மழைத்துளி – பீலிக்கண் என்று கவி குறிப்பால் கூறக்கருதிய பொருளைப் புலப்படுத்தவாறு காண்க.]

காரணம் விலக்கிக்காரியம் புலப்படுப்பதற்கு வரலாறு :

> 'காரணம் இன்றி மலையாநிலம் கனலும் ;
> ஈரமதி வெதும்பற்கு என்நிமித்தம்? — காரிகையார்க்கு
> யாமே தளர, இயல்பாக நீண்டனகண் ;
> தாமே திரண்ட, தனம்'

என வரும். (34)

[பொதியிலிலிருந்து வரும் தென்றல் காற்று ஒரு காரணமும் இல்லாமல் வெதுப்புகின்றது; குளிர்ந்த மதியம் வெப்பம் தருவதற்கும் காரணம் புலப்பட்டிலது; யாம் மனம் தளருமாறு இப்பெண்களுக்கு இயல்பாகவே கண்கள் நீண்டுள்ளன; தனங்கள் பணைத்துள்ளன — என்ற இப்பாடலில்,

தென்றல் எரித்தல், மதியம் வெதுப்பல், கண் நீட்சி, நகில்களின் பணைப்பு என்பனவாகிய காரியங்களே கூறப்பட்டுள்ளன என்பதனையும், தென்றல் எரித்தல் முதலியவற்றிற்குரிய காரணங்கள் குறிப்பால் கொள்ளப்படுமாறு, விளக்கப்படவில்லை என்பதனையும் காண்க.] 34

ஒட்டணியின் இலக்கணமும் விரியும்

654. கருதிய பொருள்தொகுத்து அதுபுலப் படுத்தற்கு
ஒத்ததுஒன்று உரைப்பது ஒட்டாம்; அதுவே,
அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்[1],
அடைபொது வாக்கி ஆங்கனம் மொழிதலும்[2],
விரவத் தொடுத்தலும்[3], விபரீதப் படுத்தலும்[4],
என நால் வகையினும் இயலும் என்ப.

நிறுத்தமுறையானே இஃது ஒட்டு என்னும் அலங்காரத்தின் பொதுவிதியும் அதன்விரியும் கூறுகின்றது.

இ-ள்: கவிதன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்துவதற்கு ஒத்த பிறிது ஒன்றனைச் சொல்லின் அஃது ஒட்டு என்னும் அலங்காரமாம். அவ்வலங்காரம் கூறுகின்ற பொருளும் அதன்அடையும் வேறுபடத் தொடுப்பதும், அடை பொதுவாய்ப் பொருள்வேறுபடத் தொடுப்பதும், அடை விரவிப் பொருள் வேறுபட மொழிவதும், அடை விபரீதப் பட்டுப் பொருள் வேறுபட மொழிவதும் என நான்கு வகையான் நடக்கும் என்றவாறு.

'ஒத்தது ஒன்று உரைப்பின்' எனப் பொதுப்படக் கூறிய அதனுல், இஃது அகத்திணைபற்றி வருங்கால் புள் முதலிய கருப்பொருள் நிலனுகப் புலப்படுத்தலும், புறத்திணைப்பற்றி வருங்கால் யாதானும் ஒத்தது ஒன்று நிலனுகப் புலப்படுத்தலும் கொள்க.

ஒட்டு எனினும், உள்ளுறை உவமம் எனினும், உவமப்போலி எனினும், பிறிது மொழிதல் எனினும், நுவலாநுவற்சி எனினும் ஒக்கும்:

[ஒட்டும் உள்ளுறைஉவமமும் ஒன்றே என்பது தண்டியாருக்கும், வீரசோழிய நூலாருக்கும் இவருக்கும் கருத்தாகும். மாறன்அலங்காரநூலார் ஒட்டு வேறு, உள்ளுறை உவமம் வேறு என்று குறிப்பிட்டு இரண்டனையும் தனித்தனி அணி ஆக்குவர். ஒட்டணிக்கு இவர் கூறும் வகைகளை விடுத்துப் பொருள், இடம், சாதி, வினை, குணம், பொழுது என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு, கருப்பொருளில் பிறத்தல் வேண்டும் என்னும் யாப்புறவு இன்றிப் புறத்தினும் புறப்புறத்தினும் சென்று, செய்யுள் செய்யும் புலவன் முதலாயினோர் கூற்றுய்ச் சுட்டு என்றும் உள்ளுறையாய், தொல்காப்பியம் குறிப்பிடும்

'உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்புஎனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே'

என்னும் உள்ளுறை ஐந்தனுள் ஒன்றுய்,

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்' – குறள் 475

என்றுற்போல வரும் என்பர் மாறன் அலங்கார நூலார். (125) இவ்வொட்டணி சுருக்கு எனவும் குறிப்புநவிற்சி எனவும் கூறப்பெறும்.]

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 52, 53

'வீவில் கவிதான் கருது பொருளை வெளிப்படுத்தற்கு
ஓவிய மேசுருக் காம்மறை சொல்லின் உரைத்திடினே.'
– *வீ.* 166

'குறித்ததை மறைத்துக் குறிக்கொள நிகர்த்ததை
நுவல்வகை தாமே ஒட்டென நுவல்ப.' – *மா.* 124

'அதுவே,
பொருள்இடம் சாதி வினைகுணம் பொழுதொடும்
மருள்அறு நெறித்தாய் வருதிறன் உடைத்தே.' – *மா.* 125

'ஒட்டெனத் தன்பொருள் உரையாது உவமை
சுட்டலின் அப்பொருள் தோன்ற இயம்பலே.' – *தொ. வி.* 344

'எண்ணிய பொருள்மறைத் தேயது புலப்பட
வேறொரு பொருளை விளம்புவது ஒட்டே.' – *மு. வீ. பொ.* 77

'குறித்தொரு பொருளைக் கூறற் குரியது
மற்றொரு பொருள்மேல் வழங்கல் குறிப்பு
நவிற்சி அணியென நாட்டினர் புலவர்.' – *ச.* 113

'ஒருவற் குறித்துரைக் கின்றதை யேமற் றொருவற்குறித்து
உரைசெயின் பேரும் குறிப்பு நவிற்சி.' – *குவ.* 87]

கருப்பொருள் நிலனாகப் புலப்பட்டு அடையும் பொருளும் அயல்பட வந்தமைக்கு வரலாறு :

'வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததுஓர் காவிக்
குறைபடுதேன் வேட்டும் குறுகும்; — நிறைமதுச்சேர்ந்து,
உண்டாடும் தன்முகத்தே, செவ்வி உடையது,ஓர்
வண்தா மரைபிரிந்த வண்டு'

என வரும்.

[*களித்த பல வண்டுகள் சேர்ந்து உண்டு நீக்கிவிட்ட ஒரு கருங்குவளைப் பூவிலுள்ள குறைபட்ட தேனை விரும்பி, தன்னிடத்து நிறைந்த தேனோடு வனப்பு மிக்க வளவிய செந்தாமரையைப்*

பிரிந்த வண்டு, அக்குவளைப் பூவினை நெருங்குகிறது — என்ற இப்பாடலில், இன்பம் நுகர்தற்கேற்ற பருவ வனப்பும் இன்பச் செவ்வியும் உடைய தலைவியைப் பிரிந்த தலைவன், பலரும் தோய்ந்து வெறுத்து நீத்த பரத்தையின் புல்லிய இன்பம் கருதி அவளை அணுகுகிறான் – என்ற கருத்து பெறப்படுத்தப்பட்டவாறு.

இப்பாடலில், சுரும்பு மேய்ந்த காவியின் குறைபடுதேன், மதுச்சேர்ந்து செல்வியுடைய வண்டாமரை, பிரிந்த வண்டு – என்ற அடையொடு சேர்ந்த வெளிப்படைப் பொருள்களும், குறிப்பாகக் கொள்ளப்பட வைத்த பலர் தோய்ந்த பரத்தையின் குறையுற்ற இன்பம், இன்பச் செவ்வியும் வனப்பும் உடைய தலைவி, தலைவியைப் பிரிந்த தலைவன் – என்ற அடையொடு சேர்ந்த குறிப்புப் பொருள்களும் வெவ்வேறாக அமைந்தமை காண்க.]

அடைபொதுவாய்ப் பொருள்வேறுபட வந்தமைக்கு வரலாறு :

‘உள்நிலவு நீர்மைத்தாய், ஓவாப் பயன்சுரந்து,
தண்ணளி தாங்கும் மலர்முகத்துக் — கண்நெகிழ்ந்து,
நீங்கல் அரிய நிழல்உடைத்தாய், நின்று,எமக்கே
ஓங்கியதுஓர் சோலை உளது’

என வரும்.

[இப்பாடலில் வள்ளல் சோலையாகச் சுட்டப்படுகிறான். ‘உள்நிலவு.........நிழல் உடைத்தாய்’ – என்பதுகாறும் உள்ள தொடர்கள் வள்ளலுக்கும் சோலைக்கும் பொதுவான அடைகள். வள்ளல், மனத்தில் நற்பண்புகள் கொண்டு, குறைவுறாது பிறருக்கு வழங்கி, கருணை வெளிப்படுத்தும் மலர்ந்த முகத்தில் கண்ணோட்டத்தைப் புலப்படுத்தி, ஒருகால் தன்னை அடைந்தவர் பின்னர்த் தன்னைப் பிரிய நினையாதபடி கருணை செய்பவன்; சோலை, உள்ளே ஈரப்பசை உடையதாய், குறைவுறாது பழங்களை நல்கி, தண்ணிய வண்டுகள் மொய்க்கும் பூக்களில் தேனை வெளிப்படுத்தி, தன்னுள் வந்தவர் பின் தன்னை விடுத்துச் செல்ல விரும்பாதபடி நிழலைச் செய்கிறது.

சோலை எல்லோருக்கும் பொதுவாகவும், வள்ளல் எங்களுக்கே உரியவன் என்று இரவலன் சொற்றவாறு.

இப்பாடலின் முதல் மூன்று அடிகளும் பொதுவான அடைகள். வெளிப்படையாகக் குறிப்பிட்ட சோலையும், குறிப்பால் பெறப்படவைத்த வள்ளலும் இருவேறுபட்ட பொருள்கள் ஆமாறு காண்க.]

அடைவிரவிப் பொருள்வேறுபட வந்தமைக்கு வரலாறு :

'தண்ணளிசேர்ந்து, இன்சொல் மருவும் தகைமைத்தாய்,
எண்ணிய எப்பொருளும், எந்நாளும், — மண்ணுலகில்
வந்து, நமக்களித்து வாழும் முகில்ஒன்று,
தந்ததால் முன்னைத் தவம்'

என வரும்.

[இம்மண்ணுலகில் கருணை பொருந்தி, இனிய சொற்கள் கூறும் தகைமையை உடையதாய், நினைத்த எப்பொருளையும் எக்காலத்தும் நம் தேவை அறிந்து வந்து நமக்கு உதவும் மேகம் ஒன்றை நம் முன்னைய நல்வினை நமக்குத் தந்துள்ளது — என்ற இப்பாடலில், வெளிப்படையாக அமைந்த முகில் என்பது குறிப்பால் வள்ளலை உணர்த்துகின்றது.

தண்ணளி சேர்தல் முகிலுக்கும் வள்ளலுக்கும் பொதுவான அடை. இன்சொல் மருவுதல், எண்ணிய எப்பொருளும் எந்நாளும் வந்து அளித்தல் என்ற இரண்டும் வள்ளற்கே அடை.

இவ்வாறு வெளிப்படைப் பொருள் குறிப்புப் பொருள் என்ற இரண்டன் அடைகளும் விரவி வந்தவாறு காண்க.]

அடைவிபரீதப்பட்டுப் பொருள்வேறுபட வந்தமைக்கு வரலாறு :

'கடைகொல் உலகுஇயற்கை! காலத்தின் தீங்கால்
அடைய வறிதுஆயிற்று அன்றே; — அடைவோர்க்கு,
அருமை உடைத்துஅன்றி, அந்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல்'

என வரும். பிறவும் அன்ன.

[உலகத்து இயல்பு மிகவும் கீழ்ப்பட்டது போலும்! தன்னை வந்து அடைபவருக்கு அருமை உடைத்து ஆகாமல் செவ்வி எளிதாய், தேன்போன்ற இனிய சொற்களை உடையதாய்க் கருமை என்பதே இல்லாத இவ்வள்ளலாகிய கடல், யாம் வறுமையைப் போக்க அடையும் இந்நேரத்தில் வற்றி விட்டதே – என்று ஈத்து வறியவனாகிய வள்ளலை அண்மிய இரவலன் சொற்ற இப்பாடலில் வெளிப்படைப் பொருளாகிய கடலுக்கு ஏலாதனவாகிய அருமை உடைத்து அன்றுதல் – அம் தேன் போன்ற சுவைத்தாதல் – கருமை விரவாதிருத்தல் – ஆகிய மாறுபட்ட அடைகள் குறிப்புப் பொருளாகிய வள்ளலுக்கே உரிய ஆயினவாறு காண்க.]

உள்ளுறை உவமமும் ஒட்டும் உய்த்து உணரக் கூறும் இலக்கணத்த ஆகலின் ஒன்றும் பிறஎனின், அவ்வாற்றான் ஒன்றுமேனும், புள் முதலிய கருப்பொருள் நிலனாகப் புலப்படும் சிறப்பு இலக்கணத்தான் உள்ளுறை உவமமும், யாதானும் ஒத்தது ஒன்று நிலனாகப் புலப்படும் பொது இலக்கணத்தான் ஒட்டும் வேறாம் என்றே கோடும். அஃதே அமைக. அன்றியும் சேற்றுள் தோன்றுவன எல்லாம் பங்கயம் எனப் பெயர் பெறாது, வேறு வேறு பெயர் பெறுமாறுபோல, உள்ளுறை உவமம் எனவும் ஒட்டு எனவும் வேறுவேறு பெயர்பெற்ற என்றலும் ஒன்று. (35)

[உள்ளுறை உவமமும் ஒட்டும் வேறு என்று கொள்ளும் ஒரு சாரார் கருத்தை இவ்வாசிரியர் பின்பற்றினராயின், இரண்டனையும் ஒன்றாகக் கொண்ட தண்டியார் கருத்தை ஒட்டி உள்ளுறை உவமப் பாடலாகிய 'வெறிகொள் இனச்சுரும்பு' என்பதனை அடையும் பொருளும் அயல்பட மொழிந்தமைக்கு எடுத்துக்காட்டியுள்ளமை ஆராய்தற்குரியது. எனவே 'உள்ளுறை......ஒன்று' என்ற இந்நூற்பா உரையின் கடைசிப் பத்தி ஆசிரியர் கருத்து அன்றாக, ஏடெழுதுவோரால் இடை மடுக்கப்பட்டது போலும்.]

35

அதிசயவணி - இலக்கணமும் விரியும்

655. மனப்படும் ஒருபொருள் வனப்புவிதந் துரைப்புழி,
உலகுவரம்பு இறவா நிலைமைத்து ஆகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம்;
பொருள் குணம் தொழில் ஐயம் துணிவே திரிவுஎனத்
தெருள்உறத் தோன்றும் விரியினது அதுவே.

இது நிறுத்தமுறையானே, அதிசய அலங்காரத்தின் பொது விதியும் அதன்விரியும் கூறுகின்றது.

இ-ள்: கவியால் கருதப்பட்ட ஒரு பொருளது வனப்பு மிகுத்துச் சொல்லுங்கால், உலகநடை இறவாத தன்மைத்துஆகி, உயர்ந்தோர் வியப்பத் தோன்றுவது அதிசயம் என்னும் அலங்காரமாம். பொருள்அதிசயம் முதலிய தெளிவுபெறத்தோன்றும் அறுகூற்று விரியினை உடைத்தாம் அவ்வலங்காரம் என்றவாறு.

[இஃது உயர்வு நவிற்சியணி எனவும், மிகைமொழி எனவும், பெருக்கு எனவும் பெயர் பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் தண்டி – 54, 55

'அருளும் அதிசயம் ஆன்றோர் வியப்ப துலகிறவாப்
பொருள்குணம் ஐயம்துணிவு திரிவெனப் போற்றுவரால்.'
– *வீ.* 167

'காரணமும்,

'தூண்டும்அகார ணமுமாய் மிகைமொழி சொல்வர்.' – *வீ.* 177

'விதந்துஒரு பொருளினை விழுமிதின் உரைப்புழி
உயர்ந்தோர் மதிக்குற உரைப்பது அதிசயம்.' – *மா.* 143

'அதுவே, வையம் புகழ்பொருள் பண்பு வினைதிரிபு
ஐயம் தெளிவெனும் ஆறினும் வருமே.' – 144

'இடம்சினை காலம்என்று இவற்றொடும் சிவணும்.' – 145

'கவியால் கருதப் படும்பொரு ளதனை
உயர்த்திக் கூறுங் காலைநீர் உலக
நடைஇற வாநிலை நழுவாது ஆன்றோர்
வியப்பது அதிசயம் என்மனார் புலவர்.' – மு. வீ. பொ. 78

'பொருள்வியப் புடையது பொருளெனப் படுமே.' – ,, 79

'குணம்வியப் புடையது குணமெனப் படுமே.' – ,, 80

'துணிபொருட் பெருக்கம் துணிவெனப் படுமே.' – ,, 81

'திரிந்து வருவது திரிபெனா மொழிப.' – ,, 82

'ஒருபொருள் தன்சொலின் உரைக்கப் படாஅது
கேட்போர் உள்மகிழ் கிளப்பதூஉம் இஃதஃது
அன்றெனத் தெரிந்தும் ஆமெனத் துணியப்
படுவது மாகிய பான்மையில் தேர
ஒருபுல மாதல் உயர்வு நவிற்சி
மற்றஃது ஏழு வகைப்படு மென்ப.' – ச. 28

'அவற்றுள்,
புகழ்பொருள் தனைத்தன் கிளவியிற் புகலாது
இல்பொருள் சொல்லின் இலக்கணை யாக
உரைப்பது உருவக உயர்வு நவிற்சி.' – ,, 29

'நாட்டுமுன் உயர்வு நவிற்சி நீக்கொடு
கூட்டி முடித்தல் ஒழிப்புயர்வு நவிற்சி,' – ,, 30

'தீர உருவம் செல்வம் முதலிய
சொற்களைப் பிரித்துச் சொல்வது பிரிநிலை.' – ,, 31

'தொடர்பில் பொருட்குஒரு தொடர்பு புணைதலும்
தொடர்புறூஉம் பொருட்குத் தொடர்பிலது ஆக்கலும்
எனஇரு வகைத்தாம் தொடர்புயர் நவிற்சி,' – ,, 32

'காலம் ஒன்றில் காரண காரியம்
நிகழத் தொடுத்தல் முறையிலி என்ப.' – ,, 33

'காரண உணர்ச்சி ஒன்றில் காரியம்
பிறத்தல் விரைவுயர்வு நவிற்சி யாகும்.' – ,, 34

'காரியம் முன்னும் காரணம் பின்னும்,
நிகழப்புனைதல் மிகைஉயர் நவிற்சி.' – ச. 35

'வயமுவ மேய மதைமொழி யாதுவ மானமதை
நயமுறச் சொல்லி அதைக்காட் டிடில்அன் னதுஉருவக
உயர்வு நவிற்சி.' – குவ. 22

'நுவற்சி பெறும்முன் னையதுஒழிப் போடு நுவலவரில்
உவப்புறு செந்தமி ழோர்இடு நாமம் ஒழிப்புஉயர்வு
நவிற்சி.' – ,, 23

'இதுவேறு எனவும் பிரித்து வருணித் திடல்பலர்க்குப்
பொதுவா கியதரு மங்களை யாகில் புகலும்பெயர்
அதுபி ரிநிலை உயர்வு நவிற்சி.' – ,, 24

'இயைபின் றியதை இயைபு படுத்தி இசைத்தல்தொடர்பு
உயர்வு நவிற்சி.' 25

'அடரும் இயைபுள் ளதையியை பின்றி அறையுமது
தொடர்பில் உயர்வு நவிற்சி.' – ,, 26

'உறைகா ரணமொடு காரியம் ஓர்பொழு தேஉறுதல்
முறையில் உயர்வு நவிற்சி.' – ,, 27

'வருகா ரணம்உணர் போதேஅக் காரியம் வந்திடுதல்
விரைவின் உயர்வு நவிற்சி.' - ,, 28

'அமைகா ரியங்கண் டபின்கா ரணமும்உண் டாகும்அதற்
குமிகை உயர்வு நவிற்சி என்பார்.' 29]

பொருள் அதிசயம் வருமாறு:

'பண்டு புரம்எரிப்ப, மேல்மேன் படர்ந்து, இன்றும்
அண்ட முகடு நெருப்புஅருது; — ஒண்தளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதல்மேல் விழி'

என வரும். நெருப்பு - இடி.

[*ஒள்ளிய தளிர் போன்ற கைகளை உடைய பார்வதி தழுவுகையாலே குழைந்தவராகிய, நெற்றியின்மேல் அழற்-*

கண்ணராய் மேரு மலையை வில்லாக ஏந்திய சிவபெருமான், பண்டு திரிபுரங்களைச் சிரிப்பினால் எரித்தாராக அத்தீ மென்மேலும் படர்ந்து ஓடுதலால் இன்றும் அண்டத்து உச்சியில் நெருப்பு நீங்காமல் உள்ளது – என்ற இப்பாடலில், சிவபெருமான் நகையி லிருந்து புறப்பட்ட நெருப்பு இன்றும் அண்டமுகட்டில் பரவி யுள்ளது என்று கூறுதற்கண் பொருளதிசயம் காண்க.]

குணஅதிசயம் வருமாறு :

'மாலை நிலவுஒளிப்ப, மாதர் இழைபுனைந்த
நீல மணிகள் நிலவுஉமிழ, — மேல்விரும்பிச்
செல்லும் இவள்குறித்த செல்வன்பால் சேர்தற்கு
வல்இருள் ஆகின்றே மறுகு'

என வரும்.

[மாலைக் காலத்தில் வெளிப்பட்ட நிலாவின் ஒளி மறையுமாறு, இந்நங்கை அணிந்த நீலமணிகள் நீலநிற ஒளியைக் காலுகையினாலே, இவள் விருப்பத்தோடு தன் தலைவன் இருப்பிடம் குறித்துச் சேர்வதனைப் பிறர் காணாத வகையில் தெருவெல்லாம் இருண்டுவிட்டது – என்ற இப்பாடலில், நீலமணி களின் ஒளிவீசும் பண்பு மிகுத்துக் கூறப்பட்ட குண அதிசயம் காண்க.]

தொழில் அதிசயம் வருமாறு :

'ஆளும் கரியும் பரியும் சொரிகுருதி,
தோளும் தலையும் சுழித்துஎறிந்து, — நீள்குடையும்
வாள்வார் முரசும் மறிதிரைமேல் கொண்டுஒழுக,
வெள்வாள் உறைகழித்தான் வேந்து'

என வரும்.

[காலாட்களையும் யானைகளையும் குதிரைகளையும் வெட்டி வீழ்த்துகையினாலே சொரியப்பட்ட குருதி வெள்ளம் தோள்களையும் தலைகளையும் சுழித்து மோதித்தள்ளுமாறும், நீண்ட குடைகளையும்

வார் விசிக்கப்பட்ட முரசங்களையும் அவ் வெள்ளம் ஈர்த்துச் செல்லுமாறும் அரசன் தன் வாளினை உறையிலிருந்து வெளிப் படுத்தினன் – என்ற இப்பாடலில், அரசனுடைய போர்த் தொழில் திறம் உயர்பு நவிற்சியாகக் கூறப்பட்ட தொழில் அதிசயம் காண்க.]

ஐய அதிசயம் வருமாறு :

'உள்ளம் புகுந்தே உலாவும் ; ஒருகால்என்
உள்ளம் முழுதும் உடன்பருகும் ; — ஒள்ளிழை!நின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோ ? கவல்வேன்
உள்ளம் பெரிதோ ? உரை'

என வரும்.

[ஒள்ளிய அணிகலன்களை அணிந்த நங்கையே! உன் கள்ளத்தன்மையைப் பொருந்திய கண்கள் ஒருகால் என் உள்ளத்தினுள்ளே புகுந்து உலவாநிற்கின்றன. ஒருகால் என் உள்ளம் முழுதையும் ஒருசேர விழுங்கிவிடுகின்றன. உன் விழிகள் பெரியவோ ? உன் அருளை நினைத்துக் கவலையுறும் என் உள்ளம் பெரிதோ ? உரைப்பாயாக – என்ற இப்பாடலில், நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து கண் பெரியவோ உள்ளம் பெரிதோ என்று ஐயுற்ற ஐய அதிசயம் அமைந்தவாறு காண்க.]

துணிவு அதிசயம் வருமாறு :

'பொங்கிச் செறிந்து, புடைதிரண்டு, மீதுஇரண்டு
செங்கலசக் கொங்கை திகழுமால் ; — எங்கோன்
தில்லையே அன்னாள், திகழ்அல்குல் தேர்மேல்,
இல்லையோ ? உண்டே இடை'

என வரும்.

[பருத்துச் செறிந்து இருபுடையும் திரண்டு சிவந்த கலசம் போன்ற கொங்கைகள் மேலே திகழுதலானும், சிவபெருமானுடைய தில்லையைப் போன்ற இயற்கை வனப்பினள் ஆகிய இத் தலைவியின் திகழ்கின்ற அல்குலாகிய தேர் கீழே இருத்தலானும்

கொங்கைகளுக்கும் அல்குலுக்கும் இடையே இடை இல்லை எனல் இயலாது: நிச்சயமாக இடை உண்டு – என்ற இப்பாடலில், இடையைக் கட்புலனாகாத அளவு நுண்ணிதாகக் கற்பனை செய்து, கருதல் அளவையால் உண்டு என்று துணிந்த துணிவு அதிசயம் அமைந்தவாறு.]

திரிவு அதிசயம் வருமாறு:

‘ திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பால்என்று வாய்மடுக்கும்; — அங்குஅயலே,
காந்தர் முயக்குஒழிந்தார், கைவறிதே நீட்டுவரால்;
ஏந்திழையார், பூந்துகிலாம் என்று ’

என வரும். பிறவும் அன்ன. (36)

[*சந்திரனுடைய வெள்ளிய நிலாக்கதிர் வெள்ளிக்கிண்ணத்தில் பாய்ந்தனவாக, அக்கதிர்களின் ஒளியைப் பால் என்று திரிபாகக் கருதி அதனைப் பருகுதற்குப் பசிய கிளி கிண்ணத்தைச் சுவைக்கச் செல்லும். பக்கலில் தலைவருடைய தழுவுதலை நீக்கிக்கொண்ட மகளிர் சந்திரனுடைய வெள்ளியகிரணங்களைத் தம் வெண்டுகில்களாகக் கருதி, அத்துகில்களைப் பற்றுவதற்காகக் கைகளை நீட்டுவார்கள் – என்ற இப்பாடலில், நிலாக்கதிர் பாலாகவும் வெண்துகிலாகவும் திரியக்கொள்ளும் அளவிற்கு உயர்வு நவிற்சி சொல்லப்பட்டமை திரிவு அதிசயமாகும்.*

இவ்வதிசய அணி — இடம், சினை, காலம் முதலியவற்றோடும் வரும் என்பதனை மாறன் அலங்காரம் எடுத்துக்காட்டுப் பாடல்களோடு சுட்டுகிறது. – மா. 145] *36*

தற்குறிப்பேற்றவணி

656. பெயர்பொருள் அல்பொருள் என இருபொருளினும்
இயல்பின் விளைதிறன் அன்றிப் பிறிதுஒன்று
தான்குறித்து ஏற்றல் தற்குறிப்பு ஏற்றம்;
அதுவே,
அன்ன போல்எனும் அவைமுத லாகிய
சொல்நிலை விளங்கும் தோற்றமும் உடைத்தே.

இது நிறுத்தமுறையானே தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம் ஆமாறும் அதன் ஒழிபும் கூறுகின்றது.

இ–ள் : இயங்குதிணையும் நிலைத்திணையும் ஆகிய இருகூற்றுப் பொருளின்கண்ணும், இயல்பினான் நிகழும் தன்மை ஒழியக் கவி தன்னான் பிறிது ஒன்றைக் கருதி, அவற்றுக்கண் ஏற்றிச் சொல்லுவது தற்குறிப்பேற்ற அலங்காரமாம். அவ்வலங்காரம் அன்ன போல் என்பன முதலிய உவமச்சொல் புணர்த்து விளங்கும் தோற்றமும் உடைத்து என்றவாறு.

[*இதனைத் தொன்னூல் விளக்கம் ஊகாஞ்சிதம் என்று குறிப்பிடும். வீரசோழியம் நோக்கு என்னும்.*

ஒத்த நூற்பாக்கள்

'பெருகிய நோக்கது தற்குறிப்பேற்றம் பெயர்பொருளாய்
வருவதும் பேராப் பொருளதுமாக வகுத்தனரே.' – *வீ.* 167

'உலகினுள் ஒருபொருட்கு உற்றதன் மைத்திறம்
விலக்குபு பிறிதின் விளைந்ததென்று உட்கொண்டு
ஏற்றுதல் ஆகும் தற்குறிப் பேற்றம்.' – *மா.* 140

'அதுவே, சராசரம் எனும்இரண் டினும்சார் தருமே.' – 141

'உவமச் சொல்புணர்ந்து ஒழுகலும் உளதே.' – 142

'ஊகாஞ்சிதம் என்ப உரிமை ஒழித்துமற்று
ஆகுமோர் குறிப்பொருள் அறைந்து பொருத்தலே.'
– *தொ. வி.* 346

'அசரம் சரமிரண் டாகிய பொருளினும்
அறிவியல் பால்விளை திறனலா தாங்குக்
கவிதான் ஒருபொருள் கருதிமற் றவற்றில்
சார்த்தி உரைப்பது தற்குறிப் பேற்றம்.' – *மு. வீ. பொ.* 83

'பொருளை மற்றொரு பொருளியல் தொடர்பால்
இஃதுஅஃது அன்றென எண்ணியும் அதுவென்று
அத்தியவ சித்தல் தற்குறிப் பணிஅது
நினைக்கின் றேன்போல் நிச்சய முண்மை
துணிவு முதலிய சொற்கள் உருபாத்
தொக்கும் விரிந்தும் தோன்றும் என்ப.' – ச. 26

'அதுவே,
பொருள்தற் குறிப்பே ஏதுத்தற் குறிப்பே
பயன்தற் குறிப்பெனப் பகுதிமூன்று அவற்றுள்
புலன்விரி தொகையெனப் பொருள்தற் குறிப்புஇரு
பாலா மொழிந்த பொருளுளது இலதுஎன
இவ்விரண் டாகும் என்மனார் புலவர்.' ,, 27

'ஒன்றும் பொருளைமற் றோர்பொரு ளாகஉள் ஏதுபயன்
இன்றவை ஏது பயனுக யூகித்த லேதற்குறிப்பு
என்றும் புலத்தின் அவைமுன் விரிதொகை என்றுபின்னு
நின்றவை உண்மைஇன் மையென்றும் ஆறு நிகழ்த்துவரே.'
– குவ. 21]

இயங்குதிணைத் தற்குறிப்பேற்றம் வருமாறு:

'மண்படுதோள் கிள்ளி மதயானை, மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால், — விண்படர்ந்து
பாயுங்கொல் என்று பனிமதியம் போல்வதூஉம்
தேயும், தெளிவிசும்பின் நின்று'

என வரும்.

[பகைவர் நிலத்தைக் கவரும் தோள் வலிமையை உடைய சோழனது மதயானை பகையரசர்களுடைய வெண்கொற்றக் குடைகளை அழித்தும் வெகுளி குறையாமையால், அக்குடைகளை நிகர்க்கும் தன் மீதும் வானை நோக்கிப் பாயுமோ என்று குளிர்ந்த நிறைமதியம் வானத்தில் தேய்ந்து, தான் குடையன்று என்று வேறுபட்ட தன் உருவத்தைக் காட்டுகிறது போலும் – என்ற

இப்பாடலில், மதியம் தேய்தல் இயற்கையாகவும், கவி அத்தேய்தலுக்கு ஒரு கற்பனை செய்து காரணம் காட்டுதற்கண் தற்குறிப்பேற்ற அணி இயங்குதிணையிடத்தே வந்தவாறு.]

நிலைத்திணைத் தற்குறிப்பேற்றம் வருமாறு:

'வேனில் வெயிற்குஉலந்த மெய்வறுமை கண்டுஇரங்கி,
வானின் வளம்சுரந்த வண்புயற்கு, — தான்உடைய
தாதும் மேதக்க மதுவும் தடஞ்சினையால்
போதும் மீதுஏந்தும் பொழில்'

என வரும். பிறவும் அன்ன.

[முதுவேனிற் காலத்தில் கதிரவன் வெப்பம் தாளாமல் உலர்ந்த தன் மேனி வாட்டத்தை அறிந்து அதனைப் போக்குதற்கு மழை பொழிந்த கார்மேகத்திற்குக் கைம்மாறாகச் சோலை வானளாவிய தன் பெரிய கிளைகளாகிய கைகளால்மகரந்தத்தையும், தேனையும், பூக்களையும், ஏந்தி நிற்கிறது – என்ற இப்பாடலில்,

வானளாவிய மரங்களில் பூக்களும் தேனும் மகரந்தமும் இயற்கையாகக் காணப்பட அதற்குக் கவி ஒரு கற்பனை செய்து உரைத்த நிலைத்திணைத் தற்குறிப்பேற்ற அணியைக் காண்க.]

'சான்றோர் வருந்திய வருத்தமும் நுமது
வான்தோய்வு அன்ன குடிமையும் நோக்கி'

என – அன்ன என்பதூஉம்,

'காமருதேர் வெய்யவன் எங்கும் கரம்பரப்பித்
தேமருவு சோலை மலர்திறக்கும், — தாமரையின்
தொக்க இதழ்விரித்துப் பார்க்கும், தொலைந்துஇருள்போய்ப்
புக்க புரைகிளைப்பான் போல்'

எனப் போல் என்பதூஉம் வந்தன. ஏனையவும் வந்துழிக் காண்க. (37)

[சான்றோர் நுமக்காக முயன்ற முயற்சியையும் நும்முடைய வானத்தை அளாவியது போன்ற குடிப்பிறப்பின் சிறப்பையும் நோக்கி நுமக்கு இவளை மணம் செய்து கொடுப்பர்' என்ற பாடற் பகுதியில் 'வாவி தோய்வு அன்ன' என்பது தற்குறிப்பேற்றம். இதன்கண் 'அன்ன' என்ற சொல் வந்தவாறு.

'விரும்பத்தக்க தேரினை உடைய சூரியன் எங்கும் தன் கைகளைப் பரப்பி, சோலைகளில் உள்ள தேன் பொருந்திய மலர்களைத் திறப்பான்; மேலும், தன் வருகையால் தோற்ற இருள் போய் ஒளிந்திருக்கும் இடத்தைத் தேடிப் பார்ப்பவனைப் போலத் தாமரையின் மூடிய இதழ்களை விரித்துப் பார்ப்பான்' – என்ற இப்பாடலில், கதிரவன் வருகையால் பூக்கள் மலருதல் இயற்கையாகவும் அதற்கு ஒரு தற்குறிப்பேற்றத்தைக் கவி கற்பனை செய்தவாறு.

இப்பாடலின்கண் 'போல்' என்ற சொல் வந்தவாறு.] 37

ஏது அணியின் இலக்கணமும் வகையும்

657. யாதன் திறத்தினும் இதனின் இது விளைந்தது என்று
ஏதுவிதந்து உரைப்பது ஏது; அதுதான்
காரகம் ஞாபகம் என இரண்டு; அவற்றுள்
முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்
ஏற்பதும் நீக்கமும் என இவை காரகம்;
அவைஅல பிறஎன்று அறிவது ஞாபகம்.

நிறுத்தமுறையானே ஏது அலங்காரம் கூறுவனவற்றுள், இஃது அதன் பொது இயல்பும் வகையும் விரியும் கூறுகின்றது.

இ–ள்: யாதானும் ஒரு பொருள்திறத்து இதனான் இது நிகழ்ந்தது என்று காரணம் மிகுத்துச் சொல்லுவது ஏது என்னும் அலங்காரமாம். அது காரகஏது என்றும்

ஞாபகஏது என்றும் இரண்டாம். அவற்றுள், கருத்தாவும் செயப்படுபொருளும் கருமமும் கருவியும் ஏற்பதும் நீக்கமும் என்று சொல்லப்பட்ட இவை ஆறும் காரக ஏதுவாம். அவ்வாறும் அல்லாத பிற காரணங்களால் உய்த்து உணரத்தோன்றுவது ஞாபக ஏதுவாம் என்றவாறு.

நிலனும் பொழுதும் இத்துணைச் சிறப்பு இன்மையின் எடுத்து ஓதார் ஆயினர்; அவையும் காரக ஏதுவாதல் கொள்க.

[முதல்வன் – கருத்தா — முதல்வேற்றுமை.

பொருள் – செயப்படுபொருள்
கருமம் – செய்யப்பட்ட செயல் } இரண்டாம் வேற்றுமை.

கருவி – காரணங்களுள் ஒன்று — மூன்றும் வேற்றுமை.

ஏற்பது — நான்காம் வேற்றுமை.

நீக்கம் — ஐந்தாம் வேற்றுமை.

நிலன் – பொழுது — ஏழாம் வேற்றுமை.

எனவே, ஆறும் வேற்றுமை எட்டாம் வேற்றுமை நீங்கலான ஏனைய காரகம் ஏதுப்பொருளில் வரும். 'முதல்வனும் கருமமும் கருவியும் ஏற்பதும், நீக்கமும் இடமும் என இவை காரகம்' என்ற பாடமும் உண்டு.]

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 58, 59, 60

'ஏது உரைப்பின் இதுஇது வின்விளைவு என்றுரைத்தல்
ஓதிய காரகம் ஞாபகம் உள்ளதொ டொன்றின்றென்றும்
ஆதி அபாவம் அழிவுபா டென்று மபாவமின்மை
தீதில் ஒருங்குடன் தோற்றம்யுத் தாயுத்தம் செப்புவரே.'

– வீ. 168

'ஏது என்பது இதனின்இஃது ஆயதென்று
ஓதுவ தாமென உரைத்தனர் புலவர்.' – மா. 186

'அதுவே, காரகம் ஞாபகம் எனஇரு காட்சிய.' – மா. 187

'அவற்றுள்,
முதலது முதல்வனும் கருவியும் கருமமும்
காலமும் இடனும் கண்ணிய நெறித்தாய்ப்
போக்கறு பொருளொடும் புகல்இரு மூன்றினும்
ஆக்கமும் அழிவுமென்று அமர்தரு விரித்தே,' – மா. 188

'ஏவல் முதல்வன் இயற்றுதல் முதல்வனென்று
ஆவயின் வருமுதல் வனுமிரண் டாகும்.' – மா. 189

'ஏனைய தொன்றும் வெளிப்பட மற்றது
தான்உணர் விற்புலப் படுந்தன் மையதாய்க்
காரணம் காரியம் தாம்உறழ்ந்து உணர்த்தும்
சால்பினும் நடைபெறும் சாற்றுங் காலே.' – மா. 190

'எய்திய இன்பம் துன்பம் இவற்றிற்கு
ஐயமில் பான்மை ஆக்கமும் அழிவும்.' – மா. 191

'இருளற அறிவிப் பனவாம் ஏதுவும்
பொருளிடம் வினைபண்பு அவற்றொடும் புணரும்.' – மா. 192

'இன்மையும் அதன்கண் எய்துதல் உரித்தே.' – மா. 193

'அதுவே, ஒன்றினொன் றின்மை உள்ளதன் இன்மை
என்றுமின் மையினோடு இன்மையின் இன்மை
அழிவுபாட் டின்மையோ ரைந்தா கும்மே.' – மா. 194

'காரியம் முந்துறு காரகம் காரண
காரியம் ஒருங்குறு காட்சி யுத்தமும்
அயுத்தமும் எனமேல் அறைந்ததோ டொன்றும்.' – மா. 195

'உணர்வுறின் ஐய ஏதுவும் உளவே.' – மா. 196

'காரியம் அயலதாய்க் கழிதிறன் அசங்கதி.' – மா. 203

'அதுவே, சிலேடையின் எய்தும் திறனும் உடைத்தே.'
– மா. 204

'ஓதும்ஏ தேனும் ஒருபொருள் திறத்தால்
ஈது விளைந்ததென் றியம்புவது ஏது.' – மு. வீ. பொ. 84

'காரணம் காரியத் தோடு சார்த்தலும்
காரிய காரண ஒற்றுமை காண்டலும்
என்றிரு வகைத்தாம் ஏது அணியே.' – ச. 126

'காரண மான தொடுகா ரியத்தைக் கழறுமதின்
பேரதும் ஏது அணியாம்.' – குவ. அ. 100

இவ்வொத்த நூற்பாக்களை 657, 658, 659 மூன்றற்கும் கொள்க.]

ஆக்கம் பற்றி வந்த கருத்தாக் காரகஏது வருமாறு :

'எல்லைநீர் வையகத்து, எண் இறந்த எவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பம் தோற்றியதால் ; — முல்லைசேர்
தாதுஅலைத்து, வண்கொன்றைத் தார்அலைத்து, வண்டார்க்கப்
பூதலத்து வீழ்ந்த புயல்'

என வரும்.

[முல்லைக் கொடியின் மகரந்தத்தை அளைந்து, மாலைபோலத் தொடர்ச்சியாக அமைந்த பசிய கொன்றைப்பூங்கொத்தை அசைத்து, வண்டுகள் ஆரவாரிக்க, நிலத்தில் மழையாக வீழ்ந்த மேகம், கடல் சூழ்ந்த உலகிலுள்ள எண்ணற்ற எல்லா உயிர்களுக்கும் சொல்லுக்கு அடங்காத பேரின்பத்தை விளைத்தது – என்ற இப்பாடலில், புயல் ஆகிய கருத்தா பேரின்பம் தோற்றுதலாகிய ஆக்கத்தைத் தரையில் வீழ்தலாகிய காரகத்தால் வெளிப் படுத்தியவாறு.]

அழிவுபற்றி வந்த கருத்தாக் காரகஏது வருமாறு :

'கனிகொள் பொழில்அருவி கைகலந்து, சந்தின்
பனிவிரவிப் பாற்கதிர்கள் தோய்ந்து, — தனிஇருந்தோர்
சிந்தை யுடனே உயிர்உணக்கும், தென்மலையம்
தந்த தமிழ்மா ருதம்'

என வரும்.

[தெற்கிலுள்ள பொதிய மலையில் தோன்றிய இனிய தென்றல் காற்று, கனிகளைக் கொண்ட பொழில்கள் சூழ்ந்த அருவி நீரைச்

சேர்ந்து, சந்தனத்தின் குளிர்ச்சியைப் பொருந்தி, சந்திரனுடைய குளிர்ந்த வெள்ளிய கிரணங்களில் தோய்ந்து, பிரிந்திருப்பாருடைய மனத்தையும் உயிரையும் வாடச் செய்யும் — என்ற இப்பாடலில்,

தமிழ் மாருதம் என்ற கருத்தா, தனி இருந்தோர் சிந்தையும் உயிரும் உணக்குதலாகிய அழிவுச் செயலை, அருவியைக் கலத்தல், சந்தனத்தை அளைதல், சந்திரன் கதிர்களில் தோய்தல் ஆகிய காரகங்களால் செயற்படுத்தியவாறு.]

கரும காரகஏது வருமாறு :

'மலையின், அலைகடலின், வாள்அரவின் வெய்ய
தலையில் பயின்ற தவத்தால், — தலைமைசேர்
அம்மாதர் புல்லும் அபயன் புயம்புணர்தற்கு,
எம்மா தவம்புரிந்தேம் யாம் ?

என வரும்.

['விந்தியமலையிலும், அலையை உடைய கடலிலும் ஆதிசேடனுடைய தலையிலும் செய்த தவத்தினாலே மேம்பட்ட சயமடந்தை, திருமகள், நிலமகள் என்ற மகளிர் தழுவும் அநபாயனாகிய சோழனுடைய புயத்தைத் தழுவுதற்கு நாம் ஒரு மாதவமும் செய்யவில்லையே!' – என்று சோழன் பவனி வரக் கண்ட தலைவியொருத்தியின் கைக்கிளைக் கூற்றாக அமைந்த இப்பாடலில், சயமடந்தை முதலியோர் மலையிலும் கடலிலும் பாம்பின் தலையிலும் செய்த தவமாகிய கருமமே அவர்களை அநபாயன் புயம் புணர்த்தலாகிய காரகத்தை வெளிப்படுத்தியவாறு.]

கருவிக் காரகஏது வருமாறு :

'கரடத்தால் மாரியும், கண்ணால் வெயிலும்,
நிரைவயிரக் கோட்டால் நிலவும் — சொரியுமால் ;
நீள்ஆர்த் தொடைஅதுலன், நேரார் கலிங்கத்து,
வாளால் கவர்ந்த வளம்'

என வரும். பிறவும் வந்துழிக் காண்க.

[நீண்ட ஆத்திப்பூ மாலையை அணிந்த ஒப்பற்றவனாகிய சோழன் பகைவருடைய கலிங்க நாட்டில் இருந்து தன் வாள் வலிமையால் கைப்பற்றிய யானைக்கூட்டம், மதத்தால் மழையையும், கண்ணால் வெயிலையும், கோட்டால் நிலவையும் சொரியும் – என்ற இப்பாடலில், மதம் ஒழுகும் கபோலங்கள், கண்கள், கோடுகள் ஆகிய கருவிகள் மாரி, வெயில், நிலவு ஆகிய காரகங்களை வெளிப்படுத்தியவாறு.

'இமிழ்திரைநீர் ஞாலம் இருள்விழுங்கச் சோதி
உமிழ்கதிரும் புள்ளும் ஒடுங்க — அமிழ்தொத்து
அருள்மாலை எய்தா தவர்மனம்போல் மாலும்
மருள்மாலை வந்தென் மனம்'

எனக் காலக் காரக ஏதுவும்,

'சங்கன் அழியாத் தமனியநா டெய்தியதும்
பொங்குபுகழ்த் தாந்தன் புலவீர்காள் — எங்கோனும்
சோதிபதம் எய்தியதும் சொற்றமிழ்மா றன்அருள்கூர்
ஆதிநகர்த் தெய்விகத் தால்'

என இடக்காரக ஏதுவும் மாறன் அலங்காரத்தில் எடுத்துக் காட்டால் விளக்கப்பட்டவாறு. – மா. 189]

ஞாபகஏது வருமாறு :

'காதலன்மேல் ஊடல் கரைஇறத்தல் காட்டுமால்;
மாதர் நுதல்வியர்ப்ப, வாய்துடிப்ப, — மீது
மருங்குவளை வில்முரிய, வாள்இடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து'

என வரும். பிறவும் அன்ன. **(38)**

[இம்மகள் தன் நெற்றியில் வியர்வை துளிப்ப, புருவம் வளைய, வாளைவென்று நீண்ட கருங்குவளை போன்ற கண்கள் செந்நிறம் அடைய இருக்கும் இம்மெய்ப்பாடுகளின் உட்கிடக்கை தன் கணவனிடத்தில் அளவு கடந்த ஊடல் கொண்டுள்ளாள்

என்பதனைக் காட்டும் – என்ற இப்பாடலில், காரணம் நேராகக் கூறப்படாமல் காரியங்களைக் கண்டு அறிவால் உணருமாறு கூறப்பட்டிருத்தல் ஞாபக ஏதுவாம். இது காரியங்களால் காரணம் புலப்பட்ட ஞாபக ஏது.

**'அணியார்பொற் றேரும் அயில்விழியும் சற்றும்
தணியா திடந்துடிக்குஞ் சால்பான் — மணிமாடக்
கோயிலார் வெற்பிற் கொடியிடையாய் வைகறைநம்
வாயிலாங் காவலர்தேர் வந்து'**

என்ற மாறனலங்கார எடுத்துக்காட்டுப் பாடல் காரணம் கண்டு காரியம் புலப்பட்ட ஞாபக ஏதுவாம். இஞ்ஞாபக ஏது – பொருள், இடம், வினை, பண்பு என்று பலவகையாக எடுத்துக்காட்டுடன் மாறன் அலங்காரத்தில் விளக்கப்பட்டுள்ளது. – மா. 191, 192]

38

மேலதற்கு ஓர் ஒழிபு

658. அபாவம் தானும் அதன்பால் படும்; அஃது
என்றும் அபாவமும்[1] இன்மையது அபாவமும்[2]
ஒன்றின்ஒன்று அபாவமும்[3]உள்ளதன்அபாவமும்[4]
அழிவுபாட்டு அபாவமும்[5] எனஐந்து ஆகும்.

இது மேலதற்கு ஓர் ஒழிபு கூறுகின்றது.

இ-ள்: ஒன்றினது இன்மையும் அவ்வேதுவின் திறத்ததாம். அஃது எக்காலத்தும் இல்லாமையும், இல்லாமையது இல்லாமையும், ஒன்றினது இன்மையும் அதன்கண் அஃது இன்மையும், ஓரிடத்தும் ஒருகாலத்தும் உள்ள பொருள் பிறிதோர் இடத்தும் பிறிது ஒரு காலத்தும் இல்லாமையும், முன் உள்ளது அழிவுபட்டு இல்லாமையும் என ஐவகைப்படும் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 61, 62

வீரசோழியம் 168, மாறன் அலங்காரம் 193, 194.

என்றும் அபாவ ஏது வருமாறு :

'யாண்டும் மொழிதிறம்பார் சான்றவர்; எம்மருங்கும்
ஈண்டும் முகில்கள், இனம்இனமாய் — மூண்டெழுந்த
காலையே கார்முழங்கும் என்றுஅயரேல்; காதலர்தேர்
மாலையே நம்பால் வரும்'

என வரும்.

['நாற்றிசையும் நெருங்கி வரும் மேகங்கள் கூட்டம் கூட்டமாய்ப் புறப்பட்டு வந்த அளவிலேயே அவை முழங்கிக் கார்காலத்தை அறிவிக்கும் என்று வருந்தாதே. சான்றோர் எக்காலத்தும் சொல்லிய சொல்லைத் தவறார் ஆதலின், தாம் குறித்தவாறே தலைவருடைய தேர் மாலையே நம் இல்லத்துக்கு வேற்றுப் புலத்திலிருந்து மீண்டு வந்துவிடும்' – என்று பருவ வரவின்கண் ஆற்றாளாய தலைவியைத் தோழி தலைவனுடைய சால்பு கூறி ஆற்றுவித்த இப்பாடலில்,

சான்றோர் சொன்ன சொல் தவறுதல் என்றும் இல்லை என்ற காரணம் தலைவன் தேர் தவறாது வருதற்கு ஏதுவாயினவாறு. சான்றோர் யாண்டும் மொழி திறம்புதல் என்றும் இல்லை ஆகலின், இஃது என்றும் அபாவமாம்.]

இன்மையது அபாவஏது வருமாறு :

'கார்ஆர் கொடிமுல்லை நின்குழல்மேல் கைபுனைய
வாராமை இல்லை வயவேந்தர்; — போர்கடந்த
வாளை ஏய்கண்ணி! நுதல்மேல் வரும்பசலை,
நாளையே நீங்கும் நமக்கு'

என வரும்.

['போரிடும் வாளினை வென்ற கண்களை உடைய தலைவியே! கார் காலத்தில் மலரும் முல்லைப் பூக்களை நின் கூந்தலின்மேல் அலங்கரிப்பதற்கு வெற்றி வீரராகிய நம் தலைவர் வாராது அமையார். ஆதலின் உன் நெற்றியில் பரவியுள்ள பசலை நாளையே நீங்கிவிடும்' — என்று கார்கால வரவின்கண் ஆற்றுளாய தலைமகளைத் தோழி ஆற்றுவிக்கும் இப்பாடலில், தலைவன் வாராமை இல்லை என்ற காரணத்தால் தலைவியின் பசலை நீங்கிவிடும் என்பது விளக்கப்பட்டவாறு. இன்மையது அபாவம் - இல்லாமையினுடைய இல்லாமை. அஃதாவது உண்மை. வாராமை இல்லை என்ற இரண்டு மறைச்சொற்கள் வருவார் என்ற பொருள் தருதல் இன்மையது அபாவமாதல் காண்க.]

ஒன்றின் ஒன்று அபாவஏது வருமாறு :

'பொய்ம்மை உடன்புணரார் மேலவர்; பொய்ம்மையும்
மெய்ம்மைசூழ் மேலாரை மேவாவாம்; — இம்முறையால்
பூஅலரும் தாரார் பிரிந்தால், பொலங்குழையார்
காவலர்சொல் போற்றல் கடன்'

என வரும்.

[மேன்மக்கள் பொய்மொழியோடு கலவார். பொய்மொழியும் உண்மையையே கருதும் சான்றோர் மாட்டு அணுகாது. இம் முறையால், பூமாலை அணிந்த தலைவன் பிரிந்து செல்வானாயின் தன் உயிர்காவலனாகிய தலைவன் கூற்று என்றும் பொய்க்காது என்ற தெளிவோடு ஆற்றி இல்லிருந்து நல்லறம் செய்தலே உரிமை மகளாகிய தலைவியின் கடனாகும் — என்ற இப்பாடலில், சான்றோர் பொய்யை அணுகார்; பொய்யும் சான்றோரை அணுகாது என்ற ஒருபொருளின்கண் ஒருபொருள் இல்லாமையைக் காரணமாகக்கொண்டு தோழி தலைவியை ஆற்றுவித்தவாறு.

ஒருபொருளின்கண் ஒன்று இல்லாமை – பொய் சான்றோரிடம் இராது; சான்றோரும் பொய்யினிடம் இரார் என்பது.]

உள்ளதன் அபாவஏது வருமாறு :

'கரவொடு நின்ருர் கடிமனையில், கைஏற்று,
இரவொடு நிற்பித்தது என்னை ; — அரவொடு
மோட்டுஆமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்'

என வரும்.

[அரவினையும் ஆமை ஓட்டினையும் அணிந்த சிவபெருமானை முற்பிறப்பில் வணங்குவதற்கு இசையாத என் உள்ளம், இப் பிறப்பில், இருப்பதனை மறைத்துப் பிறருக்கு ஈதலில்லாத இவறன்மாலையரின் காவலையுடைய வீட்டிற்குச்சென்று கைஏற்றுப் பிச்சை எடுக்கும் நிலையில் என்னை வைத்துள்ளது என்ற இப்பாடலில்,

இப்பிறப்பில் உலோபிகளிடத்துப் பிச்சை ஏற்று உயிர்வாழும் செயல், சென்ற பிறப்பில் இறைவனை வணங்காத செயலைத் தெரிவிக்கின்றது. இவ்வுலகத்து இப்பொழுது உள்ள செயல் முற்பிறப்பில் ஒருகாலத்தும் இல்லாத செயலை அறிவிக்கின்றது. மனம் முதல்வனை வணங்கமாட்டாமை என்ற ஏதுவினுல் இரவொடு நிற்பித்தலாகிய செயல் நிகழ்ந்தவாறு.]

அழிவுபாட்டு அபாவஏது வருமாறு :

'கழிந்தது இளமை ; களிமயக்கம் தீர்ந்தது ;
ஒழிந்தது காதல்மேல் ஊக்கம் ; — சுழிந்து
கருநெறிசேர் கூந்தலார் காதல்நோய் தீர்ந்தது ;
ஒருநெறியே சேர்ந்தது உளம்'

என வரும். பிறவும் அன்ன. (39)

[இளமை கழியவே, களிப்பும் மயக்கமும் நீங்கவே, காதலிடத்துள்ள ஊக்கம் ஒழிந்ததனுல் சுருண்ட நெறிப்பை உடைய கூந்தலராகிய மகளிர்மாட்டுளதாகிய ஆசை நீங்கி உள்ளம் ஒப்பற்ற நன்னெறியைச் சேர்ந்துவிட்டது – என்ற இப்பாடலில்,

முன்பிருந்த இளமை, களி, மயக்கம், காதல் என்பன அழிவு பட்டு இலவாயின செயல் மனம் ஒப்பற்ற நெறியைச் சேருவதற்கு உதவியதாகக் காரணம் கூறப்பட்டமை அழிபாட்டபாவமாதல் காண்க.] 39

மேலும் ஓர் ஒழிபு

659. தூர காரியமும்[1] ஒருங்குஉடன் தோற்றமும்[2]
காரியம் முந்துஉறாவும் காரண நிலையும்[3]
உயுத்தமும்,[4] அயுத்தமும்,[5] முத்தையோடு இயலும்.

இதுவும் அது.

இ–ள் : ஒருவழிக் காரணம் நிகழப் பிறிது ஒருவழிக் காரியம் நிகழ்தலும், காரண காரியங்கள் ஒருங்கு நிகழ்தலும், காரணத்தின் முன்னர்க் காரியம் நிகழ்தலும் காரணத்திற்கு ஏற்ற காரியம் நிகழ்தலும், காரணத்திற்கு ஏலாக்காரியம் நிகழ்தலும் ஆகிய இவ்வனைத்தும் முன்னை அலங்காரத்தோடு ஒத்து நடக்கும் என்றவாறு.

விளக்கம்

[தூரகாரியஏது அசங்கதி எனப்பட்டு மாறனலங்கார ஆசிரியரால் தனி அணியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

தண்டியார் 'காரணம் முந்துஉறாஉம் காரியநிலை' என்று பாடம் கொள்வர். கருத்து இருவருக்கும் ஒன்றே.]

ஒத்த நூற்பாக்கள்

(முழுதும் தண்டி – 63)

தூர காரியஏது வருமாறு :

'வேறுஒரு மாதர்மேல் வேந்தன் நகநுதியால்
ஊறுதர, இம்மாது உயிர்வாடும் ; — வேறே
இருவரே மெய்வடிவின் ஏந்திழை நல்லார்,
ஒருவரே தம்மில் உயிர்'

என வரும்.

[தலைவன் தலைவி உணருமாறு வேறொரு பெண்ணின்மேல் நகக்குறியிட்டானாகத் தலைவி அது பொறாது உயிர்வாடுகிறாள். இருவராகிய இப்பெண்கள் வடிவில் வெவ்வேறாக அமைந்து இருப்பினும் ஒருயிர் உடையார் போலும் – என்ற இப்பாடலில்,

நகக்குறி இடுதலாகிய காரணம் ஓரிடத்து நிகழ அதன் காரியமாகிய உயிர்வாடுதல் பிறிது ஓரிடத்து நிகழ்ந்தவாறு. தலைவி உயிர் வாடுதற்குச் செய்மையில் தலைவன் பிறள் ஒருத்தியிடம் நிகழ்த்திய செயல் ஏதுவாதலின், இது தூரகாரிய ஏதுவாயிற்று.]

ஒருங்கு உடன் தோற்றஏது வருமாறு :

'விரிந்த மதிநிலவின் மேம்பாடும், வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும், — பிரிந்தார்
நிறைதளர்வும் ஒக்க நிகழ்ந்தனவால், ஆவி
பொறைதளரும் புன்மாலைப் போது'

என வரும்.

[கிரணங்கள் விரிந்த சந்திரனுடைய ஒளியின் மேம்பாடும், விருப்பத்தை விளைவித்த வில்லேந்திய மன்மதனுடைய போரும், பிரிந்திருப்பவர் உள்ளத்து அடக்கம் தளர்தலும், உயிர் தடுமாறும் அற்பமாகிய மாலைக் காலத்தில் ஒரு சேர நிகழ்ந்தன – என்ற இப்பாடலில்,

நிலவின் மேம்பாடு, மதவேள் போர் என்ற காரணங்களும் பிரிந்தார் நிறை தளர்வாகிய காரியமும் ஒருசேர நிகழ்ந்தவாறு காண்க. இவ்வாறு காரணமும் காரியமும் ஒரே நேரத்தில் நிகழ்வது ஒருங்குடன் தோற்றமாகும்.]

காரியம் முந்துஉறூஉம் காரணநிலைஏது வருமாறு :

'தம்புரவு பூண்டோர் பிரியத் தனிஇருந்த
வம்புஉலவு கோதையர்க்கு, மாரவேள் — அம்பு
பொரும்என்று, மெல்ஆகம் புண்கூர்ந்த ; மாலை
வரும்என்று இருண்ட மனம்'

என வரும்.

[தம்மைக் காத்தற்றொழிலை மேற்கொண்ட தலைவர் பிரிகையினாலே, தனித்திருக்கும் பண்டு பூமாலை சூடிய பெண்களுக்கு, மன்மதனுடைய அம்புகள் தைக்குமே என்று மெல்லிய மார்பகம் புண்மிக்கன. மாலைக்காலம் வந்துவிடுமே என்று மனம் இருண்டது – என்ற இப்பாடலில், மன்மதன் அம்பு எய்தல், மாலைக்காலம் வருதல் ஆகிய காரணங்களுக்கு முன்பே, மெல் ஆகம் புண்கூர்தல், மனம் இருளுதல் ஆகிய காரியங்கள் நிகழ்ந்தவாறு காண்க.]

உயுத்த ஏது வருமாறு :

'பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவான்,
முன்னர் அசைந்து முகுளிக்கும், — தன்நேர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
அரவிந்தம் நூறு யிரம்'

என வரும்.

[சோழ மன்னன் கையிலேந்திய வேல் வெளிப்படுத்திய நிலவினாலே, அவனுக்கு ஒப்பாகக் கருதிப் போரிடற்கு வந்த பகை மன்னருடைய கடகங்கள் அணிந்த கைகளாகிய தாமரைகள் பலவும் அவனை வணங்குவதற்காகக் குவிந்துவிடும் – என்ற இப்பாடலில்,

நிலவின் ஒளியினால் தாமரை மூடிக்கொள்ளுதலாகிய பொருத்தமாகிய உலகியல் செய்தியை அடிப்படையாகக் கொண்டு காரணம் கற்பிக்கப்பட்டவாறு காண்க.

யுத்தம் — பொருத்தமானது.]

அயுத்த ஏது வருமாறு :

'இகல்மதம்மால் யானை அநபாயன் எங்கோன்
முகம்மதியின் மூரல் நிலவால் — அகம்மலர்வ,
செங்கயற்கண் நல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல'

என வரும்.

[மாறுபாட்டினை உடைய மதம்மிக்க பெரிய யானையை உடைய அநபாயனுகிய எம் அரசனுடைய முகமாகிய சந்திரனில் இருந்து வெளிப்படும் புன்சிரிப்பாகிய நிலாவினுலே, பெண்களுடைய அழகு பொருந்திய முகங்களாகிய தாமரைகள் மலர்கின்றன — என்ற இப்பாடலில்,

உலகியல், நிகழ்ச்சிக்குப் பொருத்தமல்லாத — நிலாவொளியினுலே தாமரைகள் மலரும் — என்ற செய்தி குறிப்பிடப்பட்டு இருத்தல் அயுத்த ஏதுவாம்.

அயுத்தம் — பொருத்தமில்லாதது. காரணத்திற்கு ஏலாத காரியம் நிகழ்வது. அஃதாவது நிலவொளியால் கூம்பும் தாமரையை நிலவொளியால் மலரும் என்பது.]

'முடியும்' என்றது 'இயலும்' என்றதனுல், பிறவாற்ருன் வருவனவும் கொள்க. அவற்றுள் ஐயஏது வருமாறு :

'மாதர் உமைவாய் மழலை மொழியாலோ?
ஓதும் மறையின் ஒலியாலோ! — யாதாலோ?
கோலம் இருதிறனுக் கொண்டான் திருமிடற்றின்
ஆலம், அமிர்தான வாறு'

என வரும். பிறவும் வத்துழிக் காண்க. (40)

[ஆணும் பெண்ணுமாய் அம்மையப்பன் திருக்கோலத்திலிருக்கும் சிவபெருமான் கழுத்துவரை உட்புகுந்த ஆலகால விடம் அமுதமாக மாறியதற்குக் காரணம் உமாதேவியின் மழலைச் சொற்களா? அல்லது சிவபெருமான் ஓதும் வேத ஒலியின் மகிமையா? யாதாக இருக்கலாம்? — என்ற இப்பாடலில்,

மழலை மொழியாலோ? மறை ஒலியாலோ? யாதாலோ என்று ஆலம் அமிர்தானதற்கு ஏது இன்னது என்று வரையறுக்கப் படாமல் ஐயநிலையிலேயே உரைக்கப்பட்டமையின் இஃது ஐய ஏதுவாதல் காண்க.]

40

நுட்பவணி

660. தெரிபுவேறு கிளவாது குறிப்பினும் தொழிலினும்
அறிதுஉணர் வினைத்திறன் நுட்பம் ஆகும்.

இது நிறுத்த முறையானே நுட்பம் என்னும் அலங்காரம் ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : தெரிந்து வேறுபடக் கிளவாது, குறிப்பினான் ஆதல், தொழிலினான் ஆதல், அரிதாக நோக்கி உணரும் தொழில் தன்மையை உடையது நுட்பம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இவ்வணி நுணுக்கம் எனவும் பரிகரம் எனவும் பெயர் பெறும்.]

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் - தண்டி 64

'திகழும் நுணுக்கம் குறிப்பின் தொழிலின் திறமுணர்த்தல்.'
- *வீ.* 169

'உரைத்தது போன்றுறு தொனிப்பல தொடைமொழி
நிரைப்பன இன்றியும் நிபுணர்நுட் பம்மெனுஅ
ஆங்குரைத் ததுவுமாய் நோக்கமைந்து ஏது
நீங்கலின் நிலைமொழிச் சங்கையை வருமொழி
பாங்குறப் பாதுகாத் திடும்திடம் பரிகரம்.' - *மா.* 233

' அதுவே,
குறிப்பினும் தொழிலினும் தமிகுறிக் கொளலாய்
வெளிப்பட லொடும்விர வியும்வரும் வகைத்தே.'
- *மா.* 234

'நுட்பமாம் தெளிவுற நுவலா தவற்றையும்
உட்படுத் திடுங்குறிப் புரைஅரிது உணர்த்தலே.'
- *தொ. வி.* 347

'அறிந்து வேறுய் அறையாது குறிப்பினும்
தொழிலினும் அரிதுஉணர் தொழில்திறம் நுட்பம்
ஆகும் என்மனுர் அறிந்திசி னேரே.' – மு. வீ. பொ. 85

'கருதிய பிறன்கோள் கண்டு குறிநிலைச்
செய்கையின் நிகழ்தலும் செப்பே நுட்பம்.' – ச. 110

'பிறன்கருத்து ஓர்ந்து கருத்தோடு கூடப் பெறுசெய்கையால்
உறுவிடை ஈவது நுட்பம்.' – குவ. அ. 84]

குறிப்பினுன் வரும் நுட்பம் வருமாறு :

'காதலன் மெல்உயிர்க்குக் காவல் புரிந்ததால்,
பேதையர் ஆயம் பிரியாத — மாதர்
படர்இருள்கால் சீக்கும் பகலோனை நோக்கிக்
குடதிசையை நோக்கும் குறிப்பு'

என வரும்.

[*மகளிர் ஆயத்தைவிட்டு நீங்காத தலைவி, படர்ந்த இருட்டைப் போக்கிய கதிரவனை நோக்கிப் பின் மேற்குத் திசையை நோக்கிய குறிப்பு, தலைவனுடைய மென்மையான உயிருக்குப் பாதுகாவலைத் தந்தது – என்ற இப்பாடலில்,*

கீழ்த்திசைக்கண் உள்ள கதிரவன் மேற்றிசையில் மறைந்த பிறகு இரவில் இரவுக்குறிக்கண் வந்து தன்னை அடையுமாறு தலைவி குறிப்பினுல் தலைவன் உளங்கொள உணர்த்திய செய்தியில் நுட்பஅணி அமைந்துள்ளமை காண்க.]

தொழிலினுன் வரும் நுட்பம் வருமாறு :

'பாடல் பயிலும் பணிமொழிதன் மென்பணைத்தோள்
கூடல் அவாவால் குறிப்புணர்த்தும் — ஆடவற்கு,
மென்தீந் தொடையாழின் மெல்லவே தைவந்தாள்
இன்தீங் குறிஞ்சி இசை'

என வரும். பிறவும் அன்ன. (41)

[பாடலை யாழோடு பயின்றுகொண்டிருந்த இனிய பேச்சினை உடைய தலைவி, தன் மெல்லிய பருத்த தோள்களைத் தலைவன் கூடுதற்கண் தனக்கு உள்ள அவாவினாலே, பகற்குறிக்கண் வந்து நின்ற தலைவனுக்கு, தான் மிழற்றிய மெல்லிய இனிய நரப்புக் கட்டினை உடைய யாழில் குறிஞ்சி இசையை வாசித்துத் தன் உள்ளக் குறிப்பினைத் தெரிவித்து, பகற்குறியை விலக்கி இரவுக் குறியை வேண்டிய இப்பாடலில்,

குறிஞ்சி இசைபாடி அக்குறிஞ்சிக்குரிய இடையாமத்தில் இல்வரை இகவா இரவுக்குறிக்கண் தலைவன் தன்னை வந்து அடைய வேண்டும் என்ற தன் உள்ளக்கிடக்கையைத் தலைவி தன் யாழ்வாசினையாகிய தொழிலால் தெரிவித்த நுட்பம் உணர்த்தப் பட்டவாறு.] 41

இலேசவணி

661. குறிப்புவெளிப் படுக்கும் சத்துவம் பிறிதின்
மறைத்து உரையாடல் இலேசம் ஆகும்.

நிறுத்த முறையானே இஃது இலேசம் என்னும் அலங்காரம் உணர்த்துகின்றது.

இ-ள் : கருதியது வெளிப்படுக்கும் சத்துவங்களைப் பிறிது ஒன்றினான் நிகழ்ந்தனவாக மறைத்துச் சொல்லுவது இலேசம் என்னும் அலங்காரமாம் என்றவாறு :

சத்துவம் என்பன வெண்பளிங்கில் செந்நூல் கோத்தால், அதன் செம்மை புறம் பொசிந்து தோன்றினாற்போல, கருதியது புலன் ஆக்கும் குணங்கள். அவை, சொல்தளர்வு, மெய்விதிர்ப்பு, கண்ணீர் நெகிழ்ச்சி, மெய்வெதும்பல், மெய்ம்மயிர் அரும்பல் முதலாயின.

[இது வஞ்சகவிற்சியணி எனவும் கூறப்படும்.]

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி – 65.

'நிகழும் இலேசம்மெய்ச் சத்துவம் வேறு நெறியினுய்த்தல்.'
– *வீ.* 169

'தெண்ணிறப் பளிங்கிற் சிறுபுழைச் செந்நூல்
ஒண்ணிறம் புறம்பொசிந்து ஒளிரும் படித்தாய்க்
கருத்தினை வெளியிடும் காமர்சத் துவங்களை
அருத்தியின் மறைத்துரைப் பதுவே இலேசம்.' – *மா.* 200

'மெய்ம்மயிர் பொடித்தல் வெதும்பல் வெயர்த்தல்
துய்யபொற் பசலை தோன்றல் நடுக்குறல்
விழிபுனல் அரும்பல் வெவ்வுயிர்ப்பு ஆவித்தல்
மொழிதளர் வுறல்நகை முதலிய சத்துவம்.' – *மா.* 201

'இலேசமே கருத்தொளித் திடஅதைக் காட்டும்
சத்துவம் பிறிதின் சாற்றி மறைத்தலே.' – *தொ. வி.* 358

'தான்கரு தியவெளிப் படுக்கும் சத்துவம்
வேறொன் றாலே விளைந்தன வாக
மறைத்துக் கூறுவது இலேசம் ஆகும்.' – *மு. வீ. பொ.* 86

'ஒன்றனைப் பழித்தும் புகழ்ந்தும் உரைப்பது
மற்றதன் பாற்படும் வழுத்துங் காலே.' – *மு. வீ. பொ.* 87

'கோதைக் குணம்என வும்குண மானதைக் கோதுஎனவும்
ஓதப் பெறுவது இலேசம்.' – *குவ. அ.* 72

'குணம்குறை மாறிக் கூறுவது இலேசம்.' – *ச.* 98

'ஒருகா ரணத்தால் உதித்த சத்துவ
குணத்தைப் பிறிதுஓர் காரணம் கூறி
மறைத்து மொழிதல் வஞ்ச நவிற்சி.' – *ச.* 112

'மற்றொரு ஏது அதனை உரைத்துண் மையை மறைத்தற்கு
உற்றிடு போது வஞ்ச நவிற்சி.' – *குவ. அ.* 86]

வரலாறு :

'கல்உயர்தோள் கிள்ளி பரிதொழுது, கண்பனிசோர்
மெல்லியலார், தோழியர்முன் வேறுஒன்று — சொல்லுவரால்,
பொங்கும் படைபரப்ப, மீதுஎழுந்த பூந்துகள்சேர்ந்து,
எம்கண் கலுழ்ந்தனவால் என்று'

எனவும்,

[மலைபோன்ற உயர்ந்த தோள்களை உடைய சோழ மன்னனை அவன் இவர்ந்து வந்த குதிரையோடு தொழுது அவனிடத்துக் கொண்ட வேட்கை நிறைவேறாமையாலே கண்களில் நீர் ததும்ப நின்ற மகளிர், அரசனுடைய பலவாகிய படைகள் செல்லுகையினாலே மேலே புறப்பட்ட தூசிபட்டுத் தம் கண்கள் கலங்கியவாகத் தோழியரிடம் குறிப்பிட்டனர் — என்ற இப்பாடலில்,

தம் உள்ளத்து வேட்கையைக் கண்ணீர் அரும்பல் வெளிப்படுத்திற்றாக, அதன் உண்மைக் காரணத்தை மறைத்துத் தூசிபட்டமையால் கண்கள் கலங்கி நீர் உகுத்தன எனப் பிறிதொரு காரணம் காட்டி உரையாடியவாறு காண்க.]

'மதுப்பொழிதார் மன்னவனை மாங்கரிமேல் கண்ட
விதிர்ப்பும் மயிர்அரும்பு மெய்யும் — புதைத்தாள்,
வளவா ரணநெடுங்கை நுண்துவலை வாய்ந்த
இளவாடை சேர்ந்தது என'

எனவும் வரும். பிறவும் வந்துழிக் காண்க. (42)

[தேன் துளிக்கும் மாலையை அணிந்த மன்னவன் யானைமேல் இவர்ந்து வரக் கண்டமையாலே ஏற்பட்ட காம நடுக்கமும் உடம்பில் மயிர்க்கூச்செறிவும் பற்றி, வளமான யானையின் துதிக்கையில் இருந்து புறப்பட்ட திவலையோடு வாடைக்காற்று சேர்ந்து வீசியதால் நடுக்கமும் மயிர்க் கூச்செறிவும் ஏற்பட்டன வாகக் கூறித் தலைவி மறைத்தாள் – என்ற இப்பாடலில்,

அரசனிடத்துத் தனக்கு ஏற்பட்ட காமத்தால் நிகழ்ந்த மெய்ப்பாட்டிற்கு, யானையின் துதிக்கையிலிருந்து வெளிப்பட்ட நீர்த்திவலையோடு கூடிய வாடைக் காற்றின் தாக்குதலைக் காரணமாகக் காட்டி மறைத்த திறம் காண்க.] 42

பிறர்மதம்

662. புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அவையும் அன்ன என்று அறைநரும் உளரே.

இது பிறர் மதம் பற்றி மேலதற்கு ஓர் ஒழிபு கூறுகின்றது.

இ-ள் : ஒன்றனைப் புகழ்ந்தாற்போலப் பழித்து உரைத்தலும், பழித்தாற்போலப் புகழ்ந்து உரைத்தலும் என்னும் இவ்விரண்டும் அவ்விலேசத்தின் பாற்படும் என்று கூறுவாரும் உளர் என்றவாறு.

[இக்கருத்து மாறன் அலங்காரத்தில் குறிப்பிடப்படவில்லை. இச்செய்திகள் நிந்தாத்துதி அலங்காரம், புகழ்வதின் இகழ்தல் அலங்காரம் என இருவேறு அணிகளாக அந்நூலுள் சுட்டப் பட்டுள்ளன.

'இகழ்வதுபோன்ற இயற்கையின் வண்புகழ்
நிகழ்தர உரைப்பது நிந்தாத் துதியே.' - மா. 228

மதித்துஒரு பொருளை வழாஅதுஉள் ளூறுத்தித்
துதிப்பது போன்றுஇகழ் வதுதுதி நிந்தை.' - மா. 229

என்பன காண்க.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 66 ; மு. வீ. பொ. 87

'இகழு மொழியிற் புகழ்தலும் ஏத்திய இன்னுரையிற்
புகழு நடையிற் பழித்தலும் போற்றுவர் பொற்றொடியே.'
- வீ. 169]

புகழ்வதுபோலப் பழித்தல் வருமாறு :

'மேய கலவி விளைபொழுதும், நம்மெல்லென்
சாயல் தளராமல் தாங்குமால்; — சேயிழையாய்!

‘போர்வேட்ட மேன்மைப் புகழாளன், யாம் விரும்பும்
தார்வேட்ட தோள்விடலை தான்’

என வரும்.

[*தோழி! பண்டு போர்த்தொழிலை வேட்ட மேம்பட்ட புகழை உடையவன், யாம் முற்காலத்து விரும்பி மாலையிட்ட தோள்களை உடைய நம் தலைவன், நாம் விரும்பிய கலவியினை நிகழ்த்தும் பொழுதும் நம் மென்மை குன்றாதபடி நடந்து கொள்கிறான்’ — என்ற தலைவிகூற்றாக அமைந்த இப்பாடலில்,*

தலைவி தன்வசம் இழக்கும் வகையில் கலவி நிகழ்த்தாத மென்மை ஆடவருக்குக் குறைவு தருவதாகலின், இது புகழ்வது போலப் பழிப்பதாயிற்று. போர்க்களத்தில் வாகை சூடியவன் சேக்கைப் போரில் திறலை வெளிப்படுத்துபவன் அல்லனாயினான் என்பது. இதன்கண் தலைவன் சாயலைத் தளராமல் தாங்குகிறான் என்று புகழ்வதுபோல அவன் சிறந்த சுவைஞன் அல்லன் என்பதனைப் புலப்படுத்தியது காண்க.]

பழித்ததுபோலப் புகழ்தல் வருமாறு :

‘ஆடல் மயில்இயலி! அன்பன் அணிஆகம்
கூடுங்கால், மெல்லென் குறிப்புஅறியான், — ஊடல்
இளிவந்த செய்கை இரவாளன், யார்க்கும்
விளிவந்த வேட்கை இலன்’

என வரும். **(43)**

‘ஆண்மயில் போன்ற சாயலை உடையாய்! தலைவன் என் அழகிய மார்பகத்தைக் கூடுங்கால், மெல்லென்ற நம்நலத்தைப் பாராட்டி நுகர்தலை அறியானாய், யான் ஊடி இருக்கும் காலத்துத் தன் தலைமைக்குத் தகாதன சொல்லி இரக்கும் இரவாளனாய், யாரையும் அவர் குறிப்பறிந்து விளித்த நுகரத்தக்க வேட்கை யற்றவனாய், தன்வேட்கையைத் தணித்தலிலேயே குறிக்கோளுடையனாய் உள்ளான்’ — என்ற தலைவி கூற்றாக அமைந்த இப்பாடலில்,

தலைவன் காமநுகர்ச்சியில் தன்வசம் இழந்த சுவைஞன் என்ற கருத்து பெறப்படவைத்தவாறு காண்க.

இது பழிப்பது போலத் தலைவனுடைய காமநுகர்ச்சியின் மிகுதியைப் புலப்படுத்தியதாம்.

இப்பாடல் இரண்டும் பெருந்திணைத்தலைவியின் கூற்றாகக் கொள்க.] *43*

நிரல்நிறையணி

663. நிரல்நிறை முன்னர் நிகழ்த்தியாங்கு இயலும்.

இது நிறுத்த முறையானே நிரல்நிறை அலங்காரம் ஆமாறு மாட்டெறிந்து உணர்த்துகின்றது.

இ-ள்: நிரல்நிறையது இலக்கணம் ஆண்டுச் சொல்லதிகாரத்துக் கூறினாற்போல நடக்கும் ஈண்டும் என்றவாறு.

ஆண்டுச் சொல்லதிகாரத்துக் கூறியவாறு:

'பெயரும் வினையும்ஆம் சொல்லையும் பொருளையும்
வேறு நிரல்நிறீஇ முறையினும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரல்நிறை நெறியே' – இ. வி. 364

என்பதாம்.

[*நிரல்நிறை — வரிசையாக நிறுத்துதல்.*

ஒத்த நூற்பாக்கள்

'நிரல்நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே.' – *தண்டி.* 67

'நிரல்நிறை யாவது சொல்லும் பொருளும் நிரனிறுத்தல்.'
– *வீ.* 170

'குறித்திடும் பெயர்வினை கூறிய செய்யுளின்
நெறிப்பட நிரல்உறல் நிரல்நிறை ஆகும்.' – *மா.* 162

'அவற்றுள்,
பெயரொடு பெயர்நிர லுதல்பெயர் நிரல்நிறை.' - மா. 163

'பெயர்எதிர் நிரலுதல் பெயர்எதிர் நிரல்நிறை.' - 164

'உயர்வுறு பெயரொடு வினைஉற நிரல்வது
மயர்வறு பெயர்வினை நிரல்நிறை எனவரும்.' - 165

'ஓதிய பெயரினோடு உயர்வினை எதிரின்
நீதிகொள் பெயர்வினை எதிர்நிரல் நிறையாம்.' - 166

'வினையொடு வினைநிரல் வதுவினை நிரல்நிறை.' - 167

'வினைஎதிர் நிரல்வது வினைஎதிர் நிரல்நிறை.' - 168

'வினைபெயர் நிரல்வது வினைபெயர் நிரல்நிறை.' - 169

'வினையொடு பெயர்எதிர் கொளவரு நிரல்நிறை
வினையொடு பெயர்எதிர் விதிநிரல் நிறையே.' - 170

'இருபெயர்க் கமைநா லெழுத்தைமுறை மாறிப்
பொழிப்புறப் பிரித்துப் புணர்த்தும் நிறைவகை
எழுத்து நிரல்நிறை என்மனர் புலவர்.' - 171

'முறைமுறை நிரைவது முறைநிரல் நிறையே.' - 172

'இணைபெற இடைநின்று இருவயின் பெயரொடும்
புணர்தகை நிரல்நிறை புகலிலொன் றுளதே.' - 173

'உரைபயில் முதல்ஈற்று உறும்பெய ரொடுபெயர்
நிரைநிறை எதிர்பெற நிகழ்ந்தீ ரெடுமுதல்
புரைதீர் தாவில் பூட்டுறு வதும்உள.' - 174

'பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்
நிரல்நிறை யாக நிறுத்திமற்று ஒருபொருள்
நேரும் பொருள்கோள் நிரல்நிறை ஆகும்.'
- மு. வீ. செய். அ. 25

'நிறுத்த முறையே நெறிப்படப் பொருளைக்
குறித்தல் நிரல்நிறை எனக்கூ றுவரே.' - ச. 76

'வரிசையில் கூறும் பொருள்கட்குச் சம்பந்த பாவமுறை
தெரிவுறச் சொல்லல் நிரல்நிறை.' - குவ. 50]

வரலாறு :

'காரிகையார் மென்மொழியால், நோக்கால், கதிர்முலையால்,
வார்புருவத்தால், இடையால், வாய்த்தளிரால், - நேர்தொலைந்த;
கொல்லி, வடிநெடுவேல், கோங்கரும்பு, வாங்குசிலை,
வல்லி, கவிர்மென் மலர்'

எனவும்,

[மகளிருடைய மென்மொழியால் கொல்லிப்பண் ஒப்பழிந்தது; நோக்கால் வடிக்கப்பட்ட நெடியவேல் ஒப்பழிந்தது ; ஒளிவீசும் முலையால் கோங்கம் மொட்டு ஒப்பு அழிந்தது ; நேரிய புருவத்தால் வளைந்தவில் ஒப்பு அழிந்தது ; இடையால் கொடி ஒப்பு அழிந்தது ; வாயாகிய தளிரால் முள்முருங்கைப்பூ ஒப்பழிந்தது – என மொழி, நோக்கு, முலை, புருவம், இடை, வாய் என்பனவற்றின் ஒப்பான பொருள்களாகிய கொல்லி, வேல், கோங்கரும்பு, சிலை, வல்லி, கவிர்மலர் என்பன முறையே இப்பாடற்கண் நிறுத்தப் பட்டமை காண்க.]

'மயில்களிக்கும், வண்டுஆர்க்கும், வார்தளவம் பூக்கும்,
குயில்ஒளிக்கும், கோபம்பரக்கும், — வெயில்ஒளிக்கும்
கானம் குழைகொள்ளும், காந்தள் துடுப்புஎடுக்கும்,
வானம் பொழியும் மழை'

எனவும் வரும். இத்திறத்தன எல்லாம் சொல் ஓத்தினுள் கண்டு கொள்க. 44

[மயில்கள் களிக்கும், வண்டுகள் ஒலிக்கும், முல்லை பூக்கும், குயில்கள் கூடுகளில் போய் மறையும், இந்திர கோபப்பூச்சிகள் பரவும், கதிரவன் ஒளி மறையும், காடுகளில் மரங்கள் தளிர்க்கும், காந்தள் மொட்டுவிடும், வானம் மழை பொழியும் – என்ற இப்பாடலில், முடிக்கப்படும் சொல்லும் முடிக்கும் சொல்லும் முறையே அமைந்துள்ள நிரல்நிறை காண்க.

இந்நிரல்நிறைஅணி மாறன் அலங்காரத்தில் விரித்துரைக்கப் பட்டுள்ளது.] 44

ஆர்வமொழியணி

664. ஆர்வமொழி மிகுப்பது ஆர்வ மொழியே.

இது நிறுத்தமுறையானே ஆர்வமொழி அலங்காரம் ஆமாறு கூறுகின்றது.

இ–ள் : உள்நிகழ்ந்த ஆர்வமொழியால், தோன்றிச் சொல்லுவது ஆர்வமொழி என்னும் அலங்காரம் என்றவாறு.

உள்நிகழ்தல் மேல்வரும் அலங்காரத்தால் பெறும்.

[*இது மகிழ்ச்சியணி எனவும் கூறப்பெறும்*]

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 68

'விரவும் மகிழ்ச்சி உளநிகழ் ஆர்வம் விளம்புமொழி.'
– *வீ.* 170

'விழுமிதின் ஆர்வ மொழிமிகுத் துரைப்பது
பழிதீர் ஆர்வ மொழியெனப் பகர்வர்.' – *மா.* 211]

வரலாறு:

'சொல்ல மொழிதளர்ந்து சோரும் ; துணைமலர்த்தோள்
புல்ல இருதோள் புடைபெயரா ; — மெல்ல
நினைவோம் எனின்நெஞ்சு இடம்பெறாது ; எம்பால்
வனைதாராய் ! வந்ததற்கு மாறு'

எனவரும். மாறு - ஒப்பு. 45

[*அணி செய்யும் மாலையை அணிந்தவனே! நீ எம் இருப்பிடம் நோக்கிவந்த உன்னுடைய மேதகவுக்கு யாம் என்ன கைம்மாறு செய்தல் இயலும்? எம் நன்றியறிதலைச் சொற்களால் வெளியிடுவோம் என்றால் நின்னிடத்து யாம் கொண்ட அன்பாலும்*

மதிப்பாலும் பேசத் தொடங்கில் சொற்கள் குழறுகின்றன. நின்னைத் தழுவிக்கொள்வோம் என்றால் நின்னைக் கண்ட மகிழ்ச்சியால் தம்வசம் இழந்து தோள்கள் நின்னைத் தழுவாமல் செயலற்று இருக்கின்றன. உன் பெருமையை அமைதியாக நினைத்து மகிழ்வோம் என்றால் அப்பெருமை முழுதும் நினைக்க மனம் போதிய இடப்பரப்பு உடையதன்று – என்ற இப்பாடலில், மனத்திலுள்ள ஆர்வம் வெளிப்படுத்தப்பட்டவாறு காண்க.] 45

சுவையணி - இலக்கணமும் திறனும்

665. உள்நிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவை; அது
வீரம்[1] அச்சம்[2] இழிப்பொடு[3] வியப்பே[4]
காமம்[5] அவலம்[6] உருத்திரம்[7] நகை[8]என
இயம்பிப் போந்த இருநான்கு வகைத்தே.

இது நிருத்தமுறையானே சுவை என்னும் அலங்காரத்தினது இயல்பும் அதன் திறனும் கூறுகின்றது.

இ-ள்: உள் நிகழ் தன்மை புறத்துப் புலனாய் விளங்க எண்வகைப்பட்ட மெய்ப்பாட்டானும் இயல்வது சுவை என்னும் அலங்காரமாம். அது வீரம் முதலியவாகக் கூறிய எண்வகைத்தாம் என்றவாறு:

'மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே' என்பது 'பொன்னின் இயன்ற குடம்' என்றாற்போலக் கொள்க; சுவை வேறு இன்மையின்.

[பொன்னும் குடமும் அதுவாகுகிளவியான் ஒன்றுமாறு போல மெய்ப்பாடும் சுவையும் ஒன்றாகியனவே என்பது. இம் மெய்ப்பாடு அகத்திணையியலில்,

'உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடு; அதுதான்
நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டாம்.' – *இ. வி.* 578

என்ற நூற்பாப் பகுதியானும் போதரும்.

சுவையணி இரதவணி எனவும் பெயர் பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் (சிறிது திரிபுடன்) – தண்டி. 69, 70

'உரிய சுவைதான் இரதம்.' – *வீ.* 170

'பொறியுணர் வொடும்ஒரு பொருளினை எதிர்ந்த
நெறியுடை மனத்துள் நிகழ்தரும் பான்மை
அயலவர் உறப்புறத் தாய்பொருள் எட்டின்
இயல்வது சுவைஎன்று இயம்பினர் புலவர்.' – *மா.* 179

'அவைதாம்,
பெருமிதம் நடுக்கம் அழுகை இளிவரல்
உருத்திரம் நகைவியப்பு உவகைஎன் றுரும்.' – „ 198

'சுவைஅணி என்ப சுடும்சினம் காமம்
வியப்புஅவலம் இழிபுஅச்சம் வீரம் நகைஎன
மேன்மைப் பாட்டின் இயைவன கூறி
உள்மெய்ப் பாட்டை உணர்த்தித் தோற்றலே.'
– *தொ. வி.* 354

'புந்தியின் நிகழ்திறன் புறத்துப் புலனாய்
விளங்க எண்வகை மெய்ப்பாட் டானும்
ஒழுகல் சுவைஎன உரைக்கப் படுமே.' – *மு. வீ. பொ.* 88

'அவைதாம்,
அச்சமும் வீரமும் அவலமும் காமமும்
இழிபும் வியப்பும் எழில்படு நகையும்
உருத்திர மும்மென உரைக்கப் படுமே.' „ 89

'வடிவங்கண் ணேக்கு வெறுப்புமுன் ஞனவை யாலுமுண்டா
யிடும்விருப் பேமுத லாஞ்சுவை அங்க மென்னவரப்
படுமது வேசுவை யென்பார்.' - குவ. அ. 101]

வீரச்சுவை வருமாறு.

'சேர்ந்த புறவின் நிறை, தன் திருமேனி
ஈர்ந்திட்டு, உயர்துலைதான் ஏறினன்; — நேர்ந்த
கொடைவீர மோ, மெய் நிறைகுறையா வன்கண்
படைவீர மோ,சென்னி பண்பு?'

என வரும்.

[*தன்னை அடைக்கலமாக வந்து அடைந்த புறுவினைக் காப்பதற்காக அதன் நிறை அளவிற்குத் தன் உடல் உறுப்புக்களை அறுத்துக் கொடுத்ததோடு தானும் துலாத்தட்டில் ஏறிய சிபி மன்னனுடைய பண்பு கொடை வீரமோ? தன் நிறை குறையாமைக்குக் காரணமான தறுகண்மையை உடைய படை வீரமோ? – என்ற இப்பாடலில், சிபி மன்னன் தன் உடலைத் தானே அரிந்து கொடுத்தற்கேற்ற தறுகண்மையும், புறுவுக்காகத் தன்னையே கொடுக்கக்கூடிய கொடையும் உடையனய்,*

'கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே' – தொ. மெ. 9

என்று மெய்ப்பாட்டியல் கூறும் வீரத்து நிலைக்களம் நான்கனுள் தறுகண், கொடை என்ற நிலைக்களன் காரணமாகத் தன் வீரத்தை வெளியிட்டவாறு.]

அச்சச் சுவை வருமாறு :

'கைஞ்ஞெரித்து, வெய்துயிர்த்து, கால்தளர்ந்து, மெய்பனிப்ப
மையரிக்கண் நீர்ததும்ப, வாய்புலர்ந்தாள் — தையல்
சினவேல் விடலையால், கைஇழந்த செங்கண்
புனவேழம் மேல்வந்த போது'

என வரும்.

[சினம் மிக்கவனும் வேலை ஏந்தியவனும் ஆகிய தலைவனால் துதிக்கை துணிக்கப்பட்ட யானை தன்னை நோக்கி எதிர்த்து வந்த பொழுது, தலைவி, கைகளை நெரித்துக்கொண்டு பெருமூச்சுவிட்டு கால்கள் தளர்ந்து, உடல் நடுங்க, கரிய அரிபரந்த கண்கள் நீரைத் ததும்ப, வாய் பசையற்று உலர்ந்துவிட்டாள் – என்ற இப்பாடலில், கை நெரித்தல் முதலியன அச்சச் சுவையை விளக்கியவாறு.

‘அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே’ – தொ. மெ. 8

என்பதனுள் இப்பாடலில் விலங்கு நிலைக்களனாக அச்சம் பிறந்தவாறு கூறப்பட்டுள்ளது.]

இழிப்புச்சுவை வருமாறு :

‘உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்
குடரும் கொழுங்குருதி ஈர்ப்ப, — மிடைபேய்
பெருநடம்செய் பெற்றித்தே, கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைக் கொன்ற களம்’

என வரும்.

[போரில் வெற்றி பெறும் கிள்ளி கருநட நாட்டினரை வெகுண்டு வென்ற போர்க்களம், உடைந்த தலைகள் மூளை புலால் துண்டங்கள் எலும்பு குடர் என்பனவற்றைக் குருதி வெள்ளம் தன்னகத்தே இழுத்துவர, அங்கு வந்த பேய்கள் பெரிதாக நாட்டியமாடும் இயல்பிற்று – என்ற இப்பாடலில், குருதியாற்றில் உடைந்த தலைகள் முதலியன இழுக்கப்பட்டு வர இடையே பேய் கூத்தாடும் என்ற இழிப்புச்சுவை புலப்படுத்தப்பட்டவாறு.

‘மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே’ – தொ. மெ. 6

என்ற நிலைக்களன்களுள் பகைவருடைய மென்மை காரணமாக இளிவரல் பிறந்தவாறு.]

வியப்புச்சுவை வருமாறு :

'முத்துஅரும்பிச் செம்பொன் முறிததைந்து, பைந்துகிரின்
தொத்துஅலர்ந்து, பல்கலனும் சூழ்ந்துஒளிரும்-கொத்தினதாம்
பொன்ஏர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்நேர் பொழியும் தரு'

என வரும்.

[*பொன்னையும் அழகிய மணிகளையும் கொழிக்கும் பொலிவுடைய காவிரி பாயும் நாட்டையுடைய சோழ மன்னனுக்கு நிகராகக் கொடுக்கும் கற்பக மரம், முத்துக்களை அரும்பிப் பொன் மயமான தளிர்கள் செறிந்து பவழத்தின் கொத்து மலர்ந்து பல அணிகலன்களும் சூழ்ந்து ஒளி வீசும் கிளைகளையுடையது – என்ற இப்பாடலில், முத்து, பொன், பவளம் முதலியவற்றை மரம் தன் உறுப்புக்களாகக் கொண்டிருக்கும் வியப்புப் புலப்படுத்தப்பட்டவாறு.*

'புதுமை பெருமை சிறுமை ஆக்கமொன
மதிமை சாலா மருட்கை நான்கே' – *தொ. மெ.* 7

என்ற வியப்பின் நிலைக்களன்கள் நான்கனுள் இதன்கண் புதுமை பற்றி மருட்கை பிறந்தவாறு.]

காமச்சுவை வருமாறு :

'திங்கள் நுதல்வியர்க்கும்; வாய்துடிக்கும், கண்சிவக்கும்,
அங்கைத் தளிர்நடுங்கும்; சொல்அசையும், — கொங்கை
பொருகாலும் ஊடிப் புடைபெயருங் காலும்,
இருகாலும் ஒக்கும் இவட்கு'

என வரும்.

[*தலைவியோடு கூடும்போதும், அவள் ஊடலால் பிரிந்திருக்கும்போதும் பிறை போன்ற நெற்றி வியர்த்தலானும் வாய் துடித்தலானும் கண்கள் சிவத்தலானும் கைகளாகிய தளிர்கள் நடுங்குதலானும் சொற்கள் தடுமாறுதலானும் அவளுக்கு*

இரு நிலையும் ஒரே தன்மையவாய் உள்ளன – என்ற *இப்பாடலில், நுதல் வியர்த்தல் முதலிய காமச் சுவைக்குரிய மெய்ப்பாடுகள் சுட்டப்பட்டமை காண்க.*

'செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே' – தொ. மெ. 11

என்ற *காமத்திற்குரிய நிலைக்களன்கள் நான்கனுள்,* புணர்வு *நிலைக்களனாகக் காமம் பிறந்தவாறு காண்க.*]

அவலச்சுவை வருமாறு:

"கழல்சேர்ந்த தாள்விடலை, காதலிமெய் தீண்டும்
அழல்சேர்ந்து தன்நெஞ்சு அயர்ந்தான், — 'குழல்சேர்ந்த
தாமம் தரியாது அசையும் தளிர்மேனி
ஈமம் தரிக்குமோ'? என்று"

என வரும்.

[*காலில் வீரக்கழல் அணிந்த காளைப்பருவத்தானாகிய தலைவன் இறந்த தன் காதலியின் உடலைத் தீயிலிட்டு அவள் உடலைத் தீத்தீண்டிய அளவில் 'தலையில் வைத்த மாலையின் பாரம் தாங்காமல் அசையும் தளிர்போன்ற இவள் உடல் ஈமப்புறங் காட்டுத் தீயைத் தாங்குமோ'* என்று *தன் மனம் தளர்ந்தான்* — என்ற *இப்பாடலில், தலைவியின் இறத்தல் காரணமாகத் தலைவற்கு அவலம் பிறந்தவாறு.*

'இளிவே இழவே அசைவே வறுமைஎன
விளிவில் கொள்கை அழுகை நான்கே' – தொ. மெ. 5

என்ற *அவலத்தின் நிலைக்களன்கள் நான்கனுள் இழவு பற்றி அவலம் பிறந்தவாறு காண்க.*]

உருத்திரச்சுவை வருமாறு:

'கைபிசையா, வாய்மடியா, கண்சிவவா, வெய்துஉயிரா,
மெய்பனியா, வேரா, வெகுண்டெழுந்தான், — வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான், மகளைத் தருகென்று
போர்வேந்தன் தூதுஇசைத்த போது'

என வரும்.

[மறவர்குல மகளைத் தனக்கு மணம்செய்து கொடுக்குமாறு போரிட்ட பகைவேந்தன் தூது அனுப்பியபோது, போருக்கு உரிய அடையாள மாலையை அணிந்த தோள்களை உடைய மறவன் கைகளைப் பிசைந்து உதடுகளை மடித்துக் கண்சிவந்து பெருமூச்செறிந்து உடல் வெப்பத்தால்நடுங்க வியர்த்து வெகுண்டு போருக்குப் புறப்பட்டான் — என்ற இப்பாடலில், கைபிசைதல் முதலிய வெகுளிக் குறிகள் புலப்படுத்தப்பட்டவாறு காண்க.

'உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே' –தொ. மெ. 10

என்ற வெகுளியின் நிலைக்களன்கள் நான்கனுள் ஈண்டுக் குடிகோள் காரணமாக வெகுளி பிறந்தவாறு.]

நகைச்சுவை வருமாறு :

'நாண்போலும் தன்மனைக்குத் தான்சேறல்; இங்நின்ற
பாண்போலும் வெவ்வழலில் பாய்வதூஉம்; — காண், தோழி!
கைத்தலம் கண்ணாக் களவுகாண் பான்ஒருவன்,
பொய்த்தலை,முன் நீட்டியது போன்று'

என வரும். இதன்திறத்து வருவன பிறவற்றிற்கு உதாரணம் அகத்திணையியலுள் காண்க. 46

தலைவன் பரத்தையிற் பிரிந்துசென்று பின் தலைவியின் ஊடலைத் தீர்ப்பதற்குப் பாணனை வாயிலாக விடுத்தானைப் பாணனுக்கு வாயில் மறுத்த தோழி கூற்று இது.

'தலைவியே! தன் வீட்டிற்குத் தானே நேரில் வருவது வெட்கப்படத்தக்க செயல் போலும்! தலைவன் புறத்தொழுக்கம் உடையனல்லன்' என்று உறுதி கூறி நெருப்பில் பாய்ந்து தன் உறுதிமொழியை மெய்ப்பிப்பவன் இப்பாணன் போலும்! தன் கைகளையே கண்களாகக்கொண்டு இருட்டில் தடவிப் பார்த்துப் பொருள்களைக் களவு செய்பவன், ஆங்குள்ளாரின் உறக்கம் பற்றி அறியப் பொய்த்தலையை நீட்டியது போன்றுள்ளது, தலைவனால் முன்னோடியாக அனுப்பப்பட்டுள்ள பாணன் வரவு' — என்ற இப்பாடலில், தலைவனையும் பாணனையும் எள்ளிநகையாடியவாறு

'எள்ளல் இளமை பேதைமை மடனென
உள்ளப் பட்ட நகைநான்கு என்ப' – தொ. மெ. 10

என்பதனுள் இதன்கண் நகை எள்ளல் நிலைக்களனாகப் பிறந்தவாறு. இந்நூல் 578ஆம் நூற்பாவுரையுள் சுவைகளின் விரிவான விளக்கங்களைக் காண்க.] 46

தன்மேம்பாட்டுரையணி

366. தான்தற் புகழ்வது தன்மேம் பாட்டுரை.

இது நிறுத்தமுறையானே தன்மேம்பாட்டுரை அலங்காரம் கூறுகின்றது.

இ–ள்: ஒருவன் தன்னைத் தானே மேம்பாடு தோன்ற உரைப்பது தன்மேம்பாட்டுரை என்னும் அலங்காரமாம் என்றவாறு.

இஃது அகத்திணைப் பொருள்பற்றி வருங்கால் தலைமகன் தன்னைத்தானே புகழ்தல் எனவும், புறப்பொருள் பற்றி வருங்கால் நெடுமொழிகூறல் எனவும் பெயர் பெற்று வரும் எனக்கொள்க.

[இவ்வணி ஊக்கம் எனவும் நெடுமொழி எனவும் கூறப் பெறும். தலைவன் தோழியிடம் தன் பெருமையைக் கூறுதல் அகத்திணைக்கண் காணப்படுவது. வீரன் எதிர்த்த பகைவரிடமும், போருக்குப் புறப்படும்போதும் தன் பெருமையைக் கூறுவது புறத்திணைக்கண்ணது.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் தண்டி – 71

'மேம்பாட்டுரை ஊக்கம் என்ப.' – வீ. 170

'இகல்புரிந்து ஒருவன் இருநிலத் தும்தனை
நிகரிலை எனமேம் படுத்துதல் நெடுமொழி.' – மா. 212

'தன்மேம் பாட்டுரை தான்தற் புகழ்தலே.' – தொ. வி. 349
'தன்னைப் புகழ்வது தன்மேம் பாட்டுரை.' – மு. வீ. பொ. 90]

வரலாறு :

'எஞ்சினர் இல்லை எனக்குஎதிரா ; இன்உயிர்கொண்டு
அஞ்சினர் அஞ்சாது போய்அகல்க ; — வெஞ்சமத்துப்
பேரா தவர்ஆகத்து அன்றிப் பிறர்முதுகில்
சாரா;என் கையில் சரம்'

என வரும். (47)

[வீரன் போர்க்களத்தில் விளம்பிய வீரவுரை இது. 'எனக்கு எதிராகப் போரிடவந்து உயிர் பிழைத்து மீண்டவர் ஒருவரும் இல்லை. என்னை நேராக எதிர்க்க அஞ்சுபவர் தம் அரிய உயிரைப் பாதுகாத்துக்கொண்டு புறமுதுகிட்டுச் செல்க. கொடிய போரிலே இடம் பெயராது எதிர்ப்பவர் மார்பில் அன்றிப் புறங்காட்டி ஓடுபவர் முதுகில் எம் அம்புகள் பாயமாட்டா' – என்று வீரன் தன் பெருமையைப் போர் மயக்கத்தான் தானே சொற்றவாறு.

இது தற்புகழ்ச்சிக்கு அமைதி கூறும் இடமாகும்.] 47

பரியாயவணி

667. கருதியது கிளவாது அப்பொருள் தோன்றப்
பிறிதுஒன்று கிளப்பது பரியா யம்மே.

இது நிறுத்தமுறையானே பரியாய அலங்காரம் ஆமாறு கூறுகின்றது.

இ–ள் : தான் கருதியதனைக் கிளவாது அப் பொருள் தோன்றப் பிறிது ஒன்றனைச் சொல்லுவது பரியாயம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இவ்வணி பிறிதின்நவிற்சி யணி எனவும் பெயர் பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 72

'பரியாயம் ஓர்பொருள் தோன்றப் பிறிது பகர்தலென்னே.'
– *வீ.* 170

'தொன்மையின் ஒருபொருள் தொடர்பவம் பலவயின்
பன்முறை பயின்றது எனல்பரி யாயம்.' – *மா.* 198

'கருதியது கிளவாது அப்பொருள் தோன்றப்
பிறிதொன்று கிளப்பதும் பரியாயம் ஆகும்.' – *மா.* 199

'தான்கரு தியபொருள் தனைக்கூ றுதப்
பொருள்புலப் படப்பிறிது ஒன்றனைப் புகல்வது
பரியா யப்பெயர் பகரப் படுமே.' – *மு. வீ. பொ.* 91

'நினைத்த பொருளை நேரிதின் புகலாது
மற்றொரு திறத்தான் வழங்குதல் வஞ்சனை
தன்னுன் இட்ட சாதனை என்றிரு
பெற்றியது என்ப பிறிதின் நவிற்சி.' – *ச.* 54

'கருது பொருளுக்கு உரித்தாம் விதத்தின்றிக் காட்டல்மற்றை
ஒருவிதத் தெண்ணில் பிறிதின் நவிற்சி.' – குவ. அ. 29

வரலாறு :

'**மின்நிகர்ஆம் மாதே! விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்நிகர்ஆம் மாதவிக்கண், நின்றுஅருள்நீ; — தன்நிகராம்
செந்தீ வரமலரும் செங்காந்தள் போதுடனே
இந்தீ வரம்கொணர்வல் யான்**'

என வரும். (48)

[மின்னலை ஒத்த பெண்ணே! நறுமணம் கமழும் சந்தன மரத்தில் படர்ந்து உன்னை நிகர்த்து அழகோடு காணப்படும் குருக்கத்தியின் நிழலிலே நீ தங்கியிரு. சிவந்த தீப்போல மலர்ந்து தமக்குத் தாமே நிகராகும் செங்காந்தள் பூக்களையும்

குவளை மலர்களையும் யான் பறித்து வருகிறேன் – என்று தோழி தலைவியைக் குறியிடத்து உய்த்து நீங்கும் செய்தியைக் கூறும் இப்பாடலில்,

சந்தன மரத்தில் படரும் குருக்கத்தி போல, நீ தலைவனைத் தழுவுதற்கு உரிய வாய்ப்பினை நினக்கு நல்கி யான் பிரிந்து போய், நின் ஒப்பனைக்கு ஆம் மலர்களைப் பறித்து வருவேன் என்ற கருத்தைக் குறிப்பால் பெறப்பட வைத்த குறிப்பெச்சச் செய்தி இவ்வணியாமாறு காண்க.

பரியாயம் – நேரிடையாகக் கூருது சாமர்த்தியமாகக் கூறும் செய்தி.

'நாணவும் நடுங்கவும் நாடாள் தோழி
காணுங் காலைத் தலைமகள் தேளத்து' – இறை. அக. மேற்.

ஆதலின் தோழி குறிப்பால் செய்தி அறிவித்தவாறு. பரியாய அணிக்கு மாறன் அலங்காரம் பிறிதோரிலக்கணமும் கூறும்.] 48

சமாயிதவணி

668. முந்துதாம் முயல்வுறு தொழிற்பயன் பிறிதுஒன்று
தந்ததா முடிப்பது சமாயிதம் ஆகும்.

இது நிருத்தமுறையானே சமாயித அலங்காரம் ஆமாறு கூறுகின்றது.

இ–ள் : முன்பு தம்மால் முயலப்பட்ட தொழிலது பயன் அத்தொழிலான் அன்றிப் பிறிது ஒன்ருன் நிகழ்ந்ததாகச் சொல்லுவது சமாயிதம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இஃது எளிதின் முடிவணி எனவும் துணைப்பேறணி எனவும் பெயர் பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 73

'தாங்கும் சமாயிதம் தான்முயல் செய்தி தனதுபயன்
ஆங்கத னலன்றி மற்றென்றி னல்வந்த தாகச்சொல்லல்.'
– வீ. 171

'ஒருவினை முயன்றத னுலுறு பயனைமற்(று)
ஒருவினை தரஉறு வதுவே சமாயிதம்.' மா. 185

'ஒருவன் செய்தற்கு உள்ள காரியம்
மற்றொரு காரணம் வழிவரும் உதவியின்
முடிதல் எளிதின் முடிவணி ஆகும்.' – ச. 83

'மற்றொரு ஏது உதவியினுல் காரியம் வாயவெளிது
உற்று முடிதல் எளிதின்முடி பணி.' – குவ. அ. 57]

வரலாறு :

'அருவியங் குன்றம் அரக்கன் பெயர்ப்ப,
வெருவிய வெற்புஅரையன் பாவை, — பெருமான்
அணிஆகம் ஆரத் தழுவினுள், தான்முன்
தணியாத ஊடல் தணிந்து'

என வரும். பிறவும் அன்ன. (49)

[பார்வதிக்குக் கங்கை காரணமாகச் சிவபெருமானிடம் ஏற்பட்ட ஊடல் அவர் உணர்த்தவும் தணியாதிருந்தது. அந்நேரத்தில் அருவி பாயும் கயிலை மலையை இராவணன் பெயர்த்தெடுப்ப, அவ்வசைவினுல் அஞ்சிய பார்வதி தான் முன் தணியாத ஊடல் தணிந்து சிவபெருமானுடைய அழகிய மார்பினை ஆரத் தழுவினுள் — என்ற இப்பாடலில், அரக்கனுடைய செயல் பார்வதியின் ஊடலைத் தணிக்கச் சிவபெருமானுக்கு உதவிய செய்தி கூறப்பட்டவாறு.

சமாஹிதம் என்பது சமாயிதம் என்று திரித்து வழங்கப் பட்டவாறு.]

49

உதாத்தவணி

669. வியத்தகு செல்வமும் மேம்படும் உள்ளமும்
உயர்ச்சி புனைந்து உரைப்பது உதாத்தம் ஆகும்.

இது நிறுத்தமுறையானே உதாத்த அலங்காரம் ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : வியக்கத்தக்க செல்வத்தும் மேம்பட்ட உள்ளத்தும் உயர்ச்சியை மிகுத்துச் சொல்லுவது உதாத்தம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 74

'தீங்கில் உதாரதை செல்வமும் உள்ளமும் சீர்மைசெப்பல்.'
– வீ. 171

'உயர்வற உயர்ந்ததை வியந்துரைக் குமதே
மயர்வற உதாத்தம் எனவகுத் தனரே'. – மா. 238

'அதுவே,
பொருள்கொடை காந்தி பொற்புறு கற்பே
பெருவிறல் செல்வமென் பவற்றெடும் பெருகும்.' – „ 239

'அவற்றுள்,
பொருளினை மிகுத்துரைப் பதுபொருள் மிகுதி.' – „ 240

'கொடைநலன் விதந்துரைப் பதுகொடை மிகுதி.' – „ 241

'காந்தியை மிகுத்துரைப் பதுவே காந்தி.' – „ 242

'காமர்கற்பு உரைப்பது கற்பின் மிகுதி.' – „ 243

'நயம்புணர் ஞானவீ ரியம்அமர் வீரமென்(று)
இயம்பிய விறலும் ஓரிரண் டென்ப.' – „ 244

'கல்விச் செல்வமும் கவின்பொருள் உடைமைச்
செல்வமும் எனஇரு திறத்தவாம் செல்வம்.' – „ 245

'உதாத்தம் பொருளில் பதார்த்தம் மிகலே.' – *தொ. வி.* 355

'ஆக்கத் துயர்வும் அகத்தின துயர்வும்
மிகுதி யாக விளம்புவது உதாத்தம்' – *மு. வீ. பொ.* 92

'செல்வ மிகுதியை ஆதல் செப்புறும்
அருங்கதை புகழ்பொருட்கு அங்கமா யாதல்
கூறுவது வீறு கோள்அணி என்ப.' – *ச.* 121

'தங்கும் நிறைவின் வரலாற்றை மேற்சரி தம்புகழ்தற்கு
அங்கம் உறலைச் சொலல்வீறு கோளணி.' – *கு. வ. அ.* 95

[இஃது உதாரதை எனவும் வீறுகோளணி எனவும் கூறப்படும்.]

செல்வமிகுதி வருமாறு :

'கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்,
என்றும் வறியோர் இனம்கவர்ந்தும், — ஒன்றும்
அறிவுஅரிதாய் நிற்கும் அளவினதால் அம்ம
செறிகதிர்வேல் சென்னி திரு'

என வரும்.

[ஒளிவீசும் வேலை ஏந்திய சோழ மன்னனுடைய செல்வம், தன்னை எதிர்த்த வலிய வேந்தர்களுடைய செல்வம் பலவற்றையும் கவர்ந்து வருவதால் பெருகியும், நாடோறும் இரவலர் கூட்டம் பரிசு பெற்றுச் செல்வதால் சுருங்கியும், வரவும் செலவும் இன்ன இன்ன என்று அறியமுடியாத இயல்பினதாய் உள்ளது — என்ற இப்பாடலில், சோழனுடைய வீரச் செல்வமும், கொடைச் செல்வமும் மிகுத்துக் கூறப்பட்டவாறு காண்க.]

உள்ளமிகுதி வருமாறு :

'மண்அகன்று. தன்கிளையின் நீங்கி, வனம்புகுந்து,
பண்ணும் தவத்துஇயைந்த பார்த்தன்தான், — எண்இறந்த
மீதுஅண்டர் கோன்குலையும் வெய்யோர் குலம்தொலைத்தான்,
கோதண்ட மேதுணையாக் கொண்டு'

என வரும். பிறவும் அன்ன. (50)

[நாட்டையும் விடுத்து உறவினரையும் நீத்துக் காட்டை அடைந்து கடுமையான தவத்தில் ஈடுபட்ட பார்த்தனாகிய அருச்சுனன், தன் வில்லையே துணையாகக் கொண்டு தான் ஒருவனாகவே இருந்து, இந்திரனைத் துன்புறுத்திய நிவாத கவச காலகேயர்களின் கூட்டத்தை அழித்தான் — என்ற இப்பாடல், தவம்செய்து உடல் நலிந்த நிலையிலும் அருச்சுனனுடைய உள்ளக் கிளர்ச்சியால் ஏற்பட்ட வீரவெற்றி பற்றி விளம்புமாறு காண்க.

மாறனலங்காரம் உதாத்தத்தின் பல கூறுகளையும் விரித்துக் கூறும்.] 50

அவநுதியணி

670. சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை
மறுத்துப் பிறிதுஉரைப்பது அவநுதி ஆகும்.

இது நிறுத்தமுறையானே அவநுதி அலங்காரம் ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : சிறப்பினானும் பொருளினானும் குணத்தினானும் ஆகிய உண்மையை மறுத்து அதற்கு மறுதலையாகிய பிறிது ஒன்றாக உரைப்பது அவநுதி என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இஃது ஒழிப்பணி எனவும் பெயர் பெறும்.

அவநுதி – மறுத்துரைத்தல்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 75

'ஓங்கும் அவநுதி உண்மை தவிர உரைத்திடலே.' – *வீ.* 171

'குன்றலில் சிறப்பினும் பொருளினும் குணத்தினும்
ஒன்றிய உண்மையை மறுத்துமற் றொன்றாய்
ஒருபொருள் தோன்ற உரைப்பது அபநுதி.' – *மா.* 226

'இரட்டுற மொழிதலும் எய்தற் பாற்றே.' – மா. 227

'அவநுதி என்ப ஆய்மெய் மறுத்துமற்று
இவறிய ஒன்றனை ஏற்றி இயம்பலே;
உருவகம் கூட்டின் ஒண்சிறப் பாகும்.' – தொ. வி. 345

'கோதறு சிறப்பினும் குணத்தினும் பொருளினும்
உண்மையை விலக்கிவே றொன்றாய் அறைகுவது
அவநுதி என்மனார் அறிந்திசி னோரே.' – மு. வீ. பொ. 93

'அற்றொரு தன்மை ஆரோ பிப்பான்
மற்றொரு தன்மை மறுத்திடல் ஒழிப்பாம்
அதுவே அறுவகைத்து ஆகும் என்ப.' – ச. 19

'அவற்றுள்,
அல்பொருள் தன்மம் ஆரோ பித்தற்கு
உபமேய இயல்பை ஒழித்தல்வெற் றொழிப்பே.' – „ 20

'கழறிய அவ்வணி காரணத் தோடும்
கூடி வருதல் காரண ஒழிப்பே.' – „ 21

'புனைவுளி யிடத்துப் புகட்ட மற்றொரு
பொருளியல் மறுத்தல் வேறுபாட் டொழிப்பே.' – ச. 22

'ஒன்றைமற் றொன்றென்று உட்கொளு உம்மருளை
உண்மை கூறி ஒழிப்பது மயக்கே.' – „ 23

'வினவிய தம்சொல் மெய்ம்மையை மறுத்து
வேறொரு பொருளை விளைப்பதுஅச் சொற்கே
வல்லோர் ஒழிப்பென வகுத்தனர் புலவர்.' – „ 24

'பெயர்முதல் சொல்லால் பெரிதும் வருணியத்து
இயல்மறுத்து உரைத்தல் வஞ்சக ஒழிப்பே.' – „ 25

'மறுதரு மந்தனை ஆரோபித் தற்கிட மாம்பொருளில்
உறுதரு மத்தை மறைத்தால் அதுவெற் றொழிப்பு.'
– குவ. 15

'முற்கூ றியவொழிப்பு ஏதுவி னோடு முடிந்திடில்அ
திற்கா ரணவொழிப் பென்பேர் உறும்.' – „ 16

'ஒருபொரு ளின்தரு மந்தனை அவ்விடத் தேஒழித்து
மருவதை வேறுஒன்றில் ஆரோபம் செய்ய வரில்அதின்பேர்
அரும்வேறு பாட்டுஒழிப் பாம்.' – குவ. 17

'உள்ள துரைத்தொரு வர்க்குஉறு சங்கை ஒழித்திடுதல்
விள்ளும் மயக்க ஒழிப்பாம்.' - ,, 18

'மன்னும் ஒருவன்சந் தேகித்தது ஓர்உண்மையை மறைத்தல்
தன்னைவல் லோர்ஒழிப் பென்பார்.' – ,, 19

'கைதவ மேமுத லாகிய வாசகம் காட்டிமறைவு
எய்த உரைத்தல் அதுகை தவஒழிப்பு.' – ,, 20]

சிறப்பு அவநுதி வருமாறு :

'நறைகமழ்தார் வேட்டார் நலன்அணியும் நாணும்
நிறையும் நிலைதளரா நீர்மை, — அறநெறிசூழ்
செங்கோலன் அல்லன் கொடுங்கோலன் தெவ்அடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து'

என வரும்.

[பகைவர்களை அழிக்கும் போர்த்தொழிலையும், கொடிய கோபத்தையும் மத மயக்கத்தையும் உடைய யானைகளையும் உடைய அரசன், தன் நறுமணம் கமழும் மாலையை விரும்பிய பெண்களுடைய அழகு, அணிகலன், நாணம், நிறை இவை தளராதபடி அவர்களிடத்தில் கருணைகாட்டித் தண்ணளி செய்யும் செங்கோலன் ஆகாது கொடுங்கோலனாயுள்ளான் – என்ற இப்பாடலில்,

அரசனைக் கொடுங்கோலன் போறக் கூறி அவன் தன் உரிமை மகளிரையன்றி ஏனையர் பிறரை விரும்பாதவன் என்ற கருத்துப் பெறப்பட வைத்தமையானும், செங்கோலன் என்ற சிறப்பை மறுத்துக் கொடுங்கோலன் என வெளிப்படைச் சொல்லாற் கிளந்தமையானும் சிறப்பு அவநுதியணி அமைந்தவாறு காண்க.]

பொருள் அவநுதி வருமாறு :

'நிலனும், விசும்பாம், நிமிர்கால்நீர், தீயாம்,
அலர்கதிராம், வான்மதியாம், அன்றி — மலர்கொன்றை
ஒண்நறுந் தாரான் ஒருவன், உயிர்க்குஉயிராம்,
எண்இறந்த எப்பொருளும் ஆம்'

என வரும்.

[கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான் நிலமாகவும், விசும்பாகவும், காற்றாகவும், தீயாகவும், கதிரோனாகவும், மதியமாகவும், உயிர்க்கு உயிராகவும், எல்லையற்ற எல்லாப் பொருளாகவும் உள்ளான் - என்ற இப்பாடலில்,

சிவபெருமான் தனிப்பட்ட ஒருவன் என்ற கருத்தை மறுத்து அவன் எல்லாப் பொருளுக்கும் உள்ளும் புறமுமாக உள்ளான் என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளமை பொருள் ஒழிப்பணியாதல் காண்க.]

குண அவநுதி வருமாறு :

'மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கும், ஆரப்
பனித்தொடையல் பார்த்திபர்கோன் எங்கோன் – தனிக்கவிகை,
தண்மை நிழற்றன்று; தன்தொழுத பேதையர்க்கு
வெம்மை நிழற்றாய் விடும்'

என வரும். பிறவும் அன்ன.

[நீதி உலகில் சிறப்புற்றிருக்க வேத நெறியைத் தழைத்து ஓங்கச் செய்யும் ஆத்திப்பூ மாலையினை அணிந்த மன்னர்மன்னனாகிய எம் சோழனுடைய வெண்கொற்றக் குடை, அவன் வீதியில் திருவுலாப்போந்த காலை அவனைத் தொழுத மகளிருக்கு வெப்பம்தரும் நிழலைத் தந்தமையால், குளிர்ந்த நிழல் தருவது அன்று — என்ற இப்பாடலில் சோழனுடைய குடைநிழலின் தண்மைப்பண்பு நீங்கிவிட்டது; அந்நிழல் வெம்மை தருவதும் ஆயிற்று என்ற கருத்து குணஒழிப்பணியாமாறு காண்க.]

அவநுதி என்னுது 'ஆகும்' என்றதனுல் பிற அலங்காரங்களோடு கூடி வருவனவும் கொள்க.

வினை பற்றிய சிலேடை அவநுதி வருமாறு :

'நறஏந்து கோதை நலம்கவர்ந்து, நல்கா
மறவேந்தன், வஞ்சியான் அல்லன் ; — துறையின்
விலங்காமை நின்று, வியன்தமிழ்நாடு ஐந்தின்
குலம் காவல் பூண்டுஒழுகும் கோ.'

பிறவற்றின்கண் வருவனவும் வந்துழிக் காண்க. (51)

[தேன் பொருந்திய மாலையை அணிந்த பெண்ணின் அழகினைத் தன் காட்சியால் கவர்ந்து பின் தன் தண்ணளியான் மீட்டும் தாராத வீரம்மிக்க இவ்வரசன் வஞ்சியான் அல்லன். (வஞ்சிக்காமல் இரான் ; கருவூர் என்ற ஓர்ஊரையே உடையவன் அல்லன்.) நெறிமுறை தவறுது நாடாண்டு பரந்த சேர சோழ பாண்டிய கொங்கு தொண்டை நாடுகள் அனைத்தையும் காத்தல் தொழிலைச் செய்யும் அரசன் ஆவான் என்ற இப்பாடலில்,

'வஞ்சியான் அல்லன்' என்ற தொடர் சிலேடைப் பொருளால் குணஒழிப்பினைச் சுட்டியவாறு காண்க.] 51

சிலேடையணி - இலக்கணமும் வகையும்

671. ஒருவகைச் சொற்ருெடர் பலபொருள் பெற்றி
தெரிவுதர வருவது சிலேடை ; அதுதான்
செம்மொழி பிரிமொழி எனஇரு திறப்படும்.

இது நிறுத்தமுறையானே சிலேடை அலங்காரம் ஆமாறு உணர்த்துகின்றது.

இ—ள் : ஒரு வகையான் நின்ற தொடர்ச்சொல் பலபொருள்களது தன்மை தெரிய வருவது சிலேடை அலங்காரமாம். அவ்வலங்காரம்தான் ஒரு வகையான்

நின்று பலபொருள் படும் செம்மொழிச் சிலேடையும், ஒரு வகையான் நின்ற சொல்லைப் பிரித்துத் தொகை வேறுபடுத்துப் பல பொருள் கொள்ளப்படும் பிரிமொழிச் சிலேடையும் என இரண்டு கூறுபடும் என்றவாறு.

'*தான்*' என்ற மிகையானே, தொடர்ச்சொல்லே அன்றி ஒரு சொல்லே பலபொருள்பெற்றி தெரிதர வரினும், அவ்வலங்காரமாம் எனக்கொள்க.

[*இவ்வணி பலபொருள் சொற்றொடரணி எனவும் கூறப்பெறும்.*

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 76, 77

'செப்பும் சிலேடை ஒருதிறம் சேர்சொல் பலபொருளை
ஒப்ப உணர்த்தல் ஒருவினை பலவினை ஓங்குமுரண்
துப்புறழ் வாயின் சொலாய்நிய மத்தோ டநியமமும்
தப்பில் விரோதத் துடனவி ரோதமும் சாற்றினரே.'
– *வீ.* 172

'உயர்வுறும் ஒருமொழி தொடர்மொழி செய்யுளின்
இயல்பினும் திரிபினும் இயன்றுபல் பொருளைத்
தருபெயர் வினையில் சார்வது சிலேடை.' – *மா.* 146

'அவற்றுள்,
இயல்பு செம்மொழி திரிபுபிரி மொழியே.' – „ 147

'இவைஇனி விரிப்பன வாமெவற் றினும்வரும்.' – „ 148

'ஒன்று பலமுரண் ஒன்றிய வினையே
நியமம் நியம விலக்கு விரோதம்
அவிரோ தத்துடன் அதன்விரி யெழுள.' – „ 149

'அவற்றுள்,
ஒருவினை கொள்வது ஒருவினைச் சிலேடை.' – „ 150

'பலவினை கொள்வது பலவினைச் சிலேடை.' – „ 151

'மொழிவினை முரணுதல் முரண்வினைச் சிலேடை.'
– மா. 152

'இயல்புடைப் பொருள்கட்கு உளதுஇலது இரட்டுதல்
நியமித் துரைத்தல் நியமச் சிலேடை.' – ,, 153

'விளம்பிய நியமம் விலக்குதல் விலக்கே.' – ,, 154

'சாதி முதலாச் சாற்றிய நான்கொடும்
தீதறு பெயரினும் வினையினும் திரிந்து
மேதக விரோதத்து அறைவது விரோதம்.' – ,, 155

'அவிரோ தத்தறை வதுஅவி ரோதம்' – ,, 156

'சிலேடை என்ப திரிசொல் பலஇணைந்து
இருபய னுக ஒருதொடர்பு உரைத்தலே.' – தொ. வி. 367

'ஒருவகை யாம்தொடர் உரைபல பொருளின்
இயல்பு புலப்பட இயம்பல் சிலேடை.' – மு. வீ. பொ. 99

'பல்பொருள் தருஉம்பல் பதங்கள் புணர்த்துச்
சொல்வது பல்பொருள் சொற்றொடர் அணிஅது
புனைவுளி புனைவிலி இருமைமூ வகைத்தே.' – ச. 51

'தெரியும் பலபொருள் சொற்களின் சேர்க்கை சிலேடைஅது
வருணிய மேஅ வருணிய மேஇரு மைஎனலாய்
மருவி வரும்.' – குவ. 26]

செம்மொழிச் சிலேடை வருமாறு :

'செங்கரங்க ளான்இரவு நீக்கும்; திறம்பயின்று
பங்கய, மாதர் நலம்பயில, — பொங்குஉதயத்து
ஓர்ஆழி வெய்யோன், உயர்ந்த நெறிஒழுகும்,
நீர்ஆழி சூழ்ந்த நிலத்து'

என வரும். ஆதித்தன்மேல் செல்லுங்கால், கரம் - கதிர்; இரவு - இருள்; மாதர் – காதல்; நலம் - அழகு; பயிறல் - உண்டாதல்; பொங்குதல் - மேல்நோக்கி வளர்தல்; உதயம் – தோற்றம்; ஆழி – தேர்க்கால்; வெய்யோன் – ஆதித்தன்; நெறி – வழி.

இனிச் சோழன்மேல் செல்லுங்கால், கரம் - கை; இரவு - இரத்தல்; மாதர் - திருமடந்தை; நலம் - செல்வம்; பயிறல் - பெருகுதல்; பொங்குதல் - மேம்படுதல்; உதயம் - பொருள் வருவாய்; ஆழி - சக்கரம்; வெய்யோன் - விருப்பம் உடையோன்; நெறி - ஒழுக்கம்.

[சூரியன் தன் சிவந்த கிரணங்களால் இரவைப் போக்கும்; தாமரை அழகிய சிறப்பைப்பெற, மேல்நோக்கி வளரும் தோற்றத்தோடு வானவெளியில் சஞ்சரிக்கும் - எனவும்,

ஆணைச் சக்கரத்தை உடைய சோழன் இவ்வுலகில் தன் சிவந்த கைகளால் செய்யும் கொடைத்தொழிலால் இரத்தலை நீக்கி, திருமகளும் கலைமகளும் இவனைச் சேர்தலான் சிறப்படைய, சான்றோர் வகுத்த நெறியில் செங்கோல் செலுத்துவான் - எனவும் செம்மொழிச் சிலேடைப் பொருள் கொள்க. பங்கயமாதர் - செந்தாமரைத் திருவும் வெண்டாமரைக் கலைமகளும்.]

பிரிமொழிச் சிலேடை வருமாறு :

'தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய,
எள்ளா அரிமா னிடர்மிகுப்ப, — உள்வாழ்தேம்
சிந்தும் தகைமைத்தே, எங்கோன் திருவுள்ளம்
நந்தும் தொழில்புரிந்தார் நாடு'

என வரும். சோழனைப் பகையாதார் நாட்டின்மேல் செல்லுங்கால், தள்ளாவிடம் - தவறுத இடம்; ஏர் - உழும் எருது; தடம் - வாவி; தாமரை - பங்கயம்; எள்ளாமை - இகழாமை; அரி - நெற்சூடு; மானிடர் - உழவர்; உள்வாழ்தேம் - உள்ளே உண்டாகிய தேன்; சிந்தல் - பொழிதல்; நந்தல் - ஆக்கம்.

பகைத்தார் நாட்டின்மேல் செல்லுங்கால் - தள்ளா விடத்தேர் - அசையாத விடத்தேர்மரம்; தடம் - மலை;

தாமரை – தாவுகின்ற மரை; அரிமான் – சிங்கப்போத்து; இடர் – துன்பம்; உள்வாழ்தேம் – மனம் பொருந்திய நாடு; சிந்தல் – அழிதல்; நந்தல் – கேடு. (52)

[சோழனுடைய மனம் விரும்புமாறு பணிசெய்த நட்டோர் நாடுகள் – விளைநிலங்களில் எருதுகளும் குளங்களில் தாமரையும் அடையவும், குறைவற்ற நெற்சூடுகளை உழவர் தொகுப்பவும், மலர்களில் உள்ளிருக்கும் தேன்சிந்தும் வளம் மிக்குப் பொலியும் ;

சோழனுடைய மனம் பகைமையால் கெடுமாறு பகைத்த மன்னர் நாடுகள் அசையாத விடத்தேர் என்ற முள்மரங்கள் செழித்து ஓங்கவும், மலைகளில் தாவுகின்ற மான்கள் புகலிடம் தேடிச் செல்லவும், சிங்கங்கள் திரிந்து துன்புறுத்தவும், பண்டு மக்கள் விரும்பி வாழுமாறு அமைந்த தம் வளம் இழந்துவிடும் – எனப் பிரிமொழிச் சிலேடைப் பொருள்கொள்க.] 52

சிலேடை எழுவகையான் இயலுமாறு

672. ஒருவினை,[1] பலவினை,[2] முரண்வினை,[3] நியமம்,[4]
நியம விலக்கு,[5] விரோதம்,[6] அவிரோதம்[7]
எனஎழு வகையினும் இயலும் என்ப.

இதுவும் மேலதற்கு ஒருசார் எய்தியது ஓர் இயல்பு வகுத்துக் கூறுகின்றது.

இ-ள் : ஒரு வினையான் வரும் சிலேடையும், பல வினையான் வரும் சிலேடையும், மாறுபட்ட வினையான் வரும் சிலேடையும், சிலேடித்தவற்றை நியமம் செய்யும் சிலேடையும், அந்நியமத்தை விலக்கும் சிலேடையும், முன்னர்ச் சிலேடித்தவற்றைப் பின்னர் விரோதிப்பச் சிலேடித்தலும், முன்னர்ச் சிலேடித்தவற்றைப் பின்னரும் விரோதியாமல் சிலேடித்தலும் என ஏழு கூறுபாட்டானும் நடக்கும் அவ்வலங்காரம் என்றவாறு.

ஒருவினைச் சிலேடை வருமாறு :

'அம்பொன் பணைமுகத்துத் திண்கோட்டு அணிநாகம்,
வம்புஉற்ற ஓடை மலர்ந்திலங்க, — உம்பர்
நவம்புரியும் வான்நதியும் நாண்மதியும் நண்ண,
தவம்புரிவார்க்கு இன்பம் தரும்'

என வரும். பிள்ளையார்மேல் செல்லுங்கால், பொன் – பொலிவு; பணை – பருத்தல்; முகம் – வதனம்; கோடு – கொம்பு; நாகம் – யானை; வம்பு – கச்சு; உறுதல் - கட்டுதல்; ஓடை – பட்டம்.

மலைமேல் செல்லுங்கால். பொன் – கனகம்; பணை – மூங்கில்; முகம் – பக்கம்; கோடு – சிகரம்; நாகம் - மலை; வம்பு – மணம்; உறுதல் – உண்டாதல்; ஓடை – வாவி.

[இப்பாடல் விநாயகனுக்கும் மலைக்கும் சிலேடை. அழகிய பொலிவினை உடைய பருத்த முகத்தின்கண்ணே திண்ணிய கொம்பினை உடைத்தாய் அழகுபொருந்திய யானையாகிய விநாயகன், கச்சோடு கட்டிய பட்டம் விரிந்து விளங்க, முடிமீது அழகுசெய்யும் ஆகாயகங்கையும் பிறைச்சந்திரனும் விளங்க, தன்னைக்குறித்துத் தவம்செய்வார்க்கு உயர்ந்த பதவிகளை வழங்கி இன்பம் தருவான் – எனவும்,

மலை, தன்மீது அழகிய பொன்னையும் மூங்கில்களையும் கொண்டு நீர் ஓடைகள் தன்னிடத்து மலர்களோடு விளங்கத் தன்னிடம் கங்கை முதலிய நதிகளும் சந்திரனும் தோன்ற, தன்னிடத்தமர்ந்து தவம் செய்பவருக்கு மன அமைதி முதலிய இன்பம் நல்கும் – எனவும் அமைந்த இப்பாடலில், 'இன்பம் தரும்' என்ற ஒரே முடிக்கும் சொல்லையே சிலேடையான் அமைந்த எழுவாயாகிய இரண்டும் கொண்டு முடிந்தமை காண்க.]

பலவினைச் சிலேடை வருமாறு :

'தவிர்வின் மதுவுண் களிதளிர்ப்ப, நீண்டு,
செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக், — குயிலிசையும்,
மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கும், மேவலார்
இன்னுயிரை ஈர்கின் றன'

என வரும். குயில்குரல்மேல் செல்லுங்கால், மது – நறவு; மருவி – புக்கு; செந்நீன்மை – கோடாத்தன்மை; மேவலார் – பிரிந்தோர்.

கண்ணின்மேல் செல்லுங்கால், மது – கள்; செவி மருவி – செவி அளவும் சென்று; செந்நீர்மை – சிவந்த கண்ணிற்குக் குளிர்ச்சி; மேவலார் – புணரும் தலைவர்.

[இப்பாடல் குயிலின் குரலுக்கும் மகளிர் கண்களுக்கும் சிலேடை. குறைவற்ற தேனை உண்ட களிப்பு மிகுதலால் நீண்டு நம்காதுகளில் புக்கு, இசை கோடாத் தன்மை பொருந்திக் குயிலிசை துணையைப் பிரிந்தவர் இனிய உயிரைத் தாக்குகிறது.

குறைவற்ற கள்ளைக் குடித்த களிப்பு, மயக்கம் தருவதால் சற்றுச் செந்நிறம்பெற்று, செவி அளவும் சென்று நீண்டு, மின்னலை ஒத்த நுண்ணிடையாருடைய மெல்லிய கண்கள் அவர்களைப் புணரும் தலைவர்களின் உயிரைக் காதலால் கவர்ச்சிக்கின்றன.

இப்பாடலில், நீண்டு, மருவி, தாங்கி, ஈர்கின்றன என்ற பலவினைகள் முடிக்குஞ் சொற்களாதல் காண்க.]

முரண்வினைச் சிலேடை வருமாறு :

'மாலை மருவி, மதிதிரிய, மாமணம்செய்
காலைத் துணைமேவ லார்கடிய, — வேலைமேல்
மிக்கார் கலியடங்காது ஆர்க்கும்; வியன்பொழில்கள்
புக்கார் கலி,யடங்கும், புள்'

என வரும். பிரிந்தார்மேல் செல்லுங்கால், மாலை–

மயக்கம்; மதி – கருத்து; திரிதல் - வேறுபடுதல்; மணம்– வாசம்; துணைமேவலார் – துணைவரைப் பிரிந்தார்; கடிதல் – அஞ்சுதல்.

புணர்ந்தோர்மேல் செல்லுங்கால், மாலை - அந்தி; மதி - திங்கள்; திரிதல் - உலாவுதல்; மணம் - கூட்டம்; துணைமேவலார் - துணைவரைப் பொருந்தினர்; கடிதல்– விளக்கம்.

[இப்பாடல் துணைவரைப் பிரிந்தாருக்கும் துணைவரைக் கூடினர்க்கும் சிலேடை.

துணைவரைப் பிரிந்தவர்கள் மயக்கத்தைப் பொருந்தி, மனம் திரிவுபட, பூக்கள் மணம் நாறும் மாலைக்காலத்தில் அஞ்சுமாறு கடல் கரையைமோதி அலைவீசி ஆரவாரிக்கும்; அகன்ற பொழில்களில் புக்குப் பறவைகள் ஒலி அடங்கும்.

துணைவரைக் கூடியவர்கள் அந்திப்பொழுது பொருந்தி, வானத்தில் நிலா ஒளி வீசச் துணைவரைக் கூடும்போது அவர்கள் மனம் மகிழுமாறு கடல் ஒலிக்கப் பறவைகள் ஒலி அடங்கும்.

இச்சிலேடைப் பாடலின் முதல் இரண்டு அடிகளிலும் சிலேடை வந்தமை காண்க.

ஆர்கலி அடங்காது ஆர்க்கும், ஆர்கலி அடங்கும் என்ற முரண்பட்ட வினைகள் ஏனை இரண்டடிகளில் முடிக்கும் சொற்களாய் வந்துள்ளமையும் காண்க.]

நியமச்சிலேடை வருமாறு :

'வெண்ணீர்மை தாங்குவன முத்தே ; வெறியவாய்க்
கண்ணீர்மை சோர்வ, கடிபொழிலே ; — பண்ணீர்மை
மென்கோல யாழே, இரங்குவன ; வேல்வேந்தே !
நின்கோல் உலாவும் நிலத்து'

என வரும். வெண்ணீர்மை – வெண்ணிறநீர்மையும்

அறியாமையும்; வெறி - வாசமும்பித்தும்; கண்ணீர்மை— கள்ளாகிய நீர்மையும் கண்ணினது நீர்மையும்; இரங்கல் — இசைத்தலும் புலம்பலும்.

[வேலை ஏந்திய மன்னனே! நின் செங்கோல் செலுத்தப்படும் நாட்டில் வெண்ணீர்மை முத்திற்கே உண்டு; மக்களுக்கு இல்லை. வெறியவாய்க் கண்ணீர்மை சோருவன சோலைகளே; வெறி கொண்ட மக்களோ கண்ணீர் மை சோரும் மகளிரோ இல்லை. யாழே இரங்குவன; மக்களுள் இரங்குவார் இலர் — என்ற இப்பாடலில்,

வெண்ணீர்மை, வெறி, கண்ணீர்மை, இரங்குதல் என்ற சொற்கள் சிலேடைப் பொருளால் ஒவ்வொரு பொருளுக்கே வரையறை செய்யப்பட்டவாறு காண்க.]

நியமவிலக்குச் சிலேடை வருமாறு :

'சிறைபயில்வ புட்குலமே; தீம்புனலும் அன்ன;
இறைவ!நீ காத்தளிக்கும் எல்லை, — முறையின்
கொடியன, மாளிகையின் குன்றமே அன்றி,
கடிஅவிழ்பூங் காவும் உள'

என வரும். சிறை - சிறகும் கரையும் சிறைப்படுத்தலும்; கொடி — பதாகையும் வல்லியும் கொடுமையும்.

[அரசனே! நீ காத்து அளிக்கும் நாட்டெல்லையில் சிறை படுவன பறவைகள் மாத்திரம் அல்ல; யாற்று நீரும் சிறைபடும். உன் கோநகரத்து மாளிகைகளாகிய குன்றங்களே கொடியன அல்ல; நறுமணம் கமழும் சோலைகளும் கொடியன என்ற இப்பாடலில்,

சிறைபடுதல், கொடியன என்ற சொற்கள் சிலேடைப் பொருளால் ஒவ்வொன்றற்கே உரியவாகாது மற்றவற்றிற்கும் உரியவாயினமை, நியமமாகிய வரையறுத்தலை விலக்கிக்காட்டும் நியமவிலக்குச் சிலேடை ஆயினவாறு.]

விரோதச் சிலேடை வருமாறு :

'விச்சா தரன்எனினும் அந்தரத்து மேவானல் ;
அச்சுத னேனும்அம் மாயன்அலன் ; — நிச்ச
நிறைவான் கலையான் அகளங்கன் ; நீதி
இறையான், அநகன் ; எங் கோ'

என வரும். விச்சாதரன் – தேவனும் விஞ்சையைத் தாங்கிய சோழனும்; அந்தரம் - ஆகாயமும் கேடும்; அச்சுதன் – மாயனும் கேடு இல்லாத சோழனும்; மாயம்– கறுப்பும் வஞ்சனையும்; கலையான் – கலையை உடைய சந்திரனும் கல்வியை உடைய சோழனும்; களங்கம் – மாசும் பாவமும்; இறையான் - சிவனும் சோழனும்; அநகன் - மலை இல்லாதோனும் பாவம் இல்லாதோனும்; இதனை நகன் அநகன் எனப் பிரித்துக் கொள்க.

[இப்பாடல் விச்சாதரன் முதலோருக்கும் சோழனுக்கும் சிலேடை. விச்சாதரன் அந்தரத்தில் மேவுவான் ; ஆனல் சோழன் அந்தரத்தில் மேவான். அச்சுதன் மாயன் ; ஆனன் சோழன் மாயன் அல்லன். மதியான் களங்கன்; ஆனல் சோழன் அகளங்கன். சிவபெருமான் நகன் ; ஆனல் சோழன் அநகன்.

இவ்வாறு சிலேடைப்பொருளான் சோழமன்னன் – விச்சாதரன், திருமால், சந்திரன், சிவபெருமான் ஆகியோரின் மாறுபட்டிருப்பதாகக் கூறுதல் காண்க.]

அவிரோதச் சிலேடை வருமாறு :

'சோதி இரவி, கரத்தான் இரவு ஒழிக்கும்;
மாதிடத்தான், மன்மதனை மாறழிக்கும்; — மீதா
அநகமதி தோற்றிக் குமுதம் அளிக்கும்;
தநதன், இருநிதிக்கோன் தான்'

என வரும். சோதி - ஒளியும், புகழும்; இரவி - சூரியனும், சோழனும்; கரம் – கதிரும், கையும்; இரவு - இருளும்,

இரத்தலும்; மாதிடத்தான் – சிவனும், மிக்கதிட்பத்தை உடைய சோழனும்; மன்மதன் – காமனும், மன்னரது வலியும்; மதி – சந்திரனும், அறிவும்; குமுதம் – ஆம்பலும், மகிழ்ச்சியும்; தனதன் – குபேரனும், தனத்தை உடைய சோழனும்; இருநிதி – சங்கநிதி பதுமநிதியும், மிக்க பொருளும்.

'இயலும்' என்றதனன் இவ்வாறன்றிப் பிற வேறுபாட்டான் வருவனவும் கொள்க. அவை வந்துழிக் காண்க. (53)

[இப்பாடல் சூரியன் முதலாயினருக்கும் சோழனுக்கும் சிலேடை. இரவியும் கரத்தால் இரவு ஒழிக்கும்; சோழனும் அன்னன். சிவபெருமான் மன்மதனை மாறு அழிக்கும்; சோழனும் மன் மதனை மாறு அழிப்பன். மதிதோன்றிக் குமுதத்தை அளிக்கும்; சோழனும் மதிதோற்றிக் குமுதத்தை அளிப்பான். குபேரனும் இருநிதிக்கோன்; சோழனும் இருநிதிக்கோன் – எனச் சிலேடைப்பொருளான், மாறுபாடின்றிச் சூரியன், சிவபெருமான், சந்திரன் குபேரன் ஆகியோருக்குச் சோழன் ஒப்பாயினமை காண்க.

பிற விகற்பங்களை மாறனலங்காரத்துள் காண்க.] 53

விசேடவணி

673. குணம்தொழில் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட ஒருபொருள் விளம்புதல் விசேடம்.

இது நிறுத்தமுறையானே விசேடம் என்னும் அலங்காரம் கூறுகின்றது.

இ-ள் : குணமும் தொழிலும் பொருளும் சாதியும் உறுப்பும் முதலாயின குறைபடுதல் காரணமாக, ஒரு பொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேடம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இது சிறப்பணி எனவும் சிறப்புநிலையணி எனவும் கூறப்பெறும்.

இது சந்திராலோகம், குவலயானந்தம் இவற்றில் சிறிது வேறுபாட்டுடன் விளக்கப்பட்டுள்ளது; பிற்சேர்க்கை காண்க.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 79

'செல்லும் சிறப்புத் தொழில்குணம் அங்கம் சிதைந்திடினும்
நல்ல பயன்பட நாட்டல்.' – *வீ.* 178

'சாதி குணம் தொழில் பொருள் இடம் உறுப்பென்று
ஓதிய இருமூன் றினுமுறு குறைபட
ஏதுவின் அதற்கதற்கு இசைமேம் பாட்டால்
நீதிகொள் புலவர் நிகழ்த்துதல் விசேடம்.' – *மா.* 184

'விசேடம் எனக்குறை விளம்பிய வற்றுன்
மேன்மை படப்பொருள் விளக்கிய நெறியே.' – *தொ. வி.* 359

'குணம் தொழில் பொருள்உடல் குலம்முத லாயின
எச்சங் காரண மாகஓர் பொருட்கு
மேம்பாடு தோன்ற விளம்பல் விசேடம்.' *மு. வீ. பொ.* 95

'நிலையின் ருதேசம் நிகழத் தொடுத்தல்
ஏற்றதோர் பொருள்பல் லிடங்களில் நிற்பக்
காட்டுதல் சிறிய காரியம் செய்வான்
தொடங்கிவேறு அருவினை தோற்றுதல் மூன்ரு
நிகழ்வது சிறப்பு நிலையணி என்ப.' – *ச.* 70

'சிலகா ரணத்தில் .... விசேடத்தைத் தேரஅறி
தலின்......நாமம்...... சிறப்பு.' – *குவ. அ.* 82]

குணக்குறை விசேடம் வருமாறு :

'கோட்டம் திருப்புருவம் கொள்ளா; அவர்செங்கோல்
கோட்டம் புரிந்த; கொடைச்சென்னி – நாட்டம்
சிவந்தன இல்லை; திருந்தார் கலிங்கம்
சிவந்தன, செந்தீத் தெற'

என வரும்.

[கொடைத் தொழிலில் வல்ல சோழனுடைய புருவங்கள் வளையத் தொடங்க வில்லை; அதற்குள் பகைவருடைய செங்கோல் வளைந்துவிட்டது. சோழமன்னனுடைய கண்கள் கோபத்தால் சிவக்கவில்லை; அதற்குள் பகைமன்னருடைய கலிங்கநாடுகள், சோழமன்னனுடைய வீரர்கள் எரிபரந்து எடுத்தமையால், தீயினால் தெறப்பட்டுச் சிவந்தன - என்ற இப்பாடலில்,

புருவத்திற்குக் கோபத்தால் வளைதலும், கண்களுக்குக் கோபத்தால் சிவத்தலும் ஆகிய குணங்கள் ஏற்படுவதன் முன்னமே, புருவம் வளைந்து கண் சிவந்து செய்ய வேண்டிய செயல் நிகழ்ந்து விட்டது என்ற செய்தி குணக்குறை விசேடமாயிற்று.]

தொழில்குறை விசேடம் வருமாறு :

'ஏங்கா, முகில்பொழியா, நாளும் புனல்தேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா — நீங்கா,
வளைப்பட்ட காலணிகள் ; மாறுஎதிர்ந்தார்க்கு அந்நாள்
தளைப்பட்ட, தாள்தா மரை'

என வரும்.

[இடியோசை கேட்காமலும் மேகம் மழை பெய்யாமலும் நாளும் புனல் முட்டின்றித் தேங்கிக் காணப்படும் பொலிவினை உடைய காவிரிபாயும் நாட்டு மன்னனாகிய சோழனுடைய போர்யானைகள் காலில் அணியப்பட்ட சங்கிலிகள் நீக்கப்படவில்லை; அதற்குள் பகைமையால் எதிர்த்த மன்னருடைய கால்களாகிய தாமரைகள் விலங்கிடப்பட்டுவிட்டன - என்ற இப்பாடலில்,

யானைகளைக் கட்டுத்தறியிலிருந்து சங்கிலியை நீக்கிப் போருக்குப் புறப்படவிடும் தொழில் நிகழும் முன் அச்செயலின் பயனாகிய பகைவரைச் சிறைப்பிடித்தல் நிகழ்ந்தது எனவும், இடி இடித்து மழை பெய்யாமலே அதன் பயனாகிய குறையாத நீர்ப்பெருக்கைச் சோணாடு காவிரியால் பெற்றுள்ளது எனவும் வந்தன தொழிற்குறை விசேடமாதல் காண்க.]

சாதிக்குறை விசேடம் வருமாறு :

'மேய நிரைபுரந்து, வெண்ணெய் தொடுவுண்ட
மாயஞர் மாறுஏற்று அமர்புரிந்தார் ; — தூய
பெருந்திருவும் பின்னும் கொடுத்துடைந்தார், விண்மேல்
புரந்தானும் வானோரும் போல்'

என வரும். தொடுவுண்டல் – தோண்டி எடுத்தல்; போல் – ஒப்பில்போலி.

[பசுக்களை மேய்த்து வெண்ணெயைத் தோண்டித் தின்ற கண்ணன் இடைக் குலத்தவனாயினும், அவன் போரிடத்தொடங்கிய அளவில் இந்திரனும், அவன் பக்கல் பொருத தேவரும் புறமுதுகு காட்டிக் கண்ணன் வேட்டவாறு பாரிசாத மரத்தைக் கொடுத்துத் தோற்று ஓடினர்கள் – என்ற இப்பாடலில்,

போர்த்திறம் அறியாத ஆயர்குலத்தைச் சேர்ந்த கண்ணன் தேவர்களையே வென்றான் என்ற செய்தி சாதிக்குறை விசேடமாதல் காண்க. ஒப்பில்போலி – உரையசைச் சொல்]

பொருட்குறை விசேடம் வருமாறு :

'தொல்லை மறைதேர் துணைவன்பால், யாண்டுவரை,
எல்லை இருநாழி நெற்கொண்டு,ஓர் — மெல்லியலாள்,
ஓங்குஉலகில் வாழும் உயிர்அனைத்தும் ஊட்டுமால்,
ஏங்குஒலிநீர்க் காஞ்சி யிடை'

என வரும்.

[வேதங்களால் ஆராயப்படும் சிவபெருமானிடத்தில் ஓராண்டளவும் இருநாழி நெல்லைப்பெற்று, அந்நெல்லினைக் கொண்டே, பார்வதியாகிய பெண் நீர்வளம் நிரம்பிய காஞ்சிமா நகரில் முப்பத்திரண்டு அறங்கள் செய்து உலகிலுள்ள உயிர்களை யெல்லாம் உணவூட்டிக் காத்தாள் – என்ற இப்பாடலில்,

மிகக் குறைந்த அளவிற்றாய இருநாழி நெல்லால் உலகு முழுதும் இறைவி பாதுகாத்ததாகிய செயல் பொருட்குறை விசேடமாதல் காண்க.]

உறுப்புக்குறை விசேடம் வருமாறு :

'யானை, இரதம், பரி,ஆள், இவைஇல்லை;
தானும் அனங்கன்; தனுக்கரும்பு; — தேனார்
மலர்ஐந்தால் வென்று வடுப்படுத்தான் மாறன்,
உலகங்கள் மூன்றும் ஒருங்கு'

என வரும். பிறவும் வந்துழிக்கண்டு கொள்க. (54)

[மன்மதனுக்கு யானை, தேர், குதிரை, காலாள் என்ற நால் வகைப் படைகளுள் ஒன்றும் இல்லை; தனக்கும் வடிவம் இன்று; அவன் எடுத்த வில்லோ கரும்புவில்; அம்புகளோ மலர் அம்புகள்; இந்நிலையில் அவன் மூன்று உலகங்களையும் வென்று தன் வெற்றிச் சுவடு, அவ்வுலகில் என்றும் இருக்குமாறு செய்துவிட்டான் – என்ற இப்பாடலில்,

போருக்கு வேண்டிய அங்கங்களாகிய வலியஉடல், நால்வகைப் படைகள், உறுதியான வில், கூர்மையானஅம்புகள் முதலியன இல்லாமலேயே மன்மதன் மூன்று உலகங்களையும் வென்ற செய்தி கூறப்படுதல் உறுப்புக் குறைவிசேடமாதல் அறிக.] 54

ஒப்புமைக்கூட்டவணி - இலக்கணமும் திறனும்

674. கருதிய குணத்தின் மிகுபொருள் உடன்வைத்து
ஒருபொருள் உரைப்பது ஒப்புமைக் கூட்டம்;
புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே.

இது நிறுத்தமுறையானே ஒப்புமைக்கூட்ட அலங்காரத்தினது பொதுஇயல்பும் அதன் திறனும் கூறுகின்றது.

இ-ள் : ஒரு பொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குணம் முதலாயினவற்றான் மிக்கபொருளைக் கூட

வைத்துச் சொல்லுவது ஒப்புமைக்கூட்டம் என்னும் அலங்காரமாம். அது புகழ்தற்கண்ணும் பழித்தற்கண்ணும் தோன்றும் என்றவாறு.

[இஃது உடனிலைச் சொல்லணி எனவும் ஒப்புமைக் குழுவணி எனவும் கூறப்பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 80

'உடனிலைச் சொல்நயந்து,
சொல்லும் குணமுதல் ஒத்த தொகுத்தல்.' – வீ. 178

'தக்கதோர் பொருளினைச் சாற்றுழி அதுபோல்
மிக்கபல் பொருள்களை உடன்விளம் புதல்தான்
ஒப்புமைக் கூட்டம் எனஉரைத் தனரே.' – மா. 128

'உயர்புகழ் பழியவற் றெடுமுறும் அதுவே.' – மா. 129

'ஒப்புமைக் கூட்டம் ஒத்த குணத்தவை
செப்பித் தன்பொருள் தெரிவுறக் கூறலே.' – தொ. வி. 356

'ஒருபொரு ளுரைக்குங் காலகத் தெண்ணிப்
பொருள்முத லானவை அவற்றின் மிகுபொருள்
உறவைத் தியம்புவது ஒப்புமைக் கூட்டம்.' – மு. வீ. பொ. 96

'புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே.' – ,, 97

'புனைவுளி புனைவிலி பலவாப் பொதுவியல்பு
ஒன்றின் முடித்தல் ஒப்புமைக் கூட்டம்.' – ச. 86

'இனமாம் புனைவுளிக் கேனும் புனைவிலிக் கேனும்உறு
வனவாம் தருமத்தின் ஒற்றுமை ஏய்ஒப் புமைக்குழுவே.'
– குவ. அ. 64]

புகழ் ஒப்புமைக் கூட்டம் வருமாறு :

'பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்,
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும், — நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும், காஞ்சி வளம்பதியின்
உண்மையான், உண்டுஇவ் வுலகு'

என வரும்.

[காஞ்சியம்பதியிலே, அணிகலன்களை அணிந்த பார்வதி தேவியினுடைய கொங்கைகள் தழுவுதலால் குழைந்த மலைபோன்ற சிவபெருமானும், என்றும் தூண்டப்படாமல் தெய்விகச் சுடர்வீசும் விளக்குப்போன்ற திருமாலும், தவறான செயல்கள் செய்தற்கண் உள்ளம் மடங்கும் இயல்பினராய் வள்ளன்மை மிக்க சான்றோர்களும் இருப்பதனால் உலகியல் தடையின்றி நிலைபெறுகிறது — என்ற இப்பாடலில்,

உயர்ந்த பொருள்களாகிய சிவபெருமான், திருமால், சான்றோர் என்பார் புகழ்பற்றி உடன் எண்ணப்பட்டவாறு.]

பழிப்பு ஒப்புமைக்கூட்டம் வருமாறு :

'கொள்பொருள் வெஃகிக் குடிஅலைக்கும் வேந்தனும்,
உள்பொருள் சொல்லாச் சலம்மொழி மாந்தரும்,
இல்இருந்து எல்லை கடப்பாளும், இம்மூவர்
வல்லே மழைஅறுக்கும் கோள்'

என வரும். பிறவும் அன்ன. (55)

[தான் இறையாகக் கொள்ளவேண்டிய பொருளைப் பெரிதும் விரும்பிக் குடிமக்களைத் துன்புறுத்தி வரி வாங்கும் அரசனும், உண்மையை விடுத்து வஞ்சனையாகிய சொற்களையே பேசும் கீழ் மக்களும், இல்லறம் நடத்தும் இல்லாளாய் இருந்தும் தன் வரையறையைக் கடக்கும் தீயமகளும் ஆகிய இம்மூவரும் நாட்டில் தவறாது பெய்யும் பருவ மழையைக் குறைக்கும் தீய கோள்களாவர் — என்ற இப்பாடலில்,

கொடுங்கோல் வேந்தன், சலம்மொழி மாந்தர், எல்லை கடக்கும் இல்லாள் என்ற தாழ்ந்தபொருள்கள் பழித்தல் பற்றி உடன் எண்ணப்பட்டவாறு காண்க.] 55

விரோதவணி

675. மாறுபடு சொல்பொருள் மாறுபாட்டு இயற்கை
விளைவுதர உரைப்பது விரோதம் ஆகும்.

இது நிறுத்தமுறையானே விரோதம் என்ற அலங்காரம் கூறுகின்றது.

இ-ள்: மாறுபட்ட சொல்லானும் பொருளானும் மாறுபாட்டுத்தன்மை விளைவுதோன்ற உரைப்பது விரோதம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இது தொடை வகையுள் ஒன்றாகிய முரண்தொடை ஆகும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 82

'சொல்லும் பொருளும்,
புல்லும் விரோதம் புணரின் முரண்என்ப பொற்றொடியே.'
– *வீ.* 178

'சொற்பொருள் முரணத் தொடுப்பது விரோதம்.' – *மா.* 181

'அதுவே,
சொல்லும் பொருளும் ஒருமையின் பன்மையின்
தம்மின் முரணும் சால்புஒரு நான்காய்ச்
சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும்
ஒல்லுபு முரணலின் ஓரைந் தாகும்.' – *மா.* 182

'விரோதம் என்ப விகற்ப முரண்படு
மன்னிய சொற்பொருள் உன்னியம் ஆக்கலே.'
– *தொ. வி.* 360

'முரணப் படும்பொரு ளொடுமொழி யானும்
முரணப் படுமியல்பு ஆக்கமுன் தோன்றல்
விரோதம் எனப்பெயர் வேண்டப் படுமே.' – *மு. வீ. பொ.* 98]

சொல் விரோதம் வருமாறு:

'சோலை பயிலும் குயில்மழலை சோர்ந்துஅடங்க,
ஆலும் மயில்இனங்கள் ஆர்த்துஎழுந்த; — ஞாலம்
குளிர்ந்த; முகில்கறுத்த; கோபம் சிவந்த;
விளர்த்த, துணைபிரிந்தார் மெய்'

என வரும்.

[கார்காலம் தொடங்கிய அளவில் சோலைகளில் வேனிற் காலத்தில் மகிழ்வோடு வாழ்ந்த குயில்கள் தம் இனிய இசையை விடுத்து ஒடுங்கி விட்டன; தோகையை விரித்து ஆடும் மயில்கள் ஆரவாரித்து மகிழ்வோடு புறப்பட்டன; உலகம் குளிர்ந்தது; மேகங்கள் கறுத்தன; சிவந்த இந்திரகோபப் பூச்சிகள் வெளிப் பட்டன; துணைவரைப் பிரிந்தவர் உடல்கள் வெளுத்தன – என்ற இப்பாடலில்,

சோர்ந்தடங்க – ஆர்த்தெழுந்த என்ற தொடர்களும், கறுத்த – சிவந்த – விளர்த்த என்ற சொற்களும் முரண்பட்ட கருத்தினவாய்த் தோன்றுதல் காண்க.

இப்பாடல் சொல்பற்றிய முரண்.]

பொருள் விரோதம் வருமாறு :

'காலையும் மாலையும் கைகூப்பிக் கால்தொழுதால்,
மேலை வினைஎல்லாம் கீழாவாம் ; — கோலக்
கருமான்தோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து'

என வரும். பிறவும் அன்ன.

[காலையினும் மாலையினும், அழகிய கரிய யானைத்தோலினைச் செம்மேனியில் போர்த்து வெண்ணீறணிந்து பசிய கொன்றை மாலை சூடியுள்ள பெருமானைச் சிற்றம்பலத்தில் நம் கைகளைக் கூப்பித் திருவடிகளில் விழுந்து தொழுதால், நம் பண்டைப் பல் பிறவியின் வினைகளும் நம்மை விடுத்து நீங்கி விடும் – என்ற இப்பாடலில்,

காலை, மாலை- கை, கால் – மேலை கீழ், – கருமான், வெண்ணீறு, செம்மேனி, பைந்தார் – பெரு, சிறு – என்ற முரண்பட்ட பொருளைத் தரும் சொற்கள் அமைந்தவாறு காண்க. இது பொருள் பற்றிய முரண்.]

'இயற்கை' என்ற மிகையானே, சிலேடை பற்றியும் முரண் வரும் எனக் கொள்க.

வரலாறு :

'இனமான் இகல எளியவே யேனும்,
வனம்மேவு புண்டரிகம் வாட்டும் ; — வனம்ஆர்
கரிஉருவங் கொண்டு, அரிசிதறிக் காயும்,
விரிமலர்மென் கூந்தல் விழி'

என வரும். வனம் – நீரும் காடும்; புண்டரிகம் – தாமரையும் புலியும்; வனம் - வண்ணமும் காடும்; கரி– கரியும் யானையும்; அரி - செவ்வரியும் சிங்கமும்; சிதறல்– பரத்தலும் உடைத்தலும். (56)

விரிந்த மலர்கள் சூடிய மெல்லிய கூந்தலை உடைய இத் தலைவியின் விழிகள் மான்களின் விழியோடு மாறுபடும் அளவின; இவை நீரில் வாழும் தாமரையைத் தம் வனப்பால் தோற்கடிப்பன; கருநிறத்தோடு அரிகள் பரந்து எம்மைக் கோபிப்பன – என்பது உரிய பொருள்.

சொற்களைக் கொண்டு நோக்குமிடத்து, இவள் விழிகள் மான்கள் பகைக்குமாறு எளிய எனினும் காட்டிலுள்ள புலிகளை வாட்டும்; காட்டில் உள்ள யானைகளின் வடிவத்தைக் கொண்டு சிங்கங்கள் சிதறி ஓடுமாறு கோபிக்கும் – என்ற முரண்பட்ட பொருள் சிலேடை முகத்தான் மேம்போக்காக அமைந்திருத்தல் காண்க. ஏனைய விகற்பங்களை மாறன்அலங்காரத்தில் காண்க.]

56

மாறுபடு புகழ்நிலையணி

**676. கருதிய பொருள்மறைத்து ஆங்குஅது பழித்தற்கு
வேறுஒன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.**

[இது தெரிவில் புகழ்ச்சியணி எனவும் கூறப்படும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 83

'தேறும் தெரிவில் புகழ்ச்சி ஒன் றைப்பழிக் கப்பிறிது
கூறிப் புகழுதல்.' – வீ. 174

'உற்றதோர் பொருளினை மறைத்துறு பழியது
பெற்றிட மற்றொரு பொருள்புகழ் பெற்றி
பொற்புடை மாறு படுபுகழ் நிலையே.' – *மா*. 230

'கவிகரு தியபொருள் கரந்துமற் றதனை
சிந்திப் பதற்குமற் றொன்றனை நினைத்துப்
புகழ்வது மாறு படுபுகழ் நிலையே.' – *மு. வீ. பொ*. 99]

வரலாறு :

'இரவுஅறியா, யாவரையும் பின்செல்லா, நல்ல
தருநிழலும் தண்ணீரும் புல்லும், — ஒருவர்
படைத்தனவும் கொள்ளா,இப் புள்ளிமான் பார்மேல்
துடைத்தனவே அன்றோ துயர்?'

என வரும்.

[இப்புள்ளிமான் ஒருவரிடம் சென்று தனக்கு வேண்டியது ஒன்றனை இரத்தல் அறியாது; யாரிடத்தும் ஒரு பயன் கருதிப் பின்தொடர்ந்து செல்லாது; கிடைத்த தண்ணீரைக் குடித்து மரத்து நிழலில் தங்கும்; ஒருவர் தேடிவைத்த செல்வத்தையும் கொள்ளக்கருதாது. அஃது இவ்வுலகில் துன்பமின்றி வாழவில்லையா? – என்ற இப்பாடலில்,

பிறர் பின் சென்று இரந்து பிறரிடம் ஒன்று பெற்று அவர் நிழலில் தங்கி உயிர்வாழும் இரவலனுடைய புன்மை, மானுடைய வாழ்க்கையைப் பாராட்டிக் கூறுவதன் வாயிலாகப் புலப்படுத்தப் பட்டவாறு.]

'போதும் தளிரும் புனைந்து, மணம்புணர்ந்து,
சூதப் பணைதழுவித் தோன்றுமால், — மாதே!
பலமா தவங்கள் பயின்றதோ, பண்டு,இக்
குலமா தவியின் கொடி'

என்றாற்போல்வதூஉம் அது. (57)

[மாதே! இவ்வழகிய மாதவிக்கொடி அரும்புகளையும் தளிர்களையும் கொண்டு மணம் வீசி மாமரத்தின் கிளையினைத் தழுவிக் கவர்ச்சியாகத் தோற்றம் அளிப்பதற்குப் பண்டைப் பிறப்பில் பலவாகிய தவங்கள் செய்தது போலும்! – என்று வரைதல் வேட்கையான் தோழியிடம் கூறிய தலைவி கூற்றாக அமையும் இப்பாடலில்,

உயர்குடி மகளாய்ப் பிறந்து வைத்தும், தலைவனைப் பலர் அறிய மணம் புணர்ந்து பூப்புனைந்து அவனைத் தழுவி வாழும் இல்லறத்தை நல்லறமாக நடத்தும் வாய்ப்பிற்குரிய நற்றவத்தைத் தலைவி செய்யாமைக்காக இரங்கும் செய்தி குறிப்பால் பெறப்பட்டவாறு.

'பூரித் தெழுந்த புணர்முலையைப் புல்லிவிடா
வாரித் தரள வடம்நிரைதான் — நேரிழாய்!
மட்டார் பொழில்வண் பரிசார மாதவர்க்காட்
பட்டா தரித்தனவோ பண்டு'

என்று தலைவன் கூற்றாக அமைந்த மாறன் அலங்கார எடுத்துக் காட்டுப் பாடலையும் நோக்குக. – மா. 230] 57

புகழாப் புகழ்ச்சியணி

677. பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.

இது நிறுத்தமுறையானே புகழாப்புகழ்ச்சி அலங்காரம் கூறுகின்றது.

இ-ள்: பழித்தல் போலும் பாகுபாட்டான் ஒன்றற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இது நிந்தாத்துதியணி யெனவும் புகழ் மாற்றணி யெனவும் வஞ்சப்புகழ்ச்சியணி யெனவும் நுவலாச்சொல் கூறப்படும்.

தொன்னூல் விளக்கமும் சந்திராலோகமும் குவலயானந்தமும் பழிப்பது போலப் புகழ்வதனையும், புகழ்வதுபோலப் பழிப்பதனையும் இவ்வணியுள் அடக்கும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 84

'மாறி இகழ்மொழி வண்புக ழாய்நுவ லாச்சொல்வரும்.'
– வீ. 174

'இகழ்வது போன்ற இயற்கையின் வண்புகழ்
நிகழ்தர உரைப்பது நிந்தாத் துதியே.' – மா. 228

'மதித்தொரு பொருளினை வழாஅதுள் ளுறுத்துத்
துதிப்பது போன்றிகழ் வதுதுதி நிந்தை.' – மா. 229

'புகழ்மாற்று என்ப புகழ்வதுபோல் இகழ்ந்து
இகழ்வது போல்புகழ்ந்து இயம்பிய நிலையே.' – தொ. வி. 348

'பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்படல் புகழாப் புகழ்ச்சி யாகும்.' – மு. வீ. பொ. 100

'நிந்தையால் துதியும் துதியால் நிந்தையும்
வந்துற அமைவது வஞ்சப் புகழ்ச்சி.' –ச. 55

'நிந்தையி னுற்றுதி யும்துதி யால்நிந்தை யும்பணிக்க
வந்திடில் வஞ்சப் புகழ்ச்சி.' – குவ. அ. 30]

வரலாறு :

'போர்வேலின் வென்றதூஉம், பல்புகழால் போர்த்ததூஉம்,
தார்மேவு திண்புயத்தால் தாங்குவதூஉம், — நீர்நாடன்
தேர்அடிக்கூர் வெம்படையால் காப்பதூஉம், செங்கண்மால்
ஓர்அடிக்கீழ் வைத்த உலகு'

என வரும். தேர்அடி - சக்கரம்.

சோழன் போரிடும் வேலினால்வென்று கைப்பற்றியதும், தன் புகழால் மூடி மறையச் செய்ததும், தன் புயவலியால் காப்பதும், தன் ஆணைச்சக்கரத்தால் செங்கோல் செலுத்துவதும் திருமால் ஒரே அடியால் அளந்த நில வுலகமாகும் — என்ற இப்பாடலில்,

திருமால் ஒரே அடியால் அளந்து அகப்படுத்திய நில வுலகத்தை அரிதின் வென்று அதன்கண் தன் புகழ் பரப்பிச் சோழ மன்னன் அரிதின் காப்பாற்றுகிறான் என்று பழிப்பது போலக் கூறி, திருமால் அளந்த நிலவுலகம் முழுவதற்கும் அவனே செங்கோல் மன்னன் எனக் குறிப்பால் புகழ்ந்தவாறு காண்க.

இப்பாடலில், திருமால் வெளிப்படையாகப் புகழப்படச் சோழன் வெளிப்படையாகப் பழிக்கப்பட்டவாறு.]

'நினைவுஅரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர்
அனைவரையும் புல்லினாள் அன்றே, — மனுநூல்
புணர்ந்த நெறிஒழுகும் பூழியா!நீ இந்நாள்
மணந்த மரைமலர்மேல் மாது.'

இதுவும் அது.

[மனுநீதி கூறும் முறைப்படிச் செங்கோல் செலுத்தும் சோழனே! நீ இன்று உனக்கு உரிமையாகப் பெற்றுள்ள செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள், எல்லையற்ற புகழை உடைய உன் குலத்து முற்பட்ட மன்னர் அனைவரையும் முன்பு கூடினவள் அல்லளோ? — என்ற இப்பாடலில்,

பலரும் மணந்த ஒருத்தியைச் சோழன் தானும் மணந்துள்ளான் என்று பழிப்பது போலக் கூறி, பரம்பரையாகச் செல்வக்குடியில் பிறந்து கருவிலே திருவுடையவன் சோழன் என்ற புகழ்ச்செய்தியைக் குறிப்பால் பெறப்பட வைத்தவாறு காண்க.]

மேற்கூறிய இலேசத்தின் பாற்படும் பழிப்பது போலும் புகழ் புலப்படுத்தலோடு இப்புகழாப் புகழ்ச்சிக்கும், புகழ்வது போலப் பழித்திறம் புனைதலோடு மேற்கூறிய மாறுபடு புகழ்நிலைக்கும் வேற்றுமை யாதோ எனின், பழிப்பதுபோலப் புகழ் புலப்படுத்தல் ஒன்றனையே பழிப்பதுபோலப் புகழ்வது. புகழ்வது

போலப் பழித்திறம் புனைதல் ஒன்றனையே புகழ்ந்தாற் போலப் பழிப்பது. இவை அன்ன அன்றி, முறையே ஒன்றனைப் பழிப்பது வேறொன்றற்குப் புகழாய்த் தோன்றுதலும், ஒன்றனைப் புகழ்வது வேறொன்றற்குப் பழிப்பாய்த் தோன்றுதலும் ஆம் என்று உணர்க. (58)

[மாறுபடு புகழ்நிலையாவது – ஒன்றனைக் குறிப்பால் பழிப்பதற்கு அதனோடு எவ்விதத் தொடர்பும் இல்லாப் பிறிது ஒன்றனை வெளிப்படையாகப் புகழ்தலாம்.

புகழாப்புகழ்ச்சியாவது – ஒன்றனைக் குறிப்பால் புகழ்வதற்கு அதனோடு தொடர்புடைய பிறிதொன்றனை வெளிப்படையாகப் புகழ்ந்து அதனை வெளிப்படையாகப் பழிப்பதாம்.] *58*

நிதரிசனவணி

678. ஒருவகை நிகழ்வதற்கு ஒத்தபயன், பிறிதிற்குப்
புகழ்மை தீமை என்றுஇவை புலப்பட
நிகழ்வது ஆயின், நிதரிசனம் அதுவே.

இது நிறுத்தமுறையானே நிதரிசன அலங்காரம் கூறுகின்றது.

இ–ள்: ஒருவகையான் நிகழ்வது ஒன்றற்குப் பொருந்திய பயனைப் பிறிது ஒன்றற்கு நன்மை புலப்பட நிகழ்வது ஆதல், தீமை புலப்பட நிகழ்வது ஆதல் செய்து, அதனைச் சொல்லுவது நிதரிசனம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இது சுட்டு எனவும் காட்சியணி எனவும் கூறப்பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 85

'...சுட்டாம் நிகழ்பயன் கொள்பொருளில்
வேறுபட நன்மைதீமை வெளிப்படல் மெல்லணங்கே.'
– வீ. 174

'இவ்வகைக்கு உலகத்து இவைநிகழ் திறம்எனும்
அவ்வகைக்கு அவைபோன்று ஒருபொருள் திறங்களைக்
கோட்டமில் குணம்தீங்கு எனும்இரு குறிப்பின்
காட்டும் என்றே கழறுதல் நிதரிசனம்.' - மா. 189

'ஒருவகை யாளெழு குவதொன் றற்குப்
பொருந்தின ஒருபயன் வேறென் றற்கு
நன்மை தீமை நாட்டுவது நிதரிசனம்.' - மு. வீ. பொ. 101

'வாக்கியம் பதம்பொருள் காட்சிமூ வகைத்தே.' - ச. 41

'வாக்கியப் பொருளிரண் டற்கா ரோபம்
புனைதல் வாக்கியப் பொருட்காட்சி என்ப.' - ,, 42

'ஒன்றன் இயல்மற்று ஒன்றினில் ஏற்றிடல்
பதப்பொருள் என்னப் பாத்தனர் புலவர்.' - ,, 43

'நற்பொருள் தீப்பொருள் நவிலும்இவ் விரண்டினுள்
ஒன்றைச் செய்கையின் உணர்த்தல் பொருளே.' - ,, 44

'சொற்றிடொப் பான இருவாக் கியங்களில் தோன்றுபொருட்கு
ஒற்றுமை என்பதின் ஆரோபம் காட்சி.' - குவ. அ. 19

'நேரும் பதப்பொருள் ஆரோ பமும்முன் நிகழ்த்துவதாம்.'
- குவ. அ. 19

'தீப்பய னுவது நற்பய னுவது செய்கையினுல்
வாய்ப்பொடு காணப் புரிவதும் அவ்வணி.' - ,, 19]

தன்மை புலப்பட வரும் நிதரிசன அலங்காரம் வருமாறு :

'பிறர்செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொருத திறமும் — அறிவுறீஇ,
செங்கமலம் மெய்மலர்ந்த; தேங்குமுதம் மெய்அசைந்த;
பொங்குஒளியோன் வீறுஎய்தும் போது'

என வரும்.

[பிறர் செல்வத்தைக் கண்டால் பெரியோர் மகிழ்வர் என்பதனையும் சிறியோர் பொறுக்க மாட்டாமல் மனம் புழுங்குவர் என்பதனையும் அறிவுறுத்தி, கதிரவன் ஒளியால் அழகுறும்போது தாமரை மலரவும் குமுதமலர்கள் கூம்பின – என்ற இப்பாடலில்,

தாமரை குமுதம் என்ற இவற்றின்கண் இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி உலக மக்களுக்குச் சான்றோர், கீழோர் ஆகியவர் திறத்தை அறிவிப்பதாகக் கூறப்பட்டமை காண்க.

பிறர் செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்தலைப் பொங்கு ஒளியோன் வீறு எய்தும்போது செங்கமலம் மெய்மலர்ந்து அறிவுறுத்தது என்பது நற்பொருள் காட்சியாம்.]

தீமைபுலப்படவரும் நிதரிசன அலங்காரம் வருமாறு:

'பெரியோர் உழையும் பிழைசிறிது உண்டுஆயின்,
இருநிலத்தில் யாரும் அறிதல் — தெரிவிக்கும்,
தேக்கும் கடல்உலகில் யாவர்க்கும் தெள்அமுதம்
வாக்கும் மதிமேல் மறு'

என வரும். **(59)**

[பெரியவர்களிடமும் சிறிதளவு மாசு ஏற்படுமாயின் உலகிலுள்ள எல்லோராலும் அறியப்படும் என்ற செய்தியை, கடல் சூழ்ந்த உலகில் யாவருக்கும் அமுத கிரணங்களை வழங்கும் முழுமதியின்கண் உள்ள களங்கம் தெரிவிக்கின்றது – என்ற இப்பாடலில்,

பல நற்பண்பு உடையாரிடத்து ஒரு தீப்பண்பு இருப்பின் அதனையே உலகம் தூற்றும் என்ற நிகழ்ச்சி சந்திரனிடத்துள்ள மறுவினால் போதருகிறது என்ற செய்தி தீப்பொருட் காட்சியாமாறு காண்க.]

59

புணர்நிலையணி

679. வினைபண்பு எனும்இவை இருபொருட்கு ஒன்றே
புணர மொழிவது புணர்நிலை ஆகும்.

இது நிறுத்தமுறையானே புணர்நிலை அலங்காரம் கூறுகின்றது.

இ-ள் : வினையானும் பண்பானும் இரண்டு பொருளுக்கு ஒன்றே பொருந்தச் சொல்வது புணர்நிலை என்னும் அலங்காரமாம் என்றவாறு.

ஒன்றே மொழிவது என்று ஒழியாது 'புணர மொழி வது' என்ற மிகையானே, இவ்வலங்காரம் ஒருவினை ஒடுச்சொல் பொருள்படவே வருதல் கொள்க.

[இவ்வணி ஒருங்கியல் எனவும், உடன் நிகழ்ச்சியணி எனவும், உடன் நவிற்சியணி எனவும் கூறப்பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 86

'துப்பார் ஒருங்கியல் தூய வினைபண்பு இரண்டுபொருட்கு
ஒப்பா ஒரு சொல்லு வைப்பது.' – *வீ.* 175

'நன்றிகொள் பண்பு வினைஇவை காலத்து
ஒன்ற இருபொருட்கு உரைப்பது புணர்நிலை.' – *மா.* 206

'விழுமிய வினையினும் குணத்தினும் இருபொருட்கு
ஒருபுணர் புணர்ப்பது புணர்நிலை யாகும்.' – *மு. வீ. பொ.* 102

'சீரியோர் உள்மகிழ் செயும் உடன் நிகழ்வை
உரைப்பது தனைஉடன் நிகழ்ச்சி என்ப.' – *ச.* 46

'உணர்ந்தோர் உவக்க உடன்நிகழ்வு ஓதல் உடன்நவிற்சி.'
– *குவ. அ.* 21]

அவற்றுள், வினைப்புணர்நிலை அலங்காரம் வருமாறு:

'வேண்டுருவம் கொண்டு, கருகி, வெளிபரந்து,
நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த — ஆண்தகையோர்
மேவல் விரும்பும் பெருநசையால் மெல்ஆவி
காவல் புரிந்திருந்தோர் கண்'

என வரும்.

[கார்காலம் வந்த அளவில், ஆண்மைக்குரிய தகைமையினால் தம்மைப் பிரிந்து பொருள் தேடச் சென்ற தம் தலைவர் தமமை மீண்டும் வந்து அடைதல் வேண்டும் என்ற பெருவிருப்பினால் பிரிந்து போய்க்கொண்டிருந்த உயிரை உடலைவிட்டு நீங்காமல் பாதுகாத்திருந்த தலைவியருடைய கண்கள், பலவகை வடிவங் கொண்டு கறுத்து வானம் எங்கும் பரந்து நீண்ட மேகங்களோடு நீரைச் சொரிந்தன – என்ற இப்பாடலில்,

கண் முகிலுடனே 'நீர் பொழிந்த' என இருபொருள்கள் ஒரே வினையை முடிக்குஞ் சொல்லாகக் கொண்டமை காண்க.]

பண்புப்புணர்நிலை அலங்காரம் வருமாறு :

'பூங்காவில் புள்ஒடுங்கும் புன்மாலைப் போதுடனே,
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால்,—தாம்காதல்
வைக்கும் துணைவர் வரும்அவதி பார்த்து, ஆவி
உய்க்கும் தமியோர் உயிர்'

என வரும். **(60)**

[தாம் அன்புவைத்த துணைவர் பருவங்குறித்துப் பிரிந்து சென்றாராக, அவர் வரும் காலத்தை எதிர்நோக்கிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தவராகிய தனித்திருந்த நங்கைமாருடைய உயிரும் பூக்கள் நிறைந்த சோலையிலே பறவைகள் தங்கள் கூடுகளுக்குச்சென்று தங்கும் புல்லிய மாலைகாலமும் நீங்காத துயரம் செய்து நீண்டு கொண்டிருந்தன – என்ற இப்பாடலில்,

உயிர், மாலைப்போது என்ற இரண்டும் 'நீண்டன' என்ற ஒரே பண்புச்சொல்லைக் கொண்டு முடிந்து பொருள் தந்தவாறு காண்க. மாலைநீண்டது என்பது - மாலைப்பொழுதின் ஒவ்வொரு கணமும் ஊழிபோலத் தோன்றியது என்பதாம். உயிர் நீண்டது என்பது - பிரிதல் துன்பம் தாங்காது உடலைவிட்டுப் போதலை ஒழித்துத் தலைவிக்குத் துயரம் செய்து ஒவ்வொரு கணமும் ஊழிபோலக்காட்டி உடலில் உயிர் தடுமாறிக் கொண்டிருந்தது என்பது.] 60

பரிவருத்தனையணி

680. பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே.

இது நிறுத்தமுறையானே பரிவருத்தனை அலங் காரம் கூறுகின்றது.

இ-ள்: பொருள் ஒன்றற்கு ஒன்று கொடுத்து ஒன்று கொண்டனவாகச் சொல்லுவது பரிவருத்தனை என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இது பரிவருத்தனம் எனவும் மாற்றுநிலையணி எனவும் பரிமாற்றம் எனவும் கூறப்படும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் - தண்டி 87

'உயர் பரி மாற்ற மது,
செப்பார் பொருள் மாறிடல்.' - வீ. 175

'உரியதோர் பொருள் கொடுத்து ஒருபொருள் கோடல்
பரிவருத் தனையெனப் பகர்ந்தனர் புலவர்.' - மா. 213

'ஒன்றற் கொருபொருள் கொடுத்துஒரு பொருளை
வாங்கல் பரிவருத் தனமா கும்மே.' - மு. வீ. பொ. 103

'இழிவுஈத்து உயர்வுஉறல் மாற்று நிலையே.' – ச. 78

'குறைவாம் பொருளைக் கொடுத்ததி கப்பொருளைக்கொளலுக்கு
அறைபேரும் மாற்று நிலையணி.' – குவ. அ. 52

வரலாறு :

'காமனை வென்றோன் சடைமதியும் கங்கையும்,
தாம நிழல்ஒன்று தாம்கொடுத்து, — நாமப்
பருவாய் அரவின் பணமணிகள் தோறும்,
உருஆ யிரம்,பெற் றுள'

என வரும். (61)

மன்மதனை வென்ற சிவபெருமானுடைய சடையில் தங்கியிருக்கும் பிறைமதியும் கங்கையும் தாம் ஒரு பிம்பத்தையே வழங்கி, அச்சிவபெருமான் அணிந்த அஞ்சத்தக்க பருத்த வாயை உடைய பாம்புகளின் படங்களில் உண்டாகிய மணிகள் தோறும், தத்தம் உருவம் பிரதிபிம்பிப்பதால், பல பிம்பங்களை உடையவாயின – என்ற இப்பாடலில்,

ஒரு பிம்பத்தைக் கொடுத்துப் பல பிம்பங்களைப் பெறுதல் பரிவருத்தனையாகும். இதற்கும் பரிவிருத்திக்கும் உள்ள சிறு வேறுபாட்டினைப் பிற்சேர்க்கையில் காண்க.] *61*

வாழ்த்தணி

681. இன்னார்க்கு இன்னது இயைக என்றுதாம்
முன்னியது கிளத்தல் வாழ்த்துஎன மொழிப.

இது நிறுத்தமுறையானே வாழ்த்து அலங்காரம் கூறுகின்றது.

இ-ள் : இன்ன தன்மையை உடையார்க்கு இன்னது நிகழ்க என்று தாம் கருதியதனை விரிப்பது வாழ்த்து என்னும் அலங்காரமாம் என்றவாறு.

[இஃது ஆசியணி எனவும் கூறப்பெறும்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 88

'திகழ் ஆசியின் சீர்மைசொலின்,
தப்பாத ஆசீர் வசனம் எனஉணர் தாழ்குழலே.' - *வீ.* 175

'வாழ்த்துவ தாமே வாழ்த்தெனப் படுமே.' – *மா.* 246

'அதுவே,
கடவுள் வாழ்த்தே அறுமுறை வாழ்த்தெனத்
திடனுற வருமிரு சிறப்பிற் றாகி
வாழ்த்துதல் தானும் மரீஇயதொன் றாகும்.' – *மா.* 247

'மறையவர் துறவோர் மழைநாடு ஆவுடன்
பொறைபுரி அரசுஎனப் புகல்இவை யாவும்
அமரர்கண் எனலாம் அறுமுறை வாழ்த்தே.' – *மா.* 248

'வாழ்த்தி உரைப்பது வாழ்த்தெனப் படுமே.'
– *மு. வீ. பொ.* 104]

வரலாறு :

'மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி!
ஆவாழி! வாழி அருமறையோர்! — காவிரிநாட்டு
அண்ணல் அநபாயன் வாழி! அவன்குடைக்கீழ்
மண்உலகில் வாழி மழை'

என வரும். பிறவும் அன்ன. (62)

[அழியாத் தமிழை உலகிற்கு வழங்கிய முற்பட்ட பன்னூலும் கற்ற அகத்தியன் வாழ்க; பசுக்கள் வாழ்க; அரிய மறைவல்லார் வாழ்க; காவிரி நாட்டுத் தலைவனாகிய அநபாயச் சோழன் வாழ்க; அவன் குடைநிழலில் மகிழ்ந்திருக்கும் இவ்வுலகில் மழை வாழ்க.

இஃது 'அமரர்கண் முடியும் அறுவகை வாழ்த்து' என்பதன் பாற்படும்.]

சங்கீரணவணி

682. மொழியப் பட்ட அணிபல தம்முள்
தழுவ உரைப்பது சங்கீ ரணமே.

இது நிறுத்தமுறையானே சங்கீரண அலங்காரம் கூறுகின்றது.

இ-ள்: மேல்சொல்லப்பட்ட அலங்காரங்கள் பலவும் தம்முள் பொருந்த உரைப்பது சங்கீரணம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

எனவே, உறுப்பு அனைத்தும் கூடிய கலவை போல்வது ஒரு தன்மைத்தாய், ஒன்றற்கு மிகுதி தோன்ருமல் உரைப்பதாம் என்பதாயிற்று. ஆகவே, இரண்டு அணி தம்முள் கூடிவருவனவாக மேல்கூறியன எல்லாம் சங்கீரணம் எனப்படா; என்னை? சந்தனத்தோடு கருப்பூரம் விரவினும் சந்தனத்தோடு மான்மதம் விரவினும், சந்தனமும் கருப்பூரமும், சந்தனமும் மான்மதமும் என்பது அல்லது, கலவை எனப்படாதவாறுபோல என்று உணர்க.

[*இது விரவியல் எனவும் கூறப்பெறும். இரண்டு அணிகளின் சேர்க்கை சங்கரம் என்று மாறனலங்காரம் கூறும். 249*

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 89

'பண்பு தரும்பல் லலங்காரம் சேர்ந்து பயிலுவது
நண்பு தரும் விரவாம்,' – *வீ.* 176

'எள்பய ருெடுதண் டுலமிவை ஒளிதிகழ்
கட்புலம் கொளவிர வியகாட் சியபோல்
இரண்டிறந் தனவாய் இனிமையின் அணிபல
திரண்டன சங்கீ ரணமெனச் செப்பினர்.' - மா. 250

'சங்கீரணம் என்ப தகும்பல அணிவகை
கொங்கீரத் தொடையெனக் கூட்டிக் கூறலே.'
- தொ. வி. 368]

வரலாறு :

'தண்துறைநீர் நின்ற தவத்தால், அளிமருவு
புண்டரிகம், நின்வதனம் போன்றதால்; — உண்டோ
பயின்ருர் உயிர்பருகும் பால்மொழியாய்! பார்மேல்
முயன்ருல் முடியாப் பொருள்.'

இதனுள், 'தண்துறைநீர் நின்றதவம்' எனத் தற்குறிப் பேற்றமும், 'தவத்தால்' எனக் கருமக்காரக ஏதுவும், 'அளிமருவும்' எனச் சிலேடையும், 'புண்டரிகம் நின் வதனம் போலும்' என உவமையும், 'உண்டோ முயன்ருல் முடியாப்பொருள்' என வேற்றுப்பொருள் வைப்பும், 'உயிர்பருகும்பால் மொழியாய்' எனச் சுவை யும் விரவி வந்தவாறு காண்க. பிறவும் அன்ன. (63)

[*பழகியவருடைய உயிரைப்பருகும் பால் போன்ற இனிய சொல்லை உடைய தலைவியே! தண்ணிய துறையில் நீரில் நின்று செய்த தவத்தினுலே வண்டுகள் மொய்க்கும் தாமரை கருணை பொருந்திய நின் முகம் போன்ற தோற்றமுடைத்தாயிற்று. இவ்வுலகில் முயற்சி செய்தால் அடையமுடியாத பொருளே இல்லை - என்ற இப்பாடலில்,*

பல அணிகளும் வந்துள்ளமை காண்க.] *63*

பாவிகவணி

683. பாவிகம் என்பது காப்பியப் பண்பே.

இது நிறுத்தமுறையானே பாவிக அலங்காரம் உணர்த்துகின்றது.

இ-ள் : பாவிகம் என்று சொல்லப்படுவது பொருள் தொடர்நிலைச் செய்யுள்திறத்துக் கவியால் கருதிச் செய்யப்படுவதோர் குணமாம். என்றவாறு.

அஃதாவது அத்தொடர்நிலைச்செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படுவது.

[ஒரே பாடலில் கொள்ளப்படும் ஏனைய அணிகளின் இது வேறுமாறு காண்க.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 91

'பாவிகமது நற்கவியின்,
ஒண்பொருளின் தொடர்காப்பிய முற்றின் உரைபெறுமால்.'
– வீ. 176

'விளம்பிய காப்பியக் குணங்கள்பா விகமே.' – *மா.* 251]

வரலாறு :

'பிறன்இல் விழைவோர் கிளையொடும் கெடுப.'

'பொறையின் சிறந்த கவசம் இல்லை,'

'வாய்மையில் கடியதுஓர் வாளி இல்லை.'

என வரும். இதனுள் என்பன போல்வன தோன்றக் கிடந்தவாறு காண்க. (64)

விளக்கம்

[என்பன போல்வன – இங்குக் குறிப்பிட்டவை போன்ற பொதுப் பண்புகள்,

பிறன்......கெடுமே — இராமாயணம்;

பொறை ...... இல்லை — பாரதம்;

வாய்மை ...... இல்லை — அரிச்சந்திர புராணம்.

கவிஞர்களுடைய கற்பனை வளத்திற்கு ஏற்ப அணிவகைகளும் விரிந்துகொண்டே செல்லும்நிலைய. சொல்லணிகளைவிடப் பொருளணிகளே பெருங்கவிஞர்களால் போற்றப்படுவன. ஆனால் தொல்காப்பியத்துக்கு உரை வரைந்த பேராசிரியருக்கு உவமம் முதலியவற்றை அணி என்று குறிப்பிடுவதும், அணிவகைகள் பல அமைத்துப் பெயரிடுவதும் உடன்பாடல்ல; உவமம் முதலியவை பொருட்கூறுகள் என்பதே அவர் கருத்து. அவர் குறிப்பிடுவன பின் வருமாறு:

உவமவியலுள் கூறுகின்ற உவமங்களுள் சிலவற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்று அவை செய்யுட் கண்ணே அணியாம் என இக்காலத்து ஆசிரியர் நூல் செய்தாரும் உளர். அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணி என்று இலக்கணம் கூறப்படா; என்னை? வல்லார் செய்யின் அணி யாகியும் அல்லார் செய்யின் அணி அன்று ஆகியும் வரும், தாம் காட்டிய இலக்கணத்தில் சிதையாத வழியும் என்பது.......

அல்லதூஉம் பொருளதிகாரத்துப் பொருட் பகுதிகள் எல்லாம் செய்யுட்கு அணியாம்; அவை 'பாடலுள் பயின்றவை' எனப்பட்டன என்பதனான். அவை யெல்லாம் தொகுத்து அணியெனக் கூறாது, வேறு சிலவற்றை வரைந்து, அணியெனக் கூறுதல் பயமில் கூற்றாம் என்பது.

இனி இரண்டு பொருள் எண்ணி அவற்றை வினைப் படுக்குங்கால் ஒருங்கு என்பதொரு சொற்பெய்தல் செய்யுட்கு அணி என்ப. (வீரசோழியம்) இன்னோரன்ன பலவும் செய்யுட்கு

அணியாம் என்பது அவர் கருத்து. ஒருங்கு என்பதே அன்றி மூன்று தாழிசையுள் மூன்று பொருள்கூறி 'எனவாங்கு' என்பதொரு சொல்லான் முடிந்த வழியும் எனவாங்கு என்பதொரு மொழியில் 'என' என்பது ஓர் அலங்காரம் எனல் வேண்டும் ஆகலான் அவ்வாறு வரையறுத்துக் கூறல் அமையாது என்பது. பிறவும் அன்ன.

இனி, அவற்றைப் பொருள் உறுப்பு என்பதல்லது, அணி என்பவாயின், சாத்தனையும் சாத்தனால் அணியப்பட்ட முடியும் தொடியும் முதலாயவற்றையும் வேறு கண்டாற் போல அவ்வணியும் செய்யுளின் வேறாகல் வேண்டும் என்பது.

இனி, செய்யுட்கு அணி செய்யும் பொருட்படை எல்லாம் கூறாது, சிலவே கூறி ஒழியின், அது குன்றக்கூறலாம் என்பது. அவை யாவை எனின்,

'அகன்அமர் கேள்வன் அகற்சிதீர்த் தற்கு
மகவொடு புகுந்த மகவுநிலை எனாஅ
மறுக்குங் காலை மறுத்துஉரை மொழியாது
குறிப்புவேறு கொளீஇய குறிப்புநிலை எனாஅப்
புலவிக் கண்ணும் போக்கின் கண்ணும்
அழுதலும் அழாஅது உயங்கலும் என்றாங்கு
இருவகைப் பட்ட மங்கலம் எனாஅப்
புலம்புறு காலை அறிவொடு படாது
புலம்புகொள வந்த செய்வினை எனாஅ
இன்னோ ரன்ன பலபொருட் பகுதி
நன்னெறிப் புலவர் நாட்டல்வகை உடைய'

என்று ஒரு சூத்திரம் செய்யின் அவையும் அலங்காரம் எனப்படும் என்பது.

அவற்றிற்கு உதாரணம்:

'ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணைஅமை பிணையல்' – அகநா. 5

என்பது மகவுநிலை.

'ஓவச் செய்தியின் ஒன்றுநினைந்து ஒற்றி' – அகநா. 5

என்பது குறிப்புநிலை; என்னை? தலைமகன் போக்கினை உவக்கும் குறிப்பு அல்லாத குறிப்பு ஆகலின் அஃது அணியெனப்படும்.

'தும்முச் செறுப்ப அழுதாள்' – கு. 1318

என்பது புலவியுள் அழுத மங்கலம்.

'பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணைஅமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை' – அகநா. 5

என்பது போக்கின்கண் அழாத மங்கலநிலை.

'விளிநிலை கேளாள் தமியள் மென்மெல
நலம்மிகு சேவடி நிலமிசை வடுக்கொளாஅக்
குறுக வந்து கூர்எயிறு தோன்ற' – அகநா. 5

என்பது, அறிவொடு படாது புலம்பு கொள வந்த செய்வினை; என்னை? கேளாது கேட்டாள்போல வந்தமையின். அதுவும் அலங்காரம் என்று சூத்திரம் செய்துகொள்ள வேண்டும், செய்யுட்கு அணி வேறு கூறின் என்பது.

இனி, இங்ஙனம் கூறின எல்லாம் குற்றம் என்று கொள்ளப் படா; என்னை? பொருளதிகார முறை பெருது பிறழ்ந்து இடை யறவுபட்ட காலை இடர்ப்பட்டுச் செய்தன ஆகலான் அவையும் அவ்வாற்றான் அமையும் என்பது' – தொ. பொ. 312 பேரா.

இக் கூற்றான் அணி இலக்கணத்தையே ஒத்துக்கொள்ளாத பேராசிரியர் ஒருவாற்றான் காலத்தை ஒட்டி அதுவும் தேவைப் பட்டதே என்று அமைதிகோடல் உணரப்படும்.]

சொல்லணி வகை

684\. சொல்லணி என்பது சொல்லுங் காலை
மடக்கும்அதன் வழிப்படூஉம் சித்திர மும்என
நடக்கும் என்மனார் நயன்உணர்ந் தோரே.

இது நிறுத்தமுறையானே பொருள்அணி உணர்த்திச் சொல்லணி உணர்த்துவான் புகுந்த வற்றுள், இஃது அஃது இத்துணைத்து என்கின்றது.

இ–ள் : சொல்லான் உளதாகிய அணி என்று கூறப்படுவது கூறுமிடத்து மடக்கும் அதன்பாற்படும் சித்திரமும் என இருவகைத்தாய் நடக்கும் என்று கூறுவர், அதன்இயல்பை உணர்ந்தோர் என்றவாறு.

(65)

விளக்கம்

இச் சொல்லணிகளையும் பேராசிரியர் போற்றுவாரல்லர். இவற்றுள் சித்திரகவி பற்றி அவர் கூறுவன பின்வருமாறு :

ஆண்டுக் கூறிய மரபு உலகியல் ஆகலான் அவ்வுலகியல் அவ்வாறு ஆதற்குக் காரணம் ஈண்டுக்கூறி செய்யுட்கும் அதுவே காரணம் எனக் கூறினான் என்பது..............இன்ன பொருட்கு இன்ன செய்யுள் உரித்து எனவும், இனைப்பகுதியால் பெயர் பெறும் எனவும் மரபு பற்றியே சொல்லப்படும் என்றற்கும், இனி, நிறை மொழிமாந்தர் மறைமொழி போல்வன சில மிறைக்கவி பாடினார் உளர் என்பதே பற்றி (தேவாரம் முதலியவற்றில் ஏகபாதம், எழுகூற்றிருக்கை, மாலைமாற்று முதலியன தேவரைப் பற்றி அமைந்துள்ளன) அல்லாதாரும் அவ்வாறு செய்தல் மரபு அன்று என்றற்கும் இது கூறினான் என்பது. அவை – சக்கரம், சுழிகுளம், கோமூத்திரிகை, ஏகபாதம், எழுகூற்றிருக்கை, மாலை

மாற்று என்றாற்போல்வன. இவை மந்திரவகையான் அன்றி வாளாது மக்களைச் செய்யுள் செய்வார்க்கு அகன் ஐந்திணைக்கும் மரபு அன்று என்பது கருத்து. அல்லாதார் இவை எல்லார்க்கும் செய்தற்கு உரியன என இழியக் கருதி அன்னவகையான் வேறு சிலபெய்துகொண்டு அவற்றிற்கும் இலக்கணம் சொல்லுப. அவை இத்துணை என்று வரையறுக்கலாகா; என்னை? ஒற்றை, இரட்டை, புத்தி, வித்தாரம் என்றாற்போல்வன பலவும் கட்டிக் கொண்டு அவற்றானே செய்யுள் செய்யினும் கடியலாகாமையின், அவற்றிற்கு வரையறை வகையான் இலக்கணம் கூறலாகா என்பது.

'ஐயைதன் கையுள் இரண்டுஒழித்துஎன் ஐம்பால்மேல்
பெய்தார் பிரிவுஉரைத்தல் இல்லையால்'

எனவும்,

'கோடாப் புகழ்மாறன் கூடல் அனையாளை
ஆடா அடகினுளும் காணேன்' – திணை. நூற். 4

எனவும் சொல்லுவார் சொல்லுவனவற்றுக்கெல்லாம் வரையறை இன்மையின் அவற்றுக்கு இலக்கணம் கூறார் பண்ணத்திப்பாற் படுப்பினல்லது, என்பது. – தொ. பொ. 645 பே.]

65

மடக்கு இலக்கணமும் வகையும்

685. எழுத்தின் கூட்டம் இடைபிறிது இன்றிப்
பெயர்த்தும்ஒரு பொருள்தரின் மடக்குஎனும்
பெயர்த்து,அஃது
ஓர்அடி முதலா நான்குஅடி காறும்
சேரும் என்ப தெளிந்திசி னோரே.

இது மேற்கூறிய இருவகைப்பகுதியுள் மடக்கினது பொது இயல்பும் அதன்வகையும் கூறுகின்றது.

இ-ள் : எழுத்துக்களது தொகுதி பிறஎழுத்தானும் சொல்லானும் இடைவிடாது தாமே பெயர்த்தும் வேறு பொருளை விளக்குமாயின் அது மடக்கு என்னும் பெயரை உடைத்தாம்; அம்மடக்கு நான்கடிச் செய்யுளுள்ளே நடக்குங்கால் ஓர்அடிக்கண்ணும் இரண்டடிக்கண்ணும் மூன்றடிக்கண்ணும் நான்கடிக் கண்ணும் பொருந்தி நடக்கும் என்றவாறு.

எழுத்துக்களது தொகுதி எனவே, இரண்டு முதலிய எல்லா எழுத்தும் ஆம் எனவும், மடக்கு என்னது 'பெயர்த்தும்' என்ற மிகையானே இடைபிறிதின்றி வருதலே அன்றி உளதாயும் வரும் எனவும், நான்கடிச் செய்யுள் என்பது ஆற்றலால் போந்தது எனவும் கொள்க. ஓரடிக்கண் வருவன முதலடிக்கண் வருதலும், இரண்டாம் அடிக்கண் வருதலும், மூன்றும் அடிக்கண் வருதலும், நான்காம் அடிக்கண் வருதலும் எனவாம். அவை முன்னர்க் காட்டுதும். (66)

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் - தண்டி 92, 93

'குறித்துரை எழுத்தின் கூட்டம் முதன்மொழி
மறித்தும்ஓர் பொருள்தர மடக்குதல் மடக்கே.' - *மா.* 232

'அதுவே,
தொடர்பிடை விடாதும் தொடர்பிடை விட்டும்
அடைவினில் இருமையும் அமைவன வாகியும்
நடைபெறும் முப்பாற் றெனநவின் றனரே.' - *மா.* 233

தொன்னூல் விளக்கச் சொல்லணியியல்

'சொல்லணி மறிநிலை மிகல்எஞ்சல் ஒப்புஎன்று
ஓல்அணித் தொகுதி ஒருநான் கென்ப.' - *தொ. வி.* 303

'மறிநிலை உரிமை மாறுஅணி யாயவை
குணம்முதல் காரணம் குறிப்புஒழுக்கம் ஐந்தே.' ,, 304

'பொருள்கோ ளும்மறி நிலைபோல் வனவாம்.' ,, 305

'சொல்மிக் கணிஎன்ப சொல்மறி தரல்அவை
மடக்கிசை அந்தாதி அடுக்கென மூன்றே.' ,, 314

'மடக்கணி ஓர்மொழி மடங்கி வரல்அவை
இடையிடு முதல்கடை இருவழி மடக்கும்
இடையிடா மடக்கும் எனநால் வகையே.' ,, 315

'இசைஅந் தாதியே ஈற்றுச்சொல் மீண்டு
இசைபெற உருபுவேறு எனினும் இயைதலே.' ,, 316

'அடுக்கணி ஒருபொருட்கு அடுக்கிய திரிசொல்
அடுக்கி வைப்பது அடுக்கணி எனப்படும்.' ,, 317

'எஞ்சணி என்ப எளிதுணர் பலமொழி
துஞ்சில் சிறப்பில் தோன்றுது ஒழித்தலே.' ,, 318

'பெயர்வினை உம்மைசொல் பிரிப்புஎன ஒழியிசை
எதிர்மறை இசைக்குறிப்பு எஞ்சணி பத்தே.' ,, 319

'ஒப்பணி திரிபுஇயைபு ஒழுகிசை இயைபிசை
தப்பில் சமமெனத் தரும்நால் வகையே.' ,, 320

'திரிபுஇயைபு ஒருமொழி சேரியல் உருபும்
உருபுஒன்று அணைபல உறையும் என்ப.' ,, 321

'ஒழுகிசை சீர்ஒத்து ஒழுகிய செய்யுள்போல்
வழுவிய இயற்றமிழ் வருதலும் ஆகும்.' ,, 322

'இயைபிசை சொல்லுருபு ஈற்றில்ஒத்து ஆதலே.' ,, 323

'சமமென்ப மாத்திரை தவுதல்வேற் றெழுத்து
ஒன்றுறல் அன்றி ஒன்றிய சொல்லே
மற்றவற் றினமாம் மாத்திரைச் சுருக்கம்
திரிபது ஆதி சேர்ந்தன பிறவே.' ,, 324

'சொல்லணி மறிநிலை ஐந்தும்கோள் எட்டும்
சொல்மிக் கணிமூன்றும் சொல்லெஞ் சணிபத்தும்
சொல்லொட் டணிநான்கும் தொகைஆ றைந்தே.' ,, 325

'அக்கரம் மொழிஅடி யாவது மாறிப்
புணர்ப்பது மறிநிலைப் பொருளா கும்மே.' – *மு. வீ. சொ.* 2

'அந்த முதலாத் தொடுப்பது அந்தாதி
மடக்காம் என்மனுர் மறைஉணர்ந் தோரே.' – மு. வீ. சொ. 3

'அதுதான்
ஓரடி முதலா நான்கடி காறும்
சேரும் என்மனுர் தெளிந்திசி னோரே.' ,, 5

'எழுத்தடி மொழியிடை யிட்டும் இடாமலும்
மாறிமற் றொருபொருள் வந்து விளைவது
மடக்காம் எனப்பெயர் வைக்கப் படுமே.' ,, 4]

66

எழுவகை மடக்கு

686. ஆதி[1], இடை[2], கடை[3], ஆதியோடு இடை[4], கடை[5],
இடையொடு கடை[6], முழுது[7], எனஎழு வகைத்தே.

இஃது அவ்வாற்றான் அத்துணைத்தாம் என்றதனையே இவ்வாற்றான் இத்துணைத்தாம் என்கின்றது.

இ–ள்: முற்கூறிய மடக்கு ஆதிமடக்கும், இடைமடக்கும், கடைமடக்கும், ஆதியோடு இடைமடக்கும் ஆதியோடு கடைமடக்கும் இடையொடு கடைமடக்கும், முழுதும் மடக்கும் என எழுவகைப்படும் என்றவாறு. (67)

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 94

'ஆதியும் ஈறும்இடையும் அடிஒன்றி லேமடக்கும்
ஓதிய பாதங்கள் நான்கினு மாம்ஒரு பாதமுற்றுந்
தீதிய லாமை மடக்கலு முண்டு தெரிந்தவற்றைக்
கோதிய லாமை விகற்பத் தினிலறி கோல்வளையே.' – வீ.179

'ஒன்று தியவாம் ஒருநான் களவும்
சென்று நடைபெறும் சீர்த்தகற் கடியே.' – மா. 254

'முதல்இடை கடையே [முதலொடு இடைகடை
இடையொடு கடைமுழுது எனஎழு] வகைத்தே.' — மா. 255

'எழுவாய் அடிஇரண்டு இடைஈரடி முத
லடிமூன் ருமடி ஆதி யடியொடு
நான்காம் அடிகடை யீரடி இரண்டடி
நாலடி யினும்வரும் நாடுங் காலே.' — மு. வீ. சொ. 6

'ஓரடிக் கண்ணெழு கியமடக்கு ஏழாம்
அவைஅடி ஆதியும் அந்தமும் இடையினும்
அடிமுதல் இடையினும் கடையினும் முதலினும்
இடையினும் கடையினும் முதலிடை கடையினும்
மடங்கும் என்மனுர் மறைஉணர்ந் தோரே.' — மு. வீ. பொ. 190]

ஓரடிமடக்கு ஒழிந்த பதினொன்ருவன

687. ஓரடி ஒழிந்தன தேருங் காலை
இணைமுதல் விகற்பம் ஏழும் நான்கும்
அடைவுறு பெற்றியின் அறியத் தோன்றும்.

இதுவும் அதனையே விரித்து உணர்த்துகின்றது.

இ—ள்: ஓரடிமடக்கு ஒழிந்தன ஆராயுங்காலத்து, மேல் செய்யுளியலில் கூறப்படும் இணைமுதலிய விகற்பத் தொடை ஏழும் நான்கும் ஆகிய பதினொன்றும் போல விளங்கத் தோன்றும் என்றவாறு.

அடைவுறு பெற்றியின் அறியத் தோன்றுதலாவது இருசீர்த்தொடை ஆறும் முச்சீர்த்தொடை நான்கும் நாற்சீர்த்தொடை ஒன்றும் ஆகிய தொடைவிகற்பம் பதினொன்றும்போல, முதல்அடியும் இரண்டாம் அடியும், முதல் அடியும் மூன்ரும் அடியும், முதல்[அடியும்] நான்காம் அடியும், மூன்ரும் அடியும் நான்காம் அடியும், இரண்டாம் அடியும் நான்காம் அடியும் மடிக்கிவரும் ஈரடிமடக்கு ஆறும்,

ஈற்றுஅடி ஒழித்து ஏனை மூன்று அடியும், இரண்டாம் அடி ஒழித்து ஏனை மூன்று அடியும், மூன்ரும்அடி ஒழித்து ஏனைமூன்று அடியும், முதல்அடி ஒழித்து ஏனை மூன்று அடியும் மடக்கிவரும் மூவடிமடக்கு நான்கும்,

நான்குஅடியும் மடக்கிவரும் முற்றுமடக்கு ஒன்றும் என வருதலாம்.

நாற்சீர்அடியுள் ஓதுவதனை நான்குஅடிச் செய்யுட்-கண் ஓதினர், 'ஒப்பின்முடித்தல்' என்பதனுன். எனவே, இங்ஙனம் கூறிய மூவகையாகிய மடக்குப் பதினென்றும் மேற்கூறிய ஓரடிமடக்கு நான்கும் ஆகிய பதினைந்தும், ஆதி இடை கடை முதலியவற்ரேடு கூட்டி உறழ நூற்றைந்து வகைப்படும். அவையே இடையிடாது வருவனவும் இடையிட்டு வருவனவும், இடையிட்டும் இடையிடாதும் வருவனவும் என்று கூறப்படும் மூன்று வகையோடும் கூட்டி உறழ, முந்நூற்று ஒருபத்தைந்து வகையவாம். ஆகவே, மடக்குஎனத் தொகையான் ஒன்றும், அடியான் வகை நான்கும், அவற்றின் பகுதி யாகிய விரியான் மடக்கு முந்நூற்று ஒருபத்தைந்துமாம் என உய்த்துணர்க.

விளக்கம்

[*இருசீர்த் தொடை ஆறு:*

1, 2 — இணை.

1, 3 — பொழிப்பு.

1, 4 — ஒரூஉ.

3, 4 — கடையிணை.

2, 4 — பின்.

2, 3 — இடைப்புணர்.

முச்சீர்த் தொடை நான்கு :

1, 2, 3 — கூழை
1, 3, 4 — மேற்கதுவாய்
1, 2, 4 — கீழ்க்கதுவாய்
2, 3, 4 — கடைக்கூழை
நாற்சீர்த்தொடை ஒன்று — முற்று

ஈரடி மடக்கு ஆறு :

1, 2 - 1, 3 - 1, 4 - 2, 3 - 2, 4 - 3, 4.

மூவடி மடக்கு நான்கு :

1, 2, 3, - 1, 2, 4 - 1, 3, 4 - 2, 3, 4.

நான்கடி மடக்கு ஒன்று :

1, 2, 3, 4 - ஆகிய முற்று மடக்கு.

ஓரடி மடக்கு 4, ஈரடி மடக்கு 6, மூவடி மடக்கு 4, நான்கடி மடக்கு 1 ஆக 15. இவற்றை ஆதி, இடை, கடை, ஆதியோடு இடை, ஆதியோடு கடை, இடையோடு கடை, முழுதும் — என்ற ஏழால் பெருக்க — $15 \times 7 = 105$ ஆகும். இவற்றை இடையிட்டு வருவன, இடையிடாது வருவன, இடையிட்டும் இடையிடாதும் வருவன - என்ற மூன்றால் பெருக்க $105 \times 3 = 315$ ஆகும். இவை இலக்கண அளவினவே யன்றி இவற்றிற்கெல்லாம் உதாரணம் காண்டல் அரிது.

ஒப்பின் முடித்தல் - ஒன்றற்குச் சொல்லும் இலக்கணம் பிறிது ஒன்றற்கும் பொருந்துமாயின் அதற்கும் அதனையே இலக்கணமாகக் கொண்டு கூறுதல். தொடைக்கு ஓதப்படும் இலக்கணம் மடக்கிற்கும் கொள்ளப்பட்டுள்ளது.

அணியியலுக்குப்பின் செய்யுளியல் அமைத்துள்ள இவ் வாசிரியர் தொடையிலக்கணம் செய்யுளியலில் கூறுவார்; அதனை முன்னரே அணியியலிலுள்ள மடக்கிற்கும் கொள்ளுமாறு 'ஒப்பின் முடித்தல்' என்ற உத்திவகையாற் கூறுவது புதுமையாகத் தோன்றினும், பின்னர் எச்சவியலில் கூறப்படும் அன்மொழித் தொகைக்கண் சொற்பெய்து விரித்தல் போல உருபும்பொருளும் உடன்தொக்க தொகைக்கண் சொற்பெய்து விரிக்க என்று வேற்றுமையியலில் தொல்காப்பியனார் குறிப்பிடுவதனை ஒப்பது இது என்று கொள்க. அல்லதூஉம், சொல்லணிப்பகுதி இவர் மகனாரால் யாக்கப்பட்டது என்பதும் ஒன்று.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 95

'அவற்றுள்,
அடிமுதல் மடக்குஓர் ஐம்மூன் றுரும்.' – *மா.* 256

'இடைகடை யவும்அதன் எண்ணிலே பெறுமே.' – ,, 257

'உணர்வுறின் மடக்கிவை ஓரிடத் தனவே.' – ,, 258

'அடிதொறும் ஈரிடத் தனவாய் முதலொடு
இடைகடை இடைகடை களின்இயன் றனவும்
திதமுற நான்கறு பானெனச் சிவணி
அதனொடு மடக்கொரு நூற்றைந் தாகும்.' – ,, 259

'அவற்றுள்,
முதல்தொடை விகற்பம் ஏழொடும் நான்கொடும்
திதப்பட ஓரடி ஒழிந்தன சிவணும்.' – ,, 260

'இடைவி டாமடக் கிவையென மொழிப.' – ,, 261

'ஏனைய தாமும் இதனதெண் பெறுமே.' – ,, 262

'எழுவாய் அடிஒழித்து ஏனைய அடியினும்
கடையொழித் தேனைய காலினும் இரண்டா
மடிதவிர்த் தேனைய அடியினும் மூன்ற
மடியொழித் தேனைய அடியினும் வருமே.' - *மு. வீ. சொ.* 8]

அவற்றுள், முதலடி ஆதிமடக்கு வருமாறு :

'துறைவா துறைவார் பொழில்துணைவர் நீங்க
உறைவார்க்கும் உண்டாங்கொல் சேவல் — சிறைவாங்கிப்
பேடைக் குருகுஆரப் புல்லும் பிறங்குஇருள்வாய்
வாடைக்கு உருகா மனம்'

என வரும்.

[நெய்தல்நிலத் தலைவனே! துறைக்கண் நேரிதாக அமைந்த பொழிலிடத்துத் துணைவர் பிரிகையினாலே, சேவல் தன் பெடையைச் சிறகுகளால் ஆரப் புல்லும் இருளிடத்து, வாடைக்கு உருகாத மனம், அப்பிரியப்பட்ட மகளிருக்கும் உண்டோ? – என்று தோழி கூறியது.

துறைவா — நெய்தல் நிலத் தலைவனே.

துறை வார் — நீர்த்துறைக்கண் நேரிதான.

இது முதலடி முதல் மடக்கு ஆமாறு காண்க.]

இரண்டாம் அடி ஆதிமடக்கு வருமாறு :

'கனிவாய் இவள்புலம்பக் காவலநீ நீங்கில்
இனியார் இனியார் எமக்குப் — பனிநாள்
இருவராய்த் தாங்கும் உயிர்இன்றி எங்குஉண்டு
ஒருவராய்த் தாங்கும் உயிர்'

என வரும்.

[காவல! கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினை உடைய இவள் தனித்திருக்க நீ பிரிந்து செல்வாயாயின், எங்களுக்கு இனிமேல் யார் இன்சொற்பேசி மகிழ்விப்பார்கள்? பனிக் காலத்துக் கூடியவராகிய தலைவன் தலைவியராகிய இருவரும் தாங்கும் உயிரே அல்லாமல், பிரிந்து ஒருவராய் இருந்து தாங்கும் உயிரும் உண்டோ? – என்று தோழி தலைவன் பிரிவைத் தடுத்தது.

இனி யார் — இனிமேல் யாவர்.

இனியார் — இனிமை தருபவராயிருப்பார்.

இஃது இரண்டாமடி முதல்மடக்கு ஆமாறு.]

மூன்றும் அடி ஆதிமடக்கு வருமாறு :

'தேம்கானல் முத்துஅலைக்கும் தில்லைப் பெருந்தகைக்கு
ஓங்காரத்து உட்பொருளாம் ஒண்சுடர்க்கு — நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கும் மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம்'

என வரும்.

[கானலில் முத்து அலைக்கும் தில்லையில் பெருந்தகையாய் ஓங்காரத்து உட்பொருளாம் சோதிவடிவாகிய சிவபெருமானுக்கு, நீங்காத ஆசையாகிய பாசத்தினை மேற்கொண்டு அடியார்கள் கூறும் சொற்கள் மேம்பட்ட பொருள்களும் அணியும் மாலைகளு மாகும்.

மருள் ஆம் — ஆசை ஆகிய

மருள் — பாசம்

இது மூன்றுமடி முதல் மடக்கு ஆமாறு காண்க.]

ஈற்றடி ஆதிமடக்கு வருமாறு :

'இவள்அளவு தீஉமிழ்வது என்கொலோ தோயும்
கவள மதமான் கடாமும் — திவளும்
மலைஆர் புனல்அருவி நீஅணுகா நாளின்
மலையா மலையா நிலம்'

என வரும். ஒழிந்த ஓரடிமடக்கு வந்துழிக் காண்க.

தலைவ! நீ இவளை வந்து அடையாத நாள்களில் யானையின் முகத்திலிருந்து வழியும் மதநீரை ஒத்து அருவி பாயும் பொதிய மலையிலிருந்து தோன்றும் தென்றற்காற்று இவள் ஒருத்திக்கு மாத்திரம் நெருப்பைக் காலுவதன் காரணம் யாதோ? – என்று தோழி கூறியது.

மலையா(ம்) மலைய அநிலம் — பொதிய மலையில் தோன்றும் தென்றல் காற்று.

இஃது ஈற்றடி முதல்மடக்கு ஆமாறு காண்க.

இவை நான்கும் ஓரடி முதல்மடக்கு.]

முதல் ஈரடி ஆதிமடக்கு வருமாறு :

'நினையா நினையா நிறைபோய் அகல
வினையா வினையாம் இலமால் — அனையாள்
குரஆளும் கூந்தல் குமுதவாய்க் கொம்பின்
புரவாள நீபிரிந்த போது'

என வரும்.

[குரவம்பூச் சூடிய கூந்தலையும் குமுதம் போன்ற வாயையும் உடைய கொம்பு அனைய தலைவியைப் பாதுகாக்கும் தொழிலைப் பூண்ட தலைவனே! நீ பிரிந்தபோது நின்னை யாம் நினைத்து, எங்கள் நிறை என்ற பண்பு எங்களை விட்டு நீங்க வருந்தி, யாம் எச்செயலும் செய்யும் ஆற்றல் இலேமாவேம் - என்று தோழி கூறியது.

'நி(ன்)னை யாம் நினையா, நிறைபோல் அகல
இனையா, வினை யாம் இலமால்—'

நினையா நினையா,
வினையா வினையா, } முதல் ஈரடி முதல் மடக்கு.]

முதலொடு மூன்றும்அடி ஆதிமடக்கு வருமாறு :

'அடையார் அடையார் அரண்அழித்தற்கு இன்னல்
இடையாடு நெஞ்சமே ஏழை — யுடையேர்
மயிலா மயிலா மதர்நெடுங்கண் மாற்றம்
குயிலாம்என்று எண்ணல் குழைந்து'

என வரும்.

[பகைவர் அடையும் அரிய அரணை அழித்தற்கு முயல்வார் படும் இன்னல் போன்ற இன்னலுற்றுத் தடுமாறும் மனமே! நீ 'இவ்வேழை (தலைவி)யினுடைய ஏர் மயிலாம்; மதர் நெடுங்கண் அயிலாம்; மாற்றம் குயிலாம்' என்று உருகி நினைத்தலைத் தவிர்– என்று தலைவி அடைதற்கு அரியள் என்று கண்ட தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லித் தேற்றியவாறு.

அடையார் – அடை ஆர் எயில், ஏர்மயிலாம் – அயிலாம்கண்	என்று பிரித்துப் பொருள் செய்க.

முதலடியும் மூன்றுமடியும் முதலில் மடக்கியவாறு.]

முதலொடு நான்காம்அடி ஆதிமடக்கு வருமாறு :

'மானவா மானவா நோக்கின் மதுகரம்சூழ்
கான்அவாம் கூந்தல்என் காரிகைக்குத் — தேனே
பொழிஆரம் தார்மேலும் நின்புயத்தின் மேலும்
கழியா கழியா தரவு'

என வரும்.

[மநுகுலத்தில் தோன்றியவனே! மான் விரும்பும் நோக்கினையும் வண்டு சூழும் மணம் நாறும் கூந்தலையும், தேன் போன்ற மொழியையும் உடைய என் மகளுக்கு உன் ஆத்திமாலை மேலும் உன் புயங்களின்மேலும் உள்ள மிக்க ஆசை நீங்காது – என்று தலைவி நிலைபற்றித் திருத்தாயர் கூறியவாறு.

மானவா – மான் அவாம் நோக்கின், கழியா – கழி ஆதரவு	என்று பிரித்துப் பொருள் செய்க.

முதலடியும் நான்காம் அடியும் முதலில் மடக்கியவாறு காண்க.]

ஈற்று ஈரடி ஆதிமடக்கு வருமாறு :

'மாதர் உயிர்தாங்க வள்ளல் வருநெறியில்
பேதுறவு செய்யும் பெரும்பாந்தள் — யாதும்
வரையா வரையாம் எனும்மா மதமா
விரையா விரையா எழும்'

என வரும்.

[வள்ளலே! இத்தலைவியின் உயிரைப் புரக்க நீ இரவுக் குறிக்கண் வரும் வழியில், கண்டாரை மயங்கச் செய்யும் பெரிய பாம்புகள், உணவாக எதனையும் வரையறை செய்துகொள்ளாமல்,

மலை என்று சொல்லத்தக்க பெரிய யானைகளை இரையாகக் கோடற்கு விரைந்து வரும் – என்றுகூறித் தோழி இரவுக்குறி விலக்கியவாறு.

வரையா – வரை ஆம் எனும் மதமா, } என்று பிரித்துப்
இரையா(க) – விரையா எழும் } பொருள் செய்க.

இஃது ஈற்று இரண்டடி முதலில் மடக்காமாறு காண்க.]

இரண்டாம் அடியோடு ஈற்றடி ஆதிமடக்கு வருமாறு :

'மழைஆர் கொடைத்தடக்கை வாள்அபயன் எங்கோன்
விழையார் விழையார் மெல்லாடை — குழையார்
தழையாம் உணவும் கனியாம் இனமு
முழையா முழையா முறை'

என வரும்.

கார்மேகம் போன்ற கொடை வழங்கும் நீண்ட கைகளை உடைய வாட்போரில் வல்ல அபயனுடைய பகைவர்கள் அவனுக்கு அஞ்சிக் காட்டிற்கு ஓடிப் புகலிடம் தேடிக் கொள்வ ராதலின், அவர்களுடைய விரும்பத்தக்க மெல்லிய ஆடை, காட்டில் தளிர்த்தலை யுடைய தழைகளே; உணவும் கனிகளே; அவர் களுக்குச் சுற்றமும் மான்களே; அவர்கள் உறைவிடமும் குகைகளே.

விழையார் – விழை ஆர் மெல்ஆடை, } என்று பிரித்துப்
உழையாம் – முழைஆம் உறை } பொருள் செய்க.

இஃது இரண்டாம் அடியும் நான்காம் அடியும் முதலில் மடக்கியவாறு காண்க.]

இடை ஈரடி ஆதிமடக்கு வருமாறு :

'குரஆர் குழலாள் குவிமென் முலைநாம்
விரவா விரவாமென் தென்றல் — உரவா!
வரவா வரவாம் எனநினையாய் வையம்
புரவாளர்க்கு ஈதோ புகழ்'

என வரும். ஒழிந்த நாலடி மடக்கு வந்துழிக் காண்க.

மனவலிமை உடைய தலைவனே! 'குரவம்பூச் சூடிய இத் தலைவியின் குவிமென் முலையிடை நீ விரவாத இரவின்கண் வீசும் தென்றல் காற்றின் வரவு அரவு ஆகும்' என்று நினையாது பிரியத் துணிந்துள்ளாய். உலகு புரக்கும் சான்றோர்க்கு இதுவா புகழுக் குரிய செயல்? – எனத் தோழி தலைவன்பிரிவு விலக்கியவாறு.

விரவா – இரவு ஆம்மென் தென்றல், வரவு – அரவு ஆம்	என்று பிரித்துப் பொருள் செய்க.

இதன்கண், இரண்டாம் அடியும் மூன்றுமடியும் முதலில் மடக்கியது காண்க.] – இவை ஆறும் ஈரடி முதல் மடக்கு.

ஈற்றடி ஒழிந்த மூவடி ஆதிமடக்கு வருமாறு:

'இறைவா இறைவால் வளைகாத்து இருந்துயார்
உறைவார் உறைவார் புயலான் – நறைவாய்ந்த
வண்டளவு வண்டளவு நாளின் மயில்ஆலக்
கண்டுஅள்வில் நீர்பொழியும் கண்'

என வரும்.

தலைவனே! நீர்த்துளி மிக்க கார்மேகத்தால் தேன் பொருந்திய வளமான முல்லைகளில் வண்டுகள் மொய்க்கும் கார்ப்பருவ நாள்களில் மயில்கள் ஆடுதலைக் கண்டு கண்கள் கண்ணீரைச் சொரியும். முன்கையிலுள்ள வளைகளைக் கழலாமல் அக்காலத்தில் பாதுகாத்துக்கொண்டு இருந்து யாவர் உயிர் வாழ்தல் கூடும்? – என்று தோழி கார்ப்பருவத்துத் தலைவிநிலை கூறித் தலைவன்பிரிவு விலக்கியவாறு.

இறைவா! – இறை வால்வளை, உறைவார் – உறை வார்புயலால், வண் தளவு – வண்டு அளவு	என்று பிரித்துப் பொருள் செய்க.

முதல் மூன்றடியும் முதலில் மடக்கியவாறு காண்க.]

இரண்டாம் அடி ஒழிந்த மூவடி ஆதிமடக்கு வருமாறு :

'கொடியார் கொடியார் மதில்மூன்றும் கொன்ற
படியார் பணைத்தடக்கை நால்வாய்க் — கடியார்
உரியார் உரியார் எனைஆள வோதற்
கரியார் கரியார் களம்'

என வரும்.

கொடியாராகிய திரிபுரத்தவரின் கொடிகள் ஆர்ந்த மூன்று மதில்களையும் அழித்த இயல்பினர், பருத்த பெரிய கைகளையும் தொங்கும் வாயினையும் உடைய யானையின் அஞ்சத்தக்க தோலைப் போர்த்தவர் ; என்னை ஆட்கொள்ளுதற்கு உரியவர் ; தம் பெருமை கூறுதற்கு அரியவர் ; கழுத்துக் கறுத்தவர்.

கொடியார் – கொடி ஆர்மதில்,
(நால்வாய்) உரியார்– (எனை ஆள) உரியார்,
ஓதற்கு அரியார் – களம் கரியார்
} என்று பிரித்துப் பொருள் செய்க.

1, 3, 4ஆம் அடிகளில் முதல்மடக்கு அமைந்தவாறு காண்க.]

மூன்றும்அடி ஒழிந்த மூவடி ஆதிமடக்கு வருமாறு :

'மலையு மலையும் மகிழ்ந்துறையும் வேயும்
கலையும் கலையும் கடவும் — தொலைவுஇல்
அமரில் எமக்குஅரணும் என்னுமவர் முன்னிற்
குமரி குமரிமேல் கொண்டு'

என வரும்.

குமரி ஆகிய கொற்றவை, மலையையும் கடலையும் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு, பிறைச்சந்திரனை வேய்ந்து, ஆண் மானை வாகனமாகக் கொண்டு விளங்குவாள் ; அழிவற்ற போரில் தமக்குப் பாதுகாவலாதல் வேண்டும் என்று இறைஞ்சுபவருக்குச் சிங்கத்தின்மேல் ஏறிக்கொண்டு வந்து முன் நிற்பாள்.

குமரி மலையும் அலையும் மகிழ்ந்து உறையும்; கலையும் வேயும்; கலையும் கடவும்; அரண் ஆம் என்னுமவர் முன் அரிமேல் கொண்டு நிற்கும் - என்று பொருள் செய்க.

இது *1, 2, 4*ஆம் அடிகள் முதல்மடக்கு.]

முதலடி ஒழிந்த மூவடி ஆதிமடக்கு வருமாறு :

'பாலையாழ் தன்னில் பதிற்றிரட்டி வெய்தன்றே
மாலைவாய் மாலைவாய் இன்னிசை — மேலுரை
மேவலர் மேவலர் மெல்லாவி வாட்டாதோ
காவலர் காவலராங் கால்'

என வரும். ஒழிந்த மூவடிமடக்கு வந்துழிக் காண்க.

எம் உயிர்க் காவலர் ஆகிய தலைவர் எம்மைத் திருமணம் செய்து பாதுகாப்பவர் அல்லாதகாலை, மாலையிலே, வரிசையாக ஆயர் வாயிலிருந்து வெளிப்படும் இனிய குழலிசை பாலையாழை விட இருபதுமடங்கு துன்பம் தரவும், அதற்கு மேலும் பிறர் தம்மைப் புகழத்தக்க புகழ்ச்சியை விரும்பாத தீய மக்கள் விருப்பிக் கூறும் அலர் எம் உயிரை வாட்டாவோ? - என்று தலைவி தலைவன் சிறைப்புறத்தானாகத் தன்துயரைத் தோழிக்கு உரைத்தவாறு.

காவலர், காவலர் ஆகுங்கால், மாலைவாய், மாலைவாய் இன்னிசை மேல், உரை மேவலர் மேவு அலர் - என்று பிரித்துப் பொருள் செய்க.

இது *2, 3, 4*ஆம் அடிகள் முதலில் மடக்கியது.

இவை நான்கும் மூவடி முதல்மடக்கு.]

முற்று ஆதிமடக்கு வருமாறு :

'வரைய வரைய சுரஞ்சென்றார் மாற்றம்
புரைய புரையஎனப் பொன்னே — உரையல்

நனைய நனைய தொடைநம்மை வேய்வர்
வினையர் வினையர் விரைந்து'

என வரும்.

['நீக்கத்தக்க களவொழுக்கத்தை விடுத்துத் திருமண ஏற்பாடு செய்யச் சுரம் கடந்து சென்ற தலைவருடைய மேம்பட்ட சொற்கள் தற்போது குற்றப்பட்டுவிட்டன' என்று சொல்லாதே. மொட்டுகளால் ஆகிய குளிர்ந்த மாலையை நமக்குச் சூட்ட எடுத்த செயலைச் செய்தலில் வல்ல நம் தலைவர் தம் வினையை முடித்து விரைந்து வருவர் – என்று தலைவன் பிரிவிடை வேறுபட்ட தலைவியைத் தோழி ஆற்றுவித்தவாறு.

வரைய — களவொழுக்கத்தை நீக்க.

வரைய — திருமணம் செய்ய.

புரைய மாற்றம் — மேம்பட்ட சொற்கள்.

புரைய — குற்றப்பட்டுவிட்டன.

நனைய நனைய — மொட்டுக்களையுடைய குளிர்ந்த.

வினையர் — வினையில் வல்ல தலைவர்.

வினையர் — எடுத்த வினையை முடிப்பர்.

இது நான்கடியும் முதலில் மடக்கியவாறு.

இவை பதினைந்தும் அடிமுதல் மடக்கு.]

முற்று இடைமடக்கு வருமாறு :

'மனமேங் குழைய குழையவாய் மாந்தர்
இனம்நீங் கரிய கரிய — புனைவதனத்து
உள்வாவி வாவிக் கயல்ஒக்கும் என்உள்ளம்
கள்வாள வாளவாம் கண்'

என வரும்.

[என் உள்ளத்தைத் திருடிக் கொண்டவளுடைய வாளை யொத்த கண்கள், என்மனம் ஏங்குதற்குக் காரணமான மானின் மருண்ட பார்வையை உடையவாய், காதணியைச் சென்று அணுகுவனவாய், இளைஞர்கூட்டம் விட்டு நீங்குதற்கு அரியவாய், கரிய நிறத்தை உடையனவாய், அழகிய முகத்துள் உலாவிக் குளத்தில் உள்ள கயல்மீன்களை ஒத்திருக்கின்றன — என்று தலைவன் தலைவியின் கண் நயந்து உரைத்தவாறு.

என் உள்ளம் கள்வாளுடைய வாள் அவாம் கண், மனம் ஏங்கு உழைய, குழை அவாய், மாந்தர் இனம் நீங்க அரிய, கரிய, வதனத்துள் வாவி, வாவிக்கயல் ஒக்கும் - என்று பொருள் செய்க.

இது முற்றும் இடைமடக்கு.]

முற்று இறுதிமடக்கு வருமாறு :

'மாலை அருளாது வஞ்சியான் வஞ்சியான்
மேலை அமரர் கடைவேலை — வேலை
வளையார் திரைமேல் வருமன்ன மன்ன
இளையாள் இவளை வளை'

என வரும்.

[முன்னொரு காலத்து, தேவர்கள் பாற்கடலைக் கடைந்த பொழுது, அக்கடலின் வளைகளைக் கொழித்து வரும் அலைகளின் மேல் தோன்றிய அன்னம் போன்ற திருமகளை ஒத்த இளையவளாகிய இவளை, வஞ்சிநகரை ஆளும் வேந்தன், தன் மாலையைத் தாராது வளைகளைக் கவர்ந்து வஞ்சிக்கமாட்டான் — என்று திருத்தாயர் ஆற்றியவாறு.

அமரர் கடைவேலை, அவ்வேலைத் திரைமேல் வரும் அன்னம் அன்ன இவளை அருளாது, வஞ்சியான், இவள் வளைகளை வஞ்சியான் - என்று பிரித்துப் பொருள்செய்க. இது முற்றும் இறுதிமடக்கு.]

45 – 46

முற்றுஆதி இடைமடக்கு வருமாறு:

'கொண்டல் கொண்டுஅலர் பொழில்தொறும்
பண்ணையாய் பண்ணையா யத்துள்ளார்
வண்டல் வண்டுஅலர் தாதுகொண்டு,
இயற்றலின் வருமணல் மணல்முன்றில்
கண்டல் கண்டக மகிழ்செய
ஓதிமம் கலந்துறை துறைவெள்ளம்
மண்டல் மண்டலம் முழுதுடன்
வளைதரு வளைதரு மணிவேலை'

என வரும்.

[உலகம் முழுதையும் சூழ்ந்திருக்கும், சங்குகளைத் தரும் அழகிய கடலே! கீழ்க்காற்றைக் கொண்டு பூக்கின்ற சோலைகள் தொறும், இசையை ஆராயும் விளையாடற் சிறுமியர் சிற்றிலை வண்டுகளால் வெளிப்படும் மகரந்தத் தூள்களைக் கொண்டு இயற்றுதலின் மணம் வீசவும், மணல் பகுதியிலே தாழையைக் கண்டு மனம் மகிழ் கூரவும், அன்னங்கள் கூட்டமாகத் தங்கியிருக்கும் நீர்த்துறையில் வெள்ளத்தைக் கொண்டு ஏறுது ஒழிவாயாக — என்று சிறுமியரது விளையாடல் கண்டு மகிழும் தாயர் கடலைப் பரவியவாறு.

நீர் பெருகின் சிற்றில் சிதையும் என்றவாறு.

கொண்டல் கொண்டு – பண்ணினை ஆயும் பண்ணை – வண்டல், வண்டு அலர் தாது – கண்டல் கண்டு – கலந்து உறைதுறை, மண்டல் – மண்தளம், வளைதரு, வளை தரு – என பிரித்துப் பொருள் செய்க.

இது முதல்இடை முற்று மடக்கு.]

முற்றுஆதி இடை மடக்குவருமாறு:

'நிரையா நிரையா மணிபோல்நிறை கோடல் கோடல்
வரையா வரையா இருள்முன்வரு மாலை மாலை
விரையா விரையா எழுமின்ஒளிர் மேக மேகம்
உரையா உரையா ரினும்ஒல்லன முல்லை முல்லை'

என வரும்.

[காந்தளே! வரிசையாக வருகின்ற பசுக்கூட்டங்களின் மணி ஓசையைப் போல எங்கள் நிறையைக் கவராதே. அளவிட முடியாத அரையாம் இருளுக்கு முன் வரும் மயக்கந் தரும் மாலைக் காலத்தில், விரைந்து ஒலித்துக்கொண்டு மின்னலாகிய ஒளியைத் தரும் மேகங்களும் எழும். ஒன்றும் உரையாத புகழாளராகிய தலைவரினும் முல்லை நிலத்து முல்லைக் கொடிகளும் பகையாயின — என்று கார்ப்பருவ மாலைக்காலத்துத் தலைவி தலைவன்பிரிவால் வருந்திக் கூறியவாறு.

கோடல்! நிரையா ஆநிரை மணிபோல் நிறைகோடல்;

வரையா அரைஆம் இருள்முன் வரும் மாலை மாலை; விரையா,

இரையா மின்ஒளி மேகம் எழும்; முல்லை முல்லை ஏகம் உரையா

உரையாரினும் ஒல்லன – எனப் பிரித்துப் பொருள் கொள்க.

இது முதல் இறுதி முற்றுமடக்காதல் காண்க.]

முற்று இடை இறுதிமடக்கு வருமாறு:

'வருகம் புளினம் புளினம்பயில் வேலைவேலை
ஒருகால் உலவா உலவாவரு மோத மோத
வருகே தகைகே தகைசேர்தரு மன்ன மன்ன!
பெருகா தனவே தனவேரசை மாதர் மாதர்'

என வரும்.

[தலைவனே! வாராநின்ற கம்புள் என்ற பறவைகளின் கூட்டம் மணல்மேடுகளில் இருக்கும் காலத்தில், கடல் வெள்ளம் ஒருகாலும் குறையாது உலவிக்கொண்டு கரையை மோதவரும். அருகில் நின்று தடுக்கும் தாழையில் அன்னங்கள் தங்கியிருக்கும். இப்பெண்ணின் காதல், முலைகளின் அழகு அழியப் பெருகாது ஒழியுமோ? – எனத்தோழி தலைவிநிலை கூறித் தலைவனை வரைவு கடாயவாறு.

வரு கம்புள் இனம் புனினம் பயில்வேலே, வேலே ஓதம் ஒரு காலும் உலவாது மோத உலவாவரும். அருகே தகை கேதகை அன்னம் சேர்தரும். மன்ன! மாதர் மாதர் தனம் ஏர்அசை(ய) பெருகாதனவே – எனப் பிரித்துக் பொருள் கொள்க.

இஃது இடையும் இறுதியும் முற்றுமடக்காதல் காண்க.]

முற்றும் முற்றுமடக்கு வருமாறு :

'களைகளைய முளரியரு கடைகடைய மகளிர்கதிர் மணியுமணியும்
வளைவளைய கரதலமு மடைமடைய மதுமலரு மலைய மலைய
இளையிளையர் கிளைவிரவி யரியரியின் மிசைகுவளை மலருமலருங்
கிளைகிளைகொ ளிசையளிகள் மகிழ்மகிழ்செய் கெழுதகைய
[மருதமருதம்'

என வரும். இவையெல்லாம் இடையிடாது வந்தன.

[தாமரையாகிய களையைக் களைய அவற்றின் அருகே அடையும் மருதநில உழத்தியர் அணிந்த ஒளி வீசும் மணிகளும், அணிந்திருந்த வளைகளால் வளைக்கப்பட்ட கைகளும், அடைக்கப்பட்ட மடையில் உள்ள தேனை உடைய பூக்களும், ஒன்றோடொன்று நலன் அழிப்பதற்கு மாறுபட, மிக இளையர் குழாம் கூடி அறுக்கின்ற நெற்கதிர்களின்மீது குவளைப் பூக்களும் மலரும். கிளை என்ற நரம்பின் ஒலி ஏனை ஒலி இனங்களோடு தொடர்பு கொள்ளும் ஓசை போலப் பாடும் வண்டுகள் தேனை உண்டு மகிழுமாறு, விளக்கமுடைய மருதமரங்களை யுடைய மருதநிலம் மகிழ்ச்சியைத் தரும்.

முளரிக்களை களை அருகு அடை கடையமகளிர் கதிர்மணியும் அணியும் வளைவளைய கரதலமும், அடை அம்மடைய மது மலரும் அலைய மலைய, இளைய இளையர் கிளை விரவி அரி அரியின்மிசை குவளை மலரும் அலரும். கிளை கிளைகொள் இசை அணி கள் மகிழ் கெழுதகைய மருதமரங்களையுடைய மருதம் மகிழ்செய்யும் என்று பிரித்துப் பொருள்கொள்க.

இஃது அடிதோறும் மூன்று இடங்களிலும் மடக்கிவந்தமையால், முற்றுமடக்கினை ஒருபுடையான் ஒத்து வந்த மடக்காகும்.]

முற்று ஆதிமடக்கு வருமாறு :

'தோடு கொண்டரி முரன்றெழக் குடைபவர் குழல்சேர்ந்த
தோடு கொண்டதே மலர்சுமந்து அகில்கமழ்ந்து அவர்தம்
தோடு தைந்தசெஞ் சாந்தணி திரள்முலை இடைதோய்ந்
தோடு தண்புனல் நித்திலம் துறைதொறும் சொரியும்'

என வரும்.

[கூட்டமாக வண்டுகள் ஒலித்தெழ, நீராடுவார் கூந்தலில் பொருந்திய இதழ் கொண்ட இனிய மலரைச் சுமந்து, அகில் மணந்து, அம் மகளிருடைய தோள்களில் பூசிய செஞ்சந்தனம் தம்மிடத்தும் பூசப்பட்ட திரண்ட முலையிடையே தோய்ந்து, ஓடும் குளிர்புனல் முத்துக்களை நீர்த்துறைதோறும் குவிக்கும்.

தோடு — கூட்டம், பூவின் இதழ்.

தோள் துதைந்த; தோய்ந்து ஓடு தண்புனல் – எனப் பிரித்துப் பொருள் செய்க.

தோடு என்ற சொல் பாடலின் நான்கு அடிகளிலும் வந்தமையால் இது முற்று ஆதிமடக்காகும் (இடையிட்டு வந்தது).]

முற்று இடைமடக்கு வருமாறு :

'பரவி நாடொறும் படியவாம் பல்புகழ் பரப்பும்
இரவி சீறிய படியவாம் பரிஎரி கவர
விரவி மான்பயில் படியவாம் வேய்தலை பிணங்கும்
அருவி வாரணம் படியவாம் புலர்பணை மருதம்'

என வரும்.

[உலகத்தவர் நாள்தோறும் புகழ்ந்து விரும்பும் பல புகழ் களையும் உடைய சூரியகுல மன்னனாகிய சோழன் கோபித்த

நாடுகளில், விரும்பும் விரைந்த செலவை உடைய நெருப்புக் கவர்ந்ததனால், அவ்வூர்கள் மான்கூட்டம் பல இடங்களிலும் பழகும் முல்லைநிலம் போன்ற ஆயின. மூங்கில் ஒன்றோடொன்று கலந்திருக்கும் இயல்பிற்றாய் அருவிநீரில் யானைகள் தோய்வதற்கு விரும்பும் இயல்பிற்று, செழுமை அற்றுப்போன மருத நிலம்.

படி அவாம், படிய ஆம், படிய வாரணம் ஆம் – என்று கூட்டிப் பொருள் செய்க.

இது முற்றும் இடைமடக்கு ஆமாறு (இடையிட்டு வந்தது).]

முற்று இறுதிமடக்கு வருமாறு :

'சொன்ன நாள்இது சுரும்புஇமிழ் இதழிபொன் கால
மின்னு வாள்விட வில்வளைத்து ஊன்றிய கால
இன்ன கார்முகில் இனம்இருண்டு எழுதரு கால
மன்னர் வாரலர் தான்வரும் மயில்மருங் கால'

என வரும். இவை இடையிட்டு வந்தன. ஒழிந்தன வந்துழிக் காண்க.

[வண்டுகள் ஒலிக்கும் கொன்றை பொன் போலப் பூக்க, மின்னல் ஒளிவிட, இந்திரவில்லை வளைத்து வீழ்ந்த மழைத் துளிகளை உடைய இத்தகைய கார்மேகக்கூட்டம் இருண்டு புறப்படும் இக்கார்காலத்தில், மயில்கள் நாற்புறமும் ஆடுதற்குப் புறப்பட்டு வருகின்றன. தலைவர் மீண்டு வருவதற்குக் குறிப்பிட்ட நாள் இது ; ஆனால் அவர் வந்திலர் — என்று கார்ப்பருவங் கண்டு வருந்திய தலைவி சொற்றவாறு.

இதழி பொன் கால, ஊன்றிய கால, முகில் எழுதரும் காலம், மயில் மருங்கு ஆல, மன்னர் சொன்ன நாள்இது வாரலர் – என்று கூட்டிப் பொருள்செய்க.

இஃது இடையிட்ட முற்று இறுதிமடக்கு. இடையிடுதல் : மடக்கும் சீர் மீண்டும் மடக்குதற்கு இடையே பல வேற்றுச்சீர்கள் வருதல்.]

முற்று இடைஇறுதி மடக்கு வருமாறு :

'வாமான மான மழைபோல்மத மான மான
நாமான மான நகமாழக மான மான
தீமான மானவர் புகுதாத்திற மான மான
காமான மான கவின்கான்கனன் மான மான'

இஃது இடையிட்டும் இடையிடாதும் வந்தது. ஒழிந்தன வந்துழிக் காண்க

[வாவும் மான்களினுடைய பெருமையை உடையன; மேகம் போன்ற மதயானைகளை உடையன; அச்சமான விலங்குகளின் நகங்கள் கிழிக்கும் மார்பினை மான்கள் உடையவாயின; தீமையே வடிவமாயின; மக்கள் உள்நுழையாத் தன்மை பெற்றன; சோலைகளை ஒப்ப மிக்க அழகுடைய காடுகள் (வேனிலால்) நெருப்பு வடிவினவாயின.

வாம் மான மான; மழைபோல் மதமானம் ஆன; நாம் ஆன மான நகம் ஆழ் அகம் மானம் ஆன; தீமை ஆன; மானவர் புகுதாத் திறமான ஆன; கா மான மான கவின்கான் கனல் மானம் ஆன – என்று பொருள் செய்க.

'கவின் கான்' – எழுவாயாகக் கொள்க.]

இஃது இடையிட்டும் இடையிடாதும் வந்து முற்று இடை இறுதி மடக்காமாறு காண்க.

அடிதோறும் தனித்தனியே வந்த இறுதி முற்று மடக்கு வருமாறு :

'வருமறை பலமுறை வசையறப் பணிந்தே
மதியொடு சடைமுடி மருவும்அப் பணிந்தே
அருநடம் நவில்வதும் அழகுபெற் றமன்றே
அருளொடு கடவுவது அணிகொள்பெற் றமன்றே

திருவடி மலர்வன திகழ்ஒளிச் சிலம்பே
    தெளிவுடன் உறைவது திருமறைச் சிலம்பே
இருவினை கடிபவர் அடைபதத் தனன்றே
    இமையவர் புகல்அவன் எனநினைத் தனன்றே'

எனவரும்.

[நன்மை வளரும் வேதம் பலகாலும் குற்றமறப் பணியவும் சடைமுடியில் பிறையோடு பொருந்திய கங்கையை அணிந்து, அழகு பெற்ற மன்றத்தில் அரிய நடனம்புரிந்து, அழகுகொண்ட காலையை அருளோடு செலுத்தி, திருவடிகளில் ஒளி திகழும் சிலம்புகள் விளங்கப்பெற்று, அழகிய வேதமயமான கயிலைமலையில் தெளிவோடு உறைந்து, இருவினைகளையும் போக்கிக்கொள்வார் அடையும் திருவடிகளை யுடையவன் சிவபெருமான் அல்லனோ? தேவர்களுக்கும் அவனே புகலிடமாவான் என்று நினைப்பது நன்று.

இப்பாடலில் மறை பணிந்து – அப்பு அணிந்து, அழகுபெற்ற மன்றே – அணிகொள் பெற்றம் அன்றே, ஒளிச்சிலம்பு (அணி) – மறைச்சிலம்பு (மலை), பதத்தன் அன்றே – நினைத்தல் நன்றே – என்று மடக்குகளுக்குப் பொருள் செய்க.

இந்நாலடிப் பாடலில் நான்காம் சீரும் எட்டாம் சீரும் அடிதோறும் இடையிட்டுவந்து மடக்கவே, இப்பாடல் முற்று மடக்காதல் காண்க.]

நான்கடியும் முதற்சீர் ஒழித்து மடக்கிய முற்று மடக்கு வருமாறு :

'அனைய காவலர் காவலர் காவலர்
இனைய மாலைய மாலைய மாலைய
எனைய வாவியு வாவியு வாவிய
இனைய மாதர மாதர மாதரம்

எனவரும். பிறவும் வரும் வேறுபாடுகளும் அறிந்து கொள்க. (68)

[அத்தன்மையதாகிய சோலையின் மலர்களாகிய மன்மத பாணங்களை நம் தலைவர் விரும்பவில்லை. நாம் வருந்துவதற்கு உரிய மயக்கத்தைத்தரும் இயல்பினையுடையன மாலைப் பொழுதுகள். என்னை விரும்பிய உயிர்போன்ற, என் விருப்பிற்கு மாருக மனம் தாவிய இந்தத் தோழி அரத்தை ஒத்தவள். ஆசையோ எனக்கு மிக்குள்ளது — என்று தலைவி மாலையில் புலம்பியவாறு.

அனைய கா அலர் காவலர் காவலர்; இனைய (வருந்த) மாலைய மாலைய (இயல்பின) மாலைய (மாலைக்காலங்கள்); எனை அவாவிய ஆவிய (உயிர்போன்ற) வாவிய (தாவிய) இனைய மாது அரம்; ஆதரம் (ஆசை) மா தரம் (பேரளவிற்று) – என்று பொருள்செய்க.

இது முதற்சீர் ஒழிய நான்கடியும் தனித்தனி முற்றும் மடக்கியவாறு காண்க.] 68

சிறப்புடைய மடக்கு

688. அடிமுழுதும் மடக்குவது ஆங்குஅதன் சிறப்பே.

இது மேற்கூறிய மடக்கில் சிறப்பு உடையது இது என்கின்றது.

இ-ள்: அடி முழுதும் மடக்குவது மேற்கூறிய மடக்கினுள் சிறப்பு உடைத்து எனப்படும் என்றவாறு.

'அடி முழுதும்' எனப் பொதுப்படக் கூறினரேனும், இரண்டு அடி மடக்குவதும், மூன்று அடி மடக்குவதும், நான்கு அடி மடக்குவதும் என, மூவகைப்படும்,

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் - தண்டி 96, மு. வீ. சொ. 9.

'பாதம் அனைத்தும் மடக்குதல் பழிதீர்த்து
ஓதிய அனைத்தினும் உறும்அழகு உடைத்தே.' — *மா.* 263

'ஒருசொலின் மடக்கலும் உளஎன மொழிப.' — *மா.* 264

'பதத்தொடு பதம்மடக் குதல்பத மடக்கே.' — *மா.* 265

'அந்தா திப்பது அந்தாதி மடக்கே.' — *மா.* 266

'அம்மனை கைக்கொண்டு ஆடுநர் தம்மையும்
அம்மனை யாய்மதித்து ஆங்கொர்கர்த் தாவினை
நிந்தாத் துதிதுதி பெறநிகழ்த் துதலும்
அந்தா தித்திடை அடிமடக் காகவும்
ஈற்றடி இரட்டுற இசைத்ததைத் தாபித்து
ஆற்றலின் அமைக்கும்அம் மனைமடக்கு ஒன்றுள.'
— *மா.* 267

'தொடர்ச்சொல் பலபொருள் சிலேடைமுந் துறவே
இடர்ப்பா டின்றியீற் றுறுமிணை மடக்குள.' — *மா.* 268

'முதலடி இரண்டினும் மூன்றினும் முதலினும்
இடையடி இரண்டினும் முதலினும் இறுதியும்
இறுதி இரண்டினும் முதலொழித் தேனைய
அடியினும் கடைஅயல் அல்லன மூன்றினும்
மூன்றும் அடிஒழித்து ஏனைய மூன்றினும்
இரண்டாம் அடிஒழித்து ஏனைய மூன்றினும்
எல்லா அடியினும் எய்தும் என்ப.' — *மு. வீ. சொ.* 11]

அவற்றுள், ஈரடி மடக்கு வருமாறு :

'விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக
விரைமேவு மதமாய விடர்கூடு கருநாக
வரைமேவு நெறியூடு தனிவாரல் மலைவாண
நிரைமேவும் வளைசோர இவள்ஆவி நிலைசோரும்.'

இது முதல்ஈரடி மடக்கியது.

[மலைநாட! நறுமணம் கமழும் மதநீரை உடைய துன்பம் உறும் கொடிய யானைகளை இரையாக விரும்பும் வலிய குகைகளில் தங்கும் கடிய பாந்தள்கள் சஞ்சரிக்கின்ற மலை வழியே தனியே வாராதே; வரிசையாக அணிந்த வளையல்கள் சோர இவள் உயிர் வாடுவாள் - என்று தோழி தலைவனை ஏதம் கூறி இரவுக்குறி விலக்கியவாறு.

விரை மேவு மதம் ஆய இடம்கூடு கடுநாகங்களை இரை மேவும் மதம் ஆய விடர் கூடும் கடு நாகம் மேவும் நெறி - என்று பொருள் செய்க.]

'கடன்மேவு கழிகாதல் மிகநாளும் மகிழ்வார்கள்
உடன்மேவு நிறைசோர மெலிவாள்தன் உயிர்சோர்வு
கடன்மேவு கழிகாதல் மிகநாளும் மகிழ்வார்கள்
உடன்மேவு பெடைகூடும் அறுகாலும் உரையாகொல்.'

இது முதல் அடியும் மூன்றும் அடியும் மடக்கியது.

[முறையாகப் பொருந்தும் மிக்க காதல் சிறக்க நாள்தோறும் மகிழ்வார்கள் பலர் உளர். ஆனால் தலைவி தன்னோடு பொருந்திய நிறை என்ற பண்பு சோர மெலிகின்றாள். இவளுடைய உயிர் தளர்வதனை, கடலை அண்மிய உப்பங்கழிகளில், மகிழ்ச்சி மிக நாள்தோறும் களிப்பு மிக்க பூக்களிலுள்ள தேன்களைப் பெடையோடு கூடி அருந்தும் வண்டுகளும் தலைவர்க்கு உரையா போலும் - என்று தோழி தலைவன் சிறைப்புறமாகக் கூறியது.

கடன்மேவு கழிகாதல் மிக நாளும் மகிழ்வார்கள்;

இவள் உயிர் சோர்வு கடல் மேவும் கழி காதல் மிக நாளும்

மகிழ் வார் கள் உடன்மேவும் பெடையொடு கூடும் அறுகாலும் உரையா — என்று பொருள் செய்க.

முதடியும் மூன்றுமடியும் மடக்கி வந்தவாறு.]

'மறைநுவல் கங்கை தாங்கினர்
நிறைதவ மங்கை காந்தனர்
குறையென அண்டர் வேண்டவே
மறைநுவல் கங்கை தாங்கினர்.'

இது முதலடியும் ஈற்றடியும் மடக்கியது.

[நிறைந்த தவத்தை உடைய பார்வதியின் கணவராகிய சிவபெருமான் வேதங்கள் புகழும் கங்கையைச் சடையில் தாங்கினர். தம் இன்றியமையாமை கூறித் தேவர்கள் வேண்டவே, வேதங்களைக் கூறும் பிரமனுடைய தலையைத் தம் கையில் தாங்கினர். (பிரமன் தத்துவ இரகசியங்களைப் பிறருக்கு உரைத்த தவறுடையன் ஆயினன்.)

கங்கை, கம் கை — என்று பிரித்துப் பொருள் கொள்க.

கங்கை — ஓர் ஆறு. கம் — தலை.

இது முதலடி ஈற்றடியாக மடக்கியது காண்க.]

'கொல்லியம் பொருநனைக் கூடார் கோநகர்
இல்எரி மேவுதல் இயம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின.'

இது கடைஇரண்டுஅடியும் மடக்கியது.

[கொல்லிமலைத் தலைவனை நண்பர்களாகக் கூடாத பகைவர்களுடைய தலைநகரங்களில் உள்ள வீடுகளில் தீப்பற்றி எரிதலைக் கூறவும் வேண்டுமோ? அக இதழை உடைய தாமரை பூக்கும் நீர்த்தடங்களாயிருந்தன எல்லாம், புலிகளும் தாவும் மான்களும் சஞ்சரிக்கும் காடுகளாயின.

அல்லி அம் தாமரை, வல்லியம் தாம் மரை—என்று பிரித்துப் பொருள் செய்க.

இதன்கண் மூன்றாமடியும் நான்காமடியும் மடக்கியது காண்க.]

'நலத்தகை பெறஇரு சரணம் ஓதும்நம்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே
நலத்தகை மகளொரு பாகம் நண்ணுமே
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே.'

இஃது இரண்டாம் அடியும் ஈற்றடியும் மடக்கியது.

[மேம்பட்ட நலம் பெறத் திருவடிகள் இரண்டனையும் பரவிப் புகழும் அடியார் குலத்தவர் கைகளைத் தன் குற்றேவலுக்கு ஏற்பித்துக்கொள்ளும் காஞ்சிமாநகரத்து ஏகாம்பரநாதன், நன்மை மிக்க பார்வதியை ஒருபாகமாகக் கொண்டு, குலத்தான் மேம்பட்ட பாம்புகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒற்றை ஆடையை உடையவன்.

பணி — தொண்டு, பாம்பு.

ஏகாம்பரம் - ஒற்றை மாமரம், ஒற்றை ஆடை.

இதன்கண் இரண்டாம் அடி நான்காம் அடியாக மடக்கியவாறு காண்க.]

'கருமாலை தொறுகாதல் கழியாது தொழுதாலும்
உருமாய மதனுக மடுமாறு புரிவார்முன்
உருமாய மதனுக மடுமாறு புரிவார்முன்
வருமாய வினைதீர ஒருநாளும் அருளார்கொல்.'

இஃது இடை ஈரடி மடக்கியது.

[உருவமே மறையுமாறு மன்மதன் உடலை அழிக்கும் செயலை விரும்பிய சிவபெருமானை முன்னர்ப் பிறவித்தொடர்ச்சி தோறும் அன்பு நீங்காது தொழுதாலும், இடிபோன்று பிளிறி வரும் மதம் பொருந்திய யானையைக் கொல்லும் தொழில் புரிந்த அப்பெருமான் தொன்றுதொட்டு வரும் மாயமான கொடிய வினைகள் தீருமாறு ஒருகாலத்தும் அருள் புரியாரோ?

மதன் ஆகம், மத நாகம் — என்று பிரித்துப் பொருள் கொள்க.

இதன்கண், இரண்டாம் அடி மூன்றும் அடியாக மடக்கியவாறு.

இவை ஆறும் ஈரடிமடக்கு.]

மூவடி மடக்கு வருமாறு :

'காம ரம்பயில் நீர மதுகரம்
காம ரம்பயில் நீர மதுகரம்
காம ரம்பயில் நீர மதுகரம்
நாம ரந்தை உறநினை யார்நமர்.'

இஃது ஈற்றடிஒழித்து ஏனை மூன்று அடியும் மடக்கியது.

[சோலைகளில் உள்ள மரங்களில் பழகும் வண்டுகள், காமரம் என்ற பண்ணினைப் பாடும் நீர்மையன; தேனைக்கொண்ட மன்மதன் அம்புகள், வேல் போன்று கூரியவாய் உள்ளன. வேனிற்காலம் வரவும், நாம் துன்புறுதலை நம் தலைவர் நினைக்கவில்லையே – என்று வேனிற்பருவ வரவின்கண் பிரிதல் ஆற்றாது தலைவி புலம்பியவாறு.

கா மரம் பயில் மதுகரம், காமரம் பயில் நீர ;

மது கரம் காமர் அம்பு அயில் நீர ; மது கரம்

நாம் அரந்தை உற நமர் நினையார் – எனப் பொருள் செய்க.

கரம் — கொண்டிருத்தல், எதிர்ப்படல்.

மது — தேன், ஆகுபெயரால் இளவேனிற்காலம்.

இதன்கண், முதலடி இரண்டாம் மூன்றும் அடிகளாக மடக்கியவாறு.]

இரண்டாம் அடிஒழித்து ஏனை மூன்றடி மடக்கு :

'கடிய வாயின காமரு வண்டினம்
அடிய வாயகன் றுருழை வாரலர்
கடிய வாயின காமரு வண்டினம்
கடிய வாயின காமரு வண்டினம்.'

இஃது இரண்டாம் அடி ஒழித்து ஏனை மூன்று அடியும் மடக்கியது.

[விளக்க முற்றனவாகிய விருப்பம் மருவும் வளைகள் பாதங்களை நோக்கிக் கழன்று விழவும், நம்மை அகன்ற தலைவர் நம் நலிவு கண்டு நம்பக்கல் மீண்டாரல்லர். சோலைகளில் மருவும் வண்டினங்கள் அச்சந் தருவனவாய் உள்ளன. விரும்பத்தக்க சிறந்த (பழைய) நாள்கள் நமக்கு நீக்கப்பட்டன ஆகிவிட்டன – என்று தலைவன் பிரிவிடைத் தலைவி புலம்பியவாறு.

வண்டுஇனம் அடியவாய், அகன்றூர் உழை வாரலர் ;

காமரு வண்தினம் கடிய ஆயின – எனப் பொருள்செய்க.

இதன்கண், முதலடி மூன்றுமடியாகவும் நான்காமடியாகவும் மடக்கியவாறு.]

மூன்றும் அடி ஒழித்து ஏனை மூன்றடி மடக்கு :

'கோவ ளர்ப்பன கோநக ரங்களே
கோவ ளர்ப்பன கோநக ரங்களே
மேவ ளக்கர் வியன்திரை வேலைசூழ்
கோவ ளர்ப்பன கோநக ரங்களே.'

இது மூன்றும் அடி ஒழித்து ஏனை மூன்றடியும் மடக்கியது.

[பெரிய நகரங்கள் ஒளியை மிகுப்பன ; அரசன் பெருக்குவன இறைவனுடைய கோயில்களே ; கடல் தனது அலைகளோடும் கரையோடும் சூழ்ந்திருக்கும் நில உலகத்தைக் காப்பன அரச னுடைய கைகளே.

கோ – பெரிய, ஒளி, அரசன், மேம்பாடு, பூமி என்ற பொருள்களிலும், கோநகரங்கள் – மேம்பட்ட ஊர்கள், இறைவனுடைய கோயில்கள், அரசனுடைய கைகள் என்ற பொருள்களிலும் வருதல் காண்க. கோன கரங்கள் – அரசன் கைகள்.

முதலடி, இரண்டாமடியாகவும் நான்காமடியாகவும் மடக்கியவாறு.]

முதலடி ஒழித்த ஏனை மூன்றடி மடக்கு :

'வரிய வாங்குழல் மாத ரிளங்கொடி
அரிய வாங்கயத் தானவ னங்களே
அரிய வாங்கயத் தானவ னங்களே
அரிய வாங்கயத் தானவ னங்களே.'

இது முதல்அடி ஒழித்து ஏனை மூன்றுஅடியும் மடக்கியது.

[வண்டுகள் விரும்பும் கூந்தலை உடைய இளங்கொடி போன்ற பெண்ணே! அடைதற்கு அரிய அவ்விடத்துப் பள்ளத்தில் நீர் ஊறியுள்ளது. வண்டுகள் அவாவத்தக்கனவாய்க் களிறுகளின் மதநீர்வெள்ளங்கள் உள்ளன. காடுகள் சிங்கங்கள் விரும்பும் பெரிய இடங்களை உடையன.

அரிய ஆங்கு அயத்து ஆன வனங்களே ;

அரி அவாம் கயத்துத் தானம் வனங்களே ;

அரி அவாம் கயத்தான் வனங்களே எனப் பிரித்துப் பொருள் செய்க.

அரி – வண்டு, சிங்கம்.

கய – யானை, பெருமை.

வனம் – நீர், காடு.

இரண்டாமடி மூன்றுமடியாகவும் நான்காமடியாகவும் மடக்கியவாறு. இவை நான்கும் மூன்றடி மடக்கு.]

நான்கு அடி மடக்கு வருமாறு :

'வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின'

என வரும். இந்நான்கடி மடக்கினை ஏகபாதம் என்றும் கூறுவர்.

[மேகம், கடலிடத்தில் கொடுக்கும் ஓசையை உடையனவாய், ஆகாயத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் எழுச்சியை விரும்பின; விண்ணுலகத்தை ஒக்கும் புகழை உடையனவாய பெரிய மலைகள் மேலிடத்தில் மரங்களைக் கொண்டுள்ளன.

வான் அகம் தரும் இசைய ஆயின,
வானகம் தரும் இசை அவாவின.
வானகம் தரும் இசைய ஆயின
வான்நகம், தரு மிசைய ஆயின.

என்று பிரித்துப் பொருள் கொள்க.

வானகம் – ஆகாயம், விண்ணுலகம், பெரியமலை.
இசை – ஓசை, எழுச்சி, புகழ்.

இது முதலடியே ஏனை மூன்றடியாகவும் மடக்கியவாறு.]

'அதன்சிறப்பு' என்றது, 'ஆங்கு அதன் சிறப்பு' என்ற மிகையானே, ஒரு சொல்லானே நான்குஅடி முழுவதும் மடக்கும் சொல்மடக்கும், இரண்டு அடியாக மடக்கும் பாதமடக்கும், இடையிடாது வந்த அந்தாதி மடக்கும், இடையிட்டுவந்த அந்தாதி மடக்கும் வரவும் பெறும்.

அவற்றுள் சொல்மடக்கு வருமாறு :

'உமாதர னுமாதர
னுதாதர னுமாதர
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதரன்'

என வரும்.

[உமாதரனும் (உமையைத் தரித்தவன்) மாதரனும் (மானைத் தரித்தவனும்), மா (அழகு) தரனும், மா (மாமரம்) தரனும், மா (யானைத்தோல்) தரனும், மாதரனும் (இடபத்தை ஊர்பவனும்), ஆதரனும் (அடியாரிடம் அன்புடையவனும், மாது அரன் (பெருமை பொருந்திய சிவபெருமானுவான்). இதுவும் ஏகபாதம்.]

உமாதரன் — உமையைத் தரித்தவன் ;
மாதரன் — மானை ஏந்தியவன் ;
மாதரன் — அழகை உடையவன் ;
மாதரன் — மாமரத்தடியில் தங்கியிருப்பவன் ;
மாதரன் — யானைத்தோலைப் போர்த்தியவன் ;
ஆதரன் — விருப்பமுடையவன் ;
மாதுஅரன் — பெருமை மிக்க சிவபெருமான்.

பாத மடக்கு வருமாறு :

'பணி பவ னந்தன தாக மன்னுவார்
பணி பவ னந்தன தாக மன்னுவார்
அணியென மேயது மன்ப ராகமே
அணியென மேயது மன்ப ராகமே'

எனவும்

[பாம்புகளுக்கு இருப்பிடமாகத். தமது மார்பைக் கொடுப்பவர் ;

கீழான பிறப்பு இறப்புக்கள் இன்றி நிலைபெற்றிருப்பவர் ;
அழகு என்று பொருந்தியதும் அன்பர் இதயமே ;

அணி என்று தரித்துக்கொள்ளுவது நிலைபெற்றுள்ள திருநீறே.

பணிபவனம் தனது ஆகம் மன்னுவார், பணிபவம்நந்து நதாக மன்னுவார், அன்பர் ஆகம், மன்பராகம் – என்று பிரித்துப் பொருள் செங்க. பணி – கீழான; பவம் – பிறப்பு; நந்து – இறப்பு; நதாக – இல்லையாம்படி.

முதல் ஈரடியும் கடை ஈரடியும் மடக்கியவாறு.]

'கலைநி லாவரு மாலை மணங்கொள்வான்
மலைய மாருத மாறல மாதர்கண்
கலைநி லாவரு மாலை மணங்கொள்வான்
மலைய மாருத மாறல மாதர்கண்'

எனவும்,

மேகலை இடையில் நிலைநிற்கப்பெறாத அரிய மாலைக்காலத்தில் தலைவருடைய கூட்டத்தை வேண்டிக் காதலோடு கூடியகண் மிக்க அழுகையை நீங்கா; கலைகளை உடைய நிலா எழும்; மாலையில் உள்ள மணத்தை நுகரவேண்டி, இப்பெண்ணிடத்தில் தென்றல் நீங்காது.

கலை நில்லா அரு மாலை மணம் கொள்வான் மாதர் கண் மலைய மாருதம் மாறல. கலை நிலா வரும். மாலை மணம் கொள்வான் மாதர்கண் மலையமாருதம் மாறல – என்று பிரித்துப் பொருள் செய்க.

இது முதலடியும் மூன்றுமடியும், இரண்டாமடியும் நான்காமடியும் மடக்கியவாறு.]

'ஓத நின்றுல வாவரும் வேலைவாய்
மாத ரங்க மலைக்கு நிகரவே
ஓத நின்றுல வாவரும் வேலைவாய்
மாத ரங்க மலைக்கு நிகரவே'

எனவும் வரும். பிறவும் வந்துழிக் காண்க.

[வெளியே நின்று சொல்லுவதற்கு முடிவில்லாத அரிய நேரத்தில், வெள்ளம் நிலைபெற்று உலவிவருகின்ற கடலின் பெரிய அலைகள் மலைக்கு ஒப்பாக வந்து இப்பெண்ணின் உறுப்புக்களைத் துன்புறுதலில் ஒன்றற்கு ஒன்று இணையாம்படி துன்புறுத்தும்.

ஓத நின்று உலவா அரும் வேலைவாய், ஓதம் நின்று உலவா வரும் வேலைவாய் மா தரங்கம் மலைக்கு நிகரவே, மாதர் அங்கம் நிகரவே மலைக்கும் — என்று பிரித்துப் பொருள் கொள்க.

இதுவும் முதலடியும் மூன்றாமடியும், இரண்டாமடியும் நான்காமடியும் மடக்கியவாறு.]

அந்தாதி மடக்கு வருமாறு :

'மாலை யாகவெய் தனங்கவேள் பயில்தரு மாலை
மாலை வேட்டவர் மனங்கொலோ அவன்துழாய் மாலை
மாலை யோவுடைத் தநுநினைந் தெழுதரு மாலை
மாலை யாவுடை யவரைவந் திடர்செயு மாலை'

எனவும்,

[வரிசையாக அம்பு எய்து மன்மதன் பழகுகின்ற இயல்பை உடையது மாலைப்போது. திருமாலை விரும்பியவர் மனம் அவன் திருத்துழாய் மாலையிலுள்ளது. மாலையோ அருமையுடையது. அம்மாலையை நினைத்து எழுகின்ற மயக்கத்தை இயல்பாக உடையவருக்கு இம்மாலைக்காலம் வந்து துயரம் செய்யும்.

மாலையாக அம்பு எய்து அனங்கவேள் பயில்தருமாலை; மாலை வேட்டவர் மனம் அவன் துழாய்மாலை; மாலையோ உடைத்து; மாலை மாலையாக உடையவர்களை மாலை வந்து இடர் செய்யும் – என்று பிரித்துப் பொருள்கொள்க.

இஃது அடிதோறும் முதலும் இறுதியும் முழுதும் மடக்கியவாறும் அந்தாதித்தொடை அமையுமாறும் காண்க.]

'கயலேர் பெறவருங் கடிபுனற் காவிரி
காவிரி மலருகக் கரைபொரு மரவ
மரவப் பூஞ்சினை வண்டொடு சிலம்பும்
சிலம்புசூழ் தளிரடித் திருமனைக் கயலே'

எனவும் வரும். பிறவும் அன்ன. (69)

[கயல்மீன்கள் எழுச்சிபெற பெருக்கெடுத்துவரும் நறுமணம் மிக்க புனலை உடைய காவிரியாறு, சோலைகளில் விரிந்த மலர்கள் கீழே விழுமாறு கரையைத் தாக்கும் ஒலியானது, மரவமரத்தில் பூக்கள் செறிந்த கிளைகளில் உள்ள வண்டொலியோடு ஒலிக்கும். இங்ஙனம் ஒலிக்குமிடம் சிலம்பு என்ற அணிகளால் சூழப்பட்ட தளிர் போன்ற அடிகளையுடைய தலைவியின் வீட்டிற்கு அருகிலேயாம்.

கயல் ஏர்பெற வரும் கடிபுனல் கா விரி, கா விரி மலர் உகக் கரை பொரும் அரவம், மரவம் பூஞ்சினை வண்டொடு சிலம்பும், தலைவி திருமனைக்கு அயலே – என்று பிரித்துப் பொருள் செய்க.

இஃது அந்தாதி மடக்காமாறு காண்க.] 69

ஓரெழுத்துமடக்கு

689. ஓர்எழுத்து மடக்கலும் உரித்துஎன மொழிப.

இஃது ஓரெழுத்தானும் மடக்கு வரும் என அதன் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள் : எழுத்தின் கூட்டம் இடைபிறிது இன்றிச் சீரானும் அடியானும் மடக்குதலே அன்றிப் பெயர்த்தும் வேறுபொருள் தரின் ஓர் எழுத்தான் மடக்குவதும் அம் மடக்கிற்கு உரிமை உடைத்து என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 97

'மதித்தோ ரெழுத்தினை மடக்கலும் மடக்கே.' – *மா.* 269

'ஓரெழுத் தொடுமுயி ரினுமுட லினுமூ
வினத்தினும் வருமென இசைக்கப் படுமே.'
– *மு. வி. சொ.* 12

வரலாறு :

'நாநா நாதம் கூடிசை நாடும் தொழிலோவாய்
தாதா தார மாக விரைத்தண் மலர்மீதே
வாவா வார்தண் சோலையில் வாழும் வரிவண்டே
யாயா யாளிற் சேர்த்துவ தன்பற் கிசையாயால்'

என வரும்.

[பலவிதமான ஓசைகள் கூடிய இசையினை ஆராயும் தொழில் நீங்காமல் தாதுகளையே ஆதாரமாக நறிய தண்ணிய மலர்கள்மீது தாவி நீண்ட தண்ணிய சோலையில் வாழும் கோடுகளை உடைய வண்டே! அன்னை என்னை இற்செறிக்கப் போவதனைத் தலைவனுக்குக் கூறுவாயாக – என்ற தலைவி கூற்றில்,

நாநா (நானாவிதமான) நாதம் கூடும் இசை நாடும் தொழில் ஓவாய், தாது ஆதாரமாக மலர்மீது வாவா (வாவி) வாழும் வரிவண்டே! யாய் ஆயாள் (தாயானவள்) இல் சேர்த்துவது அன்பற்கு இசையாய் – என்று பொருள்கொள்க.

இப்பாடலில், முதலடியில் நா, இரண்டாம் அடியில் தா, மூன்றும் அடியில் வா, நான்காமடியில் யா என்ற எழுத்துக்கள் மடக்கியவாறு காண்க.]

'ஓரெழுத்து மடக்கலும்,' என்ற உம்மையால் ஓரெழுத்தும் ஈரெழுத்தும் மூவெழுத்தும் நான்கெழுத்தும் உயிராயும் மெய்வருக்கமாயும் இனவருக்கமாயும் வரும். அவ்வாறு வருங்கால் உயிராயும் உயிர்மெய்யாயும் வரும்,

இவையெல்லாம் ஓரோர் செய்யுள் முழுவதூஉம் வரும் எனக்கொள்க.

அவற்றுள் ஓர்உயிரான் வருவனவற்றிற்குச் செய்யுள் :

'அமல லகல மகல லபய
கமல பவன மவள — தமல
மடர வளக சலச வதன
மடர மதன நட'

எனவும்,

[அபயனே! எங்கள் மார்பினைத் தழுவாதே, இரவில் நீங்குக. காமனே! தாமரை மலரையே இடமாக உடைய திருமகளை ஒத்த இத்தலைவியுடைய களங்கமற்ற செறிந்த கூந்தலை உடைய முகத்து அழகைக் கெடுக்காதே – என்று பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்குத் தோழி வாயில் மறுத்தது.

அபய! மதன! அல் அகலம் அமலல்; அகல்; கமல பவனம் அவள அமல அடர அளக வதனம் அடரல் – என்று பொருள்செய்க.

இஃது எல்லாவிடத்தும் அகரமாகிய குற்றுயிரே வந்த குற்றுயிர் மடக்காமாறு காண்க.]

'தாயாயா ளாராயா டாமாறு தாராயா
யாமாரா வாஞடா மாதாமா — தாவாவா
யாவாகா காலாரு காவாகா காஞநா
மாலாரு மாநாதா வா'

எனவும் வரும். ஏனையவந்துழிக் காண்க. இவை ஓர் உயிர் ஓர் அலகாகவே வந்தன.

[தாய் ஆயாள் ஆராயாள் ஆதலின் தா (வருத்தம்) மாறாது. அதனை நீ ஆராயாய். அங்ஙனம் ஆராயாத நினக்கு யாம் ஆரா? (யாவராகுவேம்) வான் நாடா! (தேவருலகத்தை

ஒத்த நாட்டை உடையவனே) மாதுஆம் (இப்பெண்ணானவள்) மா தா ஆம் (பெரிய வருத்தம் அடைவாள்) வா (வருவாயாக) வந்தால், யா வா? (உனக்கு எப்பொருள் வாய்க்காது) கால் ஆரு வா கா (கால் ஆறி அவசரமின்றி வந்து எங்களைக் காப்பாயாக) ஆகா காண் (இத்துன்பம் உறுதல் தாங்க ஒண்ணாது என்பதனை நோக்குவாயாக) நா நாம் ஆம் (அயலவர் நா எங்களுக்கு அச்சம் தருகிறது) மால் ஆரு (மயக்கமும் நீங்கா) மா நாதா! (பெரிய தலைவனே) வா (வருவாயாக)

இப்பாடலில், ஆதாரமாகிய நெட்டுயிரே தொடர்ந்து வந்தமையால், இது நெட்டுயிர் மடக்காமாறு.]

மெய்வருக்கத்தான் வருவனவற்றிற்குச் செய்யுள்:

'காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்க கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா'

எனவும்,

[காக்கைக்கு ஆகா கூகை; கூகைக்கு ஆகா காக்கை; கோக்குக் கூ காக்கைக்கும், கைக்கைக்கும் கொக்கு ஒக்க, காக்கைக்கும் கைக்கைக்கும் ஆகா. உம்மைகள் தொக்குகின்றன. பகற்பொழுதில் காக்கைக்குக் கூகை தோற்கும், இரவில் கூகைக்குக் காக்கை தோற்கும். (ஆதலின் பொழுதறிந்து வெற்றிக்குரிய செயலில் பொருந்துதல் வேண்டும்.) அரசனுக்கு நாடு காத்தற்கும் பகையை அழித்தற்கும், கொக்கு கூம்புமாறு கூம்பி, அது குத்துமாறு செயற்படும் காலமறிதல் வேண்டும். ஏலாப் பொழுதுகள் உலகு காத்தற்கும் பகை அழித்தற்கும் ஆகா.]

இது ககரவருக்கத்து மடக்கு:

'தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைத்ததா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது'

எனவும்,

[தத்தித் தாது ஊதுதி; தித்தித்த தாது எது? எத்தாது தித்தித்த தாது? தித்தித்தது எத்தாதோ?

பாய்ந்து மகரந்தத்தை ஊதும் வண்டினை நோக்கி எத்தாது தித்தித்த தாது — என்று வினவியவாறு.

இப்பாடல் தகரவருக்கத்து மடக்கு.

(இவை பொருட்சிறப்பிலவாதல் காண்க.)]

'நின்னைநா னென்னென்னே னின்னைநா னென்னுன்னே
நின்னைநா னின்னெனே னின்னுனி — னின்னுனு
நாநாநா நின்னுநா னூனநீ னந்நானே
நீநா னெனநீ நினை'

எனவும் வரும். ஏனைய வந்துழிக் காண்க.

[நின்னை யான் நீசெய்யும் செயல் என்ன என்று வினவுவேன் அல்லேன்; நின்செயல்களை யான் யாது காரணம் பற்றியும் நினையேன்; உன்னை நான் உன்னைச்சேர்ந்த எனக்கு இன்னாதன செய்பவனாக நின் தன்னலம் கருதுகின்றாய் என்று கூறமாட்டேன்; நின்னையே விரும்பும் நான் பலவித அச்சங்களையும் துன்பங்களையும் உறுவேன். என்னை நீத்துவிடும் நீ நானாக இருந்து நினைத்துப் பார். நீ அதனைவிடுத்து மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டிருக்கிறாய்!

நின்னை நான் என்னென்னேன்; நின்னை நான் என் உன்னேன்; நின்னை நான் நின்னானின் இன்னான நின் என்னேன்; நாநா நாம் ஊனம் நின் உன் நான். நீ (த்துள்ள) நீ நான் என நினை; நீ நன்னானே - என்று பிரித்துப் பொருள் செய்க.

இது மெல்லின வருக்கம். இதன்கண் நகரமும் னகரமும் ஆகிய ஈரெழுத்து வருக்கங்களே வந்துள்ளன.]

ஈரெழுத்தான் வருவதற்குச் செய்யுள்:

'மன்னுமான் மான்முன்ன மானமு மீனமா
மின்னமா னேமுன்னு மானினி — மென்மென

மின்னுமா மென்னினு மன்னமுமா மென்மனனே
மன்னுமா மானுமான் மான்'

என வரும்.

[மன்னுமால் மால்; முன்னம் மானமும் ஈனமாம்; இன்ன நம்மானே முன்னும் மான் இனி மென்மென நாம் மின்னும் ஆம் என்னின் அன்னமும் ஆம். மானும் மான் (ஒக்கும்) மான் என் மனனே மன்னுமால்.

எனக்குக் காமமயக்கம் உண்டாகாநின்றது. முன்பிருந்த பெருமைக் குணமும் குறைகிறது. இத்தகைய என்னால் கருதப்படும் மான்போன்ற தலைவி மின்னலைப் போல மறைவாள் எனினும் அன்னம் போன்ற நடை அழகையும் காட்டுகின்றாள். மானினை ஒத்த இப்பெண் என் மனத்துள்ளும் தங்கியுள்ளாள்.

இதன்கண் மகரமும் னகரமுமாகிய ஈரெழுத்துக்களே வந்துள்ளன.]

மூன்றெழுத்தான் வருவதற்குச் செய்யுள் :

'மின்னுவான் முன்னு மெனினு மினிவேனில்
மன்னு வினைவே னெனைவினவா — முன்னுன
வானவனை மீனவனை மான வினைவென்வேன்
மானவனை மானுமோ வான்'

என வரும்.

[மின்னி வானம் மழை பெய்யக் கருதும் எனினும், இளவேனில் காலத்து மனம் நிலைபேறின்றி வருந்தும் என் நலன் குறித்து வினவாத, யாவருக்கும் மேம்பட்ட, சேரனையும், பாண்டியனையும் மேம்பட்ட போர் வினையால் வென்ற வேலை உடைய மனுகுலத்துச் சோழனை வானம் ஒக்குமோ?

மின்னு வான் முன்னும் எனினும், இளவேனிலில் மன்னுது இனைவேனாகிய என்னை வினவாத, வானவனையும் மீனவனையும் வெல்லும் வேலையுடைய முன்னுன மானவனை வான் மானுமோ? — என்று பொருள் செய்க.

இதன்கண் ம, வ, ன என்ற மூன்றெழுத்துக்களே வருமாறு காண்க.]

நான்கு எழுத்தான் வருவதற்குச் செய்யுள் :

'யானக வென்னே யினையனு வாக்கின
கானக யானை யனையானைக் — கோனவனைக்
கொன்னயன வேனக்க கோகனகக் கைக்கன்னிக்
கன்னிக் கனியனைய வாய்'

என வரும். ஏனைய வந்துழிக் காண்க.

[*என் ஏய் யான் நக இனையனு ஆக்கின கானக யானை அனையானை, கோன் அவனைக் கொல் நயனவேல் நக்க கோகனகக் கைக்கன்னிக் கனி அனையவாய் கன்னி.*

எத்தனையும் சிறிய யானே பரிகசிக்குமாறு இவ்வாறு தன்னுணர்வு அற்றவனுகக் காட்டானையை ஒத்த என் தலைவனைத் துன்புறுத்திய கொல்லும் வேல்களை ஒத்த கண்களையும், மலர்ந்த செந்தாமரையை ஒத்த கைகளையும் உடைய இப்பெண்ணின் கொவ்வைக் கனி அனைய வாய் புதுமை அழகுடையதாயுள்ளது — எனப் பாங்கன் தலைவியைக் கண்டு வியந்தவாறு.

இதன்கண் ய, ன, க, வ என்ற நான்கெழுத்துக்களே வந்தவாறு.]

இனம் மூவகைப்படும், வல்லினமும் மெல்லினமும் இடையினமும் என. அவை வருமாறு :

வல்லினப்பாடல்

'துடித்தடித்துத் தோற்றத் துடுப்பெடுத்த கோட
ரெடுத்த தொடைக்கடுக்கை பொற்போற் — பொடித்துத்
தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டிற்றுக் காடு'

எனவும்,

[நடுங்குதலை உடைய மின்னல் தோன்றவே, காந்தள் பூக்குலைகளை வெளிப்படுத்தின; தொடுத்த மாலைகள் போலக் கொன்றை பொன் போன்ற பூக்களை மலரச் செய்தன; தொடி அணிந்த தோள்களும் இடப்புறம் துடித்தன; மயில்கள் ஆட, கானகம் புதிய தளிர்களைத் தோற்றுவித்துக் காட்டுகின்றது – என்று கார்காலம் கண்டு தலைவன் வருகை குறித்துத் தலைவி கூறியது இப்பாடல்.

தடித்து – மின்னல். கடுக்கை – கொன்றை.

இப்பாடலில் வல்லினமே வந்தவாறு காண்க.

'வல்லினம் முழுதுறல் வல்லினப் பாட்டே.' - மா. 271]

மெல்லினப்பாடல்

'மானமே நண்ணு மனமென் மனமென்னு
மானமான் மன்ணு! நனிநாணும் — மீனமா
மாணு மினன்மின்னி முன்முனே நண்ணினு
மாணு மணிமேனி மான்'

எனவும்,

[பெருமை பொருந்திய யானைகளை உடைய தலைவனே! மின்னல் மின்னி நீ விடுத்த தூதாகத் தலைவி முன்னேவந்து காட்சி வழங்கினுலும், அதனுல் நின் விரைந்துவரல் குறித்து ஆற்ருது, என் மனம் மானமில்லாதமனம் என்றும், என் நாணும் குறைகிறது என்றும், தன் ஒப்பில்லாத அழகிய மேனியை உடைய தலைவி ஆற்ருமையால் கூறிக்கொண்டிருந்தாள் – என்று வினைமுற்றி மீண்டுவந்த தலைவனிடம் தோழி கூறியது.

மனம் என்மனம், நனி நாணும் ஈனம்ஆம், ஆனு மின்னல் மின்னி, மாணு (ஒப்பில்லாத) மணி மேனி – என்று பிரித்துப் பொருள் கொள்க.

இது மெல்லினமே அமையப் பாடப்பட்டவாறு காண்க.]

'மெல்லினம் முழுதுறல் மெல்லினப் பாட்டே' – மா,272

'யாழியல் வாய வியலளவா லாயவொலி
யேழிய லொவ்வாவா லேழையுரை — வாழி
யுழையே லியலா வயில்விழியை யையோ
விழையே லொளியா விருள்'

எனவும் வரும்.

யாழிலிருந்து தோன்றிய இலக்கணவரையறையுடைய எழுவகை இசை ஒலி இப்பெண்ணின் பேச்சினிமையை ஒவ்வா. மானின் விழியும் இவள் கூரிய விழிகளை ஒவ்வா. வியக்கத்தக்க இவள் அணிகலன்களின் ஒளியும் இவள் மேனி ஒளிக்குமுன் தம் ஒளி மழுங்கி இருள்போலாகும்.

யாழ் இயல்வாய இயல் அளவால்ஆய ஒலியின் ஏழ்இயல் ஏழை உரை ஒவ்வாவால்; உழையேல் அயில் விழியை இயலா; ஐயோ! இழையேல் இருள் ஒளியா (வாழி - அசை) - என்று பொருள் செய்க.

இது இடையினமே அமையப் பாடப்பட்டவாறு.]

'இடையினம் முழுதுறல் இடையினப் பாட்டே' - மா. 273]

'நுமது புனலி லளியி வரிவை
யமுத விதழி னிகலு - குமுத
மருவி நறவு பருக வளரு
முருவ முடைய துரை'

என ஒற்றெழுத்து இன்றி வருதலும் கொள்க.

[அளி! நுமது புனலில் இவ்வரிவை அமுத இதழின் இகலும் குமுதம் மருவி நறவு பருக வளரும் உருவம் உடையது உரை.

வண்டே! நீ பழகும் குளங்களில் இப்பெண்ணின் அமுதம் பொதிந்த இதழ்கள் போலத் தோற்றமளிக்கும் குமுத மலர்களில் ஒரு முறை மருவித் தேனைக் குடித்த பிறகு மீண்டும் தேன் ஊறும் தன்மை உடைய மலர் உண்டாயின் கூறுவாயாக - என்று தலைவன்

தலைவியது நலம் பாராட்டியது. இப்பாடல் ஒற்றெழுத்தே வாராது அமைந்தபெற்ற காண்க.]

இங்ஙனம் கூறியமடக்கின் வேறுபாடுகள் எல்லாம் விரிந்த நூலுள்ளும் முன்னோர் கூறிய இலக்கியங் களுள்ளும் ஆராய்ந்து அமைத்துக் கொள்க. (70)

மிறைக்கவி - இருபது

690. கோமூத் திரியே[1] கூட சதுக்கம்[2]
மாலை மாற்றே[3] மாத்திரைச் சுருக்கம்[4]
மாத்திரை வருத்தனம்[5] எழுத்து வருத்தனம்[6]
ஒற்றுப் பெயர்த்தல்[7] வினாஉத் தரமே[8]
நாக பந்தம்[9] முரச பந்தம்[10]
திரிபாகி[11] திரிபங்கி[12] பிறிதுபடு பாட்டு[13]
காதை காப்பே[14] கரந்துறைச் செய்யுள்[15]
சக்கரம்[16] சுழிகுளம்[17] சருப்பதோ பத்திரம்[18]
அக்கரச் சுதகம்[19] நிரோட்டம்[20] என்ன
முறைபெற வகுத்த மிறைக்கவி இருபதும்
அறிவுறக் கிளந்த அவற்றின் பால.

நிறுத்த முறையானே இது மிறைக்கவியின் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

இ-ள்: கோமூத்திரி முதல் நிரோட்டகம் ஈருகச் சொல்லப்பட்ட இத்தன்மையவாய் முறைமைப்படப் பகுத்த மிறைக்கவி இருபதும் முன்னர் எடுத்து ஓதப் பட்ட அம்மடக்கின் பகுதியவாம் என்றவாறு.

மிறைக்கவி எனினும் சித்திரகவி எனினும் ஒக்கும்.

'கோமூத் திரியே கூட சதுர்த்தம்
மாலை மாற்றே எழுத்து வருத்தனம்
நாக பந்தம் வினாஉத் தரமே
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரம் சுழிகுளம் சருப்பதோ பத்திரம்
அக்கரச் சுதகமும் அவற்றின் பால.' – தண்டி. 98

'ஏறிய மாலைமாற் றேசக் கரமினத் தாலெழுத்தால்
கூறிய பாட்டு வினாவுத் தரம்ஏக பாதம் அன்றித்
தேறிய காதை கரப்புச் சுழிகுளம் சித்திரப்பா
வீறியல் கோமூத் திரியும் பிறவும் விரித்துரையே.' – வீ. 181

'வல்லினம் மெல்லினம் இடையினப் பாட்டே
நிரோட்டிய ஓட்டியம் ஓட்டிய நிரோட்டியம்
அக்கரச் சுதகம் அதன்வருத் தனையே
வக்கிர உத்தி வினாவுத் தரமே
சக்கர பெந்தம் பதும பெந்தம்
முரச பெந்தம் நாக பெந்தம்
இரத பெந்தம் மாலை மாற்றே
கரந்துறை செய்யுள் காதை கரப்பே
பிரிந்தெதிர் செய்யுள் பிறிதுபடு பாட்டே
சருப்பதோ பத்திரம் கூட சதுர்த்தம்
கோமூத் திரிசுழி குளம்திரி பங்கி
எழுகூற் றிருக்கையோ டிருபா னாலும்
பழிதீர் மடக்குடைச் சித்திரப் பாவே.' – மா. 270

'அவற்றுள்,
இதழ்குவிந் தியையா தியல்வது நிரோட்டியம்.' – ,, 274

'இதழ்குவிந் தியைந்தியல் வதுவே ஓட்டியம்.' – ,, 275

'இருமையும் ஒன்றினுள் இருவகைத் தாயுறும்
பெருமிதம் ஓட்டிய நிரோட்டியம் எனப்பெறும்.' – ,, 276

'சித்திர கவியே தீட்டிய படவடிவு
அத்திறத்து அனைத்தையும் ஐஎன வகுத்தலே.'
– தொ. வி. 364

1. கோமூத்திரி

கோமூத்திரி என்பது நான்கடிச் செய்யுளை இரண்டு இரண்டு வரியாக எழுதி, மேலும் கீழும் ஒன்று இடை விட்டு வாசிக்க, அப்பாட்டேயாவது.

வரலாறு :

'பருவ மாக விதோகன மாலையே
பொருவி லாவுழை மேவன கானமே
மருவு மாசை விடாகன மாலையே
வெருவ லாயிழை பூவணி காலமே'

என வரும்.

[*ஆயிழை! அஞ்சாதே! இது அவர் குறித்த பருவம் ஆதல் வேண்டும்; செறிந்த மாலைப் பொழுதில் மேகக் கூட்டங்கள் திக்குக்களெல்லாம் பொருந்தி மழைபெய்தல் ஒழியா; ஒப்பற்ற மான்கள் காடுகளில் தாவித்திரிகின்றன; தலைவர் மீண்டுவந்து நம்மைப் பூவணியால் ஒப்பனை செய்யும் காலம் இதுவாகும்— என்று பருவ வரலின்கண் தோழி தலைவன் கடிதின் வருவான் என்று தலைவியை ஆற்றுவித்தவாறு.*

ஆயிழை! வெருவல்; கன மாலையில் கனம் மாலை ஆசை (திசை) விடாது மருவும்; பொருஇலா உழை கானம் மேவன; ஆதலின் இது பருவம் ஆக, அவர் பூஅணி காலம் — என்று பொருள் செய்க.

ஆனேறு நடந்துகொண்டே சிறுநீர் கழிக்குங்கால் அந்நீர் நேர்கோடாக விழாமல் வளைந்து விழுவது போலப் பாடலை எழுதி, அம்முறையே மீண்டு வாசிக்கவும் பழைய பாடலே அமையுமாறு பாடப்படும் சித்திரக்கவி இது.

'கோமூத் திரநடை பெறல்கோ மூத்திரி' – *மா.* 294]

2. கூடசதுக்கம்

கூடசதுக்கம் என்பது ஈற்றடி எழுத்து ஏனை மூன்று அடியினும் கரந்து நிற்பச் சொற்சேர்த்துப் பாடுவது.

வரலாறு :

'புகைத்தகைச் சொற்படைக் கைக்கதக் கட்பிறைப் பற்கறுத்த
பகைத்திறச் சொற்கெடச் செற்றகச் சிப்பதித்
துர்க்கைபொற்புத்
தகைத்ததித் தித்ததுத் தத்தசொற் றத்தைபத் தித்திறத்தே
திகைத்தசித் தத்தைத் துடைத்தபிற் பற்றுக் கெடக்கற்பதே.

என வரும்.

[நெருப்பை ஒத்த கடிய சொற்களையும் படைக்கலன்கள் அணிந்த கைகளையும், வெகுளிப் பார்வையையும், பிறை போன்ற பற்களையும் உடைய பகைவரான அவுணர் கூட்டம் அழியுமாறு கொன்ற காஞ்சிமாநகரிலுள்ள, அழகு தங்கிய இனிய யாழொலி போன்ற சொற்களை உடைய கிளியை ஒத்த கொற்றவைமாட்டுப் பத்தி செய்யும் திறத்தில் ஈடுபடாத மனத்தை நல்வழிப் படுத்திய பின், இருவினையும் நீங்கத் தவம் செய்தல் வேண்டும்.

கல்வி — தவம் முதலாகிய விச்சை.

புகைத்தகைச் சொல் – படைக்கை – கதக்கண் – பிறைப்பல்– கறுத்தபகை எனவும், பொற்புத் தகைத்த – தித்தித்த துத்தத்த (துத்தம் என்ற இசைபோன்ற) சொல்தத்தை துர்க்கை – எனவும் பொருள் செய்க.

இது கூடசதுர்த்தம் எனவும் கூறப்படும்.

கூடம் – மறைவு, சதுர்த்தம் – நான்காம் அடி.

நான்காம் அடியிலுள்ள எழுத்துக்கள் ஏனை மூன்று அடிகளிலும் கலந்து காணப்படுவதால், இச்சித்திரகவி இப் பெயர்த்து ஆயிற்று.

'பாடலின் நாலாம் பதம்பொறி வரியிடைக்
கூடமுற் றதுவே கூட சதுர்த்தம்' – மா. 293]

3. மாலைமாற்று

மாலைமாற்று என்பது ஒரு பாட்டை ஈற்றை முதலாக வாசித்தாலும் அப்பாட்டேயாவது.

வரலாறு,

'நீவாத மாதவா தாமோக ராகமோ
தாவாத மாதவா நீ'

என வரும்.

[*நீங்காத பெரிய தவத்தை உடையாய்! வலிய மயக்கந்தரும் ஆசை நீங்கமாட்டா. ஆதலால் பெண்ணாசையை நீக்கு.*

நீவாத மாதவா! தா(வலிய) மோகத்தின் இராகமோ தாவாத (நீங்காத) ஆதலின் மாது அவா நீ (நீப்பாயாக) – என்று பொருள் செய்க.

இம்மாலை மாற்றுச் சித்திரகவியாக ஞானசம்பந்தப்பெருமான் அருளிய திருப்பதிகத்தைக் காண்க.

'ஒருசெயுள் முதலீறு உரைக்கினும் அஃதாய்
வருவதை மாலை மாற்றெனமொழிப.' – மா. 287

'இறுதிமுத லாக எடுத்துவா சிப்பினும்
அதுவே யாவது மாலைமாற் றாகும்.' – மு. வீ. சொ. 18]

4. மாத்திரைச் சுருக்கம்

மாத்திரைச் சுருக்கம் என்பது ஒருசொல் ஒரு மாத்திரை குறையப் பிறிது ஒரு சொல்லாய்ப் பிறிது ஒரு பொருள் வரப் பாடுவது.

வரலாறு :

'நேரிழையார் கூந்தலின்ஓர் புள்ளிபெறின் நீள்மரமாம்,
நீர்நிலைஓர் புள்ளிபெற நெருப்பாம், — சீர்அளவு
காட்டொன்று ஒழிப்ப இசையாம், — கவின் அளவும்
மீட்டுஒன்று ஒழிப்ப மிடறு'

என வரும்.

[பெண்களின் கூந்தல் (ஓதி) ஒருபுள்ளி பெற்றால் ஒரு நீண்ட மரமாகும். (ஒதி) நீர்நிலை (ஏரி) ஒருபுள்ளி பெற்றால் நெருப்பாகும். (எரி) சிறப்புடைய பாட்டு (காந்தாரம்) ஒரு நெட்டெழுத்தைக் குறுக்கினால் பண் ஆகும். (கந்தாரம்) பிறிது ஒரு நெட்டெழுத்தையும் குறுக்கினால் கழுத்தாகும். (கந்தரம்) (ஏ ஓ என்ற நெடில்களைக் குறிலாக்கப் பண்டையார் புள்ளியிட்டு எழுதிய மரபை நோக்குக.)

ஓதி - மகளிர் தலைமயிர்; ஒதி - உதி என்ற மரம். ஏரி - நீர்நிலை; எரி - நெருப்பு. காந்தாரம் - காடு; கந்தாரம் - ஒரு பண்; கந்தரம் - கழுத்து. இது மாத்திரைச் சுருக்கமாமாறு காண்க.

'மாத்திரை சுருங்க மறுபொருள் உணர்த்துரை
மாத்திரைச் சுருக்கம் எனவகுத் தனரே.' - மா. 299 அ.

'ஒருபொருள் தருஞ்சொலோர் மாத்திரை குறைய
மற்றொரு பொருள்தரல் மாத்திரைச் சுருக்கம்.'
- மு. வீ. சொ. 20]

5. மாத்திரை வருத்தனம்

மாத்திரை வருத்தனம் என்பது இதனையே மறுதலைப் படப்பாடுவது.

அது வந்துழிக் காண்க.

['மாத்திரை பெருக மறுபொருள் உணர்த்துரை
மாத்திரைப் பெருக்கம் எனவகுத் தனரே.' – மா. 299 அ.

'மாத்திரைச் சுருக்கம் மறுதலைப் படஒரு
மாத்திரை ஏற்றிடின் மாத்திரை வருத்தனம்.' - மு. வீ. சொ. 21

'தருவொன்றை நீட்டிடில் தருணி கூந்தலாம்,
மருவுதீ நீட்டிட மாண்புறும் நீர்நிலை,
திருவுறு கழுத்தினை நீட்டத் தீம்பணும்,
உருவமேல் நீட்டிடின் உயர்ந்த காடுமாம்'

என்று அமைத்துக் கொள்க.

'அளவொன்று ஏறிய' என்ற தண்டியலங்காரப் பாடலை நோக்குக.]

6. எழுத்து வருத்தனம்

எழுத்து வருத்தனம் என்பது ஓர்எழுத்தான் ஒரு மொழியாய்ப் பொருள் பயந்து, பின் ஓர் எழுத்து ஏற்றுப் பிறிது ஒரு மொழியாய்ப் பொருள் பயந்து, அவ்வாறே முறையானே ஏற்ற ஏற்ற ஒவ்வொரு மொழியாய்ப் பொருள் பயப்பப் பாடுவது.

'ஏந்திய சங்கமும், முன்னாள் எடுத்ததுவும்,
பூந்துகிலும், மால்உந்தி பூத்ததுவும், — வாய்ந்த
அலைவுஇல்எழுத்து அடைவே ஓர்ஒன்றுய்ச் சேர்க்கத்
தலை, மலை, பொன், தாமரைஎன்று ஆம்'

என வரும்.

[திருமால் ஏந்திய சங்கும் (கம்), கண்ணனை் முன்பு குடையாய் ஏந்தியதும் (நகம்), திருமால் ஆடையாக அணிந்ததும் (கநகம்), அவன் உந்தியில் பூத்ததும் (கோகநகம்), ஒவ்வோரெழுத்தாகச் சேர்த்திவரத் தலை (கம்) மலை (நகம்) பொன் (கநகம்) தாமரை (கோகநகம்) என்றாகும்.

கம்பு என்பது சங்கம். அது கம் என்று கடைக் குறைந்து நின்றது. கம் என்பதன் பொருள் தலை என்பது.

கம், நகம், கநகம், கோநகம் — என எழுத்து வளர வளர, வெவ்வேறு பொருள்படும் சொற்றன்மை வாய்ந்தவாறு காண்க.

'ஒருதொடர் மொழியீற் றேரெழுத் தினைப்பிரித்து
ஒருபொருள் தரவைத்து ஓரொன் றாக
மிக்கபல் பொருள்தர மேல்வைப் பனவே
அக்கர வருத்தனை ஆகும் என்ப.' – மா. 278

'பதங்களின் அக்கரங் களைப்பகுத்து ஒன்றற்கு
உரியஅக் கரங்களை மற்றொரு பதத்தொடு
புணர்த்திரு தனப்பொருள் புதுக்குவது எழுத்து
வருத்தனம் ஆம்என வழுத்தப் படுமே.' - மு. வீ. சொ. 16]

7. ஒற்றுப் பெயர்த்தல்

ஒற்றுப் பெயர்த்தல் என்பது ஒருமொழியும் தொடர் மொழியுமாய்ப் பொருள்படுமவற்றை அப்பொருள் ஒழிய வேறுபொருள்படவைத்துப் பாடுவது.

வரலாறு :

'வண்புயலைக் கீழ்ப்படுத்து, வானத் தருமலைந்து,
மண்குளிரும் சாயல் வளர்க்குமாம் ; — தண்கவிகைக்
கொங்குஆர் அலங்கல் குலதீபன், கொய்பொழில்சூழ்
கங்கா புரமாளி கை.

என வரும்.

[குளிர்ந்த வெண்கொற்றக் குடையையும், தேன் பொருந்திய ஆத்திப்பூ மாலையையும் உடைய சோழ குலத்துத் தீபம் போன்றவனாய்ப் பொழில் சூழ்ந்த கங்காபுரத்தை ஆளும் சோழன் கைகள் கொடையால் கார்மேகத்தைத் தோற்கடித்து, கற்பகத்தோடு போரிட்டு, உலகம் மகிழ்தற்குக் காரணமாகிய அருளை வளர்க்கும்.

கங்காபுரியிலுள்ள மாளிகைகள், மேக மண்டலத்தையும் கடந்து ஓங்கிக் கற்பக மரங்களை உயர்ந்த தம் தலையில் சூடி, உலகிற்குத் தம் பெருவடிவால் குளிர்ந்த நிழலை வழங்கும்.

கங்காபுரம் ஆளி கை, கங்காபுர மாளிகை — இத்தொடரில் ஒற்றைப் பிரிக்க, வேறுபட்ட இருபொருள் தந்துள்ள நயம் காண்க.

இப்பாடலின் முதல் இரண்டடிகள் கங்காபுரம் ஆளி ஆகிய சோழனுடைய கைகளுக்கும், கங்காபுரத்திலுள்ள மாளிகைக்கும் சிலேடையாக அமைந்துள்ளவாறும் காண்க.

இப்பாடல் 'கங்காபுர மாளிகை' என்ற தொடர்ப் பொருளை இருவகையாய்ப் பிரித்துக் கொண்டவாறு.

'ஒற்றினைப் பிரிக்கமற் றொருபொருள் உணர்த்துதல்
ஒற்றுப் பெயர்த்தல் என்றுரை உணர்த்தும்.' – மா. 299 அ.

'ஒருமொழி தொடர்மொழி யாகஒண் பொருள்படு
மவற்றை அப்பொருள் தவிர மறுபொருள்
பெறச்சொலல் ஒற்றுப் பெயர்த்த லாகும்.' – மு. வீ. சொ. 24]

8. வினா உத்தரம்

வினா உத்தரம் என்பது ஒரு சொற்றொடரைப் பிரித்துப் பதந்தொறும் வினவுதற்கு உத்தரமாகப் பதப் பொருள் உரைத்துக் கடைக்கால் வினயதற்கு உத்தரமாக அத்தொடர் முழுதும் ஒரு பொருளாக்கி உரைப்பது.

வரலாறு :

**'பூமகள்யார்? போவானை ஏவுவான் என்உரைக்கும்?
நாமம் பொருசரத்திற்கு என்என்பர்? — தாம்அழகின்
பேர்என்? பிறைசூடும் பெம்மான் உவந்துறையும்
சேர்வுஎன்? திருவேகம் பம்'**

என வரும்.

[*பூமகள் யார்? — திரு.*

போகின்றவனை ஏவுகின்றவன் என்ன சொல்லி அனுப்பி வைப்பான்? — ஏகு.

அஞ்சத்தக்க போரிடும் அம்பிற்குப் பெயர் என்ன? — அம்பு.

அழகுக்கு உரிய பெயர் யாது? — அம்.

சிவபெருமான் வீற்றிருக்கும் இருப்பிடம் யாது? — ‘திருவேகம்பம்’.

திரு, ஏகு, அம்பு, அம் – திருவேகம்பம் ஆயினவாறு.

‘துதித்திடும் ஒருபொருள் தொடர்ச்சொலைப் பிரித்து
மதிப்பட வினைய வகைக்கெதிர் மொழியாய்
விதிப்பட உரைப்பது வினாஉத் தரமே.’ – *மா.* 280

‘வினாவொடு விடையும் விரிந்து வருவது
வினாவுத் தரமென விளம்பப் படுமே.’ - *மு. வீ. சொ.* 15]

9. நாகபந்தம்

நாகபந்தம் என்பது இரண்டு பாம்பாக மாறி எழுதி ஒரு நேரிசை வெண்பாவும், இன்னிசை வெண்பாவும் எழுதிச் சந்திகளில் நின்ற எழுத்தை மற்றை இடங்களிலும் உறுப்பாய் நிற்கப் பாடுவது :

[**‘வரியரவு இரண்டாய் வால்வயிறு இரண்டாய்த்**
தெரிமூலை நான்காய்ச் சிறந்துமும் மூன்றுடன்
நிலைபெறும் ஒருபான் இருபான் நிறீஇத்
தலைஇரண் டெழுத்தாய்ச் சார்தரச் சந்தியின்
கவினுறுத் தெழுத்துக் கலந்துறுப் பாக
நவிலிரு பாவே நாக பெந்தம்.’ – *மா.* 285]

வரலாறு :

‘அருளின் றிருவுருவே யம்பலத்தா யும்பர்
தெருளின் மருவாதசீர்ச் சீரே! — பொருவிலா
வொன்றே! யுமையா ளுடனே யுறுதிதரு
குன்றே தெருள வருள்’

எனவும்,

'மருவி னவருளத்தே வாழ்சுடரே, நஞ்சு
பெருகொளியான், றேய பெருஞ் சோதி — திருநிலா
வானஞ் சுருங்க மிகுசுடரே! சித்த
மயரு மளவை யொழி'

எனவும் வரும். (உரை வெளிப்படை)

'வாலுள் இருமூன்றும் தலையில் இரண்டெழுத்தும்
மூலைகள் நான்கும் வயிறுஇரண்டும் — ஐவைந்தாம்
நாலெட்டு நாலைந்தே ழாகி நடைபெறுமே,
சேலிட்ட கண்அரவின் சீர்'

இதன்வழியே எழுதிக் கண்டுகொள்க.

10. முரசபந்தம்

முரசபந்தம் என்பது ஓரடி ஒருவரியாய் நான்கு வரி எழுதி, மேல் இரண்டு வரியும் தம்முள் கோமூத்திரி-யாகவும், கீழ் இரண்டு வரியும் தம்முள் கோமூத்திரி-யாகவும், சிறுவார் போக்கியும், மேலில் வரி இரண்டாம் வரியினும் மூன்றும் வரியினும் நான்காம் வரியினும் கீழ் உற்று மீண்டும் மேல்நோக்கி அவ்வாறே வந்தும், கீழ் நோக்கி அவ்வாறே சிறுவார் போக்கியும், கீழில் வரியிலும் அவ்வாறே மேல்நோக்கி மேலில் வரியுற்றுக் கத்திரிகைமாருய்ப் பெருவார் போக்கியும் அவ்வரியே யாகப்பாடுவது.

['எழுதிய வரிநாலி னுள்முத வீறன
பழுதற மந்திரிச் செலவாய்ப் படர்ந்தயல்
ஒழுகியும் கீழ்மேற் றனதீற் றுற்றபின்
அறைதொறும் ஏனைய அடைவே பாதியின்
முறைதடு மாறுதல் முரச பெந்தம்' – மா. 284]

வரலாறு :

'கான வாரண மரியவா யினதோ
தான வாரண மரியவா யினதோ
மான வாரண மரியவா யினதோ
கான வாரண மரியவா யினதோ'

என வரும்.

[மான வாரணம் அரி அவாயினது, கான ஆரணமும் தான வாரணமும் அரிதாகிக் கானம் வாரணமும் அரியும் அவாயினதாயிற்று.

பெருமை பொருந்திய யானை போன்ற மன்னன் பகைமையை அவாவி அழித்த நாடு, ஓசையுடைய வேதமும் மதயானை யீட்டமும் அரியதாகிக் காட்டுக் கோழியும் சிங்கமும் விரும்பும் காடாயிற்று.]

11. திரிபாகி

திரிபாகி என்பது மூன்றெழுத்துக் கூட ஒரு மொழியாய், அதன் முதலெழுத்தும் கடை எழுத்தும் கூட மற்றொரு மொழியாய், இடை எழுத்தும் கடை எழுத்தும் கூட மற்றொரு மொழியாய்ப் பொருள் வேறுபடப் பாடுவது.

['மூன்றெழுத்து ஒருமொழி முதலீறு இடையீறு
ஆன்ற பொருள்பிற வாந்திரி பதாதி.' – மா. 299 அ.
'மூன்றெழுத்து ஒருபெயர் முதலிடை முறிக்கின்
முப்பெயர் எதிர்முளைப் பதுதிரி பாகி.' – மு. வீ. சொ. 23]

வரலாறு :

'மூன்றெழுத்தும் எங்கோன், முதல்ஈறு ஒருவள்ளல்,
ஏன்றுஉலகம் காப்பது இடைகடையாம், — என்றுரைப்பின்,
பூமாரி பெய்துலகம் போற்றிப் புகழ்ந்தேத்தும்,
காமாரி, காரி,மா ரி'

என வரும்.

[பூக்களை அருச்சித்து உலகத்தவர் போற்றுபவனாகிய, மன்மதனை அழித்த சிவபெருமானுடைய திருநாமம் காமாரி என்ற மூன்றெழுத்தாகும். முதலெழுத்தும் ஈற்றெழுத்தும் கடைச் சங்ககால வள்ளல்களுள் ஒருவன் பெயராகிய காரி ஆகும். நடு எழுத்தும் கடை எழுத்தும் உலகம் காக்கும் மழையின் பெயராகிய மாரி ஆகும்.]

12. திரிபங்கி

திரிபங்கி என்பது ஒரு செய்யுளுறுப்பு அமைந்து ஒரு பொருள் பயந்ததனையே மூன்றாகப் பிரித்து எழுத வெவ்வேறே தொடையும் பயனிலையும் பொருளும் பயப்பப் பாடுவது.

'நனிஒரு பாவாய் நடந்தது தானே
தனிதனி மூன்றும் சால்புறு பொருண்மையின்
பகுப்பநிற் பதுதிரி பங்கிய தாகும்.' – *மா.* 296

'ஒருகவிக் குட்கவி மூன்றெழு குவது
திரிபங்கி என்மனார் தெளிந்திசி னோரே.' – *மு. வீ. சொ.* 22

வரலாறு :

'ஆதரந்தீர் அன்னை போலினியாய்! அம்பிகா பதியே!
மாதர்பங் கா! வன்னி சேர்சடை யாய்! வம்பு நீள்முடியாய்!
ஏதமுய்ந் தோர்இன்னல் சூழ்வினை தீர்எம்பிரான்! இனியாய்!
ஓதும்ஒன் றே, உன்னு வார்அமு தே! உம்பர் நாயகனே.'

இதனையே,

'ஆத ரம்தீர்
மாதர் பங்கா!
ஏதம் உய்ந்தோர்
ஓதும் ஒன்றே!

எனவும்,

'அன்னைபோல் இனியாய்!
வன்னிசேர் சடையாய்!
இன்னல்சூழ் வினைதீர்
உன்னுவார் அமுதே!

எனவும்,

'அம்பிகா பதியே!
வம்புநீள் முடியாய்!
எம்பிரான் இனியாய்!
உம்பர்நா யகனே!

எனவும் மூன்றாகப் பிரித்து அவ்வாறு தல் கண்டுகொள்க.

[*ஆதரம் — உலகப்பற்று. அம்பிகா — பார்வதி; வன்னி — சமீபத்ரம். வம்பு — புதிய அழகு; ஏதம் — உலகபந்தமாகிய துன்பம்.*]

13. பிறிதுபடு பாட்டு

பிறிதுபடு பாட்டு என்பது ஒரு செய்யுளைத் தொடையும் அடியும் வேறுபட உரைப்பச் சொல்லும் பொருளும் வேறுபடாது வேறு ஒரு செய்யுளாகப் பாடுவது

['பிறிது ஒன்று ஆதல் பிறிதுபடு பாட்டே' - *மா.* 291

'பாவடி தொடைகளும் படுப்ப வேறு
மேவருஞ் சொற்பொருள் வேறு படாமல்
மற்றொரு பாவாய் வருவது பிறிது
படுபாட் டெனப்பெயர் பகரப் படுமே.' – *மு. வீ. சொ.* 25]

வரலாறு :

'தெரிவருங் காதலின் சேர்ந்தோர் விழையும் பரிசுகொண்டு
வரிஅளி பாட, மருவரு வல்லி இடையுடைத்தாய்,
திருதரு காமர் மயிலியல் ஆயம்நண் ணுத்தேமொழி
அரிவைதன் நேர்என லாம்இயற்று, ஐயயாம் ஆடிடமே'

எனவரும். ஐஞ்சீர் நான்கடிக் கொச்சகக் கலித்துறையே,

'தெரிவருங் காதலின் சேர்ந்தோர் விழையும்
பரிசு கொண்டு வரிஅளி பாட
மருவரு வல்லிஇடை உடைத்தாய்த் திரிதரும்
காமர் மயிலியல் ஆயம் நண்ணுத்
தேமொழி அரிவைதன் நேர்எனல்
ஆம்இயற்று ஐய யாம்ஆடு இடமே.'

என ஈற்று அயலடி முச்சீராய் ஏனைய நாற்சீராய் நேரிசை ஆசிரியப்பா ஆயினவாறு கண்டுகொள்க.

[*தலைவியிடத்து ஆசையால் ஈண்டுப்போந்த யாம் விரும்பும் தன்மைகளைக் கொண்டு, வண்டு பாட, இடைபோன்ற கொடிகள் நுடங்க, ஆயத்தாரோடு கூட இன்று வாராத தலைவிக்கு ஒப்பாக அவளோடு நாம் விளையாடும் இடம் காட்சி வழங்குகிறது – என்று தலைவன் நெஞ்சொடு கூறியவாறு.*]

14. காதை கரப்பு

காதை கரப்பு என்பது ஒருசெய்யுள் முடிய எழுதி, அதன் ஈற்று மொழியுள் முதலெழுத்துத் தொடங்கி ஓரோர் எழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிது ஒரு செய்யுளாகப் பாடுவது.

['காதை கரப்பது காதை கரப்பே.' – *மா.* 289

'யாப்பிறு மொழிமுதல் அக்கரம் தொடங்கி
ஒவ்வோ ரெழுத்திடை ஒழித்துவா சிக்க
வேறொரு செய்யுள் விளைப்பது காதை
கரப்பாம் என்மனார் கற்றுணர்ந் தோரே.' – *மு. வீ. சொ.* 13

மாறன் அலங்காரம் காதை கரப்பையும் கரந்துறை செய்யுளையும் மாற்றிக் கூறும்.]

வரலாறு :

'தாயேயா நோவவா வீரு வெமதுநீ
பின்னை வெருவா வருவதொ ரத்தப
வெம்புகல் வேறிருத்தி வைத்திசி னிச்சைகவர்
தாவா வருங்கலனீ யே'

என வரும். இதனுள்,

'கருவார் கச்சித்
திருவே கம்பத்
தொருவா வென்னீ
மருவா நோயே!'

எனப் பிறிது ஒரு செய்யுள் போந்தவாறு கண்டுகொள்க.

[*எங்கட்குத்தாவா அருங்கலம்! நீயே தாயே; யாம் நோவு அவா ஈரு(க); எமது (சார்வாயுள்ள) நீ பின்னை வெருவா வருவது ஓர் (ஆராய்வாயாக); அ(து) தப எம்புகல் வேறு இருத்தி வைத்திசின்; இச்சை கவர்.*

எங்களுக்குக் கெடாத அரிய செல்வமாகிய தெய்வமே! நீயே எங்களுக்குத் தாய் ஆவாய். யாம் வருந்துவதற்குத் காரணமாகிய உலகப்பற்றுக்களை நீக்குவாயாக; எமக்குப் பற்றுக் கோடாம் நீ எங்களை அஞ்சச்செய்யும் காரணத்தை ஆராய்வாயாக; அக்காரணம் நீங்க எங்கள் மற்றைய காமங்களை மாற்றி உலகத் தொடர்பிலிருந்து எங்களை விலக்கி வேறாக வைப்பாயாக.]

15. கரந்துறை செய்யுள்

கரந்துறை செய்யுள் என்பது ஒரு செய்யுட்குப் பிறிது ஒரு செய்யுட்சொல் புகுதாது எழுத்துப் பொறுக்கிக் கொள்ளலாம்படி பாடுவது.

'முதலொரு செய்யுள் முடித்ததன் ஈற்றின்
பதமதன் இறுதியின் பயிலெழுத் துத்தொடுத்து
இடையிடை யிட்டெதிர் ஏரும் முதலயல்
அடைதரப் பிறிதொரு செய்யுள் கரந்தங்கு
உறைவது கரந்துறை செய்யுளென் றுரைபெறும்.' – *மா.* 288

'ஒப்புர வினிலிருந்து ஓர்பாக் குரியன
அக்கரம் பொருக்கிக் கொளலா கும்படி
பாடல் கரந்துறைப் பாட்டென மொழிப.' – *மு. வீ. சொ.* 13]

வரலாறு :

'அகலல்குல் தேரே, அதரம் அமுதம்,
பகர்தற்கு அரிதுஇடையும், பார்க்கின், — முகமதியம்,
முத்தென்ன லாம்முறுவல், மாதர் முழுநீல
மைத்தடங்கண், வெவ்வேறு வாள்'

எனவரும். (*உரை வெளிப்படை*) இதனுள் போந்த செய்யுள் :

'அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு.' – *குறள்* 1

எனக் காண்க.

16. சக்கரம்

சக்கரம் நான்கு ஆரல் சக்கரமும் ஆறு ஆரல் சக்கரமும் எட்டு ஆரல் சக்கரமும் என மூவகைப்படும். அவற்றுள் நான்கு ஆரல் சக்கரம் இரண்டு வகைப்படும்.

['சக்கரத் துள்தடு மாறுதல் தானே
சக்கர பெந்தம் எனச்சாற் றினரே.' – *மா.* 281

'அதுவே,
நாலிரு மூன்றிரு நாலென நாட்டும்
சால்பினி லார்புனை தன்மைய ஆகும்.' – *மா.* 282]

வரலாறு :

'மேரு சாபமு மேவுமே
மேவ மேயுண வாலமே
மேல வாமவ னுயமே
மேய னுனடி சாருமே.'

[*சிவபெருமானுக்கு மேருமலை வில்லாக மேவும்; ஆலம் உணவாக மேவும்; அவன் பூதக்கூட்டம் மேம்பட்டு விளங்கும்; அத்தன்மையான் திருவடிகளைச் சார்வீராக.*]

இது குறட்டின் நடுவே 'மே' என்னும் எழுத்து நின்று, ஆரல்மேல் ஒவ்வோரெழுத்தாக நான்கு எழுத்து நின்று, சூட்டின்மேல் பன்னிரண்டு எழுத்து நின்று செய்யுள் முடிந்தவாறு காண்க.

'மாதவா! போதி வரதா! வருளமலா!
பாதமே யோத சுரரைநீ — தீதகல,
மாயா நெறியளிப்பா யின்றன் பகலாச்சீர்த்
தாயே! யலகில்லா டாம்'

இதன் வேறுபாடும் அறிந்துகொள்க.

[*மாதவனே! போதிமரத்தடியில் அமர்ந்த மேலானவனே! குற்றமற்றவனே! உன் திருவடிகளை ஏத்தத் தேவரை நீ குற்றம் நீங்க அழிவில்லாத வீட்டு நெறியை அடையச் செய்வாய். தாயே! எல்லையற்ற வலிமை உடையாய்! உன்னிடம் அன்பு நீங்காத சிறப்பை அருள்.*

அலகு இல் ஆடு ஆம் அமலா! இன்று அன்பு அகலாச்சீர் அருள் – என்று பொருள் செய்க.]

ஆறு ஆரல் சக்கரம் வருமாறு :

'தண்மலர் வில்லிதன் போரானதஞ்ச நமக்களித்த
கண்மலர்க் காவிக் கெதிரா வனவன்று கரமளந்த

பண்மலர் யாழ்பயில் வாரன்பு சூழ்பதி நாகைமிக்க
தண்மை யகத்துப் பதுமத்த மாதர் தடங்கண்களே.'

இஃது ஆரல்மேல் ஒன்பது ஒன்பது எழுத்தாய், நடுவுரகர ஆகாரமாய்ச் சூழ்ந்த குறட்டில் 'போதிவானவன்' என்னும் பெயர் நின்று, சூட்டின் மேல் இருபத்துநான்கு எழுத்தாய் முற்றுப் பெற்றுச் செய்யுள் முடிந்தவாறு காண்க.

[கைகளால் மீட்டும் பண்ணையுடைய யாழ் பயில்வோர் விரும்பும் நாகையில், மன்மதனுடைய போரில் நமக்கு அபய மளித்த தலைவி கண்களுக்குத் திருமகள், கலைமகள் ஆகியவர் கண்களும் ஒவ்வா – என்று தலைவியின் குறிப்பு நோக்கினால் மகிழ்ந்த தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியவாறு.]

எட்டு ஆரல் சக்கரம் வருமாறு :

'மலர்மலி சோலை யகனலங் கதிர்க்க
மடமயி லியற்றக, மாதிரம் புதைத்து
வளைந்துபுகல் மேக வல்லிருண் மூழ்க,
வரியளி துதைந்த கதுப்பினி தடைச்சி,
மன்னுமா மடமொழி, வடிவாள் வளவன்
கன்னித் துறைவன் கனகச் சிலம்பே'

என வரும். இஃது ஆரல் மேல் அவ்வாறு எழுத்தாய், நடுவே ககரம் நின்று, குறட்டின் மேல் 'அறமே தனமாவது' என்னும் சொல் நின்று, சூட்டின்மேல் முப்பத்திரண்டு எழுத்தால் முற்றுப் பெற்றுச் செய்யுள் முடிந்தவாறு காண்க.

[வாட்படை ஏந்திய சேரனைகவும் கன்னித் துறைவனாகிய பாண்டியனைகவும் சோணாட்டோடு ஏனை இரண்டு நாடுகளையும் ஆண்ட சோழ மன்னனுடைய பொன்மயமான மலையில் மலர் மிக்க

சோலையினுள் நலம் சிறக்க, மயில்கள் களிக்க, கார்மேகம் திசைகளை மூடி உலகை இருளச்செய்ய, வண்டுகள் செறியும் மயிர் முடியை ஒப்பனை செய்துகொண்டு சிறந்த தலைவி தங்கியுள்ளாள் - என்று தலைவன் பாங்கற்கு இயல் இடம் கூறியவாறு.]

17. சுழிகுளம்

சுழிகுளம் என்பது ஒரு செய்யுளை எவ்வெட்டெழுத்தாக நாலடியும் நான்குவரி எழுதி, மேல்நின்று கீழ் இழிந்தும் கீழ் நின்று மேல் ஏறியும் முடிய உச்சரித்தாலும், அவ்வரி நான்குமேயாய் அச் செய்யுள் தானே முற்றுப் பெறுவது.

['தெழித்தெழு நீர்குளத் தினுட்செறிந் தனைக்கொடு
சுழித்தடங் குவபோன்று அடக்குதல் சுழிகுளம்' - மா. 295]

வரலாறு :

'கவிமுதி யார்பாவே
விலையரு மாநற்பா
முயல்வ துறுநர்
திருவழிந்து மாயா'

என வரும்.

[கவிகளில் முதிர்ந்தார் பாடும் பாடலே விலையிடுதற்கு அரிய சிறந்த கவியாம். இடைவிடாது முயல்பவர் செல்வங்கள் அழிந்தும் அவை நீங்கா.]

18. சருப்பதோபத்திரம்

சருப்பதோபத்திரம் என்பது ஒரு நிரை எவ்வெட்டாக அறுபத்துநான்கு அறை கீறி ஓரடி எவ்வெட்டெழுத்தாக நான்கடியான் ஒரு செய்யுள் பாடி, அதனை

மேல் நின்று கீழ் இழிய நான்கு அடியும் எழுதி, அதனைக் கீழ் நின்று மேல் ஏற நான்கடியும் எழுதி, மேல் நின்று கீழ் இழியவும் கீழ் நின்று மேல் ஏறவும் விலங்கி, முதல் தொடங்கி இறுதியாகவும் இறுதி தொடங்கி முதலாகவும் மாலைமாற்றாகவும் நான்கு முகத்தாலும் வாசிக்க அச்செய்யுளேயாவது.

'இருதிறத்து எழுதலும் எண்ணான்கு எழுத்துடை
ஒரு செய்யுள் எண்ணென் அரங்கினுள் ஒருங்கமைந்து
ஈரிரு முகத்தினும் மாலை மாற்றாய்ச்
சார்தரும் மாறியும் சருப்பதோ பத்திரம்.' – மா. 292]

வரலாறு :

'மாவா நீதா தாநீ வாமா
வாயா வாமே மேவா யாவா
நீவா ராமா மாரா வாநீ
தாமே மாரா ராமா மேதா'

என வரும். இஃது அவ்வாறுதல் கண்டுகொள்க.

[மேலோய்! நீ கொடையாளி! நீவாத செல்வமுடையாய்! என்னைக் கடவது? வா; பொருந்துவாயாக; நீ வந்தால் எனக்கு மேவாதன யாவை? நீ வா. இராமா! மாரா! நீதியோய்! நீ அணிந்துள்ள ஆத்தி மாலையையே தா.

மாவா, நீ தாதா; நீவா மாவா; யா; வா; மே; மேவா யா; நீவா, வா; ராமா, மாரா, நீதா, மே(வு)ம் ஆர் ஆர(ா)மாம் தா வா – என்று பொருள் செய்க.

அரசன் மாளிகைக்கண் உள்ள சருப்பதோபத்திரம் என்ற கட்டிடம் நாற்புறமும் வாயில் உடையதாய் நினைத்த பக்கத்தில் மேல் ஏறவும் கீழ் இறங்கவும் கூடியதாயிருப்பது போல, இப்பாடலும் எப்படிப் படித்தாலும் பாடல் அமையுமாறு அமைந்திருத்தல் காண்க.]

19. அக்கரச்சுதகம்

அக்கரச்சுதகம் என்பது ஒரு பொருள் பயப்பது ஒரு சொல் கூறி, அச்சொல்லின் ஓரோர் எழுத்தாக நீக்க வேறுவேறு பொருள்பயப்பது.

['ஒருபொருள் பயந்த ஒரு தொடர் மொழியாய்
வருவதை ஓரெழுத் தாய்க்குறை வகுப்பில்
சுருங்குபு பலபொருள் தோன்றுவ தாய
அருங்கவி அக்கரச் சுதகம் ஆகும்.' – மா. 277

'ஒருபொருள் பயப்பது ஒருமொழி இருந்ததில்
ஒவ்வோர் அக்கரம் ஒழிக்கவெவ் வேறு
சொல்லும் பொருளும் தோன்றுவது எழுத்தழிவு
ஆகும் என்மனூர் அறிந்திசி னோரே.' – மு. வீ. சொ. 17]

வரலாறு :

'பொற்றூணின் வந்தசுடர், பொய்கை பயந்த அண்ணல்,
சிற்றுயன் முன்வனிதை யாகி அளித்த செம்மல்,
மற்றியார்கொ லென்னில், மலர்தூவி வணங்கி, நாளும்
கற்றூர் பரவும் கனகாரி, நகாரி, காரி'

என வரும்.

[பொன் மயமான தூணில் வந்த சோதி நரசிம்மமூர்த்தியாகிய கனகாரி; சரவணப் பொய்கையில் தோன்றிய அண்ணல் கிரவுஞ்ச மலையை அழித்த முருகனாகிய நகாரி; திருமால் பெண்வடிவில் சிவனோடு கூடிப் பெற்ற மைந்தன் சாத்தனாகிய காரி.

இதன்கண் ஒவ்வோரெழுத்துக் குறைய வெவ்வேறு பெயராதல் காண்க.]

20. நிரோட்டகம்

நிரோட்டகம் என்பது இதழ் முயற்சியால் பிறக்கும் மெய்யும் உயிரும் உயிர்மெய்யும் வாராமல் பாடுவது.

['இதழ்குவிந் தியையாது இயல்வது நிரோட்டியம்.' - *மா.* 274

'இதழ்குவி யாளழுத்து எடுத்துப் பாடுவது
அதுநிரோட் டகமென் றறையப் படுமே.' - *மு. வீ. சொ.* 18]

வரலாறு :

'*சீலத்தான் ஞானத்தாற், றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா ஞராத காதலான் - ஞாலத்தார்,
இச்சிக்கச் சாலச் செறிந்தடியேற் கேயினிதாம் ;
கச்சிக்கச் சாலைக் கனி*'

என வரும். இதனை உச்சரித்து அவ்வாறுதல் காண்க.

[*காஞ்சிமா நகரில் திருக்கச்சாலையிலுள்ள கனிபோன்ற சிவ பெருமான் ஒழுக்கத்தாலும், ஞானத்தாலும், மனத் தெளிவாலும், பல காலமாக வழிபடுதலாலும், நீங்காத பக்தியினாலும் சான்றோர் தன்னை நினைப்பவனாக இருந்தும் ஒன்றுமில்லாத அடியவனாகிய எனக்கும் மிகவும் மனத்தில் வந்து பொருந்தி இன்பம் தருகிறான்.*

உதடுகள் தொடர்புறத் தோன்றும் எழுத்தொலிகளாகிய உ ஊ ஒ ஓள ப ம வ — என்பன இப்பாடலில் வாராமை காண்க.]

தன்னினம் முடித்தல் என்பதனால், சதுரங்க விகற்பமும் தேர்க்கவி கடகபந்தம் முதலாயவற்றின் வேறுபாடும் கொள்க. (*மாறனலங்காரத்துள் காண்க.*) (71)

வழுவும் மலைவும்

691. பிரிபொருள் சொற்றொடர்[1] மாறுபடுபொருள்மொழி[2]
மொழிந்தது மொழிவே[3] கவர்படு பொருள்மொழி[4]
நிரல்நிறை வழுவே[5] சொல்வழு[6] யதிவழு[7]
செய்யுள் வழுவே[8] சந்தி வழு[9] என
எய்திய ஒன்பதோடு இடனே[10] காலம்[11]
கலையே[12] உலகம்[13] நியாயம்[14] ஆகமம்[15]
எனமலைவு இருமூன்றும் வரைந்தனர் புலவர்.

இது மேற்கூறிய அணிபெறும் செய்யுட்குப் பொருந்தாத குற்றமாவன இவை என்று தொகுத்து உணர்த்துகின்றது.

இ-ள் : பிரிபொருள் சொல் தொடரும், மாறுபடு பொருள் மொழியும், மொழிந்தது மொழிதலும், கவர்படு பொருள்மொழியும், நிரல்நிறை வழுவும், சொல்வழுவும், யதிவழுவும், செய்யுள் வழுவும், சந்தி வழுவும் எனச் சொல்லப்பட்ட வழு ஒன்பதனோடு, இடமலைவும், கால மலைவும், கலைமலைவும், உலகமலைவும், நியாயமலைவும், ஆகமமலைவும் என்னும் மலைவு ஆறும் உள்ளிட்ட பதினைந்தும் அவ்வணிபெறும் செய்யுட்கு ஆகா என்று களைந்தனர் புலவர் என்றவாறு.

ஒன்பதும் ஆறுமாகப் பிரித்து ஓதினார், முன்னர் ஒன்பதும் பெரும்பான்மையும் குற்றமாகச் சிறுபான்மை ஒரோவிடத்துக் குணம் ஆதலும், பின்னர் ஆறும் ஒருதலையாகவே குற்றமாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்துரையாகப் புணர்க்கவல்ல புலவரால் சிறுபான்மை மொழியப்படுதலும் ஆம் என்றற்கு. அஃதேல், இக்குற்றம் செய்யுள் நோக்கி வருவன ஆகலின் செய்யுளியலுள் கூறாது ஈண்டுக் கூறியது என்னைஎனின், நன்று சொன்னாய்! செய்யுள் என்பது சட்டகம்; அலங்காரம் என்பன அச்சட்டகத்தைப் பொலிவு செய்வன ஆகலான், அச்செய்யுட்குப் பொலிவு உணர்த்திப் பொலிவு அழிவும் ஈண்டே கூறப்பட்டன. அன்றியும், பொருளை விளக்குவது அணிக்கு இலக்கணமாகக் கூறி, மீட்டும் அப்பொருளுக்கு இடம் ஆகிய செய்யுளை விளக்குவதும் அதற்கு இலக்கணமாகக் கூறினமையான், ஈண்டுக் கூறினார் எனினும் அமையும். ஆதலான் அப்பொலிவிற்கு வழாநிலை தனித்தனியே எடுத்துக்கூறி அதன் ஒழிபாகிய வழூவும் வழுவமைதியும் தொகுத்துக் கூறினார் என்பதூஉம் ஆயிற்று. (72)

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 99

'மொழிந்ததை மொழிதல் மாறுபடு பொருள் மொழி
பிரிபொருள் சொற்ரெடர் கவர்படு பொருள்மொழி
நிரல்நிறை வழுவே யதிவழுச் சொல்வழுச்
சந்தி வழுவொடு செய்யுள் வழுவென
வந்த ஒன்பதும்ஒரு வழிக்கடி வழுவே.' – *மா.* 300

'உலகுஇடம் காலம் கலையே நியாயம்
ஆகம மலைவென்று ஆறுஒரு வகையுள.' – *மா.* 319

72

பிறன்கோள் மறுத்தல்

692. மேற்கோள் ஏது எடுத்துக்காட்டு எனமூன்று
சாற்றுப ; அவற்றின் பால்படு வழுநிலை
நிரம்ப உணர்த்த வரம்பில ஆகும்.

இது பிறன்கோள் கூறி மறுக்கின்றது.

இ-ள் : மேற்கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டும் எனவும் மூன்று சொல்லுவர் ஆசிரியர். அவற்றின் பகுதிக்கண்ணவாய் வரும் வழுநிலையை ஈண்டு முற்ற உணர்த்த அளவின்றிப் பெருகும் என்றவாறு.

எனவே, ஈண்டு அவற்றை உணர்த்திலம் என மறுத்ததாயிற்று. அவை நியாயநூல் ஆராய்ச்சியின்பால் படுவன ஆதலானும், மதங்கள்தோறும் வேறுபட்டு நிற்றலானும், இன்பத்தை உரைக்கும் வரையறை உடையதாய அணி இலக்கணத்தின் பிறிதுபடுதலானும் அவற்றை வேண்டிற்றிலம் என்க, (73)

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் சிறிது திரிபுடன் – தண்டி 100

'தந்திர வுத்தி குணமத மேயுரை தர்க்கந்தன்னில்
வந்தியல் எண்கோள் முதலா யுளமாலை மாற்றுமுன்னு
வந்தியல் சித்திரம் என்றின் னவுமலங் காரமென்றே
தந்திய லச்சிலர் சொன்னார் அவற்றையும் சார்ந்தறியே.'

– வீ. 180

73

பிரிபொருள் சொற்றொடரும் அமைதியும்

693. அவற்றுள்,
பிரிபொருள் சொற்றொடர் செய்யுள்முழுவதும்
ஒருபொருள் பயவாது ஒரீஇத் தோன்றும்;
அதுவே,
களிப்பினும் பித்தினும் கடிவரை இன்றே.

இது நிறுத்த முறையானே பிரிபொருள் சொற்றொடரும் அதன் அமைதியும் கூறுகின்றது.

இ–ள்: இதனுள் மேற்கூறிய பதினைந்தனுள், பிரிபொருள் சொற்றொடர் என்று சொல்லப்படுவது, ஒரு செய்யுளின் சொற்கள் முழுவதும் ஒரு பொருளாக உரைக்கப்படாது பிரிந்து தோன்ற வருவதாம். அது-தானே கள் உண்டு களித்தார் கூற்றின்கண்ணும், பித்தினன் மயங்கினார் கூற்றின்கண்ணும் வழு என நீக்கும் நிலைமை இன்று என்றவாறு.

பிரிபொருள்சொற்றொடர் ஒன்றுப் பொருளுடைச் செய்யுள்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் - தண்டி 101, 102

[‘ உரியசொல் பலபொருள் ஒன்றின்ஒன் றுதன
பிரிபொருள் சொற்றெடர் எனும்பெயர் உடைத்தே.’
- *மா.* 205

‘ அதுவே,
‘கள்ளுண் மாந்தர்பித் தரிற்கடி வரையில.’ „ 206
‘பித்த மயக்கினும் பெருங்குடி வெறியினும்
வழுவின் றென்மனர் மறைஉணர்ந் தோரே.’ „ 31]

வரலாறு :

‘கொண்டல் மிசைமுழங்கக் கோபம் பரந்தனவால்,
தெண்திரைநீர் எல்லாம் திருமுனியே-உண்டுஉமிழ்ந்தான்;
வஞ்சியார் கோமான் வரவு ஒழிக; மற்றுஇவள்ஓர்
பஞ்சிஆர் செஞ்சீ றடி;

எனவும்,

‘காமன் உருவம் கரந்தேன்யான்; காங்கேயன்
வீமன் எதிரே விலங்குமே; — தாமரைமேல்
மால்பொழிய வந்தார் அருகர்; மதுவுடனே
பால்பொழியும் இவ்வூர்ப் பனி’

எனவும் முறையே அவ்வாறுதல் கண்டுகொள்க. பித்தினன் மயங்கிக் கூறுதல் வந்துழிக் காண்க.

‘வரைவின்று’ என்னது ‘கடிவரையின்று’ என்றதனால், பிள்ளைத்தன்மையான் மொழியினும் அமையும். அதுவும் வந்துழிக் காண்க. ‘அவற்றுள்’ என்பதனை இப்பொருண்மை அதிகாரம் முற்றும் அளவும் உய்த்து உரைக்க, (74)

[மேகம் முழங்க இந்திரகோபப் பூச்சிகள் பரவின ; கடல் நீர் முழுதையும் அகத்தியனே உண்டு உமிழ்ந்தான் ; வஞ்சியையும் ஆளும் சோழன் வாராது ஒழிவானாக ; இவள் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய சிவந்த சிறிய அடியிணை உடையாள் — என்ற இப்பாடலில், உள்ள நான்கு முற்றுச் சொற்றொடர்களும் ஒன்றோடொன்று பொருட்பொருத்தமின்றி இணைந்திருக்கும் வழுவை நோக்குக.

கள்ளுண்ட களிப்பில் 'மன்மதனுடைய வடிவத்தில் நான் கலந்துவிட்டேன். கங்கை மகனாகிய வீடுமன் வீமனுக்கு எதிரே தோற்று ஓடுவான் ; தாமரையின் மேல் அருகர் பெருமை வெளிப்படத் தோன்றியுள்ளார் ; இவ்வூரிலுள்ள பனை மரங்கள் குடிப்பதற்குக் கள்ளோடு பாலையும் பொழியும்' — என்று ஒன்றோடொன்று பொருத்தமில்லாத முற்றுச் சொற்றொடர்களை மொழியினும், கட்குடியர் கூற்றைக் கொண்டு கூறுமிடத்துச் செய்யுளில் அமையும் என்பது.] 74

மாறுபடு பொருள்மொழியும் அமைதியும்

694. மாறுபடு பொருள்மொழி, முன்மொழிந் ததற்கு
மாறுபடத் தோன்றி வருமொழித் தாம்; அது
காமமும் அச்சமும் கைம்மிகின் உரித்தே.

இதுவும் அது.

இ-ள் : மாறுபடு பொருள்மொழி என்பது, முன் மொழிந்த சொற்பொருளோடு மாறுபட்ட பொருள் தோன்றிய மொழியினை உடைத்தாய் வரும். அதுவே, காமம் கைம்மிகுந்தார் கூற்றின்கண்ணும் அச்சம் கைம்மிகுந்தார் கூற்றின்கண்ணும் வழுவாகாது அமைவுடைத்து என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி. 103, 104

பகர்ந்தமுன் மொழிப்பொரு ளொடுமுரண் பான்மையின்
புகன்றிடு மதுவே மாறுபடு பொருள்மொழி.' – மா. 303

அச்சமும் காமமும் அகமிகின் உரித்தே.' – மா. 304]

வரலாறு :

மின்ஆர் மணிப்பைம்பூண் வேந்தே! நினக்குஉலகில்
இன்னா தவர்யாரும் இன்மையால், – ஒன்னார்
குலம்முழுதும் கூற்றம் கொளவெகுண்டு நீயே,
தலம்முழுதும் தாங்கல் தகும்'

எனவும்,

'என்னோடு இகல்புரியப் பஞ்சவர்கள் அஞ்சாரோ?
மின்அனைய பாஞ்சாலி யைவிடேன்; – அன்னோ!
மிகல்புரியும் கூற்றுஅனைய வீமன் எதிர்நின்று,
இகல் புரிய ஆற்றுவனோ யான்!'

எனவும் முறையே காண்க. ஏனைய வந்துழிக் காண்க. (75)

[ஒளிவீசும் மணிகள் வைத்து இழைக்கப்பட்ட பசும் பொன்னாலாகிய அணிகலன்களை உடைய அரசே! உனக்கு இவ்வுலகில் பகைவர் யாரும் இல்லாத காரணத்தால், உன் பகைவருடைய கூட்டம் முழுதையும் எமன் கொள்ளுமாறு அவர்களை நீ கோபித்து அழித்து உலகம் முழுதையும் நீயே காத்தலே ஏற்றது – என்ற இப்பாடலில், முன்னர் அரசனுக்குப் பகைவர் இல்லை என்று கூறி, பின், அவன் பகைவர்களை எல்லாம் வெகுண்டான் என்று கூறுவது மாறுபட்ட கருத்தாகி வழுவாதல் காண்க.

காமம் மிக்க இடத்து, 'என்னோடு போர் செய்யப் பாண்டவர் எவரும் அஞ்சமாட்டார்களா? மின்னலைப் போன்ற ஒளியுடைய திரௌபதியை நான் என்னைவிடுத்துச் செல்லுமாறு

விடமாட்டேன். ஐயோ! மாறுபாடு செய்யும் எமனை ஒத்த வீமனுடைய எதிரே நின்று போர் புரிய வல்லேனோ நான்?' என்று இவ்வாறு முதலில் ஐவரையும் வெல்லும் ஆற்றலுடையவனாகக் கூறி, பின் அவ்வைவருள் ஒருவனான வீமனுக்கே அஞ்சும் திறம் உரைப்பது முன்னுக்குப் பின் முரணாயினும், காமம் மிக்கவன் கூற்றாகக் கோடலின் அமையும் என்பது.] 75

மொழிந்தது மொழிதலும் அமைதியும்

695. மொழிந்தது மொழிதல், கூறியது கூறி
வேறுபட ஒருபொருள் விளக்கா தாகும்;
விரைவினும் சிறப்பினும் வரைவுஇன்று அதுவே.

இதுவும் அது.

இ–ள்: மொழிந்தது மொழிதல் என்பது, முற்கூறியதனை மீட்டும் கூறி அதனால் வேறுபட ஒருபொருளை விளக்காதாகும். அதுவே, விரைவின்கண்ணும் சிறப்பின் கண்ணும் கடியப்படாது என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 105, 106

['அவற்றுள்,
பழியற ஒருபொருள் மொழிபரி யாய
மொழியொடு தொடர்வது மொழிந்ததை மொழிதல்.'
– *மா.* 302

'அதுவே,
சிறப்பினும் விரைவினும் சிதைவின் றாகும்.' – *மா.* 303]

வரலாறு:

'அங்கம் இலாத அநங்கன் அமர்புரியும்
வெங்கணையும் காக்குங்கொல்? வேல்வேந்தர் — தங்கோன்,
நிலைஆர்த் தொடைதந்தோன், நேரிழைக்காய் முன்னொர்
மலையால் கடல்கடைந்த மால்'

எனவும்,

'ஒருவர் ஒருவர் வடநாட்டு அரசர்,
வருவர் அருவர் வரவுஅஞ்சித் — தெருமந்து,
தீத்தித்தீ என்றுஅயர்வர், சென்னி படைவீரர்
போய்க்கலிங்கர் நாடுஅழித்த போழ்து'

எனவும் முறையே காண்க. ஏனைய வந்துழிக் காண்க.

(76)

[வேலை ஏந்திய மன்னர் பலருக்கும் தலைவனும், தான் அடையாள மாலையாகத் தொன்று தொட்டுச் சூடும் ஆத்திப்பூ மாலையை யான் சூடக் கொடுத்தவனும், ஒரு பெண்ணாகிய திருமகளைப் பெறப் பாற்கடலை மந்திர மலையால் கடைந்தவனுமாகிய திருமாலின் அமிசமாகிய சோழன், உறுப்புக்களே இல்லாதவனாகிய மன்மதன் என்மீது செலுத்தும் கொடிய கணைகளையும் என் மீது ஏவப் பெறாமல் காப்பனோ?–என்ற இப்பாடலில், அங்கம் இல்லாதவன் என்று மன்மதனுக்கு அடைகொடுத்துப் பின் (ந+அங்கன்—அங்கம் இல்லாதவன்) அதே பொருளுடைய அநங்கன் என்ற சொல்லை அடைகொளியாக்கியது, அங்கமில்லாதவனாகிய அங்கமில்லாதவன் எனக் கூறியது கூறலாகிய வழுவாமாறு காண்க.

சோழநாட்டுப் படைவீரர் போய்க் கலிங்கநாட்டின் மீது படையெடுத்தபோது, வடநாட்டரசர் ஒவ்வொருவரும் 'வருவர் அருவர்' (தமிழ்நாட்டவர்) என்று அவர்கள் வருகைக்குப் பயந்து, மனம் சுழன்று, 'இவ்விடத்தை விட்டு அகல்வாய் அகல்வாய்' என்று கூறி மனம் தளர்வர் – என்ற இப்பாடலில், தீத்தீத்தீ என்று விரைவுபற்றிக் கூறியதுகூறல் அமைதியாகக் கொள்ளப்பட்டவாறு காண்க. விரைவுபற்றியும் மும்முறைக்குமேல் அடுக்குதல் கூடாது என்பது சொற்படலத்தில் கூறப்பட்டது.

திரு. மு. இராகவ ஐயங்கார் – தமிழாராய்ச்சித் தொகுதியில் கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளமை காண்க.

'*தீத்தீத்தீ*' என்னும் அடுக்கும் தெலுங்குத்தொடரே என்பது இப்போது தெரியவருகின்றது. '*தீ*' என்பது அம்மொழியுள் வழிவிடு, ஒதுங்கு என்ற பொருளின் வழங்குவதாம். சோழ வீரரைக் கண்டதும், வடநாடர் 'ஒதுங்கு ஒதுங்கு' என்று கூறிக்கொண்டு போக்கிடம்பெறாது சோர்வர் என்பது இப்பாடற் கருத்தாமென்க. 'நெருப்பு நெருப்பு' என்று அடுக்குதற்குரிய முன்னிகழ்ச்சியொன்றும் பாட்டில் குறிப்பிடப்பெறாமையால், இப்பொருள் கூறுதலே தக்கதாதல் கண்டுகொள்க. பக். 425]

கவர்படு பொருள்மொழியும் அமைதியும்

696. ஒருபொருள் துணிய உரைக்க உறுசொல்
இருபொருட்டு இயைவது கவர்படு பொருள்மொழி;
வழுப்படல் இல்வழி வரைவுஇன்று அதுவே.

இதுவும் அது.

இ-ள் : ஒரு பொருளைத் தெளிவுற உணர்த்து-தற்குப் பொருந்திய சொல் அதனை ஐயுறும்படி பல பொருள் மேலும் நிற்பது கவர்படு பொருள்மொழியாம். அதுவே, வழு இல்லாத இடத்துப் பொதுப்பட உரைப்பினும் நீக்குதல் இன்று என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 107, 108

'உவர்ப்பறத் துணிந்தொரு பொருள்குறித் துரைத்தசொல்
கவர்த்துஇரு பொருட்குறல் கவர்படு பொருள்மொழி.'
– *மா.* 307

'வசைபொருந் தாவழி வரினது மரபே.' – *மா.* 308

வரலாறு :

'புயலே புறம்பொதிந்து, பூந்தாது ஒழுக்கி,
மயலே கடவுளர்க்கு வாய்த்துச் — செயலை
எரிமருவு பூந்துணர்த்தாய், யாவரும் ஊடாடார்,
அரிமருவும் சோலை அகம்'

எனவும்,

'வானவர்கள் தாழ்ந்து பணிகேட்க, மாருகத்
தானவர்கள் சுற்றம் தடிந்துஒழித்த, — மேன்மை
அரியே, அனைத்துலகும் காக்கும் கடவுள்;
எரியே, மறையோர்க்கு இறை'

எனவும் முறையே காண்க. (77)

[தன் மேற்புறம் மேக மண்டலத்தால் மூடப்பட்டு, உள்ளே மகரந்தங்கள் பரவச்செய்து, தேவர்களுக்கும் தன் வனப்பு மிகுதியால் மயக்கத்தைக் கொடுத்து, அசோக மரத்தினுடைய நெருப்பை ஒத்த பூங்கொத்துக்களை உடைத்தாய், வண்டுகள் சூழ்ந்து திரியும் சோலைக்குள் யாரும் புகமாட்டார்கள் — என்ற இப்பாடலில், அரி என்ற சொல் சிங்கம், நெருப்பு, வண்டு முதலிய பல பொருளுக்கும் ஏற்றதாய்ப் பொருள்மயக்கம் தருதலின் இங்ஙனம் கூறுதல் வழு என்பது.

தேவர்கள் அடிவணங்கி இட்டபணிகளை முட்டின்றிச் செய்ய, அவர்களுக்குப் பகைவர்களான அசுரர் கூட்டங்களை அழித்த மேம்பாட்டை உடைய திருமாலே எல்லா உலகங்களையும் காக்கும் கடவுளாவான்; அக்கினியே அந்தணருக்குத் தெய்வமாவான் — என்ற இப்பாடலில், அரி என்ற சொல் மயக்கமின்றித் திருமாலையே உணர்த்துவதால், இஃது அமைதியாமாறு காண்க.] 77

நிரல்நிறை வழுவும் அமைதியும்

697. ஒருநிரல் முன்வைத்து, அதன்பின் வைக்கும்
நிரல்நிறை பிறழ்வது நிரல்நிறை வழு; அஃது
உய்த்துஉணர வருவழி உடன்பாடு உடைத்தே.

இதுவும் அது

இ-ள்: ஒரு நிரல் முன் எண்ணி வைத்து, அதன் பின் வரும் நிரல் மாறுபட வைப்பது நிரல்நிறை வழுவாம். அதுவே, அந்நிரல்நிறை உய்த்து உணரத் தோன்றுவதாயின் அமைவு உடைத்து என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 109, 110

['முன்னர்எண் ணிற்கும் மொழிமாற் றிக்கொளப்
பின்னர்எண் ணிரல்பிறழ் வதுநிரல் நிரைவழு.' – *மா.* 309

'உய்த்துண ரிடமெனில் உரிமை யுடைத்தே.' –*மா.* 310]

வரலாறு :

'தெற்கும் குடக்கும் வடக்கும் குணக்குமே
நிற்கும் திறத்துஉலகை நீடுஅளிக்கும் — பொறபினுர்,
ஈரெண் கலையோன், வருணன், இரவி,யமன்,
யாரும் புகழ்இயல்பி னுர்'

எனவும்,

'குடபால், வடபால், குணபால்,தென் பால்என்று
அடைவே திசைநான்கு; அவற்றுள், — இடைஇரண்டும்
நன்மைபுரி வோர்நயந்து நோக்குப; ஏனைய
அன்மை புரிவோர்க்கே யாம்'

எனவும் முறையே காண்க.

[எண் திக்குப் பாலகர்களின் நிரல் பின் வருமாறு :

கிழக்கு	—	*சூரியன், இந்திரன்*
தென்கிழக்கு	—	*அக்கினி*
தெற்கு	—	*இயமன்*
தென்மேற்கு	—	*நிருதி*
மேற்கு	—	*வருணன்*
வடமேற்கு	—	*வாயு*
வடக்கு	—	*சந்திரன், குபேரன்*
வடகிழக்கு	—	*ஈசனன்*

இம்முறை இப்பாடலில் கொள்ளப்பட்டது.

தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் திசைகளைக் காப்பவராய் எவரும் புகழத்தக்க இயல்பினராய் நிற்பவர் சந்திரனும் வருணனும் சூரியனும் எமனும் என்பவராவர் – என்ற இப்பாடலில், தெற்கில் சந்திரனும், மேற்கில் வருணனும் வடக்கில் சூரியனும் கிழக்கில் எமனும், உலகைக் காக்கின்றனர் என்ற கருத்து அமைதலின், பொருந்தாத நிரல் நிறை வழு ஏற்பட்டுள்ளது. தெற்கில் எமனும், மேற்கில் வருணனும் வடக்கில் சந்திரனும் கிழக்கில் சூரியனும் என்று கொள்ளவேண்டிய முறை அமையின் நிரல் நிறை அணி ஆகும். எண்டிசை காப்போர் பற்றிப் பல கருத்துக்கள் உள போலும். வடக்கிற்குக் குபேரனும், கிழக்கிற்கு இந்திரனும் கூறப்படுதலே பெரும்பான்மையான வழக்காகும்.

மேற்கு வடக்கு கிழக்கு தெற்கு என்ற திசை நான்கனுள்ளும் இடையிலுள்ள வடக்கும் கிழக்கும் நற்கருமம் புரிவோர் விரும்பிக் கொள்ளும் திசைகளாம். ஏனையவாகிய மேற்கும் தெற்கும் தீக்கருமம் செய்வோருக்கு உரிய – என்ற இப்பாடலில், நிரல் நிறை உய்த்துணர்ந்து கொள்ளுமாற்றால் செவ்வனே அமைந்தவாறு காண்க.] *78*

சொல்வழுவும் அமைதியும்

698. சொல்வழு என்பது சொல்லிலக் கணத்தொடு
புல்லா ஆகிப் புகர்படு மொழி;அது
வழக்காறு ஆயின் வரைவுஇன்று ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: சொல்வழு என்று சொல்லப்படுவது, சொல்லிலக்கணத்தோடு மாறுபட்டு வழுவிவரும் சொற்களைப் புணர்ப்பதாம். அதுவே, உலகத்து அடிப் பட்டு வழங்கும் சொற்களாயின் வழு என்று நீக்குதல் இன்று என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 111, 112

['திணைமுத லாகச் செப்பிய வழுவின்ஒன்று
அணைதரு மாயினும் அதுசொல் வழுவே.' – *மா.* 313

'மருஉக்கட் டுரைச்சொலின் வழுவின் றதுவே.' – *மா.* 314]

வரலாறு :

'யாவகைய தாயர்க்கும் எந்தைக்கும் எங்களுக்கும்
ஆவி இவளே ; அனைவேமும், — கோவே !
நுனக்குஅபயம் ; இந்த நுழைமருங்குல் மாதர்
தனக்கு,இடர்ஒன்று இல்லாமல் தாங்கு'

எனவும்,

'யாவர் அறிவார் இவர்ஒருவர், இக்குறிஞ்சிக்
காவலரோ ? விஞ்சையர்தர் காவலரோ ? — பாவாய் !
அருமந்தன் ஞர்நம் அகன்புனம்விட்டு ஏகார்,
தெருமந்து உழலும் திறம்'

எனவும் முறையே காண்க. (79)

[*செவிலி திருமணத்தின் பின் தலைவியைத் தலைவனோடு அனுப்பும்போது, அவளை அவனிடம் ஓம்படை சாற்றும் அளவில், "ஆட்டுவாள் ஊட்டுவாள் ஓல் உறுத்துவாள், நொடிபயிற்றுவாள் கைத்தாய் என்ற எவ்வகைப்பட்ட தாய்மாருக்கும் எங்களுக்கும் எந்தை என்னையருக்கும் இவள் உயிர்போல்வாள். நாங்கள் எல்லோரும் இவளை உன்னிடம் 'பாதுகாப்பாயாக' என்று ஒப்படைக்கின்றோம். இந் நங்கைக்கு இடர் ஏதும் வாராமல் தாங்கு" — என்ற இப்பாடலில், யாவகையதாயர் என்பது வழு; எவ்வகைய தாயர் என்பதே வழாநிலை. மேலும், 'தாயர்க்கும்' என்று கூறிய தாய், மீண்டும் 'எங்களுக்கும்' என்று கூறியது வழு. நினக்கு என்ற சொல்லை நுனக்கு என்று சொற்றதும் வழு.*

தலைவி! ஒப்பற்ற இவர் இக்குறிஞ்சிநிலத் தலைவரோ? விஞ்சையர் உலகத் தலைவரோ? கிடைத்தற்கு அரிய தேவர் அமிழ்தத்தை ஒத்த இவர் இப்புனத்தை விட்டு நீங்காமல் மனம் தடுமாறிச் சுழலும் திறத்தை யாவர் அறிவார் – என்ற தோழி தலைவியிடம் தலைவன் குறைநயத்தலைச் சுட்டும் இப்பாடலில், அருமருந்தன்னார் என்பதன் மரூஉ மொழியாய் 'அருமந்தன்னார்' என வழக்காறு பற்றி வந்துள்ளமை வழுவமைதியாகும்.] 79

யதிவழுவும் அமைதியும்

699. யதிவழு என்பது ஓசை அறுவழி
நெறிபட வாரா நிலைமையது; அதுவே
வகையுளி யாயின் வழுவின்று ஆகும்.

இதுவும் அது.

இ–ள்: யதிவழு என்று சொல்லப்படுவது, ஓசை கொண்டு தளை அறுக்குமிடத்து, அறுத்தற்கு அரிதாய் வேறுபட வரும் தன்மையதாம். அதுவே, வகையுளி யாகப் பிரித்துக் கூறும் இடத்துக் குற்றம் இல்லையாம் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 113, 114

'நசைதீர் யதிவழு நாடுகில் ஓசை
இசைதர நிகழாது இழுக்குவ தாகும்.' – *மா.* 311

'அதுவே,
வழுவின் றும்எனல் வகையுளிக் காகும்.' – *மா.* 312

வரலாறு:

'மாடு பயிலும் வரைஆளி, மால்யானைக்
கோடுபுய்த்து உண்டுஉழலும் கொள்கைத்தாம்; — காடு

அரிதாம் இயல்பிற்று ; அரைஇருட்கண் வாரல் ;
பெரிதாகும் ஐய பிழை'

எனவும்,

'மேவிவாழ் வார்மேல் அருள்நீங்காது, ஆகும்மலர்த்
தேவிநீங் காள்,செம்பொன் தோள்இணைகள் ; - கோவின்நனி
சென்னிவிடா மாலின்அடி ; வேலின்நுதி, நீலநிறக்
கன்னிவிடாள் ; ஈகைவிடா கை'

எனவும் முறையே காண்க. (80)

[தலைவனை இரவுக்குறி வரல் விலக்கும் தோழி, 'ஐயா! மலையின் நாற்புறமும் சுற்றித் திரிகின்ற யாளி பெரிய யானைகளுடைய கொம்புகளைப் பறித்து அவற்றின் ஊனினை உண்டு திரியும் இயல்பிற்றாய காடு கடந்து வருதற்கு அரிய இயல்பை உடையது ; மேலும், அதன்கண் நள்ளிரவில் இருளில் வாராதே ; அதனால் பெரிய ஆபத்து ஏற்படும்' – என்று கூறும் இப்பாடலில் 'காடரி தாம்' என்று சந்தி சேரவேண்டியதனைக் காடு அரிதாம் என்று பிரித்துச் செய்யுளமைத்தமை வழுவாமாறு காண்க. காடரிதாம் என்று புணர்ந்தவழி, தனிச்சீர் 'கா' என்ற ஒரே ஓரசைச் சீராய் வழுப்படுதல் நோக்குக.

'தன்னை விரும்பி வாழ்பவரிடத்தே வறுமை இருளை நீக்கிச் செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் அரசனுடைய தோள்களை விட்டு நீங்காள்; அவனுடைய அழகிய தலை திருமாலினுடைய திருவடிகளைப் பணிதலை நீக்காது ; நீலமேனியளாகிய துர்க்கை அவன் வேலினுடைய நுனியை விட்டு நீங்காள் ; அவன் கைகள் ஈகையை நீங்கா' — என்ற இப்பாடலில் பா என்பதற்குரிய ஓசைக்கண் தவறு வருதல் கூடாது என்ற கருத்தான் பொருள் நோக்கிச் சீர்களை 'மேவி வாழ்வார்' 'தேவி நீங்காள், என்றாற் போல அமைக்காது, ஓசையை நோக்கி வகையுளியாக 'மேவி வாழ் வார்மேல்' எனவும், 'தேவிநீங் காள்தன்' எனவும் அமைத்தமை அமைதி ஆதல் காண்க.] 80

செய்யுள் வழுவும் அமைதியும்

700. செய்யுள் வழுவே யாப்பிலக் கணத்தோடு
எய்தல் இல்லா இயல்பினது; அதுவே
ஆரிடத் துள்ளும், அவைபோல் பவற்றுளும்
நேரும் என்மனர், நெறிஉணர்ந் தோரே.

இதுவும் அது.

இ-ள்: செய்யுள் வழு என்று சொல்லப்படுவது, செய்யுள் இலக்கணத்தோடு பொருந்தாத இயல்பினை உடைத்தாம். அதுவே, ஆரிடத்துள்ளும் ஆரிடப் போலியுள்ளும் பொருந்தும் என்று கூறுவர், இலக்கணங்களை அறிந்தோர் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 115, 116

[‘பழுதறப் பகர்ந்த பாட்டின தியல்பு
வழுவுதல் செய்யுள் வழுஎன மொழிப.’ – *மா.* 317

‘தவமுறு பவரவர் போலுநர் சாற்றலும்
நலமுறப் புனைசெயுள் நடைநவை யிலவே.’ – *மா.* 318]

ஆரிடம் என்பன இருடிகளால் சொல்லப்படுவன. அவற்றின் போலியாவன, சாவவும் கெடவும் வாழவும் பாடவும் மனத்தது பாடவும் வல்லாரால் பாடப்படுவன.

வரலாறு :

‘ஆதரம் துயர்தர, அயர்தரும் கொடிக்குப்,
பூதலம் புகழ்புனை வளவன் — தாதகி
தாங்குஅரும்பால் அன்றித் தகையுமோ, தார்அநங்கன்
பூங்கரும்பால் வந்தடர்ந்த போர்?’

எனவும்,

'ஏரி இரண்டும் சிறகா எயில்வயிருக்
காருடைய பீலி கடிகாவா — நீர்வண்ணன்
அத்தியூர் வாயா, அணிமயிலே போன்றதே,
பொற்றேரான் கச்சிப் புரம்'

எனவும்,

'கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க,
ஒண்செங் குருதியுள், ஓஓ, கிடப்பதே! – கெண்டிக்
கெழுதகைமை இல்லேன், கிளர்ந்துஊடிப் பன்னாள்
அழுதகண் ணீர்,துடைத்த கை'

எனவும் முறையே காண்க. (81)

[ஆசை வருத்தத்தைத் தர அதனால் வருந்தும் தலைவிக்கு உலகை வனப்புறுத்தும் புகழை உடைய சோழன் அணிந்துள்ள மாலைகளால் அன்றி, மன்மதன் மலர் அம்புகளால் செய்யும் போர்த் துன்பம் நீங்காது – என்ற இப்பாடலில், முதலிரண்டடியும் ஆசிரியமாய்ப் பின் இரண்டடியும் வெண்பாவாய் வருதலின் செய்யுள் வழுவாம். மாறி வந்திருப்பின் மருட்பாவாய் வழா நிலையாகி இருக்கும். ('ஏரி இரண்டும்' என்ற வழா நிலைப் பாடல் ஈண்டு ஏடெழுதுவோரால் பொருத்தமின்றி எடுத்துக் காட்டப் பட்டுள்ளது என்பதே எளியேன் கருத்தாகும்.]

மனம் வேறுபட்டு, தன்னுடைய தொடர்பில்லாத நான் தரையில் கிடந்து ஊடவும் பல நாளும் நான் உகுத்த கண்ணீரைத் துடைத்த என் தலைவனுடைய கைகள், வாளைப் பற்றிக் கொண்டு அணிந்துள்ள கடகத்து மணி ஒளிவீச ஒள்ளிய சிவந்த குருதியில் கிடக்கின்றதே – என்றவாறு. இது பத்தினிப்பாட்டு என்று யாப்பருங்கல விருத்தி கூறும்.

இவ்வெண்பாப் பாடலில் ஈற்றடி நீங்கலான ஏனைய அடிகள் நான்கே சீர்களை உடையவாதல் வேண்டும் என்ற வெண்பா இலக்கண வரையறைக்கு மாறாக, இரண்டாம் அடியில் ஐந்து சீர்கள் வந்துள்ளன. இச்சான்றோர் பாடல் வழுவமைதியாகக் கொள்ளப்படுகிறது.]

சந்திவழுவும் அமைதியும்

701. சந்தி வழுவே எழுத்திலக் கணத்துச்
சந்தியொடு மருவாத் தன்மையது; அதுவே
இரண்டாம் வேற்றுமைக்கு எதிர்மறுத்து வருமே.

இதுவும் அது.

இ-ள்: சந்தி வழு என்று சொல்லப்படுவது, எழுத்திலக்கணத்தில் கூறிய சந்தியோடு மாறுபட்ட இயல்பினை உடைத்தாம். அதுவே, இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் அவ்வாறு மாறுபட்டுவரும் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் - தண்டி 117, 118

'ஆற்றல்சால் எழுத்தினுள் அமைத்தசந் தியின்வகை
மாற்றம துறவழு வுதல்சந்தி வழுவே.' — ம. 315

'ஐயென் உருபு தொகின்அஃது இயல்பாம்.' 316

வரலாறு:

'என்புஊடு உருவ இனைவேன் மனம்கலக்கும்
பொன்பூண் சுமந்த புணர்முலையாள் — மின்பூண்
நுடங்குஇடைக்குக் காவலாய், நோக்கம் கவரும்,
படம்கிடக்கும் அல்குல் பரப்பு'

எனவும்,

'இரவி துணைத்தாள் இகல்வேந்தர் சென்னி
விரவு மலர்பொழியும்; மேவா -- அரைசுஇரிய
மின்பொழியும் செவ்வேல்; வெறியேன் மனம்கவரப்
பொன்பொழியும், செய்கைப் புயல்'

எனவும் முறையே காண்க. (82)

[உள்ளே உள்ள எலும்புகளும் உருகுமாறு வருந்தும் என்னுடைய மனத்தைக் கலங்கச் செய்யும் பொன் ஆபரணங்களை அணிந்த இணையான நகில்களை உடைய தலைவியின் மின்னலைப் போல அசையும் நுண்ணிய இடைக்குக் காவலாகிப் படம் போன்ற அல்குல்பரப்பு என் நோக்கத்தைக் கவர்கிறது — என்ற பாடலில், ‘பொற்பூண்’ என்று சந்தி சேர்ந்து அமையவேண்டிய தொடர் ‘பொன் பூண்’ என்றிருத்தல் வழுவாகும்.

சோழனுடைய இரண்டு அடிகளும் மாறுபட்ட மன்னர்களுடைய தலையில் சூடப்பட்ட மலர்கள் பொழியப்பெறும். பகைமன்னர் தோற்றோடச் சோழனுடைய சிவந்த வேல் ஒளி வீசும். வெறுவியேனது மனம் விரும்பும் பரிசாகக் கொண்டு செல்லுமாறு அவனுடைய சிவந்த கைகளாகிய மேகம் பொன்னைச் சொரியும் என்ற பாடலில்–இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள் பொது விதிக்கு மாறான புணர்ச்சி உடையவாதலும் உண்டு ஆதலின், ‘மலர் பொழியும்’ ‘மின் பொழியும்’ ‘பொன் பொழியும்’ என இயல்பாகவே புணர்ந்தமை வழாநிலை ஆதல் காண்க.] 82

இடமலைவு

702. இடம், மலையாறு நாடே; அவற்றின்
ஒன்றன் பொருள்பிறிது ஒன்றின்உள வாகச்
சென்றிட உரைப்பது இடம்மலைவு என்ப.

நிறுத்தமுறையானே வழுவும் சிறுபான்மை வழுவமைதியும் கூறி, எஞ்சிநின்ற மலைவு ஆறனையும் கூறுவான் புகுந்து, அவற்றுள் இஃது இடமாவது இன்னது என்பதூஉம் அதன் மலைவும் கூறுகின்றது.

இ–ள்: இடம் என்று சொல்லப்படுவது, மலையும் ஆறும் நாடுமாம். அவற்றுள் ஒன்றற்கு உரியன பிறிது ஒன்றின் உளவாகப் பொருந்த உரைப்பது இடமலைவு என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

மலை என்பது இமயம் பொதியம் முதலாயின. யாறு கங்கை காவிரி முதலாயின. நாடு பதினெண் பாடைக்கும் உரிய நிலங்கள்.

ஒத்த நூற்பாக்கள்

(முதலடி) தண்டி *119.*

'உலகிடங் காலம் கலையே நியாயம்
ஆகம மலைவென்று ஆறுஒரு வகைஉள.' – *மா.* 319

'ஒழுக்க நடையே உலகம தாகும்.' – 320

'இடமது மலைநாடு யாறென மூன்றே.' – 321

'சிறுபொழு தொடுபெரும் பொழுதெனக் காலம்
அறுவகைத் தாமெனா அறைந்தனர் புலவர்.' – 322

'பொருளும்இன் பமும்புணர் பொருட்டா கியநூல்
அருளுமெண் ணென்கிரட் டியகலை அதுவே.' – 323

'அளவையின் ஆயபல் பொருட்கமை வினைத்திறம்
உளமுற மதித்துரைப் பதுவே நியாயம்.' – 324

'அறம்பகர் மனுமுத லாயின ஆகமம்.' – 325

வரலாறு :

'தென்மலையின் மான்மதமும் சாமரையும், காமருசீர்ப்
பொன்மலையின் சந்தனமும் ஆரமும், – பன்முறையும்
பொன்னி வளநாடன் முன்றில் பொதுளுமே,
மன்னர் திறைகொணர வந்து'

எனவும்,

'தண்பொருநைச் செங்கனகம், மாதங் கிரித்தரளம்,
வண்கலிங்கம் தந்த வயப்புரவி, — பண்பு
மருவும் யவனத்து மால்யானை, சென்னி
பொருநருக்கு வீசும் பொருள்'

எனவும் மலை இடமலைவும், ஆற்று இடமலைவும், நாட்டு இடமலைவும் முறையே காண்க.

மாதங்கிரி என்பது ஓர் ஆறு. (83)

[பொதியமலையின் கத்தூரியும் சாமரையும், தெய்வம் மருவும் சிறப்பினை உடைய மேருமலையிலுள்ள சந்தனமும் பூமாலையும், பலகாலும் அரசர்கள் கப்பப் பொருளாகத் தருகையினாலே, அவை சோழமன்னன் அரண்மனையின் முன்னிடத்தில் குவிந்து கிடக்கும்–என்ற இப்பாடலில்,

பொதியிலில் சந்தனமும் பூமாலையும், மேருமலையில் கத்தூரியும் சாமரையும் பெறப்படுதலை மாற்றிக் கூறியது மலை இடமலைவாம்.

பொருநையாற்றிலுள்ள செம்பொன், மாதங்கிரி என்ற ஆற்றிலுள்ள முத்து, கலிங்கநாட்டிலிருந்து வந்த வலிமையுடைய குதிரை, யவனநாட்டிலிருந்து வந்த பெரிய யானை இவைகளே சோழன் தன்னைப் புகழ்ந்து பாடும் பொருநருக்கு வாரிவழங்கும் பொருள்களாம் – என்ற பாடலில்,

பொருநையாற்றில் பெறப்படும் முத்து, மாதங்கிரியில் பெறப்படும் தங்கம், கலிங்கத்து யானை, யவனநாட்டுக் குதிரை என்பனவற்றை மாற்றிக் கூறியமை யாற்று இடமலைவும், நாட்டு இடமலைவும் ஆம்.] 83

காலமலைவு

703. காலம், பொழுது பருவம் என்றுஇவற்றின்,
ஒன்றற்கு உரியன அன்றி, ஒன்றற்கு
உரியன வாக உரைப்பதுஅதன் மலைவே.

இதுவும் அது.

இ–ள் : காலம் என்று சொல்லப்படுவது சிறு பொழுதும் பெரும் பொழுதும் ஆம். அவற்றுள் ஒரு காலத்திற்கு உரிய பூவும் புள்ளும் தொழிலும் பிறிது ஒரு காலத்திற்கு உளவாகக் கூறுவது கால மலைவாம் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முதலடி – தண்டி 120, மாறன் 322.

வரலாறு :

'செங்கமலம் வாய்குவிய, தேங்குமுதம் கண்மலர,
எங்குநெடு வான்மீன் இனம் இமைப்பப், — பொங்குஉதயத்து
ஓர்ஆழித் தேரோன் உகந்தான்; மலர்ந்ததே
நீர்ஆழி சூழ்ந்த நிலம்'

என வரும் பொழுதின் மலைவும்,

'காதலர் வாரார்; களிக்கும் மயில்அகவ,
தாதுஅவிழ் பூங்குருத்தின் தண்பணையின் — மீதே
தளவோ முகைநெகிழ, தண்கொன்றை பூப்ப,
இளவேனில் வந்தது இதோ'

என வரும் பருவமலைவும் முறையே காண்க. (84)

[*தாமரை இதழ் குவியவும், தேன்பொருந்திய குமுதம் மலரவும், வானம் எங்கும் விண்மீன்கள் மின்னவும், கடல்சூழ்ந்த உலகம் ஒளிவீசும் தோற்றத்தை உடைய ஒற்றைச்சக்கரத்தேரை உடைய கதிரவன் விரும்பினானாக, கடல்சூழ்ந்த உலகம் மலர்ந்தது- என்ற இப்பாடலில், மாலைக்காலத்திற்குரிய தாமரைகுவிதல், குமுதம் மலர்தல், விண்மீன்கள் தோன்றுதல் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, பின் சந்திரன் தோன்றினான் என்னாது சூரியன் தோன்றினான் என்று கூறுவது பொழுதுமலைவாயிற்று. இது சிறுபொழுது மலைவு.*

களிக்கும் மயில்கள் அகவவும், மகரந்தம் வெளிப்படுகின்ற பூக்களை உடைய குருந்த மரத்தின் தண்ணிய கிளைகளின்மீது படர்ந்த முல்லை முகை நெகிழவும், தண்ணிய கொன்றை பூப்பவும் இளவேனிற்காலம் இதோ வந்துவிட்டது; ஆனால் தலைவர் வரவில்லையே – என்ற இப்பாடலில், மயில் அகவுதல், முல்லை முகை தோன்றுதல், கொன்றை பூத்தல் ஆகிய நிகழ்ச்சிகளைக்கூறிப் பின் கார்காலம் வந்தது என்னாது இளவேனில் வந்தது என்று குறிப்பிடுதல் பெரும்பொழுது மலைவு ஆமாறு காண்க.] 84

கலைமலைவு

704. கலைஎனப் படுமவை காண்தக விரிப்பின்
காமமும் பொருளும் ஏமுறத் தழுவி,
மறுஅறக் கிளந்த அறுபத்து நான்கு; அவை
மலைய உரைப்பன கலைமலைவு ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: கலை என்று சொல்லப்படுவனவற்றை விளங்க உரைக்கும் இடத்து, இன்பமும் பொருளும் பொருத்தமுறத் தழுவிக் குற்றம்அறச் சொல்லப்பட்ட அறுபத்துநான்குமாம்; அவை தம்முள் மலைய உரைப்பன கலைமலைவாம் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முதல் மூன்றடி - தண்டி 121, மாறன் 323.

வரலாறு:

'ஐந்தாம் நரம்பாம் பகைவிரவாது, ஆருகி
வந்த கிளைகொள்ள, நான்காம் — முந்தை
இணைகொண்ட யாழ்எழூஉம், ஏந்திழை,தன் ஆவித்
துணைவன் புகழே தொடுத்து.'

இதனுள், நின்ற நரம்பிற்கு ஐந்தாவது கிளை ஆதலால் அதனைப் பகை என்றும், ஆருவது பகை ஆதலால் அதனைக் கிளை என்றும், நான்காவது நட்பு ஆதலால் அதனை எட்டாவதன் பெயராகிய இணை என்றும் சொன்னமையால் கலை கலைவு ஆயிற்று. (85)

[தலைவி தன் உயிர்த்துணைவன் புகழைத் தொடுத்துத் தான் யாழ் எழுவினள் என்று கூறும் இடத்துக் கிளை நரம்பைப் பகை என்றும், பகை நரம்பைக் கிளை என்றும், நட்பு நரம்பை இணை என்றும் கூறுதல் கலைமலைவு ஆமாறு காண்க.] 85

உலகமலைவு

705. உலகுஎனப் படுவதுஈண்டு ஒழுக்கின் மேற்று;அவ்
வொழுக்கநெறி பிறழ உரைப்பதுஅதன் மலைவே.

இதுவும் அது.

இ–ள்: உலகு என்று சொல்லப்படுவது, பல பொருள் உணர்த்துமேனும் ஈண்டு ஒழுக்கத்தின் மேலிடத்தாம்; அவ்வுலகத்தின் ஒழுக்கநெறியை மாறுபட உரைப்பது உலகமலைவாம் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முதலடி – தண்டி 122, மாறன் 320.

வரலாறு:

'அலைகடல் ஏழும்தூர்த்து, அந்தரத்தின் ஊடே,
மலைஅனைய மால்யானை ஓட்டிக் — கலவாரை
நீறுக்கி, வையம் நெடுங்குடையின் கீழ்வைத்தான்,
மாறுச்சீர் மாநிலத்தார் மன்'

என வரும். இதனுள், ஒருநில வேந்தனை எழு கடலும் தூர்த்தானாகவும், ஆகாயத்தே தன் யானையை ஓட்டிப் பகைவரை வென்றானாகவும் உலக ஒழுக்கோடு மாறுபடக் கூறினமையான், உலக மலைவு ஆயிற்று. (86)

[அலையும் கடல் ஏழையும் ஆழம் நீங்கச்செய்து, வான வெளியில், மலையை ஒத்த, மத மயக்கம் பொருந்திய யானைகளைச் செலுத்திப், பகைவரைச் சாம்பராக்கி, என்றும் கெடாத சிறப்பினை உடைய இந்நிலவுலகத்து மன்னன் உலகையே தன் ஒற்றைக் குடைக்கீழ்க் கொணர்ந்தான் – என்ற இப்பாடல், உலகியல் நடைபேற்றுக்கு மாறாகக் கடலைத்தூர்த்தல், வானத்தில் யானையைச் செலுத்துதல் முதலிய செயல்களை நிலஉலக அரசன் மேல் ஏற்றிக் கூறுதலின் உலக மலைவாயிற்று.] 86

நியாயமலைவு

706. நியாயம் என்பது நெறியுறக் கிளப்பின்
அளவையின் தெளிக்கும் வினைபொருள் திறம்;அவை
மாறுபட உரைப்பது அதன்மலைவு என்ப.

இதுவும் அது.

இ-ள் : நியாயம் என்று சொல்லப்படுவது இலக்கண வகையான் கூறுங்கால், காண்டல் முதலாகிய அளவைகளால் தெளிவித்து உரைக்கப்படும் பொருள்களது முடிவின் கூறுபாடாம்; அவற்றை அவ்வவர் கூறியவாறு கூறாது மாறுபடக் கூறுவது அதன் மலைவு என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

அளவைகளால் தெளிவித்து உரைக்கப்படும் பொருள்களாவன அறுவகைப்பட்ட சமயங்களின் முடிவாகிய பொருள்களின் தோற்றமும் நிலையும் அழிவும் இன்னவகைய என்று கூறுதல்.

ஒத்த நூற்பாக்கள்

முதல் ஈரடி – தண்டி 123, மாறன் 324.

வரலாறு :

'ஆய பொருள்கள் கணந்தோறு அழியும்எனத்
தூய அசோகின் முனிஉரைத்தது — ஆய்வுஅன்றோ ?
காதலர் நீங்க, எழும்காம வெங்கனல்வாய்
மாதர் உயிர்தாங்கு மாறு.'

இதனுள் தோன்றும் பொருள்களெல்லாம் கணந்தோறும் அழியும் என்று போதியின் முனி உரைத்தான் எனற்பாலதனை அசோகின் முனி உரைத்தான் என்றமையான், நியாய மலைவு ஆயிற்று. ஒழிந்தனவும் வந்துழிக் காண்க. (87)

[பொருள் கணந்தோறும் அழியும் என்ற கூற்று, தலைவன் நீங்கவும் எழும் காமக்கனலில் அழியாது தலைவி உயிர் தாங்கி நிற்பதால், ஆராய்தற்குரியது. இதன்கண் நியாயவழு உரையில் விளக்கப்பட்டது.] 87

ஆகம மலைவு

707. ஆகமம் என்பது மனுமுத லாகி
அறனொடு புணர்ந்த திறன்அறி நூல்;அவை
தம்முள் உரைக்கும் ஒழுக்க நெறியின்
இழுக்க உரைப்பது ஆகம மலைவே.

இதுவும் அது.

இ-ள்: ஆகமம் என்று சொல்லப்படுவது மனு-முதலாக அறத்தொடு கூடிய திறங்களை அறியும் பதினெண்வகை நூல்களாம்; அந் நூல்களில் கூறப்படும் அறநெறிகளை அம் முறையால் கூறாது பிறழக் கூறுவது ஆகம மலைவாம் என்றவாறு.

ஒத்த நூற்பாக்கள்

முதல் ஈரடி – தண்டி 124, மாறன் 325.

வரலாறு :

'தெய்வம் விருந்துஒக்கல் தென்புலத்தார் தாம்என்று
ஐவகையும் தம்பொருள்கொண்டு ஆற்றுவார்; — மைஇலா
முக்கோலும், கல்தோய் முழுமடியும் தாங்கியே
தக்கோர் எனப்படுவார் தாம்.'

இதனுள், இல்லறத்தார்க்கு உரிய அறத்தைத் துறவறத்தார்க்கு உரியனவாகச் சொல்லுதலான் ஆகமமலைவு ஆயிற்று. (88)

[பிதிரர் விருந்தினர் தேவர் உறவினர் தாம் என்ற ஐந்து வகையினரையும், முக்கோலும் காவிஆடையும் கொண்ட சான்றோராகிய துறவியர், தம் செல்வத்தைக் கொண்டு ஓம்புவார்கள் – என்ற இப்பாடலில், இல்லறத்தார் செயல்களாகிய ஐம்புலத்து ஆறு ஓம்புதலைத் துறவிகள் செயலாகக் கூறிய ஆகமவழு அமைந்துள்ளமை காண்க.] 88

அறுவகை மலைவும் ஆமிடம்

708. கூறிய நெறியின் அறுவகை மலைவும்
நாடக வழக்கினுள் நாட்டுதற்கு உரிய.

இது மேற்கூறிய மலைவு ஆறனையும் இன்னுழி ஆம் என்கின்றது.

இ–ள்: இடம் முதலாக ஆகமம் ஈறாக இங்ஙனம் கூறிய முறைமையான் வரும் அறுவகை மலைவும், நாடக வழக்கினிடத்துச் சொல்லுதற்கு உரியனவாம் என்றவாறு.

ஈண்டு நாடக வழக்கு என்றது, இல்பொருளாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்துரைவகையாற் கூறுதலாம்; எனவே, அவ்வாறு புகழ்ச்சி இடத்து நீக்கப்படா அலங்காரமாயே வரும் என்பதாம்.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் – தண்டி 125

'நாவலர் நாடக வழக்கினுள் நயந்து
மூவிரு மலைவும் மொழிவதற் குரிய.' – மா. 326

அவை வருமாறு:

'மரகதச் சோதியுடன் மாணிக்கச் சோதி
இருமருங்கும் சேர்ந்து,அரிவை எம்மான் — உருவம்

மலைக்கும், அகில்சுமந்து ஆரத்து வான்கோடு
அலைத்து வரும்பொன்னி ஆறு.'

இதனுள், பிறநாட்டிற்கும் பிறமலைக்கும் உரிய மரகதமும் மாணிக்கமும் அகிலும் சந்தனமும் காவிரி அலைத்துவரும் என்றமையால், இடமலைவாய்ப் புகழ்ச்சியிடத்து அலங்காரம் ஆயிற்று.

[பசிய மரகதச்சோதியுடன் சிவந்த மாணிக்கச்சோதி இருபாலும் சேர்தலால், அகில் சுமந்து சந்தனக் கிளைகளை அடித்துவரும் காவிரி யாறு பார்வதி பாகனை சிவபெருமா னுடைய உருவத்தை ஒத்திருக்கிறது.]

'மண்டபத்து மாணிக்கச் சோதியான், வாவிவாய்ப்
புண்டரிகம் மாலைப் பொழுதுஅலரும்; — தண்தரளத்
தாமம் சொரியும் தலைநிலவான், மெல்ஆம்பல்
பூமலரும், காலைப் பொழுது.'

இதனுள், காலைமலரும் கமலம் மாலை மலர்வதாகவும், மாலை மலரும் குமுதம் காலை மலர்வதாகவும் கூறினமையான், காலமலைவாய்ப் புகழ்ச்சியிடத்து அலங்காரம் ஆயிற்று.

[மண்டபத்தில் பதிக்கப்பட்ட மாணிக்கக் கற்களின் சோதியால் குளங்களில் தாமரை மொட்டுக்கள் மாலையில் மலரும்; தண்ணிய முத்துமாலை சொரியும் சிறந்த நிலவால் ஆம்பற் பூக்கள் காலையில் மலரும் – என்ற இப்பாடலில், தாமரை மாலையிலும், ஆம்பல் காலையிலும் மலர்வதாகிய காலவழு அமைந்திருத்தல் காண்க.]

'வஞ்சியர்கோன் வஞ்சி மதவேழ வார்மதத்தால்
வெஞ்சுடர்சூழ் வேனில் வெயில்மறைப்ப, — வஞ்சத்

தளவுஅரும்ப, பூங்கொன்றைத் தண்கொம்பு அரும்ப,
களிமயில்கள் ஆர்த்துஇலகும் காடு.'

இதனுள், கார்க்கு உரியன வேனிற்குப் புணர்த்தமையான் காலமலைவாய்ப் புகழ்ச்சியிடத்து அலங்காரமாயிற்று.

[கருவூர்க்கும் மன்னனாகிய சோழனுடைய வஞ்சிநகரத்து மதயானைகளுடைய மிக்க மதத்தால் கதிரவன் தெறும் வேனில் வெயில் மறைய, வஞ்சனையாக முல்லை அரும்புவிட, கொன்றை மரக்கிளைகள் அரும்புவிட, காட்டில் மயில்கள் ஆரவாரித்து ஆடும் - என்ற இப்பாடலில் கார்கால வருணனை வேனிற்குக் கூறப்பட்டவாறு.]

'கூடம் விரவிக் குறைநிலத்தா னத்தியன்ற
பாடல் அமிழ்தம் பருகினான்; — ஆடுகின்ற
ஊசல் அயல்தோன்றி, ஒள்ளிழைக்கு நாண்அளித்த
ஆசுஇல் வடிவே லவன்.'

இதனுள், கூடம் என்பது ஆறும் நரம்பாகிய பகை நரம்பு. அதனோடு கூடிக் குறைநிலத் தானத்து இயன்றதனைப் பாடல் அமிழ்தம் எனக் கலைமலைவாய், ஊசல் ஊர்ந்து ஆடிப் பாடுகின்ற தலைமகள் அயல் தோன்றிய தலைமகனது தோற்றம் அவட்கு நாண் பயந்தமையால், பாடல் பிறழ்ந்தும் அவற்கு இன்பம் பயத்தலான், புகழ்ச்சியிடத்து அலங்காரம் ஆயிற்று.

[ஆடுகின்ற ஊஞ்சலுக்குப் பக்கத்தில் வந்து தலைவிக்கு வெட்கம் உண்டாகும்படி செய்த குற்றமற்ற வெள்ளிய வேலை உடைய தலைவன் பகைநரம்போடு கூடிக் குறைந்த நிலமாகிய தானத்தில் மிழற்றப்பட்ட பாடலை அமுதமாகப் பருகினான் - என்ற இப்பாடலில், தலைவி தலைவனைத் திடீரென்று கண்ட நாணத்தால்

கூடம் விரவப் பாடல் குறைநிலத் தானத்ததாயிற்று எனினும், தலைவியிடத்து அவன் கொண்ட அன்பு அவள்பாடலை அமுதமாகப் பருகச் செய்தது என்பது.]

'கடல்நான்கும் வந்துஅலைக்கும் காலாளும் தேரும்
அடல்செய்து இருதுணியாம் அன்றே; — உடல்ஒன்றி
அந்தரமே ஏகுவன், காண்மினோ; யான்இயற்றும்
இந்திர சாலம் இது.'

இதனுள், கலைமலைவாய்ப் பொருள்வந்து, இந்திரசாலம் எனப் புகழ்ச்சியிடத்து அலங்காரம் ஆயிற்று. இது சம்பிரதம் எனினும் அமையும்.

[நாற்கடலளவும் பரந்துபட்ட காலாட்படையும் தேரும் ஒவ்வொன்றும் இவ்விரு துண்டமாக அழித்து உடலோடு தேவருலகத்துச் செல்லப் போகின்றேன்; நான் செய்யும் இந்திர சாலமாகிய இதனைக் காண்மின் - என்று இந்திரசாலம் வல்லவன் கூறியது. இக்கருத்தமையும் பாடல் சம்பிரதம் என்ற பெயரோடு கலம்பகத்தின் ஓர் உறுப்பாக வரும்.]

'வானாகி மண்ணாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாம் திருமாலே! — ஆன்ஆயா!
வெண்ணெய் விழுங்க நிறையுமோ, மேல்ஒருநாள்
மண்ணை உமிழ்ந்த வயிறு.'

இதனுள், எல்லாப் பொருளும் ஆயினாய் என்றும், வெண்ணெயை விழுங்கினாய் என்றும், மண்ணை உமிழ்ந்தாய் என்றும் நியாய மலைவாய், புகழ்ச்சியிடத்து அலங்காரம் ஆயிற்று.

[வானமும், நிலமும், கடலும், காற்றும், தேனும் பாலுமாய் எனக்கு இன்பம் தரும் திருமாலே! மாடுகளை மேய்த்த ஆயனே!

ஊழித் தொடக்கத்தில் பண்டு அகத்திட்ட உலகங்களை வெளிப்படுத்திய உன் வயிறு வெண்ணெயை உண்டதனல் நிறைந்து விடுமோ ?

இப் பாடல் நியாய மலேவாதல் காண்க.]

'காய்கதி ரோனுக்குக் கன்னனேஈன் றும்,கன்னி
ஆகியபின், மூவரையும் ஈன்றளித்த — தோகை
தலேமைசேர் கற்பினள் தாள்வணங்கும், முன்னாள்
மலேஎடுத்துக் கார்காத்த மால்.'

இதனுள், கதிரோற்குக் கன்னனேப் பயந்த பின்னரும் கன்னி ஆயினள் என்றும், பின்னர் மூவர்க்கும் மூவரைப் பயந்தும் கற்புடைமையால் மால் வணங்கினன் என்றும் ஆகமமலேவாய், புகழ்ச்சியிடத்து அலங்காரமாயிற்று. பிறவும் அன்ன.

[சூரியனுக்குக் கர்ணனே மகனைப் பெற்றும், பின்னும் கன்னியாகி, அதன்பின்னும் தருமன் வீமன் அருச்சுனன் என்ற மூவரையும் மூவருக்குப் பெற்றளித்த பெண்ணேத் தலேமை பொருந்திய கற்பினளாக, தன் இளமைக் காலத்தில் கோவர்த்தன மலேயைக் குடையாகப் பிடித்து இந்திரன் ஏவிய மழையைத் தடுத்த கண்ணனாகிய திருமால் வணங்கினன்.

இஃது ஆகம மலேவாதல் உரையிற் காண்க.]

இவை எல்லாம் புனேந்துரையாய் அலங்காரம் ஆமாறு பொருள்தொடர்நிலேச்செய்யுளுள் கண்டுகொள்க. (89)

இவ்வியற் புறனடை

709. மெய்பெற விதித்த செய்யுள் திறனும்,
எய்திய நெறியும், ஈரைங் குணமும்,
ஐஎழு வகையின் அறிவுறும் அணியும்,
அடியினும் சொல்லினும் எழுத்தினும் இயன்று
முடிய வந்த மூவகை மடக்கும்,
கோமூத் திரிமுதல் குன்று மரபின்
ஏம்உறக் கிளந்த மிறைக்கவி இருபதும்,
'இவ்வகை இயற்றுதல் குற்றம், இவ்வகை
எய்த இயம்புதல் இயல்பு' என மொழிந்த
ஐவகை முத்திறத்து ஆங்குஅவை உளப்பட
மொழிந்த நெறியின் ஒழிந்தவும் கோடல்
ஆன்ற காட்சிச் சான்றோர் கடனே.

இஃது இவ்வோத்துள் கூறிய இலக்கணங்களை எல்லாம் தொகுத்துப் 'பிறவாறு வருவனவும் தழீஇக் கொள்க' எனப் புறனடை கூறுகின்றது.

இ-ள் : பொருள்பெற எடுத்து ஓதப்பட்ட அணி இலக்கணங்களை எல்லாம் தொகுத்துக் கூறுமிடத்து, முத்தகம் குளகம் தொகை தொடர்நிலை எனும் செய்யுள் பகுதியும், அச்செய்யுட்கு வைருப்பம் கௌடம் எனப் பொருந்திய நெறியும், அவற்றோடு தொடர்ந்த செறிவு முதலாகச் சமாதி ஈருகச் சொல்லப்பட்ட குணங்கள் பத்தும், தன்மை முதலாகப் பாவிகம் ஈருகக் கிடந்த முப்பத்தைந்து அலங்காரமும், அடியினும்

சொல்லினானும் எழுத்தினானும் கூறி முடிவுபெற வந்த மூவகை மடக்கு அலங்காரமும், கோமூத்திரி முதலாகக் குறைபாடு இல்லாத இலக்கணத்தில் பிழைப்பு இன்றி வந்த மிறைக்கவி அலங்காரம் இருபதும், இவ்வாறு கூறுதல் வழுவும் மலைவும் ஆம் என்றும் அவற்றை இவ்வாறு பொருந்தக் கூறுதல் வழக்கு என்றும் சொல்லப்பட்ட பதினைந்து வேறுபாடும் உள்ளிட்டன கூறப்பட்டனவாம். இங்ஙனம் கூறிய நெறியின் ஒழிந்து வருவனவற்றையும் கொள்ளுதல் நிரம்பிய அறிவினை உடைய சான்றோர்க்கு முறைமையாம் என்றவாறு.

முற்கூறுவதாய எழுத்துமடக்கைப் பிற்கூறியது என்னை எனின், அடிமடக்கும் சொல்மடக்கும் எழுத்தின் கூட்டம் என்பது அறிவித்தற்கும், ஓர் எழுத்தானும் ஓர் இனத்தானும் வருவனவும் அப்பாற்படும் என்பது அறிவித்தற்கும், கோமூத்திரி முதலாகிய மிறைக்கவியும் ஆராயுங்கால் பெரும்பாலும் எழுத்தின் மடக்கின்பாற் படும் என்பது அறிவித்தற்கும் எனக் கொள்க. முன்னோர் நூலுள் கோமூத்திரியும் மாலைமாற்றும் சுழிகுளமும் சருப்பதோபத்திரமும் ஆகிய நான்குமே மிறைக்கவி எனக் கூறப்படுதலான் இவர் மிறைக்கவி இருபது என்றல் மலைவாம்பிற எனின், ஆகாது; ஒன்றினமுடித்தல் தன்னினம் முடித்தல் என்பதனானும்,

'இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிவுவேறு உடையது புடைநூல் ஆகும்' – இ. வி. 902

என்பதனானும் என்க.

விளக்கம்

அணியியலுள் கூறப்படுவன :

1. *முத்தகம் முதலிய செய்யுள் திறன்*
2. *வைதருப்பம் கௌடம் என்ற இருவகை நெறி*
3. *செறிவு முதலிய பத்துக்குணம்*
4. *தன்மை முதலிய முப்பத்தைந்து பொருளணிகள்*
5. *மூவகை மடக்குக்கள்*
6. *கோமூத்திரி முதலிய இருபது மிறைக்கவிகள்*
7. *வழுக்களும் அவற்றின் அமைதிகளும்*
8. *மலைவுகளும் அவற்றின் அமைதிகளும்* – என்பன.

ஒத்த நூற்பாக்கள்

முழுதும் (சிறிது திரிபுடன்) – தண்டி. 126.

'சொல்லணி ஆறைந்தும் பொருளணி ஐயாறும்
புல்லணி இருவகை புணர்ந்த தொகையென
முத்தமிழ்க்கு இவையெலாம் முகம்மறை சிகைபொறை
அத்தகைத் தாகா அணிகல னுக்கொண்டு
எந்நூற்கும் முதலாம் யுத்தியஃது இல்லால்
அந்நூல் பித்தனகங் கைவாள் என்ப.' – *தொ. வி.* 369

90

★

மூன்றாவது 'அணியியல் முற்றும்.

★

இலக்கணவிளக்கம் - பொருளதிகாரம்

அணியியல் நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை

இலக்கண விளக்கம் - பொருளதிகாரம்

அணியியல் எடுத்துக்காட்டுப் பாடல்

அகரவரிசை

உரை மேற்கோள் அகரவரிசை

உரை விளக்க மேற்கோள் நூற்பாக்கள் அகர வரிசை

1. தொல்காப்பியம்

2. வீரசோழியம்

3. வீரசோழிய வுரைமேற்கோள்

நூற்பாத் தொடக்கம்	பக்க எண்
அறுவகைச் சுவையின்	95
அன்னது பொருவன்று	116
ஆங்க, ஒப்புமைச் சொற்களை	152
இக்குறி யதனு லன்றி	108
இணங்கிய பொருள்கள்	175
இதனல் இப்பொருள் ஒக்கும்	134
இது பொருள் அது பொருள்	122
இது பொருள் உவமை	111
இத்துணைப் பொருவில் வந்து	121
இப்படி எனப் பொருள்	131
இப்படி என்பது	128
இயையும் உறுப்பு	172
இரண்டு மூன்று முதலா	96
இல்பொருள் கேள்வி	95
இவ்வயின் கண்டது	130
இழுக்கில் பொருளை	112
இனிய நாற்றமும்	95
உண்மைப் பொருள் மறுத்து	176
உயர் பொருள் ஒன்றை	120
உரிய உவமை ஒண்	114
உருவகந் தன்னை	167
உருவகமாயின் எஞ்ச	96
உவமமெனப் படுவது	94
உவமைக் குவமை	96
எஞ்சிய பண்பில்	165
எல்லாப் பொருட்கும்	96
எழுத்தியல் ஒலியும்	95
ஏற்றிய பொருள்கள்	174
ஐயமும் துணிவும்	96

நூற்பாத் தொடக்கம்	பக்க எண்

4. தண்டியலங்காரம்

5. நாடகவியல்

நூற்பாத் தொடக்கம்	பக்க எண்
நாற்று முதலா	45
முளைத்தல் முதலா	45
முற்றிநின்ற கதிர்	45

6. மாறன் அலங்காரம்

நூற்பாத் தொடக்கம்	பக்க எண்
நெறிப்படு செய்யுள்முன்	199
பகர்ந்தமுன் மொழிப்பொருள்	410
படலம் இலம்பகம்	46
பதத்தொடு பதம்	362
பலபொருள் ஒருபொருள்	102
பலவினை கொள்வது	298
பழுதறப் பகர்ந்த	420
பாடலின் நாலாம் பதம்	386
பாதம் அனைத்தும்	362
பிசியினும் புலப்படும்	98
பிறிதொன் றுதல்	395
பெயர்எதிர் நிரலுதல்	276
பெருங்காப்பியம்	42
பொதுவினும் சிறப்பினும்	153
பொருளினும் சொல்லினும்	32, 75
பொருளும் இன்பமும்	424
பொருள் முதலினும் உவமை	155
பொறியுணர் வொடும்	280
மதித்தொரு பொருளை	273, 319
மதித்தோ ரெழுத்தினை	374
மந்திரம் தூது ஒற்று	46
மரபினும் வருவதோர்	98
மறையவர் குரவோர்	328
மன்னிய குறிப்பின்	202
மன்னியபேர் யாப்பிற்கு	52
மாத்திரை சுருங்க	387
மாத்திரை பெருக	387
முக்கியப் பொருட்டு முக்கிய	98
முக்கியப் பொருளை	155

7. தொன்னூல் விளக்கம்

8. முத்துவீரியம்

நூற்பாத் தொடக்கம்	பக்க எண்
ஒரு பொருட்கு ஒரு பொருள்	111
ஒருபொருட்குப் பல	120
ஒரு பொருள் அவயவம் எல்லாம்	169
ஒரு பொருள் அவயவம் பல	168
ஒரு பொருள் உருவகம்	167
ஒரு பொருள் உருவகம் செய்து	171
ஒரு பொருள் உரைக்கும்	312
ஒரு பொருள் தருஞ்சொல் ஓர்	387
ஒரு பொருள் பயப்பது	403
ஒரு பொருள் பயவாது	408
ஒருமொழி தொடர்மொழி யாக	390
ஒருவகை யாம்தொடர்	299
ஒருவகையான் ஒழுகுவது	322
ஒன்றனைப் பழித்தும்	271
ஒன்றன்அங் கம்பல	163
ஒன்றன்வினை	235
ஓதும் ஏதேனும்	256
ஓரடிக்கண் ஒழுகிய	340
ஓரெழுத்தொடு முயிரினும்	374
கருதரு பொருளிடம்	39
கவிகரு தியபொருள்	317
கவியால் கருதும்	246
காப்பியம் பெருங்காப்பியம்	42
குணம் தொழில் ஆக்கம்	186
குணம் தொழில் பொருள்	308
குணம் பொருள் தொழில்	80
குண வியப்பு	246
குண வேற்றுமை	221
குளகம் பல பாட்டு	37

9. சந்திராலோகம்

10. குவலயானந்தம்

உரை விளக்க எடுத்துக்காட்டுப் பாடலகரவரிசை

இலக்கணச் செய்தி அகரவரிசை

செய்தி	பக்க எண்
ஏது உருவகத்தின் பாற்படுவது	179
ஏது உருவகஅணி	173
ஏது உவமை அணி	133
ஏது விலக்குஅணி	217
ஏய்ப்ப என்ற உவமை உருபு	146
ஏர என்ற உவமை உருபு	150
ஐ	
ஐயஅதிசய அணி	249
ஐயநிலை உவமைஅணி	114
ஐய ஏதுஅணி	267
ஐய விலக்குஅணி	216
ஒ	
ஒடுங்க என்ற உவமை உருபு	146
ஒட்ட என்ற உவமை உருபு	146
ஒட்டணியின் இலக்கணம்	239
ஒட்டணியின் விரி	239
ஒப்ப என்ற உவமை உருபு	146
ஒப்பில் உவமைஅணி	125
ஒப்புமைக்கூட்டஅணி இலக்கணம்	311
ஒப்புமைக்கூட்ட உவமைஅணி	131
ஒருங்குடன்தோற்ற ஏதுஅணி	265
ஒருபொருளோடு ஒருபொருள் உவமை	87
ஒருபொருளோடு பலபொருள் உவமை	87
ஒருபொருள் கூற்றினுன் சமமாக வேற்றுமை செய்வது	227
ஒருபொருள் தீவகஅணி	195
ஒருவயின்போலி உவமைஅணி	123
ஒருவழிச்சேறல் என்ற வேற்றுப்பொருள்வைப்பணி	221

செய்தி	பக்க எண்
மாலாதீவகம்	194
மாலை உவமை	126
மாலைஉவமையின் பாற்படுவது	182
மாலைமாற்று என்ற மிறைக்கவி	386
மாறுபடுபொருள்மொழி என்ற வழு	409
மாற்ற என்ற உவமைஉருபு	150
மான என்ற உவமைஉருபு	147
மிகைஉவமை	130
மிகுதிகுறைவான் குறிப்பினுன் வேற்றுமை செய்தது	230
மிகுதிகுறைவான் கூற்றினுன் வேற்றுமை செய்தது	228
மிறைக்கவி இருபது	382
முதலடி ஆதிமடக்கு	344
முதலடி இரண்டாமடி நான்காம் அடிகளாக மடக்கியது	367
முதலடி நான்காமடியாக மடக்கியது	364
முதலடி மூன்றுமடி நான்காமடிகளாக மடக்கியது	367
முதலடியோடு இரண்டாமடி மூன்றுமடி ஆதிமடக்கு	349
முதலடியோடு இரண்டாமடி நான்காமடி ஆதிமடக்கு	350
முதலடியோடு மூன்றுமடி ஆதிமடக்கு	346
முதலடியோடு மூன்றுமடி நான்காமடி ஆதிமடக்கு	350
முதலடியோடு நான்காமடி ஆதிமடக்கு	347
முதல்ஈரடி ஆதிமடக்கு	346
முதல்சீர்ஒழித்து நான்கடியும் முற்றுமடக்கு	360
முதல்மூவடி ஆதிமடக்கு	349
முதல்மூவடி மடக்கியது	366
முத்தகச் செய்யுள்	34
முயற்சி விலக்கு	212
முரசபந்தம் என்ற மிறைக்கவி	392
முரணித் தோன்றல்	221
முரண்வினைச் சிலேடை	303

செய்தி	பக்க எண்
விக்கிரிய உவமை	120
விசேடஅணியின் இலக்கணம்	307
விபரீத உவமை	117
விபரீதப்படுதல்	225
விபாவனை அணியின் இலக்கணம்	234
வியப்ப என்ற உவமைஉருபு	146
வியப்புப் பற்றிய சுவைஅணி	283
வியனிலை உருவகஅணி	163
விரிஉருவக அணி	160
விரிஉவமை அணி	103
விருத்தாதீவக அணி	195
விரூபக உருவகஅணி	164
விரோதஅணி	313
விரோத உவமைஅணி	130
விரோதச் சிலேடைஅணி	306
விலக்கியல் வேற்றுமைஅணி	233
விலக்கு உருவகஅணி	174
விலக்குஉருவக அணியின் பாற்பட்டது	180
விலக்கு உவமையணி	132
விலக்குஉவமைஅணியின் பாற்பட்டது	183
விழைய என்ற உவமைஉருபு	147
விறப்ப என்ற உவமைஉருபு	147
வினுவுத்தரம் என்ற மிறைக்கவி	390
வினைஎதிர்மறுத்துப் பொருள் புலப்படுத்தும் விபாவனை	238
வினைப்புணர்நிலைஅணி	325
வீழ என்ற உவமைஉருபு	148
வீரம் பற்றிய சுவைஅணி	281
வெகுளி விலக்குஅணி	214
வேட்கை உவமை	118

மேற்கோள் பாடல்களில் பயின்றுள்ள அருஞ்சொற்களின் பொருள் அகரவரிசை.

[எண் - பக்கவெண்ணைக் குறிக்கும்]

சொல்		பொருள்
		அ
அகடு	—	வயிறு 82
அகலம்	—	மார்பு 212
அகவுதல்	—	ஒலித்தல் 206
அகைதல்	—	விளங்குதல் 147
அசலம்	—	மலை 201
அச்சுதன்	—	கேடில்லாதவன் 306
அடை	—	இலை 85, 138
அண்டர்	—	தேவர் 292, 364
அணங்குதல்	—	வருத்துதல் 89
அணவுதல்	—	நெருங்குதல் 82, 193
அதரம்	—	உதடு 206, 398
அதுலன்	—	ஒப்பற்றவன் 258
அநங்கன்	—	மன்மதன் 188, 372
அந்தரம்	—	ஆகாயம், கேடு 306
அமலுதல்	—	தழுவுதல் 375
அம்புயம்	—	தாமரைப்பூ 165, 172, 176
அம்போருகம்	—	தாமரைப்பூ 140, 201, 217, 230
அயர்தல்	—	வருந்துதல் 261
அயில்	—	வேல் 381
அரந்தை	—	துன்பம் 366
அரவிந்தம்	—	தாமரைப்பூ 201, 266
அரி	—	சிங்கம் 196, 300, 316

சொல்		பொருள்
அரி	—	நெற்சூடு 72, 300
அரி	—	வண்டு 357
அரிமான்	—	சிங்கமாகிய விலங்கு 89
அரியேறு	—	ஆண் சிங்கம் 72, 107
அருவர்	—	தமிழ்நாட்டவர் 412
அலங்கல்	—	மாலை 181
அல்லி	—	அகவிதழ் 108, 364
அவுணர்	—	அசுரர் 107, 131
அளகம்	—	கூந்தல் 123, 125, 127, 161, 175, 375
அளக்கர்	—	கடல் 367
அளி	—	வண்டு 123, 176, 230, 330, 356, 395
அளி	—	கருணை 160, 176, 330
அறுகால்	—	வண்டு 357
அற்றம்	—	சோர்வுறும் காலம் 209

ஆ

ஆகம்	—	மனம் 82
ஆகம்	—	உடம்பு 265
ஆகம்	—	மார்பு 63, 274, 287, 290
ஆசை	—	திசை 384
ஆதரம்	—	பற்று 395, 421
ஆநிரை	—	பசுக்கூட்டம் 63
ஆயம்	—	கூட்டம் 269
ஆயர்	—	தாயர் 59
ஆயர்	—	இடையர் 59, 434
ஆரம்	—	ஆத்தி 187, 296, 347
ஆரம்	—	மாலை 121, 189
ஆரம்	—	முத்து 223, 424
ஆர்	—	ஆத்தி 181, 258
ஆர்கலி	—	கடல் 302

சொல்		பொருள்
ஆர்(த்)தல்	—	பொருந்துதல் 213
ஆர்த்தல்	—	ஒலித்தல் 257, 433
ஆலம்	—	விடம் 267
ஆவி	—	குளம் 176
ஆழி	—	சக்கரம் 69, 161, 230, 231, 299, 426
ஆழி	—	கடல் 161, 220, 299, 426

இ

இகத்தல்	—	கடத்தல் 62
இகலுதல்	—	மாறுபடுதல் 128, 316
இதழி	—	கொன்றை 60, 358
இந்தீவரம்	—	குவளைப்பூ 288
இர	—	மரவிசேடம் 137
இரவாளன்	—	யாசிப்போன் 273
இரவி	—	கதிரவன் 197, 216, 306, 357
இரவு	—	இரத்தல் 299
இரிதல்	—	கெட்டோடுதல் 220
இவர்தல்	—	பொருந்துதல் 228
இழை	—	அணி 63, 248
இளிவரவு	—	இழிவு 191, 274

ஈ

ஈமம்	—	பிணஞ்சுடு தீ 284
ஈரம்	—	அன்பு 121

உ

உகைத்தல்	—	செலுத்துதல் 107
உசா	—	நுண்ணுரை 141
உடுக்கை	—	உடை 149
உணக்குதல்	—	வாட்டுதல் 257

சொல்		பொருள்
உரம்	—	மார்பு 190
உரன்	—	திண்ணிய அறிவு 170
உழலுதல்	—	உலாவுதல் 104
உழை	—	மான் 132, 381, 384
உளர்தல்	—	பாய்தல் 67

ஊ

ஊழ்	—	முறை 66
ஊன்	—	இறைச்சி 191
ஊன்றடி	—	புலால் துண்டு 283

எ

எயிறு	—	பல் 82, 182
எருத்து	—	கழுத்து 184
எல்வி	—	இரவு 185
எல்லை	—	பகல் 175
எழால்	—	யாழ் 89
எழிலி	—	மேகம் 147

ஏ

ஏக்கறுதல்	—	ஆசையால் தாழ்தல் 67, 124
ஏதிலன்	—	அயலான் 166
ஏய்த்தல்	—	ஒத்தல் 107, 261
ஏர்	—	அழகு 111
ஏர்தல்	—	ஒத்தல் 122
ஏறு	...	விடை 233
ஏறு	...	இடியேறு 221
ஏனல்	...	தினை(ப்புனம்) 197

ஒ

ஓசிதல்	...	தளர்தல் 58
ஒல்லேம்	...	விரும்பேம் 68

ஓ

சொல்	பொருள்
ஓடை	நெற்றிப்பட்டம் 302
ஓங்கல்	மலை 231
ஓதம்	வெள்ளம் 61
ஓதி	மகளிர் மயிர்முடி 182
ஓதிமம்	அன்னம் 354
ஓவம்	ஓவியம் 89
ஓவாமை	நீங்காமை 242, 374

க

சொல்	பொருள்
கங்குல்	இரவு 184
கஞ்சுகி	சட்டையிட்டோர் 184
கடம்	பாலை 197
கடாம்	மதநீர் 129, 166
கடி	காவல் 263
கடி	மணம் 305
கடு	விடம் 63
கடுக்கை	கொன்றை 380
கண்	கணு 70
கண்டல்	தாழை 354
கதுப்பு	கூந்தல் 63
கந்து	கட்டுத்தறி 166
கயல்	மீன் 63, 106, 117, 121, 132. 140, 141
கயிரவம்	செவ்வாம்பல் 93
கரடம்	மதநீர் 258
கரிகால்	கரிகாலன் 87
கலசம்	குடம் 69
கலவம்	கலாபம் (மயிற்றோகை) 124, 179
கலவி	புணர்ச்சி 273
கலுழ்தல்	கலங்கி வீழ்தல் 272

சொல்		பொருள்
கவடு	—	கிளை, புரோசைக்கயிறு 129
கவர்பு	—	தடுமாற்றம் 114
கவிர்	—	முள்முருங்கைப் பூ 113
கவ்வை	—	ஒலி 113
கழை	—	மூங்கில் 85
கறங்குதல்	—	ஒலித்தல் 191
கறை	—	கறுப்பாம் மறு 115
கனவரை	—	பெருமலை 63
காந்தர்	—	கணவன்மார் 250
காந்தனார்	—	கொழுநனார் 364
காமாரி	—	சிவன் 394
காரி	—	சாத்தன் 394
காரிகை	—	அழகு 69
கார்	—	கருமை 56
காவி	—	நீலோற்பலம் 111, 241, 399
காழ்	—	பரல் 137
காழில்கனி	—	விதையில்லா வாழைக்கனி 66
கானல்	—	கடற்கரைச்சோலை 61
கிளைத்தல்	—	நிலங்கீறுதல் 139
கிளைத்தல்	—	தேடுதல் 253
கிள்ளி	—	சோழன் 70, 252, 272, 282
கிள்ளை	—	கிளி 63, 173, 200, 250
கீர்	—	சொல் 63
கீரம்	—	பால் 63
குடக்கு	—	மேற்கு 269
குமரி	—	கொற்றவை 107
குயம்	—	நகில் 136
குருளை	—	குட்டி 185
குலிகம்	—	சாதிலிங்கம் 236
குலைத்தல்	—	குலையாகப் பூத்தல் 204

சொல்		பொருள்
		கு...
குவடு	—	குவிந்த வுச்சி 63
குவடு	—	மலை 166
குழை	—	காதணி 127, 132, 204
குழைகோடல்	—	தளிர்த்தல் 277
குறங்கு	—	துடை 69, 182
குன்றி	—	குன்றிமணி 86, 149
கூகை	—	கோட்டான் 376
கூடம்	—	பகைநரம்பு 433
கூட்டுணல்	—	கொள்ளையிடுதல் 63
கேகயம்	—	மயில் 63
கேதகை	—	தாழை 355
கேழ்	—	நிறம் 230
கேள்	—	சுற்றம் 63, 190
கை	—	பக்கம் 69
கை	—	ஒழுக்கம் 63
கொட்குதல்	—	வளைத்தல் 236
கொண்டல்	—	நீருண்டமேகம் 63, 354
கொம்பர்	—	கொடி 117, 179
கொல்லி	—	பண்விசேடம் 277
கோகனகம்	—	தாமரை 379
கோகிலம்	—	குயில் 149
கோடியர்	—	கூத்தர் 89
கோதண்டம்	—	வில் 292
கோதை	—	மாலை 108
கோபம்	—	பட்டுப் பூச்சி 124, 277
கோரம்	—	சோழனது குதிரை 187
கோவலர்	—	இடையர் 63, 224
கோழி	—	உறையூர் 230

சொல்		பொருள்
		ச
சந்து	—	சந்தனம் 257
சயிலம்	—	மலை 201
சரம்	—	அம்பு 287, 390
சலம்	—	வஞ்சனை 313
சாந்து	—	சந்தனம் 288
சாபம்	—	வில் 399
சாறு	—	விழா 135
சிமையம்	—	சிகரம் 64
சிலம்பு	—	மலை 171
சிலை	—	கல் 36
சிவணுதல்	—	பொருந்துதல் 71
சிறை	—	சிறகு, அணை 305
சீலம்	—	பெருமை 213
சீறடி	—	சிறிய பாதம் 69, 408
சுணங்கு	—	தேமல் 63, 115, 119, 192, 216
சுரநதி	—	கங்கை 164
சுரும்பு	—	வண்டு 184, 241, 358
சுரை	—	ஆவினது மடி 148
சுறவு	—	சுறு மீன் 87
சூடகம்	—	முன்கை வளை 193
சூதப்பணை	—	மாங்கிளை 317
செம்பியன்	—	சோழன் 113
செவ்வி	—	அழகு 63, 113, 161, 163, 164, 174, 241
செவ்வி தருதல்	—	மலர்தல் 106
செறுவு	—	வயல் 169
சென்னி	—	தலை 67, 181, 419
சென்னி	—	சோழன் 66, 130, 132, 281, 292.
சென்மோ	—	செல் 85
சேயன்	—	செய்ய நிறத்தவன் 230

சொல்		பொருள்
சேய்மை	—	தொலைவு 84
சேல்	—	மீன் 103, 113, 119, 168
சேவகம்	—	யானை கட்டுமிடம் 166

த

தகளி	—	அகல் விளக்கு 161
தகைதல்	—	தடுத்தல் 283
தடம்	—	குளம் 62, 72, 129, 141, 164, 168, 169
தடித்தல்	—	மின்னுதல் 61, 380
தடிதல்	—	தடுத்தல் 72
தண்ணளி	—	கருணை 131, 176, 180, 242, 243
ததைதல்	—	செறிதல் 119
தமிழ்	—	இனிமை 357
தரங்கம்	—	அலை 371
தரளம்	—	முத்து 104, 121, 318, 424, 432
தளவம்	—	முல்லை 60
தளவு	—	முல்லை 206, 349, 426, 433
தாதகி	—	ஆத்திப்பூ (மாலை) 420
தாமம்	—	மாலை 284, 432
தார்	—	ஆடவர் மார்பிலணியும் மாலை 56, 82, 211, 257, 262, 274, 278, 284, 296
தானம்	—	மதநீர் 70, 162
தானவர்	—	அசுரர் 191, 414
திதலை	—	தேமல் 149
துகள்	—	பொடி 272
துடுப்பெடுத்தல்	—	மொட்டு விடுதல் 277, 379
துத்தி	—	புள்ளி 82
துதைதல்	—	செறிதல் 119
துப்பு	—	வலிமை 89
துப்புரவு	—	நுகரத்தக்க பொருள் 223

சொல்	பொருள்
துலை	— தராசு 281
துவர்	— செம்மை 103, 205
துளக்குதல்	— நடுக்குதல் 175
துளவு	— துழாய் 107
துறுகல்	— பொற்றைக் கல் 185
துனைவரல்	— விரைதல் 62
தெம்முனை	— பகைவரிடம் 84
தெரீஇய	— தேர்ந்துகொள்ள 84
தெருமரல்	— சுழலுதல் 417
தேசு	— ஒளி 210, 215
தேறல்	— தேன் 169, 180, 236
தைவரல்	— தடவுதல் 269
தொடுவுண்டல்	— தோண்டியுண்ணுதல் 310
தொடை	— மாலை 129, 258
தொடையல்	— மாலை 296
தொத்து	— பூங்கொத்து 283
தோகை	— மயில் 60, 61, 124, 238, 379
தோடு	— மடல் 182
தோடு	— பூவிதழ் 176
தோட்டி	— அங்குசம் 170

ந

நசை	— விருப்பம் 65
நந்துதல்	— ஆக்கம், கேடு 300
நயனம்	— விழி 379
நல்கூர்ந்தார்	— வறியோர் 141
நவ்வி	— மான் 179
நளி	— செறிவு 182
நற	— தேன் 297
நறவு	— தேன் 163, 381

சொல்		பொருள்
நறை	—	தேன் 295, 349
நாகம்	—	யானை, மலை 302
நாட்டம்	—	விழி 140, 201
நாம்	—	அச்சம் 327
நாய்கன்	—	மீகாமன் 139
நால்வாய்	—	யானை 70, 350
நாவலோர்	—	புலவர் 64
நாறு	—	நாற்று 169
நிணத்தல்	—	கட்டுதல் 135
நித்திலம்	—	முத்து 169, 180, 357
நிரை	—	வரிசை 91
நிரை	—	பசுக்கூட்டம் 189, 310
நிவத்தல்	—	உயர்த்தல் 85
நுங்குதல்	—	விழுங்குதல் 89
நுடங்குதல்	—	அசைதல் 180, 204, 422
நுதல்	—	நெற்றி 18, 111, 247, 259, 283
நுதி	—	நுனி 264
நுனை	—	நுனி 147
நேமி	—	சக்கரம் 220
நேரியன்	—	சோழன் 126
நேரார்	—	பகைவர் 131, 258

ப

பகழி	—	அம்பு 147
பங்கயம்	—	தாமரைப்பூ 201, 266
பஞ்சி	—	செம்பஞ்சிக்குழம்பு 408
படி	—	மேனி 181
பணம்	—	படம் 327
பணி	—	பாம்பு 365
பணி	—	ஆபரணம் 82, 365

சொல்		பொருள்
பணை	—	பெருப்பு 63, 302, 350
பணை	—	மூங்கில் 269, 302
பதுமம்	—	தாமரைப்பூ 201, 230
பத்தி	—	கோடு 82
பயம்	—	பயன் 214
பரவை	—	கடல் 222
பரிதல்	—	அறுதல் 70
பவனம்	—	இடம் 375
பாண்	—	பாணன் 285
பாந்தள்	—	பாம்பு 347
பாய்த்துள்	—	பாய்ச்சல் 147
பிடி	—	பெண்யானை 182
பிறழ்தல்	—	கிளர்ந்து அசைதல் 103
பீலி	—	மயிற்றோகை 240
புணரி	—	கடல் 155
புண்டரிகம்	—	தாமரைப் பூ 316, 330, 432
புண்டரிகம்	—	புலி 316
புத்தேள்	—	தேவன் 148
புயல்	—	(கார்)மேகம் 103, 175, 193, 253, 257
புய்த்தல்	—	பற்றியிழுத்தல் 418
புரந்தரன்	—	இந்திரன் 310
புரம்	—	முப்புரம் 247
புரவு	—	புரத்தல் 265, 348
புரை	—	இடம் 253
புரைதல்	...	ஒத்தல் 104
புலவி	...	ஊடுதல் 188
புல்லாதார்	...	பகைவர் 70
புல்லுதல்	...	தழுவுதல் 278, 317, 318, 344
புழை	...	உள் துளை 70, 162
புளினம்	...	மணல்மேடு 355

சொல்		பொருள்
புறந்தரல்	—	காத்தல் 150
புறவு	—	முல்லை 177
பூவை	—	காயா 63
பூழியன்	—	சோழன் 320
பெண்ணை	—	பனை 182
பெற்றம்	—	விடை 359
பேதுறவு	—	மயக்கம் 347
பேதுறுத்தல்	—	மயக்குதல் 61
பைது	—	பசுமை 149
பொருநர்	—	வேடந்தரித்தாடுவோர் 424
பொருப்பு	—	மலை 35, 70, 161, 201
போழ்	—	வார் 135

ம

மகவு	—	பிள்ளை 36
மஞ்ஞை	—	மயில் 117, 179, 180, 236
மட்டு	—	தேன் 318
மதங்கன்	—	பாணன் 66
மதமா(ன்)	—	யானை 237, 345, 347
மதர்த்தல்	—	செருக்குதல் 69, 140, 41, 63, 72, 73, 75, 79, 80, 205, 206, 12, 30, 346
மதவேள்	—	காமன் 265
மதன்	—	மன்மதன் 184, 199
மதுகரம்	—	வண்டு 161, 347, 366
மயல்	—	மயக்கம் 117, 173
மருங்குல்	—	இடை 121, 142, 160, 171, 180, 204
மலயம்	—	பொதியமலை 126
மலயாநிலம்	—	தென்றற்காற்று 129, 195, 238, 345
மல்	—	மற்போர் 212

சொல்		பொருள்
மறு	—	களங்கம் *112*
மறுகு	—	தெரு *248*
மறுகுதல்	—	துளும்புதல் *91*
மறுகுதல்	—	மயங்குதல் *196*
மன்றல்	—	மணம் *119, 184, 188*
மாகம்	—	மேகம் *60*
மாதர்	—	காதல் *114, 228*
மாதவி	—	குருக்கத்திக் கொடி *288*
மாயன்	—	கரியன் *230*
மாரன்	—	மன்மதன் *154, 201, 265*
மாருதம்	—	காற்று *257, 371, 434*
மாலுதல்	—	மயக்குதல் *259*
மால்	—	மயக்கம் *199*
மாவலன்	—	பாரதப்போரில் தேரோட்டிய கண்ணன் *36*
மாற்றம்	—	சொல் *173*
மாற்றலர்	—	பகைவர் *232*
மானுதல்	—	ஒத்தல் *233*
மான்மறி	—	மான்குட்டி *81*
மீகான்	—	மீகாமன் *164*
முகிழ்	—	மொட்டு *159, 168*
முகுளித்தல்	—	குவிதல் *266*
முகை	—	மொக்குள் *117, 160, 217*
முந்நீர்	—	கடல் *229*
முயக்கு	—	தழுவுதல் *250*
முரலுதல்	—	ஒலித்தல் *82, 357*
முருகு	—	மணம் *169*
முறி	—	தளிர் *283*
முறுவல்	—	பல் *104, 121, 180, 217*
முரல்	—	முறுவல் *160, 172, 266*

சொல்		பொருள்
மேதினி	...	பூமி 164
மேரு வில்லி	...	சிவபெருமான் 247
மோடு	...	பெருமை 146, 263
மௌலி	...	கிரீடம் 64
மௌவல்	...	முல்லை 113
		ய
யாணர்	...	புதுமை 182
		ர
ராகம்	...	காதல் 173. 386
		வ
வகிர்	...	பிளவு 119
வஞ்சியாட்டி	...	வஞ்சிநகரப் பெண் 1
வட்டு	...	சூதடு கருவி 85, 146
வடி	...	கூர்மை 237
வண்கை	...	கொடைக் கை 84, 149
வண்டல்	...	சிறுமியர் விளையாடும் சிற்றில் 354
வண்டானம்	...	பறவை விசேடம் 60
வம்பு	...	கச்சு 187
வம்பு	...	மணம் 27, 265, 302
வய	...	வலிமை 84, 131, 148, 261
வயவர்	...	வீரர் 141
வரி	...	அழகு 187
வல்லி	...	சங்கிலி 70, 128
வல்லி	...	கொடி 108, 277, 395
வல்லியம்	...	புலி 364
வல்லே	...	விரைவாக 313
வள்ளம்	...	கிண்ணம் 250
வன்கண்	...	தறுகண்மை 281
வாமன்	...	திருமால் 221
வாரணம்	...	யானை 272, 357, 393

சொல்		பொருள்
வாரி	...	கடல் 109, 180
வாவி	...	குளம் 123, 124, 352, 432
வாளி	...	அம்பு 190, 199, 331
வாள்	...	ஒளி 69, 104, 112, 114, 119, 121, 125, 133, 167, 197, 258.
வான்மை	...	வெண்மை 87
விசும்பு	...	ஆகாயம் 141, 252
விஞ்சை	...	கலை 213
விஞ்சையர்	...	வித்தியாதரர் 417
விடத்தேர்	...	மரவிசேடம் 300
விடலை	...	சிறந்த ஆடவன் 209, 274, 281, 294
விதிர்ப்பு	...	நடுக்கம் 273
விரவலர்	...	தனியார் 57
விரை	...	மணம் 60, 125, 180, 288
விலங்குதல்	...	குறுக்கிடுதல் 56
விழுத்திணை	...	உயர் குலம் 92
விளர்த்தல்	...	வெறுத்தல் 195
வீ	...	பூ 185
வீட்டுதல்	...	அழித்தல் 191
வெஃகுதல்	...	கவர விரும்புதல் 313
வெய்யோன்	...	கதிரவன் 69
வெறி	...	மணம் 304
வெறி	...	களிமிகுதி 304
வெற்பு	...	மலை 189, 290
வேதா	...	பிரமன் 120
வேய்	...	புல்லாங்குழல் 57
வேய்	...	மூங்கில் 35, 84, 104, 07, 46, 49, 357
வேய்ங்குழல்	...	புல்லாங்குழல் 224
வேரி	...	தேன் 196, 229
வேலை	...	கடல் 59, 203
வேள்	...	காமன் 265
வை	...	கூர்மை 87, 89, 149
வைகுதல்	...	தங்குதல் 200
வைப்பு	...	சேமநிதி 130

அணிவகைகளும் அலங்காரவகைகளும்

(எண் பக்க எண்ணைக் குறிக்கும்)

பிற்சேர்க்கை

★

இலக்கணவிளக்க அணியியலில் தண்டியலங்காரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முப்பத்தைந்து பொருளணிகளும், அவற்றின் வகைகளுமே கூறப்பட்டுள்ளன. இவ்வியலில் குறிப்பிடப்படாத சில உவமையணி, உருவக அணி வகைகள் வீரசோழியத்தினுள்ளும் மாறன் அலங்காரத்தி னுள்ளும் காணப்படுகின்றன.

மேலும் இவ்வியலில் குறிப்பிடப்படாத பொதுவணிகள் இருபத்தொன்பது மாறன் அலங்காரத்துள்ளும், நான்கு தொன்னூல் விளக்கத்துள்ளும், இருபத்தொன்று முத்து வீரியத்துள்ளும், முப்பத்தாறு சந்திராலோகத்துள்ளும் காணப்படுகின்றன. அவற்றையும் அறிதல் அணி இலக்கணம் பற்றிய அறிவினை மிகுவிக்கும் என்ற எண்ணத்தால் பிற்சேர்க்கையாக அவ்வணிகள் அந் நூல்களின் துணையால் விளக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில அணிகள் இவ்வியலில் குறிப்பிடப்பட்டுள்ள அணி களின் விரிவாகவும், கூறுகவும் அமைந்திருப்பதனைக் காணலாம்.

★

உள்ளுறை

உவமையணி வகை

1. இகழ்ச்சி உவமை
2. பண்பு உவமை
3. பொருள் உவமை
4. வாக்கியப்பொருள் உவமை
5. தலைப்பெயல் மரபின் சார்ந்துவரல் உவமை
6. ஒருவழி ஒப்பின் ஒருபொருள் உவமை
7. சந்தான உவமை
8. இழிவு உயர்வுப் புகழ்ச்சி உவமை
9. உயர்வு இழிவுப் புகழ்ச்சி உவமை
10. சம உவமை
11. ஒப்புமறை உவமை
12. அந்நிய உவமை
13. நிறைவு உவமை
14. குறைவு உவமை
15. ஒருபொருள் உவமை
16. அவயவ உவமை
17. அவயவி உவமை
18. முற்றுவமை
19. அந்தாதி உவமை
20. தடுமாற்ற உவமை
21. ஏக உவமை
22. நிரல்நிறை உவமை
23. தற்குண உவமை

உருவகஅணி வகை

1. அவ்விய உருவகம்
2. பண்பு உருவகம்
3. ஒருபொருள் உருவகம்
4. பலபொருள் உருவகம்
5. அவிருத்த உருவகம்

அணி வகைகள்

1. அசங்கதி
2. அதிகம்
3. அற்புதம்
4. இணைஎதுகை
5. இறைச்சி
6. உபாயம்
7. உல்லேகம்
8. உள்ளுறை
9. உறுசுவை
10. ஏகாவளி
11. காரண மாலை
12. காரிய மாலை
13. காவியலிங்கம்
14. சங்கரம்
15. சந்தயம்
16. சமுச்சயம்
17. தடுமாறுத்தி
18. தற்குணம்
19. தற்பவம்
20. திட்டாந்தம்
21. பரிசங்கை
22. பிரதீபம்
23. பிரத்யநீகம்

67 – 68

56. இறை அணி
57. உய்த்துணர்வு அணி
58. உறழ்ச்சி அணி
59. எதிர்மறை அணி
60. கரவு வெளிப்படுப்பு அணி
61. கருத்துடை அடைகொளி அணி
62. கருத்துடை அடைமொழி அணி
63. கற்ரோர் நவிற்சி அணி
64. காரண ஆராய்ச்சி அணி
65. குறிநிலை அணி
66. சிறப்பு அணி
67. சுருங்கச்சொல்லல் அணி
68. தன்குணம் மிகை அணி
69. திரிபு அணி
70. தொடர்நிலை செய்யுட்பொருட்பேறு அணி
71. தொடர்முழுது உவமை அணி
72. தொல்லுருப்பெறல் அணி
73. நிகழ்வின் நவிற்சி அணி
74. நினைப்பு அணி
75. பிரிநிலை நவிற்சி அணி
76. பிறிதின் குணம் பெறல் அணி
77. பின்வரு விலக்கு அணி
78. புனைவிலி புகழ்ச்சி அணி
79. புனைவுளி புகழ்ச்சி அணி
80. பொய்த்தற்குறிப்பு அணி
81. மடங்குதல் நவிற்சி அணி
82. மலர்ச்சி அணி
83. மற்றதற் காக்கல் அணி
84. மிகுதி நவிற்சி அணி
85. முரண்விளைந்து அழிவு அணி
86. மேன்மேல் உயர்ச்சி அணி
87. யுத்த அணி
88. வனப்புநிலை அணி
89. விதி அணி
90. வெளிப்படை நவிற்சி அணி

உவமை வங்கி

தண்டியலங்காரத்துக் காணப்படாத உவமை வகைகளுள் வீரசோழியம் குறிப்பிடுவன வருமாறு :

1. இகழ்ச்சி உவமை

'இகழப் படுபொருள் இயம்பிய பொருவை
நிகர்க்கும் என்பது நிரம்பிய இகழ்ச்சி.'

இகழப்படும் உவமையோடு உவமித்தலின் இகழ்ச்சி உவமையாயிற்று.

வரலாறு :

'திங்களில் தோன்றிய நஞ்சேநின் சீர்முகத்து
நின்றெழுந்த வெவ்வுரைக்கு நேர்.'

திங்களை முகத்திற்கு உவமையாக்குவது போல, திங்களில் தோன்றிய நஞ்சம் முகத்து நின்றெழுந்த வெவ்வுரைக்கு நிகராவது இகழ்ச்சி உவமமாதல் காண்க. **1**

2. பண்புவமை

'ஒண்பொருள் வரதுவ் வுவமையோடு ஒன்றிய
பண்பொடு வருதல் பண்பெனப் படுமே.'

வரலாறு:

'தாமரையே போல்செய்ய தாமக் கருங்குழலி
காமருவு நின்கைத் தலம்.'

தாமரை என்ற உபமானத்தைக் கைத்தலம் என்ற உபமேயத்தோடு செம்மை என்ற பண்பைக் குறிப்பிட்டு உவமித்தலின் இது பண்புவமையாயிற்று. **2**

3. பொருளுவமை

'கருதிய பொருட்குக் காரணம் தவிர்த்துப்
பொருவை இயம்புதல் பொருளெனப் படுமே.'

வரலாறு :

'தாமரை போலும்நின் வாள்முகம் கண்ணிணைகள்
நீலோற் பலத்துக்கு நேர்.'

உவமித்தலுக்குரிய காரணம் காட்டாமல் வாளா உபமானப் பொருளைச் சுட்டிக்கூறலின் இது பொருளுவமையாயிற்று. 3

4. வாக்கியப் பொருளுவமை

'பழுதில் உவமைப் பலபதம் சேர்மொழிப்
பொருளில் விளக்கம் புணர்ப்பது வாக்கியம்.'

வரலாறு :

'வெண்ணிலவும் தண்ணளியும் மென்மையும் சேருமால்
அண்ண லதுவெண் குடை.'

வெண்குடைக்கு – வெண்ணிலவு தண்ணளி மென்மை என்பனவற்றின் தொகுதியை உவமையாக்குவது வாக்கியப் பொருளையே உவமை யாக்குவதாம். 4

5. தலைப்பெயல் மரபின் சார்ந்து வரலுவமை

இரண்டு உவமானங்கள் ஒன்றோடொன்று கூடியே உவமேயத்திற்கு இயைய வருதல் இவ்வுவமையாம்.

வரலாறு :

'காமருபூந் தாதுதிர்க்கும் காரெருமை — தாமருகே
பொன்னுரை கல்போல்தோன் றும்.'

இத்தொடரில் பூந்தாது மேலே உதிரப்பெற்ற எருமை என்ற இரண்டன் இணக்கத்திற்குப் பொன்னை உரைத்த கல் என்ற இரண்டன் இணக்கம் உவமையாதல் தலைப்பெயல் மரபின்

சார்ந்து வந்து உவமமானவாறு. இதனை 'இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே' என்று தொல்காப்பியம் கூறும். 5

6. ஒருவழி ஒப்பின் ஒரு பொருள் மொழிதலுவமை

எல்லாவிடத்தும் எல்லாக்காலத்தும் ஒவ்வாப் பொருளை ஓரிடமாயினும் ஒருகாலமாயினும் பற்றிச் சொல்ல வருவதாம்.

வரலாறு :

'எழில்தரு ஞாயிற்று எழில்போல் நிறைந்து
பொழிதருவான் திங்களே போல — முழுஉலகும்
தன்புகழி னுல்நிறைந்த தார்வேந்தன் சேந்தன்மாட்டு
என்புகழ்த லாவது இனி.'

பொதுவாக ஞாயிறு என்றும் திங்கள் என்றும் உவமை கூறினும், வேந்தன் எழிலுக்கு இளஞாயிறும், புகழுக்கு முழுத்திங்களுமே உவமையாகக் கொள்ளப்படுதல் ஒருவழி ஒப்பின் ஒரு பொருளுவமையாம். 6

7. சந்தான உவமை

'தொலைப்பரும் பொருவையும் பொருளையும் தொடர்ந்துசொல்
சலிப்பது பொருளுறின் சந்தா னம்மே.'

உவமானத்திற்கும் உபமேயத்திற்கும் தொடர்ந்து அடைமொழிச் சொற்கள் ஒன்றாகவே வருவதாம்.

வரலாறு :

'கோவத்தின் மிக்குக் குவிகோலம் பெய்துவிடில்
ஆபத்தைச் செய்யும் அநங்கள்போல் தாவாது
கோபத்தின்மிக்குக் குவிகோலம் பெய்துவிடி
லாபத்தைச் செய்யும் மணிவாய் அணிமயிலே.'

இப்பாடலில் உபமானம் – 'கோபத்தின் ... அநங்கன்' என்பது. உபமேயம் – 'கோபத்தின் ... அணிமயில்' என்பது. இப்பாடலில் உவமையும் உபமேயமும் தொடர்ந்து அடைமொழிச் சொற்கள் ஒன்றாகவே வருதலின் இது சந்தானஉவமை. 7

8. இழிபு உயர்வுப் புகழ்ச்சி உவமை

இழிந்த உவமையில் உயர்ந்ததனைப் புகழ்தல்.

வரலாறு :

'உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.'

மனிதனின் சிறிய உருவத்திற்கு இழிந்த பொருள்களில் சிறந்த அச்சாணியை உவமை கூறியது காண்க. 8

9. உயர்வு இழிவுப் புகழ்ச்சி உவமை

(எ–டு): *மலை ஒக்கும் யானை.*

மலையாகிய உயர்ந்த உவமையை அதனை ஒப்பிடும்போது அதனில் மிகச் சிறியதாகிய யானைக்கு ஒப்பிட்டது காண்க. 9

10. சம உவமை

(எ–டு) : *தந்தையை ஒக்கும் மகன்.*

தந்தை – மகன் என்பார் எல்லாவகையிலும் ஒப்பாதல் காண்க. 10

11. ஒப்புமறை உவமை

உபமானப் பண்புகளை உபமேயத்துக்கு மறுத்துக்கொள்வது.

வரலாறு :

'காலம் வரைந்திடும் கைகோள் வழிச்செறி
மாலும் முழங்கி வளர்ந்தொழுகிச் – சாலவும்
பெய்கோவா யென்றும் பெருமய மாலினைத்தான்
கைபோவாய் வாழிநீ கார்.

கார் உபமானம்; மால் – உபமேயம்; உபமானத்திற்குரிய காலம் வரையறுத்தல், முறையே செல்லுதல், முழங்குதல் முதலிய பண்புகளை உபமேயத்திற்கு மறுத்துக்கொள்ள வைத்தமையின் இஃது ஒப்புமறையாகும். இதனை 'ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே' என்று கூறும் தொல்காப்பியம். 1

12. அந்நிய உவமை

உபமானத்தின் குறைகளை நீக்கி உபமேயத்துக்குக் கொள்ளவைத்தல்.

வரலாறு :

‘ கற்பகம் போலொக்கும் கனுவில்லை காவேரி
மறிபுனல்போ லாமொருகால் வற்ருது – நற்புகழ்சேர்
நந்திகை மன்னு புலவோர் நவைதீரக்
கந்தக்கோன் வந்துதவும் கை.

கைக்கு உவமை கூறப்பட்ட கற்பகம், காவேரி நீர் என்பவற்றின் குறைபாடு கைக்கு – இல்லை என்று கூறும் இப்பாடலில் கற்பகத்தின் கனு, காவேரிப் புனலின் வற்றுதல் என்பனவற்றிற்கு அந்நியமான ஏனைய பண்புகளே கைக்கு உவமமாதலின் இஃது அந்நியவுவமை. 12

இனி, மாறன் அலங்காரம் கூறுவனவற்றில் இந்நூலுள் காணப்படாத உவமைவகைகள் வருமாறு :

13. நிறைவுவமை

(*பூரண உவமை*)

‘ முக்கியப் பொருட்டிறம் முற்றுதல் நிறைவே’ – மா. அ. 94

உபமேயத்தின் நான்கு கூறுபாடும் உவமையினும் முற்றக்காண்பன நிறைவுவமையாகும்.

வரலாறு :

‘ ஆரா அமுதம் அளித்ததிருப் பாற்கடலுள்
நாராயணன் நாகணை மீது – நேரிழாய்
எப்படியே கண்வளரா நின்ருன் எனும்அரங்கத்து
அப்படியே கண்வளர்வான் ஆம். ’

திருப்பாற்கடல் நாதன் – உவமை.
அரங்கநாதன் – உபமேயம்.

கண்வளரும்வினை, மேனிவடிவு, மேனிநிறம், முத்தியளிக்கும் பயன் என்ற வினை பயன் மெய் உரு என்ற நான்கும் உபமானம், உபமேயம் இரண்டன்கண்ணும் பொருந்தியவாறு. 1

14. குறைவு உவமை

(உலுத்த உவமை)

உபமேயத்தின் வினை முதலிய கூறுபாடு நான்கும் ஒவ்வாது அவற்றுள் ஒன்று முதல் மூன்று ஒப்பது குறைவு உவமையாம் என்றவாறு

(எ-டு): பவளம் போலும் வாய்.

நிறம் ஒன்றுமே ஒத்த குறைவுவமை இது. 2

15. ஒருபொருளுவமை

வரலாறு :

'வடவரைபோல் மாடம் பொலஞ்செய்மதில்
கோபுரம் சிகரபந்தி'

என மேருமலையாகிய உபமானத்திற்கு மாடம், மதில், கோபுரம், சிகரபந்தி இவற்றை உபமேயமாகக் கூறியவாறு. 3

16. அவயவ உவமை

ஒரு பொருளின் உறுப்புக்களை மாத்திரம் உவமஞ்செய்து அவ்வுறுப்பியை வாளா கூறுவது.

வரலாறு :

'மாதர் இலவிதழ்போல் மாண்பிற்றே மாதவனால்
வானோர் அருந்தும் மருந்து.'

உறுப்பாகிய இதழுக்கு உவமைகூறி, உறுப்பியாகிய மாதருக்கு உவமை கூறாதது காண்க. 4

17. அவயவி உவமை

உறுப்பியை மாத்திரம் உவமித்து உறுப்புக்களை வாளா கூறுவது.

வரலாறு :

'பொன்னங் கொடியனைய பொற்றொடிதன் தாள்சுவடும்
என்அன் புறத்தோன்றும் இங்கிவைகள் – அன்னம்
கடிக்கமலம் சேர்அரங்கர் கால்நிகராங் காளை
அடிச்சுவடும் ஆங்கவையே யாம்.'

பொற்றொடியாகிய உறுப்பிக்குப் பொற்கொடியை உவமைகூறி, அவள் அடியாகிய உறுப்பிற்கு உவமை கூறாமை காண்க. 5

18. முற்றுவமை

உறுப்பு, உறுப்பி ஆகிய அனைத்திற்கும் உவமை கூறுவது.

வரலாறு :

'பொன்னங் கொடியனைய பொற்றொடி நீள்குவளை
அன்ன கருங்கண்ணள் ஆம்.'

இதன்கண் உறுப்பு, உறுப்பி ஆகிய இரண்டற்கும் உவமை கூறப் பட்டவாறு. 6

19. அந்தாதி உவமை

ஒரு செய்யுளகத்துப் பலபொருட்கும் பலஉவமை வந்தால் முதலே உவமம் செய்த உபமேயப் பொருட்பெயரினை ஆகுபெயராதல் அன்மொழித்தொகைப் புறத்துவந்த பெயராதலாக்கித் நிறீஇ அவ்வுபமேயப் பெயரினை அந்தாதித்து உபமானப் பெயராக்கி உவமஉருபு கொடுத்துப் பின்னர் அதன்மேல் வரும் உபமேயப் பெயரோடு புணர்த்து நிறுத்துவது.

வரலாறு :

'குருமணி குயின்றபொற் குடமெனத் தகைசால்
பருமணி வடந்தோய்ந்து எழுதரு பணைமுலை,
முலையெனப் பொடித்த தாமரைமுகை, முகைநெகிழ்ந்து
இழுகு மான்மதம் அளாய் எழுபுனல்'

இதன் கண் அந்தாதி உவமை காண்க. 7

20. தலைதடுமாற்ற உவமை

தொன்று தொட்டு முதலில் வரும் உபமானம் இடையிலும் ஈற்றில் வரும் உபமேயம் முதலிலும் இடையில் நிற்கும் உவமை உருபு இறுதியிலும் வரப் புணர்ப்பது.

வரலாறு :

'மையமருண்கண் காவி வாய்பவளம் தோளிணைவேய்
ஐயஇடையே நுண்ணூல் அகலல்குல் – பையரவம்
கஞ்சத் திருமாது காதலிக்கும் மார்பகத்தான்
தஞ்சைத் திருமான் தனக்கு.'

காவி போலும் கண், பவளம் போலும் வாய், வேய்போலும் தோளிணை, நூல் போலும் இடை, பையரவம் போலும் அல்குல் – என்பன கண்காவிபோலும் என்றாற்போல இடம்மாறி வந்தவாறு.

8

21. ஏகஉவமை

உபமானமும் உபமேயமும் திணைபால் முதல்சினை பெயர்வினை என்பன மயங்காது ஒன்றாயிருக்கை.

வரலாறு :

'முற்ற உணர்த்தும் முதுகாப் பியம்புணர்ப்பான்
உற்றவர்தம் கண்போன்று உறங்காவாம் – இற்பிரிந்தால்
நல்லியலார் வந்தனைசெய் நாவீறன் மால்வரைமேல்
மெல்லியலார் இன்ப விழி.'

உபமானம் – உபமேயம்
புலவன் – தலைவி.
புலவன்கண் – தலைவிகண்.
புலவன்கண் உறங்காமை – தலைவிகண் உறங்காமை.
என்பன காண்க.

9

22. நிரல்நிறை உவமை

உபமானத்தையும் உபமேயத்தையும் வரிசைப்படுத்தி அமைப்பது.

வரலாறு :

'கொடிகுவளை கொட்டை நுசுப்பு உண்கண் மேனி'

கொடிபோலும் நுசுப்பு முதலிய காண்க. 10

23. தற்குண உவமை

சேர்ந்தாரைத் தம் பண்பினராக்குதலை உபமானமாகக் கூறி அப்பெற்றியை உவமேயத்தின்மேல் ஏற்றல்.

வரலாறு :

'அறிவுடையார் தத்துவநுண் பொருளுரையாய்ந்து
அறிகழகத் தறிவொன் றில்லா
வறிதுடையார் அடைதலின்சிற் குணத்தினராய்த்
தலைப்படும்அவ் வாழ்வு போல
வெறிவரிவண் டுளர்நறுமென் சந்தனப்பூம்
பொதும்பரிடை விராய ஏனை
முறிபடுதண் சினைவெளிற்றுத் தாருவும்அங்
கதிற்கமழும் முதன்மைத் தாமே.'

அறிவுடையாரைச் சேர்ந்த அறிவிலரும் அறிவு பெற்றுத் திகழுமாறு, சந்தனப் பொதும்பரைச் சார்ந்த ஏனைய மரங்களும் மணம் வீசும் என்றவாறு. 11

உருவக வகை

இந்நூலுள் கூறப்பெறாத உருவக வகைகளுள் வீரசோழியம் குறிப்பிடுவன இரண்டு. அவையாவன :

1. அவ்விய உருவகம்

'கூறிய பொருள்வயின் கொளுத்திய கிரியை
வேறாய் இருப்பதுஅவ் வியஉரு வகமே'

வரலாறு :

'சீலமலி நின்முகம் என்னும் திங்களால்
நாலுலகும் காலன் நலியக் கெடுக்கலுற்றான்'

முகத்தைச் சந்திரனை உருவகம் செய்து, நன்மை தரும் சந்திரன் உலகைக் கெடுப்பதாகக் கூறுவது வஞ்சனைப் பொருளதாகும் அவ்விய உருவகமாதல் காண்க. 1

2. பண்பு உருவகம்

'ஒண்பொருட் பெற்றி உற்றதற் குரிய
பண்பொடு கிளப்பது பண்புரு வகமே.'

வரலாறு :

'தலையிலமர் கங்கைத் துகிலுடையன் தன்கைச்
சிலையின்அமர் செங்கண்மால் பாகன் — நிலையினமர்
தானவரைக் கொன்று விழவுகெடுத் தான்தனியே
வானவரெல் லாம்மதிக்க வந்து.'

கங்கை, செங்கண்மால் என்பவர் பண்பு அடைகளோடு உருவகம் செய்யப்பட்டமையின் பண்பு உருவகம். 2

இந்நூலுள் கூறப்படாது மாறன்அலங்காரம் கூறும் உருவகங்கள் மூன்று. அவையாவன ஒரு பொருள் உருவகம், பல பொருள் உருவகம், அவிருத்த உருவகம் என்பன.

3. ஒருபொருளுருவகம்

உயர்திணை அஃறிணை என்று சொல்லப்பட்ட காட்சிப் பொருளும் கருத்துப்பொருளும் ஆகிய பல பொருள் ஒரு செய்யுளகத்து வந்தால் அவற்றுள் ஒரே ஒரு பொருளை உருவகம் செய்தல்.

வரலாறு :

'பிறப்பார் இறப்பார் பிறப்பாய வேலை
துறப்பான் ஒருபோதும் தூவார் — சிறப்பாகும்
செய்படைத்த தென்னரங்கர் சேவடிமேல் மானிடராய்க்
கைபடைத்தும் வாழ்ந்த கதை.'

பிறப்பார், இறப்பார், அரங்கர், அடி, மானிடர், கை – இவற்றை உருவகம் செய்யாது பிறப்பு ஒன்றனையே பிறப்பாய வேலை என்று உருவகம் செய்தமை காண்க. 1

4. பலபொருளுருவகம்

ஒன்று இரண்டு எஞ்சப் பல பொருள்களையும் ஒரு செய்யுளகத்து உருவகம் செய்தல்.

வரலாறு :

'தீதற்ற மெய்ஞ்ஞானத் தெப்பமுடன் மேதகுநால்
வேதக் கடல்கடைந்த வித்தகத்தால் — கோதற்ற
அந்தாமத் தீவின்உட்புக்கு ஆழியான் ஆம்மணியைத்
தந்தான் புத்தூர்வந் தான்.'

இப்பாடலில் மெய்ஞ்ஞானம் தெப்பம் எனவும், வேதம் கடல் எனவும், அந்தாமம் தீவு எனவும், ஆழியான் மணி எனவும் உருவகம் செய்யப்பட்டவாறு. 'புத்தூர் வந்தான்' என்பது உருவகம் செய்யப்படாமையால் இது முற்றுருவகமன்று. 2

5. அவிருத்த உருவகம்

ஒரு பொருளுக்குக் கூடுவனவாம் தன்மை பலவும் கூட்டி உருவகம் செய்வது. இது விரூபகத்துக்கு மாறுபட்டது.

வரலாறு :

'ஓர்பொழுதும் துஞ்சாது அலமந்து உறுதுளித்தாம்
போர்புனைவேல் அண்ணல் பொருட்கேகின் – சீர்பெருகும்
தண்ணூர் பசுந்துளபத் தார்மார்பன் தஞ்சைமான்
கண்ணு கியகார்க் கடல்.'

கண்ணைக் கடலாக உருவகம் செய்து கடலுக்கேற்ற தன்மைகளாகிய துஞ்சாமை, அலமருதல், நீரைக் கொண்டிருத்தல் ஆகியவற்றைக் கண்ணுக்கும் காட்டியவாறு. 3

பிற பொருளணிகள்

தண்டியலங்காரம் குறிப்பிடாத பொருளணிகளாக மாறன் அலங்காரத்தில் சுட்டி விளக்கப்படுவன 29 அணிகளாம். அவையாவன ; அசங்கதி, அதிகம், அற்புதம், இணைஎதுகை, இறைச்சி, உபாயம் உல்லேகம், உள்ளுறை, உறுசுவை, ஏகாவளி, காரணமாலை, காரியமாலை, காவியலிங்கம், சங்கரம், சந்தயம், சமுச்சயம், தடுமாறுத்தி, தற்குணம், தற்பவம், திட்டாந்தம், பரிசங்கை, பிரதீபம், பிரத்யநீகம், பிறவணி, புகழ்வதின் இகழ்தல், பூட்டுவில், பொருள்மொழி, வகைமுதல்அடுக்கு, விநோத்தி என்பனவாம்.

இவற்றை நிரலே சுருங்கக் காண்பாம்.

1. அசங்கதி

(தொடர்பின்மையணி)

'காரியம் அயலதாய்க் கழிதிறன் அசங்கதி.' – மா. 203

'அதுவே,
சிலேடையின் எய்தும் திறனும் உடைத்தே.' – மா. 204

'காரணம் ஓரிடத்து இருப்பக் காரியம்
வேறொரு மருங்கின் விளைவ தாக
வரல்தொடர்பு இன்மையாம் வழுத்துங் காலே.'
– மு. வீ. அ. 38

'காரணம் ஓரிடத் திருப்பக் காரியம்
மற்றோர் இடத்தின் மருவல், மாறி
ஓரிடம் செய்ததற்கு உரியதை மற்றோர்
இடத்தில் இயற்றல், இயற்றப் புக்கதற்கு
ஆகாப் பகைஒன்று ஆக்கிக் கோடல்
எனமூன் றும்தொடர்பு இன்மை அணியே.' – ச. 63

'காரியம் காரணம் வெவ்வே றிடம்பகை யாயுறவே
ஆரும் தொடர்பின்மை என்பர்.' – குவ. அ. 37

'ஓரிடத் தேசெய்ய வேண்டி யதனைமற் றோரிடத்து
நேரிடச் செய்தலும் ஒன்று புரிய நிகழ்ந்ததற்குக்
கூரிய மாறு புரிதலும் அவ்வணிக் கூறுகளாம்.' – 37

இதனைத் தண்டியலங்காரம் தூரகாரிய ஏது எனப் பெயரிட்டு ஏது அணியில் அடக்கியுள்ளது. இந்நூலும் அது.

யாதானும் ஒரு காரணத்திற்கு ஏற்ற காரியம் அயலே தோன்றி மறைவது அசங்கதி யணியாம். அது சிலேடை அணியொடும் கூடி வரும்.

இவ்வணி காரணம் ஓரிடத்து இருப்பக் காரியத்தை மற்றோர் இடத்தில் பிறக்கச் செய்தல், ஓரிடத்தில் செய்தற்குரியதை மற்றோர் இடத்தில் செய்தல், ஒன்றைச் செய்யத் தொடங்கி அதன் பகையாகிய மற்றொன்றைச் செய்தல் என மூவகைப்படும்.

வரலாறு :

'வேறொரு மாதர்மேல் வேந்தன் நகநுதியால்
ஊறுதர இம்மாது உயிர்வாடும் — வேறே
இருவரே மெய்வடிவின் ஏந்திழை நல்லார்
ஒருவரே தம்மில் உயிர்.' – பக்கம் 264

தலைவன் பரத்தை ஒருத்தியைத் தீண்டத் தலைவியாகிய மற்றொருத்தி வாடும் என்று கூறுவது முதல் வகை.

2. **'தீயன்எனும் பாம்பு செவியில்ஒரு வற்கௌவ**
மாயுமே மற்றொரு வன்.'

தீயவன் கூறிய பாம்பின்விடம் போன்ற சொற்கள் கொடியவன் ஒருவன் செவியைத் தூண்ட, அதன் காரியமாக வேறொருவனுக்கு ஆபத்து நேரிடும் என – விடம் தீண்டியவனைத் தாக்காது அயலானைத் தாக்குவதாகக் கூறுவது இரண்டாம் கூறு.

'கங்கணம்கண் ணில்திலகம் கையில் தரித்தனர்சீர்
தங்குஇறைஒன் னார்மடவார் தாம்.'

அரசனுடைய பகைவரின் மனைவியர் கண்ணில் கங்கணமும் கையில் திலகமும் தரித்தனர் என்பது. இது சிலேடையின் முடித்ததாம். கங்கணம் – கடகம், நீர்த்துளி; திலகம் – பொட்டு, எள்ளொடு கூடிய நீர்.

பகைவர் இறந்ததனால் அவர் மனைவியர் கண்ணீர்விட்டு இறந்தவருக்கு எள்ளொடு நீர்க்கடன் செய்தனர் என்று பொருள் படும் இப்பாட்டில் மேல்நோக்கிய கருத்தான் கண்ணில் கடகமும், கையில் பொட்டும் தரித்தனர் என அமைவது இரண்டாம் வகை சிலேடையின் அமைந்ததாம்.

3. 'கண்ணன் மயல்அகற்றக் காமர்உருக் கொண்டதனால்
பண்ணும்மயல் மாதர் பலர்க்கு.'

மயக்கத்தைப் போக்க வந்த கண்ணன் தன் அழகிய மேனியினால் மகளிருக்கு மயக்கத்தைத் தருவான் என்பதன்கண் மூன்றும் வகை அமைந்துள்ளது. 1

2. அதிகவணி

(பெருமை அணி)

'ஆதா ரத்தினும் ஆதேயம் பெருத்து
அகலம் பெருதுஅடங் கியதுஎனல் அதிகம்.' – மா. 178

'ஆதா ரத்தினும் ஆதே யத்தைப்
பெரிதாய் உரைப்பது பெருமை ஆகும்.' – மு. வீ. அ. 42

'ஆதாரம் ஆதேயம் இரண்டனுள் ஒன்றைப்
பெரிதின் பெரிதுஎனப் பேசுதல் பெருமை.' – ச. 67

'வாயும் பெருமைகொள் ஆதாரம் தன்னிலும் மன்னியஆ
தேயம் பெரிதெனச் சாற்றல் பெருமை.' – குவ. அ. 41

தங்கும் இடத்தினும் அதில் தங்கும் பொருளைப் பெரிதாகச் சொல்லுதல், தங்கும் பொருள் பெரிதாயினும் அதனினும் அது தங்கும் இடம் பெரிது எனச் சொல்லுதல் என இருவகைப்படும் பெருமையணி.

வரலாறு :

'உலகம் முழுதுஅடங்கும் மாவிசும்பில் உன்தன்
அலகுஇல் குணம்அடங்கா வாம்.'

குணம் உலகை அடக்கும் வானினும் பரந்தது என்பது முதல்வகை.

'மன்சீர் உலகுஎவ் வளவுபெரு மைத்துஅளவில்
உன்சீர் அடங்கி யுள.'

பரந்துபட்ட உன் புகழ் தன்னகத்தில் அடங்குமாறு உலகம் பரந்து விரிந்துள்ளது என்பது இரண்டாம் வகை.

இவ்வணியை தண்டியலங்காரத்து அதிசய அணியுள் அடக்கிக்கொள்ளலாம். 2

3. அற்புத அணி

'அற்புத வாய்மையின் அறைவதுஅற் புதமே.' –மா. 148

வியப்புத் தோன்றும் உண்மையை மொழிவது அற்புதமாம் இஃது உவமை, உருவகம் முதலிய பிறவணிகளொடும் வரும்.

வரலாறு :

'உண்ணீர்மை அற்றவர்க் கண்டால் அவர்மன் உயிர்க்குஇரங்கிக்
கண்ணீர் பனிற்றும் புயல்மனுராமன்கைக் கொள்வதுஒன்றே
வெண்ணீர்மை உற்ற நிருதரைச் சால வெறுத்துஅவர்மேல்
புண்ணீர் பனிற்றச் சரமாரி அன்று பொழிந்ததுவே.'

பிறர் துயரங்கண்டு கண்ணீர் வடிக்கும் கருணை வள்ளலாகிய இராமன் அரக்கரை இரக்கமின்றிப் புண்ணீர் வடிக்கச்செய்த செயற்கண் வியப்பு ஏற்படுகின்றது என்பது.

அற்புத உவமை :

'குழை அருகு தாழக் குனிபுருவம் தாங்கி
உழையர் உயிர்பருகி நீண்ட - விழியுடைத்தாய்
வண்டுஏறு இருள்அளகம் சூழ்ந்த வளர்மதிஒன்று
உண்டேல் இவள்முகத்துக்கு ஒப்பு.' – பக்கம் 127

69–70

அற்புத உருவகம் :

'அற்புதம் .....இரணியன் ஆகம் சுகிர்ந்தநர
சிங்கத்தின் மார்பில் மலர்மக ளாம்பிணை சேர்ந்ததுவே.'

நரசிங்கத்தின் மார்பில் திருமகளாகிய பெண் மான் பிரியாது மருவியிருப்பது அற்புதம் — என்பதன்கண் 'மலர்மகளாம்பிணை' என்ற உருவகத்தோடு வியப்பு வெளிப்பட்டவாறு. இவ்வணி மாறன் அலங்காரத்திலேயே உள்ளது. இது தண்டியலங்காரத்துச் சுவையணியுள் அடங்கும். 3

4. இணை எதுகை அணி

'வாய்ந்த யாப்பினுள் வரும்இணை எதுகை
ஆய்ந்த எதுகை அணிஎனத் தருமே.' – மா. 180

செய்யுளில் வரும் இணைஎதுகைத் தொடையும் ஓசை இனிமை மிக்கிருத்தல் பற்றி அப்பெயருடைய அணியாயிற்று.

வரலாறு :

'கணையும் பிணையும் கடுவும் வடுவும்
இணையொன் றியகண் இவட்கு.'

கணைபிணை, கடு வடு என்பனவற்றில் ஓசைநயம் காண்க. இவ்வணி வடமொழியில் அநுப்ராசம் எனப்படும். இவ்வணி மாறன் அலங்காரத்திலேயே கூறப்பட்டுள்ளது. 4

5. இறைச்சி பொருள் அணி

'கருப்பொருள் களனும் கட்டுரை பயின்ற
பொருள்புறத் தனவாம் இறைச்சிப் பொருள்அணி.' – மா. 176

இறைச்சியாவது கூறப்பட்ட கருப்பொருள்களை யடுத்துப் புறத்தே தோன்றும் குறிப்புப் பொருளாம். இறைச்சி பற்றிய செய்தி அகத்திணையியலுள் விரித்துக் கூறப்பட்டுள்ளது.

வரலாறு :

'இலங்கும் அருவித்தே இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற

சூள்பேணுன் பொய்த்தான் மலே.' – கலி. 41

தலைவன் கூறிய உறுதிமொழியைத் தவறிவிட்டான். அங்ஙனம் செய்தவன் மலையில் மழைவளம் குன்றல் வேண்டும். ஆனால் அவன் மலையில் மழைபெய்ய, அருவிநீர் ஓடிவருகிறது. ஒருகால் அவன் உண்மையில் சூள் பொய்க்காதவனே – என்று தலைவி கருதுமாறு அமைந்திருக்கும் குறிப்புப்பொருள், கூறப்பட்ட செய்தியின் புறத்தே, போந்த பொருளாக அமைந்திருப்பது இறைச்சியாம்.

இறைச்சி, உள்ளுறை என்பன தண்டியலங்காரத்து ஒட்டணியில் அடங்கும்.

மாறன் அலங்காரமே இறைச்சியைத் தனியாயதோர் அணியாகக் குறிப்பிடுகிறது. 5

6. உபாயவணி

'ஒருபயன் கோடற்கு உறுபொருட்டு எனலாம்
ஒள்ளிய சூழ்ச்சி உணர்த்துதல் உபாயம்.' – மா. 183

ஒரு பயன் அடைதற்கு சிறந்த காரணம் என்று ஆராய்ந்த செய்தி ஒன்றனைக் கூறுவது உபாய அணியாம்.

வரலாறு :

'சூடிக் கழித்த துளபச் சருகுஎனினும்,
நாடித் தருக ;திரு நாகையாய்! — ஊடிப்
புலவாத தற்கும் நினதுஅருட்கும் பொற்றேள்
கலவாத எற்கும்நலன் காண்.'

திருமாலிடம் விருப்புற்ற தலைவி அவன் சூடிக்கழித்த திருத்துழாய் தனக்குக் கிடைக்கப் பெற்றால், சூடிக்கழித்ததைக் கொடுத்தல் பற்றித் திருமகள் ஊடல் கொள்ளாள்; அவன் அருளுக்கு அறிகுறியான அதனால் தனக்குப் பெருநலம் உண்டாகும் – என்று சருகாகப்போன திருத்துழாயை வேண்டிய தன்கண் இவ்வணி காண்க.

முன்னவிலக்கின் ஒருவகையாக உபாய விலக்கு என்பது தண்டியலங்காரத்தில் உள்ளது.

இவ்வணி மாறன் அலங்காரத்திலேயே குறிப்பிடப் பட்டுள்ளது. 6

7. உல்லேகவணி

(பலபடப்புனைவு அணி)

'ஒருபொருட்கு உவமச் சொல்தொகக் கவர்த்த
பொருஅமர் பொருள்பல புணர்ப்பது உல்லேகம்.'
– மா. 126

'அதுவே,
ஒருவர் பலர்குறிப்பு உரைப்பதும் ஒன்றும்.' – ,, 127

'பலரும் ஒருபொரு ளிற்பல தருமங்
களினல் பலபொருள் களைஎடுத்து உரைத்தல்
பலபடப் புனைவுஎனப் பகரப் படுமே.' – மு. வீ. அ. 33

'பல்லோர் ஒன்றில் பலஇயல் பானும்
அறிபல பொருள்களை ஆரோ பித்தல்,
பின்னரும் விடய பேதங்க ளால்பல
பொருள்களை ஒருவரே புகட்டுதல் என்ன
இருபால் ஆகும் பலபடப் புனைவே.' – ச. 15

'எடுத்தொன் றினைப்பலர் பல்வித மாக இயம்பல்பல
படப்புனைவாம்.' – குவ. 12

'ஒன்றைப் பலவித மாகப் பலவிட யத்திலொரு
வன்தெரித் தாலு மதுவே.' – குவ. 13

ஒரே பொருளுக்கு ஒருவனே பல உவமங்களையோ, தனித் தனிப் பலர் பல உவமங்களையோ உவம உருபை விடுத்துக் கூறுவது இவ்வணி.

வரலாறு :

1. 'தருமன் தண்ணளி யால்,தனது ஈகையால்
வருணன், கூற்றுஉயிர் மாற்றலின், வாமனே
அருமை யால்,அழ கில்கணை ஐந்துடைத்
திரும கன்,திரு மாநில மன்னனே.' – *சீவக.* 160

சச்சந்தன் கருணையால் தருமன், ஈகையால் வருணன், பகைவரை அழிக்குந் திறத்தால் கூற்றுவன், ஐம்பொறி அடக்கலால் சினன், அழகில் காமன் – என்று திருத்தக்க தேவர் ஒருவரே அவனைப் பலபடப் புகழ்ந்து கூறியது முதல் வகை.

2. 'ஆரணங் காண்என்பர் அந்தணர், யோகியர் ஆகமத்தின்
காரணம் காண்என்பர், காமுகர் காமநன் னூல்அதுஎன்பர்,
ஏரணம் காண்என்பர் எண்ணர், எழுத்துஎன்பர் இன்புலவோர்
சீர்அணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.'

இதன்கண், திருக்கோவையாரை அந்தணர் வேதம் எனவும், யோகியர் ஆகமம் எனவும், காமுகர் காமநூல் எனவும், எண்ணர் ஏரண நூல் எனவும், புலவர் இலக்கண நூல் எனவும் கூறுதல் – ஒன்றனையே பலரும் பலபடப் புகழ்வதாம்வகை குறிக்கப் பட்டுள்ளது. 7

8. உள்ளுறை உவமம்

*'உணர்வதற்கு அரிதாம் உவமப் போலி
புணர்திறம் வினையே பொருள்மெய் உருஎனப்
பிறப்பொடும் ஐந்தாம் பெற்றித்து ஆகிச்
சிறப்புஉறு திணைகளின் தெய்வதம் ஒழிந்த
கருப்பொருள் களனுக் கட்டுரை பயின்று
உவமச் சொல்தொகல் ஒருதலை யாகியும்
அன்பினது அளவாம் அகத்திணை இருவயின்
இன்ப துன்பத்து இசைதிரிந்து இசையாத்
துணைவன் துணைவி தோழி செவிலி
இணையெனும் பாங்கன் பாணன்என்று இவரால்
கொள்கையின் வருஉம் குறிப்புரைத்து ஆகும்.' –மா. 123*

உபமானத்தைக் கூறி உபமேயத்தைப் பெறப்படவைக்கும் உள்ளுறை உவமம், அகத்திணையிலேயே, தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தலைவன் தலைவி தோழி செவிலி பாங்கன் பாணன் ஆகியோரால் குறிப்பிடப்படும். ஒட்டு என்பது கருப்பொருள் அடிப்படையாகப் பிறக்கவேண்டும் என்ற வரையறையின்றிப் புலவர் ஒன்று கருதி அதைப் புலப்படுத்தப் பிறிது ஒன்று கூறுவதாய்ச் சுட்டு என்னும் உள்ளுறையாய்ப் புறத்தின்கண் பயின்றுவரும். இதுவே பிறிதுமொழிதல் அணி எனவும் நுவலாநுவற்சி எனவும் படும். தண்டியார் உள்ளுறை உவமத்தையும் ஒட்டணியுள் அடக்கியுள்ளார்.

வரலாறு :

'கரும்புநடு பாத்தி கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர!' – ஐங்குறு. 65

கரும்பை நடுதற்கென்றே அமைந்துள்ள பாத்தியின் இடையே ஒற்றையாய் வளர்ந்த தாமரை வண்டின் பசியைப் போக்கும் ஊரன் என்பதன்கண், பரத்தையர்களுக்கு இருப்பிடமாவதற்கே அமைக்கப்பட்ட தலைவன் மாளிகையின் ஒரு பகுதியில் இருந்து தலைவி விருந்தோம்பி இல்லறம் நடத்துகிருள் — என்ற கருத்தை உள்ளுறை உவமத்தால் உணர்க. இவ்வுள்ளுறை உவமம் பற்றிய செய்திகளை அகத்திணையியலுள் காண்க.

இது மாறன்அலங்காரத்திலேயே தனி அணியாகக் கூறப்பட்டுள்ளது. 8

9. உறுசுவை அணி

'பண்புடைச் சுவைபல பகர்ந்தவற் றினுள்ஓர்
ஒண்சுவை யினைமிகுத்து உரைப்பது உறுசுவை.' – மா. 235

உலகிலுள்ள சுவைப் பொருள்களை ஒன்றற்கு ஒன்று உயர்வு உடைமை தோன்ற அடைவே எண்ணி, இறுதியில் மேம்பட்ட சுவை உடையது ஒன்றனை யாவற்றினும் மிகுசுவைத்து எனக் கூறுவது உறுசுவை அணியாம்.

வரலாறு:

‘மிக்கதுஎனும் ஆன்பாலுள் வீழ்சுவையின் நாம்விரும்பத்
தக்கதுஎனும் பஞ்ச தாரையினில் — அக்கடல்வாய்த்
தோற்றம்உறும் புத்தேளிர் துப்புரவாம் தெள்ளமுதில்
ஏற்றமுறும் இன்சுவைத்தாம் ஈதென்னும் — தேற்றமதாம்
கற்றவர்கொள் நாவீறன் காரி தருமாறன்
சொற்றமிழ்ப்பா நல்கும் சுவை.’

இப்பாடலுள், சுவைமிக்கது ஆன்பால்; அதனின் சுவையுடையது பஞ்சாமிர்தம்; அதனின் சுவையுடையது தேவாமிர்தம்; அதனினும் மேம்பட்ட சுவையுடையன நம்மாழ்வாருடைய தமிழ்ப் பாக்கள் – என்ற கருத்து அமைந்திருப்பது உறுசுவை அணியாம். இது மேன்மேல் உயர்ச்சியணியின் ஒருகூறாகும். 9

10. ஏகாவளி அணி

(ஒற்றை மணிமாலையணி)

‘ஒருபொருள் முதல்வைத்து அதற்குஉயர் பினையே
தருபொருள் மேல்வைத்து அதனொடும் பலசால்பு
ஏற்புறத் தொடர்படுத்து இசைப்பது ஏகாவளி.’ – மா. 216

‘முன்னது போல்வரும் முன்னவை பின்னவை
அடைசொல் லாக அடைகொளி யாக
வழங்குதல் ஒற்றை மணிமாலை அணியே.’ – ச. 73

‘பின்பின் உறுவன வற்றிற்கு முன்முன் பிறந்துவரும்
என்ப விசேடியம் என்றும் விசேடணம் என்றும்வர
பின்பெயர் ஒற்றை மணிமாலை.’ – குவ. அ. 47

சிறப்பான ஒரு பொருளை முன் வைத்து, அதற்கு உயர்வு தரும் பொருளை அடுத்துக்கூறி, இவ்வாறே தொடர்படுத்திக் கூறுவது ஒற்றைமணிமாலை அணியாம்.

வரலாறு:

‘மன்இவன்கண் காதளவும், காதுதோள் மட்டியையும்,
துன்னுறுதோள் சானுத் தொடும்’

'கண் காதளவும் நீண்ட, காது தோளளவும் நீண்ட, தோள் முழந்தாளளவும் நீண்ட' என்று சிறப்பான பொருளை முன்வைத்து அதற்கு உயர்வுதரும் பொருளை அடுத்துக் கூறும் முறையை இப்பாடலுள் காண்க. 10

11, 12. காரணமாலையணி, காரியமாலையணி

'காரணம் தொடர்புறில் காரண மாலை.' – மா. 214

'காரியம் தொடர்தலாம் காரிய மாலை.' – மா. 215

சந்திராலோகம் காரணம் தொடர்தல், காரியம் தொடர்தல் இரண்டையும் காரணமாலையணி என்றே கூறும்.

'பின்பின் னாகப் பேசும் பொருட்கு
முன்முன் னாக மொழிய வரூஉம்அவை
காரணம் ஆகவும் காரியம் ஆகவும்
வழங்குவ காரண மாலை என்ப.' – ச. 72

'தேரமுன் முன்னா எனினும்பின் பின்னா எனினும்திகழ்
காரண மேதொடர்பாக வருவது காண்நீஅதன்
பேரது காரண மாலை.' குவ. அ. 46

வரலாறு :

1. **'நீதியால் செல்வம் நிகழ்செல்வத் தால்கொடை, மற்று**
ஓதுகொடை யால்சீர் உள.'

இதன்கண் நீதி, செல்வம், கொடை என்ற காரணங்களும் செல்வம், கொடை, புகழ் என்ற காரியங்களும் தொடர்ந்து வருவதன்கண் ஈரணியும் காண்க.

2. **'நன்மா னிடப்பிறவி நல்லறிவிற்கு ஏது,அது**
சொல்மாண் பொருளைத் துணிவுறூஉம் தன்மை
வருவதற்கு ஏது,அது மாசுஅறும் அந்தாமம்
தருவதற்கே ஏதுஎனும் தான்,'

இதன்கண், மானிடப் பிறவியால் நல்லறிவும், நல்லறிவால் நற்பொருள் துணிதலும், அத்துணிவால் வீடுபேறும் வாய்க்கும் எனக் காரணங்கள் தொடர்ந்து சொல்லப்பட்டமை காண்க.

3. **'பார்புனலின் காரியம்,நீர் பாவகன்தன் காரியம்,தீக்**
கூர்பவனன் காரியம்,கால், கொம்பனையாய்! — பேர்விசும்பின்
காரியமாம், ஏனையவும் காரணமா யோன்அருளால்
ஆரியம்கூ றும்தொடர்பிற்று ஆம்.'

இதன்கண், நிலம் நீரின் காரியம், நீர் தீயின் காரியம்; தீ காற்றின் காரியம்; காற்று ஆகாயத்தின் காரியம்; ஆகாயம் முதலியன எல்லாம் இறைவன் காரியம் – எனக் காரியங்கள் தொடர்ந்து சொல்லப்பட்டமை காண்க 11, 12

13. காவியலிங்க அணி

(தொடர்நிலைச் செய்யுட்குறியணி)

'வெளிப்படக் கிளந்ததன் வினைவினை விளைபயன்
ஒளித்திட அவைகுறித்து உறுதொழில் ஒண்குறிப்பு
அளித்திடல் காவிய லிங்கம்என்று ஆமே.' – மா. 232

'மன்னிய பொருளை வாக்கியார்த் தத்தின்
ஆயினும் பதார்த்தத் தாயினும் இரண்டின்
ஆயினும் நாட்டற்கு அமைவது தொடர்நிலைச்
செய்யுட் குறியெனச் செப்பினர் புலவர்.' – ச. 86

'சாதிக்க வேண்டும் பொருளினைச் சாதித்த லுக்குப்பேர்
ஓதின் தொடர்நிலை செய்யுட் குறிப்பணி. – கு. அ. 60

ஒரு செயல் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட, அதன் விளைவுகளால் ஏற்படும் நிகழ்ச்சிகளை மறைத்து, காரியங்களின் விளைவுகளைக் கேட்டோர் உணருமாற்றான் செய்வது இவ்வணி என்று மாறன் அலங்காரம் கூறும்.

வரலாறு :

‘சேதாம்பல் மலர்த்தடஞ்சூழ் சேறை மாயோன்
சிறைக்கருடன் துணைப்புயத்தில் செகத்தைத் தாய
பாதார விந்தமலர் பதித்த காலைப்
பணைத்துஎழலும், மனுவெருவிப் பனுவல்ஆர்ந்த
வேதாவை நோக்கினன்,தன் குருவைப் பார்த்தான்
விண்ணவர்கோன், புகரினைவீ டணனும் பார்த்தான்,
மூதாதை யொடும் உணர்த்த உணர்ந்த பின்னர்,
முத்தரொடும் திருவடிக்கீழ் முன்னி னரே.’

திருமால் கலுழன்மீது ஏற, அக்கருடன் சிறகு அசைப்பினால் ஏற்பட்ட சூறைக்காற்றை எழுப்ப, அது வடவைமுக அங்கியை எழுப்ப, அதனால் கடல் கொந்தளிப்ப, ‘இது ஊழி வெள்ளமோ?’ என்றஞ்சி, மனு பிரமனையும், இந்திரன் குருவையும், வீடணன் சுக்கிரனையும் பார்க்க, பின் திருமால் கலுழன் மீது ஏறிய செயல் என்று அவரால் உணர்த்தப்பட்டுத் திருவடிகளைத் தொழுதனர் என்பது.

திருமால் கலுழன் மீது ஏறியமை வெளிப்படையாகக் கூறப் பட்ட செயல். அதன் விளைவு சூறைக்காற்றும், வடவைமுக அங்கி எழுதலும், கடல் பொங்குதலுமாம். அவை பாடலில் குறிப்பிடப் படாமல் மறைக்கப்பட்டுள்ளன. மனு பிரமனையும், இந்திரன் குருவையும், வீடணன் வெள்ளியையும் பார்த்து வினைவின் காரணத்தை உணர்ந்தனர் என்பது. இங்ஙனம் வெளிப்படை யாகக் கூறப்பட்ட வினையின் விளைவுகளால் ஏற்படும் நிகழ்ச்சிகளை மறைத்து, அவை குறித்து உறும் தொழிலைக் குறிப்பால் அறியச் செய்தல் இவ்வணியாகும்.

கவி தான் கருதிய கருத்தைச் சொற்றொடரின் உட்பொருளான் ஆவது, சொற்களான் ஆவது, இரண்டானும் ஆவது பெறப்பட வைப்பது இவ்வணியாம் என்று கூறும் சந்திராலோகம். எனவே, இவ்வணி மூவகைத்து என்னும் அந்நூல்.

1. 'காம! நினைவென்றேன்; கண்ணுதலோன் என்மனத்தின்
மீமருவு கின்றான் விடாது.'

வெளிப்படையாகக் குறிக்கப்படுவது — காம! நின்னை வென்றேன் என்பது. அதன் அடிப்படை கண்ணுதலோன் என் மனத்துள்ளான் என்பது. அதன் கருத்து, என்னை இனி அணுகின் கண்ணுதலோன் உன்னைச் சுட்டு எரிப்பான் என்பது.

2. 'மிளிர்நீறே! ஈசன் விழிமணியே! வாழி!
தெளிஉமையான் மீதுஅணியும் சீரால், — உளதாய
இன்பஒளி யைக்கவர்வீடு என்னுமோ கத்துஅழுந்தற்கு
அன்பினேன் செல்வேன் அமைந்து.'

திருநீறே! உருத்திராக்கமே! உமை அணிவதால் வீடாகிய பற்றில் அழுந்துவேன் – என்ற பகுதியில் வீடுபற்று என்றும், இன்புறல் அழுந்துதல் என்றும் கூறப்பாட்டுக் குறிப்பால் பேரின்பம் எய்துதல் உரைப்பட்டவாறு.

3. 'கலைதேர் புலமைநிறை காரிகைபால் ஓர்தன்
தலைமேல்கோள் பட்டதெக்கே சம்சீர் — நிலையதற்குப்
பேசுவிலங் காம்கவரி பின்புறம்கொள் சாமரையை
ஏசறயார் சொல்வார் இணை.'

கற்றுவல்ல காரிகை தன் தலைமேல் கொண்டு பாதுகாப்பது அவள் முடிமயிர். கவரி தன் வாலில் அலட்சியமாகக் கொண்டிருப்பது அதன் வால் மயிர். இவ்வாறாகக் கவரி மயிரை அவள் முடிமயிருக்கு ஒப்புக் கூறுவது எப்படி? என்று முடிமயிரின் உயர்வும், கவரி மயிரின் இழிவும் கூறும் முகத்தான் கவரி காரிகை கூந்தலுக்கு நிகராகாது என்பது. இங்கு கேசம், கவரி என்ற சொற்களோடு அவை இருக்கும் இடம் தெரிவிக்கும் தொடர்களும் அணிக்குப் பயன்பட்டமை காண்க. 13

14. சங்கரவணி

(கலவையணி)

*'பாலுள்நீர் நிலையெனப் பகுத்துணர்வு அரிதாம்
சால்பின் ஈரணி தழுவுதல் சங்கரம்,'* – மா 249

பாலும் நீரும் சேர்ந்தாற்போல ஓரணி வெளிப்படையாகவும் பிறிதோரணி குறிப்பாகவும் அமைவது கலவையணி.

இதனை அணியிலக்கணம் சொல்லணி வகையாக்கி, உறுப்பு உறுப்பிக்கலவை, நிகர்தலைமைக்கலவை, ஐயக்கலவை, ஒரு தொடர்ப்பொருட்கலவை என நான்குவகைப்படுத்திக் கூறும்.

வரலாறு :

'எங்கள் மாதுஉனைத் தோய்ந்த முதுக்
குறையால்அரும்பு அம்பலா யது......அல ராயது.'

தலைவியிடம் நீ கொண்ட தொடர்பு சிலர் அறிய முதற்கண் வெளிப்பட்டுப் பின் பலரும் அறியப் பரந்தது என்பது கருத்து. அரும்பும் அம்பல் என்பது உருவகம். அரும்பு அலராயிற்று என்பதன்கண் சிலேடை அணி வந்துள்ளது. இங்ஙனம் வெளிப்படையாக உருவகமும் குறிப்பாகச் சிலேடையும் வந்தவாறு.

குவலயானந்தம் இதன் நான்குவகைகளையும் நான்கு தனி அணிகளாக்கி, உறுப்பு உறுப்பி இலக்கண அணி, இரண்டு சிறந்து விளங்கும் கலவையணி, ஐயக்கலவையணி, ஒரேசொல் அணுகி விளங்கும் கலவையணி எனப் பெயரிட்டுள்ளது. (அணி-117-120) 14

15. சந்தயவணி

(ஐயவணி)

'உற்றதோர் பொருளினை ஐயுற்று உணர்தல்
கற்றவர் சந்தயம் எனக்கழ றினரே.' – மா. 136

'அதுவே,
சுத்த சந்தயம் நிச்சய கெர்ப்பம்
நிச்ச யாந்தம் எனநிகழ் மூன்றும்.' – மா. 137

'ஒப்புமை யாலொரு பொருளை நோக்குபு
இதுவோ அதுவோ எனச்சந் தேகப்
படுவதை யப்பொரு ளாம்பகர் தரினே.' – மு. வீ. அ. 35

'இதுகொல் அதுகொல் எனக்கொளல் ஐயம்.' – ச. 18

'ஐயம் ஒப்புமையால் நிகழின் ஐயஅணி.' – குவ. 14

'ஒப்புமை யிற்பொருள் ஒன்றனை நோக்கி
நினைவு ஐயத்தால் நிகழின் ஐயவணி.' – குவ. 14

ஒப்புமையால் ஒருபொருளை இதுவோ அதுவோ என்று ஐயுறுதலைக் கூறும் ஐயவணி – முழு ஐயம், தெளிவு அகப் படுத்தியது, தெளிவு வெளிப்படுப்பது என மூவகைத்தாம்.

வரலாறு :

1. **'திருமகளோ, பார்மகளோ, தென்அரங்கன் வெற்பில்
வருமகளோ, யாரோஇம் மாது.'**

இது முழுதும் ஐயுற்றுரைத்தது.

2. **'முண்டகத்தான் என்னில் முகம்ஒன்றே, நான்குமுகம்
கண்டனமற்று இல்லையால்; கண்ணனெனின் – தண்துளபத்
தாமத்தான் அன்று; மகிழ்த் தாமத்தா னைத்துதித்துஎந்
நாமத்தான் என்றுரைப்பேம் நாம்.'**

'நான்குமுகம் இன்மையால் பிரமனல்லன், துளவமாலை இன்மையால் கண்ணனல்லன் ஆதலின் மகிழம்பூமாலை யணிந் தவனை எப்பெயரான் அழைப்பேம்' என்பதன்கண் ஐயம் நீங்கி விடையை உறுதிசெய்தல் இயலாத தெளிவகப்படுத்தல் உள்ளது.

3. **'பாடல் சுரும்புஎனிலோ பண்மிழற்றும்; காவியெனில்
ஓடைக்குள் அன்றி உதியாதாம்; — ஏடவிழ்தார்
வள்ளல் அருள்மாறன் மால்வரைமான் கண்ணே,என்
உள்ளத் திறைகொண் டது.'**

பண் மிழற்றுமையால் அரும்பு அல்ல எனவும், நீரோடையில் மலராமையால் காவியல்ல எனவும் ஐயம் நீங்கித் தலைவி கண்களே என்று தெளிவு வெளிப்படுத்தவாறு.

ஒரு பொருளைக் கண்டவுடன் ஒப்புமையால் மற்றொரு பொருளின் நினைவு உண்டாயின் அது நினைப்பணியின்பாற்படும். ஒரு பொருளின் ஒப்புமையான் வேறு பொருள் என்ற மயக்கம்

உண்டாயின் அது மயக்கவணியின்பாற்படும். ஒரு பொருள் ஒப்புமையால் வெவ்வேறு பொருள்களாக ஐயுறப்படுமாயின் அஃது ஐயவணியின்பாற்படும். இம்மூன்று அணிகளும் தம்முள் தொடர்புடைய. (குவலயானந்தம் – அணிகள் 8, 9, 10)

இவ்வையவணி உவமை முதலிய பிற அணிகளோடும் வரும்.

வரலாறு :

'தாதளவி வண்டு நடுமாறும், தாமரைகொல்,
மாதர் விழிஉலவும் வான்முகம்கொல், – யாதென்று,
இருபால் கவர்வுற்று இடைஊச லாடி
ஒருபால் படாதுஎன் உளம்.' – பக்கம் 114
15

16. சமுச்சயவணி

(கூட்ட அணி)

'ஒன்றினுக்கு இன்பமும் துன்பமும் பலபல
ஒன்றிய தாக உரைப்பதும் சமுச்சயம்.' – மா. 237

ஒரு பொருளுக்கு ஏற்பட்ட இன்பத்தையோ துன்பத்தையோ ஒன்றொன்றாகக் கூறாது பலபலவாகக் கூறுவது சமுச்சயமாம். இஃது இன்பத்தையே அடுக்கிக் கூறுதல், துன்பத்தையே அடுக்கிக் கூறுதல், இன்பமும் துன்பமும் ஒருவரிடமே இருவயின் பிறந்தனவாகக் கூறுதல் எனப் பலவகைப்படும்.

வரலாறு :

**'கடிது மலர்ப்பாணம், கடிதுஅதனில் தென்றல்,
கொடிது மதி,வேயும் கொடிதால் ; — படிதழைக்கத்
தோன்றிய பாமாறன் துடரியின்மான் இன்உயிரைப்
போற்றுவதுஆர் ? மன்ன ! புகல்.'**

இதனுள், துன்பம் தரும் மலரம்பு, தென்றல், மதிநிலவு, குழலோசை என்பன அடுக்கிக் கூறப்பட்டவாறு.

2 **'அளிக்கும் மகிழ்மாறன் அருள்முகத்தைக் கண்டு**
களிக்குமனம் போலவும்என் கண்.'

இதன்கண் ஒருவரிடமே களிப்பு மனத்திலும் கண்களிலும் ஏற்பட்டனவாகக் கூறப்பட்டுள்ளது. பிறவும் அன்ன.

'களிக்கும் மனம் போலவும் என்கண்' என்ற தொடர் அமைப்பில் புணர்நிலை அணி வந்துள்ளது. (இவ்வணி உவமம் முதலிய பிறவணியோடும் வரும் – பக்கம் 107) *16*

17. தடுமாறுத்தியணி

(*ஒன்றற்கு ஒன்று உதவியணி அந்யோந்யாலங்காரம்*)

'உரைதடு மாறுவது தடுமா றுத்தி.' *– மா. 205*

ஒரு காரணத்தினால் ஒரு காரியம் தோன்றியது எனக் கூறிப் பின் அக்காரியத்தினாலேயே அக்காரணம் தோன்றியது எனக் கூறலாம். இஃது இரு பொருள்களுள் ஒன்றற்கு ஒன்று உதவி செய்தலைக் கூறுவதால் ஒன்றற்கு ஒன்று உதவியணி எனவும்படும்.

'ஒன்றற்கு ஒன்றுஉப கரித்தலை உரைத்தல்
ஒன்றற்கு ஒன்றுஉத விப்பொருள் ஆகும்.' *– மு. வீ. அ. 44*

'ஒன்றற்கு ஒன்றே உதவல்அந் யோந்யம்.' *– ச, 69*

'உதவி ஒன்றுக்குஒன்று உறலைச்சொலல்
ஒன்றினுக் கொன்றுதவி.' *– குவ. அ. 43*

வரலாறு :

'திங்கள்இர வால்விளங்கும், செப்புகதிர்த் திங்களால்
கங்குல் விளங்குமே, காண்.'

இதன்கண் இரவு – காரணம்; திங்கள்விளக்கம் – காரியம்; மீண்டும் திங்கள் ஒளி – காரணம்; இரவு விளக்கம் – காரியம்; இவ்வாறு அமைந்தமை காண்க. *17*

18. தற்குணவணி

(*பிறநின்குணம் பெறல் அணி*)

'ஒருபொருள் குணத்தைமற்று ஒருபொருள் சார்ந்துழிப்
பற்றுதல் தற்குணம் எனப்பகர்ந் தனரே.' *– மா. 134*

'ஒருபொருள் தன்இயல்பு ஒழிந்து பிறிதுஇயல்
கோடல் பிறிதின் குணம்பெறல் அணியே.' – ச. 101

'தன்குணம் நீக்குபு மற்றோர் பொருளினைச் சார்குணத்தை
நன்குற லின்பேர் பிறிதின் குணம்பெறல்.' – குவ. அ. 75

வரலாறு :

**'காமர் திருப்பாற் கடலும் கருங்கடலாம்
நாமம் தனைப்பயிலும், நாடோறும் — பூமடந்தை
சீர்மே னியைத்தழுவும் தேவேசன் நாகணையான்
கார்மேனி வண்ணம் கலந்து.'**

திருமாலின் கருநிற ஒளியால் பாற்கடலும் வெண்மை நிறம் மறைந்து கருங்கடலாயிற்று என்பதன்கண் இவ்வணி காண்க. 18

19. தற்பவ அணி

'யாதுஒரு பொருட்டின்ஒன்று இறந்தது மறித்தும்அவ்
வேதுவிற் பிறந்ததுஎன் பதுவே தற்பவம்.' – மா. 202

ஒரு காரணம் பற்றி நீங்கிய ஒரு பொருள் மீண்டும் அதே காரணத்தால் பிறந்தது என்பது தற்பவ அணியாம்.

வரலாறு :

**'போர்பட்ட வேற்கண் பொருநோக் கினுக்குஇலக்காய்
நேர்பட்டு இறந்த நிறை,மன்னோ - கூர்பட்ட
நேமியான் முட்டத்து நேரிழைதன் நாண்நோக்கின்
காமியா வந்ததுவே காண்.'**

தலைவியின் பொது நோக்கத்தான் நீங்கிய நிறை அவளுடைய சிறப்பு நோக்கத்தால் தன்பால் மீண்டும் வந்து அடைந்தது – என்ற தலைவன் கூற்றில் இவ்வணி அமைந்திருத்தல் காண்க.

இது தொல்லுருப்பெறலணியோடு ஒருபுடை ஒப்புமை உடையது. இது மாறன் அலங்காரத்திலேயே சுட்டப்பட்டுள்ளது. 19

20. திட்டாந்த அணி
(எடுத்துக்காட்டுவமையணி)

'ஒருபொருள் திறம்முதல் குறித்துஒப் புமைகொளத்
தெருள்புரி பிறபொருள் திறமும் செவ்விதின்
அவ்வியல் அகத்துஅறை வதுதிட் டாந்தம்.' – மா. 133

'பிம்பப் பிரதி பிம்பபா வத்தைக்
காட்டுதல் எடுத்துக் காட்டுவ மையது
ஆகும் என்மனார் அறிந்திசி னோரே.' – மு. வீ. அ. 36

'ஒருபொருட்கு ஒருபொருள் உவமை யாக
எடுத்துக் காட்டுவது எடுத்துக்காட் டுவமை
முரண்நிகர் எனஇரு முறைமையது என்ப." – ச. 40

'ஈட்டிரு வாக்கிய வெவ்வே றுதருமம் என்பவற்றால்
ஊட்டுவிம் பப்பி ரதிவிம்ப பாவமுறலே எடுத்துக்
காட்டுவமை.' – கு. வ. அ. 18

ஒன்றற்கொன்று ஒப்புமையான இருபொருள்களை இரண்டு வாக்கியங்களிலே தனித்தனியே சொல்லுதலாம். இது முரண், நிகர் என இருவகைத்து.

வரலாறு :

நிகர் —

'அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.'

முரண் —

'மன்னவநின் நெஞ்சில் சினம்தோன்ற மாநிலத்தில்
ஒன்னலர்தம் கூட்டம் ஒழிந்ததால் — பன்னின்
எதன்அளவும் வெய்யோன் உதயவெற்புஎய் தானே
அதன்அளவும் மேவுமே அல்.'

அரசற்குச் சினம் தோன்றப் பகைக்குழாம் அழிந்தது என்பதற்குக் கதிரவன் தோன்ற இருள் நீங்கிற்று என்ற

ஒப்புமைப்பொருள் கூறாமல் அக்கருத்தை மாற்றிக் கதிரவன் வருமளவும் இருள்மேவும் என்று ஒப்புமை கூறுவதில் முரண் அமைந்துள்ளமை காண்க.

இந்நூல் கூறும் மறுபொருள் உவமை இதனை ஒத்தது. எடுத்துக்காட்டு உவமையில் உபமானத்தையும் உபமேயத்தையும் இணைக்கும் உவமை உருபு வருதல் கூடாது. 20

21. பரிசங்கையணி

(ஒழிந்துக்காட்டணி)

'ஒருதிணைக் கூட்டத்து ஒருபொருள் உயர்த்தும்
பிரிநிலை யதுபீடு உடைபரி சங்கை.' – மா. 231

உயர்திணை அஃறிணைப் பொருள்களில் ஒவ்வொரு தொகுதியைச் சேர்ந்த பல பொருள்களிலும் மிகச் சிறப்புடைய ஒவ்வொன்றை எடுத்துக் கூறுதல் இவ்வணியாம்.

வரலாறு :

'தீர்த்தம் என்பது சிவகங் கையே
ஏத்த ருந்தலம் எழிற்புலி யூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே.'

– சிதம்பரச் செய்யுட் கோவை 45

தீர்த்தம், தலம், மூர்த்தி பலவாக, அவற்றுள் சிறப்பான-வற்றை எடுத்துக் காட்டிய இப்பாடலில் இவ்வணி காண்க.

இவ்வணியிலக்கணத்தைச் சந்திராலோகம் முதலியன வேறாகக் கூறும். ஒழித்துக்காட்டணியை நோக்குக. 21

22. பிரதீப அணி

(எதிர்நிலை அணி)

'உவமையை மதியாது உவமே யந்தனை
திவ்வியம் எனமதிப் பதுபிர தீபம்.' – மா. 217

'மேதகும் உவமையை விலக்கி அப்பொருளேயே
ஓதிமுடிக்கும் உண்மை உவமையும்..................
ஊறில் உவமேயம் உவமையாய் உலகியல்
வேறுபட மாட்டிய விபரீத உவமையும்
சிந்தித்து ஒருவன் சேர்ப்பதுஓர் உவமையை
நிந்தித்து உரைக்கும் நிந்தை உவமையும்
ஒருதலே யாக உவமையை மறுத்துப்
பொருளேயே உவமைசெய் பொதுநீங்கு உவமையும்.'

– இ. வி. பொ. 640

போல்வனவற்றை இது தன்னிடையே கொண்டு அமைந்து இருப்பது.

'குறைவுஒன் றற்குக் கூறுவது எதிர்நிலே.' – ச. 10

'அதுவே,
அல்பொருள் புகழ்பொருள் ஆக்கிக் கூறல்,
புனேவிலி தனேப்புகழ் பொருளெனக் காட்டி
வருணியம் தனேஅவ மதித்தல்,மற்று அதனேயே
மாறத் தொடுத்தல், வருணியத் தோடும்
அல்பொருட்கு ஒப்புமை அன்றுஎனல், புகழில்
பொருள்வீண் என்று புகறல்ஐ வகைத்தே.' – ச. 11

'வழங்குவ மானத்தி னுக்குவ மேயத்தன் மைவிளம்பில்
ஒழுங்குறு நாமம் எதிர்நிலே.' – குவ. 5

'உவமான மாமுவ மேயத்தி ஹறற்புக ழும்பொருளுக்கு
அவமானம் ஓதில் இரண்டாம் எதிர்நிலேயாம்.' – குவ. 6

'புகழுவ மேயத்தி னுலுவ மானப் பொருட்குநிந்தை
பகருவ மேலது மூன்றும் எதிர்நிலே.' – குவ. 7

'புனேவுளி யோடுவ மானத்தி னுக்கொப் புமையிலெனில்
அனேவரும் நான்காம் எதிர்நிலே ஆம்என்பர்.' குவ. 8

'பயனின்மை யையுவ மானத்தி னுக்குப் பகரில்ஐந்தா
கியசொல் எதிர்நிலே.' – குவ. 9

வரலாறு :

1. உபமானத்தை உபமேயம் ஆக்கிக் கூறுதல் :

'திருமுகம் போல்மலரும் செய்ய கமலம்' – பக்கம் 117

2. உபமானத்தை உபமேயமாக்கியதோடு, இயற்கையான உபமேயத்தை இகழ்தல் :

'பாரி ஒருவனும் அல்லன்,
மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே.' – புறநா. 107

3. உபமானத்தை உபமேயம் கொண்டு இகழ்தல் :

'ஆற்ற உறுகொலையில் ஆர்எனக்குஒப்பு என்றுஅந்தோ
கூற்றுவா!நீ வீண்செருக்குக் கொள்கின்றாய்-சாற்றுவல்கேள்!
வெண்திரைசூழ் ஞாலம் மிசைஉனக்குஒப்பு ஆகவே
ஒண்தொடிதன் நீள்விழியும் உண்டு.'

(கொலைவல் கூற்றுவ! தலைவி விழியும் கொலையில் நினக்கு நிகர் – ஆதலின் நீ ஒப்பற்றவன் என்று செருக்குக் கொள்ளாதே) என்பது போல்வன.

4. உபமேயத்துக்கு உபமானம் ஒப்பு அன்று எனல் :

'இறைவி மதுரமொழிக்கு இன்னமுது ஒப்பாம்என்று
அறைவது அபவாதம் ஆம்.'

(தலைவி மொழிக்கு அமுது ஒப்பாகாது) என்பது போல்வன.

5. உபமானம் தேவையற்றது எனல் :

'செங்கயற்கண் ணாய்உன் திருமுகத்தைப் பார்ப்பவர்க்குப்
பங்கயத்தால் உண்டோ பயன்?'

(உன் முகம் இருக்கத் தாமரை தேவையற்றது) என்பது போல்வன. இவ்வாறு இவ்வணி ஐந்து பகுப்புடையது. 22

23. பிரத்தியநீக அணி

(விறல்கோள் அணி)

'ஒரு பொருட்கு ஒருதிறத்து உடைபொருள் மற்றுஅதற்கு
அத்திறத் தினில்ஒப்பு உடைப்பொருள் அதன்மேல்
அமர்விளைப் பதுவே பிரத்திய நீகம்.' – *மா. 135*

'வன்பகைஅன்றி மற்றுஅதன் துணைமேல்
விசயம் கோடல் விறல்கோள் அணியே.' – ச. 84

'வலிய பகைவரைச் சேர்ந்தோர் இடத்து வயம்இயற்று
தலின்பே ரதுவிறல் கோளணி.' – குவ. அ. 58

ஓர் உபமேயத்திற்குத் தோற்ற உபமானம் அத்திறத்தால் அதற்குத் தன்னையொத்த பிறிது ஓர் உபமானத்தின்மேல் அமர் விளைவிப்பதாகக் கூறுவதாம்.

வரலாறு :

**'தேமலர்வா விப்புதுவைச் செல்விமுகப் பொற்பினுக்குத்
தூமதியம் தோற்றதன்பின், தோலாத — காமருசீர்
அந்தா மரைமேல் அமர்விளைக்கும், கங்குலின்கண்
வந்துஆடல் பெற்ற மதி.'**

முகத்துக்குத் தோற்ற மதியம், தன்னை ஒத்து முகத்திற்கு உவமையாகும் தாமரைமேல் போர்விளைக்கும் என்பதன்கண் இவ்வணி காண்க. இது தற்குறிப்பேற்றத்தைச் சார்ந்ததாம். 23

24. பிறவணி

'பொன்னினும் மணியினும் புனைஅணி இகழ்தரு
தன்மையின் பிறவணி சாற்றுதல் பிறவணி.' – மா. 218

புறத்தே அணியும் அணிகலன்களை இகழ்ந்து அவற்றினும் மேதக்க அணிகளைக் குறிப்பிடுவது இவ்வணியாம்.

வரலாறு :

**'கைக்குஅணி ஒன்றுஈகை ; கருத்திற்குஅணி ஞானம் ;
மெய்ச்செவிகட்கு ஏற்றஅணி மேதகுநூல் – உய்த்துஅறிதல்;
சென்னிக்கு அணிமாறன் சேவடிமேற் கொண்டிறைஞ்சல் ;
என்னுக்கு அணிவேறு இனி ?'**

கடகம் தோடு முதலிய புறத்து அணிகளைப் பழித்து, கைக்கு ஈகையும், கருத்திற்கு ஞானமும், செவிக்கு நல்ல உபதேசமும்,

தலைக்கு இறைவழிபாடும் கூறியதன்கண் இவ்வணி அமைந் திருத்தல் காண்க.

இவ்வணி மாறன்அலங்காரத்திலேயே குறிக்கப்பட்டுள்ளது.
24

25. புகழ்வதின் இகழ்தல் அணி
(வஞ்சப்பழிப்பணி)

'மதித்துஒரு பொருளினை வழாதுஉள் ளுறுத்துத்
துதிப்பது போன்றுஇகழ் வதுதுதி நிந்தை.' மா. 229

'சிந்தையால் நிந்தை நேர்படல் வஞ்சப்
பழிப்பென நூலோர் பகர்ந்தனர் என்ப.' ச. 56

'தனிநிந் தையால்நிந் தையேவ ருவதுவஞ் சப்பழிப்பாம்.'
– குவ. அ. 31

வெளிப்படையாகப் புகழ்வது போலக் குறிப்பாகப் பழித்தல் இவ்வணியாம்.

வரலாறு :

'மகவைப்பயந்த
முகுத்தம் புகலும் படிக்குளளி தோளன் முதன்மைக்குஒப்ப
வகுத்துளங்கை என்றுஒரு மங்கையைக் காட்டியும் வாழ்வித்ததே.'

தலைவி தனக்கு மகன் பிறந்த நல்லநேரம் தனக்கு ஒரு தங்கையையும் தந்துவிட்டது என்று பாராட்டுவது போலத் தலைவன் பரத்தையின் தொடர்பு கொண்ட இழிசெயலைப் புலப் படுத்தியதன்கண் இவ்வணி காண்க.

புகழாப் புகழ்ச்சியிலேயே தண்டியார் இதனை அடக்குவர். இலேச அணியுள் இதனை அடக்குதலையும் அவர் குறிப்பிடுவர். இலக்கண விளக்க நூலாரும் அது. 25

26. பூட்டுவில் அணி

'செய்யுள் இறுவாய் எழுவாய் புணர்ந்து
மெய்யுறப் பொருள்நிலை விளக்கல்விற் பூட்டே.' –மா. 175

செய்யுளின் இறுதிச் சொல்லும் முதற்சொல்லும் சேர்ந்தே பொருள்கொள்ள அமையும் பூட்டுவில் பொருள்கோள் ஓர் அலங்காரம் ஆயிற்று. இவ்வணியினை மாறன்அலங்காரமே குறிப்பிடுகிறது.

வரலாறு :

'வருமதற்கு முன்னே மதிட்குருகூர் உட்புக்கு
இருமகிழ்மா றற்குஅடிமை என்னும் — கருமம்இது
மற்றுஒப் பிலாத மதிப்புலவீர்! பாசமுடன்
கொற்றப் பகடுஏறிக் கூற்று.'

இப்பாடலில், கூற்று (இறுதிச் சொல்) வருமதற்கு முன் (முதற்சொல்) சடகோபனை வழிபடுங்கள் என்று பூட்டுவில் பொருள்கோள் அமைந்திருத்தல் காண்க. 26

27. பொருள்மொழி அணி

'ஊதிய மெய்ப்பொருள் உணர்த்தல் பொருள் மொழியாம்.'
— மா. 177

வாழ்க்கைக்கு உரிய உறுதிப் பொருள்களைக் கூறும் வாயுறை வாழ்த்துப் போல்வன இவ்வணியாம்.

வரலாறு :

'இந்த உடல்பெற்று இருக்கப் பெறுபொழுதே
நந்திபுர விண்ணகர மாலைச் — சிந்திப்பார்,
அன்றறிவாம் என்னுது அறம்செய்வார், பேரின்பம்
சென்றுஅறிவார், நெஞ்சே! திடன்.'

திருமாலை வழிபட்டு அறம் செய்து வீடுபேறு அடைவதே உறுதிப் பொருள் என்று குறிப்பிடும் இப்பாடலில் இவ்வணி அமைந்துள்ளமை காண்க. இதனை மாறன்அலங்காரமே குறிப்பிடுகிறது. 27

28. வகை முதல் அடுக்கு அணி

'பொதுப்பட ஒருவகை முதல்அடை புணராது
அடுக்கல் வகைமுதல் அடுக்குஎனத் தகுமே.' –மா. 179

மரம், விலங்கு, புள், மீன், ஊர்வன, மணிகள், பண் முதலிய வகைப் பொருள்களில் ஒரே வகைப் பொருள்களாகத் தொகுத்துக் குறிப்பிடுவது இவ்வணியாம்.

வரலாறு :

'மரவமும் கடம்பும் பனசமும் மருதும்
வடமும் மாதவியும் மாதுளமும்
குரவமும் இலவும் திலகமும் விளவும்
கொன்றையும் செருந்திலும் குமிழும்
அரசும் நாவலும் தான்றியும் அரீதகியும்
ஆமலகமும் நரந்தமும்ஆம்
பிரமும் ஏலமும் சண்பகமும் வேழமும்
சம்பீரமும் தழைந்துஉள ஒருசார்.'

இப்பாடலில் பல மரங்கள் பெயர் அடுக்குக் கூறப்பட்டமை காண்க. இவ்வணி மாறன்அலங்காரத்திலேயே உள்ளது. 28

29. விநோத்தி அணி

(இன்மைநவிற்சியணி)

'முதன்மையது ஆம்ஒரு முக்கியம் பிறிதுஒரு
திதமுறும் முக்கியத் துடன்சே ராதுஎனின்
விதம்உற முக்கியம் அன்றுஎனல் விநோத்தி.' –மா. 236

சிறந்த பொருளொன்று பிறிதொரு சிறந்த பொருளுடன் சேரவில்லையெனின் சிறப்பு உறாது என்பது இவ்வணி.

'புகழ்பொரு ளினொரு பொருள்இன் மையினல்
இழிவுஉயர்வு உறச்சொலல் இன்மை நவிற்சி.' – சு. 47

புகழ்பொருள் பிறிது ஒரு பொருளோடு சேர்க்கை இன்மையால் சிறப்பு உறுது என்றும், சிறப்பு உறும் என்றும் கூறும் இருதிறமும் இவ்வணியாகச் சந்திராலோகம் கூறும். குவலயானந்தமும் அது.

> 'ஏதும்ஒன்று இலாமை யதனால் புனைவுளிக் கேகுறைவு
> கதுவ உரைக்கில் அதுஇன்மை நவிற்சி.' – குவ. அ. 22

> 'புனைவுளி யேதுமொன் றில்லாமையாலுயர் வைப்பொருந்தும்
> அனையதும் அவ்வணி.' – குவ. அ. 22

வரலாறு :

1. **'மறம்கொள் கொடியோர் இலாமையின்,எம் மன்னா!**
   சிறந்துஉளதுஉன் பேரவைசீர் சேர்ந்து.'

எனக் கொடியோர் இலாமையால் சபை உயர்ந்தது என இன்மையால் ஏற்பட்ட உயர்வு கூறப்பட்டது.

2. **'புகழ்க்குரியன் கற்றோன் எனினும் புவியில்**
   இகழ்க்குஉரியன் சாந்தம்இல னேல்.'

சாந்தம் இன்மை கல்விப் பயனாகிய புகழைப் போக்கும் என இன்மையால் ஏற்படும் தாழ்வு கூறப்பட்டவாறு. 29

தொன்னூல் விளக்கம் பொருளணியியலில் சித்திரகவியை உள்ளுறுத்திக் கூறும் 30 அணிகளுள், அமைவணி, சொல் விலக்கணி, விடையில் வினாவணி, வினாவில் விடையணி என்ற நான்கும் நீங்கலான ஏனைய அணிகள் தண்டியலங்காரத்திலும் மாறன்அலங்காரத்திலும் இந்நூலிலும் உள்ளன.

30. அமைவணி

> 'அமைவணி அல்லவும் ஆம்என் றதுபோல்
> சமைந்துமற்று ஒன்றன் தகவுஎழ இயம்பலே.' தொ.வி. 366

அமைவணியாவது பொதுவாக உலகத்தாரால் கூறப்படும் குறை, சிறப்பாக நோக்க நிறைவாகவே அமைவதாகக் கூறுவதாம்.

'மதியின் களங்கம் வனப்புறுத்தும் மாதர்
வதனத் திலக வகை.'

மதியில் களங்கம் என்று பொதுவாகப் பழிக்கப்படும் குறை, மதியம் போன்ற மாதர் வனத்துக்குத் திலகம் அழகு செய்வது போல மதிக்கு அழகு செய்கிறது – என்று கூறற்கண் அமைவணி காண்க. அமைவு — குறையையும் குணமாக அமைத்துக் கோடல். 1

31. சொல்விலக்கு அணி

'சொல்விலக்கு ஒன்றனைச் சொல்லிய பின்அஃது
அல்லென மறுத்தல்போல் அதுமிக விலக்கலே.' 352

வெளிப்படையாகக் கூறுவதனைக் குறிப்பாக மறுப்பது இவ்வணியாம்.

'இரவின் வாரலை, ஐய! விரவுவீ
அகல்அறை வரிக்கும் சாரல்
பகலும் பெறுவைஇவள் தடமென் தோளே.' – கலி. 49

'பகற்குறிக்கு வருக' என்று தோழி தலைவனுக்குக் குறிப்பிடுவாள் போல், குறியிடம் பூக்கள் செறிந்தஇடம் ஆதலின் ஆண்டுப் பூப்பறிக்க வருவாருடைய நடமாட்டத்தால் பகற்குறிக்கும் வாய்ப்பு இல்லை என்றுகூறித் தலைவனை வரைவு கடாவுதற்கண் இவ்வணி அமைந்துள்ளது. இஃது இறைச்சியணி போல்வது. 2

32. வினையில் வினா அணி

'விடையில் வினாவே விடைவேண் டாமையும்
அடையலாரையும் அஃறிணை யவற்றையும்
மனவியப்பு ஆதி வழங்கப் பலகுணம்
வினவினாற் போல விளம்பிய நிலையே.' – தொ. வி. 362

கேட்குந போலவும், கிளக்குந போலவும், இயங்குந போலவும், இயற்றுந போலவும் அஃறிணை மருங்கின் அறைதல் போல்வன இவ்வணியாம்.

'துணையார முயங்கிப்போய்த் துறைசேரும் மடநாராய்!
பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்
கணையார இருவிசும்பில் கடியரணம் பொடிசெய்த
இணையார மார்பன்என் எழில்நலனுண்டு இகழ்வானோ?'

என்ற திருநாவுக்கரசர் தேவாரத்தில் தலைவி நாரையை வினவியதன்கண் இவ்வணி காண்க. 3

33. வினவில் விடைஅணி

'வினவில் விடையே வினவிறு வெனப்பிறர்
மனஉணர்வு உரைத்து மறுஉரை கூறலே.' – தொ. வி. 363

பிறர் வினவாத முன்னும் குறிப்பால் அவர் மனக்கருத்தை அறிந்து விடை கூறுதல் இவ்வணியாம்.

'செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுளன் ஆயின் நன்றுமன் என்றநின்
ஆடுகொள் வரிசைக்கு ஒப்பப்
பாடுவன் மன்னால் பகைவரைக் கடப்பே.' – புறநா. 53

என்று சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை தன்னைப் பாடவந்த பொருந்தில் இளங்கீரனார் கபிலரை ஒப்பப் பாடுவாரா என்று கருதிய கருத்தை உட்கொண்டு பொருந்தில் இளங்கீரனார் பாடிய இப் புறநானூற்றடிகளில் இவ்வணியைக் காண்க. 4

முத்து வீரியம் குறிப்பிடும், அணிகளுள் இலக்கண விளக்கம் குறிப்பிடாத அணிகள் 21. அவற்றை முறையே காண்போம்:

34. அகமலர்ச்சியணி

(உல்லாஸாலங்காரம்)

'ஒன்றன் குணம்குற் றங்களான் வேறுஒன்
றற்குஅவை உளவா தலைஅறி வித்தல்
அகம்மலர்பு என்மனார் அறிந்திசி னோரே.' – மு.வீ.அ. 53

'ஒன்றன் குணம்குற் றங்களான் ஒன்றற்கு
அன்னவை சொலல்அக மலர்ச்சி ; மற்றுஅஃது
உறுகுணம் குற்றம் உறழநால் வகைத்தே.' – ச. 9

'ஒன்றின் குணத்தினைக் குற்றத்தை மற்றொன் றினுக்குரைக்க
நின்றது அகமலர்ச் சிப்பேர் கொளும்.' – குவ. அ. 69

ஒரு பொருளினுடைய குணத்தாலும் குற்றத்தாலும் மற்றொரு பொருளுக்கும் அவை ஏற்படுதலைச் சொல்லுவது அகமலர்ச்சியணியாம். இது குணத்தினால் குணத்தைச் சொல்லுதல், குற்றத்தினால் குற்றத்தைச் சொல்லுதல், குணத்தினால் குற்றத்தைச் சொல்லுதல், குற்றத்தினால் குணத்தைச் சொல்லுதல் என நான்கு வகைப்படும்.

வரலாறு :

1. **'இக்கற் பினன்மூழ்கித் தூய்மைசெயு மோஎனைஎன்று
அக்கங்கை கொள்ளும் அவா.'**

இது கற்பினளின் தூய்மைக்குணத்தால் கங்கையும் தூய்மைக் குணத்தைப் பெறும் – எனக் குணத்தினால் குணத்தைச் சொல்லுதலாம்.

2. **'சினக்கதிர்வேல் வேந்தே! நின் தெவ்வர்மடவார்
வனத்தில் அடைந்து ஓடுங்கால் மாழ்கித் — தனத்தில்உற
வைத்தபெருந் திட்பம்அடி வையாத நான்முகனை
மைத்தவிழி நீர்உகவை வார்.'**

இது பகைவருடைய மனைவிமார்கள் உயிர்தப்பிக் காட்டை நோக்கி ஓடுங்கால் தங்கள் மெல்லிய பாதங்கள் நடத்தல் ஆற்றாது தம் முலையில் வைத்த அழுத்தத்தைப் பாதங்களில் படைக்காத நான்முகனைப் பழித்துக்கொண்டு கண்ணீர்விடுவார் என – பாதங்கள் மென்மையாக அமைந்த குற்றத்தான் அவற்றை அவ்வாறு படைத்த நான்முகனைக் குற்றம் கூறியதாம்,

'நாருத் தகடேபோல் நன்மலர்மேல் பொற்பாவாய்!
நீருய் நிலத்து விளியரோ — வேருய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ; பொன்போலும்
நன்மக்கள் பக்கம் துறந்து.'

இது நன்மக்களை வறுமையில் ஆழ்த்தித் தீயோரைச் செல்வராக்கும் திருமகள் அழிவாளாக – என்று வசை கூறியது. நன்மக்கள் வறுமையிலும் செம்மையாய் வாழும் பெருமைக் குணத்தால் திருமகள் அவர்களை அடையாத குற்றம் இதன்கண் கூறப்பட்டது காண்க.

'கோஅடுவேல் கொற்றவநீ கொல்லாமை விட்டதுவே
சேவகர்க்குப் பேரூ தியம்.'

அரசன் பகைமன்னரைக் கொல்லாமல் விட்டதே அவர்களுக்குச் சிறந்த ஊதியம் – என்பதன்கண் அரசனுடைய கொலைத்தொழிலாகிய குற்றத்தின்கண் புறமுதுகிட்டு ஓடுபவரைக் கொல்லாமையாகிய குணம் குறிப்பிடப்பட்டது காண்க. 1

35. இகழ்ச்சியணி

(அவஞ்ஞாலங்காரம்)

'ஒன்றன் குணம்குற் றங்களான் வேறுஒன்
றற்குஅவை உளஆ காமையைக் கூறல்
இகழ்ச்சி என்மனூர் இயல்புஉணர்ந் தோரே.'

– மு. வீ. அ. 54

'குற்றம் குணங்களான் மற்றுஒன் றற்குஅவை
உளஆ காமை ஓதுதல் இகழ்ச்சி;
இருவகை யாகஅஃது இயையும் என்ப.' - ச. 96

'மற்ருென் றினுக்கும்ஒன் றின்குணம் குற்றம் மருவிலதைச்
சொற்றல் இகழ்ச்சியணி.' – சிவ. அ. 70

ஒன்றன் குணத்திஞல் மற்ருென்றற்கு அக்குணமோ, ஒன்றன் குற்றத்திஞல் மற்ருென்றற்கு அக்குற்றமோ உண்டாகா திருப்பதைச் சொல்லுதல் இகழ்ச்சி அணியாம்.

வரலாறு :

1. 'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி.'

கடல்நீர் பரந்துபட்டிருப்பினும் முகத்தற்கலம் தன் கொள்ளளவு கடல் நீரையே முகத்தல் கூடும் – என்ற இதன்கண், கடலின் பரந்துபட்ட குணம் கொள்கலத்துக்கு வாராமை குறிப்பிடப்பட்டமை காண்க.

2. 'கமலமலர் தற்கண்டு கூம்புதலால் காமர்
அமுதகிர ணற்குஎன் குறைவு?'

அமுதகிரணம் பொழியும் சந்திரனைக் கண்டு பொருது தாமரை குவிந்து கொள்ளும் குற்றத்தினால் சந்திரனுக்குக் குறைவு ஏதும் வாராது – என்ற கருத்துடைய இப்பாடலில், ஒன்றன் குற்றத்தால் மற்றொன்றற்குக் குற்றம் உண்டாகாமை காண்க. 2

36. இன்ப அணி

(பிரஹர்ஷணலங்காரம்)

'முன்னிய காரியம் முயற்சிஇல் லாமல்
சித்திப்பது இன்பம்ஆம் செப்புங் காலே.' – மு. வீ. அ. 51

'விரும்பிய வினைமுயல்பு இன்றி முடிதலும்,
விழைபொருள் தன்னின் மிகுபொருள் அடைதலும்,
உபாய முயற்சியின் பயனே உறுதலும்
எனமுத் திறத்தது இன்ப அணியே.' – ச. 93

'முயலுகை யின்றி அவாவிய காரியம் முற்றுறுதற்கு
இயலும் பெயர்இன் பமேயாம்.' – குவ. அ. 67

'விரும்பி யதிலும் அதிகம் கிடைத்தலும் மேயஅணி.'
– குவ. அ. 67

'கருவி பெறும்பொருட் செய்முயற்சியின்கண் பொருளதுவே
வருவதும் அவ்வணி.' – குவ. அ. 67

முயற்சியின்றி ஒருவன் விரும்பும் காரியம் நிறைவேறுதலும், நினைத்த அளவிற்குமேல் ஒரு செயற்கண் பயன்பெறுதலும், ஒரு காரியத்திற்குரிய வழிதுறைகளைக் காண முயலும்போது அக் காரியமே கைகூடுதலும் என முத்திறமும் சுட்டுவது இன்ப அணியாம்.

வரலாறு :

1. **'தன்நா யகன்விழைந்த தையலையே தூதாக**
அன்னான்கண் உய்த்தாள் அணங்கு.'

இது முயற்சியின்றித் தலைவன் விரும்பிய காரியம் ஈடேறியதைச் சுட்டுவது காண்க.

2. **'மழுங்குவிளக் கைத்தூண்ட மங்கையெழும் போது**
செழுங்கதிர்தோன் றிற்றுஇருள்கால் சீத்து.'

விளக்கு ஒளி வேண்டியபொழுது கதிரவன் ஒளியே தோன்றியது – என்பது நினைத்த அளவிற்குமேல் பயன் பெறுதல் ஆயினவாறு காண்க.

3. **'தங்கு நிதிஅஞ் சனமூ லிகைஅகழ்ந்தோன்**
அங்குநிதி யேகண்டான் அன்று.'

இது புதையல் இருக்கும் இடத்தைக் காணப் பயன்படும் அஞ்சன மூலிகையை அகழ்ந்து எடுத்த இடத்திலேயே புதையலைக் கண்டான் என்று கூறுகிறது. இதன்கண் உபாயம் தேடும் இடத்திலேயே பயனே கிடைத்தமை காண்க.

இவை மூன்றும் இன்ப அணியின் வகைகளாம். *3*

37. உலகவழக்கு நவிற்சி அணி
(லோகோத்தியலங்காரம்)

'உலக வழக்கைத் தழுவி உரைப்பது
உலக வழக்கு நவிற்சி யாகும்.' *மு. வீ. அ. 59*

'உயர்ந்தோர் ஆட்சியின் உற்றசொல் தழுவல்
மன்னிய உலக வழக்கு நவிற்சி.' *ச. 116*

'உலக வழக்கு மொழியை அநுவதித் தேயுரைக்கின்
பலரும் உலக வழக்கு நவிற்சி என்பார்.' – குவ. அ. 90

உலக வழக்குச் சொல்லை மாற்றாது அப்படியே பயன்படுத்திச் செய்யுள் அமைப்பது உலகவழக்கு நவிற்சி அணியாம்.

வரலாறு :

**'அண்ணல்நீ பேசாதுஐந்து ஆறுமா சம்வரையில்
கண்ணைமூ டிக்கொண்டு இரு.'**

செயலற்று வாளா இருப்பதைக் 'கண்ணை மூடிக்கொண்டு இரு' என்ற உலகவழக்கச் சொல்லால் குறிப்பிட்டுள்ளமை இவ்வணியாதல் காண்க. 4

38. ஒழித்துக் காட்டல் அணி

(பரிஸங்க்யாலங்காரம்)

'ஒருபொருள் ஓரிடத்து இலைஎன நீக்கி
வேறுஓர் இடத்துஉளது எனஎடுத்து இயம்பல்
ஒழித்துக் காட்டுஎன உரைக்கப் படுமே.'

– மு. வீ. அ. 48

'ஓர்இடத்து இலதுஎன ஒழித்துஒரு பொருளை
உண்டுஎன மற்றோ ருழிநிய மித்தல்
ஒழித்துக் காட்டுஎன்று உணர்ந்தனர் கொளலே.'

– ச. 79

'பொருளொன்றை ஓர்கண் அகற்றிமற் றோர்கண் பொலியுமதென்று
உரைசெய்த லேஒழித் துக்காட்டு.' – குவ. அ. 50

இவ்வணி இலக்கணம் மாறன் அலங்காரத்தில் வேறாக உள்ளது. (மா. 231. பிற்சேர்க்கை 38 ஆம் பக்கம்)

ஒருபொருள் ஓரிடத்தில் இல்லை என்று நீக்கி அதனைப் பிறிது ஓர் இடத்தில் இருப்பதாகக் கூறுவது ஒழித்துக் காட்டணி.

வரலாறு :

'சிறைபடுவ புட்குலமே அன்றிநின் தேயத்து
இறைவமக் கட்கோ இலே.'

அரசே! உன் நாட்டில் மக்கள் சிறைபடார். (காவலில் வைக்கப்படார்) பறவைகளே சிறைபடுவன. (சிறகுகளை உடையன) சிறைபடுதலே மக்களிடத்து இல்லை என்று ஒழித்துப் பறவை களிடமே சிறைபடுதலை வரையறைத்தது இவ்வணியாம்.

இது சிலேடையணியின் ஒரு கூறுய்ப் பரிசங்கியாலங்காரம் என்ற தனிப் பெயருடையதாயிற்று. 5

39. கூடாமை அணி

(அஸம்பாவாலங்காரம்)

'பேசஅரும் ஒருகா ரியம்பிறப்ப அதனை
அருமை உடையது வாகக் கூறுதல்
கூடாமை என்மனூர் குறிப்புஉணர்ந் தோரே.'
— மு. வீ. அ. 37

'காரியம் அருமையாக் காட்டல்கூ டாமை.' — ச. 62

'அரிதாகும் காரியத் துற்பவம் என்னல்கூ டாமையணி.'
— குவ. அ. 36

ஒரு செயல் நிகழ்ந்ததனைப் பொது அறிவால் நோக்குவார்க்கு மிகவும் அருமை உடையதாகக் கூறுதல் கூடாமை அணியாம்.

வரலாறு :

'அடுக்கலேஓர் கையினுல் ஆயச் சிறுவன்
எடுக்கும்என யார்அறிவார் இங்கு?'

கண்ணன் கோவர்த்தனமலையை எடுத்த அருஞ்செயலைப் பொது அறிவொடு புணர்த்தி அரியசெயலாக உரைத்தவாறு காண்க. 6

40. கூட்ட அணி

(ஸமுச்சயாலங்காரம்)

7. ‘இகல்இன் மையினு லேஒரு காலம்
கூடத் தகும்பொருட் குக்குழாம் கூறல்
கூட்டம் எனப்பெயர் குறிக்கப் படுமே.’ – மு. வீ. அ. 49

‘இகல்இன் று ஒருபொழுது இயையும் பொருளின்
குழுவைக் குறித்தலும் கூடுபல் காரணம்
தம்மில் காரியம் சாற்றலும் கூட்டம்.’ – ச. 81

‘ஒருகாலத் தேகுழுக் கொள்ளும் தொழில்கள் உடன்படவே
தருமாறு கூட்ட அணி.’ – குவ. அ. 55

‘பலகா ரணங்கள் தனித்தனி முக்கியம் பற்றிஒரு
வகைகா ரணத்தை முடித்தலும் அவ்வணி.’ – குவ. அ. 55

இதனை மாறனலங்காரம் வேறாகக் கூறும். – மா. 237

ஒன்றற்கு ஒன்று மாறுபாடின்றித் தொடர்புண்மையால் ஒரு காலத்தில் நிகழத்தக்க பொருள்களின் தொகுப்பைக் கூறுதல் கூட்ட அணி.

வரலாறு :

1. ‘விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயர்உழந்து உயிர்த்தல்
அழுதல் அன்றிமற்று அயல் ஒன்றும் செய்குவது அறியாள்,’
– கம்ப. சுந்தர. காட்சி. 5

இராமற் பிரிந்த காலத்துச் சீதைக்கு நிகழ்ந்தவற்றைத் தொகுத்து உரைத்த இப்பாடற்கண் இவ்வணி நலம் காண்க.

பல காரணங்கள் கூடுதலால் ஒருகாரியம் பிறத்தலை சொல்லுதலும் இவ்வணியாம்.

'குலனும் உருவும் குணமும் திருவும்
நலமும் உயர்கல்வி நயமும் — வலமும்
செருக்கைவிளைக் கின்றனஇச் செம்மற்கு நாளும்
திருக்குஅறுநன் மாண்பில் சேர்ந்து.'

குலன் முதலிய பல காரணங்களால் தலைவன் பெருமிதம் உறுதலாகிய காரியம் விளைந்தமை காண்க. 7

41. சிறப்புநிலை அணி

(விசேஷாலங்காரம்.)

8. 'ஆதாரம் இல்லாது இருப்பவும் ஆதேய
இருப்பை உரைப்பது சிறப்புநிலை ஆகும்.' – மு.வீ.அ. 45

'நிலையின்று ஆதேயம் நிகழத் தொடுத்தல்,
ஏற்றதுஓர் பொருள்பல் இடங்களில் நிற்பக்
காட்டுதல், சிறிய காரியம் செய்வான்
தொடங்கிவேறு அருவினை தோற்றுதல் மூன்று
நிகழ்வது சிறப்பு நிலைஅணி என்ப.' – ச. 70

'ஆயும் பிரசித்தத்து ஆதாரம் இன்றி அதிலுறும்ஆ
தேய மதைவரு ணிக்கும் அதன்பேர் சிறப்புநிலை.'
– குவ. அ. 44

'பலவிடத்து ஓர்பொருள் தன்னை வருணிப் பதும்அவ்வணி.
– குவ. அ. 44

'சிறுகா ரியத்து முயற்சியி னற்பெரி தேயெனச்சொல்
மறுகா ரியங்கிடைக் கின்றதும் அவ்வணி.' – குவ. அ. 44

ஓர் அடிப்படை இல்லாமலேயே செயல் நிகழ்ச்சியைக் கூறுவதும், ஒரு பொருளைப் பல இடங்களில் இருப்பதாகச் சொல்லுவதும், சிறுசெயல் செய்யத் தொடங்கிப் பெருஞ்செயல் ஒன்றனைச் செய்து முடிப்பதும் சிறப்புநிலை அணியாகும். இது தண்டியலங்காரம் முதலியவற்றில் சற்று வேறுபடக் கூறப் பட்டுள்ளது.

வரலாறு :

1. ‘தினகரன்இல் லாமல்அவன் செய்ய கதிர்கள்
இனிதுஇலங்கும் தீபத்து இருந்து.’

இஃது ஒளிக்கு அடிப்படையாகிய சூரியன் இல்லாமலேயே அவன் சிவந்த கிரணங்கள் விளக்கு ஒளியில் காணப்படுகின்றன என்றுகூறி, ஆதாரம் இல்லாமல் ஆதேயம் இருப்பதனைக் குறிப்பிடுகிறது.

2. ஆயிழை நல்லாள் அகம்புறமுன் பின்எங்கும்
மேயஎனக் குத்தோன்று மே.’

இதன்கண் தலைவியாகிய ஒரேபொருளைத் தலைவன் உருவெளியால் அகம், புறம், முன், பின் என்ற பல இடங்களிலும் காண்பது கூறப்பட்டுள்ளது.

3. ‘மாட்சியினிற் காண்பேற்கு வள்ளலே கற்பகநற்
காட்சியும்கிட் டிற்றுஎளிது காண்.’

மன்னனைத் தரிசித்துத் திரும்பவந்த புலவனுக்குப் பரிசிலும் கிட்டியமை இதன்கண் குறிப்பிடப்பட்டிருத்தல் காண்க. 8

42. சிறுமை அணி

(அல்பாலங்காரம்)

‘ஆதே யத்தினும் ஆதா ரத்தைச்
சிறுமை யாகச் செப்புதல் சிறுமை.’ – மு. வீ. அ. 43

‘ஆதே யத்தினும் ஆதாரம் அதனைச்
சிறிதில் சிறிதாச் செப்புதல் சிறுமை.’ – ச. 68

‘நுண்ணிய தாகிய ஆதேயந் தன்னின்நுட் பம்உறவே
நண்ணிய தாம்ஒரு ஆதாரத் தைப்பன்ன லுஞ்சிறுமை.’
– குவ. அ. 42

ஓரிடத்தில் தங்கும் பொருளைவிட அவ்விடத்தைச் சிறியதாகக் கூறுவது சிறுமை அணியாம்.

வரலாறு :

'விரல்ஆழி கைவளையாய் விட்டது,இனி ஆர்த்து
வரல்ஆழிக்கு என்செயும்எம் மாது ?'

தலைவன் பிரிவால் மெலிந்த தலைவிக்கு விரலில் இடும் மோதிரமே இப்பொழுது கைக்கு இடும் வளையாகிவிட்டது. அங்ஙனம் மெலிவுற்ற இவள் கடல் அலை ஒலி கேட்குங்கால் பிரிதல் துன்பத்தைத் தாங்குதல் அரிது.

மோதிரம் கைவளையாயிற்று என்பதன்கண் மோதிரம் ஆகிய சிறிய பொருள் தன்மீது செருகத்தக்க அளவில் கை அதனினும் மெலிவுற்றதாக உள்ளது என்பதன்கண் சிறுமை அணி காண்க. 9

43. தகுதியணி

(ஸமாலங்காரம்)

'தகுதியாம் இருபொருள் தனக்குசம் பந்தம்
அறைவது தகுதிஎன்று அறையப் படுமே.' – மு. வீ. அ. 40

'தகுமிகு பொருள்தொடர் சாற்றுதல், காரியம்
காரணச் செய்கையில் காட்டுதல், கருத்தில்
பொருளடை யாது புரிந்ததை அடைதல்
எனமுப் பாலா இயம்புவர் தகுதி.' – ச. 65

'இசையும் இரண்டு பொருளின் வருணித் தலேதகுதி.'
– குவ. அ. 39

'காரிய மானதைக் காரணத் தோடொப்புக் காண்புகழ்ச்சி
நேரிலும் அவ்வணி.' – குவ. அ. 39

'இச்சைகொண் டேமுயல் கின்ற பயன்குறை வின்றிமுடி
வைச்சொல் வதுமவ் வணியே.' – குவ. அ. 39

தகுதிவாய்ந்த இரு பொருள்களுக்கு உரிய தொடர்பைக் கூறுதல் தகுதி அணியாம். அது தகுதிவாய்ந்த இரு பொருள் தொடர்பு கூறல், காரியத்தை அதன் காரணத்தோடு ஒத்த

செய்கை உடையதாகக் குறிப்பிடல், விரும்பப்படாததை அடையாமல் விரும்பப்பட்டதையே அடைதலாகக் கூறல் என மூவகைப்படும்.

வரலாறு :

1. ‘இந்தத் தரளவடம் ஏந்திழைநின் கொங்கைகளில்
சந்தம்உறச் சேர்தல் தகும்.’

தகுதிவாய்ந்த இருபொருள்களின் தொடர்பு கூறலின் இது முதல்வகை.

2. ‘கானம் தனில்உதித்துஅக் கானம் தனைஅழித்திட்டு
ஊனம்செய் தீயின் உதித்தபுகை — தானும்
எழிலி உருவாகி ஈர்ம்புனலைப் பெய்துஅத்
தழலை அவித்தல் தகும்.’

கானத்தில் தோன்றிய தீ அக்கானகத்தையே அழிப்பது போலத் தீயில் எழுந்த புகை மேகமாகி அத்தீயையே அணைக்கும் என்பது இரண்டாம் வகை ஆதல் காண்க.

3. ‘மாதர்சுவர்க் கத்துநசை வைத்துஅமர்செய் வேந்துஅடைந்தான்
மாதர் சுவர்க்கத்தை மாண்டு.’

மாதர் சுவர்க்கம் – பெண்டிரின் இனிய கூட்டம்.
மாதர் சுவர்க்கம் – விரும்பத்தக்க மேலுலகம்.

பெண் கோடல் நசையால் போரிட்ட மன்னன் இறந்து மேலுலகம் அடைந்தான் என்று பொருள்படும் இப்பாடலில் சிலேடையால் மன்னன் மாதர் சுவர்க்கத்தை விரும்பி மாதர் சுவர்க்கம் அடைந்தான் என விரும்பப்பட்டதை அடைந்தமை சிலேடையான் அமைக்கப்பட்டமை காண்க. 10

44. தகுதியின்மையணி

(விஷமாலங்காரம்)

11. ‘பொருத்தம்இல் பொருட்குத் தான்ஒரு பொருத்தம்
இயம்புவது தகுதி இன்மை ஆகும்.’ – மு. வீ. அ. 39

‘பொருந்தும் தகையில் பொருள்களைப் பொருத்தலும்,
காரணம் அதிற்பகைக் காரியம் பிறத்தலும்,
ஒருவினை தொடங்கி அநிட்டம் உறுதல்,
இட்டா நிட்டம் இரண்டும் அடைதல்,
இட்டம்அடை யாமை எனும்மூ வகையொடு
தரும்முப் பாலாம் தகுதி யின்மை.’ – ச. 64

‘பொருந்தும் தகுதி அமையாப் பொருட்குப் பொருந்துதலும்
இருந்திட வேவரு ணித்தல் தகுதியின் மையணியே.’
– குவ. அ. 38

‘ஏதுவொன் றிற்குணம் வேறுன காரிய மேவரலும்
ஓதிய அவ்வணி.’ – குவ. அ. 38

‘அநுகூலம் கொள்ளத்தொடங்கி அதுமுடி யாமலும்தீங்
கினையே அடைவதும் அவ்வணி.’ – குவ. அ. 38

பொருத்தம் இல்லாத ஒரு பொருளுக்குப் பொருத்தம் கற்பிப்பது தகுதியின்மையணி. அது,

1. பொருத்தமில்லாத பொருளுக்குப் பொருத்தம் கற்பித்தல், 2. ஒரு காரணத்தில் பகைக்குணம் உடைய காரியம் பிறத்தலைச் சொல்லுதல், 3. ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கி விரும்பியதை அடையாது விரும்பாததை அடைதல், 4. விரும்பியதையும் விரும்பாததையும் அடைதல், 5. செய்யத் தொடங்கிய காரியத்தில் விரும்பியதை அடையாமை – என ஐந்து வகைப்படும்.

வரலாறு :

1. **‘பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே**
என்பேதை செல்லற்கு இசைந்தனளே.’

மகட் போக்கிய செவிலித்தாய் தலைவியின் மென்மையையும் பாலையின் வெம்மையையும் பொருத்திக் கண்டது இது.

2. **‘மருவுஏறுழ்நம் கோன்கரிய வாள்வெண் புகழைத்**
தருமால் உலகந் தனில்.’

தலைவனுடைய குருதிக்கறை படிந்து கறுத்த வாள் அவனுக்கு உலகில் வெள்ளிய புகழைத் தருகிறது எனக் கரியபொருள் வெள்ளிய பொருளை உண்டாக்கியது காண்க.

3. **'எலிஉணவிற்று என்றுஉரகப் பெட்டிகறித்து ஆயிற்று**
ஒலிஅரவிற் குத்தான் உணு.'

பாம்பு இருக்கும் பெட்டியை உணவுப்பொருளை உடையது என்று கடித்த எலி தான் விரும்பிய உணவைப் பெறாது தான் விரும்பாதது ஆகிய பாம்பிற்கு உணவாகும் நிலையை அடைந்தது என்பதன்கண் விருப்பம் ஈடேறாது விரும்பாதது நிகழ்ந்தது காண்க.

4. **'பாவை அலர்க்குடைநீ பற்றுதற்கு வாரிசத்தை**
வாவியில்வைத்து அன்றோ வளர்க்கின்றாய் — மேவுகலி
இவ்வுலகு செய்நன்றி எண்ணாது நின்வதனச்
செவ்வியது வௌவல் செயும்.'

ஒரு தலைவி தான் குளத்தில் வளர்த்த தாமரை மலரைக் குடையாகப் பிடித்த அளவில் அஃது அவள் முகத்து அழகை வௌவுகிறது என்ற கருத்தில், மலர்க்குடை பிடித்தலாகிய விரும்பும் செயலும், அது முகஒளியைக் கவர்தலாகிய விரும்பாத செயலும் நிகழ்ந்தமை காண்க.

5. **'இலகு மதிகளங்கம் ஏந்திழையாய்! நீத்தற்கு**
உலகில்உனது ஆனனம்ஆம்; மற்றும் — திலகம்என்பேர்
சேர்களங்க மேபெற்றான், பேதையரைச் சேர்ந்தக்கால்
ஆர்களங்கி ஆகார் அறை.'

சந்திரன் தன் களங்கம் நீங்குதற்குப் பெண்ணின் முகமாகத் தோன்றியும் திலகம் என்ற களங்கத்தைப் பெற்றான் என்ற கருத்தில், களங்கம் நீக்கிக்கொள்ளும் விருப்பம் சந்திரனுக்கு ஈடேறாமை கூறியதும் இவ்வணியின் வகையாம்.

'பேதையரை......ஆகார் அறை' என்ற தொடரையும் சேர்த்து நோக்கின், இப்பாடல் வேற்றுப் பொருள்வைப்பு

அணியின் பாற்படும். அதன்கண் இது சிலேடையின் முடித்தல் என்னும் வகையின் கண்ணதாம். 11

45. துன்ப அணி

(விஷாதநாலங்காரம்)

'கோதுஅற விரும்பும் பொருளைக் குறித்தே
ஏதம்இல் முயற்சி எடுத்துஅதற்கு இகல்பொருள்
அறைவது துன்பம்என்று அறையப் படுமே.'

– மு. வீ. அ. 52

'விழைபொருட்கு இயற்றும் வினையே வேறு
தொடர்பகைப் பொருள்தரல் துன்ப அணியே.' – ச. 94

'இச்சைகொ ளும்பொரு ளைக்குறித் தேசெய்கை யேபுரிய
அச்செயற் குப்பகை யாம்பொருள் சேரு மதுதுன்பம்.'

– குவ. அ. 68

ஒரு பொருளைப் பெறுவதற்காகச் செய்யும் முயற்சியின் பயனாக அதன் பகைப்பொருள் கிடைத்தல் துன்ப அணியாம்.

வரலாறு :

**'சோரும் சுடர்விளக்கைத் தூண்டு கையில்அவிந்தது
ஆரும் இடர்கூர அகத்து.'**

அணையவிருந்த விளக்கை ஒளிவிடச் செய்யத் தூண்டிய காலை அஃது அணைந்தது என்பதன்கண் இவ்வணி காண்க. 12

46. பொதுமையணி

(ஸாமாந்யாலங்காரம்)

13. 'ஓதிய ஒப்புமை யால்இரு பொருட்கு
விசேடம் விளங்காது இருப்பது பொதுமை.'

– மு. வீ. அ. 57

'ஒப்பின் இருபொருட்கு உயர்வுதோன் றாமை
பொதுமை அணிஎனப் புகன்றனர் புலவர்.' – ச. 106

'இருபொரு ளுக்கொப் புமையால் விசேடம் இராதுரைக்க
வருதல் பொதுமை அணியாகும்.' – குவ. அ. 80

ஒப்புமையால் இரண்டு பொருள்களிடையே சிறப்பு உணரப்படாதிருப்பதனைக் குறிப்பிடுதல் பொதுமை அணியாம்.

வரலாறு :

**'வண்பதும வாவி அடைந்தமட வார்வதனம்
பண்பின் அறியப் படா.'**

குளத்தில் குளிக்கும் மகளிர் முகத்திற்கும் தாமரைக்கும் வேறுபாடு தோன்றவில்லை என்ற இதன்கண், ஒப்புமையான தாமரை, முகம் இரண்டனையும் பகுத்தறிவதற்குரிய விசேடம் உணரப்படாதிருப்பது இவ்வணியாம். 13

47. மயக்க அணி

(பிராந்திமதாலங்காரம்)

47. 'ஒப்புமை யால்ஒரு பொருளை மற்றொரு
பொருள்அது ஆகப் புனைவது மயக்க
அணியாம் என்மனர் அறிந்திசி னோரே.' – மு. வீ. அ. 34

'ஒன்றைமற்று ஒன்றுஎன்று ஒப்புமைஅதனால்
அறிதல் மயக்க அணிஎனப் படுமே.' – ச. 17

'மயக்கம் ஒப்புமையால் நிகழின் மயக்கஅணி.' – குவ. 13

ஒப்புமையால் ஒருபொருளை மற்றொரு பொருளாகக் கருதிப் பயன்கொள்ள முயல்வது பற்றிக் கூறுவது மயக்கவணியாம்.

வரலாறு :

**'மழைக்கண் மங்கையர் பயில்தர மரகதமணியின்
இழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்நிலத்து எய்தக்
குழைத்த பைந்தரு நீழலில் குலவும்ஆன் இனங்கள்
தழைத்த புல்என விரைவொடு தனித்தனி கறிக்கும்.'**

செய்குன்றின் பசுமை நிறம் படர்ந்த நிலத்தைப் புல்வெளியாகக் கருதி ஆனினங்கள் புல்மேயத் தொடங்கின என்ற இதன்கண் மயக்க அணி காண்க. *14*

48. மறைவு அணி

(*மீலிதாலங்காரம்*)

15. ‘*பொதுக்குணத் தால்இரு பொருள்களுக்கு உரிய*
வேற்றுமை வெளிப்படாது இருப்பது மறையே.’
– *மு. வீ. அ. 56*

‘*பொதுஇயல் பான்இரு பொருட்கு வேற்றுமை*
தோன்றா ததனைச் சொல்லல் மறைவுஅணி.’ – *ச. 105*

‘*இருபொரு ளுக்குப் பொதுவா கியகுணத் திற்பிரிவே*
தெரிவுற லின்மை மறைவணியாம்.’ – *குவ. அ. 79*

பொதுக்குணம் அமைந்திருக்கும் காரணத்தால் இருபொருள்களுக்கு இடையே வேற்றுமை தோன்றாதிருத்தல் மறைவு அணியாம்.

வரலாறு :

‘பேதம்உறத் தோன்றாதுஇப் பேதைஇயற் கைச்சிவப்பால்
பாதம்உற ஊட்டியசெம் பஞ்சு.’

இயற்கையில் செந்நிறமுடைய இவள் பாதங்களில் செம்பஞ்சு ஊட்டியது புலப்படவில்லை என்பதன்கண் மறைவு அணி காண்க.
15

49. மறையாமை அணி

(*உந்மீலிதாலங்காரம்*)

‘*ஓதும் பொதுக்குணத்து ஒப்புமை உடைய*
இருபொருட்கு ஒருகா ரணத்தால் வேற்றுமை
வெளிப்படல் மறையாமை யாம்விளம் பிடினே.’
– *மு. வீ. அ. 58*

'பொதுக்குணத்து ஒன்றும் பொருள்இரண் டற்குஓர்
ஏதுவான் வேற்றுமை இயம்பல்மறை யாமை.' – ச. 107

'சிலகா ரணத்தில் பிரிவை...... தேரஅறி
தலின்நா மமும்மறை யாமை.' – குவ. அ. 81

பொதுக்குணத்தான் ஒற்றுமை உடைய பொருள்களுக்குள் காரணங்களால் வேற்றுமை தோன்றுவது மறையாமை அணியாம்.

வரலாறு :

'ஒழுகுறும்அருவி ஈட்டம் ஒலியினால், நகுவெண் திங்கள்
பழகுறும் உடல்க ளங்கால், பாகசா தனன்கூர்ங் கோட்டு
மழகளிறு உமிழ்ம தத்தால், மலர்மிசைக் கடவுள் ஊர்தி
அழகுஉறும் நடையால் அன்றி, அறிதரப் படாஅக் குன்றில்.'

கயிலைமலையின் வெள்ளை நிறத்தால் அருவி, சந்திரன், அயிராவதம், அன்னம் என்பன தம் வெள்ளொளி, மலை ஒளியோடு ஒன்றுதலால் நிறம் பற்றிப் பகுத்தறியப்படா ; ஆனால் அருவியை ஒலியாலும், சந்திரனைக் களங்கத்தாலும், அயிராவதத்தை மதத்தாலும், அன்னத்தை நடையாலும் அறியலாம் என்று, பொதுக்குணத்தால் ஒப்புமை உடைய பொருள்களைக் காரணம் காட்டி வேறுபடுத்தற்கண் மறையாமை அணி அமைந்தமை காண்க. 16

50. மாற்றுநிலை அணி

(பரிவிருத்தியலங்காரம்)

'இழிவுஆம் பொருள்கொடுத்து உயர்வா கியபொருள்
வாங்குவ மாற்று நிலைப்பொருள் ஆகும்.' – மு. வீ. அ. 47

'இழிவுஈந்து உயர்வுஉறல் மாற்று நிலையே.' – ச. 78

'குறைவாம்பொருளைக்கொடுத்ததிகப்பொருளைக்கொளலுக்கு
அறைபேரும் மாற்றுநிலை அணி.' – குவ. அ. 52

வரலாறு :

'சடாயு கிழஉடம்பைத் தான்கொடுத்துப் பெற்றான்
கெடாததுஒரு கீர்த்தி உடல்.'

இப்பாடலில் மூத்த பூதஉடலை அழியாத புகழ் உடம்புக்காகச் சடாயு பண்டமாற்றுச் செய்து கொண்டதைக் கூறுவதன்கண், மாற்றுநிலை அணி அமைந்தமை காண்க.

இஃது இந்நூல் கூறும் பரிவருத்தனை அணியின் பாற்படும். (பக்கம் – 326) 17

51. முறையில் படர்ச்சியணி

(பரியாயாலங்காரம்)

'தொன்மையின் ஒருபொருள் தொடர்பவம் பலவயின்
பன்முறை பயின்றது, எனல்பரி யாயம்.' – மா. அ. 199

'அடைவது பற்பல இடந்தனில் ஒருபொருள்
முறையில் படர்ச்சி ஆம்என மொழிப.' – மு. வீ. அ. 46

'பல்லிடங் களினும் படர ஒருபொருள்
புகறல், ஓர் வயின்பல் பொருள்சென்று அடைதல்,
நெறியில் கூறல் முறையில் படர்ச்சி.' – ச. 77

'ஒருபொரு ளுக்கு முறையாப் பலவாய் உறுதலைச்சொல்
வருதல் முறையிற் படர்ச்சி.' – குவ. அ. 51

'ஓரிடத் தேபல் பொருள்முறை யாக உறுமதனைத்
தேரிடச் சொல்வதும் அவ்வணி.' – குவ. அ. 51

முறையாக ஒரு பொருள் பல இடங்களில் சென்று அடைவதையாவது, ஓரிடத்தில் பலபொருள் முறையாகச் சென்று அடைவதையாவது சொல்லுவது முறையில் படர்ச்சி அணியாம்.

வரலாறு :

1. **'நஞ்சமே நீபண்டை நாளில் நதிபதிதன்**
நெஞ்சில்இருந்து ஆங்கதன்பின் நீங்கியே — செஞ்சடிலச்
சங்கரனார் கந்தரத்தில் சார்ந்துஇக் கொடியோர்வாய்
தங்குதிஇக் காலம் தனில்.'

விடம் பண்டு பாற்கடலில் தங்கிப் பின் சிவபெருமான் கழுத்தில் தங்கி இப்போது கொடியோர் வாயில் தங்கி வருகிறது என்பதன்கண், இவ்வணியின் முதல் வகை காண்க.

2. 'முன்நாள் இருவர்க்கும் யாக்கைஒன்றுஆக முயங்கினம்யாம்
பின்நாள் பிரியன் பிரியைஎன்று ஆயினம் பேசல்உறும்
இந்நாள் கணவன் மனைவிஎன்று ஆயினம் எண்ணின்இனிச்
சின்னாளில் எப்படி யோமன்ன நீஇங்குச் செப்புகவே.'

ஈருயிர்கள் முன்னர் ஓர்உடலின் ஈருயிராய் இருந்து, பின் தோழன் தோழி என்ற நிலையில் இருந்து, இப்பொழுது கணவன் மனைவி என்ற நிலையில் உள்ளன என்பதன்கண், ஓரிடத்தில் பலபொருள் முறையாகச் சென்றடைதல் காண்க.

இடம் – உயிர்கள்; பொருள்கள் – தோழன் தோழி, கணவன் மனைவி முதலியன. 18

52. வல்லோர் நவிற்சியணி

(சேகோக்தியலங்காரம்)

'உலக வழக்கத் தொடுவேறு ஒருபொருள்
மனக்கொண்டு இருப்பது வல்லோர் நவிற்சி.' மு. வீ. அ. 60

'மற்றொரு பொருளைஅவ் வழக்குச் சொல்லே
வாய்ப்பக் கோடல் வல்லோர் நவிற்சி.' – ச. 117

'கருத்தொன்றினை உலகச்சொலுள் கொண்டிடக்காணுமதற்கு
இருத்திய பேரது வல்லோர் நவிற்சி.' – குவ. அ. 91

உலகவழக்குச் சொல்லே தன் நேரிய பொருளோடு மற்றொரு பொருளையும் உட்கொண்டிருத்தல் வல்லோர் நவிற்சி அணியாம்.

வரலாறு :

'பரிமலர்ப்பூங் குஞ்சியாய் பாம்பேபாம் பின்கால்
அறியும்உல கத்துஎன்று அறி.'

ஒருவன் தன் நண்பனிடம் மூன்றுமவன் செய்திபற்றிக் கேட்க, நண்பன் பக்கத்திலிருக்கும் நான்காமவன் மூன்றுமவனோடு குணத்தாலும் செயலாலும் ஒத்திருத்தலின் அச்செய்தி அந் நான்காமவனுக்கே நன்கு புலனாயிருக்கும் என்பதை நேர்முகமாகக் கூறாது, 'பாம்பறியும் பாம்பின் கால்' என்ற தொடர் வாயிலாகக் குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளதனால் இப்பாடற்கண் இவ்வணி அமைந்தமை காண்க. 19

53. வியப்பு அணி

(விசித்ராலங்காரம்)

'அரியதுஒரு பயனைப் கருதி அதற்குப்
பகையாம் முயற்சி பணல்வியப் பாகும்.' – மு. வீ. அ. 41

'கருதிஓர் பயனைக் காட்டா ததற்குப்
பகையாம் முயற்சி பண்ணுதல் வியப்பே.' – ச. 66

'கருதும் பயனுக் கெதிராம் முயற்சியைக் கைக்கொடுதான்
புரிதல் வியப்பணி.' – குவ. அ. 40

ஒரு பயனைக் கருதி அதற்குப் பகையாகிய முயற்சியைச் செய்வது வியப்பணி ஆகும்.

வரலாறு :

**'ஓதும் திறத்தில் உயர்ந்தோர்கள் தாழ்குவர்எப்
போதும் உயர்வுஎய்தற் பொருட்டு.'**

உயர்ந்தவர்கள் தம் கல்விச் செருக்கால் பெருமிதம் உற்றிராமல் கல்வி மேன்மேல் வளருவதற்குத் தாம் அடக்கமாகத் தாழ்ந்து இருப்பர் என்ற கருத்தின்கண் வியப்பணி காண்க. 20

54. வேண்டல் அணி

(அநுஞ்யாலங்காரம்)

'குற்றத் தால்குணம் குறுகுதல் நோக்கி
அக்குற் றத்தினை அவாவுதல் வேண்டல்
அணியாம் என்மனார் அறிந்திசி னோரே.' – மு. வீ. அ. 55

'குற்றம் குணம்தரக் கண்டு மற்றஅது
விரும்பிக் கோடல் வேண்டல் அணியே.' – ச. 97

'குற்றத்தி லேகுணம் தோன்றி யிடலைஉட் கொண்டதனை
முற்றக் கருதுதல் வேண்டலணி.' – குவ. அ. 71

குற்றத்தினால் குணம் உண்டாதலைக் குறித்து அக் குற்றமே தம்மை நீங்காதிருக்குமாறு வேண்டுதல் வேண்டல் அணியாம்.

வரலாறு :

'வெண்திருநீறு புனையும்மா தவர்க்கு
விருந்துசெய்து உறுபெரு மிடியும்,
கொண்டநல் விரதத்து இளைக்கும் யாக்கையும்,
கொடியனேற்கு அருளும்நாள் உளதோ?'

வறுமையும், உடல் இளைத்தலும் தீங்கு தருவன. ஆனால் அடியார்க்கு அன்னமிடுவதால் ஏற்படும் வறுமையும், விரதங்களால் உடல் இளைத்தலும் மறுமைக்குப் பேருதியம் ஆதலின் விரும்பிக் கொள்ளத்தக்கன ஆகலான் இத்தகைய வறுமையும் உடல் இளைப்பும் வேண்டுதல் வேண்டல் அணி ஆயினவாறு.

சந்திராலோகம் – தண்டியலங்காரம், மாறன்அலங்காரம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் இவற்றில் குறிப்பிடப்படாத 36 அணிகளைக் குறிப்பிடுகிறது. குவலயானந்தமும் அது. அவற்றை முறையே காண்பாம்.

55. அரதனமாலை அணி

(ரத்நாவளி அலங்காரம்)

'முன்னிய பொருளை முன்பின் முறையின்
வழுவாது உரைத்தல் அரதன மாலை.' – ச. 100

'புகலும் பொருளை முறைவழு வாது புகலுதற்குப்
பகரும் நாமம் இரத்தின மாலை.' – குவ. அ. 74

கவி, தான் சொல்லக்கருதிய பொருளை வரிசையாக மாணிக்கக் கற்கள் மாலையில் பதிக்கப்படுவது போல முறை வழுவாது கூறுதல் அரதனமாலை அணியாம்.

வரலாறு :

'உனதுபிர தாபம் உயிர்இழந்த தெவ்வர்
மனைவியரா னோர்உறுப்பின் மண்ணும் - சினவிழியின்
ஆரமும் நெஞ்சில்தீயும் நாசியில்கா லும்அறிவின்
ஆரும் வெளியுருவும் ஆம்.'

உன்னால் உயிர் துறந்த பகைவர் மனைவியர் தரையில் விழுந்து அழுவதனால், அவர் உடலில் மண்ணும், அழுது சிவந்த விழிகளில் நீரும், நெஞ்சில் துயரக்கனலும், மூக்கில் பெருமூச்சுக் காற்றும், அறிவில் செய்வது அறியாது திகைத்த சூனியமும் பெறுமாறு செய்வதே உனது புகழாகும்.

இப்பாடலில் நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்ற ஐம்பூதங்களும் முறை பிறழாமல் அமைந்தமை இவ்வணியாகும். 1

56. இறைஅணி

(உத்தராலங்காரம்)

'ஒருகருத்து உள்ளுற உரைப்பது மறைப்புஇறை;
வினைஒன் றற்குஅது வேவிடை, பலவாம்
வினவிற்கு ஒருவிடை விளம்பல் வியப்புஇறை.' – ச. 109

'கருத்தொன் றினைமறை வாயுட்கொ ளும்விடை
காட்டல்இறை.' – குவ. அ. 83

ஒரு வினவிற்குத் தான் கூறும் விடையில் ஒரு கருத்து மறைந்து இருக்குமாறு விடைகூறுதல் மறைப்பு இறைஅணியாம். ஒருவினை வினவினற்கு அவ்வினையையே விடையாகவும், பல வினைக் களுக்கு ஒன்றையே விடையாகவும் கூறுவது ஆகிய இரண்டும் வியப்பு இறையணியாம்.

வரலாறு :

தன் தலைவியாகிய மாயையின் இருப்பிடத்தை விடுத்துச் செல்லவேண்டும் என்ற தோழியிடம், அல்லமதேவன் விடைகூறிய

'மாயையை அகன்றால் நடக்கக் கால்எழுமோ
வாயிடை மாற்றம் ஒன்று உண்டோ'

என்ற தொடரில் மாயை என்ற தலைவியைச் சுட்டிக் கூறிய விடையில் மாயாமலம் என்றதன் கருத்தும் அமைந்துள்ளமை மறைப்பு இறையாம்.

'என்பணி பூண்டான் இறைவன்?'

என்ற வினாவிற்கு,

'என்பணி பூண்டான் இறைவன்'

என்பதே விடை.

என்பணி – என்னஅணி? என்பு + அணி – எலும்பாகிய அணி. இது வியப்பு இறையில் முதலாவது.

'மாதவன்கைக் கொள்வதெது? மந்திரம்ஈ சற்குஎது?
காதலுறும் அஞ்சக் கரம்.'

மாதவன் கைக்கொள்வது அம் சக்கரம். ஈசற்கு மந்திரம் அஞ்சு அக்கரம்.

இது வியப்பணியின் இரண்டாம்வகை. 2

57. உய்த்துணர்வு அணி

(ஸூக்ஷ்மாலங்காரம்)

'இவ்வாறு ஆயின் ஈதுஉறும் எனஒரு
காரிய முடிவைக் கருதல்உய்த்து உணர்வே.' – ச. 90

'ஒருகா ரியம்முற்ற இவ்வித மாகில்என் றாகித்திட
வருவதின் பேர்உய்த் துணர்வு.' – குவ. அ. 94

இங்ஙனம் நிகழின் ஒருசெயல் இவ்வாறு முற்றுப்பெறும் என்று, ஒரு காரியம் முடிவதன் முன் அதன் முடிவை அறிவால் கணித்து உணர்வது உய்த்துணரவைப்பு அணியாம்.

வரலாறு :

'சேடுஉறுநம் கோன்புகழைச் சேடன்நவி லத்தொடங்கின்
பீடுறவே முற்றுப் பெறும்.'

நம் அரசன் புகழோ மிகவும் பரந்தது. அதனைத் தனி ஒருவனோ, பலரோ விடாது கூறுதல் இயலாது. ஆயிரம் நாவுடைய ஆதிசேடன் கூறுவானாயின் சிறப்பாக அப்புகழ் முழுதையும் கூறுதல் இயலும் – என்னும் இப்பாடற்கண் இவ்வணி அமைந்துள்ளமை காண்க. 3

58. உறழ்ச்சி அணி

(விகல்பாலங்காரம்)

'நேர்வலி கொளும்இரு நிலையினை விகற்பித்து
அறைதல் உறழ்ச்சி அணியா கும்மே.' – ச. 80

'ஒத்திடு வல்ல இருபொருட் குத்தெவ் உதிக்கவிகற்
பித்தல் உறழ்ச்சி யணியாம்.' – குவ. அ. 54

ஒத்த தகுதியுடைய இரண்டு செய்திகளை விளக்கிச் சுட்டுதல் உறழ்ச்சி அணியாம்.

வரலாறு :

'தலையையே னும்விரைந்துஎம் தார்வேந்தற்கு ஓர்நின்
சிலையையே னும்வளைத்தல் செய்.'

எம் அரசனைத் தலையாரக் கும்பிட்டு வாழ்வைப் பெறுவாய்; இல்லையேல், வில்லை வளைத்துப் போரில் எதிர் ஊன்றற்கு வருவாய் – என்ற கருத்தில், தலையும் சிலையும் ஒத்த தகுதியவாதல் சுட்டப்பட்டவாறு. 4

59. எதிர்மறை அணி

'ஒழிப்பின் வேறாய் உவப்பு அமைந்து ஒளிரும்
மறுப்பைக் கூறல் மறையணி ஆமே.' – ச. 57

'அதுவே, இயம்பிய பொருளை ஏதுவின் மறுத்தல்,
மறுப்பினை நீத்து மற்றுஒரு பொருள்தரல்,
உடம்படு சொல்லான் மறுப்பை உணர்த்தல்
எனமுத் திறத்தது என்மனர் புலவர்.' – ச. 58

'தானுரைத் திட்டதை ஆய்ந்து மறுக்கில் அதன்பெயரே
ஆனது எதிர்மறை.' – குவ. அ. 32

'மறுத்தல் அதுதன் னாலுண்டுமற் றோர்பொருள் வந்திடச்செய்
திறுத்ததும் அவ்வணி.' – குவ. அ. 32

'உடன்பட லேவெளி யாய்விலக் கேமறை வாய்உலவும்
இடமும் அவ்வணி.' – குவ. அ. 32

ஒழிப்பு அணியில் இருந்து மாறுபட்டதாய்க் கேட்போரை மகிழச்செய்வதாய் இருக்கும் மறுப்பைத் தெரிவிக்கும் எதிர்மறை அணி பொருளைக் காரணத்தான் மறுத்தல், மறுப்பினை நீக்கி மற்றொருபொருள் தோன்றச் செய்தல், உடன்பாட்டுச் சொல்லான் மறுப்பை உணர்வித்தல் – என மூன்று வகைப்படும்.

வரலாறு :

1. **'ஒண்கதிர்த் திங்காள்நீ உன்வடிவை இங்குஎமக்குக்
கண்களிகூ ரக்கடிது காட்டுவாய் ; — வண்கவின்கூர்
பூண்தாங்கு கொங்கைஉடைப் பூவைமுகம் உண்டுஅதனால்
வேண்டா ;போ வெற்றுக்கு வீண்.'**

தலைவி முகம் காணும் வாய்ப்புப் பெற்றமையால் சந்திரனின் காட்சியை வேண்டா என மறுத்தமை காண்க.

2. **'தண்நறு வண்டுஅளிசூழ் தாமம்அணி திண்திரள்தோள்
அண்ணலே ! யான்தூதி அல்லேன்காண்; — வண்ணம்மிகு
வேய்எனும்தோ ளாள்மெய் விரகதா பம்வடவைத்
தீஎனவே தோன்றும் செறிந்து.'**

தூதி அல்லேன் என்று மறுப்பினை நீக்கித் தூது செல்வாள் கூறும் செய்தியாகிய தலைவியின் துன்பத்தை விளக்கி உரைத்தமை காண்க.

3. **'வினைபொருள்மேல் அண்ணல் விரும்பினையேல், ஈண்டுஎம்**
கிளைஅழுகை கேட்பதன் முன்னே, — வினைதேன்
புடைஊறு பூந்தார் புனைகழலாய்! போக்கிற்கு
இடையூறு வாராமல் ஏகு.' – *பக்கம்* 211

ஏகு – என்று தலைவன் பிரிவிற்கு உடன்பட்டாள்போலக் கூறுமிடத்துத் 'தலைவி இறந்துபடுதலான் உறவினர் அழுகையைத் தொடங்குதற்கு முன் ஏகு' – என்று கூறுவதன்கண் தலைவன் பிரிவிற்கு மறுப்புத் தோற்றுவித்தவாறு – இது முன்னவிலக்கின் வகையாக இந்நூல் குறிப்பிடும்.

60. கரவுவெளிப்படுப்பு அணி

(*பிஹிதாலங்காரம்*)

'மறைசெயல் அறிந்த மாட்சி தோன்றக்
குறிநிலைச் செய்கை கொண்டுமற்று அதனைக்
காட்சியின் விரித்தல் கரவுவெளிப் படுப்பே.' – *ச.* ***111***

'ஒருவன் மறைசெய்கை ஓர்ந்து கருத்தோ டுறுதொழிலால்
விரவும் அதைவெளி ஆக்கல் கரவு வெளிப்படுப்பாம்.'
– *குவ. அ.* *85*

ஒருவன் மறைவாகச் செய்த செயலை அறிந்த மற்றவன் தான் அம்மறையை அறிந்த செய்தியைத் தான் செய்யும் செயலால் குறிப்பாக வெளிப்படுத்துவது கரவு வெளிப்படுப்பணியாம்.

வரலாறு :

'கடிமனைக்குக் காலைவரு காவலற்குத் துஞ்சும்
படிவிரித்தாள் ஓர்அணங்கு பாய்.'

காலையில் இல்லம் நோக்கி வந்த கணவற்கு உறங்குதற்குத் தலைவி பாயை விரித்தாள் என்பதன்கண் – இராவெல்லாம் அவன் பரத்தையர் இல்லத்துத் துயிலின்றி இருந்த செய்தியைத் தான் அறிந்ததை அவனுக்கு உறங்குதற்கு ஏற்பாடு செய்த தன் செயலால் தலைவி குறிப்பாக வெளிப்படுத்தது இவ்வணியாம். 6

61. கருத்துடை அடைகொளி அணி

(பரிகராங்குராலங்காரம்)

'கருத்தொடு விசேடியம் காட்டுதல் அடைகொளி.' – ச. 50

'நடைகொள் விசேடியந் தானேபுணைந்து நவிலுவதற்கு
உடைஅரு கூலக் கருத்தோ டுறில்அது கருத்துடைய
அடைகொளி.' – குவ. அ. 25

அடைகொளியாயிருக்கும் பொருள் அதன் சொற்பொருளை நோக்குமிடத்துத் தேவைப்பட்டதொரு கருத்தைக் குறிக்கும் ஆற்றலுடையதாய் அமைவது கருத்துடை அடைகொளி அணியாம்.

வரலாறு :

'முக்கணனே அன்புடையார் மும்மலம்நீங் கப்பார்க்கத்
தக்கவனென்று என்நெஞ்சே சார்.'

அடைகொளி – முக்கணன் என்ற சொற்றொடர் அறிவிக்கும் சிவபெருமான். சொற்பொருள் மூன்று கண்களை உடையவன். மூன்று கண்கள் பருதி, மதி, தீ என்பன. ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களையும் சிவபெருமானுடைய மூன்று கண்களின் பார்வையும் நீக்கிவிடும் என்ற கருத்து அத்தொடரில் குறிப்பாய் இருப்பதால், முக்கண்ணன் என்ற பண்புத் தொகை நிலைத்தொடர் கருத்துடை அடைகொளி அணியாய் அமைந்தவாறு. 7

62. கருத்துடை அடைமொழி அணி

(பரிகராலங்காரம்)

'கருத்தொடு பொருந்துஅடை கருத்துடை அணியே.' – ச. 49

'கொண்டவி சேடணத் திற்புனை தற்கநு கூலக்கருத்து
உண்டெனின் நாமம் புகல்வ துகருத் துடையடை.'
– குவ.அ. 24

ஒரு பொருளுக்கு அடையாய் அமைந்த சொல்லோ சொற்றொடரோ கவி கூறக் கருதும் செய்திக்குத் தேவைப்பட்ட கருத்தை உள் அடக்கி அமைந்திருப்பது கருத்துடை அடை மொழியணியாம்.

வரலாறு :

'திங்கள் முடிசேர் சிவன்நுமது தாபத்தை
இங்குஅகற்றி ஆள்க இனிது.'

சிவபெருமான் உங்கள் துயரத்தைப் போக்கி இனிதின் நுங்களை ஆள்வானாக என்ற கருத்திற்கு அமைய, தன் அமுத மயமாய கிரணங்களால் தாபத்தைப் போக்கும் சந்திரனைச் சிவபெருமான் முடியில் அணிந்திருப்பதால் அவன் தான் அணிந்துள்ள சந்திரனின் அமுத கிரணங்களால் தாபத்தை நீக்குவான் என்ற கருத்தை உட்கொள்ளுமாறு 'திங்கள் முடிசேர்' என்ற அடைமொழித் தொடர் அமைந்திருப்பது இவ்வணியாம். 8

63. கற்றோர் நவிற்சி அணி

(ப்ரௌடோக்தியலங்காரம்)

'மிகுதிக் காரணம் மேவா ததனைக்
கருவி ஆக்கல் கற்றோர் நவிற்சி' – ச. 89

'மிகுதிக்குக் காரணம் இல்லதைக் காரணமா விளம்பத்
தகுவது கற்றோர் நவிற்சி.' – குவ. அ. 63

ஒன்றன் சிறப்பை மிகுத்தற்குக் காரணம் ஆகாதது ஒன்றை சிறப்பு மிகுதிக்குக் காரணம் போலச் சொல்லுதல் கற்றோர் நவிற்சி அணியாம்.

வரலாறு :

'தக்கஇவள் கண்யமுனை தன்னில் அலர்குவளை
ஒக்கும் கருமை உள.'

இவள் கண் குவளையை ஒத்த கருமையது என்பதே சாலும். குவளை தோன்றும் இடத்தால் அதன் நிறத்தின்கண் வேறுபாடு தோன்றாது. அங்ஙனம் இருப்பவும் கரிய நீரினை உடைய யமுனையில் தோன்றுவதால் குவளை தன் கருநிறம் மிகுதியாகும் என்று கருதிக் கூறுவதால், 'யமுனை தன்னில் அலர்குவளை' என்பதன்கண் இவ்வணி அமைந்துள்ளமை காண்க. 9

64. காரண ஆராய்ச்சி அணி

(விசேஷோக்தியலங்காரம்)

'எஞ்சாக் காரணம் இருப்பக் காரியம்
பிறவா ததுகா ரணவா ராய்ச்சி.' – ச. 61

'குறைவறு காரணம் மேவியும் காரியம் கொண்டிலதை
அறைவது காரண ஆராய்ச்சி.' – குவ. அ. 35

காரணம் குறைவில்லாது இருந்தும் காரியம் நிகழாததைச் சொல்லுவது காரண ஆராய்ச்சி அணியாம்.

வரலாறு :

'இறைமதனுந் தீபம் எரிவுரு நின்றும்
குறைவிலது நேயம்என்றே கூறு.'

நேயம் – எண்ணெய், விருப்பு என்ற இரு பொருளது. விளக்கு எரிந்துகொண்டிருந்தும் எண்ணெய் குறையாத காரணம் என்னே என்ற பொருளும்,

மன்மதனும் விளக்கு எரிந்துபோன பிறகும், காதல் குறையாது இருக்கும் காரணம் என்னே என்ற பொருளும் இப்பாடற்கண் அமைந்துள்ளன.

காதற்கு உரிய தெய்வமே எரிந்துவிட்டது. இனிக் காதல் தோன்றவே காரணம் இல்லை. ஆனால், உயிரினங்களிடையே, காரணம் இல்லாதிருப்பவும் காரியமாகிய காதல் குறைவின்றி உள்ளது – என்ற கருத்தில் காரண ஆராய்ச்சி அணி அமைந்துள்ளது. 10

65. குறிநிலை அணி

(முத்திராலங்காரம்)

'புகழ்பொருள் உணர்த்தப் புகூஉம் சொற்களால்
கூர்ந்துஅறி பொருளைக் கூறல் குறிநிலை.' – ச. 99

'புகழும் பொருளை உணர்த்தும் உரையின் புலப்படுத்தும்
தகுதிப் பொருளினைக் காட்டல் குறிநிலை.' – குவ. அ. 73

ஒரு பொருளைப் புகழ்ந்து கூறும் சொற்றொடர்களின் அமைப்பில் குறித்து அறிதற்குத் தகுதியான மற்றொரு பொருளும் அமைந்திருப்பது குறிநிலை அணியாம்.

தோழி தலைவனிடம் தலைவியின் இடையையும் பேச்சினையும் துணியில் ஓவியமாக எழுதுதல் இயலாது ஆதலின் அவற்கு மடல் ஏறுதல் இயலாது என்று கூறுவதாக அமையும்,

'மந்தா கினிஅணி வேணிப் பிரான்வெங்கை மன்னவ! நீ
கொந்தார் குழல்மணி மேகலை நூல்நுட்பம் கொள்வதுஎங்ஙன்
சிந்தா மணியும் திருக்கோ வையுமெழு திக்கொளினும்
நந்தா உரையை எழுதல்எவ் வாறு? நவின்றருளே.'

என்ற பாடலில் மணிமேகலை, சிந்தாமணி, திருக்கோவையார் என்ற நூல்களின் பெயர் சொல்லமைப்பில் வந்திருப்பது இவ்வணியாகும். 11

66. சிறப்பணி

(விசேஷாலங்காரம்)

'ஒப்பில் பொதுமை உறும்பொருள் இரண்டற்கு
உயர்வுஒரு காரணத்து உதித்தல் சிறப்பே.' – ச. 108

'சிலகா ரணத்தின் ...விசேடத்தைத் தேரஅறி
தலின் நாமம் சிறப்பு.' – குவ. அ. 82

ஒப்புமையால் ஒரே தகுதியை உடைய இரண்டு பொருள்களுக்குள், ஒரு காரணத்தால் ஒன்றனை மற்றொன்றின் உயர்ந்ததாகக் கூறுவது சிறப்பணியாம்.

**'விதுஎழலும் சோர்வுஉறலால் மின்னார் முகத்தின்
பதுமமலர் வேறு படும்.'**

மகளிர் முகமும் தாமரையும் வடிவழகான் ஒரு தன்மைய எனினும், மதியம் தோன்றிய அளவில் மகளிர்முகம் பழைய அழகுடனேயே இருக்க, தாமரை சோர்ந்து விடுதலால் முகம் தாமரையில் சிறந்தது என்று கூறுவது இவ்வணியாம்.

இவ்வணி வேற்றுமையணியின் வகைகளுள் ஒன்றாகும். 12

67. சுருங்கச் சொல்லல் அணி

(ஸமாஸோக்தியலங்காரம்)

'அடைமொழி ஒப்புமை ஆற்றலின் அல்பொருள்
செய்தி விளங்கப் புகழ்பொருட் செய்தியைச்
சிலேடை பொதுஅடை எனும்இரு திறத்தினும்
தோன்றக் கூறல் சுருங்கச் சொல்லே.' – ச. 48

'ஒரும் அடைமொழி ஒற்றுமை யால்புனை வுள்ளிவ்வ
காரம் புனைவிலி யின்விவ காரத்தைக் காட்டிலதன்
பேரும் சுருங்கச் சொலல்.' – குவ. அ. 23

'புனைவுளி மேலடைச் சொல்லொற் றுமையில் புனைவிலியா
நினைவது மேமறை வாகி விளங்கி நிகழ்த்தவரில்
வனையும் பெயர்சுருங் கச்சொலல் என்று வகுத்தனால்
அனைவரும் தேர்வித்தி யாநாதன் என்னும் அருங்கவியே.'
– குவ. அ. 23

ஒரு பொருளுக்கு வழங்கப்பட்ட அடைமொழிகள், ஒப்புமையாகும் ஆற்றலால், பிறிதொரு பொருளையும் சிலேடையால் ஆவது, பொதுவாய் இருக்கும் தன்மையாலாவது குறிப்பிடல் சுருங்கச் சொல்லல் அணியாம்.

வரலாறு :

‘இந்தக்கன்னி மதிமுழுநோக் கெய்திச் செவ்வாய் வலிஅடைந்து
சந்தச்சிங்கம் தனைஅடுத்த தக்க அரவின் வலிசார்ந்து
முந்தைக் கொடிமீ னத்தலைவன் முனிவர்ஆகும் பகைவெல்லக்
கந்தப் பகழி பலவேழக் கருப்புச் சிலையில் தொடுத்தனனால்.’

மாயை பருவம் எய்திய அளவில் பார்வையில் கள்ளமும் மொழியில் கவர்ச்சியும் இடைநொசிவும் அல்குல் வளர்ச்சியும் நிரம்பப்பெறவே, இவளைக்கொண்டு மன்மதன் முனிவரை வெல்வதற்கு அம்பு தொடுத்தான். சிங்கம் – இடை; அரவு – அல்குல் – என்பது நேர்பொருள். இதன்கண் – கன்னி, மதி, செவ்வாய், சிங்கம், அரவு என்ற இராசி கோள்கள் இவற்றின் கோசார பலம் பார்த்து நாட்கொண்டு போருக்குச் செல்லும் செய்தியும் சுட்டப்பட்டமை இவ்வணியாம். இது சிலேடை. 13

68. தன்குணம் மிகை அணி

(அநுகுணலங்காரம்)

‘தன்னுடை இயற்கைத் தன்மைமற்று ஒன்றின்
சார்பான் மிக்குஉறல் தன்குணம் மிகையே.’ – ச. 104

‘வேறுபொருளின் புணர்ப்பால் இயற்குணம் மேன்மையுறல்
கூறுவதேதன் குணம்மிகை ஆகும்.’ – குவ. அ. 78

ஒரு பொருளின் இயற்கைப் பண்பு மற்றொன்றின் சார்பினால் மேம்பட்டுத்தோன்றுவதைக் கூறுவது தன்குணம்மிகை அணியாம்.

வரலாறு :

‘வார்செவிசேர் காவிமலர், மான்அனையாய்! நின்கடைக்கண்
பார்வையினால் மிக்க, கரும் பண்பு.’

தலைவியின் கடைக் கண்கள் காதளவும் நீண்டுள்ளன. அவள் காதில் அணிந்திருக்கும் கருநிறத்தது ஆகிய காவிமலர் அவள் கடைக்கண் பார்வையால் கருநிறம் பண்டையினும் மிகுதியாகச் செறிந்து காணப்படுகிறது என்று குறிப்பிடுவது தன்குணம் மிகை அணியாம். 14

69. திரிபு அணி

(பரிணமாலங்காரம்)

'அன்றுறும் செய்கையில் ஆம்பயன் கொள்ளப்
புனைவிப் பொருள்தான் புனைவுளி உருக்கொடு
பரிணமித் திடுதல் பரிணமம் என்ப.' – ச. 14

'செப்புவ மானம் உவமேய மாகத் திரிந்துதொழி
லைப்பய னுக்கொ ளவந்தால் திரிபணி யாகும்......' – குவ. 6

வரலாறு :

**'செய்ய அடிக்கமலத் தாலத் திருந்திழையாள்
பைய நடந்தனளே பார்.'**

என்ற இப்பாடலில் கமலமாகிய உபமானம் அடியாகிய உபமேயத்தின் செய்கையாகிய நடத்தலுக்குப் பயன்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை இவ்வணியாதல் காண்க. 15

70. தொடர்நிலைச் செய்யுட்பொருட்பேறணி

(காவ்யார்த்தாபத்தியலங்காரம்)

'பொருள்ஒன்று உரைக்கத் தண்டா பூபிகை
வழக்கான் மற்றொரு வண்பொருள் தோன்றல்
தொடர்நிலை செய்யுட் பொருட்பேறு அணியே.' – ச. 85

'ஒருபொருள் கூறியெனச்,சொல வேண்டுமென் றொன்றின்சித்தி
மருவின் தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணி.'
– குவ. அ. 59

ஒரு பொருளைக் கூறிய அளவில் தண்டாபூபிகா நியாயத்தால் அதனெடு தொடர்புடைய மற்றொரு பொருளும் புலனுவது தொடர் நிலைச் செய்யுட் பொருட் பேறணியாம்.

தண்டம் – கோல்; அபூபம் – அப்பம். கோலின் நுனியில் அப்பம் முட்டையாகக் கட்டிவைக்கப்பட்டிருக்க, அக்கோலை அபகரித்தால் அதனுடன் அப்ப முட்டையும் அபகரிக்கப்பட்ட செயல் போல்வது தண்டாபூபிகா நியாயமாம்.

வரலாறு :

'மங்கைமுகம் திங்களையே வாட்டிற்று; அறைகுவதுஎன் ?
பங்கயமென் போதுபடும் பாடு.'

சந்திரன் தாமரையைக் கூம்பச் செய்வது. சந்திரனே தலைவி முகம் கண்டு வாடியது எனவே, அதற்கு வாடும் தாமரை வாடி விடுவது கூருமலே போதருவது இவ்வணியாம். 16

71. தொடர்முழுது உவமை அணி

(தொடர்முற்றுவமையணி – பிரதிவஸ்தூபமாலங்காரம்)

'ஒப்புமை இருபால் வைப்பது தொடர்முழுது
உவமை; முரண்நிகர் எனஇரு வகைத்தே.' – ச. 39

'இருவாக் கியக்குத் தருமத்தின் ஒற்றுமை யேமுடிக்க
வருவ தனித்தனி யேல் தொடர் முற்றுவமை.'
– குவ. அ. 17

இரண்டு வாக்கியங்களில் பொதுவான இரண்டு உலகியல் நிகழ்ச்சிகளைக் கூறுவது தொடர்முழுதுவமையணியாம். அது ஒப்பு, முரண் என இருவகைப்பட்டு வரும்.

வரலாறு :

1. **'தாபத்தி னல்விளங்கும் வெய்யோன்; தராபதிநீள்**
சாபத்தி னல்விளங்கும் தான்.'

சூரியன் வெப்பத்தால் விளங்குவான் ; அரசன் வில்லாற்றலால் விளங்குவான் – என ஒப்புமையான இருபொருள்கள் பண்பு பற்றிச் சுட்டப்பட்டவாறு.

2. **'கற்றேன் அருமை கற்றே னேஅறியும் வந்திமகப்**
பெற்றேள் அருமைஅறி யாள்.'

கற்றவனின் சிறப்பைக் கற்றேனே அறிவான் ; மலடி மகப் பெற்றவளுடைய அருமை அறியாள்.

அறிபவருடைய பண்பிற்கு அடுத்து அறியாதவருடைய பண்பைப் பொருத்திக்கூறுவது முரண்பட்ட இருபொருட் பண்பு சுட்டப்பட்டதற்கு எடுத்துக்காட்டு. 17

72. தொல்உருப் பெறல் அணி

(பூர்வரூபாலங்காரம்)

'ஒன்றுமற்று ஒன்றின் உறுகுணம் பெறினும்
மீட்டும் தன்குணம் மேவலும், விகாரம்அஃது
அடையினும் முன்நிலை அடைதலும் என்று
தொல்உருப் பெறல்அணி சொல்இரு வகைத்தே.'–ச. 102

'ஒன்றுமற்றென்றின் குணங்கொண்டு மீட்டுமுன் உள்ளகுணம்
நன்றுற லேதொல் லுருப்பெறல்.' – குவ. அ. 76

'ஒருபொருள் வேற்றுமை யாயும் பழைமைய தேயுறப்ப·
கருவதும் அவ்வணி.' – குவ. அ. 76

ஒருபொருள் தற்காலிகமாகப் பிறிது ஒன்றன் குணத்தைப் பெற்றிருந்தும் மீண்டும் தன் பழைய பண்பையே பெறுதலைச் சொல்லுதலும், ஒரு பொருள் வேறுபாடு அடைந்த காலத்தும் தன் பழைய பண்பு மாறுமல் பெற்றிருத்தலைச் சொல்லுவதும் தொல்லுருப்பெறலணியாம். இது சிலேடையின் வருதலும் உண்டு.

வரலாறு :

1. **'நித்தன் களக்கறையான் நீல்உருக்கொள் சேடன்உன்சீர்**
உற்றடைந்தான் தன்முன் உரு.'

சிவபெருமான் நீலகண்டத்தினால் பழைய நிறம் மாறி நீலநிறம் கொண்ட ஆதிசேடன், உன் புகழ் கூறியதனால் புகழுக்கு உரிய வெள்ளை நிறம் படரத் தன் பழைய நிறம் பெற்றுவிட்டான் என்பது முதல் வகை.

2. **'வளியால் விளக்குஅவிந்தும், மாதுஉளத்தின் நாணம்**
ஒளிமே கலைசெயலால் உண்டு.'

வெளிச்சத்தில் கணவனைக் கூடுவதற்கு நாணிய தலைவி, காற்றால் விளக்கு அணைந்த பின்னும் தன் மேகலையின் ஒளியைக் கண்டு அவ்வொளியில் கணவனைக் கூடுதற்கு நாணினாள் என்பது இரண்டாம் வகை.

3. **'நின்னொடு முரணிய நிருபர்நாடு அழிந்தும்**
அரசுகள் உறையிடத்து அரசுகள் உறையும்
மாவினம் பொருந்திடம் மாவினம் பொருந்தும்
அத்திகள் வாழிடத்து அத்திகள் வாழும்.'

அரசு – மன்னர், அரசமரம்.

மா – மாமரம் விலங்குகள்.

அத்தி – யானை, அத்திமரம்.

இது சிலேடையின் அமைந்ததற்கு எடுத்துக்காட்டு. *18*

73. நிகழ்வின் நவிற்சி அணி

(*பாவிகாலங்காரம்*)

19. *'இறப்பின் எதிர்வின் இயன்றதை ஆங்கே*
நிகழ்வது ஆக்கல் நிகழ்வின் நவிற்சி.' *– ச. 120*

'நடந்ததையேனும் நடப்பதை யேனும்தன் முன்னின்நடந்
திடுகின்ற தென்னல் நிகழ்வின் நவிற்சி.' *– குவ. அ. 94*

முன்பு நடந்த நிகழ்ச்சியையாவது இனிமேல் நடக்கப் போகின்ற நிகழ்ச்சியையாவது அப்பொழுது நடப்பதைப் போலக் கூறுவது நிகழ்வின் நவிற்சியாம்.

வரலாறு :

'பிரிவுஉணர்ந்த அக்காலப் பேதைவிழிக் கஞ்சம்
சொரிதரளம், யான்தூர நாட்டில் — மருவல்உறும்
இப்போதும் காண்கின்றேன், என்செய்கோ? இங்குஇதற்குத்
துப்புஒது தோழ!நீ கூறு.'

பிரிந்த காலத்துத் தலைவி கண்ணும் கண்ணீருமாக விடை கொடுத்த காட்சி, தலைவன் அவளைப் பிரிந்து சேய்மைக்கண் சென்று தங்கியிருந்த காலத்தும் உருவெளியாகக் காட்சி வழங்கிக் கொண்டிருந்த நிகழ்ச்சியைத் தலைவன் தன் தோழனுக்குக் கூறியது இவ்வணியாம். 19

74. நினைப்பு அணி
(ஸ்மிருதிமதாலங்காரம்)

'ஒருபொரு ளினைக்கண்டு ஒப்புமைத் திறனுன்,
மற்றொரு பொருளினை மனத்துஉனல் நினைப்பே.' – ச. 16

'நினைவு ஒப்புமையால் நிகழின் நினைப்பு அணி.' – குவ. 8

வரலாறு :

'காதலுறு கஞ்சமலர் கண்ட எனதுமனம்
கோதைமுகம் தன்னைநினைக் கும்.'

என்ற இப்பாடலில் தாமரையைக் கண்டு மனம் தலைவி முகத்தை நினைக்கும் என்று கூறுவது நினைப்பு அணியாகும். 20

75. பிரிநிலை நவிற்சி அணி
(நிருக்தியலங்காரம்)

21. 'அறைந்த பெயர்ச்சொற்கு ஆற்றலின் மற்றொரு
பொருள்வகுத்து உரைத்தல் பிரிநிலை நவிற்சி.' – ச. 123

'ஒருபொருட் சொற்கொரு காரணம் பற்றிமற் றோர்பொருளைத்
தருமது தான்பி ரிநிலை நவிற்சி.' – குவ. அ. 97

ஒரு பெயர்ச்சொல்லுக்கு இயற்கையாக உள்ள பொருளை விடுத்து அதன் உறுப்புக்களைப் பிரித்து பிறிது ஒருபொருளும் சுட்டுவது பிரிநிலை நவிற்சி அணியாம்.

வரலாறு :

'நலரைஇலர் ஆக்குபழி நண்ணுதலால், வேத!
அலரவன்என்று உன்னைஅறை வார்.'

திருமாலின் உந்தியந்தாமரையில் உதித்த காரணத்தால் பூவிலிருந்து தோன்றியவன் என்ற பொருளில் பிரமன் அலரவன் என்று குறிப்பிடப்படுகிறான். நற்பண்பு உடைய சான்றோர்களைச் செல்வம் இலராகச் செய்யும் பழி பொருந்தியிருப்பதால் பழிச் சொற்கு உரியவன் என்ற பொருளில் பிரமனுக்கு அலரவன் என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுவதன்கண் பிரிநிலை நவிற்சியணி அமைந்துள்ளமை காண்க. 21

76. பிறிதின்குணம் பெருமை அணி, பெறல் அணி
(அதத்குணலங்காரம், தத்குணலங்காரம்)

'தன்னொடு சார்பிறி தின்இயல் பெருமை
பிறிதுஇல் குணம்எனப் பேசினர் புலவர்.' – ச. 103

'தன்னுடன் சேர்பொரு ளின்குணம் பெற்றில தாயிருக்கப்
பன்னுதல் பேர்பிறி தின்குணப் பேறின்மை.' – குவ. அ. 77

வரலாறு :

'புனைகழற்கால் நங்கோன் புகழ்திசைவே ழங்கள்
நனைமதத்தில் தோய்ந்தும் நயவார் — மனைவியர்வாள்
கண்மை அறத்துடைத்தும் காமர் மதிபோல
வெண்மையுடைத் தாய்விளங்கு மே.'

77 – 78

என்ற இப்பாடலில் பகைவர்களை அறவென்று எண்டிசையும் கைப்பற்றிய மன்னனுடைய புகழ், திசையானைகளின் மதநீரில் தோய்ந்தபோதும் பகை மன்னர் தேவியர்களின் கண்களிற் றீட்டிய மையினைத் துடைத்தபோதும் மதநீரின் நிறத்தையோ, மையின் நிறத்தையோ தான் ஏலாமல் தனக்கு இயல்பாயுள்ள வெண்மை நிறத்தோடேயே விளங்கும் என்று குறிப்பிட்டுள்ளதில் பிறிதின் குணம் பெறுமையைக் காண்க. தன் குணத்தை இழந்து பிறிதின் குணத்தைப் பெறுவது இதன் மறுதலையாய பிறிதின் குணம் பெறலணி. மூக்குஅணிமுத்து இதழ் நிறத்தால் பதுமராகம் ஆயிற்று என்பது போல்வது இவ்வணியாம். 22

77. பின்வருவிளக்கு அணி

(ஆவர்த்திதீபகாலங்காரம்)

'சொல்லும் பொருளும் சொல்லொடு பொருளும்
வாக்கியப் பின்னரும் வருவது பின்வரு
விளக்கு;அது மூன்று விரியும் என்ப.' – ச. 38

'முனமார் விளக்கணி மேவுதரும முடிவுதனித்
தனியே வரின்பின் வருவிளக் காம்;அது தானும்சொலால்,
கனிவா கியபொரு ளால்,அவ் விரண்டும் கதுவுதலால்
இனிமூன் றெனவரும் எட்ட புரம்வளர் இந்திரனே.'
– குவ. அ. 16

இதனைத் இந்நூல் பின்வருநிலை அணி என்னும். (பக்கம் 198) முன் வாக்கியத்தில் வந்த விளக்கச் சொல்லோ, பொருளோ, இரண்டுமோ பின் வாக்கியங்களிலும் வருதல் பின்வரு விளக்கணியாம்.

சொல் பின்வருவிளக்கு

**'மாறன்அழுங் கம்பெய்யும் மான்கணமுங் கம்பெய்யும்
வீரன்இன்று வாரா விடின்.'**

மாறன் அழுங்கு அம்பு எய்யும்; மான்கண் அழும், கம்பெய்யும்; — அழுங்கம் பெய்யும் என்ற சொற்றொடர் பின்னும் வந்தவாறு.

பொருள் பின்வருநிலை

அவிழ்ந்தன தோன்றி, அலர்ந்தன காயா,
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை, — மகிழ்ந்துஇதழ்
விண்டன கொன்றை, விரிந்த கருவிளை,
கொண்டனசெங் காந்தள் குலை.' – பக்கம் 200

மலர்தல் என்ற பொருளில் அவிழ்தல், அலர்தல், முகை நெகிழ்தல், இதழ்விள்ளல், விரிதல், குலைகொள்ளல் என்ற சொற்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்தவாறு.

சொல்பொருள் பின்வருவிளக்கு

'மகிழ்ந்த நெடுஞ்சா தகம், மகிழ்ந்த தோகை
புகழ்ந்திடுகார் வானெழுந்த போது.'

மகிழ்ந்த என்ற சொல்லும் அதன் பொருளும் மீண்டும் வந்தவாறு.

இந்நூலில் உபமானப் பொருட் பின்வருநிலையும் கூறப் பட்டுள்ளமை காண்க. (பக்கம் – 201) 23

78. புனைவிலி புகழ்ச்சி அணி

(அப்ரஸ்துதப்ரஸம்ஸாலங்காரம்)

*'பல்பொருள் தரூஉம்பல் பதங்கள் புணர்த்துச்
சொல்வது பல்பொருள் சொற்றொடர் அணி; அது
புனைவுளி புனைவிலி இருமைமு வகைத்தே.'* – *51*

*'புனைவிலி தன்னைப் புனையும் தொடர்பால்
புகழ்பொருள் புலப்படல் புனைவிலி புகழ்ச்சி;
ஒப்புமை பொதுமை சிறப்பே காரணம்
காரியம் எனஐந்து ஆகும் அதுவே.'* – *ச. 52*

'அவரு ணியவர லாற்றல் வருணிபத் தாம்வரலாறு
இவரில் அதுபுனை வில்லிப் புகழ்ச்சி.' – குவ. அ. 27

'காரியம் காரண மேனும் பொதுச்சிறப் பேனும்கவி
தேரும் வருணிய மாங்கண்மற் றொன்றினைச் செப்புவதால்
ஓரும் வருணியம் ஒப்புடை யாகமற் றோர்ஒப்புமை
சார உரைத்தலி னல்இவ் வணியுமைந் தாய்வருமே.'
– குவ. அ. 27

பல்பொருள் சொற்றொடரணி – புனைவிலி புகழ்ச்சியணி, புனைவுளி புகழ்ச்சியணி என இருவகைப்படும். புனைவிலி – உபமானம்; புனைவுளி – உபமேயம்.

உபமானத்தை வருணித்த அளவில் அதன் தொடர்பால் உபமேயச் செய்தி புலப்படச் செய்வது புனைவிலி புகழ்ச்சியாம். அஃது ஒப்புமைப் புனைவிலி புகழ்ச்சி, பொதுப்புனைவிலி புகழ்ச்சி, சிறப்புப் புனைவிலி புகழ்ச்சி, காரணப் புனைவிலி புகழ்ச்சி, காரியப் புனைவிலி புகழ்ச்சி என ஐந்து வகைப்படும்.

வரலாறு :

1. ஒப்புமைப் புனைவிலி புகழ்ச்சி

உபமானத்தின் ஒப்புமையால் ஒத்ததோர் உபமேயம் கொள்ளப்படுதல்.

**'மேதகுசீர்க் காரைஅன்றி வேறுஒன் றையும்இரவா
சாதகமே புள்ளில் தலை.'**

சாதகப்புள் மேகம் ஒன்றையே நோக்கியிருப்பது போல மன்னன் ஒருவனையன்றிப் பிறன் யாவனிடத்தும் சென்று இரவாத இரவலன் இயல்பு கொள்ளப்பட்டது. இவ்வணி ஒட்டணியுள் அடங்கும்.

2. பொதுப் புனைவிலி புகழ்ச்சி

உபமானமான பொதுப் பொருளால் உபமேயமாகிய சிறப்புப் பொருள் புலனாவது :

**'மைந்த ! கேள் ! கல்வி வளமுணரா மாந்தரெலாம்
அந்தகரே யாவர், அவர்வடிவில் – சந்தம்
தவழ்திரைகள் ஆர்த்தெழூஉம் தண்கடல்சூழ் வையத்து
அவிழ்முருக்கம் பூவின்நிற மாம்.'**

கல்வியிலார் குருடர்; அவர் வடிவழகு மணமில்லா முருக்கம் பூவின் சிறப்பில்லா அழகே – என்ற தந்தை கூற்றில் உபமானப் பொருள்களால் கல்வி நலனே கண்ணுடையவராக்கும்; கல்வி வனப்பே சிறப்பான வனப்பைத் தரும் என்ற உபமேயப் பொருள்கள் புலனாக்கப்பட்டவாறு.

3. சிறப்புப் புனைவிலி புகழ்ச்சி

உபமானமாகிய சிறப்புப் பொருளால் உபமேயமாகிய பொதுப் பொருள் தோன்றுதல்:

'மன்னும் மிருகமதைத் தாங்கும் மதிகளங்கன்
என்னும் பெயர்கொண்டு இழிவுற்றான் – பன்மிருகக்
கூட்டங்கொள் சீயம்மிடல் கொள்மிருக ராசனெனப்
பீட்டினொடு கொண்டதொரு பேர்.'

மானாகிய மிருகம் ஒன்றனைத் தாங்கிய மதி களங்கன் எனப் பழி பெற்றான். ஆனால் பல மிருகங்களின் கூட்டத்தைக் கொண்ட வலிய சிங்கம் மிருகராஜன் எனப் புகழ்பெற்றது – என்ற உபமானத்தால் கொடியவன் புகழடைவான் என்ற உபமேய மாகிய பொதுப்பொருள் புலனாயவாறு.

4. காரணப் புனைவிலி புகழ்ச்சி

உபமானமாகிய காரணத்தால் உவமேயமாகிய காரியம் தோன்றுதல்:

'ஒழுகுஒளி விரிந்தகதிர்மணி வண்ணன்
உந்தியந் தாமரை வந்தோன்
முழுமதிக் கலையுள் நிறைந்த பேரழகை
மொண்டுகொண்டு அரிபரந்து அகன்ற
மழைமதர் நெடுங்கண் தமயந்தி வதனம் வகுத்தனன்.'

சந்திரனுடைய கலைகளின் பேரழகாகிய காரணத்தைக் கொண்டு தமயந்தி முகமாகிய காரியம் நிகழ்த்தப்பட்டவாறு.

5. காரியப் புனைவிலி புகழ்ச்சி

உபமானமாகிய காரியத்தால் உபமேயமாகிய காரணம் தோன்றுதல் :

**'மருக்கழ்பூங் கோதை மடநடையைக் காணில்
செருக்கடையாது அன்னத் திரள்.'**

இப்பெண்ணின் நடையைக் காணின் நடைக்கு உபமானமாகும் அன்னக்கூட்டம் செருக்குறாது. என உபமானமாகிய அன்னக் கூட்டம் கருவப்படாமையாகிய காரியத்தினன் பெண்ணின் நடையழகாகிய காரணம் ஆகும் உவமேயம் புலப்பட்டவாறு : 23

79. புனைவுளி விளைவு அணி

(பிரஸ்துதாங்குராலங்காரம்)

'புனைவுளி யான்விழை புகழ்பொருள் தோன்றல்
புனைவுளி விளைவெனப் புகன்றனர் புலவர்.' – ச. 53

'சொல்லோர் வருணியத் தால்ஓர் வருணியம் தோன்றியிடில்
எல்லோரும் சொல்புனை வுள்ளி விளைவு.' – குவ. அ. 28

வருணிக்கப்பட்ட ஒரு பொருளான் அதனை ஒத்த மற்றொரு பொருள் குறிப்பான் அறியப்படுதல் புனைவுளி விளைவு அணியாகும். இதுவும் ஒட்டணியுள் அடங்கும்.

வரலாறு :

**'அம்புயநற் போதுஇருப்ப அஞ்சிறைவண் டேகொடுமுள்
பம்புகைதை யால்என் பயன்.'**

வண்டே! நல்லதாமரைப்பூ இருப்ப, அதனை விடுத்து முள் நிரம்பிய தாழையை நுகர்தற்குச் சுற்றித்திரிவதால் என்ன பயன்' என்ற தொடரில், 'தாமரையை ஒத்துப் பல்லாற்றானும் சிறந்த தலைவி இருப்பவும் அவனை நீத்துப் புறம்பே முள் செறிந்தாற் போலப் பாணர் கூட்டம் முதலிய சுற்றியிருக்கும் பரத்தையின்

தொடர்பை நாடிச்செல்வதால் தலைவற்குச் சிறந்த இன்பம் ஏது? என்ற கருத்து குறிப்பால் புலனாகச் செய்வதால் இப்பாடல் புனைவுளி புகழ்ச்சியணியாம். 25

80. பொய்த்தற்குறிப்பு அணி

(மித்யாத்திய வஸிதியலங்காரம்)

'பொருளைப் பொய்ம்மை ஆக்க மற்றொரு
பொய்ப்பொருள் புனைதல் பொய்த்தற் குறிப்பே.' – ச. 91

'பொருள் ஒன்றினைப் பொய்மையாக்கற்கு மற்றொரு பொய்ப்பொருளை
அருகுகற் பித்தல் பொய்த்தற் குறிப்பாம்.' – குவ. அ. 65

ஒரு பொருளைப் பொய் என்ற விளக்குவதற்கு உலகு அறிந்த மற்றொரு பொய்ப்பொருளைப் புணர்த்துக் கூறுவது பொய்த்தற் குறிப்பணியாம்.

வரலாறு :

**'விண்மலர்த்தார் வேய்ந்தோனே வேசையரைத் தன்வசமாப்
பண்ணுதற்கு வல்லன்என் பார்.'**

பரத்தையரை ஒருவரும் தம்மிடமே மாறாத அன்பு கொள்ளுமாறு தம்வசப்படுத்துதல் இயலாது என்ற கருத்தை, ஆகாயத்தில் மலரும் பூக்களை மாலையாகத் தொடுத்து அணிபவனே பரத்தையரை வயப்படுத்தவல்லன் என உரைப்பதன்கண், பொய்ப் பொருளாகிய ஆகாயப் பூவைத் தொடுத்தணிதல் இயலாதது போலவே பரத்தையரையும் வசப்படுத்தல் இயலாதது என்ற கருத்து பொய்த்தற்குறிப்பணியால் வெளிப்படுத்தப்பட்டமை காண்க. 26

81. மடங்குதல் நவிற்சி அணி

(வக்ரோக்தியலங்காரம்)

'ஒருவர்ஓர் பொருள்அறி வுறுத்தற்கு ஓதிய
சொற்குவேறு ஒருவன் சூழ்ந்த சிலேடையின்
எடுத்தல் முதலிய இசைவிகா ரத்தின்
மற்றொரு பொருள்தரல் மடங்குதல் நவிற்சி.' – ச. 118

'விரிவாம் சிலேடைமிசை வேற்றுமை ஒன்றின் வேறுபொருள்
தரவே கற்பித்தல் மடங்குதல் நவிற்சி.' – குவ. அ. 92

ஒருவன் ஒருபொருளை அறிவுறுத்தற்குச் சொல்லிய சொற்கோ, சொற்றொடருக்கோ, மற்றவன் சிலேடையினாலோ ஒலி வேற்றுமையாலோ மற்றொரு பொருள் கற்பித்தல் மடங்குதல் நவிற்சியாம்.

வரலாறு :

**'யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.'** – குறள் 1314

'உலகில் உள்ள தம்பதிகளில் நாமே மிக்க அன்பினர்' என்ற கருத்தில் தலைவன் 'யாரினும் காதலம்' என்று கூற, தலைவி அத்தொடருக்குப் 'பெண்டிர் பலருள்ளும் நின்னிடத்திலேயே மிக்க அன்புடையேன்' என்று தலைவன் கூறினானாகக் கொண்டு, 'எவ்வெப் பெண்களைவிட என்னிடம் மிக்க அன்புடையீர்?' என்று வினவுவாளைப் போல 'யாரினும், யாரினும்' என்று விளவிய தன்கண் இவ்வணி காண்க. 27

82. மலர்ச்சி அணி

(விகஸ்வராலங்காரம்)

'சிறப்பினை நாட்டப் பொதுவும்அப் பொதுவினை
மீட்டும் நிறுத்த மேல்ஒரு சிறப்பும்
வகுத்துக் கூறல் மலர்ச்சி அணியே.' – ச. 88

'சிறப்பை நிறுத்தும் பொதுவை நிறுத்தமற் றோர்சிறப்பை
உறப்புகல் உள்மகிழ்ச்சி.' – குவ. அ. 62

ஒரு சிறப்புப் பொருளை உறுதி செய்ய ஒரு பொதுப் பொருளையும், மீண்டும் அப்பொதுப்பொருளை உறுதிசெய்ய மற்றொரு சிறப்புப் பொருளையும் கூறுவது மலர்ச்சி அணியாம்.

வரலாறு :

'தேடும் மணிபலவும் சேர்இமைய மால்வரைக்குக்
கூடுபனி யாலோர் குறைவுஉண்டோ ? — நீடுபல
இன்குணத்தில் குற்றம்ஒன்று இந்து பலகதிரின்
புன்களங்கம் போல்அடங்கிப் போம்.'

பல மாணிக்கங்களையும் தன்னகத்துக் கொண்டுள்ள இமயமலைக்குப் பனியினால் ஒரு குறைவும் இல்லை என்ற சிறப்புப் பொருளை, பல இனிய குணங்களில் ஒரு சிறு குறை அடங்கி மறைந்துவிடும் என்ற பொதுப் பொருளைக் கூறி விளக்கி, மீண்டும் அப்பொதுப்பொருளை விளக்க, பல இனிய கிரணங்களை வெளிப்படுத்தும் சந்திரனுக்குக் களங்கத்தால் ஒரு குறைவும் இல்லை என்ற சிறப்புப்பொருளைக் குறிப்பிடுவது இவ்வணியாம். 28

83. மற்றதற்கு ஆக்கல் அணி

(*வியாகாதாலங்காரம்*)

'ஒருகா ரியத்தின் உலகுஅறி காரணம்
அதன்பகைக் காரிய காரணம் ஆக்குதல்,
தொழில்ஒன் றற்குத் துணைஎனக் கொண்ட
பொருளைப் பகைத்தொழில் கருவி ஆக்கல்,
ஒருதொழில் அமைப்பான் ஒருவன் உள்ளிய
பொருளால் பிறன்பகை வினைநனி பொருத்தல்என்று
ஆகும்மூ வகைத்தே மற்றதற்கு ஆக்கல்.' — *ச. 71*

'எதைஎதற் கேது எனப்பூ மியுங்கொண் டிருந்ததை
அதின்பகைக் காரியக் கேதுவு மாக்கலும் ஆரொருவன்
விதிகா ரியமொன்றிற் குச்சா தனமென லேபொருந்தின்
அதைவே றொருவன் அதின்பகைக் காரியம் ஆனதற்கே
சாதனம் ஆக்கலும் மற்றதற் காக்கல்.' — *குவ. அ. 45*

ஒரு செயல் தோன்றுவதற்கு உரிய காரணம் என்று உலகு அறியப்பட்டது ஒன்றை அச்செயலின் பகைச் செயலுக்குக் காரணம் ஆக்குதல், ஒருவன் ஒரு செயலுக்குக் கருவியாகக்

கொண்ட ஒன்றனையே மற்றவன் அதற்கு மறுதலைப்பட்ட செயலுக்குக் கருவியாகக் கோடல், ஒரு செயல் நிகழ்த்த ஒருவன் கருதிய பொருளைக் கொண்டே மற்றவன் அச்செயலின் மறுதலையான செயலுக்கு ஆயத்தம் செய்தல் – என்று மற்றதற் காக்கல் அணி மூவகைத்தாகும்.

வரலாறு :

1. ‘உலகைமகிழ் விக்கும் உயர்மலர்கொண் டேவேள்
உலகை வருத்தும் உடன்று.’

உலகை மகிழ்விக்கும் மலரே மன்மதனால் உலகை வருத்தப் பயன்பட்டவாறு.

2. ‘கண்ணால் கொலப்பட்ட காமனைஇக் காரிகையார்
கண்ணால்உய் விக்கின்றார் காண்.’

சிவபெருமான் தன் கண்ணாலேயே மன்மதனை எரித்தான். இம்மகளிர் தம் கண்களாலேயே அவனை உய்விக்கின்றனர். (கண்ணழகு ஆடவர் மனத்தில் காமக்கனல் எழுப்புதலால் மன்மதன் புத்துயிர் பெறுகிறான் என்பது.)

3. ‘உலுத்தன் மிடிவரும்என்று உள்வெருவி நல்கான்
நிலத்துஎன்று ஒருவன் நிகழ்த்த — நலத்துஇசைகூர்
வள்ளலும்அவ் வச்சமே மருவியே நல்குமென
விள்ளலுற்றான் மற்றொருவன் மெய். !

உலோபி வறுமை வருமே என்று அஞ்சி வழங்கான்; அதே போல வள்ளலும் வறுமை வருமே, வந்தால் பிறருக்கு அளிக்கும் வாய்ப்பினை இழக்க நேருமே என்று அஞ்சிச் செல்வக்காலத்தில் பிறருக்கு வாரி வழங்குகிறான் – என்பது.

வறுமைவரும் என்ற காரணமே மறுதலைச் செயல் இரண்டை நிகழ்த்துவது காண்க.

84. மிகுதி நவிற்சி அணி

(அத்யுக்தி அலங்காரம்)

'வியப்பும் பொய்ம்மையும் மேவத் திறல்கொடை
முதலிய புகழ்தல் மிகுதி நவிற்சி.' – ச. 122

'அதிசயம் பொய்மை யுறுங்கொடை வன்மை இவைமுதலா
துதிசெய் திடுதல் மிகுதி நவிற்சி.' – குவ. அ. 96

வியப்பும் பொய்ம்மையும் கலக்க ஒருவனுடைய வீரம் கொடை முதலியவற்றைப் புகழ்தல் மிகுதி நவிற்சி அணியாம்.

வரலாறு:

வீரம்

'உன்பிரதா பத்தழலின் வற்றுகடல் ஒன்னலர்மான்
அன்னவர்கண் ணீரின்நிறைந் தன்று.'

தலைவன் வீரமாகிய அழலால் வற்றிய கடல், அவன் பகைவர் அவன்கையால் மாண்டாராக, அன்னவர்தம் உரிமை மகளிர் வடித்த கண்ணீரால் நிறைந்தது என்பது.

கொடை

'ஓதுபுகழ்த் தாதாவாய் நீஉறஇப் போதுஉலகில்
ஆதுவர்கள் கற்பகமா னூர்.'

நீ வள்ளலாய் இவ்வுலகில் இருப்பதனால் உன்னிடம் இரந்து பெற்றவர்கள் இப்பொழுது நீதந்த பெருஞ்செல்வத்தைக் கொண்டு தாமும் வருவோர்க்கு வேண்டியன ஈயும் கற்பக மரம் போன்ற கொடையாளர் ஆகிவிட்டனர்.

இப்பாடல்களில் ஒருவன் வீரமும் கொடையும் அளவுக்கு மீறிப் பொய்யாகப் புகழப்பட்டவாறு.

இஃது அதிசய அணியில் அடங்கும்.

85. முரண்விளைந்து அழிவு அணி

(முரண்மேல் விளைவணி – விரோதாபாஸாலங்காரம்)

'கருதும்ஓர் இடத்தவாய்க் காரிய காரணம்
ஏலாத் தருமம் இரண்டன் மேலும்
தோன்றி அழியும் பகைமை தொடுத்து
மொழிதல் என்ப முரண்விளைந்து அழிவே.' – 59

'மேலா கமட்டும் விரோதமு றல்முரண் மேல்விளைவு.'
– குவ. அ. 33

ஓர் இடத்து உள்ளனவும் காரண காரியங்கள் ஆகாதனவும் ஆகிய இரண்டு பொருண்மைகளுக்கு மேன்மேலும் தோன்றி அழியும் பகைமையைச் சொல்லுவது முரண் விளைந்து அழிவு அணியாம்.

வரலாறு:

'சந்தம்இல வாய்உறினும் சந்தம் உடையனவே
கொந்துஅவிழ்தார்ப் பாவை குயம்.'

தலைவியின் நகில்கள் சந்தம்இல (சந்தனம் பூசப்படவில்லை) ஆயினும் சந்தம் உடைய. (அழகு உடையன) இதன்கண் சந்தம் இலவற்றைச் சந்தம் உடைய என்று கூறும் சொல் முரண் – சந்தனம் பூசாவிடினும் அழகுடையன என்னும் பொருளால் நீங்கி அணி செய்தமை இவ்வணியாம். 31

86. மேன்மேல் உயர்ச்சி அணி

(ஸாராலங்காரம்)

'ஒன்றற்கு ஒன்றுமேன் மேல்உயர்வு இழிவுக்
குணத்தால் உயர்வு குறிப்பது மேன்மேல்
உயர்ச்சி அணிஎன்று உரைத்தனர் புலவர்.' – ச. 75

'ஒன்றினுக் கேஒன்று மேன்மேல் உயர்தல் உரைத்திடவே
நின்றது மேன்மேல் உயர்ச்சி.' – குவ. அ. 49

ஒன்றற்கு ஒன்று மேலும் மேலும் உயர்குணத்தாலேனும் இழி குணத்தாலேனும் உயர்வாதலைச் சொல்லுவது மேன்மேல் உயர்ச்சி அணியாம்.

வரலாறு :

உயர்வு

'தேன்மதுரம் ஆம்;அதனில் தெள்ளமுத மேமதுரம் ;
மான்சொல்அதி னும்மதுரம் ஆம்.'

தேனினும் அமுதும் அமுதினும் தலைவி சொல்லும் இனிமை யுடையன என்பதன்கண், உயர்வு பற்றி அமைந்தமை காண்க.

இழிவு

'நீரினும் நுண்ணிது நெய்என்பர், நெய்யினும்
யாரும் அறிவர் புகைநுட்பம், — தேரின்
நிரப்புஇடும்பை யாளன்புகுமே, புகையும்
புகற்குஅரிய பூழை நுழைந்து.'

நீரினும் நெய் நுண்ணிது. நெய்யினும் புகை நுண்ணிது. புகை நுழையாத இடத்தும் வறியவன் நுழைந்து விடுவான் ஆதலின், புகையினும் வறுமை நுண்ணிது என்ற இதன்கண், இழிவு பற்றி இவ்வணி அமைந்தமை காண்க.

இதன் உயர்வு வகை மாறன்அலங்காரத்தில் உறுசுவை அணி என்று பெயரிடப்பட்டுள்ளது. 32

87. யுத்தி அணி

(யுக்தியலங்காரம்)

'உட்கோள் மறைத்தற்கு உன்னிப் பிறரைச்
செயலான் வஞ்சனை செய்தலே யுத்தி.' — ச. 115

'தன்அந் தரங்கம் தனையே மறைக்கத் தகுதொழிலான்
மன்னும் பெயரைவஞ் சித்திடல் உத்தி.' — குவ. அ. 89

தன் உள்ளத்துக்கொண்ட செய்தியைப் பிறர் அறியாமல் செய்வதற்குத் தன் செயலில் ஒரு மாற்றம் செய்து பிறரை வஞ்சிப்பது யுத்தி அணியாம்.

வரலாறு :

'மாண்இழையாள் அன்பன் வடிவைப் படத்துஎழுதும்
பாணியில்அங்கு ஓர்சிலர்தன் பாங்கர்உற — நாணிமுகக்
கோட்டிஞள் சித்தரித்த கோலஉரு வின்கரத்தில்
தீட்டிஞள் கன்னற் சிலே.'

தன் கணவன் உருவை எழுதியவள், நாணத்தால், பிறர் அதனை அறியாமல் மறைத்தற்கு, அவ்வுருவின் கையில் கரும்பு வில்லை வரைந்து மன்மதன் உருவம்போல் மாற்றிக்காட்டியது இவ்வணியாம். 33

88. வனப்பு நிலை அணி

(லளிதாலங்காரம்)

'வருணியம் அடைகொளி யாக வகுத்துப்
புகழும் பொருள்தொடர் போலும் பொருள்நிலை
வருணிப் பதனை வனப்புநிலை என்ப.' — ச. 92

'வருணி யவிசே டியத்தைமட் டும்சொலி அவ்வரலாறு
அருளுத லின்றிஅவரு ணியவர லாற்றினைப்ப —
கருதல் வனப்பு நிலையாம்.' — குவ. அ. 66

விளக்கிக்கூறவேண்டிய கருத்துக்கு அடைமொழியாகக் கூறவேண்டிய செய்தியை மறைத்து அது போல்வதாகிய பிறிது ஒரு செய்தியை அடைமொழியாக்கல் வனப்புநிலை அணி.

வரலாறு :

'பெருகுஅறல்முற் றும்போன பின்கரைகோ லற்குஇத்
திருஅனையாள் வேட்டல் செயும்.'

திருஅனையாள் வேட்டல் செயும்—என்பது கூறவேண்டிய கருத்து. அதற்கு அடை 'உரிய காலத்தில் கணவனை அடையாதிருந்து அவன் ஊடி அவளை நீத்த பின்பு' என்ற தொடர். அதனை விடுத்து 'வெள்ளமெல்லாம் போனபின் கரைகோலுவாரைப் போல' என அதுபோல்வதாகிய பிறிது ஒரு தொடரை அடைமொழியாக்கியது இவ்வணியாம். இஃது ஒட்டணியின் பாற்படும்.

இது, சிறிது அன்பொடு தன்னை அண்மிய தலைவனை ஊடலால் நீக்கி, அவன் பிறள் ஒருத்தியின் தொடர்புகொண்ட பின், அவனை அடையத் தன்னை வாயிலாக்க விழைந்த தலைவி நிலையைத் தோழி சொற்றது. *34*

89. விதி அணி

(விதியலங்காரம்)

'வெளிப்படைப் பொருளின் விதிஒரு கருத்தொடு
மேவி வருதல் விதிஅணி என்ப.' – ச. 125

'சிந்தித் திருக்கும் அதைஓர் கருத்துத் திகழவரு
ணித்தல் விதியணி.' – குவ. அ. 99

உலகு அறிந்த ஒரு பொருளின் நியதி ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு வருதல் விதிஅணி ஆகும்.

வரலாறு :

'குயில்குயிலே ஆகும் குவலயத்தில் சீர்மிக்கு
உயர்வசந்த காலம் உறின்.'

பார்ப்பதற்குக் காகம் போன்ற பிற பறவைகளும் குயில் போலத் தோற்றம் அளிப்பினும், குயில் முட்டை காக்கையின் கூட்டில் அடைகாக்கப்பட்டுப் பார்ப்பாகிய நிலையில் காகம் போலவே தோன்றினும், குயில் இளவேனிற் காலத்தில் கூவும் குரலான் அறுதியிட்டு உறுதியாக உணரப்படும். வடிவான் அறியமுடியாத நிலையிலும் குரலான் குயில் அறியப்படும். குயில் குயிலே ஆகும் என்பது விதி. வேனில் அதனை வெளிப்படுக்கும் என்பது உடன் உணரவேண்டிய கருத்து. 35

90. வெளிப்படை நவிற்சி அணி

(விவிருதோக்தியலங்காரம்)

'சிலேடையான் மறைத்துச் செப்பும் பொருளை
விண்டு மொழிதல் வெளிப்படை நவிற்சி.' – ச. 114

'புகலும் சிலேடையி னாலே மறைத்த பொருளைவல்லோன்
பகலுற வேவெளி செய்வ துவெளிப் படைநவிற்சி.'
– குவ. அ. 88

சிலேடையால் மறைத்துச் சொல்லிய கருத்து ஒன்றனை இடம் சுட்டிக் கூறும் முகத்தான் புலவன் வெளிப்படுத்துவது வெளிப்படை நவிற்சி அணியாம்.

வரலாறு :

'பிறன்புலத்தில் வாய்நயச்சொல் பெட்புடன்கொள் காளாய்!
இறைவன்அடை கின்றனன்,விட்டு ஏகு — துறையின்,எனப்
பண்பின் உணரப் பகர்ந்தான் குறிப்பாக
நண்பின்உயர் பாங்கன் நயந்து.'

'பிறன் வயலகத்து நெல்லை விரும்பி நுகரச்செல்லும் காளையே! வயலுக்கு உடைமையாளன் வருகின்றான்; ஆதலின் விடுத்துச் செல்' என்று, பிறன் மனைவியை விரும்பிச் சென்ற நண்பனை, அவள் கணவனது வரவு கூறி, அக்கருத்தை விடுத்துச் செல்லுமாறு குறிப்பால் நண்பன் ஒருவன் அறிவித்தான்.

'பாங்கன் பண்பின் உணரப் பகர்ந்தான்' என்று கவி இடம் சுட்டி விளக்கி, 'பிறன்......ஏகு' என்ற தொடரின் சிலேடைப் பொருளை விளக்கியவாறு. புலம் – வீடு, வயல்; நயச்சொல் – விரும்பத்தகும் பேச்சு, விரும்பத்தகும் நெல்; காளை – இடபம், தலைவன்; இறைவன் – பெண்ணின் கணவன், வயலின் உடைமை யாளன்.

பொருள் அணிகள் முற்றும்.

பிற்சேர்க்கை - நூற்பா முதற் குறிப்பு
அகரவரிசை

[குறிப்பு :— மா. —மாறன் அலங்காரம் ; தொ. வி.—தொன்னூல் விளக்கம்; மு.—முத்துவீரியம்; ச.—சந்திராலோகம்; கு.—குவலயானந்தம்; இ. வி.—இலக்கண விளக்கம்.]

எடுத்துக்காட்டுப் பாடல்கள் அகரவரிசை

தொடக்கம்		பக்கம்

அணிவகைகள் - அகரவரிசை

(எண் — பக்க எண்)

இப்பதிப்பில் எடுத்தாளப்பட்டுள்ள
சுருக்கெழுத்து விளக்கம்

அகநா.	—	அகநானூறு
இ. வி.	—	இலக்கண விளக்கம்
இறை. அக. மேற்.	—	இறையனார் அகப்பொருளுரை மேற்கோள்
ஐங்குறு.	—	ஐங்குறுநூறு
கலி.	—	கலித்தொகை
குறுந்.	—	குறுந்தொகை
கு, குவ.	—	குவலயானந்தம்
குவ. அ.	—	குவலயானந்த அணி எண்
ச, சந், சந்தி.	—	சந்திராலோகம்
சீவக.	—	சீவகசிந்தாமணி
தண்டி.	—	தண்டியலங்காரம்
திருமுருகு.	—	திருமுருகாற்றுப்படை
தொ. பொ., தொல். பொ.	—	தொல்காப்பியப் பொருளதிகாரம்
தொ. மெ.	—	தொல்காப்பிய மெய்ப்பாட்டியல்
தொ. வி.	—	தொன்னூல் விளக்கம்
நன்.	—	நன்னூல்
நாலடி.	—	நாலடியார்
பட்டின.	—	பட்டினப்பாலை
புறநா.	—	புறநானூறு
பெரும்.	—	பெரும்பாணாற்றுப்படை
பே.	—	பேராசிரியர் உரை
பொருந.	—	பொருநராற்றுப்படை
மலைபடு.	—	மலைப்படுகடாம்
மா, மா. அ, மாறன்.	—	மாறன் அலங்காரம்

முத்தொள்.	—	முத்தொள்ளாயிரம்
மு. வீ.	—	முத்துவீரியம்
மு. வீ. அ.	—	முத்துவீரிய அணியதிகாரம் பொருளணியியல்
மு. வீ. சொ.	—	முத்துவீரியச் சொல்லணியியல்
மு. வீ. பொ.	—	முத்துவீரியப் பொருளணியியல்
வீ.	—	வீரசோழியம்
வீ. உரை. மேற்.	—	வீரசோழிய உரை மேற்கோள்

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
39	12	உவவாத	உலவாத
61	26	அருப்பு	அரும்பு
63	1	கண்ணினை	கண்ணிணை
65	4	ஒற்றை	ஒற்றைத்
97	12	வீனை	வினை
102	9	உம்மை	உம்மைப்
117	11	வல்லி	அரிவை
119	4	இயல்	இயம்
129	9	மலை	மர
189	19	நிறை	நிரை
248	23	வாள்	வள்
272	18	மாங்	மால்
6	24	புகழ்ச்சி	விளைவு
9	21	கோவ	கோப
		மு. வி.	மு. வீ.
		கு. வ.	குவ.

பிறவும் உளவேல் திருத்திக் கொள்க.


1. கோமூத்திரி



'பருவமாக....................காலமே' – பக்கம் 384

இச் செய்யுளை முன்னிரண்டடி மேல்வரியாகவும், பின் இரண்டடி கீழ்வரியாகவும் எழுதி, அவ்வரி இரண்டையும் மேலும் கீழும் ஓரெழுத்து இடையிட்டு ஆனேறு சிறுநீர் கழிக்கும் சுவட்டு வழி வாசிக்க அச் செய்யுளாகவே அமையுமாறு காண்க.

10. முரசபந்தம்




இந்நான்கடிப்பாடல் மேலிரண்டடி கோமூத்திரியாகவும், கடை இரண்டடி கோமூத்திரியாகவும் முடிதலும், முதலடியும் ஈற்றடியும் நான்கு அடிகளிலும் மாறுடிக் கோமூத்திரிபோல மடங்கிச் சென்று முடிதலும், இரண்டாமடி முற்சதுரத்தின் வலம் சென்று கோமூத்திரியாக மேல் நோக்கியும் கீழ் இறங்கியும் நான்கு அடிகளிலும் மாறுடி மூன்றுமடி ஈற்றெழுத்தோடு முடிதலும், மூன்றுமடி இரண்டாம் சதுரத்தின் வலம் சென்று கோமூத்திரியாக மேல் நோக்கியும் கீழ் இறங்கியும் நான்கு அடிகளிலும் மாறுடி இரண்டாம் அடி ஈற்றெழுத்தோடு முடிதலும் காண்க.

9. இரட்டை நாகபந்தம்

'அருளின்............வருள்
மருவி...............யொழி.' – பக்கம் 391, 392

இவ்விரண்டு செய்யுள்களையும் இரண்டு நாகங்களின் தலையில் நின்றும் தொடங்கி வாலின் முனைகள் இறுதியாக இடையிடையே தத்தம் உடலினும்

அடுத்த பாம்பின் உடலினும் மாருடிச் சந்திகளில் நின்ற எழுத்தே மற்ற இடங்களினும் உறுப்பாய் நிற்க, ஒவ்வொரு பாம்பிற்கும் மேற்சுற்றுச் சந்தி நான்கினும் நான்கெழுத்தும், கீழ்ச்சுற்று சந்தி நான்கினும் நான்கெழுத்தும், இரண்டு பாம்பிற்கு நடுச்சந்தி நான்கினும் இரண்டு பாட்டிற்கும் பொருந்த நான்கெழுத்துமாகச் சித்திரத்தில் அடைத்து அமைத்துக் காண்க.



புதுமுறை இரட்டை நாகபந்தம்

எட்டினுக்கு ஆறும் எண்ணைந் தினுக்கே இயைந்த பதினைதாகும்
ஈரெட் டினுக்குவரு பதினெட்டு நாலைந் தினுக்குநாற் பத்தாறுதான்
தொட்டஇரு பத்திரண்டு எண்மூன்று நாலேழ் துலங்கும்இரு பத்தாறதாம்
தோன்றும் எண்ணாறுக்கு முப்பதாம் பத்தைந்து தூயமுப் பத்திரண்டாம்
திட்டமுறு முப்பத்து நான்கினுக்கு ஐம்பத்து இரண்டதாம் ஆறேழுடன்
செப்புநாற் பத்தினல், ஐம்பத்திற்று எட்டுடன் சேர்வதோர் அறுபதாகும்
கட்டமில் லாமலறு பத்துமூன்று அக்கரங் களையுடைய வெண்பாஇது
கமழ்விசித்ர உபய நாகபந்தனமாம் கனிந்துருகு செஞ்சொல் மாதே.

துருவக் குறிப்பு: 6ம் 8ம், 14ம் 40ம், 16ம் 18ம், 20ம் 46ம், 22ம் 24ம், 26ம் 28ம், 30ம் 48ம், 32ம் 50ம், 34ம் 52ம், 42ம் 44ம், 58ம் 60ம் ஒரே எழுத்துக்களாக வருதல் வேண்டும். இதற்குரிய வெண்பாப் பாடல் 63 எழுத்துக்களை உடையது.

அட்ட நாகபந்தம்

ஒருநான்குஅக் கரத்தொடுநாற் பத்தொன்றும்
ஆறுடன்நாற் பத்தைந்தாம் எட்டுடன் ஐந்நான்காம்
இருள்அறு பன்னிரண்டுடனே பதினெட் டாகும்
இருபத்தி ரண்டுடனே நாற்பத் தேழாம்
பரவும் இருபத்து நான்குடன் முப்பத்தொன்
பானும்முப் பான்மூன்றோடு ஐம்பத் தொன்றும்
அருமுப்பத் தேழுடனே நாற்பத் தொன்பானும்
அட்டநாக பந்தமாம் செய்யுட்கே.

4ம் 41ம், 6ம் 45, 8ம் 20ம், 12ம் 18ம், 22ம் 47ம், 24ம் 39ம், 33ம் 51ம், 37ம் 49ம் ஒரே எழுத்துக்களாக வரும்படி 51 எழுத்தினல் அட்டநாகபந்தம் அமையவேண்டும்.

அட்டநாகபந்தத்தின் மற்றொரு வகை

முப்பத்து நாலுக்கு நாலாகும் ஆறுக்கு முப்பதிற் றெட்டாகும்
மொழியும் எட்டுக்கு இருபதாம் பன்னிரண்டுக்கு மூவாறு இலக்கம் எனலாம்
ஒப்பற்ற இருபத்தி ரண்டுக்கு நாற்பதாம் ஒரும் இருபத்து நாலுக்கு
உயரும் முப்பத்திரண்டு இருபதோடு ஆறினுக்கு உரிய நாற்பத்து நாலாம்
தப்பற்றிடச் சிறந்திடு முப்பதுக்குத் தழைத்தநாற் பத்திரண்டாம்
சார்தர உரைத்திட்ட இவ்விலக்கங்களில் தவறாமல் அக்கரங்கள்
செப்பிநாற் பத்தொன்பதாம் எழுத்தினல் செய்த செய்யுள்எண் ணாகபந்தம்
செங்களப குங்கும மணங்கமழ் தரும்படி திரண்டிலகு கொங்கை மாதே!

4ம் 34ம், 6ம் 38ம், 8ம் 20ம், 12ம் 18ம், 22ம் 40ம், 24ம் 32ம், 26ம் 44ம், 30ம் 42ம் ஒன்றாக வரும்படி 49 எழுத்தினல் அமைக்கப்படும் அட்டநாகபந்தமும் ஒன்றாகும்.

தன்னினம் முடித்தல் என்பதனல் (புக்கம் 404) கொள்ளப்பட்டு சதுரங்கபந்தம் பின்வருமாறு;

சதுரங்க பந்தம்

அறுபத்து நாலறுபத் திரண்டைம்பா னாற்பானான்கு
அடுத்தமுப்பத் தாறிருபத் தாறிருபத் திரண்டு
பெறுமக்க ரங்களொன்று முதலேழு வரைநிகர்ப்பப்
பின்னும்ஐம்பத் தேழைம்பான் மூன்றொருநாற் பான்மூன்று
உறுமுப்பத் தைந்திருபத் தொன்பதுபன் னேழ்பதினைந்து
உளஎழுபத் திரண்டுமுதல் எழுபத்தெட் டீறு
மறுவற்று வரப்பாடும் கவிதைசது ரங்கபந்தம்
வழுத்தியஅஃ தெழுபத்தெட்டெழுத்தின் முடிகுவதே

துருவக் குறிப்பு

[1+64, 2+62, 3+50, 4+44, 5+36, 6+26, 7+22, 15+78, 17+77, 29+76, 35+75, 43,+74, 53+73, 57+72.]

மொத்த எழுத்து 78.


தேர்க்கவி எனப்படும் இரத பந்தம்

இக்கவியில் மேல் நோக்கி ஒன்றும் கீழ் நோக்கி ஒன்றுமான இரண்டு சமமான முக்கோணங்கள் அமைத்து ஒவ்வொன்றிலும் எவ்வேழடுக்குக்களை அமைப்பர். முதலடுக்கில் 13 அறை, இரண்டாவதில் 11, மூன்றாவதில் 9, நான்காவதில் 7, ஐந்தாவதில் 5, ஆறாவதில் 3, ஏழாவதில் 1 என்று அறைகள் அமையும், மேல் நோக்கிய முக்கோணத்தின் மேலெழுத்திலிருந்து தொடங்கி வரிசையாக முதலில் இடம் இறங்கிப் பின் வலம் இறங்கி இம் முறையே அம் முக்கோண முடிவு வரை ஒரு பாடலாகும். பின் அடுத்த பாடல் கீழ் நோக்கிய முக்கோணத்தின் 13 அறை உள்ள அடுக்கின் முதல் எழுத்திலிருந்து தொடங்கிக் கீழ் நோக்கி வலமாகவும் பின் இடமாகவும் இறங்கி அடி அறையின் நடுப் பத்தியில் பாடலின் கடை ஏழெழுத்து ஏழ் தளத்தும் மாறாடி ஏறி முடியுமாறும், அதுவே மேல்தளத்து நடுப்பத்தியில் இருந்து கீழ்நோக்கி நேரே வாசிக்க முடியுமாறும் இருபாடல்களைக் கொண்டு தேர்க்கவி அமைப்பர்.

கடக பந்தம்

வட்டத்தின் தலைப்பில் 6 அறைகளை விட்டு ஒதுக்கி எஞ்சிய வட்டத்தை 46 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வோரெழுத்து அமையுமாறு கொண்டு பூட்டுவாய் முதலெழுத்தாக வலப்புறத்து இரண்டாம் அறையின் மூன்று தடுப்பில் மூன்றெழுத்து, 3, 4, 5 ஆம் அறைகளில் ஓரோர் எழுத்து, 6 ஆம் அறையின் மூன்று தடுப்பில் மூன்றெழுத்து இவ்வாறாக முகப்பின் பூட்டுவாய் தொடங்கி வலமே இரண்டாம் அறையின் நடுத் தடுப்புக்குச் சென்று கீழ்த்தடுப்புக்கு இறங்கி மேலும் நடுத்தடுப்புக்கு வந்து மேல் தடுப்புக்கு ஏறி நடுத்தடுப்புக்கு இறங்கி மூன்று நான்கு ஐந்தாம் அறை வழியாக ஆறும் அறை தடுப்புக்குச் சென்று கீழ்த்தடுப்புக்கு இறங்கி மீண்டும் நடுத்தடுப்பு வழியாக மேல் தடுப்புக்குச் சென்று நடுத்தடுப்புக்கு இறங்கி ஏழாம்அறை வழியே வலமாகச் சென்று 46 ஆம் அறை எழுத்தோடு பாடல் முடியப் பாடுவது,

பூட்டுவாய் அமைப்பு



கோலநிலமேலழகுகூடுநெடு வீடுறமா......தி.

கடகபந்தத்தின் பிறிதொருவகை

பூட்டுவாயிலிருந்து மூன்று தடுப்புடைய வல இரண்டாமறை நடுத் தடுப்புச் சென்று கீழ்த்தடுப்பில் இறங்கி நடுத்தடுப்பு வழியே மேல்தடுப்புச் சென்று இடையிடையே உள்ள குண்டுகளாகிய நான்கு அறைகளிலும் சென்று இறுதி வரையில் பாடல் முடியுமாறு அமைப்பது. பூட்டு வாயை அடுத்த இரண்டாம் அறை 3 தடுப்புடையதாகும். வட்டம் 48 அறைகளை உடையது. வலப்புறமாக 12 ஆம் அறை, 15ஆம் அறை, 34 ஆம் அறை, 37 ஆம் அறை இவை வெளியே தனி அறை இணைக்கப்பட்ட குண்டுகளாம். பாடலெழுத்து குண்டுகளில் ஏறி இறங்குமாறு அமையும்,

பதும பந்தம்

நடுவில் பொகுட்டினை அமைத்து, எட்டு அகவிதழும் எட்டுப் புற விதழும் அமையச் சித்திரம் அமைத்து, நடுப் பொகுட்டிலிருந்து மேல் வலக் கோணத்து அகவிதழ் புறவிதழ் வழிச்சென்று அடுத்த புறவிதழ் அகவிதழ் வழியே பொகுட்டை அடைந்து அடுத்த அகவிதழ் வழிப் புறவிதழ் சென்று முதலடியை முடித்து, மீண்டும் பொகுட்டிலிருந்து கீழ் வலக் கோணத்திலுள்ள அகவிதழ் புறவிதழ் வழிச்சென்று அடுத்த புறவிதழ் அகவிதழ் வழியே பொகுட்டை அடைந்து அடுத்த கீழ் இடக்கோணத்து அகவிதழ் வழிப் புறவிதழ் சென்று இரண்டாம் அடியை முடித்து, மீண்டும் பொகுட்டிலிருந்து கீழிடக் கோணத்திலுள்ள அகவிதழ் புறவிதழ் வழி இடக் கோணத்திலுள்ள புறவிதழ் அகவிதழ் சென்று பொகுட்டை அடைந்து மேல் இடக் கோணத்திலுள்ள அகவிதழ் வழி அதன் புறவிதழ் சென்று மூன்றும் அடியை முடித்து, மீண்டும் பொருட்டிலிருந்து மேல் இடக் கோணத்துள்ள அகவிதழ் புறவிதழ் வழியே மேற்கோணத்துள்ள புறவிதழ் அகவிதழ் சென்று பொகுட்டை அடைந்து முதலடி தொடங்கிச் சென்ற அகவிதழ் வழிப் புறவிதழ் சென்று இப்பாடலின் நான்கடியும் முடிக்கப்படும்.

16. சக்கரம்

1. நான்காரல் சக்கரம்



2. நான்காரல் சக்கரம்




1. 'மேரு சாபமும்..................சாருமே.' – பக்கம் 399

இச் செய்யுள் மே என்னும் எழுத்து நடுவே நின்று, ஆரல் மேல் ஒவ்வோரெழுத்து நின்று, சூட்டின் மேல் 12 எழுத்து நின்று, நடுவு நின்று கீழ் ஆரலின் வழி இறங்கி இடம் சென்று அடுத்த ஆரலின் வழி நடுவை அடைந்து முதலடி முடிய, மீண்டும் நடுவிலிருந்து அந்த ஆரலின் வழியே திரும்பி இடம் சென்று அடுத்த ஆரலின் வழியே நடுவை அடைந்து இரண்டாம் அடி முடிய, மீண்டும் நடுவிலிருந்து மேல் நோக்கிய ஆரலின் வழியே வலம் சென்று அடுத்த ஆரலின் வழியே நடுவை அடைந்து மூன்றும் அடிமுடிய, மீண்டும் நடுவிலிருந்து வலப்புற ஆரலின் வழியே சென்று கீழே இறங்கி மீண்டும் அடுத்த ஆரலின் வழியே நடுவு அடைந்து நான்காம் அடி முடிய அமைந்தவாறு காண்க.

2. 'மாதவா..................டாம்' – பக்கம் 399

இச் செய்யுள் 'ர' என்ற எழுத்து நடுவே நிற்க, ஆரல் ஒன்றற்கு 4 எழுத்தாய்க் குறட்டின் மேல் வசுதாரை என்ற பெயர் நிற்பச் சூட்டின் மேல் 28 எழுத்து நிற்ப, இடக்குறுக்கு ஆரலின் முனையிலிருந்து தொடங்கி அதன் எதிர் ஆரலின் முனை இறுதி வரை சென்று முதலடி முடிய, அடுத்து வலக் கீழ் ஆரலின் முனை தொடங்கி அதன் எதிர் ஆரலின் முனை வரை சென்று இரண்டாமடி முடிய, முதல் தொடங்கிய ஆரலின் முனை எழுத்திலிருந்து வட்டை வழியே வலப்புறமாகச் சுற்றித் தொடங்கிய இடத்தை அடையும் போது மூன்றுமடியும் நான்காமடியும் முடியுமாறு அமைந்தமை காண்க,

3. ஆறு ஆரல் சக்கரம் 4. எட்டு ஆரல் சக்கரம்






3. 'தண்மலர்...........கண்களே' – பக்கம் 399, 400

குறட்டின் நடுவே ரகர ஆகாரம் நிற்ப ஆரல் ஒவ்வொன்றுக்குள் 9 எழுத்தாய்க் குறட்டின் மேல் போதிவானவன் என்னும் பெயர் நிற்ப, இடக்குறுக்கு ஆரலின் முனை தொடங்கி எதிர் ஆரல் முடியச் சென்று முதலடி முடிய, அடுத்த வலக்கீழ் ஆரலின் முனை தொடங்கி எதிர் ஆரல் இறுதியில் இரண்டாம் அடி முடிய, அடுத்த வலக் கீழாரலில் தொடங்கி எதிர் ஆரல் முடிவோடு மூன்றாமடி மடிய, முதலில் தொடங்கிய குறுக்கு ஆரலின் முதலெழுத்தில் தொடங்கி வட்டையைக் கீழிருந்து மேல் நோக்கிச் சுற்றி முடியப் பாடல் அமைந்தவாறு.

4. 'மலர்மலி...........கண்களே' – பக்கம் 400

குறட்டின் நடுவே ககரமும் குறட்டின் மேல் 'அறமே தநமாவது' என்ற சொற்றொடரும் நிற்ப, சூட்டின்மேல் 32 எழுத்து அமையுமாறு, இடக் குறுக்கு ஆரலில் தொடங்கி எதிர் ஆரலின் முடிவில் முதலடி முடிய, முன் ஆரலின் கீழ்ஆரலில் தொடங்கி எதிர் ஆரலின் முடிவில் இரண்டாமடிமுடிய, அடுத்த ஆரலில் தொடங்கி எதிர் ஆரலின் முடிவில் மூன்றாமடி முடிய, அதற்கடுத்த கடைசி ஆரலில் தொடங்கி எதிர் ஆரலின் முடிவில் நான்காம் அடி முடிய, முதலில் தொடங்கிய ஆரலில் தொடங்கிக் கீழாகச் சென்று சூட்டைச் சுற்றியுள்ள எழுத்துக்களால் கடை ஈரடியும் முடியப் பாடல் அமைந்தவாறு.

17. சுழிகுளம்



இப்பாடல் செவ்வே எழுதிய நான்கடி நான்கு வரியுள் முதலடி முதலெழுத்திலிருந்து சுழி ரேகை வழியே மேலிருந்து கீழிறங்கிப் பின் கீழிருந்து மேலேற முதலடியாக, இவ்வாறே இரண்டாம் மூன்றும் நான்காம் எழுத்துக்களில் தொடங்கிச் சுழிரேகை வழியே கீழிறங்கிப் பின் அதன் வழியே மேலேறப் பாடல் முடிவது காண்க.

18. சருப்பதோபத்திரம்

மா	வா	நீ	தா	தா	நீ	வா	மா
வா	யா	வா	மே	மே	வா	யா	வா
நீ	வா	ரா	மா	மா	ரா	வா	நீ
தா	மே	மா	ரா	ரா	மா	மே	தா
தா	மே	மா	ரா	ரா	மா	மே	தா
நீ	வா	ரா	மா	மா	ரா	வா	நீ
வா	யா	வா	மே	மே	வா	யா	வா
மா	வா	நீ	தா	தா	நீ	வா	மா

நான்கடிப் பாடல் செவ்வே முதல் நான்கடியும் ஈற்றடியை முதலாகக் கொண்டு அமைத்த நான்கடியுமாக இருமுறை வரையப்பட்டுள்ளது. பாடலின் ஒவ்வோரடியையும் முடிவிலிருந்து முதல் நோக்கி வாசித்தாலும் கீழிருந்து மேல் நோக்கி வாசித்தாலும் நான்கு நிலையிலும் அதே அடியே வருமாறு அமைந்திருப்பது காண்க.